கலி : 4970 ஸ்ரீ: கலி : 5070

விபவ வரு கீலக வரு

1268 1968

தேசிகன் ஏழாவது நூற்றாண்டு



ஸ்ரீ ஸ்ரீஸூக்திகள் வெளியீடு ஸ்ரீ

நாலாவது விபாகம்

பாகம்—2

அம்ருதாஸ்வாதிநீ

ரஹஸ்யங்கள்

(10)

ரஹஸ்யங்கள்

ஸ்ரீமானே நாராயணன் தன்னையே பற்றினர் தன்னைப் பெறுகைக்குத் தானே உபாயம் என்று.....ஒன்றே

ப்ரதாநமாய் நிற்கும் நிலை ஓர் அதிகாரிக்கு நித்யாநுஸந்தேயம். இது ஸர்வ ஸங்க்ரஹம்.

ஸ்ரீ அகில தம:கர்ச தேசிக தர்சந ஸபை

பராங்குச மந்திரம்

சென்னை - 5

ஸ்ரீ தேசிகன் ஆண்டு 696 வரு

விசுவாவஸு : தை : திருவோணம்

விலை] நன்கொடையாளர்களுக்கு மட்டும் [ரூ.7

ஸம்புடம் 7

ஸ்ரீ:

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்ட்டாபநாசார்யோபயவேதாந்தாசார்ய

பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ மடகோப ஸேர்யுபதிஷ்ட ஸ்ரீமந்நாதமுநி ப்ரவர்த்தித

ஸ்ரீமத் யாமுந முநி பஹுப்ரபந்தோபசித

ஸ்ரீமத் ராமாநுஜ முநி ஸம்யக் த்ராத

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேஸிக ஸுப்ரதிஷ்ட்டாபித

அகிலதம:கர்மந ஸ்ரீவிஸிஷ்டாத்வைதஸித்தாந்தப்ரவசநாசார்ய

ஆமருவியப்பன் திருவடிவாரம்

ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ மஹாதேசிகா:



இந்த ஸ்வாமியின் திருநக்ஷத்ர தினமான ஆவணி பூரட்டாதியன்று

ஸ்ரீ:

ஸ்ரீ மத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யோபயவேதாந்தாசார்ய
பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ மடகோப ஸேர்யுபதிஷ்ட ஸ்ரீமந்நாதமுநி ப்ரவர்த்தித
ஸ்ரீமத் யாமுந முநி பஹுப்ரபந்தோபசித
ஸ்ரீமத் ராமாநுஜ முநி ஸம்யக் த்ராத
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேஸிக ஸுப்ரதிஷ்ட்டாபித
அகிலதமஃகர்மநஸ்ரீவிஸிஷ்டாத்வைதஸித்தாந்த ப்ரவசநாசார்ய
ஆராவமுதாழ்வான் திருவடிவாரம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜமஹா தேசிகா:



இந்த ஸ்வாமியின் திருமுன்பே பங்களூர் மல்லேச்வர முகாமில்

ஸ்ரீ

பங்கனப்பள்ளி ஸம்ஸ்த்தாநம் மாஜி திவானும்

புதுக்கோட்டை ஸம்ஸ்த்தாநம்

மாஜி அஸிஸ்டண்டு அட்மினிஸ்ட்ரேட்டருமான

ஸ்ரீ உப. கந்தாடை ஆர். க்ருஷ்ணமாசார்யர், பீ. ஏ.



25 - 5 - 65 ல் ப்ரஸங்ந ரகுநாதபுரத்தில் (கடையக்குடியில்) நடந்த
இவருடைய ஸதாபிஷேகத்தன்று இவருடைய குமாரராகிய
சென்னை, ஸ்ரீபுரம், அட்வகேட்
ஸ்ரீ உப. கே. ஸ்ரீநிவாஸன், எம். ஏ , பீ. எல். அவர்கள் வழங்கிய
நன்கொடை ரூ. 1001 (ஆயிரத்தொன்ருல்)

ஸ்ரீ ஸார ஸாரமும், ஸ்ரீ அபயப்ரதாந ஸாரமும்

பின் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்

ஸ்ரீ தேசிக பக்தர்கள் செய்தருளும் த்ரவ்ய ஸஹாயத்தினால்

ஸ்ரீ ரஹஸ்ய சிகாமணி

முதலிய மற்றைய எல்லா ரஹஸ்யங்களும்

விச்வாவஸு ஹ ஸ்தை மீ திருவோணத்தன்று

சென்னையில் வெளியிடப்படுகின்றன.

இந்த ஸம்புடம் அச்சிடுவதற்கு த்ரவ்ய ஸஹாயம் செய்தருளும் டில்லி ஸ்ரீ தேசிக பகதர்களின் திருநாமங்கள்.

ஸ்ரீ. உப		
1	ஆர். வீ. க்ருஷ்ணன்	105
2	எஸ். வீரராகவன்	56
3	வி. வி. சாரியார்	110
4	பி. கே. ராமாநுஜம்	56
5	எஸ். எஸ். பீ. ராகவன்	60
6	பி. எம். நரஸிம்ஹன்	110
7	பி. எஸ். வி. ராகவன்	60
8	ஆர். கே. சாரி	60
9	ஸி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி	60
10	ஆர். பத்மநாபன்	60
11	எஸ். கே. ராஜகோபாலன்	105
12	வி. ஆர். ஸ்ரீநிவாஸன்	60
13	கே. ஆர். ஸம்பத்	60
14	எஸ். வி. ராகவன்	69
15	கே. ஆர். சாரி	60
16	எஸ். ஸௌம்ய நாராயணன்	60
17	எஸ். ஸ்ரீநிவாஸ ராகவன்	60
18	எஸ். ரங்கஸ்வாமி ஐயங்கார்	60
19	கே. ரகுநாதன்	60
20	ஜீ. ஸந்தாநக்ருஷ்ணன்	56
21	வி. ஜீ. ராகவ ஐயங்கார்	60
22	ஆர். ராஜகோபால ஐயங்கார்	60
23	கே. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்	60
24	வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	60
25	ஆர். ஸந்தாநக்ருஷ்ணன்	60
26	ஆர். எஸ். ராகவன்	60
27	எஸ். ஏ. சாரி	60
28	டி. ராகவன்	60
29	கே. டி. ஸ்ரீநிவாஸன்	60
30	எஸ். கே. ராமாநுஜம்	60
31	ஏ .கோபாலன்	60
32	எஸ். சேஷாத்ரி ஐயங்கார்	60
33	எஸ். கண்ணன்	60
34	எஸ். தேவநாதன்	56

குறிப்பு—இந்த ஸம்புடம் அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய அளவான தொகையே இங்கு காட்டப்பட்டிருக்கிறது டில்லியிலுள்ள மற்றைய தேசிக பக்தர்கள்செய்தருளும் த்ரவ்யஸஹாயம் மேல் அச்சிடப்படும்ஸம்புடத்தில் வெளியிடப்படும். இங்குள்ள திருநாமங்களின் க்ரமம்த்ரவ்யம் வந்து சேந்த கால க்ரமத்தை அநுஸரித்திருக்கும்.

இந்த ஸம்புடசோதந கைங்கர்யத்தில் அந்வயித்தருளிய ஸ்வாமிகளின் திருநாமங்கள்

ஸ்ரீ. உப. வே.

வேங்கடாத்ரி அகரம் அநந்தாசார்யர் ஸ்வாமி, சென்னை.

டி. டி. தாதாசார்யர் ஸ்வாமி, திருப்பதி

அக்நிஹோத்ரம் நாராயணாசார்யர் ஸ்வாமி, நாவல்பாக்கம்

ஐயா தேவநாத தாதாசார்ய ஸ்வாமி, நாவல்பாக்கம்

உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, மாம்பலம்

(மதுராந்தகம்)தி. ஈ. வீரராகவாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

வ. ந. ஸ்ரீராமதேசிகாசார்யர் ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி

சக்கரவர்த்தியாசார்யர் ஸ்வாமி, ஆஸ்த்தாந வித்வான்,

ஸ்ரீ அஹோபிலமடம், முக்கூர் முகாம்

ஸ்ரீகார்யம் ஸ்வாமி, ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம், மல்லேச்வரம் (முகாம்)

மேல்மா நரஸிம்ஹதாதாசார்யர் ஸ்வாமி, சென்னை

வில்லிவலம் நாராயணாசார்யர் ஸ்வாமி, மதுராந்தகம்

பாதூர் ராகவாசார்யர் ஸ்வாமி, மதுராந்தகம்

கோழியாலம் சடகோபாசார்யர் ஸ்வாமி, திருப்பதி

ஜி. கே. ரங்கஸ்வாமி ஐயங்கார், சென்னை

ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார், சென்னை

டி. ராமஸ்வாமி ஐயங்கார், சென்னை

ஏ. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், மதுரை

வ. ந. சேஷாத்ரியாசார்யர், அண்ணாமலைநகர்

பதிப்பாளர்கள்:—

கோமடம் எஸ். எஸ். ஐயங்கார்,

வ. ந. ஸ்ரீராமதேசிகாசார்யர்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்





பதிப்பாளர்களின் விண்ணப்பம்:—

அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் எழுதப்பட்டிருக்கும் பதிப்பாள ரின் விண்ணப்பத்தை இதற்குப் பூர்வமாகக் கொள்ள வேண்டும்.

அதில் கூறியபடி ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளைப் பதினாறு பாகங்க ளாக வெளியிட வேண்டும் என்கிற அபிலாஷத்துடன் ஏற்படுத்தப் பட்ட இந்த ஸபை இரண்டாவது ஸம்புடமாக அம்ருதாஸ்வாதினீ ரஹஸ் யங்களை இப்பொழுது வெளியிடுகிறது. மூன்றாவது ஸம்புடமாகத் தனி ரஹஸ்யங்களாகிய ஸ்ரீ பரமத பங்கம், ஸ்ரீஹஸ்திகிரி மாஹாத்ம்யம் ஸ்ரீபரம பதஸோபாநம் ஸ்ரீ முனிவாஹன போகம் என்னப்படும் நாலு ரஹஸ்யங்களும் வெளியிடப்படும்.மிகுதியான ஸ்ரீ குருபரம்பராஸாரமும் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரமும் 1968-ல் புரட்டாசி ச்ரவணத்தன்று வெளியிடப்படும்.

1968 ஸெப்டம்பர் மாதத்திற்குள் மிகுதியுள்ள பாகங்களும் வெளியிடப்பட வேண்டியதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின் றன. ஸம்ஸ்க்ருத ஸூக்திகளில் முதல் ஸம்புடமாக ரக்ஷா க்ரந்தங் கள் என்னப்படும் ஐந்து ரக்ஷைகளையும் வெளியிடுவதாக உத்தேசம்.

ஆசார்யன், எம்பெருமானை ப்ரார்த்திக்காமல், அவனுடைய பக் தர்களை ப்ரார்த்தித்தருளினார். அந்த ந்யாயத்தைப் பின்பற்றி இந்த ஸபையின் அபிலாஷம் ஸம்யக்காக நிறை வேற வேண்டும் என்று நேரில் அந்த ஆசார்யனை ப்ரார்த்திக்காமல் அந்தத் தூப்புல் வள்ளலு டைய அடியார்களை ஸவிநயம் ப்ரார்த்திக்கும்

22 1 66 பதிப்பாளர்கள்

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்





முகவுரை

ஐந்தாம் ஸம்புடத்தில் வெளியிடப்பட்டிருக்கும் முகவுரையை இதற்குப் பூர்வமாகக் கொள்ள வேண்டும்.

இந்த ஸம்புடத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ரஹஸ்யங்கள்:— ஸ்ரீ ஸாரஸாரம், ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம். ஸ்ரீ தத்த்வ சிகாமணி, ஸ்ரீரஹஸ்ய சிகாமணி. ஸ்ரீ அஞ்ஜலி வைபவம், ஸ்ரீ ப்ரதாநசதம், ஸ்ரீ உபகாரஸங்க்ரஹம். ஸ்ரீ ஸாரஸங்க்ரஹம், ஸ்ரீ மதுரகவிஹ்ருதயம், ஸ்ரீ விரோத பரிஹாரம் எனப் பத்து. இவற்றில் ஸ்ரீ தத்த்வசிகாமணியும், ஸ்ரீ மதுரகவிஹ்ருதயமும் லுப்தங்கள், இவற்றில் முதல் ஒன்பதும் திருவரங்கத்திலும், பத்தாவதாகிய ஸ்ரீ விரோத பரிஹாரம் திருவஹீந்திரபுரத்திலும் அருளிச் செய்யப்பட்டவையாயிருக்கும்.

கீழ்க் கூறப்பட்ட முகவுரையில் ரஹஸ்ய விபாக விஷயமாய்ச் சில அம்சங்கள் கூறப்பட்டன. இதில் ஸ்ரீரஹஸ்யபரம்பரையில் ஸ்ரீதேசிகனுக்கு உண்டாகிய ஆசார்ய கடாக்ஷ விசேஷங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

இந்த ஸம்ப்ரதாயத்தை இந்தக்கலியுகத்தின் ஆரம்பத்தில் ப்ரவர்த்தநம் செய்தருளியவர் நம்மாழ்வார். காலக்ரமத்தில் இதற்கு லோபம்ஏற்பட்டபொழுது எம்பெருமானுடைய நியமநத்தினால் அந்த ஆழ்வாரே ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு இவ்வர்த்தங்களை யோகதசையில் உபதேசித்தருளினார். நாத முனிகள் ஸ்ரீ ந்யாய தத்த்வம், ஸ்ரீ யோகரஹஸ்யம் என்னும் இரண்டு க்ரந்தங்களை அருளிச் செய்தார். இவை இரண்டும் லுப்தங்கள். தாம் பெற்ற அர்த்தங்களையெல்லாம் தம்மை ஆச்ரயித்த உய்யக் கொண்டாருக்கு உபதேசித்துத் தம்முடைய திருப்பேரனாகிய யாமுநாசார்யருக்கு அவற்றை உபதேசிக்கும்படி, நியமித்தார். அவர்அந்த நியமநத்தைத்தலைக்கட்டமுடியவில்லை. அவர் தம்மை ஆச்ரயித்த மணக்கால் நம்பிக்குத் தாம் க்ரஹித்த அர்த்த விசேஷங்களை எல்லாம் உபதேசித்து, அவற்றை ஸ்ரீயாமுநாசார்யருக்கு உபதேசிக்கும்படி நியமித்தருளினார். அவரும் அப்படியே ஸ்ரீ யாமுநா

முகவுரை

சார்யரை (ஆளவந்தாரை) ஒரு விரகாலே இவ்விஷயத்தில் ஊக்கம் உடையவராய்ச் செய்து, தாம் பெற்ற எல்லா அர்த்தங்களையும் அவருக்கு உபதேசித்துப் போந்தார். ஸ்ரீ ஆளவந்தாரும் தாம் கேட்டருளிய அர்த்த விசேஷங்களையெல்லாம் தம்முடைய ஸ்ரீ ஆத்மஸித்தி, ஸம்வித் ஸித்தி ஈச்வரஸித்தி என்னப்படும் ஸித்தி த்ரயத்திலும், ஆகமப்ராமாண்யம், புருஷ நிர்ணயம், கீதார்த்த ஸங்க்ரஹம், சதுஃச்லோகீ, ஸ்தோத்ரம் என்னும்எட்டுக்ரந்தங்களில் வெளியிட்டருளினார் இவற்றில் ஸ்தோத்ரம் திவ்யப்ரபந்தாநுஸந்தாந பரீவாஹமாயிருக்கும் என்று ஸ்வாமி தாமே அதன் வ்யாக்யானமான ரஹஸ்ய ரக்ஷையில் நிரூபித்திருக்கிறார். கீதையின் ஸாராம்சத்தை 32 சுலோகங்கள் அடங்கிய கீதார்த்த ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தில் வெளியிட்டிருக்கிறார். இப்பொழுது நாம் க்ரந்த சதுஷ்டயம் என்னப்படும் ஸ்ரீ பாஷ்யம், கீதாபாஷ்யம், பகவத்விஷயம், ரஹஸ்யங்கள் என்கிற நாலு க்ரந்தங்களையும் ரஹஸ்யமாய் ஆசார்யனிடமிருந்தே க்ரஹிக்க வேண்டும் என்று கூறி வருகிறோம். எம்பெருமானார் தம்முடைய ஆசார்யர்களான ஐவரிடமிருந்தும். ஸ்ரீ ஆளவந்தாருடைய உபதேசங்களைக்ரஹித்து அவற்றை ஸ்ரீ பாஷ்யம், ஸாரம். தீபம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம், வைகுண்ட கத்யம், நித்யம் என்கிற ஒன்பது க்ரந்தங்களில் வெளியிட்டருளினார். இவர் வரையில் தமிழ் பாஷையிலோ மணிப்ரவாள நடையிலோ ஒரு க்ரந்தமும் நம் ஆசார்யர்களினால் அருளிச் செய்யப்பட வில்லை. இவருடைய சிஷ்யரில் ப்ரதாநராயிருந்தவரும், இவருக்கு ஜ்ஞாந புத்திரர் என்று யதிராஜவைபவத்தில் வடுக நம்பியால் கூறப்பட்டவருமான திருக்குருகைப்பிரான் பிள்ளான் இவரால் நியமிக்கப்பட்டு இவருடைய காலக்ஷேப ஸங்க்ரஹமாகத் திருவாய்மொழிக்கு வ்யாக்யானமாகத் திருவாறாயிரப்படி என்னும் க்ரந்தத்தை மணிப்ரவாள நடையில் அருளிச் செய்தார். இதுவே நம் ஸம்ப்ரதாயத்தில் மணிப்ரவாள நடையில் எழுதப்பட்ட முதல் க்ரந்தமாகும். இதுவே பகவத்விஷயம் என்னப்படும்.

கீழ்க்கூறியபடியே ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீகீதாபாஷ்யம், ஸ்ரீ பகவத்விஷயம் என்கிற மூன்றும் காலக்ஷேப க்ரந்தங்களாய்க்காப்பாற்றப்பட்டுவந்தன.

எம்பெருமானார் திருநாட்டை அலங்கரிப்பதற்கு முன்பு தமக்குப் பிறகு இந்த ஸம்ப்ரதாயத்தைப் பரவச் செய்வதற்காக ஸ்ரீ பாஷ்ய கீதாபாஷ்ய ஸிம்ஹாஸநத்தில் பிள்ளான், ஆண்டான், (கடாம்பி) ஆச்சான்,(நடாதூர்) ஆழ்வான் என்கிற நால்வரையும்நிய மித்தார் பிள்ளானை மட்டும் பாஷ்யத்துடன் பகவத் விஷயம் ஸிம்ஹாஸநாதிபதியாகவும்இருக்கும்படி நியமித்தருளினார்.

மாதூகர கைங்கர்யம் செய்து வந்த கடாம்பி ஆச்சான் பல தடவைகளில் தம்மிடமிருந்து ஏகாந்தத்தில் பல விஷயங்களைக்

கேட்டுத் தெரிந்து கொண்டவர் என்பதைக் கருதி அவரை ரஹஸ்யார்த்த ஸிம்ஹாஸநாதிபதியாய் நியமித்தருளினர்.

இந்த நான்கு விதமான ஸிம்ஹாஸநாதிபத்யங்களும் கடாம்பி இராமாநுசப்பிள்ளானிடம் மட்டும் ஒன்று சேர்ந்து நின்றன எப்படி என்னில்:-பிள்ளான், எங்களாழ்வான் அம்மாள் அப்புள்ளார்என்கிற பரம்பரையாயும், கடாம்பி ஆச்சான் வழியாய் அப்புள்ளார் என்கிற பரம்பரையாயும், நடாதூர் ஆழ்வான் பரம்பரை அம்மாள் எங்களாழ்வானை ஆச்ரயித்த படியினல் அதுவும் அப்புள்ளாரிடம் சேர்ந்து விட்டது. ஆண்டான் பரம்பரையில் விசேஷித்து ஒருவரும் க்ரஹிக்கவில்லை. இப்படி அப்புள்ளார் உபய வேதாந்த ப்ரவசநத்திலும் ரஹஸ்ய ப்ரவசநத்திலும் பூர்ணாதிகாரம் பெற்றிருந்த போதிலும், (ஆளவந்தாருக்கு உய்யக்கொண்டார் மணக்கால் நம்பியைப் போலே) தூப்புல் பிள்ளையின் பெருமையை அம்மாள் அநுக்ரஹாதிகளால் அறிந்து தாம் விசேஷித்து ப்ரவசநம் செய்யாதே தம்மை ஆச்ரயித்த ஸ்ரீதேசிகனுக்குமட்டும்உபதேசம் செய்தருளினர். இப்படி ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் பகவத்விஷயம் ரஹஸ்யங்கள் என்கிற நாலு ஸிம்ஹாஸநாதிபத்யத்தையும் ஓராண் வழியாகப் பெற்று ப்ரவசநம் செய்த பெருமை ஸ்ரீ தேசிகனுக்கு அஸாதாரணமானது. குருபரம்பரையில் வேறு ஒருவருக்கும் இந்தப் பாக்யம் கிட்டவில்லை.

ஆகையாலேயிறே தூப்புல்பிள்ளை இந்த ரஹஸ்ய பரம்பரையில் தாம் கேட்டருளிய அர்த்த விசேஷங்களை எல்லாம் 34 ரஹஸ்யங்களில் பரக்க வெளியிட்டுள்ளார். இவற்றில் அம்ருதரஞ்ஜநீ என்னப்படும் 17 ரஹஸ்யங்கள் ஏற்கனவே ஐந்தாவது ஸம்புடமாக ப்ரகாசிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏழாவது ஸம்புடத்தில் அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள் என்னப்படும் 10 ரஹஸ்யங்கள் வெளியிடப்படுகின்றன.

அம்ருதாஸ்வாதிநீ என்று அநுஸந்திக்கப்படுகிற தேசிக ப்ரபந்தத்தின் இறுதியில் முனிவாஹந போகம் என்னும் ரஹஸ்யத்தில் அருளிச் செய்யப்பட்டிருக்கும் மூன்று பாட்டுக்கள் சேர்க்கப்பட்டிருப்பதினல் முனிவாஹநபோகம் அதில் சேர்ந்ததல்லவோ என்னில்? இது உசிதமன்று. ஏனெனில் அப்படி இருந்ததாகில், க்ரந்தங்களின் அவதாரணக்ரமத்தைப் பின்பற்றி அநுஸந்திக்கப்படும் ஸ்ரீ அம்ருதாஸ்வாதிநீ ப்ரபந்தத்தில் அந்த மூன்று பாட்டுக்களும் விரோதபரிஹாரப் பாட்டுக்களுக்கு முன்பு சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். நாலாயிரப்ரபந்தங்களை ஸ்ரீமந்நாத முனிகள் விபாகம் செய்தாப்போலே, ஸ்ரீதேசிகனுக்குப் பிறகு ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்து வந்த ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் நைஞராசார்யரும், 34 ரஹஸ்யங்களிலும் அருளிச் செய்யப்பட்டிருக்கும் பாட்டுக்களைத் தனி ப்ரபந்தங்களாகத் தொகுத்து தேசிகப்ரபந்தத்தில்சேர்த்துஸேவிக்கும்பொழுது17 ரஹஸ்யங்களிலுள்ள பாட்டுக்

கனை அம்ருதரஞ்ஜனீ என்றும், 10 ரஹஸ்யங்களிலுள்ள பாட்டுக்கனை அம்ருதாஸ்வாதினீ என்றும் வகுத்து, தனிரஹஸ்யங்களில் அநுஸந்திக்கப்பட்ட பாட்டுக்கனை அந்தந்த ரஹஸ்யங்களின் திருநாமத்திலேயே ஸ்ரீ பரமதபங்கம், ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், ஸ்ரீபரமபதஸோபாநம், ஸ்ரீ அதிகார ஸங்க்ரஹம் என்று தொகுத்ததும், முனிவாஹநபோகம், என்னும் ரஹஸ்யத்தின் மூன்று பாட்டுக்கள் தனித்து நின்று விட்டன. மூன்று பாட்டுக்கனைத் தனித்து ஒருப்ரபந்தம் என்று அநுஸந்திப்பது உசிதமில்லை என்று கருதி அந்த மூன்று பாட்டுக்கனையும் அம்ருதாஸ்வாதியின் இறுதியிலே சேர்த்து அநுஸந்திக்கும்படி நியமித்தார்கள் என்று நம் பூர்வர்கள் பணிப்பர்கள்.

இதை அநுஸரித்துத் தனி ரஹஸ்யங்களுடன் சேர்த்து ஸ்ரீ முனிவாஹந போகம் அச்சிடப்படுகிறது.

இதில் சேர்ந்ததான ஸ்ரீ மதுரகவி ஹ்ருதயம் லுப்தம், இதுவும் தனி ரஹஸ்யங்களில் ஒன்றாய் இருக்கலாமோ என்று தோன்றுகிறது.

ஸ்ரீஅம்ருதாஸ்வாதினீ ரஹஸ்யங்கள் ஏற்கனவே சுண்டப்பாளையம் திருவேங்கடாசார்யரால் அச்சிடப்பட்டிருக்கிறது. தெலுங்கிலும் ஒரு பதிப்பு அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படியே திருக்குடந்தை தட்டை க்ருஷ்ணமாசார்யர் ஒரு பதிப்பு வெளியிட்டிருக்கிறார் அபயப்ரதாந ஸாரத்திற்கு ஸ்ரீ. உப. வே. சேட்டலூர் மஹாமஹோபாத்யாய ஸ்வாமி ஒரு பாகத்தை வ்யாக்யானத்துடன் வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமியிடம் இருந்த மாத்ருகைகனையும் பரிசீலித்து, புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் ஏ. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், 1937-ல் ஒரு பதிப்பு வெளியிட்டிருக்கிறார். இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டுஇப்பதிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. சில பாடபேதங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் இதில் வெளியிட உத்தேசம் இருந்தது. ஆனால் 34 ரஹஸ்யங்களுக்கும் சேர்த்துப் பாடபேதம், அவற்றின் அர்த்தம், விஷய ஸங்க்ரஹ அகராதி, ப்ரமாணத்திரட்டு, பாரிபாஷிக பதங்களின் பொருள் முதலியவற்றை ஒரு தனி ஸம்புடமாக வெளியிட வேண்டும் என்று இப்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கீழ்க் கூறியஸ்ரீ உப ஸ்ரீநிவாஸராகவாசார்யர் தம் பதிப்பில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கும் ‘ப்ராரப்தேதர’ என்கிற ஸ்லோகம் ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகத்தில் அச்சுப்ரதியில் ‘ஸ்லோகத்தை இங்கே படிப்பது’ என்கிற வாக்யம்காணப்படுவதையே ஆதாரமாகக கொண்டு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் அதற்கு முற்பட்டக்ரந்தம் என்று அபிப்ராயப்பட்டிருக்கிறார். இந்த வாக்யம் காலக்ஷேபம் செய்தவர் தம்முடைய ஏட்டு ப்ரதியில் தம்முடைய அநுஸந்தாநத்திற்

காக இந்தப் பங்கியைச் சேர்த்திருக்க வேண்டும் என்றும், இப்படிக் கொள்ளா விட்டால் வைபவப்ரகாசாதிகளுடன் முரண்படும் என்றும், இந்த ரஹஸ்யத்திலேயே ஸ்வாமி தாமே

'வ்யாஸத: க்க்யாபயிஷ்யந்'

என்று அருளிச் செய்திருப்பதுடன் விரோதிக்கும் என்பதையும் திருவுள்ளத்தில் கொண்டு, ஸ்ரீ உபவே சேட்டலூர் மஹா மஹோபாத்யாய ஸ்வாமி தம்முடைய பதிப்பில் இந்த வாக்யம் ப்ரக்ஷிப்தம் என்று கூறி இது விஷயத்தை விவரித்துள்ளார். தவிர ஸ்வாமி தம்முடைய ஒரு ஸூக்தியை மற்றொரு ஸ்ரீ ஸூக்தியில் உதாஹரிக்கும் ஸமாந ப்ரகரணங்கள் எல்லாவற்றிலும்— 'பரக்கச் சொன்னேம்', 'உக்தமஸ்மாபி:' என்று ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார். 'படிப்பது' என்கிற பதத்தை ப்ரயோகித்திருக்கும் இடங்களில் அது பூர்வர்களால் அருளிச் செய்யப்பட்ட சுலோகமாயிருக்கும். மேலும் இந்த ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகத்தில் கூறியது ஸங்க்ரஹம் என்றும், மேல் தாம் விஸ்தரமாக நிரூபிக்கப் போகிறேம்என்று ஸ்பஷ்டமாக அருளிச்செய்யப்பட்டிருப்பதினாலும் அப்படியே ரஹஸ்யத்ரய ஸாரத்தில் விவரித்திருப்பதினாலும், அது முன்பே அருளிச்செய்யப்பட்டது என்பது பொருந்தாது, அப்படி அந்த வாக்யம் இந்த ரஹஸ்யத்தில் இருக்க வேண்டுமாகில் அப்படி ஆரம்பிக்கும் சுலோகம் ஸ்வாமி தேசினுக்கு முற்பட்ட ஒருவரால் அநுஸந்திக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளலாமே ஒழிய, அதைக் கொண்டு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகத்திற்கு முற்பட்டது என்று கூறுவது யுக்தமன்று என்று தோன்றுகிறது.

ஸ்வாமி தாமே தம்முடைய ரஹஸ்யங்களிலும் மற்றும் பல ஸ்ரீ ஸூக்திகளிலும் கடாம்பி ஆச்சான் ஸம்ப்ரதாயமாய்த் தமக்குக் கிடைத்த அர்த்தங்களின் பெருமையை வெளியிட்டிருக்கிறார்

ஸாமாந்யமாக மடைப்பள்ளி ஆச்சான்என்றால் நமக்கு ஏதோதிருமடைப்பள்ளியில் இருந்துகொண்டு எம்பெருமானார் திருவுள்ளம் உகக்கும்படியான தளிகைகளைப் பண்ணி. அவற்றை எம்பெருமானாருக்கு மாதாகரமாக ஸமர்ப்பித்து வந்தவர் போலும் என்று தோன்றும். இது முற்றிலும் தவறு. அந்தக் கைங்கர்யம் செய்த போதிலும் வேதாந்த க்ரந்த காலக்ஷேபங்களில் மற்ற சிஷ்யர்களுக்கு இவர் கொஞ்சமும் குறைந்தவரல்லர் என்பதை ஆசார்ய ஸார்வபௌமன் நம்முடைய ஸர்வோபஜீவ்ய ஸூக்தியான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில்

'इति यतिराज महानस परिमल परिवाह वासितां पिबत ।
विबुधपरिषन्निषेव्यां वेदान्तोदयन संप्रदाय सुधाम् ॥'

(இதி யதி ராஜ மஹாநஸபரிமள பரிவாஹ வாஸிதாம் பிபத
விபுதபரிஷந்நிஷேவ்யாம் வேதாந்தோதயந ஸம்ப்ரதாய ஸுதாம்)

என்று அருளிச் செய்தார். கடாம்பி ஆச்சானுக்கு வேதாந்தோதயனர் என்கிற ஒரு ப்ரஸித்த திருநாமம் இருந்தது;என்பதைச் சுட்டிக் காட்டி னூர். தர்க்க சாஸ்திரத்திற்கு உதயனர் எப்படியோ அப்படியே வேதாந்த சாஸ்த்ரத்திற்குக் கடாம்பி ஆச்சான் இருந்தார் என்று கூறப்பட்டதாகிறது. ஸூக்ஷ்மமான வேதாந்தார்த்தங்களை எல்லோரும் ஸுலபமாய் அறிந்து கொள்ளுவதற்காகத் தாம் எம்பெருமானரிடம் இருந்து கேட்ட அர்த்த விசேஷங்களை அவர் ப்ரவசனம் செய்த மேன் மையும் காட்டப்பட்டதாகிறது,

இதே அர்த்தத்தை

'யதிவரனுர்மடைப் பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே'

என்று ஸ்ரீ பரமபத ஸோபாநத்திலும்

' मान्यं यतीश्वर महानस संप्रदायम् ' என்றும்,

यो महानसिको महान् यतिपतेः नीतश्च तत्पौत्रजानाचार्यान् 'என்றும், கூறியிருப்பதினால் ரஹஸ்யார்த்தங்களை விளக்குவதற்குப் பூர்ண அதி காரம் பெற்றவர் தாம் ஒருவரே என்று வெளியிட்டருளினராயிற்று.

எம்பெருமானர் ஸ்ரீபாஷ்யத்தின் இரண்டாவது மங்கள ஸுலோகத்தில்


(ஸுமநஸோ பௌமாः பிபந்து அந்வஹம்)

என்றருளாலித்தாப் போலே ஸ்வாமி தேசிகனும் இங்கு, 'வாஸிதாம் பிபத' என்று அநுசாஸநம் செய்தருளினர் என்பது தெரிவிக்கப்பட்ட தாகிறது.

எம்பெருமானர் தாம் திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே மஹதா ச்ரமேண க்ரஹித்தருளிய சரம ஸுலோகத்தின் விசேஷார்த் தங்களையெல்லாம் ஒரு க்ரந்த முகமாக அருளிச் செய்யாமல், தெற் காழ்வான் ஸந்நிதியிலே எடுத்துக் கை நீட்டின தம்முடைய சிஷ்யர் களுக்கு மட்டும் உபதேசித்தருளினர். அந்த அர்த்த விசேஷங்களை யும், அது போல் எம்பெருமானர் திருமந்திரம் முதலானவற்றிற்கு அருளிச் செய்த அர்த்த விசேஷங்களையும் எல்லாம் பல தடவை கேட்டுத் தெரிந்து கொண்ட பாக்யம் கடாம்பி ஆச்சானுக்கே.

அவற்றைப்பெற்ற ஸ்வாமிதேசிகன் தம்முடைய பரமகருணையால் ஸர்வ லோகோபஜீவ்யமாய் பிற்பட்டாரும் தெரிந்து கொள்ள வேண்டுமென 34 ரஹஸ்யங்களில் அவற்றையெல்லாம் வெளியிட்டருளினர். இப்படிப் பட்ட மஹோபகாரம் செய்த ஆசார்யர்கள் வேறு ஒருவருமில்லை. இவற்றில் ஓரிடத்திலாவது ச்ருதி வாக்யம் உதாஹரிக்கப்படவில்லை. அவற்றின்கருத்தைமட்டும் அநுவாதம் செய்தருளியிருக்கிறார். ஆகை யினாலேயிறே இவருடைய இந்த ரஹஸ்ய விபாகத்திலுள்ள ஸ்ரீ ஸூக்தி களை ஸ்த்ரீ சூத்திராதிகளுட்பட எல்லோருக்கும் ப்ரயோஜனப்படுவ னவாய்நிற்கின்றன.

கார்யதர்சி



अखिलभुवनरक्षा साधनायावतीर्णं कुमति कलिविलासध्वान्त तिग्मांशुजाले ।
निरवधिकरुणाब्धौ वेदचूडागुरौ मे भवतु परमभक्तिः श्रीनिधौ वेङ्कटेशे ॥

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழிகளாகிய

ஸ்ரீ ஸூக்திகள்-116

அவற்றில்

நாலாவது விபாகம்

ரஹஸ்யங்கள்-34

தனி ரஹஸ்யங்கள் 7

அம்ருத ரஞ்ஜநீ ரஹஸ்யங்கள் 17

அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள் 10

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்





ரஹஸ்யங்களின் திருநாமங்கள்

[இங்கு குறிப்பிடப்படுகிற க்ரமம் க்ரந்தங்களின் நிர்மாண காலத்தைப் பின்பற்றியதாயிருக்கும்.]

1 ஸ்ரீ ஸ்தேயாவிரோதம்
2 ஸம்ப்ரதாய பரிசுத்தி
3 தத்த்வ பதவீ
4 ரஹஸ்ய பதவீ
5 தத்த்வ நவநீதம்
6 ரஹஸ்ய நவநீதம்
7 தத்த்வ மாத்ருகா
8 ரஹஸ்யமாத்ருகா
9 தத்த்வ ஸந்தேசம்
10 ரஹஸ்ய ஸந்தேசம்
11 ரஹஸ்ய ஸந்தேச விவரணம்
12 தத்த்வரத்னாவளீ
13 தத்த்வ ரத்னாவளீ ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்
14 பரமத பங்கம்
15 மெய்விரத நன்னிலத்து மான்மியம்(ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்)
16 ரஹஸ்ய ரத்னாவளீ
17 ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயம்
18 தத்த்வத்ரய சுளகம்
19 ரஹஸ்யத்ரய சுளகம்
20 ஸார தீபம்
21 ஸார ஸாரம்
22 பரமபத ஸோபாநம்

23 ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம்
24 தத்த்வ சிகாமணி
25 ரஹஸ்ய சிகாமணி
26 அஞ்ஜலி வைபவம்
27 ப்ரதாந சதகம்
28 உபகார ஸங்க்ரஹம்
29 ஸார ஸங்க்ரஹம்
30 மதுரகவி ஹ்ருதயம்
31 முனிவாஹந போகம்
32 குருபரம்பரா ஸாரம்
33 ரஹஸ்யத்ரய ஸாரம்
34 விரோத பரிஹாரம்

இவற்றில் 1, 14, 15, 22, 31, 32, 33 என்கிற ஏழும் தனி ரஹஸ்யங்கள் என்றும், 2—13, 16—20 என்கிற பதினேழும் அம்ருத ரஞ்ஜநீ ரஹஸ்யங்கள் என்றும், 21, 23—30, 34 இவை பத்தும் அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள் என்றும் சொல்லப்படும். இவைகளில் 1, 20, 24, 30 என்பவை நாலும் லுப்தங்கள்.

பாகம் 2

அம்ருதாஸ்வாதி நீ ரஹஸ்யங்கள்

தனியன்கள்

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் *
பார் ஒன்றச்சொன்ன பழமொழியுள்—ஒரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

பொருள் அடக்கம்

ஸ்ரீ ஸார ஸாரம்
ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம்
ஸ்ரீ தத்த்வ சிகாமணி (லுப்தம்)
ஸ்ரீ ரஹஸ்ய சிகாமணி
ஸ்ரீ அஞ்ஜலி வைபவம்
ஸ்ரீ ப்ரதாந சதகம்
ஸ்ரீ உபகார ஸங்க்ரஹம்
ஸ்ரீ ஸார ஸங்க்ரஹம்
ஸ்ரீ மதுரகவி ஹ்ருதயம் (லுப்தம்)
ஸ்ரீ விரோத பரிஹாரம்

ஸ்ரீ:

ஸ்ரீ ஸாரஸார விஷயமான சில விசேஷக் குறிப்புக்கள்:—

முதல் 'ஸார' என்னும் பதம் ரஹஸ்யத்ரயத்தைச் சொல்லும், அவற்றின் ஸாரத்தை நிரூபிக்கிற இந்த க்ரந்தம் 'ஸாரஸாரம்' எனப்படுகிறது. இதே ரீதியில் ஸ்ரீ ஸார தீபமும் ஸ்ரீ ஸார ஸங்க்ரஹமும் இருக்கின்றன. இவற்றின் திருநாமங்கள் எம்பெருமானுடைய ஸ்ரீ வேதாந்த ஸாரம், ஸ்ரீ வேதாந்த தீபம், ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம் என்கிற மூன்று க்ரந்தங்களையும் நினைவூட்டுகிறபடியினால் கீழ் அந்தராஞ்ஜனீ ரஹஸ்யங்களில் சேர்ந்ததாக நிரூபிக்கப்பட்ட லுப்தமான ஸ்ரீ ஸார தீபம் இங்குக் கூறப்படும் அந்தராஸ்வாதினீ ரஹஸ்யங்களில் சேர்ந்ததாயிருக்க வேண்டும் என்பது சிலருடைய அபிப்ராயம்.

இதில் எம்பெருமானுடைய க்ரந்தங்களில் ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம், நித்யம், சத்யம் கீதாபாஷ்யம் இவற்றினின்று மேற்கோள்கள் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே பட்டருடைய லக்ஷ்மீகல்பாண வாக்யமும் ப்ரமாணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதில் நிரூபிக்கபட்டிருக்கும் சில அர்த்த விசேஷங்கள் நமக்கு அத்யந்தம் உபாதேயங்களாயிருப்பதினால் அவை இங்குஎடுத்துக் காட்டப்படுகின்றன.

'முதனுக்கு அநிஷ்டப்ரஸங்கமும் ப்ராப்தி ப்ரஸங்கமுமின்றிக்கே ஈஸ்வரனும் நித்ய நிரநிஷ்டனாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் இருக்க,

'சூழ்ந்து இருந்து ஏத்துவர் பல்லாண்டே'

என்ன வேண்டிற்று என்? என்னில்—இது அநிஷ்ட நிவ்ருத்தி-ப்ராப்தி ப்ரயோஜநமாகக் கொண்டாதல் அஜ்ஞாநத்தைக் காரணமாகக்கொண்டாதல் வருமதன்று, இவனுக்கு ஸ்வரூபத்தைச் சொன்ன ஸாமகாநாதிகளைப் போலே இது ஒரு ஸவச்சந்த (பர) வ்ருத்தி விசேஷம்.'

'நிபுணனுக்குப் பரஸமர்ப்பணமும் ஆசார்ய க்ருத்யம்.'

'நின் திருவெட்டெழுத்தும் கற்று, நான் உற்றதும்,
உன் அடியார்க்கடிமை'

என்கையாலே இதுவே திருமந்த்ரத்திற்கு உயிராகிலே.'

'இப்படி இங்கும் அங்கும் திருமாலன்றியின்மை கண்டவன் த்வயநிஷ்டன்.'

இதில் சொன்ன உபாயம் ஸர்வாநிஷ்டாநகளோயும் கழிக
வற்ருகையாலே உபாய விரோதியைக் கழிக்கும்படியை ஸ்ரீம
கீதா பாஷ்யத்திலும், ப்ராப்தி விரோதியைக் கழிக்கும்படியை க
யத்திலும் உதாஹரித்தருளினர். ஆகையால் இரண்டுக்கு
விரோதமில்லை.'

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்





சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள

இருபத்தோராவது ரஹஸ்யம்

ஸ்ரீலாலாம்

[இது அம்ருதாஸ்வாதினீ ரஹஸ்யங்களில் முதலாவது
ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

தனியன்

प्रणतिं वेङ्कटेशस्य पदयोः विदधीमहि ।
यदुक्तयो यतीन्द्रोक्ति रहस्यानां रसायनम् ॥

ப்ரணதிம் வேங்கடேசஸ்ய பதயோ: விததீமஹி |
யதுக்தயோ யதீந்த்ரோக்தி ரஹஸ்யாநாம்ரஸாயநம் | |

திருமந்த்ராதிகாரம் என்னும் முதல் அதிகாரம்

[ரஹஸ்யத்ரயத்தின் உபஜீவ்யத்வம்—ரஹஸ்யத்ரய க்ரம:—திரு வஷ்டாக்ஷரத்தின் உத்கர்ஷம்—அக்ஷர விபாகம்—ப்ரணவார்த்தம்— அகாரார்த்தம்—லுப்த சதுர்த்யர்த்தம்—லக்ஷ்மீஸம்பந்த:—உகாரார்த்தம் —மகாரார்த்தம்—உகாரார்த்தயோ ஜாந்தரம்—நம:சப்தார்த்தம்—ஸத் தூலாதி யோஜநைகள்—ஸகலஷ்ம பேஜநா ப்ராதாந்யம்--நம: சப்த வாக்யார்த்தம்--பாகவத சேஷத்வ ப்ரதிபாதநம்—திருமந்திரத்தின் உபநிஷத்—உபாய ப்ரதிபாதநம் —நமஸ்ஸு உபாய பரம் என்றதின் தாத்பர்யம்—நாராயண சப்தார்த்தம்—ஸர்வ வ்யாபகத்வம்—சதுர்த்தீ விபக்த்யர்த்தம்--மங்களாசாஸநாவச்யகதை—வாக்யார்த்தநிரூபணம்]

1 மூலம் கிளையென ஒன்றிரண்டான மொழியிரண்டும் *
மேல் ஒன்றிலையென நின்ற அவ்வித்தகன் தன்னுரையும் *
காலம் கழிவதன் முன்னம் கருத்துறக் கண்டிடவே *
ஞாலம் புகழும் நம் தேசிகர் தாம் நம்மை வைத்தனரே. 1

2 'கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன்
ஒருவர்க்குரியேனே'

என்கிறபடியே ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ சேஷபூதனாய் வந்து அநாதிகர்ம ப்ரவாஹத்தாலே அடிமைசெய்யப்பெறுதேகின்ற ரஹஸ்யத்ரயத்தின்உபதேசத்வாரா க்ஷேத்ரஜ்ஞன் அவஸர ப்ரதீக்ஷையான பகவத்க்ருபையாலே புரிந்து, ஸதாசார்யமுகத்தாலேபெற்ற ரஹஸ்யத்ரயமாகிற ஸம்ஸார சேஷஜத்தை உபஜீவிக்கும்படி சொல்லுகிறோம்.

ரஹஸ்யத்ரயக்ரமம்

ஸ்வரூபம் தெளிந்தவனுக்கல்லது ஸ்வரூபாநுரூபமான பரம புருஷார்த்தத்தில் அபிருசியும், ததுபாய பரிக்ரஹமும் உண்டாகாமையாலே ஸ்வரூப வைசத்யஹேதுவான திருமந்த்ரம் முற்பட அநுஸந்தேயம். இதில் பதங்களிலே

---

1. ஞாலம்-பூமியிலுள்ளோர், புகழும்-, தோத்திரம் செய்கிற, நம்-நம்முடைய, தேசிகர்-ஆசார்யர்கள், தாம்-தாங்களே, மூலம்கிளையென-வேர் போலவும் கிளைகள் போலவும், ஒன்று-ஒன்றும் இரண்டான இரண்டுமான, மொழி இரண்டும்-திருமந்திரம், த்வயம் என்கிற இரண்டுமந்த்ரத்தையும் மேல்-(இதற்கு)மேற்பட்டது ஒன்றுஇலை-ஒன்று இல்லை. என-என்னும்படியாக, நின்ற-நிற்கும், அவ்வித்தகன்-அந்த ஆச்சர்யஸ்வபாவனான ஸ்ரீகிருஷ்ணனுடைய, உரையும்-வார்த்தையும் (சரமசுலோகத்தையும்), காலம் வாழ்நாள், கழிவதன் முன்னம்-கழிவதற்கு முன்பே கருத்துற-ஹ்ருதயத்தில் அர்த்தங்கள் நிலைநிற்கும்படியாக, கண்டிட-அறிவதற்காக, நம்மை- (தங்களை ஆச்ரயித்த) நம்மை வைத்தனர்-வைத்தார்கள், செய்தார்கள் என்ற, படி ஏ-அசை. 'நல் தேசிகர்' என்று பாடாந்தரம். ஸதாசார்யகடாக்ஷம் பெற்ற சரமார்த்தர்கள் என்று பொருள். 'கண்டு அடைவே' என்று பாடாந்தரம்-ரஹஸ்யார்த்தங்களை உள்ளபடியே கண்டு, அடைவே - க்ரமத்திலே ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களுடைய நிஷ்டாக்ரமத்திலே என்று அர்த்தம்.

2 பெரிய திருமொழி 8-9-3

மோக்ஷியுமாய் சரணயமுமாய் ப்ராப்யமுமாய்த் தோற்றின பதத்
வதத்தை பதநீ விகரஹ விமோக்ஷங்களாலே விஸ்தரிஷ்டமாக வெளிபி
டுகையாலும், மந்யபதத்தில் மபத அர்த்த ஸ்வபாவங்களாலே
ஸம்க்ஷிப்தமாய்த் தோற்றின உபாய விமோக்ஷத்தை அநுஷ்டாந
முகத்தாலே காட்டுகையாலும். மந்த்ரமாய் அஷ்டகர்ண மாகஉப
தேஸிக்க வேண்டின சேர்த்தியாலும், 'திருமந்தரத்திலே பிறந்து
த்வயத்திலே வளர்ந்து' என்கிற கரமத்தாலும், அநாதரம் தவ
யம் அநுஸந்தேயம். இவை இரண்டிலும தோற்றின உபாயத்
தின் அதிகாரி விமோக்ஷத்தையும், இது துஷ்கராகக நிரபேக்ஷமு
மாய் ஸ்வதந்த்ரமான நிலையையும விரோதி நிவ்ருத்தயச்சத்தை
யும் வெளியிட்டு அகிஞ்சநோப் பாஸமர்பணத்திலே மூட்டித்
தளும்பாதபடி நேற்றுகையாலும், சரமஸ்லோகம் (அநந்தரம்)அநு
ஸந்தேயம்.

இவற்றில் ஸ்ரீமதஷ்டாக்ஷரமாகிற மஹாமந்த்ரம் பல உப
நிஷத்துகளிலும உபப்ருமஹணங்களிலும் பரஸித்தமாய,

1 'त्रयो वेदाः षडङ्गानि' (த்ரயோ வேதாஃ ஷடங்காநி)

இத்யாதிகளிற்படியே ஸ்ருதி ஸ்ம்
திருவஷ்டாக்ஷரத்தின் உத்கர்ஷம் ருதிகளெல்லாததி (வற்றி) லு
முள்ளபாரதமார்த்தங்களைப் பொ
திந்துகொண்டிருப்பதாய்,

2 'यत्राष्टाक्षर संसिद्धः' (யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தஃ)

இத்யாதிகளிற்படியே ஸர்வாநிஷ்ட நிவர்த்தகக்ஷமமாய்,

3 'ऐहलौकिकमैश्वर्यं' (ஐஹலௌகிகமைஸ்வர்யம்)

இத்யாதிகளிற்படியே ஸர்வபுருஷார்த்தங்களுக்கும் ஸாதநமாய்,

4 'सकृदष्टाक्षरं जप्त्वा' (ஸகருதஷ்டாக்ஷரம் ஜப்த்வா)

---

1 நாரதீயம்- 1 – 9 வேதங்கள் மூன்று, அங்கங்களை ஆறு.

2 நாரதீயம்-1-20. யத்ர-எந்த தேசத்தில், அஷ்டாக்ஷரஸம்
ஸித்த- திருமந்திரத்தில் ஸித்தி அடைந்தவனை (மஹாபுருஷன்
வஸிக்கிறானே, அங்கு திருடன் ஸ்வாதி முதலியவை நடமாடா)

3 நாரதீய கல்பம். (இந்த மந்த்ரம்) இந்த லோகத்தில் ஐச்வர்யத்
தையும், மறுமையில் ஸ்வர்க்காதிகளையும் கொடுக்கும்.

4 நாரதீயம்-1-10 அஷ்டாக்ஷரம்- திருவஷ்டாக்ஷரத்தை, ஸக்ருத்-
ஒரு தடவை, ஜப்த்வா—ஜபம் செய்து.

இத்யாதிகளிற்படியே ஜப அர்த்தஜ்ஞாநாதி முகத்தாலேகர்மயோ காதிகளெலலாத்து(வற்று)ககும் உபகாரகமாய்,

1 ' न स्वरः प्रणवोऽङ्गानि ' (ந ஸ்வரः ப்ரணவோ ऽங்காநி)

2 ' वैदिक तान्त्रिक चैव ' (வைதிகம் தாந்த்ரிகம் சைவ)

இத்யாதிகளிற்படியே தந்தா(த)ம் அதிகாராநுகுணமாக ஸர்வ வாணங்களுகும் உபஜீவ்யமாய்,

3 ' चेतनाचेतन सर्वं ' (சேதநாசேதநம் ஸர்வம்) இ யாதிகளிற் படியே மோஷ மோஷி ஸர்வ தத்த்வ கண்ட்டோக்திமத்தாய்,

4 ' किं तत्र बहुभिः मन्त्रैः ' (கிம் தத்ர பஹுபிः மந்த்ரைः)

5 ' एकोऽष्टाक्षर एव अयं अलमात्मविशुद्धये '

(ஏகோஷ்டாக்ஷர ஏவாயம் அலமாத்மவிஶுத்தயே)

என்கிறபடியே ஸர்வ மந்த்ரரைரபேக்ஷ்யகரமாய்,

6 ' सर्वत्राष्टाक्षरो मन्त्रः मूर्तिमन्त्रो यथा भवेत् '

(ஸர்வத்ர அஷ்டாக்ஷரோ மந்த்ரः மூர்த்திமந்த்ரோ யதா பவேத்)

என்கிறபடியே ஸர்வ பகவந் மூர்த்திகளுக்கும் ஸாதாரணமாய்,

7 ' न मन्त्रोऽष्टाक्षरात् परः ' (ந மந்த்ரோ ऽஷ்டாக்ஷராத் பரः)

1, 2 நாரதீயம்1-104. (பாஞ்சராத்ரம் என்னும் பாற்கடலில் கர் மங்கள்) வைதிகம், தாந்த்ரிகம், வைதிகதாந்த்ரிகம் என மூன்று விதமாகக் கூறபட்டிருக்கிறது. ஸ்வரம்,ப்ரணவம் அங்கங்யாஸம்வேறு விதிகள்(ஸ்த்ரீசூத்ரர்களுக்குக் கிடையாது)

3 (பகவானைக் காட்டிலும் வேருன) சேதநாசேதநங்கள் எல் லாம் (எவனுக்கு இருப்பிடமாயிருக்கின்றனவோ அவன்நாராயணன்)

4 நாரதீயம்—1—41. தத்ர—பகவானை அடையும் விஷயத்தில், பஹுபி:—அநேகங்களான, மந்த்ரைः—மந்த்ரங்களினல், கிம்—என்ன ப்ரயோஜனம். (நமோநாராயணய என்னும் மந்திரம் எல்லாப் பலத்தையும் கொடுக்கக்கூடியது)

5 நாரதீயம - 1-17 ஏகः அஷ்டாக்ஷர ஏவ அயம் - திருவஷ்டா க்ஷரமாகிற இந்த மந்த்ரம், ஆத்மவிசுத்தயே—ஆத்ம பரிசுத்தி அடை வதற்கு அலம்-போதுமானது.

6 அஷ்டாக்ஷரப்ரஹ்மவித்யை.ஸர்வத்ர-எல்லா இடத்திலும். அஷ் டாக்ஷரோமந்த்ரः-திருவஷ்டாக்ஷரமாகிற மந்திரம், மூர்த்தி மந்த்ர.— மூர்த்திகளுக்கு மந்திரமாக, யதா - எப்படி,பவேத்-ஆகுமோ.

7 நாரஸி.புரா- 18-32 அஷ்டாக்ஷராத் - அஷ்டாக்ஷரத்திற்கு, பரः-மேற்பட்ட, மந்த்ரः-மந்த்ரமானது, ந - இலலை.

1 'मन्त्राणां परमो मन्त्रः' (மந்த்ராணாம் பரமோ மந்த்ரः)
இத்யாதிகளிற்படியே ஸர்வ வ்யாபக மந்த்ரங்களிலும் ப்ரதாநமா யிருக்கையாலே ஸாவாசார்யர்களும் இத்தையே ஆதரிப்பார்கள். ஆழ்வார்களும்

2 ' நின் திருவெட்டெழுத்தும் கற்று '
3 ' எட்டெழுத்துமோதுவார்கள் '
4 ' எட்டெழுத்தும் வாரமாக ஓதுவார்கள் '

என் று இம்மூலமஹதரத்தையே பரம புருஷார்த்த மூலமாக அரு ளிச்செய்தார்கள். அநுகூல ப்ரதிகூல ஸாதாரண ஜந்மம் போ லன்றிக்கே

5 ' பிறந்தபின் மறந்திலேன் '

என்கிற ஸ்ரேஷ்ட ஜந்மம் ஆசார்யன் உபதேஸித்த திருமந்த்ர மடியாக வருகிறது.

இதில் பதங்க(ஸ)ளில் ஓர் அக்ஷரம் என்றும், இரண்டு அக்ஷ (ரங்கள்)ரம் என்றும், ஐந்து அக்ஷரங்கள் என்றும் ஸ்ருதிகள் வகுத்தன. இது

6 ' நாடு நகரமும் நன்கறிய நமோநாராயணாய '

என்றும்

7 ' நல் வகையால் நமோ நாராயணா '

என்றும் சொல்லுகிறபடியே ப்ரணவரஹிதமான போதும் அஷ்டாக்ஷரமாம்படி

8 'तत्रोत्तरायणाद्यादिः' (தத்ரோத்தராயணஸ்ய ஆதிः)

என்கிற நாரதீய வசநத்தாலே ஸித்தம். இது

9 'नमो नारायणेत्युक्त्वा श्वपाकः पुनरागमत्'

(நமோ நாராயணேத்யுக்த்வா ஸ்வபாகः புநராகமத்)

---

1 நாரதீயம் - 1 - 11 மந்த்ராணாம் - மந்த்ரங்களுக்குள், பரமः - உயர்ந்த, மந்த்ரம். 2 பெரிய திருமொழி—8 -10 - 3
3,4, 5 திருச்சந்த - 77,78,64 6, 7 பெரியாழ்வார் - 1 1 - 4, 11
8 நார - 1 - 57 அங்கு ப்ரணவத்தின் முதல் எழுத்து
9 வராஹ - கைசிக மாஹாத்ம்யம். நமோ நாராயணேதி - நமோ நாராயண என்று, உக்த்வா - சொல்லி விட்டு, ச்வபாகः - (அந்த நம்பாடுவான் என்கிற) சண்டாளன், புநः - திரும்பவும், ஆகமத் - வந்தான்.

1 நாமம் சொல்லில் நமோ நாராயணமே '

அக்ஷரவிபாகம்

இத்யாதிகளிற்படியே ப்ரணவ சதுர்த்திகளே ஒழிந்தால் ஸர்வாதி காரமாம். இதில் பரதமபததை

ப்ரணவார்த்தம்

2 ' மூலமாகிய ஒற்றை எழுத்தை ' என்று பெரியாழ்வார் அருளிச்செய்தார்.

3 ' अद्यन्तु अक्षरं ब्रह्म '(ஆத்யந்து தூர்யக்ஷரம் ப்ரஹ்ம)

4 ' மூன்று எழுத்ததனே '

இத்யாதிகளிற் படியே அநந்த ஸாகங்களான வேதங்களுக்கும் இம்மந்த்ரமதனக்கும் மூ ல மா ய், இதறிந்தவனே வேதவித் என்னும்படி ஸர்வஸாரஸங்க்ரஹமாயிருக்கும். ஏகபதமான இதில் அக்ஷரத்ரயம நிர்வசந பலத்தாலே தனித்தனியே பதமாய் மூன்றும் கூட ஒரு வாகயமாகிறது. இந்ந்யாயம் நமஸ்ஸிலும் வரும்.

இவற்றில் ப்ரதமாக்ஷரம் ரூடியாலே விஷ்ணுவாசகம் என்னும் இடம் ஸ்ருதி ஸ்ம்ருதி நிகண்டுக்களாலும் ப்ரயோகங்க ளாலும் ஸித்தம். இதுஸப்தஅர்த்த ஸ்வபாவங்களாலே ஸர்வஸங்க ராஹகம். வேதாந்தங்களிற் படியே இங்கு முற்பட பரதத்த்வ

அகாரார்த்தம்

லக்ஷணமான காரணத்வம் அறியவேண்டும். காரணமே ஸரண்யம் என்று ஸ்ருதி ஸித்தமாகையாலே ஸரண்யதைககு மிகவும் உபயுக்தமான ரக்ஷகத்வமும் அறியவேண்டும். ஆஸரிதருடைய பேறு தன்பேறுக ரக்ஷிககும் என்று அறிகைகாக ஸேஷிதவமும அறியவேண்டும். ஆகையாலே ஸ்ரிய:பதியினுடைய ஸர்வ காரணத்வமும் ஸர்வ ரக்ஷகத்வமும் ஸர்வ ஸேஷிதவமுமாகிற ப்ரதாநார்த்தங்கள் இ யகே பரதாந ப்ரதிபாத்யங்கள் இவற்றுலே

5 ' ஒன்றும் தேவும் '

இத்யாதிகளிற்படியே த்ரிமூர்த்தி ஸாம்யாதிகளும் கழியும். ஸர்வ வாச்ய மூலமான ஸர்வேஸ்வரன ஸர்வவாசக மூலமான இவ்

---

1 பெரிய திரு - 6 - 10-1 2 பெரியத் மார் திரு [illegible]

3 மனு - 11 - 65. மூ ன ரு [illegible]

ப்ரணவம் எல்லா வேதங்களுக்கு முதலடியை

4 பெரிய - திரு - 4 - 7 - 10.

5 திருவாய் - 4 - 10 - 1

வக்ஷரத்துக்கு வாச்யன் என்று

1 'समस्तशब्दमूलत्वात्' (ஸமஸ்தஶப்தமூலத்வாத்)

இத்யாதி புராணவசநத்திலும், வேதார்த்தஸங்க்ரஹத்திலும் ப்ரதிபாதித்தபடியே இது ஸர்வகாரணபூதனைக் காட்டுகிறது. 'அவ ரக்ஷணே' என்கிற தாதுவிலே வ்யுத்பந்நமாய் ரக்ஷகனுகவும் சொல்லுகிறது. இந்த ரக்ஷணம் ஸங்கோசமில்லாமையாலே ஸர்வ விஷயம். இது ரக்ஷணீயருடைய ஸ்வரூபாதிகளிலும் நித்ய முக்தர்பக்கலும் நிரூபாதிகம். மோக்ஷ ப்ரதாநாதிகளில் வைஷம்ய நைர்க்ருண்ய ஸர்வ முக்தி ப்ரஸங்காதிகள் வாராமைக்காக ஸ்வதந்த்ரஸ்வாமி சேதிதங்களான வ்யாஜங்களை முன்னிட்டிருக்கும் (ரக்ஷகத்வம்). ரக்ஷகத்வம விரோதியைப்பற்ற, விரோதித்வம் புருஷார்த்தத்தைப்பற்ற. இவை மூன்றும் பதத்ரயத்தில் அடைவே கண்டு கொள்வது.

லுப்த சதுர்த்த்யர்த்தம்

இவ்வக்ஷரத்திலே தாத்ர்த்த்ய சதுர்த்தி ஏறி லோபித்துக் கிடக்கிறது என்னுமிடம் ப்ரணவத்தைக் கொண்டு ஆத்ம ஸமர்ப்பணத்தை விதிக்கிற ஶ்ருத்யாதிகளில் ஒளசித்யத்தாலே ஸித்தம். தாதர்த்த்யமாவது—மோக்ஷத்வம். அதாவது தனக்கு ஓர் உபகாரத்தை ப்ரதாநமாகப்பற்றவன்றிக்கே பரோபகாரார்ஹமாகை. 'த்வம் மே' என்று ஸ்வாமி தொடர, 'அஹம் மே' என்றுதிமிரப்பண்ணும் அஹங்காரத்தாலே அஸத்கல்பனைவஷே மோக்ஷத்வ ஜ்ஞாநம் உஜ்ஜீவிப்பிக்கிறதாகையாலே அதின் ப்ராதாந்யம் தோற்ற ஸம்பந்தத்தினுடைய விதி நிஷேதத்திற்குப் பொதுவான தர்மிநிர்த்தேஶத்திற்கு முன்னே இச்சேஷத்வம் ப்ரகாஶித மாயிற்று. இதுக்கு ப்ரதிஸம்பந்திபான ரக்ஷகனுடைய மோக்ஷித்வம் பலிதம். காலாவச்சேதம் இல்லாமையாலே இதுக்கு அயோகவ்யவச்சேதம் ஸித்தம். இத்தாலே ஶரீரஶரீரிபாவமும் பலிக்கும். இங்கு ப்ரக்ருதி ப்ரத்யயங்களாலே தோற்றின ரக்ஷகத்வமோக்ஷித்வங்களுக்கு அஜ்ஞாநதுக்கங்களை பஹுகாலமான லீலா விபூதியிலும் ப்ரகாஶாதி பஹுகாலமான நித்ய விபூதியிலும் ப்ராசுர்யேண உபயோகம். காரணபூதன்

1 வாமனபுராணம்

ரக்ஷகன் என்கையாலே பிதாவினுடைய ரக்ஷகத்வம் போலே இது விஸ்வஸநீயதமமாம். மோஷீ ரக்ஷகன் என்கையாலே ப்ரியனுன பதி வைத்யனுமா போலே ஹ்ருத்யதமமுமாம்.

இக்காரணத்வாதிகளுக்கு உபயுக்தங்களாய் ப்ரமாணஸித் தங்களான ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வாதிகளும்

1 ' लक्ष्म्या सह हृषीकेशः ' (லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶः)

2 ' अस्या मम च शेषौ हि ' (அஸ்யா மம ச ஶேஷம் ஹி)

லக்ஷ்மீ ஸம்பந்தம்

இதயாதிகளிற்படியே த்வயத்தில் போலே ஸர்வரக்ஷண தீக்ஷிதனுன ஸர்வஶேஷியினுடைய ஸஹதர்ம சாரிணீஸம்பந்தமும் இங்கே அநுஸந்தேயம்.

மத்யமாக்ஷரம் ஶ்ருதிசளில் ப்ரயோகவிஶேஷ ப்ரஸித்தியாலே அவ தாரணீர்த்தமாய்க் கீழ்ச் சொன்ன தாதர்த்த்யத்தை அந்ய யோக வ்யவச்சேதத்தாலேநியமிக்கிறது.

உகாரார்த்தம்

அகார வாச்யனுன ஶ்ரியःபதிக்கே நிருபாதிக ஶேஷம் என்றதா யிற்று. இத்தால் ஜீவர்களைப் பற்ற நிருபாதிக ஶேஷத்வம் கழிகை யாலே தேவதாந்தரபரித்யாகமும் பலிக்கும். இது ததீயபர்யந்தம் என்னுமிடம்

3 ' மற்றுமோர் தெய்வமுளது என்றிருப்பாரோடு உற்றிலேன் '

என்று காட்டப்பட்டது. இப்படிப்பட்ட அநந்யார்ஹ ஶேஷத்வம்

4 ' दासभूतः शरणागतोऽस्मि ' (தாஸபூதः ஶரணாகதோஸ்மி)

5 ' तव स्मि दास इति वक्तारं मां तारय '

(தவாஸ்மி தாஸ இதி வக்தாரம் மாம் தாரய)

என்கிறபடியே பதத்ரயத்திலே தோற்றுகிற ஸ்வரூபப்ரதிபத்தியி

---

1 லக்ஷ்மீ தந்த்ரம் - 28 - 14 லக்ஷ்ம்யா ஸஹ - லக்ஷ்மியுடன்கூடி யிருக்கும், ஹ்ருஷீகேசः - பகவான்

2 விஷ்வக்ஸேந ஸம்ஹிதை (இந்த இரண்டு விபூதிகளும்) அஸ் யாः- இந்த லக்ஷ்மிக்கும், மம ச - எனக்கும், சேஷம் ஹி - சேஷபூதங்க ளல்லவா.

3 பெரிய திருமொழி—8-10-3 4,5 ஸ்ரீ ரங்க கத்யம்

லும் உபாயபரிக்ரஹத்திலும் புருஷாத்த ப்ரார்த்தனையிலும் அநு ஸந்தேயம் என்னும்இடத்தை

1 ' குலதொல்லடியேன் '

2 ' புகல் ஒன்றில்லா அடியேன் '

3 ' ஆரா அன்பில் அடியேன் '

என்று ஆழ்வார் அருளிச் செய்தார்.

த்ருதீயாக்ஷரம் கீழ்ச் சொன்ன மோக்ஷத்வத்தினுடைய ஆச்ரயத்தைக் காட்டுகிறது. இத்தை 'மந ஜ்ஞாநே ', ' மநுஅவ போதநே ' என்கிற தாதுக்களிலே நிஷ்பந்நமான பதம் என்றும் சாந்தஸப்ரக்ரியையாலே அஸ்மத்சப்தத்திலே லுப்த மோஷமாய் நிற்கிறதுஎன்றும் யோஜிப்பார்கள்.

மகாரார்த்தம் இது ஜீவ வாசகம் என்னும் இடம் ஆத்மஸமர்ப்பண விதிவாக்யத்தா லே ஸமர்ப்பணீயனனஆத்மாவுக்கு ப்ரகாசகமாகப்பரிமோஷஸித்த மாகையாலும், அகாரம் முதலாய் மகாரம் அறுதியான வர்ணங் களே பஞ்சவிம்சகதத்த்வங்களுக்கு வாசகங்களாகத் தத்த்வஸாகர ஸம்ஹிதாதிகளிலே சொல்லுகையாலும்,

4 ' मकारं जीवभूतं तु ' (மகாரம் ஜீவபூதம்து)

5 ' आत्मा स तु मकारोऽयं पंचविंशः प्रकीर्तितः '

(ஆத்மா ஸது மகாரோயம் பஞ்சவிம்ஶ: ப்ரகீர்த்திதஃ)

என்று விமோஷிக்கையாலும் ஸித்தம். இப்படிகளால்(லும்) இது ஜ்ஞாந ஸ்வரூபனுய், ஜ்ஞாநகுணகனுய், இரண்டாகாரத்தாலும் அநுகூல ஸ்வபாவனுய், ஸ்வயம்ப்ரகாசனுய், ப்ரத்யகாத்மாய், தேஹாதிவிலக்ஷணனுய், குணத்ரயரஹிதனுய், அணுவாய். நிருபாதிக ஸர்வமோஷியில் காட்டில் அத்யந்த பிந்நனுமான ஜீவனைச் சொல்லுகிறது. இவ்வக்ஷரம் ஜாத்யேகவசநமாய்த்ரிவித ஆத்மாக்களையும் சொல்லுகிறதாகவுமாம்.

6 ' अकारार्थायत्र स्वमहमथमहं न '

1, 2, 3 திருவாய் 6-10-1, 6-10-10, 6-10-2

4 மகாரம் ஜீவனை(ச்சொல்லுகிறது) 5 பாத்மோத்தரம்–4-27 ஸ து - அந்த, ஆத்மா, மகாரஃ, பஞ்ச விம்சஃ ப்ரகீர்த்திதஃ - இருபத்து ஐந்தாவது தத்த்வமாகச் சொல்லப்பட்டது. 6 அஷ்ட ச்லோகீ-3

(அகாரார்த்தாயைவ ஸ்வமஹமித மஹ்யம் ந)
இத்யாதிகளிற்படியே விசேஷித்துத் தன்னையே காட்டுகிறதாகவுமாம். இப்படி

1 'दासभूताः स्वतः सर्वे '(தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே)
2 'आत्मदास्यं हरेः स्वाम्यं '
(ஆத்மதாஸ்யம் ஹரேः ஸ்வாம்யம்)
3 'स्वत्वमात्मनि संजातं ' (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம்)
4 'दासोऽहं वासुदेवस्य ' (தாஸோஹம் வாஸுதேவஸ்ய)
5 'दासत्वात् वासुदेवस्य ' (தாஸத்வாத் வாஸுதேவஸ்ய '

இத்யாதிகளிற்படியே தன்னை ஸ்ரீயஃபதிக்கு அநந்யார்ஹ ஸேஷபூதன் என்றறியவே தன்னுடைய குணவிக்ரஹாதிகளிலும் இச்சேஷத்வம் கைமுதிகந்யாயத்தாலே ஸித்திக்கிறது. இது உபலக்ஷணமாகவுமாம். இங்கே

6 'अकारार्थो विष्णुः '(அகாரார்த்தோ விஷ்ணுஃ)

என்கிறஸ்லோகத்தைப் படிப்பது.

உகாரார்த்த யோஜநாந்தரம்

கடஸ்ருதியில் சொன்ன யோஜநாந்தரத்தில் மத்யமாக்ஷரம் லக்ஷ்மீ வாசகமாய்ப் பூர்வாக்ஷரத்தோடு ஸமஸ்தமாகிறது. அப்போது அவதாரணம் அர்த்தஸித்தம் ஒரு ஸம்பத்துக்கு வ்யுத்பத்தி பேதத்தாலே அர்த்தபேதம் சொல்லுகை ஸ்ருத்யாதிகளிலே ப்ரஸித்தம்,

---

அஹம்-நான், அகாரார்த்தாயைவ-அகார வாச்யனை பகவானுக்கே ஸ்வம்-தாஸபூதன், அத - பிறகு, மஹ்யம் - என் பொருட்டு, ந-அல்லன்.

1 மந்த்ர ராஜ பத ஸ்தோத்ரம் - 10 ஸர்வே-எல்லா ஆத்மாக்களும் ஸ்வதஃ - ஸ்வபாவத்திலேயே, தாஸபூதாஃ-பகவானுக்குத்தாஸபூதர்கள்

2 விஷ்ணு தர்மம் ஆத்மதாஸ்யம்-ஜீவாத்மா தாஸனாயிருப்பதையும், ஹரேஃ - பகவானுடைய ஸ்வாம்யம்-யஜமானனாயிருப்பதையும்

4 இதிஹாஸ ஸமுச்சயம்-33-125 அஹம் - நான், வாஸுதேவஸ்ய -பகவானுக்கு, தாஸஃ 5 வாஸுதேவஸ்ய - பகவானுக்கு, தாஸத்வாத் - தாஸபூதனாயிருக்கையாலே

6 அஷ்ட ஸ்லோகீ - 1 அகாரத்தின் அர்த்தம் விஷ்ணு.

1 'अग्रतः प्रययौ रामः' (அக்ரதः ப்ரயயௌ ராமः) என்கிற ஸ்லோகத்திலே பூர்வர்கள் வார்த்தையை இங்கே அநுஸந்திப்பது.

2 'मम नाथ' (மம நாத) என்கிற ஸ்லோகத்திலும் இதில் அக்ஷராரார்த்தவாக்யார்த்தங்கள் நிற்கிற நிலையைக் கண்டுகொள்வது

3 காரணமும் காவலனுமாகி என்றும்
கமலையுடன் பிரியாத நாதனை *
நாரணனுக்கு அடியேன் நான் அடிமைபூண்ட
நல்லடியார்க்கல்லால் மற்றொருவர்க்கல்லேன் *
ஆரணங்கள் கொண்டகமும் புறமும் கண்டால்
அறிவாகி அறிவதுமாய் அறுநான்கன்றிச் *
சீரணிந்த சுடர் போலத் திகழ்ந்து நின்றேன்
சிலை விசயன் தேரனையச் சிறு வேதத்தே. 2

---

1 ராமா - ஆர - 11 – 11 ராமः - ராமன், அக்ரதः - முதலில், ப்ரயயௌ - சென்றார்: 2 ஆள. ஸ்தோ - 53 என்னுடைய நாதனே

3சிலை - வில்லாளியான, விசயன் - அர்ஜுநனுடைய, தேரனைய - தேருக்கு ஸத்ருசமான, சிறு - சிறிய, வேதத்து - வேதமாகிய ப்ரணவத்தில், காரணமும் - உபாதான காரணமும், நிமித்த காரணமும், காவலனும் - ரக்ஷகனும், ஆகி - இருந்து, என்றும் - எப்பொழுதும், கமலையுடன் - லக்ஷ்மியுடன், பிரியாத - பிரிபாமல், நாதனை - ஸர்வஸ்வாமியான நாரணனுக்கு - நாராயணனுக்கு, நான், அடியேன் - தாஸபூதன், அடிமைபூண்ட - அவனது தாஸ்யத்தைப் போக்யமாக அங்கீகரித்த, நல்லடியார்க்கல்லால் - நல்ல பாகவதர்களுக்கல்லாமல் மற்றொருவர்க்கு - வேறு ஒருவருக்கும் அல்லேன் - தாஸபூதன் அல்லேன் ஆரணங்கள் - வேதங்களை கொண்டு - ப்ரமாணமாகக் கொண்டு அசமும் - உள்ளும், புறமும் வெளியும், கண்டு - பராமர்சித்து அறிந்து அறிவாகி - ஜ்ஞாந ஸ்வரூபனுய், அறிவதுமாய் - ஜ்ஞாதாவுமாய், அறுநான்கன்றி - இருபத்திநாலுப்ராக்ருத தத்வங்களிலும் வேறுபட்டு, சீர் அணிந்த - பெருமை பெற்ற சுடர்போலத் தேஜஸ்ஸுபோல, திகழ்ந்து நினறேன் - ப்ரகாசியாநின்றேன். - ஆல் அசை. அகாரத்தில் காரணத்வம். ரக்ஷகத்வம் சேஷித்வம் ச்ரியःபதித்வம் என நான்கு அர்த்தங்களும், சதுர்த்தியின் அர்த்தமான தாஸ்யவும், பாகவதசேஷத்வமும் மத்யமபதத்தின் அர்த்தமான ததீயபர்யந்த தேவதாந்தர வர்ஜநமும், மகாரத்தின் அர்த்தமான ஜ்ஞான ஸ்வரூபத்வமும், ஜ்ஞாத்ருத்வமும், ஆக ஒன்பது அர்த்தங்கள் இப்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றன.

வாக்யங்களுக்கு அவதாரணத்திலே தாத்பர்யம் கொள்ள உசிதமாகையாலே ப்ரணவத்தில் அவதாரணத்தோடே துவக்கி

நமः சப்தார்த்தம்

மதயமபதம உதிகிறது.

1 'नम इत्येव वादिनः '(நம இத்யேவ வாதிநः)

2 ' नम इत्येव यो ब्रूयात् '(நம இதயேவ யோ ப்ரூயாத்)

என்று விஸேஷித்து ஆதரணீயமான இப்பதத்திற்கு ஸ்த்தூலம் ஸூக்ஷ்மம், பரம் என்று அர்த்தபே

ஸ்தூலாதி யோஜனைகள்

தங்கள் பகவச் சாஸ்த்ர(நிருக்த)ங் களிலே சொல்லப்பட்டன. இவற்

றில் ஸூக்ஷ்ம யோஜனை விரோதி ஜ்ஞாநத்துக்கும், அநிஷ்ட நிவருத்தி ப்ரார்த்தனைக்கும், பர

ஸூக்ஷ்மயோஜநா ப்ராதாந்யம்

தந்த்ரஸ்வரூப நிஷ்கர்ஷத்துக்கும், பாகவத ஸேஷத்வ ப்ரதிபத்திகும், உபாய விஸேஷ ஸித்திகும் உபயுக்தமாகையாலே இத்தை விஸேஷித்து ஆசார்யர்கள் அநுஸந்திப்பார்கள்.

இந் நமஸ்ஸு ந என்றும், மः என்றும் இரண்டு பதமாய், ஒரு வாக்யமாகிறது. கீழ்மேலுள்ள

நமः சப்தவாக்யார்த்தம்

விரோதிகள் பரிஹரணீயங்கள் என்று தோற்றுகைக்காக நிஷேத் யத்துக்குமுன்னே ஷேதவாசியான மப்தம்கிடக்கிறது. மः என்கிற இது கீழ்ச் சொன்ன ப்ரகாரங்களாலே ஜீவவாசியான அக்ஷரத் திலே ஷஷ்ட்டியேகவசநமாய் எனக்கு என்கிறது. இவ்வபிமாநம் இத்தை முதலாகக் கொண்டு வரும் விரோதி வர்க்கங்கள் எல்லாத்துக்கும் உபலக்ஷணம். விரோதி நிவ்ருத்திப்ரார்த்தனைக் காக இவ்விரோதி ஜ்ஞாநமும் அத்யந்தோபயுக்தம். இங்கே த்ருதீயாக்ஷரத்தை அநுஷங்கித்து அந்வயிப்பது, ' அஹம் மே ' என்று அநாதியாக ப்ரமித்தவன் இப்பொழுது

3 ' आत्मापिचायं न मम ,(ஆத்மாபி சாயம் ந மம)

என்கிறான் இத்தை

4 अथ मह्यं '(அத மஹ்யம் ந)

என்றார்கள். ஸம்பந்தஸாமாந்யஷஷ்ட்டி இங்குத்தாதர்த்த்யத்தை

---

1 நமः என்றே சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள் 2 பார-சாந்தி-334-45 நமः என்றே எவன் சொல்லுகிறானே.

3 பாரதம் ஆத்மாவும் என்னுடையதன்று 4 அஷ்ட ச்லோகீ—1

விவக்ஷிக்கிறது என்று தாத்பர்யம். தன்னைப் பற்றத் தனக்கு நிஷேத்யமான தாதர்த்தியம் ஆகாரபேதத்தாலே வருகையால் ஆத்மாச்ரய தோஷமில்லை. தான் தனக்குப்பண்ணிக் கொள்ளும் அதிசயமும் பரார்த்தம் என்று அநுஸந்திக்கைக்காக இங்குத் தான் தனக்கு போஷமல்லன் என்கிறது. தான் தனக்கு உரியன் அல்லனனுல் தனக்கு வேரொன்றையும்பற்ற நிருபாதிக போஷித்வ மில்லையாம். இதுதன்னையே இங்குச் சொல்லுகிறதாகவுமாம். அப்போது 'கிஞ்சித்' என்று ஒரு பதத்தை அத்யாஹரித்து, 'ந மம கிஞ்சித்' என்று ஒரு வாக்யமுமாம். இதுதன்னுலே தன்னை யும் தன்னுடைமையையும் சேரத் தன்னோடு துவக்கறுக்கிறனு கவுமாம். இத்தால்

1 'யானே என்தனதே என்றிருந்தேன்'

என்கிற ஸம்ஸார மூலங்கள் சேதிக்கப்படுகின்றன. கீழ் ஸாமாந் யேந அந்யபோஷித்வம் கழிந்திருக்கக் கோபலீவர்த்தந்யாயத் தாலே இங்கு விபோஷிக்கிறது. ஸ்த்திரீகரணார்த்தமாகவுமாம். இவ்வர்த்தங்களைக் கீழே ஸித்தமாக்கி

2 'என் நான் செய்கேன்'

இத்யாதிகளிற்படியே ஸ்வஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தியைஇங்கே அநு ஸந்திக்கவுமாம். லோக த்ருஷ்ட தாஸாதிகளிற்படியன்றிக்கே ஜீவர்களுடைய கர்த்ருத்வம் ஸ்வார்த்தமாக ஸ்வதந்த்ர ஸ்வாமி கொடுத்ததாய் அவன் இட்ட வழக்காயிருக்கையாலே கீழ்ச் சொன்ன பரபோஷத்வத்தோடே கூடப் பராயத்தகர்த்ருத்வம் இங்கே அநுஸந்தேயமாயிற்று. காரணத்வம் தத்த்வத்ரய ஸாதா ரணம். கர்த்ருத்வம் ஜீவேச்வரஸாதாரணம். இதில் பராதீநகர்த் ருத்வம் த்ரிவித சேதந ஸாதாரணம். ஸ்வாதீந கர்த்ருத்வம் ஈச்வரனுக்கே அஸாதாரணம். இப்படி இருக்க அநாதிகர்ம வஸத்தாலும் ப்ரவ்ருத்தி சாஸ்த்ரங்களில் ஆபாதப்ரதீதியாலும் பிறந்த நிரபேக்ஷ கர்த்ருத்வாபிமாநத்தை விடுகையே இங்கு நிவ் ருத்தி சாஸ்த்ர நிஷ்டை.

இப்படித் ததேக போஷ்யதமாகவும் ததேக நியாம்யமாகவும் பத த்வயத்தாலே ஸ்வரூபம் சிக்ஷிதமானுல்

1 திருவாய் - 2 - 9 - 9 2 திருவாய் - 5 - 8 - 3

1 ' यथेष्टविनियोगार्हं शेषशब्देन कथ्यते।
ईश्वरेण जगत् सर्वं यथेष्टं विनियुज्यते ॥ '

(யதேஷ்ட விநியோகார்ஹம் ஶேஷ ஶப்தேந கத்யதே।
ஈஶ்வரேண ஜகத் ஸர்வம் யதேஷ்டம் விநியுஜ்யதே ॥)

என்று அபியுக்தர் சொன்னபடியே ஸ்வதந்த்ர ஸ்வாமி விநியோகத்தாலே பாகவத ஶேஷத்வம் பாகவத சேஷத்வ ப்ரதிபாதநம் ப்ராப்தமாகிறது. ஈஶ்வரன் ஸ்வாதந்த்ர்யத்தாலே இஷ்ட விநியோகத்துக்கு ஶக்தன், ஸ்வாமித்வத்தாலே ப்ராப்தன்.

2 ' ज्ञानी त्वात्मैव मे मतम् ' (ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்) என்னும்இவனுக்கு ஸ்வாதிஶயத்தைக்காட்டிலும் ஸ்வாஶ்ரிதாதிஶயம் அபிமதமாகையாலே தச்சேஷத்வம் ததீயஶேஷத்வபர்யந்தமாயிற்று. மேல் சதுர்த்தியில் ப்ரார்த்தநீயமான கைங்கர்யமும் ததீயபர்யந்தம். ஒருவன்தானே வேறு ஒருவர்க்கு அதிஶயத்தை விஶேஷிக்கிற வேஷத்தாலே ஶேஷமாய், அவர்களாலே வரும் அதிஶயத்துக்கு ஆஶ்ரயமான வேஷத்தாலே ஶேஷியுமாகை விருத்தமல்லாமையாலே

3 ' प्रभवो भगवद्भक्ताः मादृशां सततं द्विज '

(ப்ரபவோ பகவத் பக்தா மாத்ருஶாம் ஸததம் த்விஜ)

4 ' உன் அடியார்க்கு ஆட்படுத்தாய் ' ,

5 ' அடியார்க்கு என்னை ஆட்படுத்தவிமலன் '

என்கிற அநுஸந்தாநம் ஸர்வபாகவதருக்கும் ஸமாநம். இப் ப்ரதிபத்தி ஒத்திருந்தாலும் ப்ரவ்ருத்தி ஶிஷ்ய ஆசார்யாதிகளுக்குப் போலே ஸ்வதந்த்ர ஆஜ்ஞையாலே வ்யவஸ்த்திதையாயிருக்கும்.

---

1 சேஷ சப்தேந - சேஷ என்னும் பதத்தினால், யதேஷ்ட - இஷ்ட ப்ரகாரம், விநியோகார்ஹம் - உபயோகப்படுத்தப்படக் கூடிய வஸ்து, கத்யதே - சொல்லப்படுகிறது. ஈச்வரேண - பகவானால், ஜகத் ஸர்வம் - எல்லா வஸ்துக்களும், யதேஷ்டம் - தன் இஷ்ட ப்ரகாரம், விநியுஜ்யதே - உபயோகப்படுத்தப்படுகிறது.

2 கீதை—7 - 18 ஜ்ஞாநீ து - ஜ்ஞாநியோ எனில், ஆத்மைவ - எனக்காத்மா என்றே, மே - என்னுடைய, மதம் - அபிப்ராயம்.

3 த்விஜ - ஓ ! ப்ராஹ்மணனே, மாத்ருசாம் - என்னைப் போன்ற (பகவத் பக்தியுடைய) வர்களுக்கு, ஸததம் - எப்பொழுதும், பகவத்பக்தா - பாகவதர்கள், ப்ரபவ: - பஹுமானிக்கத்தக்கவர்கள்

4 திருப்பள்ளியெழுச்சி - 10 5 அமலனாதி பிரான் - 1

இங்கே ' அடியார் ' என்கிறது பகவச்சேஷத்வ ஜ்ஞான வான்களான ப்ரதிபுத்தரையும், நித்யரையும் முக்தரையும்.

திருமந்திரத்தின் உயிர் நிலை

1 ' நின் திரு எட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன் அடியார்க்கடிமை '

என்கையாலே இதுவே திருமந்த்ரத்திற்கு உயிர் நிலை.

இப்படி ஸ்வதந்த்ர ஸ்வாமி இட்ட வழக்கான தனக்கு அவன் நடத்தின நல்வழியாலே அவனை ப்ரஸந்நனாக்கிப் புருஷார்த்தம் பெற வேண்டுகையாலே யதாதிகாரம் த்வயத்திலும் சரம ஸ்லோகத்திலும் சொன்ன வஸீகரணம் இங்கே அர்த்த ஸித்தம்.

உபாய ப்ரதிபாதநம்

2 ' शरणं प्रति देवानां प्राप्तकालममन्यत '

(ஸரணம் ப்ரதி தேவாநாம் ப்ராப்த காலம் அமந்யத)

என்கிற இடத்திலே தமயந்தீ நமஸ்ஸை ப்ரயோகித்தாள் என்கையாலும்,

3 ' गच्छध्वमेनं शरणं शरण्यं पुरुषर्षभाः '

(கச்சத்வம் ஏநம் ஸரணம் ஸரண்யம் புருஷர்ஷபா:)

என்று உபதேஸிக்க,

4 ' नमश्चक्रुः जनार्दनं '(நமஸ் சக்ருர் ஜநார்த்தநம்)

என்று பாண்டவர்கள் நமஸ்ஸைப் பண்ணினார்கள் என்கையாலும் மந்த்ரராஜ பத ஸ்தோத்ரத்திலே நமஸ்ஸு ஆத்ம நிவேதநபரம் என்கையாலும், ஸாத்யோபாய விரோதி பரமான யோஜநாவிரோதத்தாலும், அபியுக்தரும்

---

1 பெரிய திருமொழி—8 - 10 - 3 மூலப்பாட்டு ' மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடு, உற்றிலேன் * உற்றதும் உன் அடியார்க்கடிமை * மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே ' என்பது. ஆகையினால் பாட்டுக்கு அந்வயம் காட்டி இங்கு உதாஹரிக்கப்பட்டிருக்கிறது என்று அறியவும்.

2 பார - வன - 54- 16 தேவாநாம் சரணம் ப்ரதி - தேவதைகளிடம் தான் சரணாகதி செய்வதற்கு, ப்ராப்தகாலம் - தகுந்த காலமாக, அமந்யத - (தமயந்தீ) நினைத்தாள். 3 இந்த சரண்யனே சரணமடையுங்கள் 2 பார - வன - 192 - 55, 56 (த்ரௌபதியுடன் கூட பஞ்ச பாண்டவர்கள்) ஜநார்த்தநம் - ஸ்ரீக்ருஷ்ணனே, நமஸ்சக்ருஸ் - நமஸ்கரித்தார்கள்

1 'नमः शब्दः प्रह्वनार्थः स्वा ा शब्द इव इष्यते'

(நமஸ் ஸப்தः ப்ரதாநார்த்தः ஸ்வாஹா ஸப்த இவ இஷ்யதே) என்கையாலும், இந்த நமஸ் ஸப்தம்தானே தன்துவக்சற ஸாங்க பரந்யாஸத்தைக் காட்டுகிறதாகவுமாம்.

2 'दास इति प्रपन्न इति च' (தாஸ இதி ப்ரபந்ந இதி ச) என்கிற அடைவே ப்ரணவத்திலே ஸம்பந்தஜ்ஞாநமும், நமஸ்ஸிலே உபாயமுமாகச் சொன்ன வார்கள் தாமே ஸம்பந்த ஜ்ஞாநமே உபாயம் என்கிற இது இதன் ப்ராதாந்ய விவக்ஷயாலே யாமத்தனே. இதுக்கு ப்ராதாந்யம்:—ஆத்மாபிமாநாநுகுண புருஷார்த்த வ்யவஸ்த்தையாலே ஈஸ்வர்யாதிகளை அருவருப்பித்து ஸ்வரூபாநுரூபமான பரம புருஷார்த்தத்திலே ருசியையும் த்வரையையும் விளைப்பித்துத் திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்யும்படி பண்ணுகை.

நமஸ்ஸு உபாயபரம் என்பதின் தாத்பர்யம்

3 யான்எனது என்பது ஒன்றில்லை என்செய்வதவனையல்லால் *
ஆனது அறிந்திடும் தன் அடியார்க்கு என்னை ஆட்படுத்தித் *
தான் என்னை நல்கி நடத்துகின்றான் தன்னருள்வழியே *
நான் உன்னை வீடு செய்வேன் என்ற நம் திருநாரணனே. 4

---

1 ஸ்வாஹா சப்த இவ - ஸ்வாஹா என்னும் பதத்தைப்போல, நமः சப்தः - நமः என்னும் பதம், ப்ரதாநார்த்தः - ஸமர்ப்பித்தல் என்கிற அர்த்தத்தைச்சொல்லும் என்பது, இஷ்யதே-ஒப்புக்கொள்ளப்படுகிறது

2 ஸ்ரீ சதுः ச்லோகீ - 2 தாஸः இதி - தாஸன் என்றும், ப்ரபந்ந இதி ச - சரணாகதி செய்தவன் என்றும் (உம்மை ஸ்துதிசெய்கிறேன்.

3 யான் எனது - நான் என்னுடையது, என்பது - என்று சொல்லுவது, ஒன்றில்லை - ஒருவஸ்துவில்லை. அவனையல்லால் - ஸ்வதந்த்ரனான அந்தப்பகவானைத்தவிர, என் செய்வது - (நான்) என்ன பண்ணுவது? நான் - ஸ்வதந்த்ரனான நான் உன்னை - அகிஞ்சநனான உன்னை. வீடு செய்வேன்-ஸம்ஸாரத்தினின்றுவிடுவிப்பேன். என்ற- என்று சொன்ன, நம் திருநாரணனே - நமக்கு ஸ்வாமியான ச்ரியःபதியான பகவானே ஆனது அறிந்திடும் - யோக்யமான சேஷத்வாதிகளை நன்றாக அறிந்திருக்கிற, தன் அடியார்க்கு - தன்னுடைய பக்தர்களுக்கு. என்னை - தாஸபூதனான என்னை, ஆட்படுத்தி - தாஸனாக்கி, தான் - ஸ்வதந்த்ரனான தான், என்னை - அவனுடைய நியமனத்தைப்பின்பற்றும் என்னை, நல்கி - அபிமானித்து, தன் அருள் வழியே - தன் க்ருபையால்

நாராயணசப்தார்த்தம்

இப்படி நமஸ்ஸில் தோற்றின வஸீகரணத்துக்கு இலக்காய் ரக்ஷகனுய் நிற்கிற மோக்ஷியின் படியை நேத்ருத்வாதி முகத்தாலும், வஸீகர்த்தாவாய் ரக்ஷணீயனுய் நிற்கிற மோக்ஷபூதன் படியை நியாம்யத்வாதி முகத்தாலும் வெளியிடுகிறது நாராயண மப்தம். நரன் பக்கலிலே பிறந்தவை நாரங்கள் எனறும், இவன் நேதாவாய்க் கதியுமாய் இருக்கிறுன் என்றும், இவற்றை வாஸஸ்த்தாநமாக உடையவன் என்றும் சொல்லுகையாலே ப்ரதமாக்ஷரத்தில் தோற்றின காரணத்வ ரக்ஷகத்வ மோக்ஷித்வங்களும் இங்கே விஸ்தமாகின்றன. இஸ்ஸங்க்ரஹ விவரணங்களிலே மோக்ஷ மோக்ஷிகளுடைய நிரூபணம் 1 'रामानुजं लक्ष्मणपूर्वजं च '(ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜம் ச) என்கிற கரமத்திலே நிற்கிறது. இந்நாராயண மப்தம் தத் புருஷனையும் பஹுவ்ரீஹியாயும் இரண்டுபடி ஸமஸ்தமாயிருக்கும். இதன் அர்த்தத்தை(ஆழ்வார்)

2 'நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்' என்றும்,

3 'எண்பெருக்கந்நலத்து ஒண் பொருள், ஈறில வண் புகழ் நாரணன்'

என்றும் அருளிச் செய்தார்.

4 'நான் உன்னையன்றியிலேன்'

இத்யாதிகளையும் இங்கே அநுஸந்திப்பது.

5' आपो वै नरसूनवः ' (ஆபோவை நரஸூநவ:)

6 ' नराज्जातानि तत्त्वानि ' (நராஜ்ஜாதாநி தத்த்வாநி)

வந்த வழியிலே, தன் க்ருபையினுல் நம்முடைய ரக்ஷணபரத்தை அங்கீகரிக்குமதான ப்ரபந்தி மார்க்கத்தில், நடத்துகின்றுன் - நடத்திவைக்கிறுன். இப்பாட்டில்நம: சப்தார்த்தமாகஸ்வஸ்வாமித்வ நிவ்ருத்தி, ஸ்வகீயஸ்வாமித்வ நிவ்ருத்தி, ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி, பாகவதசேஷத்வம், சரணாகதி. ஆகிய ஐந்து பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன.

1 ராமா - ஸுந்தர - 28 10 ராமாநுஜம் - ராமனுக்குப் பின்பு பிறந்த லக்ஷ்மணனையும், லக்ஷ்மண பூர்வஜம் ச - லக்ஷ்மணனுக்கு முன்பு பிறந்த ஸ்ரீராமனையும். 2 திருவாய்-2-7-2 3 திருவாய்-1-2-1 4 நான்முகன் திருவந்தாதி—7 5 மனு ஸ்ம்ருதி - 1 - 19 ஆபோ வை – ஜலங்கள், நரஸூநவ: - நரனிடமிருந்து உண்டானவை.

6 பார - ஆநு - 186 - 7. தத்த்வாநி - தத்த்வங்கள், நராத் ஜாதாநி - நரன் என்னப்படும் பகவானிடமிருந்து ஜாதாநி-உண்டானவை

1 ' नरसंबन्धिनो नाराः नरः स पुरुषोत्तमः '

(நரஸம்பந்திநோ நாராஃ நரஸ்ஸ புருஷோத்தமஃ)[1]

2 ' जघ्नुः नारायणो नरः '(ஜஹ்நுர் நாராயணோ நரஃ)

இத்யாதிகளிற்படியே நர ஸப்தத்தாலும் நாராயணன்தன்னையே சொல்லுகிறது இது

3 नयत्यखिल विज्ञानं नाशयत्यखिलं तमः '

(நயத்யகிலவிஜ்ஞாநம் நாஸயத்யகிலம் தமஃ)

4 न रिष्यति च क्वचित्र ' (நரிஷ்யதிச ஸர்வத்ர)

என்று வ்யாக்யாதமாயிற்று, ' ந்ருங்யே' என்கிற தாதுவிலே அச் ப்ரத்யயமாய், ' நரஃ ' என்று பதமாம். ' ரீங் க்ஷயே ' என்கிற தாதுவிலே க்விப்ரத்யயமாய், ' ர; ' என்று பதமாம். நக நைகாதி ஸப்தங்களிற்போலே நஞ்ஸோடே ஸமஸ்தமாய் ' நரஃ ' என்கிற தாகவுமாம். ' நேதா ' என்றுல்

5 ' तेषां सततयुक्तानां ' தேஷாம் ஸததயுக்தாநாம்)

இத்யாதிகளிற்படியே ஜ்ஞாநப்ரதாநாதிகளைப்பண்ணும் என்கிறது, க்ஷயிஷ்ணு அல்லன் என்றுல் ஸ்வரூபவிகாரத்தையாதல் ஸ்வபாவவிகாரத்தையாதலுடைத்தான வஸ்த்வந்தரங்களிலே வேறுபட்டவன் என்றதாம். ஸங்கல்ப ப்ரீத்யாதி ஸ்வபாவ விகாரங்கள் ஸ்ருதி ஸித்தங்களாய் குணரூபங்களுமாகையாலே விகாராதிநிஷேதம் அந்ய விஷயம். ப்ரபஞ்சரூபபரிணாமம் பாலனனவன் யுவாவான கணக்கிலே ஸ்வரூபத்தில் தட்டாது. நர ஸூநுக்களான அப்புக்கள் நாரங்கள், நரன் பக்கலிலே பிறந்த தத்த்வங்கள் நாரங்கள் என்றுற்போலேசொன்னதுவஸ்த்வந்தரங்களையும் உபலக்ஷிக்கிறது. ' நரஸம்பந்தி நாரம் ' என்கிற வ்யுத்

---

1 அஹிர் - ஸம்—52 - 50 நர ஸம்பந்திநஃ - நரனிடத்திலிருந்து உண்டானவைகள், நாராஃ - நாரங்கள், நரஃ - நரன், ஸஃ - அந்த, புருஷோத்தமஃ - புருஷோத்தமன். 2 அஹிர்-ஸம்—52-50 அகில விஜ்ஞாநம் - எல்லா விஷயத்தைப் பற்றிய ஜ்ஞாநத்தை, நயதி - (ஆச்ரிதர்களை) அடைவிக்கிறான். அகிலம் - எல்லா, தமஃ - அஜ்ஞாநத்தையும், நாசயதி - போக்கடிக்கிறான். 3 பார-ஆனு-2-29 ஜஹ்நுஃ நாராயணஃ, நரஃ இவைகள் பகவானுடைய திருநாமங்கள்.

4 ஸர்வத்ர - ஓர் இடத்திலும், நரிஷ்யதி - விநாசம் அடைவதில்லை

5 கீதை—10-10 ஸததயுக்தாநாம் - எப்பொழுதும் என்னுடன் சேர்ந்திருக்கவேண்டும் என்கிற ஆசையுடையவர்களாய்(பக்திசெய்துகொண்டிருப்பவர்களான), தேஷாம் - அவர்களுக்கு(என்னை அடையும் படியான புத்தியைக் கொடுக்கிறேன்.)

பத்தியில் ஸ்வரூப நிரூபக தர்மங்கள் முதலாக ஸர்வமும் ஶாப் தம்.

1 ' नरो नराणां संघातः '(நரோ நராணாம் ஸங்காதः)

2 ' नरस्त्विति सर्वेऽसां समूहः '

(நரஸ்த்விதி ஸர்வ பும்ஸாம் ஸமூஹः)

இத்யாதிகளும் உபலக்ஷணபரங்கள். இவ்விடத்தில் நரஶப் தம் ஜீவவாசியாய் இவன் க்ஷயிஷ்ணு அல்லன் என்கிறது. இத் தால் முன்பு தேஹாதிவிலக்ஷணனுக ஶோதிதனான இவனுக்கு ஶரீர உத்பத்த்யாதிகளும் ஜ்ஞாந ஸங்கோசாதிகளுமே யுள்ளன, ஸ்வரூபத்தில் நாமாந்தரபஜநார்ஹ அவஸ்த்தைகள் இல்லே என்ற தாயிற்று. 'நராணும்ஸங்காதः' என்கிறஇடத்தில்நரஶப்தத்தாலே சேதநாசேதநங்கள் இரண்டையும் சொல்லவுமாம். அப்போது விகாரியான அசேதநத்திலே ஸ்வரூபநித்யதையும், விகாராம்சத் தில் ப்ரவாஹ நித்யதையும் சொல்லிற்றும். இவ்விடத்தில் ஸமூ ஹார்த்தத்திலே அண் ப்ரத்யயமாய், அந்த ஸமூஹங்கள் தாம் பலவாகையாலே

3 ' निवहो नराणां नित्यानामयनमिति नारायणपदं '

(நிவஹோ நராணும் நித்யாநாம் அயநமிதி நாராயண பதம்) என்ருர்கள். நாரங்களுக்கு அயநம் என்னும் போது அயந ஶப் தத்துக்கு

1 ' गतिरालम्बनं तस्य '(கதிராலம்பநம் தஸ்ய)

என்று வ்யாக்க்யாநம் பண்ணுகையாலே இதில் கரணவ்யுத்பத்தி யாலே உபாயத்வமும், கர்மணி வ்யுத்பத்தியாலே உபேயத்வமும், அதிகரண வ்யுத்பத்தியாலே ஆதாரத்வமும் ஸித்திக்கிறது. இவ் வுபாயத்வ உபேயத்வங்கள்சேதநனேக்குறித்தனவாய், தாரகத்வம் ப்ரமாணநுஸாரத்தாலே சேதநாசேதநங்கள் இரண்டையும் பற்ற வாகிறது. நாரங்களே அயநமாக உடையவன் என்றபோது அயந

---

1 பார - ஆனு - 63 - 62 நராः - நாரம் என்பது. நராணும் ஸங் காதः - ஜீவாத்மாக்களுடையகும்பல். 2 பாத்மோத்தரம். நரः து இதி - நாரம் என்று, ஸர்வபும்ஸாம் - எல்லா ஜீவாத்மாக்களுடைய ஸமூஹः - கும்பல்,(என்றுசொல்லப்பட்டது.) 1 தஸ்ய - அந்த நரங்களுக்கு, அஹம்-நான், அயநம் - உபாயமாயும், கதிः - அடைய வேண்டிய ப்ரயோஜனமாயும், அஸ்மி - ஆகிறேன்.)

3 அஷ்ட ச்லோகீ—1

ஸப்தம் வாஸஸ்த்தாநத்தையாதல் வ்யாப்யத்தையாதல் சொல்லுகையாலே நிரதிஸய ஸூக்ஷ்மதையாலே ஸர்வத்திலும்

ஸர்வ வ்யாபகத்வம்

உள்ளும் புறம்பும் ஒழிவற நிறைந்து நிற்கிற நிலை தோற்றும். இவ்விடத்தில் அவன் இல்லாத ப்ரதேசம் இல்லை என்கையிலே தாத்பர்யம். இது நியமநத்தோடேகூடின வ்யாப்தியாகையாலே ஆகாசத்திலும் ராஜாவிலும் காட்டில் வ்யாவ்ருத்தி தோற்றுகையாலே ஸர்வஸரீரகத்வமும் பலிக்கும். இங்கே அவன் ஒருவனுக்கே ஸர்வாதாரத்வாதிகள் தோற்றுகையாலும் விகாரியான அசித்துக்கும் நிர்விகாரமான ஜீவனுக்கும் பிரிவு தோற்றுகையாலும் தத்த்வத்ரய விவேகம் பிறக்கிறது.

1 ‘ கறந்தபாலுள் நெய்யேபோல் ’

என்கிறவிவேகக்ரமத்தைச் சொல்லுகிற ப்ரஹ்மபிந்து வாக்யத்தையும் இங்கே அநுஸந்திப்பது. ஸ்வேதாஸ்வதராதிகளில் சொன்னபடியே ஜீவேஸ்வரர்களுடைய சேதநத்வமும், ஸ்வாபாவிகமான பேதமும். ஜீவர்களுடைய அந்யோந்ய பேதமும், ஸர்வருக்கும் ஈஸ்வரன் ஒருவனுமே ஸகல அபிமத ஹேதுவானபடியும் உபாயபூதன்தானே ப்ராப்யனானபடியும், இதுக்குச் சேர்ந்த உபயலிங்கத்வமும், உபய விபூதியோகமும், ஸர்வ வித பந்துத்வமும், இத்திருநாமத்திலே ஸம்க்ஷிப்தங்கள். ‘ நர ’ ஸப்தத்திலே ஸோதக வாக்யார்த்தமும், ‘ நார ’ ஸப்தத்திலே காரண வாக்யார்த்தமும், ‘ அயந ’ ஸப்தத்திலே உபாஸந வாக்யார்த்தமும் ஸங்க்ருஹீதம். ஈஸ்வரனுக்கு ப்ரதமாக்ஷரத்திலே ரக்ஷகத்வாதிகளும், ‘ நர ’ ஸப்தத்திலே நித்யத்வாதிகளும், ‘ அயந ’ ஸப்தத்தில் ஆதாரத்வாதிகளும் தோற்றுகையாலே இவை மூன்றுக்கும் ப்ரயோஜந பேதமுண்டு, இப்படி த்ருதீயாக்ஷராதிகளிலே ஜீவனுக்குச் சேதநத்வ நித்யத்வ வ்யாப்யதவாதிகள் தோற்றுகையாலே இவையும் ஸப்ரயோஜநங்கள்.

2 யாதாமிவையனைத்தும் படைத்தேந்தும் இறைவனுமாய்க் *
கோதாம் குணங்களுடன் குறுகாத குணத்தனுமாய *
மாதா பிதாவென மன்னுறவாய்க் கதியென்ன நின்றான் *
போதார் திருவுடன் பொன்னருள் பூத்த நம் புண்ணியனே, 4

---

1 திருவாய்—8 - 5 - 10

2. போது - தாமரைப்புஷ்பத்தில், ஆர் - நிறைந்த, திருவுடன் - லக்ஷ்மியுடன், பொன் - அழகிய, அருள் பூத்த - க்ருபையால் விளங்கு

இந்நாராயண ஶப்தத்தில் சதுர்த்தியும் ஸ்வரூப பர யோஜனையில் தாதர்த்த்யத்தையே காட்டுகிறது. ஸமர்ப்பண பரமானால் 1'ஸம்ப்ரதாநப்ரதர்ஶநீ' சதுர்த்தீ விபக்த்யர்த்தம் என்று அஹிர்புத்ந்யன் வ்யாக்யா நம் பண்ணினான். பலபரமானால் நித்யமான தாதர்த்த்யம் ப்ரார்த்தநீயமல்லாமையாலும் இதுதன்னை ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தி சொல்லுகையாலும் தாதர்த்த்யத்தை முன்னிட்டுத் ததநுகுணமாக ப்ரார்த்தநீயமான யதாபிமத கைங்கர்யத்தை இங்கே காட்டுகிறது. இங்கே பரதாந ப்ராப்யன் பரமாத்மா. நித்யஸம்ப(த்)ந்தனுக்குஇப்போது ப்ராப்திபாவது பரிபூர்ணாநுபவம். இதின் பரீவாஹமாய்க கொண்டு கைங்கர்யம் ப்ராப்யமாயிற்று. ப்ராப்தாவும்

2 'अविभागेन दृष्टत्वात्' (அவிபாகேந த்ருஷ்டத்வாத்)

என்கிற ஸூத்திரத்தின்படியே பரமப்ராப்ய விசேஷணமாய்க் கொண்டு ப்ராப்யமாகிறான். இங்கு கேவல ஆத்ம ப்ராப்தியிற் சொன்ன ச்யவந தர்மத்வம் வராது.

3 'மன்னுறில்'

இத்யாதிகளும் இங்கே அநுஸந்திப்பது. முக்தனுக்குச் சொன்ன பரம ஸாம்ய போகமாத்ரத்திலே என்று ஸூத்ராதி ஸித்தம். ப்ராமாணிகனுக்கு இதுவே ஸாயுஜ்ய ஶப்தார்த்தம்.

4 'தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க் கொள்ளும் அப்பன்'

கிற, நம் - நமக்கு ஸ்வாமியான, புண்ணியன் - பரிசுத்தனான நாராயணன், யாதாம்-ஏதாகிலும், இவை அனைத்தும் - இவை எல்லாவற்றையும், படைத்து- ஸ்ருஷ்டித்து, ஏந்தும் - தரிக்கின்ற, இறைவனுமாய் - ரக்ஷிக்கிறவனுமாய், கோதாம் - கெட்டவைகளான, குணங்களுடன் - குணங்களோடே, குறுகாத - நெருக்குப்படாத, குணத்தனுமாய்- நல்ல குணங்களையுடையனுமாய், மாதாவென - மாதா என்றும், பிதாவென - பிதா என்றும், மன் - த்ருடமான, உறவாய் - பந்துவாய், கதியென - உபாயமாகவும், நின்றான். 1 அஹிர். ஸம் - 52 - 35 யாரைக் குறித்து ஸமர்ப்பணம் செய்யப்படுகிறதோ அவரைக் காட்டுகிறது.

2 சாரீரக ஸூத்ரம்—4-4-4 ஆவிர்ப்பவித்த ஸ்வரூபத்தையுடையனான முக்தாத்மா தன்னைப் பரமாத்மாவுக்குச் சரீரமாக அநுபவிக்கிறான், உண்மையான ஆகாரம் பார்க்கப்பட்டமையால்

3 திருவாய்மொழி - 1 - 2 - 5, 4 திருவாய்மொழி- 3 - 7 - 7

என்று ஆழ்வார் அருளிச்செய்தார். இப்படி முக்தனுக்குப் பரமாத்ம லக்ஷணங்களுள் ஒன்றும் வாராமையாலே மோக்ஷத்வாதிகள்நிலைநிற்கையாலே கைங்கர்யம் உபபந்நம். இதின் ப்ராப்தனுக்கு இங்கே உசிதமான க்ரியாபதம் அத்யாஹார்யம்.

1 'आविस्स्युः मम सहजकैङ्कर्यविषयः'

(ஆவிஸ் ஸ்யு : மம ஸஹஜ கைங்கர்ய விதயः)

என்றுரைக்கிறே.

2 'ஒழிவில் காலம் எல்லாம் உடனுய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'

என்றதாயிற்று. கீழில் பதங்களிலே நிருபாதிக நித்ய மோக்ஷமாகத் தன்னைத் தெளிந்தவனுகையாலே ஸ்வாமியான நீ என்னைப் பரிபூர்த்தனுக்கி அடிமை கொள்ளவேண்டும் என்கிறதுவும் மோக்ஷ ப்ரயோஜநத்தை அபேக்ஷித்தபடி.

3 'प्रहर्षिष्यामि' (ப்ரஹர்ஷயிஷ்யாமி)

4 'படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே'

என்றபடியே சேதநனுகையாலே ஸ்வ ப்ரயோஜநத்தில் துவக்கற மோக்ஷப்ரயோஜநத்தில் புத்திபூர்வ ப்ரவ்ருத்திகூடாது.

5 'தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே'

என்கிறபடியே ப்ரதாநமான மோக்ஷ ப்ரயோஜநத்தை ஒழிய ஸ்வ ப்ரயோஜநத்தை அபேக்ஷிக்கவும் கூடாது. ஆகையால் குணவத் ஸ்வாமியினுடைய ப்ரவ்ருத்திபோலே நிபுணதாஸனுடைய ப்ரவ்ருத்தியும் இருவர் ப்ரயோஜநத்தையும்விடாதேநிற்கும் ஸ்வாமி உகப்புக்கு மோக்ஷமாகத் தனக்கு வரும் ப்ரயோஜநம பதி ஸந்நிதியில் பதிவ்ரதாலங்காரம்போலே மிகவும்

---

1 அஷ்டச்லோகீ 3 - மம - எனக்கு, ஸஹஜகைங்கர்யவிதயः- ஸ்வபாவத்தில் ஏற்பட்ட கைங்கர்யங்களின் அநுஷ்டாநங்கள், ஆவிஸ்ஸ்யுः - ஆவிர்பாவத்தை அடைய வேண்டும், அதாவது ப்ரகாசிக்கவேண்டும்என்றபடி.

2 திருவாய் 3 - 3 - 1 - 3 ஆள ஸ்தோ - 46
4 பெருமாள் திருமொழி 4 - 9 - 7, 5 திருவாய் 2 - 9 - 4

உசிதம். இது இங்கு இவனுக்கு உத்தரக்ருத்யத்தில் கைங்கர்ய ரஸத்திலும் துல்யம்.

மங்களாசாஸந ஆவச்யகதை

முக்தனுக்கு அநிஷ்ட ப்ரஸங்கமும் ப்ராந்தி ப்ரஸங்கமுமின்றிக்கே, ஈச்வரனும் நித்யநிரநிஷ்டனுய் அவாப்த ஸமஸ்தகாமனுயிருக்க,

1 ' சூழ்ந்து இருந்து ஏத்துவர் பல்லாண்டே '

என்னவேண்டிற்று என் ? என்னில்:—இது அநிஷ்டநிவ்ருத்திகளை ப்ரயோஜநமாகக் கொண்டாதல், அஜ்ஞாநத்தைக் காரணமாகக் கொண்டாதல் வருமதன்று. இவனுக்கு ச்ருதிகளில் சொன்ன ஸாம காநாதிகளைப் போலே இது ஒரு ஸ்வச்சந்த (ப்ர)வ்ருத்தி விசேஷம். அஸ்த்தாநஸ்நேஹ:, க்ஷா ப்ரணயிகள் என்று நித்யஸூரிகளைச்சொன்னதும் அஸ்த்தாநபய சங்கை உண்டாமவர்களுக்குள்ள பரிவுடையவர்கள் என்றபடி. இங்குள்ளவர்களுக்கு பய சங்கையுண்டாமது பக்திவிசேஷமடியாக வருகையாலே குணமாம். அர்ச்சாவதாராதிகளில் ப்ராணிகளுடைய கர்மாநுரூபமாக ப்ராதுர்பாவமும் உபேக்ஷையும் நடக்கிறதாகையாலே

2 ' स्त्रियो वृद्धाः तरुण्यश्च '

(ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யஸ் ச)

இத்யாதிகளிற்படியே மங்களாசாஸநமும் ஸபலம். அப்போது நிபுணராயிருப்பார்

3 रक्षतु त्वां ' (ரக்ஷது த்வாம்)

இத்யாதிகளிற்படியே அவன்தன்னையே கொண்டு மங்களாசாஸநம் பண்ணுவார்கள். இப்படி எங்கும் கண்டுகொள்வது.

4 இருவிலங்கு கழித்து இடராம் உடலம் தன்னில்
இலங்கு நடுநாடியினுல் எம்மை வாங்கி *

---

1 பெரியாழ் 1 - 1 - 12

2 ராமா - அயோ - 2 - 52 ஸ்த்ரிய: - ஸ்த்ரீகளும், வ்ருத்தா: கிழவர்களும், தருண்ய: ச - இளம்பருவ மங்கைகளும், (ராமனுடைய மங்களத்தை ஆசாஸித்தார்கள்)

3 த்வாம் - உன்னை, ரக்ஷது - ரக்ஷிக்கட்டும்

4 இருவிலங்கு - புண்யம் பாபம் எனப்படும் இரண்டு தடைகளையும், கழித்து - நீக்கி, இடராம் - துக்கத்தைக் கொடுக்கிற, உடலம் தன்னில் - சரீரத்தில், இலங்கும் - ப்ரகாசிக்கிற, நடு நாடியினுல் - மத்ய

ஒரு விலங்கு நெறியல்லா வழியால் மன்னும்
உயர்வானில் ஏற்றி உயிர்நிலையும் தந்து *
பெரு விலங்காம் அருள் தன்னுல் தன்னடிக்கீழ்
பிரியாத அமரருடன் பிணைத்துத் * தன்னுர்
உருவிலங்கும் இசைவிக்கும் உம்பர் போகம்
உகந்து தரும் திருமாலே உகந்தோம் நாமே. 4

இப்படி ப்ரதமாக்ஷராதிகளிலே ப்ராப்யமான ப்ரஹ்மஸ்வரூபமும், த்ருதீயாக்ஷராதிகளிலே ப்ராப்தாவின்ஸ்வரூபமும் மத்யமபதத்திலே விரோதியும் உபாயமும், சதுர்த்தியிலே பலமும்யதாஸம்பவம் பதங்களிலே ஸம்பந்தமும் ப்ரகாசிதமாயிற்று. இதில் வாக்ய

வாக்யார்த்த நிரூபணம் யோஜனை இருக்கும்படி — அகார வாச்யனை நாராயணனுக்கே நான் அநந்யார்ஹ ஶேஷபூதன், எனக்கு உரியேன் அல்லேன், என்று சிலர் திருமந்திரம் முழுக்க ஸ்வரூப பரம் என்பர்கள். ப்ரணவம் ஸ்வரூப பரமாய், நமஸ்ஸிலே அநிஷ்டநிவ்ருத்திப்ரார்த்தனையாய், மேல் இஷ்ட ப்ராப்தி ப்ரார்த்தனை என்றும் சொல்லுவார்கள். இரண்டு பதமும் ஸ்வரூப பரமாய் மேல் புருஷார்த்த ப்ரார்த்தநாபரம் என்கிற யோஜனை

1 'अकारार्थायैव' (அகாரார்த்தாயைவ)

நாடியினுல். எம்மை - நம்மை, வாங்கி - (தேஹத்தினின்றும்) எடுத்து, ஒரு விலங்கு நெறியல்லா - ப்ரதிபந்தகமான வழியல்லாத, வழியால் - (அர்ச்சிராதி) மார்க்கத்தால், மன்னும் - த்ருடமான, உயர் - ஸர்வோத்க்ருஷ்டமான, வானில் பரமபதத்தில், ஏற்றி - ஏறவைத்து, உயிர - ஜீவாத்மாவின், நிலையும் - ஸ்வரூபத்தையும், தந்து - கொடுத்து, ஆவிர்ப்பவிக்கும்படி செய்து என்றபடி, பெரு விலங்காம் - பெரிய தடங்கலாகிற அருள்தன்னுல் - தன்னுடைய க்ருபையினுல். தன் அடிக்கீழ் - தன்னுடைய திருவடிகளின் கீழே, பிரியாதஅமரருடன் - பிரியாத நித்யஸூரிகளுடன், பிணைத்து - சேர்த்து, தன் -தனது, ஆர் - - நிறைந்த உருவில் - ஸ்வரூபத்தில் அங்கும் . அந்தப் பரமபதத்திலும், இசைவிக்கும் - அங்கீகரிக்கும்படி செய்யும், உம்பர் போகம் - நித்ய ஸூரிகளின் போகங்களை, உகந்து - ப்ரீதியுடன், தரும் - நமக்குக் கொடுத்தருளுகிற, திருமாலே - ச்ரிய பதியை, நாம், உகந்தோம் - ஸந்தோஷித்து சரணமாக அடைந்தோம். இங்கு பகவானுடைய க்ருபையை விலங்கு என்றது மோக்ஷம் சென்றவர்கள் பிணை கொடுக்கிலும் திரும்பி வரமுடியாமல் இருப்பதைக்காட்டுகிறது.

என்கிற ச்லோகத்திலே சொல்லப்பட்டது
மற்றும் பல யோஜனைகளும் உண்டு. ஸர்வ ப்ரஹ்ம வித்யா நிஷ்டருக்கும் உபஜீவ்யமான ஸ்ரீ ரக ஸாஸ்த்ரத்தில் நிரூபித்த கட்டளையிலே பதத்ரயமும் தத்த்வ ஹித புருஷார்த்தங்களை அடைவே காட்டுகிறது என்னும் யோஜனைக்கு அபேக்ஷிதார்த்த பௌஷ்கல்யம் உண்டு: த்வயத்திலும் இதுவே அடைவு, இப் பதத்ரயம் தெளிந்தவன் அநந்யார்ஹ சேஷபூதனாய், அநந்யோபாயனாய் அநந்ய ப்ரயோஜநனாய் நித்யாதிகளில் சொல்லுகிற பரமைகாந்தியாம். இப்பதங்களிலே ஸோபாந க்ரமத்தாலே ஜீவனுக்கு ஸத்தாநுபந்திகளான ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வங்கள் ஸித்திக்கையாலே

1 'யானே நீ'

இத்யாதிகளில் ஸாமாநாதிகரண்யம் ஸ்ரீ ராத்ம பாவ நிபந்தநம் என்று ஸித்தித்தது. இத்தாலே குத்ருஷ்டி மதங்களும் கழிந்தன. இதில் ப்ரதம பதத்தில் த்ருதீயாக்ஷரத்தாலே தேஹாதிகளிலும் ததநுபந்திகளிலும் வரும் அஹங்கார மமகாரங்களையும், ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலே தான் தனக்கு உரியனாகி வரும் அஹங்கார மமகாரங்களையும், மத்யமாக்ஷரத்தில் அவதாரணத்தாலே நான் வேறு ஒருவனுக்கு நிருபாதிக சேஷம் என்றும் எனக்கு வேறு ஒரு சேஷி உண்டு என்றும் வரும் அஹங்கார மமகாரங்களையும், மத்யம பதத்தில் நிஷேத விசேஷங்களாலே ஸ்வரக்ஷண வ்யாபாராதிகளைப் பற்ற நிரபேக்ஷஸ்வதந்த்ரன் என்றும் நிருபாதிக சேஷி என்றும் வரும் அஹங்கார மமகாரங்களையும், இந்நிஷேதஸாமர்த்த்யம்தன்னாலே நாராயண சப்தத்தில் சதுர்த்தியின் கருத்தான கைங்கர்யாநுபவத்தில் பலாந்தராநுபவ ந்யாயத்தாலே வரும் ஸ்வாதீநகர்த்ருதவ போக்த்ருத்வ ஸ்வார்த்த கர்த்ருத்வ போகருத்வ ப்ரம ரூபங்களான அஹங்கார மமகாரங்களையும், ஸாப்தமாகவும் ஆர்த்தமாகவும் அடியறுத்து நிற்கிறான். இம்மந்த்ரநிஷ்டன் ரக்ஷகாந்தர அந்வேஷணம், தேவதாந்தராதி ஸ்பர்சம், கேவல தேஹார்த்த வ்யாபாரம், க்ஷேத்ராதி ஸங்கம், நிரபேக்ஷ கர்த்ருத்வாபிமாநம், பாகவதாபராதம், ஆத்மநாசாதிபயம், ப்ரயோஜநாந்தர ருசி முதலான அநர்த்த ஹேதுக்களில் ஆழங்கால்படான்.

1 திருவாய் 2 - 9 - 9.

பஹுஶ்ருதனேயாகிலும் இத் தெளிவில்லாதவன் விகலன். அல்பஶ்ருதனேயாகிலும்ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே இத்தெளிவு பிறந்தவன் ஸம்பூர்ணன். இவனே

2 'प्रज्ञा.प्र.सादम.रुह्य' (ப்ரஜ்ஞா ப்ராஸாதமாருஹ்ய)

என்று ப்ரமம்ஸிகிறது.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

1 உறவை இசைந்து இறையில்லா ஒருவர்க்கென்றும்
ஒண் சுடராய் ஓரெழுத்தில் ஓங்கி நின்ரேம் *
துறவறமும் தூ மதியும் துயரம் தீர்வும்
துய்யவர்கட்கானமையும் இரண்டில் உற்ரேம் *
அறமுயலும் அனைத்துறவாய் அனைத்தும் ஏந்தும்
அம்புயத்தாள் கணவனே நாம் அணுகப்பெற்ரேம் *
பிறவி அறுத்து அடிசூடி அடிமையெல்லாம்
பிரியாத அமரருடன் பெற்ரேம் நாமே. 6

திருமந்த்ராதிகாரம் என்னும் முதல் அதிகாரம் முற்றிற்று.

---

1 பாரதம் சாந்தி - 150 - 11 ப்ரஜ்ஞா ப்ராஸாதம் - திருமந்திரத்தின் அர்த்தஜ்ஞானமாகிய மேல் தளத்தில், ஆருஹ்ய - ஏறி-

2 நாம் - ஸதாசார்ய கடாக்ஷத்தாலே திருமந்த்ரார்த்தங்களை நன்ரக அறியப்பெற்ற நாம், ஓர் எழுத்தில் - ஒரு அக்ஷரமான ப்ரணவத்தில், உறவை - ஸம்பந்தத்தை, இசைந்து - ஒப்புக்கொண்டு என்றும் – எல்லாக்காலத்திலும், ஒண் - ப்ரகாசிக்கிற, சுடராய் - தேஜோரூபியாய், இறை இல்லா ஒருவர்க்கு - தன்னை நியமிப்பவன் ஒருவரும் இல்லாத, அதாவது தனக்கு ஸ்வாமியாக ஒருவரும் இல்லாதஸர்வேச்வரனுக்கு, (சேஷ பூதர்கள் என்று,) ஓங்கி - உயர்ந்து, நின்ரேம் இரண்டில் - இரண்டு அக்ஷரமான நமஸ்ஸில், துறவு - த்யாக சப்தத்தினால் சொல்லப்படும். அறமும் - பரம தர்மமான சரணாகதியையும், தூ மதியும் - அஹங்கார மமகாரங்கள் இல்லாத புத்தியையும் துயரம் தீர்வும்-துக்கத்தின் நிவ்ருத்தியையும், தூயவர்கட்கு - பரிசுத்தரான பாகவதர்களுக்கு, ஆனமையும் - சேஷ பூதரான தன்மையையும், உற்ரேம் - பெற்ரேம், அறமுயலும் - சரணாகதி தர்மானுஷ்டானத்தில் முயற்சி செய்பவராய், அனைத்தும் - எல்லா வஸ்துக்களையும், ஏந்தும் - தரித்துக் கொண்டிருப்பவருமாய் இருக்கும், அம்புயத்தாள் - தாமரை புஷ்பத்தில் வஸிக்கும் லக்ஷ்மியினுடைய, கணவனே - பர்த்தாவாகியபகவானே, அணுகப் பெற்ரேம் - கிட்டப்பெற்ரேம், பிறவி ஜன்மத்தை, அதாவது மறுபடியும் பிறப்பதை, அறுத்து

த்வயாதிகாரம் என்னும் இரண்டாம் அதிகாரம்.

[த்வயத்தின் ஸமுச்சயார்த்தமும் த்வயம் என்னும் திருநாமத்திற் குக்காரணமும்—ஸ்ரீசப்தார்த்தம்–மதுப்பின் அர்த்தம்—நாராயண சப் தார்த்தம்—குணவர்க்க நிரூ பணம்—சரணௌ பதத்தின் அர்த்தம்— சரண சப்தார்த்தம்—ப்ரபத்யே பதத்தின் அர்த்தம்—உத்தர கண்ட ஸ்ரீ மச் சப்தார்த்தம்—நாராயண சப்தார்த்தம்—நமः சப்தார்த்தம்— த்வயத்தின் வாக்யார்த்தம்]

எண் சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

கருமமென ஞானமென அதனுற்கண்ட
உயிர் கவரும் காதலெனக் கானில் ஓங்கும் *
அருமறையால் தரு நிலையில் இந்நாளெல்லாம்
அடியேனே அலையாத வண்ணமெண்ணித் *
தருமமுடையார் உரைக்க யான் அறிந்து
தனக்கென்ன அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித் *
திருமகளோடு ஒரு காலும் பிரியா நாதன்
திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே. 7

(சேதித்து) அடிசூடி - (பகவானுடைய) திருவடிகளே சிரஸா தரித்து, பிரியாத - (பகவானே விட்டுப்) பிரியாத, அமரருடன் - நித்ய ஸூரி களுடன், அடிமை எல்லாம், தாஸ வ்ருத்திகளே எல்லாம், நாம் பெற்றேம் - அடைந்தோம் (நிச்சயமாகப் பெறப்போகிறோம் என்றபடி)

கருமமென - கர்ம யோகம் என்ன, ஞானமென - ஞான யோகம் என்ன, அதனில் அந்தக் கர்மயோக ஜ்ஞானயோகங்களினுல் கண்ட - காணப்பட்ட, உயிர் - ஜீவாத்மாவை, கவர் - ஈடுபடச் செய்கிற, காத லென - பக்தி யோகம் என்ன, இவைகளாகிற, கானில் - காட்டில், ஓங் கும் - வ்ருத்தியாகா நின்றுள்ள, அருமறையால் - வேதங்களினால், தரு - உபதேசிக்கப்பட்ட, நிலையில் - ஸ்த்திதியில், அடியேனே - என்னை, இந் நாள் எல்லாம் - இந்த நாள்களில் எல்லாம், அலையா வண்ணம் - அலை யாதபடி, எண்ணி - நினைத்து அலையவேண்டாம் எனத் திருவுள்ளம் பற்றி என்றபடி, தருமமுடையார்-தர்மிஷ்டர்களான நம் ஆசார்யர்கள், உரைக்க - உபதேசிக்க யான் - அடியேன், அறிந்து - அந்த மந்த்ரங்க ளின் அர்த்தங்களைத் தெரிந்து கொண்டு, தனக்கு என்ன மமகாரம் இல்லாமல் அடிமைக்காம் - தாஸ வ்ருத்திக்கு யோக்யமான, வாழ்ச்சி - வாழ்வை, வேண்டி - பெறுவதற்காக, திருமகளோடு - பெரியபிராட் டியாருடன், ஒரு காலும் - ஒரு ஸமயத்திலும், பிரியா -பிரியாதவரான நாதன் - ஸர்வ ஸ்வாமியான பகவானுடைய, திண் - த்ருடமான, கழ

கடஸ்ருத்யாதிகளில் திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்திலே த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களைப் பிரிய ஓதிச் சேர ஒரு கால் உச்சரிக்க விதித்தது. ஸ்வேதாஸ்வதராதிகளிலே சொல்லுகிற ப்ரபத்திமந்த்ரங்களிற் காட்டிலும் இது ஸரண்யஸரணகதி தத்பலங்களை விஸதமாகக் காட்டுகையாலே இத்தை ஆசார்யர்கள் ஆதரித்தார்கள். ஸ்ரீ ப்ரஸ்ந ஸம்ஹிதையிலும் வ்யாபக மந்த்ரங்களோடு சேர்ந்த ஸரணகதி மந்த்ரங்களை உபதேசிக்கிற இடத்திலே திருவஷ்டாக்ஷரத்தோடே சேர இம் மந்த்ரத்தையும் வர்ணோத்தாரம் பண்ணி உபதேசித்தது. இப்படியால் இது ஸ்ருத்யபிமதமான தாந்த்ரிக மந்த்ரம். இதில் சொல்லுகிற ப்ரபதநம் ஸ்ரௌதமேயாகிலும் ஸத்ய வசநாதிகள் போலே ஸார்வாதிகாரம். இது

த்வயத்தின் ஸமுச்சயார்த்தமும் திருநாமத்தின் காரணமும்

1 ‘ सर्वलोकशरण्याय ’ (ஸர்வலோக ஸரண்யாய)
2 ‘ सर्वयोग्यमनायासं ’(ஸர்வயோக்யமநாயாஸம்)
3 ‘ शरणं त्वां प्रपन्ना ये ’(ஸரணம் த்வாம் ப்ரபந்நா யே)
4 ‘ त्रयाणां क्षत्रियादीनां प्रपन्नानां च तत्त्वतः ’
(த்ரயாணாம் க்ஷத்த்ரியாதீநாம் ப்ரபந்நாநாம் ச தத்த்வதஸ்)

லே - திருவடிகளே, சேது என - (ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு) அணை என்று நிச்சயித்து, சேர்கின்றேன் - சரணகதி செய்கிறேன்.

1 ராமா - யுத்த - 17 - 15 எல்லா லோகங்களுக்கும் சரண்யனை.

2 ஸர்வ யோக்யம் - எல்லோராலும் சரணமாக அடையத்தகுந்தவனையும், அநாயாஸம் - ஒரு விதச்ரமமும் இல்லாமல் ஆச்ரயிக்கப்படக் கூடியவனையும்.

3 ப்ராஹ்ம புராணம் - 53. (பக்தியோகாதிகள் செய்யமுடியாமல் இருக்கும்)யே - எவர்கள், த்வாம் - உம்மை, சரணம் - சரணமாக அடைகிறார்களோ (அவர்களும் அந்த மோக்ஷத்தை அடைகிறார்கள்)

4 ஸாத்வதம் - 2 - 9 க்ஷத்த்ரியாதீநாம் - க்ஷத்ரியர்கள் முதலிய, த்ரயாணாம் - மூன்று ஜாதிகளுக்கும், தத்த்வதஸ் - உண்மையாக, ப்ரபந்நாநாம் - ப்ரபத்தி செய்தவர்களுக்கும்.

1 ' कुयोनिष्वपि संजातः यः सकृत् शरणङ्गतः '
(குயோநிஷ்வபி ஸஞ்ஜாதः யः ஸக்ருத் ஶரணம் கதः)
2 ' குலங்களாய ஈரிரண்டில் '
இத்யாதிகளிலும் ப்ரஸித்தம்.

3 ' किंतु तस्य च मन्त्रस्य कर्मणः कमलासन ।
न लभ्यतेऽधिकारी वा श्रोतुकामोपि वा नरः ॥ '
(கிந்து தஸ்ய ச மந்த்ரஸ்ய கர்மணः கமலாஸந ।
ந லப்யதே அதிகாரீ வா ஶ்ரோது காமோபி வா நரः ॥)

என்றது விஶ்வாஸ மஹத்தையும் விளம்பாக்ஷமதையும் உடைய னை அதிகாரியினுடைய தெளர்லப்யத்தையே காட்டுகிறது. இம் மந்த்ரம் ஸ்வாதிகாரத்தையும் ஸ்வஸ்வரூபத்தையும் தெளிந்தவனு க்கு ஸ்வாதிகாராநுரூபமானஉபாயம் என்ன, ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமென்ன, தேஶ காலாதி பரிச்சேத ரஹிதமான இவ் வர்த்த த்வயத்தைக் காட்டுகையாலே த்வயம் என்று பெயர்பெற் றது.

4 ' தாயேதந்தை ', 5 ' ஏழை ஏதலன் '
முதலானவையும் கத்யமும் த்வயத்தின் விவரணம்.
6 ' திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்மினே '
என்றும்,
7 ' முகில்வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி உய்ந்தவன் '

---

1 ஸநத் குமார ஸம்ஹிதை. குயோநிஷு - தாழ்ந்த ஜாதியில், ஸஞ்ஜாதோபி - பிறந்திருந்தபோதிலும், யः - எவன், ஸக்ருத் - ஒரு தடவை ஶரணம் கதः - ஶரணம் அடைந்தானோ (அவன் எப்படிப் பட்ட பாபியானாலும் பகவான் அவனைக் காப்பாற்றுகிறான்).

2 திருச்சந்த - 90.

3 பௌஷ்கர ஸம்ஹிதை. கமலாஸந - தாமரைப் பூவை ஆஸந மாகவுடைய ப்ரஹ்மாவே ! கிந்து - ஆனாலும், தஸ்ய - அந்த. மந்த்ர ஸ்ய - (த்வயமாகிற) மந்த்ரத்திற்கும், கர்மணः - அதில் சொல்லப் படுகிற ப்ரபத்தியாகிற உபாயாநுஷ்டானத்திற்கும், அதிகாரீ - அதிகாரியாவது, ஶ்ரோது காமः கேட்க வேண்டும் என்கிற ஆசை யுடைய, நரः அபி வா - மனிதனாவது, ந லப்யதே - கிடைக்கிறதில்லை.

4, 5 பெரியதிரு - 1 9, 5 - 8, 6,7 திருவாய்-4 - 1 - 1,7 - 2-11.

என்றும் இதில் பதக்ரமத்தில் அர்த்தாநுஸந்தாநம். இதில் அர்த்த க்ரமத்திலே உத்தர கண்டாநுஸந்தாநம் முற்பட வேண்டியுலும், உபாய பலங்களுடைய உத்பத்தி க்ரமத்தை அநுஸரித்துக் கொண்டு அத்யயந கரமம் நியதமாகிறது.

1 ' सभ्रातुः चरणौ गते ' (ஸப்ராதுஸ் சரணௌ காடம்)

இத்யாதியாலும்,

2 ' அகலகில்லேன் '

என்கிற பாட்டாலும் பூர்வகண்டம் வ்யாக்க்யாதமாயிற்று.

இதில் ஸ்ரீ ஶப்தம்

3 ' शृणाति निखिलान् दोषान् श्रीणाति च गुणैः जगत् ।
श्रीयते चाखिलैर्नित्यं श्रयते च परं पदम् ॥
श्रयन्तीं श्रीयमाणां च शृण्वतीं शृण्वतीमपि । '

(ஶ்ருணோதி நிகிலாந் தோஷாந் ஶ்ரீணாதி ச குணை: ஜகத்)
ஶ்ரீயதே ச அகிலைர்நித்யம் ஶ்ரயதே ச பரம் பதம் ॥
(ஶ்ரயந்தீம் ஶ்ரீயமாணாம் ச ஶ்ருணந்தீம் ஶ்ருண்வதீமபி)

இத்யாதி வசநங்களாலே

ஸ்ரீ சப்தார்த்தம்

பல வ்யுத்பத்திகளை உடைத்தாயி ருகும். இவ்வ்யுத்பத்திகள் எல் லாத்திலுமுள்ள வைபவத்தைக்

கணிசித்து,

---

1 ராமா - அயோ - 31 - 2 ஸ :- அந்த லக்ஷ்மணன், ப்ராது :- தமையனான ராமனுடைய, சரணௌ - திருவடிகளை, காடம் - கெட்டி யாக (பிடித்துக் கொண்டு சரணாகதி செய்தார்)

2 திருவாய் - 6 10 - 10,

9 அஹி. ஸம். - 6. நிகிலாந் - எல்லா, தோஷாந் - தோஷங் களையும். ச்ருணோதி - போக்கடிக்கிறுள், குணை: - குணங்களினால், ஜகத் - லோகத்தை, ச்ரீணாதி - வ்யாபித்திருக்கிறுள் அகிலை: - எல் லோராலும், நித்யம் - எபபொழுதும், ச்ரீயதே - அடையப்படுகிறுள் பரம் பதம் - ப க வா னை, ச்ரயதே - ஆச்ரயித்திருக்கிறுள். ச்ரயந்தீம் - ஆச்ரயிப்பவளாயும், ச்ரியமாணாம் - ஆச்ரயிக்கப்படு மவளாயும், ச்ரு ணந்தீம் - (ஆச்ரிதர்களுடைய வார்த்தையை) கேட்பவளாயும், ச்ருண் வதீமபி-(அவற்றைப் பகவானை) கேட்கும்படி செய்கிறவள்.

1 ' श्रीरित्येव च नाम ते भगवति ह्रीमः कथं त्वां वयम् '
(ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ஹ்ரீமः கதம் த்வாம் வயம் என்றும், 2 ' भगवतीं श्रियं ' (பகவதீம் ஸ்ரியம்)என்றும்,

3 ' श्रीरसि यतः '(ஸ்ரீரஸி யதः)என்றும்அருளிச்செய்தார்கள்.

(ஸ்ருணோதி நிகிலாந் தோஷாந்) என்றது

4 ' வேரி மாறாத பூ மேல் இருப்பாள் வினை தீர்க்கும் ' என்கிறபடியே அஜ்ஞாநாதிகளை எல்லாம் கழிக்கும் என்றபடி.

(ஸ்ரீணோதி ச குணைர் ஜகத்) என்றது

5 'நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு' இத்யாதிகளிற்படியே தன் குணங்களாலே கைங்கர்யபர்யந்த ஜ்ஞாநாதி குணப்ரதாநத்தைப் பண்ணிக் கொண்டு ஜகத்தைப் பரிபக்வமாக்கும் என்றபடி.

' श्रीणाति पाके श्रीणीते ' (ஸ்ரீணாதி பாகே ஸ்ரீணீதே) என்று நிகண்டு சொல்லிற்று.

6 ' अस्तु ते ' (அஸ்துதே) இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

(ஸ்ரீயதே, ஸ்ரயதே, ஸ்ருணோதி, ஸ்ராவயதி ' என்கிற வ்யுத்பத்திகளிலும் அபேக்ஷித பதார்த்தங்கள் நிருக்த வசநங்களாலும், ஔசித்யத்தாலும் விசேஷித்து அறியவேண்டும்.

எங்ஙனே எனில் :—

ஸாபராதர்களான ஸம்ஸாரிகள் திறத்தில் தண்டதரனை ஈச்வரனுடைய ஸஹஜ காருண்யமும், ஒழிக்க ஒழியாத உற

---

1 ஸ்ரீசதுः ச்லோகீ - 1. பகவதி - பகவாநைப்போல மேன்மையுடையவளே! தே - உனக்கு, ச்ரீः இத்யேவ - ச்ரீः என்றே, நாம திருநாமம்.

2 சரணாகதி கத்யம் - பகவதியான லக்ஷ்மியை.

3 ஸ்ரீ குணரத்ன கோசம் 29. யத :— எந்தக் காரணத்தினால், ஸ்ரீ ரஸி - ச்ரீயாகிறீரோ. 6 சரணாகதிகத்யம் உனக்கு உண்டாகட்டும்.

4, 5 திருவாய் - 4 - 5 - 11—9 - 2 - 1

வும் உஜ்ஜீவகமாம்படி அவனுடைய சீற்றத்தை ஆற்றுகைக்காக அத்தலையில் மஹிஷீத்வ ப்ரயுக்த வால்லப்யாதிசயத்தாலும், இத்தலையில் மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்யாதிசயத்தாலும் மறுக்க ஒண்ணாத புருஷகார மாய் சரண்ய விசேஷண முமாய் நின்று ஸர்வராலும் ஸ்வோஜ்ஜீவநத்துக்காக ஆச்ரயிக் கப்படும். இவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காக ஈச்வரனை ஆச்ரயித்திருக்கும், ஆச்ரயணேங்முகருடைய ஆர்த்த நாதத் தைக் கேட்டு, ஸர்வேச்வரனைக் கேட்பித்து, அவர்களுடைய ஆர்த்தியை சமிப்பிக்கும். இக்ரமத்திலே ரக்ஷிக்கையும் ஸ்வதந்த்ர வ்யவஸ்த்தா ஸித்தம். மற்றும் ஸேவ்யத்வாதிகளிலே வரும் உசிதார்த்தம் கண்டுகொள்வது. இப்படிக் கண்டவன் திரு வில்லாத் தேவரைத் தேறுன்.

1 ' वाचः परं प्रार्थयिता ' (வாசः பரம் ப்ரார்த்தயிதா)

2 ' यामालम्ब्य ' (யாமாலம்ப்ய)

3 ' सर्वकाम प्रदां ' (ஸர்வகாமப்ரதாம்)

4 ' लक्ष्म्या सह ' (லக்ஷ்ம்யா ஸஹ)

5 ' ईषत् त्वत् ' (ஈஷத் த்வத்)

6 ' स्वस्ति श्रीः दिशतात् ' (ஸ்வஸ்தி ஸ்ரீः திசதாத்)

---

1 சௌநக ஸம்ஹிதை. வாசः பரம் - வாக்குக்கு எட்டாத (பகவானை ப்ரார்த்தயிதா-அபேக்ஷிக்கிறவன், (முதன் முதலில் லக்ஷ் மியை ஆச்ரயிக்கவேண்டும்)

2 ஸாத் - ஸம்-12 - 84. யாம் - எந்த லக்ஷ்மியை, ஆலம்ப்ய-ஆச்ர யித்து ஸகமாக இந்த ஸம்ஸார ஸாகரத்தைத்தாண்டுகிறார்களோ)

3 ஸர்வ காமப்ரதாம் -(லக்ஷ்மி) எல்லாக் காமங்களையும் கொடுப்பவள்

4 லக்ஷ்மீ தந்த்ரம் - 28 - 14. லக்ஷ்ம்யா ஸஹ - லக்ஷ்மியுடன் கூட (பகவான் ஸர்வ ரக்ஷகன் என்று எல்லா ப்ரமாணங்களும் உத் கோஷிக்கின்றன.)

5 ஸ்ரீ சதுः ச்லோகீ 3. த்வத் - உம்முடைய, ஈஷத் - மிகவும் கொஞ்சம் (கடாக்ஷம் பெறுமையினால் மூன்று லோகமும் ஸமமடைந்து அதைப் பெற்றதும் மீண்டும் வ்ருத்தியடைந்தது)

6 ஸ்ரீ ஸ்தவம் ஸ்ரீः - லக்ஷ்மீ (எல்லாருக்கும், நல்லபலன்களைக் கொடுக்கட்டும்

1 ' पितेव त्वत्प्रेयान् ' (பிதேவ த்வத்ப்ரேயாந்)

2 ' ऐश्वर्यं अक्षरगतिं ' (ஐஸ்வர்யம் அக்ஷரகதிம்)

இத்யாதி ப்ரமாண ஸம்ப்ரதாய க்ரந்தங்களை இங்கே பராமர்சிப்பது.

3 ' तुल्य शीलवयो वृत्तां '(துல்ய ஸீல வயோ வ்ருத்தாம்)

இத்யாதிகளிற்படியே ஸர்வ ப்ரகாரத்தாலும் தனக்கு ஏற்கும் கோலமலர்ப் பாவையோடு உபாய தசையிலும் உபேய தசையிலும் நாராயணன் பிரிவற்றபடியை - பூர்வோத்தர கண்டங்களில் மதுப்புக் காட்டுகிறது.

மதுப்பின் அர்த்தம்

இது அநேகார்த்தமேயாகிலும், ஸம்ஸாரிகளுக்கு நினைத்தபோதே நிஸ்ஸங்கமாக ஸ்ரீய:பதியினுடைய திருவடிகளைப் பற்றலாம் படியான உபயோகாதிசயத்தாலே இங்கே நித்ய யோகத்தைச் சொல்லுகிறது.

4 ' श्रीवत्स वक्षा नित्य श्रीः ' (ஸ்ரீவத்ஸவக்ஷா நித்ய ஸ்ரீ:)

5 ' विष्णोः श्रीरनपायिनी '(விஷ்ணோ: ஸ்ரீ: அநபாயிநீ)

6 ' नित्यानपायिनीं निरवद्यां ' (நித்யாநபாயிநீம் நிரவத்யாம்)

7 ' आकारिणस्तु विज्ञानं ' (ஆகாரிணஸ்து விஜ்ஞாநம்)

---

1 ஸ்ரீ குணரத்ன கோசம் - 62 - த்வத் ப்ரேயாந் - (லக்ஷ்மியே) உன்னுடைய பர்த்தா, பிதேவ - தகப்பனரைப்போல,

2 ஸ்ரீ குணரத்ன கோசம் 56 - ஐச்வர்யம் - ஸம்பத்தையும் அக்ஷரகதிம் - கைவல்யத்தையும் (பரம பதத்தையும் கொடுத்தும்கூட நாம் என்ன செய்தோம் என்று நினைத்திருப்பவள லக்ஷ்மி)

3 ராமா - ஸுந்-16-5 (ராமனும் ஸீதையும்)துல்யசீலவயோவ்ருத்தாம்-குணங்கள்,வயது, நடவடிக்கைஇவைகளில் ஸமமாயிருப்பவர்கள்

4 ராமா - யுத் - 114 - 15 ஸ்ரீவத்ஸ வக்ஷா - ஸ்ரீவத்ஸம என்கிற மறுவைத் திருமார்பில் உடையவன், நித்ய ஸ்ரீ :- எப்பொழுதும் லக்ஷ்மியுடன் கூடியவள்.

5 விஷ்ணு புராணம் - 1 - 8 - 17 ஸ்ரீ: - லக்ஷ்மீ. விஷ்ணோ: அநபாயிநீ - விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள்

6 சரணாகதி கத்யம் - நித்யாநபாயிநீம் - (பகவானை விட்டு)ஒரு பொழுதும் பிரியாதிருக்கிறவள், நிரவத்யாம் - ஒருவிதத் தோஷமும் இல்லாதவள்.

7. அருளாளப்பெருமாள்எம்பெருமானார். ஒரு வஸ்து விற்குள்ள விசேஷணத்தை அறிந்த பிறகே அந்த வஸ்துவை அறியலாம்.

இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது. பதியினுடைய பத்நீ விசிஷ்டத்வமும், ஸர்வ ஸ்வாமிநியினுடைய பதிபாரார்த்த்யமும், நித்யமாய் நிற்கையாலே இங்கு பரமதங்களுக்கு அவகாசமில்லை. இவளுக்குப் பதி பக்கல் அந்தர்ப்பாவம் சொல்லுமிடம் விசிஷ்ட அந்தர்ப்பாவத்தையும், பஹிர்ப்பாவம் சொல்லுமிடம் ஸ்வரூபபேதத்தையும் விவக்ஷிக்கிறது, அல்லது ஸ்வரூபைக்யமான அந்தர்ப்பாவமும், ஸ்வரூபத்தை விட்டு நிற்கும் பஹிர்ப்பாவமும் ப்ரமாண ஸம்மதமன்று உத்தர கண்டத்தில் போலன்றிகே பூர்வ கண்டத்தில் பத்நீ ஸம்பந்தம் உபலக்ஷணம் என்றும், குண விக்ரஹ ஸம்பந்தம் விசேஷணம் என்றும் பிரித்துச் சொல்லுவார்க்கு இதில் ஸ்வாரஸ்யமும் ப்ரமாண ஸம்ப்ரதாயங்களும் அநுகுணமல்ல. விசேஷணங்களாலே ப்ராப்யைக்ய விரோதம் வாராததுபோலே ப்ராபக ஐக்ய விரோதமும் வாராது. சேதநாசேதந ரூபவிசேஷணங்களுக்கு வஸ்த்வநுரூபமாக உபயோக விசேஷம் ப்ரமாண நியதம்.

இப்படி ஸபத்நீகனுய்க்கொண்டு ஸர்வரக்ஷண தீக்ஷிதனுய்

1 'शान्तानन्त' (சாந்தாநந்த)

2 'स्वैश्वरूप्येण' (ஸ்வ வைச்வரூப்யேண) இத்யாதி

நாராயண சப்தார்த்தம்

களிற்படியே ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் ப்ரணயத்தாலும் ஸுலிஷ்டனை சரண்யனுக்கு

3 'தன்னடியார் திறத்தகத்து'

இத்யாதிகளில் அபிப்ரேதங்களாய்ப், புருஷகாரமும் தன்னேற்றம் என்னலாம்படியான சரண்யத்வோபயுக்தங்களான ஆகாராந்தரங்களைச் சொல்லுகிறது இங்குற்ற நாராயண சப்தம். அவையாவன:— சரீராத்மபாவ நியாமகங்களான சேஷ சேஷித்வாதி ஸம்பந்தங்களும், ஆச்ரயணீயதைக்கும் பல ப்ர

1 ஸ்ரீசது:ச்லோகீ - 4 சாந்த - விகாரங்கள் ஒன்றுமில்லாத, அநந்த – அளவில்லாத (இவை முதலிய ஏற்றங்களைப் பெற்ற பகவானுடைய எல்லா ரூபங்களிலும் லக்ஷ்மியின் விக்ரஹங்களும் சேர்ந்திருக்கின்றன)

2 ஆள · ஸ்தோ - 38 ஸ்வவைச்வரூப்யேண - ப்ரபஞ்சத்தைச் சரீரமாகவுடைத்தாயிருக்கும் தன்னுடைய தன்மையினால்,

3 பெரியாழ்வார் திருமொழி - 4-9-2

தாநத்துக்கும் உபயுக்தமான குணவர்க்கமும், ஸஹகாரி நிரபேக்ஷ மாக ஸர்வத்தையும் நிணைத்த போதே தலைக்கட்டவல்ல ஸங் கல்பரூப வ்யாபாரமும்,

1 ' स्वमुद्दिश्य श्रीमान् ' (ஸ்வமுத்திஶ்ய ஸ்ரீமாந்)

என்கிறபடியே ஆஶ்ரித ஸம்ரக்ஷணம்தானும் தன்பேருக ரக்ஷிக் கிற ப்ரயோஜந விஶேஷமும்.

இங்கு குணவர்க்கம் என்கிறது:—காருண்ய ஸௌலப்ய ஸௌஶீல்ய வாத்ஸல்ய க்ருதஜ்ஞதாதிகளும், ஸர்வஜ்ஞத்வ ஸர்வ ஶக்தித்வ ஸத்ய ஸங்கல் பத்வ பரிபூர்ணத்வ பரமோதாரத் வாதிகளும்.

காருண்யம்—ஒரு வ்யாஜத்தை முன்னிட்டு நம்முடைய துக்கங்களைக் கழிக்கைக்குத் தானே நிணைத்திருக்கையாலே

2 ' எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் ' என்று நம்புகைக்கு உறுப்பாம்.

ஸௌலப்யம்—3 ' சேணுயர் வானத்திருக்கும் தேவ பிரான்(தன்னை ஆணை என் ? தோழீ ! உலகுதோறுஅலர் தூற் ' ருதபடி) என்று அகலாதபடி 4 ' ஏரார்ந்த கண் ணி அசோதை இளஞ்சிங்கம் நாராயணனே நமக்கே பறைதரு வான்' என்று ஆபால கோபாலம்அணியனுய் அபேக்ஷிதம் தந்த ருளும் என்கைக்கு உறுப்பாம்.

ஸௌஶீல்யம்— 5 ' அம்மான் ஆழிப் பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர் 'என்று அகலாமைக்கு உறுப்பாம்.

வாத்ஸல்யம்—6 ' நீசனேன் நிறைவொன்றுமிலேன் ' என்று ஸ்வதோஷத்தைக் கண்டு அவன் அநாதரிக்கிறான் என்று வெருவாமைக்கு உறுப்பாம்.

ஸ்ரீரங்கஸ்தவம் - 2 - 87 (சேதநாசேதந வஸ்துக்களையெல்லாம் ஸ்வமுத்திஶ்ய - தன்னுடைய ப்ரயோஜநத்துக்காக, ஸ்ரீமான்-பகவான் (உபயோகப்படுத்திக்கொள்ளுகிறான்)

2,3,5,6 திருவாய்-5-1-7—5-3-9—5-1-7—3-3-4 4 திருப்பாவை-1

க்ருதஜ்ஞத்வம்—

1 ' மாதவன் என்றதே கொண்டு '

2 ' திருமாலிருஞ் சோலை மலை என்றேன் '

என்கிறபடியே தன்பக்கலிலே அதி லகுவாயிருப்ப தொரு வ்யாஜத்தைக் கண்டாலும் இனி நம்மைக் கைவிடான் என்கிற தேற்றத்துக்கு உறுப்பாம்.

மார்த்தவ ஆர்ஜவாதிகளுக்கும் இப்படியே உபயோகம் கண்டு கொள்வது.

ஸர்வஜ்ஞத்வம் —

3 ' எல்லாம் அறிவீர் '

என்கிறபடியே ஆஸ்ரிதருடைய இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்த்யுபாயங்களையும் விரோதிகளையும் அறிகைக்கு உறுப்பாம்.

ஸர்வ ஶக்தித்வம் —

4 ' கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை '

என்கிறபடியே ஆஸ்ரிதர் மநோரதங்களைக் கடிப்பிக்கைக்கு உறுப்பாம்.

ஸத்ய ஸங்கல்பத்வம்—

5 ' சன்ம சன்மாந்தரம் காத்து '

இத்யாதிகளிற்படியே ' மோக்ஷயிஷ்யாமி ' என்று முடிவு செய்கைக்கு உறுப்பாம்.

பரிபூர்ணத்வம்—

6 ' செல்வ நாரணன் என்ற சொல் கேட்டலும் '

இத்யாதிகளிற்படியே பாவதாரதம்யம் பார்க்கும் அளவேயாகிலும் நாம செய்யும் கிஞ்சித்காரத்தில் கௌரவ லாகவங்களைப் பாராமைககு உறுபபாம.

பரமோதாரத்வம்—அல்பமான ஆத்ம ஆத்மீயங்களைச் சோர ஆநீதநூபுர ந்யாயத்தாலே ஸமர்ப்பித்தவர்களுக்குத் தான்

7 ' எனக்கே தன்னைத்தந்த கற்பகம் '

என்கிறபடியே அநந்தமான ஆத்ம ஆத்மீயங்களை வழங்குகைக்கு உறுப்பாம்.

ஸ்தைர்ய தைர்யாதிகளுக்தும் இப்படி உபயோகம் கண்டு கொள்வது.

1, 2, 4 திருவாய் - 2-7-3—10-8-1—4-9-9 3 பெரிய திரு-4-9-9
5, 7 திருவாய்-1-10-8—2-7-11

இந் நாராயண மந்தத்தில் வ்யுத்பத்த்யாதிகள் மூலமந்த்ரத் திலே சொன்னேம்.

1 ' श्रीमन् नारायण स्वामिन् ' (ஸ்ரீமந் நாராயண ஸ்வாமிந்) இத்யாதி மந்த்ரங்களையும்,

2 ' कमलनयन वासुदेव ' (கமல நயந வாஸுதேவ)

3 ' அலர்மேல் மங்கை உறை மார்பா '

இத்யாதி ப்ரயோகங்களையும் கத்யங்களையும் பார்த்து, ஸ்ரீமச் சப்தத்தையும். நாராயண மந்தத்தையும் ஸம்புத்த்யந்தமாக்கி, ஸரண்யனே அபிமுகீகரித்து, ' தவ ' என்று ஒரு பதத்தை அத்யா ஹரித்து அந்வயித்து நிர்வஹிப்பர்கள். சரண மந்தம் அறுதி யாக ஒரு ஸமஸ்தபதம் என்றும் நிர்வஹிப்பர்கள்.

திவ்யாத்ம ஸ்வரூபம் ஸுபமேயாகிலும் ஆலம்பிக்க அரிதா கையாலே ஸுபாஸ்ரயமாய் நின்ற திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஸுஷுப்தனே ஸோஷி சேர்த் சரணௌஎன்னும்பதத்தினர்த்தம் துக்கொள்ளும் துறையைக் காட் டுகிறது சரண மந்தம்.

4 ' त्वत्पादकमलदन्यत् ' (த்வத்பாதகமலாதந்யத்)

5 ' உன் சரணல்லால் சரணில்லை '

6 ' நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன் '

7 ' நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் '

இத்யாதிகளிற்படியே அவதாரணம் இங்கே விவக்ஷிதம். ஔசித்ய க்ருபோத்தம்பகத்வ போக்யத்வாதிஸுயங்களாலே தேவ தாநவர்களுக்குப் பொதுவாய் நின்ற துயரறு சுடரடிகளைத் துவககி அமலனதி பிரான்படியே திருமேனியை முழுக்க அநுஸந்திக்கிறான். இவ்விகரஹ விஸிஷ்டனை நாராயணன்

---

1 ப்ரணத்தி மந்த்ரமந்தரம் - ஸ்ரீமந் - லக்ஷ்மியுடன் கூடினவனே! நாராயண - நாராயணனே! ஸ்வாமிந் - ஸ்வாமியே!

2 விஷ்ணு புராணம் - 3 - 7 - 39 கமல நயந - தாமரைப் புஷ் பம் போன்ற திருக்கண்களை யுடையவனே! வாஸுதேவ - வாஸு தேவனே!

3, திருவாய் - 6 - 10 - 10 7 திருவாய் மொழி - 5 10 - 11

4 ஜிதந்தே. 1-10 த்வத் பாத கமலாத் அந்யத் உன்னுடைய திருவடித் தாமரையைத் தவிர (எனக்கு ஜன்மாந்தரங்களிலும் வேறு கதியில்லை. 5 பெருமா - திரு 5-1

6 திருச்சந்த - 90.

பரவ்யூஹாதி ஸர்வாவஸ்த்தையிலும் ஸ்ரீமானுய் இருக்குமா போலே ஸுபாஸ்ரய(மு)மாயிருக்கும். இவற்றில் அர்ச்சாவதார பர்யந்தமாக உத்தரோத்தரம் ஸௌலப்யம் அதிகம்.

சரண சப்தார்த்தம்

1 ரக்ஷகத்வ மாத்ரத்தைச் சொன்னல் மற்ற அதிகாரிக்கும் பொதுவாகையாலும், க்ருஹத்தைச் சொன்னல் இங்கு அந்வயமில்லாமையாலும், ப்ராப்யத்தை விவக்ஷித்தால் உபாயம் சொல்லிற்றுகாமையாலும் உத்தரகண்டத்தோடு புநருக்திவருகையாலும் இங்கே ஸரணம் என்கிற ஸப்தம் உபாயார்த்த வாசகமாக நிஷ்கர்ஷிககப்பட்டது. 'ப்ரபத்யே' என்கிற அளவாலும் அமைந்திருக்க உபாயாந்தரஸ்த்தாந நிவேஸம் தோற்றுகைக்காகவே இங்கு ஸரண ஸப்தம் கிடக்கிறது, பக்தி ஸ்த்தாநத்திலே ப்ரபத்தியை விதியாநிற்க, உபாயாந்தர ஸ்த்தாநத்திலே ஈஸ்வரன் நிற்கிறுன் என்றது அகிஞ்சநன் நிறத்தில் க்ருபாதிஸய முடைய ஈஸ்வரன் பக்தி அநுஷ்டித்தால் அதற்குத் தரகடவ பலத்தை அல்பவ்யாஜத்தாலே தரும் என்றபடி. இப்படிப்பட்ட உபாயத்வம் இவ்வித்யைக்கு விஸேஷித்து வேத்யாகாரம். இத்திருவடிகளுக்கு உபாயத்வமாவது—

2 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'

என்ன, ஸரண்யன் உல்லஸித காருண்யனுய் பரஸ்வீகாரம் பண்ணி, 2 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின்' என்று அருள் கொடுக்கும்படி பண்ணுகை. உபாய ஸப்தம் வ்யவஹித ஸாதநத்திலும் அவ்யவஹித ஸாதநத்திலும் வர்த்திக்கும் என்னும் இடம் ஸ்ருதி ஸ்ருதி லோக ஸித்தம். ஸித்த ஸாத்யோபாயங்களிரண்டுகளும் இவ்விரண்டு ஆகாரம் ஸாத்ய பேதத்தாலே ப்ரதிபாதயதம். ஸரணய வஸீகரணமாய்ப் புருஷனுக்கு ஸாத்யமாக விதிதத ப்ரபத்தியே ஸித்தோபாயம் என்னவொண்ணுது. ஸ்ருதிகளாலே பிறந்து நிற்கிற ஸம்பந்தஜ்ஞாநமாத்ரத்தை ஸாத்யோபாயம் என்றுல் இது விதேயமல்லாமையாலும், அவிதேய ஜ்ஞாநத்தாலே

---

1 இங்கு 'சரணம் என்கிற பதம் உபாயம், க்ருஹம், ரக்ஷகன்' என்கிற மூன்றையும் குறிக்குமானுலும் இங்கு இந்த ப்ரகரணத்தில் உபாயத்தையே குறிக்கிறது' என்கிற ஸாத்வதஸம்ஹிதா வசநம் திருவுள்ளத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது.

2 திருவாய்மொழி - 6 10 - 10 3. திருவாய்மொழி 6 - 1 11)

மோக்ஷம் சொல்லும் ஸித்தாந்தத்துக்குத் துல்யமாகையாலும் ஸாங்க ப்ரபத்தியை விஸ்தரமாக விதிக்கிற ப்ரகரணங்களுக்கும் விருத்தமாகையாலும் இது கூடாது. ஆகையால்

1 ' अमृतं साधनं साध्यं ' (அம்ருதம் ஸாதநம் ஸாத்யம்)

2 ' रामो विग्रहवान् धर्मः ' (ராமோ விக்ரஹவாந் தர்மஃ)

3 ' कृष्णं धर्मं सनातनम् ' (க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்)

4 ' तदेकोपायतायाचना ' (ததேகோபாயதா யாச்நா)

5 ' त्वमेवोपायभूतो मे ' (த்வமேவோபாயபூதோ மே)

இத்யாதிகளிற்படியே ரக்ஷணோபயுக்த ஸர்வாகார விஸிஷ்டனுய்க் கொண்டு பூர்வ ஸித்தனுய் அவஸர ப்ரதீக்ஷனுய் வ்யாஜ மாத்ர ப்ரஸாதநீயனுய் நிற்கிற ஸ்ரீயஃபதியே ஸித்தோபாயம். இது பக்தி ப்ரபத்திகளைப்போல் ஒன்றுல் ஸாத்யமன்று. அங்க ப்ரபத்தி பண்ணினவனுக்குப் போலே வேறொரு சுமை எடுக்காதே அகிஞ்சநனுக்கு உபாயாந்தர ஸ்த்தாநத்திலே நிற்கிறது. தத் ப்ரஸாத மாத்ரமே ஸாத்யம். ஆகையால் ' அடைக்கலம் அடைந்தேன்' என்கிற ஸாங்கபரந்யாஸம் அதிகாரிக்குத்யம். ஸமர்ப்பித பரஸ்வீகாரம் ஸித்தோபாயமான ஈஸ்வரக்குத்யம்.

6 ' तव परोहमकारिषि धार्मिकैः '(தவபரோஹமகாரிஷிதார்மிகைஃ) என்கிறபடியே நிபுணனுக்குப் பரஸமர்ப்பணமும் ஆசார்யகருத்யம்.

---

1 விஷ்ணு தர்மம் - 72 - 4. அம்ருதம் - மோக்ஷமும். ஸாதநம் - உபாயமும், ஸாத்யம் - ப்ரயோஜநமும் (பகவானே)

2 ராமா - ஆர - 27-13 ராமோ விக்ரஹவாந் தர்மஃ- ஸ்ரீராமன் தர்ம மூர்த்தி

3 பார ஆர - 71 - 123. க்ருஷ்ணம் - க்ருஷ்ணனே, ஸநாதநம் தர்மம் - நித்யமான தர்மமாக (ப்ரஹ்மண ச்ரேஷ்டர்கள் சொல்லுகிறார்கள்.

4 பரதமுனி லக்ஷண வாக்யம்-பகவான் ஒருவனையே உபாயமாக இருக்க வேண்டும் என்று ப்ரார்த்திப்பது (சரணாகதி)

5 அஹிர், ஸம் - 37 - 31, த்வம் - நீயே, மே – எனக்கு, உபாய பூதஃ - உபாயமாக (இருக்கவேண்டும்)

6 ஸ்ரீ ரங்க ராஜ - ஸ்தவம் - 2 - 102. தார்மிகைஃ - தார்மிகர்களான - ஆசார்யர்களாலே, (நான்) தவ - உம்முடைய, பரஃ - பரமாக, (என்னை ரக்ஷிக்கும் பொறுப்பு உம்முடையதாக இருக்கும்படி) அகாரிஷி - செய்யப்பட்டேன்.

அப்போது இவ்விரண்டு விஷயத்திலும் ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யம் ஸ்வக்ருத்யம்.

ப்ரபத்யே சப்தார்த்தம்

இப்படி ஸித்தோபாய விஷயமான ஶரண ஶப்தத்தோடே அந்விதமான 'ப்ரபத்யே' என்கிற பதம் ஸாங்கபரஸமர்ப்பணத்தைக் காட்டுகிறது. ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்யவர்ஜநமும் ப்ரதம பதத்தாலேஸூசிதமாய் இங்கும் அர்த்த ஸித்தமாகிறது. இதில் கத்யர்த்தமான தாது புத்த்யர்த்தமாகையாலும், புத்தி ஶப்தம் அத்யவஸாயத்தைச் சொல்லுகையாலும் இதன் மஹத்தையை 'ப்ர' என்கிற உபஸர்க்கம் காட்டுகையாலும்மஹாவிஶ்வாஸம்சொல்லியதாயிற்று.

1 'कर्तव्यं सकृदेव' (கர்த்தவ்யம் ஸக்ருதேவ)

என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது. ப்ரபத்தி லக்ஷணவாக்யத்தின்படியே விஶ்வாஸ பூர்வக ப்ரார்த்தனையும் இங்கேயாகிறது.

2 'प्रपत्तिः विश्वासः' 'ப்ரபத்தி: விஶ்வாஸ:' என்று தொடங்கி

3 'विश्वासपूर्वकं प्रार्थनमिति यावत्' (விஶ்வாஸபூர்வகம்ப்ரார்த்தநமிதியாவத்) என்றும்,

3 'विश्वासपूर्वकं भगवन्तं नित्यकिंकरतां प्रार्थये' (விஶ்வாஸபூர்வகம பகவந்தம் நித்யகிங்கரதாம் ப்ரார்த்தயே'

என்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

4 'विश्वासो ह्यर्थः,' (விஶ்வாஸோ த்வயார்த்த:)

என்றதற்கும் இதுவே தாத்பர்யம். 'உபாயமாகப் பற்றுகிறேன்' என்கையாலே

---

1 ஸ்ரீ ந்யாஸ திலகம் - 19 ஸக்ருதேவ - ஒரு தடவையே, கர்த்தவ்யம் - செய்யவேண்டியது.

2 ப்ரபத்தி: - ப்ரபத்திஎன்பது, விச்வாஸ. - மஹா விச்வாஸம்

4 ஸ்ரீரங்கத்யம் விச்வாஸ பூர்வகம் - மஹா விச்வாஸத்துடன் கூடியவனுய். பகவந்தம் - பகவானை, நித்ய கிங்கரதாம் - (அவனுக்கு) எப்பொழுதும் தாஸனுயிருக்கும் தன்மையை, ப்ரார்த்தயே - ப்ரார்த்திக்கிறேன்.

3 விச்வாஸ பூர்வகம் - மஹா விச்வாஸத்துடன் கூடியவனுய். ப்ரார்த்தநம் இதி யாவத் - ப்ரார்த்திப்பது என்று பொருள்

4 விச்வாஸம் த்வயத்தின் அர்த்தம்,

1 'आत्मात्मीय भरन्यासः' (ஆத்மாத்மீய பரந்யாஸ:)

2 'सकृदेव प्रपन्नस्य कृत्यं नैवास्ति किंचन'

(ஸக்ருதேவ ப்ரபந்நஸ்ய க்ருத்யம் நைவாஸ்தி கிஞ்சந)

இத்யாதிகளிற்படியே அவ்விஷயதத்தில் கர்த்தவ்ய ஶேஷ நிவ்ருத்தி ஹேதுவான பரந்யாஸமும் இங்கேயாகிறது.

3 'न्यासः पंचाङ्गसंयुतः' (ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:)

4 अनेनैव तु मन्त्रेण' (அநேநைவ து மந்த்ரேண)

இத்யாதிகளாலே பரந்யாஸமே அங்கி என்னுமிடம் ஸித்தம்.

5 'प्रपत्तिं तां प्रयुंजीत स्वाङ्गैः पंचभिरावृतां'

(ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்ஜீத ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம்)

என்று அங்கமான ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளை ஸம்பாவிதஸ்வபாவம் என்பார்க்கு உத்தர காலத்தில் ஆநுகூல்யாதிகளுடைய அநியமத்திலே தாத்பர்யம். ஆகையாலே மேல் அபாயஸம்ப்லவத்திலும் அதிகார விருத்தோபாய பரிக்ரஹத்திலும் புந: ப்ரபதநம் விதிக்கிறது. கபோத நாரீ ஜங்க வானராதி வ்ருத்தாந்தங்களைப் பார்த்தால் ஶரணாகதனுக்குத் தத்காலத்தில் ஆநுகூல்யாதி நியமமின்றிக்கேயிருக்க ரக்ஷிக்கக் கண்டோமே என்னில் ? லோகத்தில் காருணிகர் தர்மாபிஸந்தி விஶேஷத்தாலே அப்படிக்கு ரக்ஷிகிறார். ஈஶ்வரன் ரக்ஷிக்கும்போது தன்னுடைய நியோகத்தை யதாவத் அநுஷ்டிப்பித்து ரக்ஷிக்கும். இங்கு உத்தமன்

---

1 லக்ஷ்மீ தந்த்ரம் - 17 - 79 ஆத்மாத்மீய பரந்யாஸ: - தன்னுடைய ஆத்மா, தன்னைச் சேர்ந்த வஸ்துக்கள் (இவைகளின் ரக்ஷணபரத்தை ஸமர்ப்பிப்பது சரணாகதி)

2 ஸக்ருதேவ - ஒரு தடவை ப்ரபந்நஸ்ய - ப்ரபத்தி செய்தவனுக்கு, க்ருத்யம் - மேல் செய்யவேண்டிய க்ருத்யம், கிஞ்சந ஒன்றும், நைவாஸ்தி - இல்லை.

3 லக்ஷ்மீ தந்த்ரம் - 17 - 84 ந்யாஸ: - சரணாகதி, பஞ்சாங்க ஸம்யுத: - ஐந்து அங்கங்களுடன் கூடியது;

4 ஸாத்யகி தந்த்ரம். அநேநைவ து மந்த்ரேண - இந்த மந்த்ரத்தினாலேயே (ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பிக்கவேண்டும்.)

5 ஸ்வாங்கை: பஞ்சபி:-தன் ஐந்து அங்கங்களுடன், ஆவ்ருதாம்-சேர்ந்திருக்கிற, தாம் - அந்த, ப்ரபத்திம் - ப்ரபத்தியை, ப்ரயுஞ்ஜீத - செய்யவேண்டும்

1 ' अहमस्यपराधानामालयोऽकिंचनोऽगतिः '

(அஹமஸ்ம்யபராதாநாம் ஆலயோ கிஞ்சநோ5கதிः)

2 ' अकिंचनोऽनन्यगतिः ' (அகிஞ்சநோ5நந்யகதிः)

இத்யாதிகளில் சொன்ன அதிகார விஶேஷத்தோடும் கார்ப் பண்யமாகிற அங்கத்தோடும் கூடின பர ஸமர்ப்பணத்தில் கர்த் தாவான தன்னைக் காட்டுகிறது.

3 ' அதுவும் அவனது இன்னருளே '

4 ' ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் ,

இத்யாதிகளிற்படியே ப்ரபத்தியும் அவனடியாக வந்தது என்று அநுஸந்தேயம். இப் ப்ரகாரத்தை

5 ' स्वयं वस्तूकुर्वन् जनमिममकस्मात् सरसिजसंकाशौ पद्मायास्तव च चरणौ नः शरणयन् '

(ஸ்வயம் வஸ்தூகுர்வந் ஜநமிமம் அகஸ்மாத் ஸரஸிஜ ப்ரகாஶௌ பத்மாயாஸ் தவ ச சரணௌ நः ஶரணயந்)

என்று லக்ஷ்மீ கல்யாணத்தில் நம்மாழ்வார் பாசுரமாக பட்டர் அருளிச்செய்தார். தத்த்வ ஜ்ஞாநமடியாக வருகிற பல ஸங்க கர்த்ருத்வ த்யாகபூர்வகமான அநுஷ்டாநம் நிவ்ருத்தி தர்மங் களான கர்ம யோகாதிகளிலும் ப்ரபதநத்திலும் துல்யம். உத்தர க்ருத்யத்தில் உபாயத்வ த்யாகம் விஶேஷித்திருக்கும். 'ப்ரபத்யே' என்கிற வார்த்தமாந நிர்த்தேசம் ஸாங்காநுஷ்டாந க்ஷணத்தை காட்டுகிறது. உபாஸநத்தில் (ஸக்ருத் க்ருதः ஶாஸ்த்ரார்த்தः) என்கிற ந்யாயத்திற்குச் சில வசநங்களால் விரோதம் உண்டா யிற்று. இங்கு அநுக்ரஹமே உள்ளது. இது

---

1 அஹிர் - ஸம் - 37 - 30 அஹம் - நான், அபராதாநாம்-அப ராதங்களுக்கெல்லாம், ஆலயः - இருப்பிடமாகவும், அகிஞ்சநः-அகிஞ் சனனும். அகதिः - வேறு கதியில்லாதவனும், அஸ்மி - ஆகிறேன் ,

2 ஆள - ஸ்தோ - 22 அகிஞ்சனன். வேறு கதியில்லாதவன்,

3 திருவாய் - 8 - 8 - 3 4 தி நவாய் - 5 - 7 - 10

5 இமம் ஜநம் - இந்த ஜனத்தை அதாவது நம்மை, அகஸ்மாத் - தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே. ஸ்வயம் - தானே, வஸ்தூ குர்வந் - தனக்குச் சேஷமாக்கிக் கொண்டு, ஸரஸிஜ ப்ரகாஶௌ தாமரைப் புஷ்பம் போன்ற. பத்மாயாः - லக்ஷ்மியாகிற. தவச உம்முடை யவும், சரணௌ - திருவடிகளை, நः- எங்களுக்கு, சரணயந்-உபாயமா கச் செய்து.

1 ' सकृदेव प्रपन्नाय ' (ஸக்ருதேவ ப்ரபந்நாய)

2 ' सकृदेव हि शास्त्रार्थः ' (ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்தः)

3 'यः सकृत् शरणं गतः '(யः ஸக்ருத் ஶரணம் கதः)

4 ' ननु प्रपन्नः सकृदेव नाथ ' (நநு ப்ரபந்நः ஸக்ருதேவ நாத)

5 ' सकृत् प्रार्थना मात्रेण ' (ஸக்ருத் ப்ரார்த்தநா மாத்ரேண)

இத்யாதிகளாலும் காகாஸுராதி வ்ருத்தாந்தங்களாலும் ஸித்தம். இப்படி க்ஷணக்ருத்யமான ந்யாஸ யாகத்திற்கு நைரபேக்ஷ்யம் தோற்றுகைக்காகக் கேவலம் பகவத் ஸங்கல்ப ஸாத்யமான மரணத்தை அவப்ருதம் என்கிறது. இதற்கு இவன் மேல் இருந்து செய்யும் அநுகூல வ்ருத்த்யாதிகள் ஒன்றும் இதற்கு அங்கமன்று என்கையிலே தாத்பர்யம்.

இப்பூர்வ கண்டத்தில் ப்ரகாசித்த பரந்யாஸத்தை அநுஷ்டிக்குமவனுக்குத் தத்வஜ்ஞாநாதி ஸம்பாதநம் பூர்வ க்ருத்யம். ஆநுகூல்ய ஸங்கல்பாதி தத்கால க்ருத்யம், ஸ்வயம் ப்ரயோஜநமான நிரபராத கைங்கர்யம் உத்தரக்ருத்யம். பூர்வக்ருத்ய விகலன் அதிகாரியல்லன், தத்கால க்ருத்ய விகலன் க்ருதக்ருத்யனல்லன். உத்தரக்ருத்ய விகலன் க்ருதார்த்தனல்லன். இப்படி விகலரானவர்களும்

6 ' कथंचिदुपकारेण कृतेनैकेन तुष्यति '

(கதம்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி)

என்கிறபடியே க்ருதஜ்ஞனை ஶரண்யனுடைய க்ருபையாலே கேவலேன பூர்ணராவார்கள்.

7 ' सकृज्जप्तेन मन्त्रेण (ஸக்ருத்ஜப்தேந மந்த்ரேண)

---

1 சாஸ்த்ரார்த்தः - சாஸ்த்ரார்த்தமானது, ஸக்ருத் க்ருதः - ஒரு தடவை அநுஷ்டித்தால் போதும்.

2 ராமா - யுத்த - 18 - 33 ஸக்ருதேவ ப்ரபந்நாய - ஒரு தடவை ப்ரபத்தி செய்தவனுக்கு(நான் அபயம் கொடுக்கிறேன்)

3 ஸகृத் - ஸம் - யः - எவன், ஸக்ருத் - ஒரு தடவை, சரணம்கதः -சரணம் அடைந்தானே.

4 ஒரு தடவை ப்ரார்த்திப்பதினாலேயே

5 ராமா - அயோ - 1 - 14 க்ருதேந - செய்யப்பட்ட, ஏகேந - ஒன்றான, கதம்சித் - மிகவும் அல்பமான உபகாரேண - நல்ல காரியத்தினால், துஷ்யதி - ஸந்தோஷம் அடைகிறான்.

6 ஒரு தடவை ஜபிக்கப்பட்ட மந்த்ரத்தினால்

என்று ஸாத்யகிதந்த்ரத்தில் சொன்னது இங்கும் துல்யமிறே,

1 ' भव शरणमितीरयन्ति ये वै ' (பவ ஶரணம் இதீரயந்தி யே வை)

2 ' येन केनापि प्रकारेण द्वय वक्ता त्वं '

(யேந கேநாபி ப்ரகாரேண த்வய வக்தா த்வம்)

3 'एतदुच्चारण मात्रावलम्बनेन ' (ஏததுச்சாரண மாத்ராவலம்பநேந)

4 ' प्रपत्तिवाचैव ' (ப்ரபத்திவாசைவ)

இத்யாதிகளிலும் இதன் ப்ரபாவம்கண்டு கொள்வது.

5 ' सकृच्चरितं येन हरिरित्यक्षरद्वयं '

(ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷர த்வயம்)

என்கிறபடியே லகுவான இரண்டு அக்ஷரங்களை உச்சரிக்க, இட்ட படை கல் படையானால், குருதரமான இவ்வாக்ய த்வயத்தை உச்சரித்தவனுக்கு இது கேட்கவேண்டுமோ ? தமஸ் ஸாலும் ரஜஸ்ஸாலும் வரும் கலக்கம் அறுகையாலே

6 ' पारमार्थिकी ' (பாரமார்த்திகீ) 7 ' यथावस्थिता ' (யதாவஸ்த்திதா) என்னும்படியான பரிபூர்ண ப்ரபத்தி பண்ணினவனுக்குத் தான் கோலி(ரி)ன பலம் தான் கோலி(ரி)ன காலத்திலே ஸித்திக்கும். இது ஸகல பலஸாதநம் எனனுமிடம்

8 ' तावदार्थिः तथा वांछा तव मोहः तथाऽसुखं '

(தாவதார்த்திஸ் ததா வாஞ்ச்சா தாவந் மோஹஸ் ததா ऽஸுகம்)

---

1 விஷ்ணு புராணம் - 3 – 7 - 33. யே - எவர்கள், பவ சரணம் - (நீர்) சரணமாக இருக்கவேண்டும், இதி - என்று, ஈரயந்தி - சொல்லுகிறார்களோ.

2 சரணாகதி கத்யம் யேநகேநாபி ப்ரகாரேண - ஏதாவது ஒருவிதமாய்)த்வயவக்தா - த்வயத்தைச் சொல்லுகிற, த்வம் - நீ.

3 ஸ்ரீ ரங்க கத்யம் ஏதத் - இந்த. உச்சாரண மாத்ர - சொல்லுவது மாத்திரத்தை, அவலம்பநந - அவலம்பமாகக்கொண்டு.

4. வரதராஜ ஸ்தவம் - 92 - ப்ரபத்தி வாசைவ - ப்ரபத்தியின் வார்த்தையைச் சொல்லுவதினாலேயே.

5. விஷ்ணு தர்மம் - 10 - 34. யேந - எவனால், ஹரிः - இதி ஹரிः என்கிற அக்ஷர த்வயம் - இரண்டு அக்ஷரம் ஸக்ருத் - ஒரு தடவை, உச்சரிதம் - உச்சரிக்கப்பட்டதோ, (அவன் மோக்ஷத்தைக் குறித்துப்போக முதல்படி நடக்க ஆரம்பித்துவிட்டான்)

6. 7 சரணாகதி கத்யம் - பாரமார்த்திகீ - உண்மையாயிருப்பதும், யதாவஸ்த்திதா - உள்ளபடியே இருக்கிறதுமான

8 விஷ்ணு புராணம் 1 - 9 - 33 (எதுவரையில் உம்முடைய திருவடித் தாம்ரைகளில் சரணாகதி செய்யவில்லையோ) தாவத் - அது வரையில் தான், ஆர்த்திः - இழந்த பொருள் கிடைக்கவேண்டும் என்கிற ஆசை, ததா - அடபடியே, (அது வரையில்தான்) வாஞ்ச்சா-புதிய பொருள் வேண்டும் என்கிற ஆசை, தாவத் - அது வரையில், மோஹः

1 'यत्र कामकामेन' (யத் யேந காமகாமேந)
இத்யாதிகளிலும், காக விபீஷண கபோத ஸுமுக த்ரௌபதீ கஜேந்த்ர க்ஷுத்தர பந்து முசுகுந்தாதி வ்ருத்தாந்தங்களிலும் காணலாம

2 வினைவிடுத்து வியன் குணத்தால் எம்மையாக்கி
வெருவுரை கேட்டு அவை கேட்க விளம்பி * நாளும்
தனையனைத்தும அடைந்திடத் தான் அடைந்து நின்ற
தன திருமாதுடன் இறையும் தனியா நாதன் *
நினைவழிக்கும வினை வழிக்கு விலக்காய் நிற்கும்
நிகரில்லா நெடும் குணங்கள் நிலைபெறத் * தன்
கனைகழற்கீழ் அடைக்கலமாம காட்சி தந்து
காரணனும் தன் காவல் கவர்(ல்)கின்றனே. 8

- மோஹம், ததா - அப்படியே (அது வரையில்), அஸுகம் - துக்காதிகள (உண்டாகும)

1 அஹிர் - ஸம். 37 - 25. காம காமேந - காம்யபலத்தில் ஆசையுள்ள, யேந - எவனால், யத் - எந்த (பலம் அடையப்படவில்லையோ அந்தப் பலம் சரணாகதியினால் அடையப்படுகிறது.)

2 வினை விடுத்து - பாபங்களின் பலமான அஜ்ஞானம் முதலியவைகளைப் போக்கி, வியன் - மேன்மையையுடைய, குணத்தால் - குணங்களினால், எம்மை - நம்மை, ஆக்கி - ஜ்ஞானாதிகளையுடையவனாக்கச் செய்து, வெருவுரை - ஆர்த்த த்வனியை, கேட்டு - தான் சரவணம் செய்து, அவை - அவற்றை, கேட்க - (பகவான்) கேட்கும்படி, விளம்பி - சொல்லி நாளும் - என்றும், தனை - தன்னை, அனைத்தும் அடைந்திட - எல்லாரும் ஆச்ரயிக்க, தான், அடைந்துநின்ற - பகவானை ஆச்ரயித்து நிற்கும், தன திருமாதுடன் - தனக்கும் ஸம்பத்தைக் கொடுக்கக்கூடியவளான பெரிய பிராட்டியாருடன், இறையும் - ஒரு க்ஷணமும், தனியா - பிரிந்திராத, நாதன் - ஸ்வாமியான பகவான், நினைவு - ஸ்ம்ருதியை, அழிக்கும் - நாசம் செய்கிற, வினை வழிக்கு - பாப மார்க்கத்திற்கு, விலக்காய் - தடையாய, நிற்கும் - நிற்கிற, நிகரில்லா - ஒப்பில்லாத, நெடும் குணங்கள் - அதிசயிதங்களான குணங்கள், நிலை பெற - ஸ்திரமாய் நிற்பதற்காக. தன் - தன்னுடைய, கனை - வீரச் சிலம்புகள் சப்திக்கும், கழல் கீழ் - திருவடிகளின் கீழே, அடைக்கலமாம் - ரக்ஷ்யவஸ்துவாகிற, காட்சி தந்து - பெருமையைக் கொடுத்து, காரணமாம் - ஜகத் காரணமான தன்னுடைய, காவல் - ரக்ஷகத்வத்தை, கவர்கின்றனே - நிலை நிறுத்திக் கொள்ளுகிறான். 'விளம்பினாளும்' என்று பாடாந்தரம், சொல்லுகிறவள் என்றர்த்தம்.

இப்படி ஸர்வ புருஷார்த்தங்களையும் ஸாதிக்கவற்ருன உபாயம இங்கு எதுக்காக? என்ன

1 'கண்டு கேட்டு'

என்கிற பாட்டின்படியே க்ஷேத்ரப்ரயோஜநங்களோடு துவக்கற்ற புருஷார்த்த விரோதத்தைக் காட்டுகிறது உத்தர கண்டம்.

இதில் ஸ்ரீமத் ஸப்தம்

1 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப'

2 'கோலத்திருமாமகளோடு உன்னை'

எனகிறபடியே நிரதிசய போகயமான ஸேஷித்வத்வம்

3 'भवांस्तु सह वैदेह्या' (பவாம்ஸது ஸஹவைதேஹ்யா)

4 'तया सहाऽऽसीनमनन्तभोगिनि' (தயா ஸஹாஸீநமநந்தபோகிநி)

இத்யாதிகளிற் சொன்ன சேர்த்தியிலே கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாய்க் கொண்டு நித்ய யுக்தமாய் நிறகிற நிலையைக் காட்டுகிறது. ஸ்ருத்யாதிகளிலே ஸர்வ விசிஷ்டன் ப்ராப்யனைச் சொலலியிருகக

5 'नानयोः विद्यते परं, (நாநயோர்வித்யதே பரம்)

6 'अस्यामम च शेषं हि विभूतिरुभयात्मिका'

1, 2, திருவாய - 4 - 9 - 10—5 - 9 - 3.

3 ராமா - அயோ - 31-27 வைதேஹ்யாஸஹ - ஸீதையுடன் கூட பவாந் - தேவரீர் (மலை, காடு முதலிய இடங்களில் ஸந்தோஷமாக விளையாடும் பொழுது நான் எல்லாக் கைங்கர்யங்களையும் செய்யப் போகிறேன்)

4 ஆள - ஸ்தோ - 39 அநந்த போகிநி - ஆதிசேஷனுகிற திருப்பளளி மெதையின்மேல், தயாஸஹ - அந்த லக்ஷ்மியுடன் ஆஸீநம் - வீற்றிருக்கும் தேவரீருக்கு (நான ஸர்வவித கைங்காயங்களையும் செய்யப்போகிறேன்)

5 விஷ்ணு புராணம் 1 - 8 - 35 (எல்லா ஆண்பாலர்களுக்கும் பகவான் யஜமானன். பெண்பாலர்களுக்கு எலலாம லக்ஷ்மி யஜமானி) அநயோ: - இவாகள இருவரைத் தவிர, பரம் - வேறு ஒன்று நவித்யத்த - காணப்படவில்லை, இந்த மிதுனம்தான பரதேவதை என்றபடி,

6 விஷ்வக் ஸம் - உபயாத்மிகா விபூதி: - நித்யவிபூதி, லீலா விபூதி எனப்படும் இரண்டு விபூதிகளும், அஸ்யா: - இந்த லக்ஷ்மிக்கும், மம ச - எனக்கும், சேஷம் - வசப்பட்டது.

(அஸ்யா மம ச மோக்ஷம் ஹி விபூதிரூபாத்மிகா)

1 ' उभयाधिष्ठानं चेक्षं शेषित्वं '

(உபயாதிஷ்ட்டாநம் சைகம் மோக்ஷித்வம்)

இத்யாதிகளாலே சொன்ன வாசி தோற்றுகைக்காகவிறே இங்கே விமோக்ஷித்து எடுக்கிறது. ஸ்ரீ(மச்)சப்த நிருக்திகளில் ப்ராப்யதைக்கு உறுப்பானவற்றை இங்கே அநுஸந்திப்பது .

ஸர்வமோக்ஷியான தத்த்வம் ப்ரதாந ப்ராப்யமானாலும் ப்ராப்தாவின் ஸ்வரூபம் முதலான ஸர்வ விமோக்ஷணங்களும் ப்ராப்ய கோடிகடிதங்களாய் நிற்கிற நாராயண சப்தார்த்தம் நிலையைக் காட்டுகிறது இங்குற்ற நாராயண சப்தம். தேமகால புருஷ பேதத்தாலே பண்டு பஹுவிதமான ஆநுகூல்ய ப்ராதிகூல்பாதிகளை அடைந்தவை' ஸர்வோபாதிகளும் கழிந்தவனுக்கு ஸ்வாமி விபூதியான ஆகாரத்தாலே அத்யந்த அநுகூலங்களாய் இருக்கும். அநந்தாத்மாக்களுக்கும் வரும் ஐச்வர்யாத்மாநுபவ ரஸத்தை யெல்லாம் சேரப் பார்த்தாலும் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ ரூபமான திருப்பாற் கடலில் ஒரு நிவலுக்கும்பற்றாது. கைங்கர்ய விமோக்ஷங்களுக்கு இலக்காகப் பர்யங்க வித்யாதிகளில் சொன்ன திவ்ய மங்கள விகரஹமும் இங்கே விமோக்ஷித்து அநுஸந்தேயம்.

2 'தன்மை பெறுத்தித்தன் தாளிணைக்கீழ்கொள்ளுமப்பன்'

என்றும், 3 ' தன் தாளிணைக்கீழ் சேர்த்து'

என்றும்,

4 ' मदीयमूर्धानमलङ्करिष्यति ' (மதீய மூர்த்தாநம் அலங்கரிஷ்யதி)

என்றும் சொல்லுகிறபடியே திருவடிகளுக்கும் ஆதாரபத்மத்துக்கும் நடுவிறே முக்தருக்கு ஸ்வதஃ ப்ராப்தமான இருப்பிடம்

இப்படி ஸர்வ மோக்ஷித்வ ஸர்வ ப்ரகார நிரதிசய போக்யத்

---

1 ஷடர்த்த ஸங்க்ஷேபம், சேஷித்வம் - சேஷித்வம் என்பது ஏகம்- ஒன்று (இது) உபயாதிஷ்ட்டாநம் - லக்ஷ்மி பகவான் எனப்படும் இருவர்களிடமும் இருக்கிறது,

2 3 திருவாய் மொழி - 3 - 7 - 7—7 - 5 - 10.

4 ஆள - ஸ்தோ - 31 - (உம்முடைய திருவடித் தாமரைகள்) மதீய மூர்த்தாநம் - என்னுடைய சிரஸ்ஸை, கதா - எப்பொழுது அலங்கரிஷ்யதி - அலங்கரிக்கப்போகிறது?

த்வங்களைப் ப்ரதாநமாகப் ப்ரகாசிக்கிற பதங்களில் சதுர்த்தி தாதர்த்த்யமாத்ரத்தை சொன்னால் கீழ்ச்சொல்லுகிற உபாயத்தோடு சேர்த்தி இல்லாமையாலே நித்ய ஸித்தமான இத்தாதர்த்த்யத்துக்கு அநுரூபமாய் நிருபாதிக அநுபவ பரீவாஹமாய் பைபரீத்யாதிரஹிதமாய் ஸர்வ தேஶாதி யோக்யமான யதாபிமத ஸர்வவித கைங்கர்யத்தையும் காட்டுகிறது. இதின் ப்ரார்த்தனைக்கு இங்கே ஒரு க்ரியா பதம் அத்யாஹார்யம்.

1 ‘ कुरुष्व मामनुचरं ’(குருஷ்வமாம் அநுசரம்)

2‘ வானுயரின்பம் மன்னி வீற்றிருந்தாய்
அருளு நின் தாள்களை எனக்கே ’

3‘ நின்தாளிணைக்கீழ்வாழ்ச்சியான்சேரும்வகை அருளாய்’

4 ‘ नित्यङ्किङ्करो भवानि ’(நித்ய கிங்கரோ பவாநி)

இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

நமः சப்தார்த்தம்

இப்படி ப்ரார்த்தநீயமான பரமபுருஷார்த்தம் அவித்யா கர்மாதியான அநிஷ்ட வர்க்கத்தினுடைய அத்யந்த நிவ்ருத்தி பூர்வகமாகையாலே அல்லாத புருஷார்த்த அநுபவ தஶையில் வரும் ஸ்வாதீந ஸ்வரூபத்த கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரம ரூபமான கனையற்று,

5 ‘ தனக்கேயாக எனைக்கொள்ளும் ’

இத்யாதிகளிற்படியே நிற்கும் நிலையை இங்குற்ற நமஸ்ஸு காட்டுகிறது. இதுவும் திருமந்த்ரத்தில் ஸூக்ஷ்ம யோஜனையில் போலேஇரண்டெழுத்தும் இரண்டுபதமாய், அத்யாஹரித்தகரியா பதத்தோடே அந்வயித்து ஒரு வாக்யமாகிறது. இப்படி ஸஹதர்மசாரிணீ ஸம்பந்தமும், இதனுடைய நித்யதையும, ரக்ஷணே பயுக்த குணதிகளும், ஸுபாஶ்ரய விக்ரஹமும், இவற்றாலே விஶிஷ்டனுடைய உபாய பாவமும், இவனுடைய வஶீகரணமும, இது ஸக்ருத் கர்த்தவ்யமானபடியும், இதின் அதிகாரி விஶேஷ

---

1 ராமாயணம் அயோ - 31 22 மாம் - என்னை அநு - அநுரூபம் - பின் தொடர்ந்து அடிமை செய்பவனாக ,குருஷ்வ- செய்துகொளரு.

2 3 திருவாய் மொழி - 8 - 1 - 9—3 - 2 -4

4 சரணாகதிகத்யம் நித்ய கிங்கரः - எப்பொழுதும் கைங்கர்யம் செய்பவனாய், பவாநி - ஆகப்போகிறேன்

5 திருவாய் மொழி 2 - 9 - 4

மும், ஸர்வ ஸேஷி ஸபத்நீகனுய்க் கொண்டு கைங்கர்யப் ப்ரதி ஸம்பந்தியான படியும், ஸர்வ விஸிஷ்டனுடைய நிரதிஸய போக யதையும், அவன் திறத்தில் ஸ்வரூபாநு ரூபமான ஸ்வச்சந்த கைங்கர்யமும், இது அஹங்காராதி ரூபமான கனியற்று நிற்கிற நிலையும், இப்படிப் பரிஸுத்தமான கைங்கர்யத்தினுடைய ப்ராப்த தனையும் அடைவே ப்ரகாசிக்கின்றன.

இதின் அவாந்தர வாக்கியங்கள் மூன்றையும் சேர்த்நால் த்வயத்தின் வாக்யார்த்தம் 'அநந்யார்ஹ ஸேஷ பூதனுய்' அகிஞ்சநனை நான் ஸ்ரீமானை நாராயணன் திருவடிகளில் ஸர்வவித தோஷ ரஹிதமாய் ஸ்வரூபி மதமான ஸர்வவித கைங்கர்ய வர்க்கத்தையும் பெறுகைக்கு ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளையே உபாயமாகக் கொண்டு யதோக்தமான ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணுகிறேன் என்று ஒரு வாக்யார்த்தமாகிறது.

இவ்வர்த்தாநுஸந்தாநம் உபாயதஸையில் ஸக்ருத்தாய் க்ருதக்ருத்யதா ஹேதுவாய் இருக்கும். ஸ்வயம் ப்ரயோஜந மான உத்தரக்ருத்யத்தில் ஸதாவாய் க்ருதார்த்ததா ஹேதுவாய் இருக்கும். இதில் பூர்வ கண்டத்தில் அநந்யோபாயத்வமும் உத்தர கண்டத்தில் அநந்ய ப்ரயோஜநத்வமும், இரண்டிடத்தி லும் அநந்யார்ஹ ஸேஷத்வமும் ஸித்திக்கிறது. இப்படி இங் கும் அங்கும் திருமாலன்றியின்மை கண்டவன் த்வய நிஷ்டன்.

1, என்னதியான் செய்கின்றேன் என்னுதாருக்கு
இன்னடிமை தந்தளிப்பான் * இமையோர் வாழும்
பொனுலகில் திருவுடனே அமர்ந்த நாதன
புனலாரும் பொழிலரங்கம் திகழ மனனித் *
தன் அகலம் அகலாத தகவால் ஓங்கும்
தகவுடனே தனகருமம் நாயி னேணி *
என்னை நய அடைக்கலம்கொண்டு அந்நல்நந்து என்
அழலாற நிழலார அளிக்கின்ருனே. 9

த்வயாதிகாரம் எனனும்
இரண்டாவது அதிகாரம் முற்றிற்று.

---

1 என்னது - இது என்னுடையது, யான் செய்கின்றேன் - (இந்தக் கர்மத்தை) யான் செய்கிறேன் என்னுதாருக்கு - என்று சொல்லா

சரமஸ்லோகாதிகாரம் என்னும் மூன்றும் அதிகாரம்

[சரமச்லோக க்ருத்யம்—ஸர்வதர்ம சப்தார்த்தம்—பரித்யஜ்யசப்தார்த்தம்—மாம் ஏகம் சப்தார்த்தம்—மாம் சப்தார்த்தம்—ஏக சப்தார்த்தம்— சரணம் வ்ரஜ சப்தார்த்தம்—நிர்ஹேதுக க்ருபா ரக்ஷண ப்ரகாரம்—பராதீநகர்த்ருத்வ ப்ரகாரம்—சரண்யக்ருத்யம்—அஹம் சப்தார்த்தம்—த்வா சப்தார்த்தம்—ஸர்வபாபேப்யः சப்தார்த்தம்—மோக்ஷயிஷ்யாமி சப்தார்த்தம்—ஸர்வ பாப நிவ்ருத்தி ப்ரகாரம்—மாசுசः சப்தார்த்தம்—சரம ச்லோகத்தின் திரண்ட பொருள்—ப்ரபத்தியின் ஸர்வ பலஸாதநத்வம்—ரஹஸ்யः த்ரயார்த்த ஜ்ஞாந ப்ரயோஜநம்.]

1 ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி
ஒருநினைவால் ஈன்ற உயிர் எல்லாமுய்ய *
வண்டுவரை நகர்வாழ வசுதேவர்க்காய்
மன்னவர்க்குத் தேர்ப்பாகனுகி நின்ற *
தண்டுளவ மலர்மார்பன் தானே சொன்ன
தனித்தருமம் தானெமக்காய்த் தன்னை * என்றும்
கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற
கண் புதையல் வியோயாட்டைக் கழிக்கின்றிலே 9

மல் இருப்பவர்களுக்கு அதாவது அஹங்கார மமகாரம் இல்லாதவர்களுக்கு, இன்னடிமை - போக்யமான தாஸ க்ருத்யத்தை. தந்து - கொடுத்து, அளிப்பான் - ரக்ஷிக்க வேண்டும் என்கிற ஆசையுடையவனுய். இமையோர் - நித்ய ஸூரிகள், வாழும் - வஸிக்கிற. பொன் பொன்னைப் போல். எல்லோரும் ஆசைப்படக்கூடிய, உலகில் - லோகத்தில். நித்ய விபூதியில் என்றபடி. திருவுடனே - லக்ஷ்மியுடன், அமர்ந்த நாதன் - வீற்றிக்கும் பகவான், புனல் - ஜலத்தினுல், ஆர் - பூர்ணமான, பொழில் - உத்யான வனங்களுள்ள, அரங்கம் - ஸ்ரீரங்கத்தில் திகழ - ப்ரகாசிக்குமபடி. மன்னி - ஸ்திரமாய் திருக்கண் வளர்ந்தருளி, திகழும்படி மன்னி என்றுகவுமாம். தன் அகலம் - தன் திருமார்பைவிட்டு, அகலாத - பிரியாத, தகவால் - பிராட்டியால் ஒங்கும் - ப்ரகாசிக்கிற, தானே - ரக்ஷகனுயும். ஸ்வதந்த்ரனுயும் இருக்கிற தானே தன் கருமம் - தன் கார்யமான ரக்ஷணத்தை, தகவுடனே - க்ருபையுடனே, எண்ணி, என்னை, நய அடைக்கலம் கொண்டு - இன்பத்திற்கு இடமாகிய ரக்ஷ்ய வஸ்துவாக, 'அன்னையென' அன்னையும்' பாடாந்தரம், அங்கீகரித்து, அஞ்சல் தந்து - அபயப்ரதாநம் பண்ணி. என் அழலாற - என்னுடைய தாபத்ரயமாகிற அக்னி ஆறும்படி. நிழல் - தன் திருவடியாகிற, நிழலை, ஆர - பூர்ணமாக அளிக்கின்றான் - கொடுக்கின்றான்.

1 ஒண் - அழகிய, தொடியாள் - தோடாக்களையுடைய, திருமகளும் - லக்ஷ்மியும், தானுமாகி. ஒரு - ஏகரூபமான, நினைவால் - ஸங்கல்பத்தினுல், ஈன்ற - ஸ்ருஷ்டித்த. உயிர் எல்லாம் - ஜீவாத்மாக்கள் எல்லோரும், உய்ய - உஜ்ஜீவிக்க, வண் - விலக்ஷணமான, துவரை நகர் த்வாரகா புட்டணம், வாழ - வாழும்படி, வசுதேவர்க்காய் - வஸு

1 ' एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः ।
नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मथुरां पुरीम् ।। '
(ஏஷ நாராயண: ஸ்ரீமாந க்ஷீரார்ணவ நிகேதந:
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்)
இத்யாதிகளிற்படியே ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் ஸாதுபரித்ராணதிகளுக்காக வந்து அவதரித்தருளி, ஸகலபனுய், ஸரணாகத ச்லோக க்ருத்யம் கதரான பாண்டவர்களுக்கு இனனா தூதன் என நின்று அர்ஜுனனே ரதியாக்கித் தான் ஸாரதியாய் அவனுக்கு விதேயனுய் நின்ற அளவிலே, தன்னே நிமித்தமாகக கொணடு தன ப்ரதிபக்ஷங்களே ஸர்வேச்வரன நிரஸிக்க நிற்கிற நிலையைக் கண்ட அர்ஜுனன் பந்து விநாச நிச்சயத்தாலும் அஸ்த்தான ஸ்நேஹாதிகளாலும் கலங்கி தர்ம புபுத்ஸையாலே ஸரணாகதனுய்,

2 ' यत् श्रेयः स्यात् निश्चितं ब्रूहि तन्मे '
(யச்சரேய:ஸ்யாத நிச்சிதம் ப்ரூஹி தந் மே)
என்று விண்ணப்பம் செய்ய, இவனுடைய சோக நிவ்ருத்

தேவாக்குப் புத்திரனுய், மன்னவர்க்கு - ராஜாக்களாகிய பாண்டவர்களுக்கு தோப்பாகனுகி நின்ற-ஸாரதியாய் இருந்தருளிய, தண் - சீதளமான, துளவ மலா மாபன் – திருத்துழாய்ப் புஷ்பங்களினுல் அலங்கரிக்கப்பட்ட திருமார்பை யுடைய ஸ்ரீ க்ருஷ்ணன், தானே சொன்ன - ஸ்வயமே கூறிய. தனித்தருமம் - அத்விதீயமான ஸித்தோபாயம், தான் - தானே, எமக்காய் - அகிஞ்சநர்களான நமக்கு உபாயாந்தர ஸ்த்தாநத்திலே நின்றவனுய், என்றும் - எல்லாக் காலத்திலும் தன்னே - உபய விபூதி விசிஷ்டனன தன்னே கண்டு - பார்த்து. களித்து - ஆநந்தபட்டு, அடிசூட - அவன் திருவடிகளே சிரஸா வஹிக்க, விலக்காய் நின்ற - தடையாகி நினற. கண புதையல் விளையாட்டை - கண்ணும்பூச்சி விளையாட்டை - கழிக்கின்ருன் - போக்குகிருன்.

1 ஹரிவம்சம் - 113 - 62 க்ஷீரார்ணவ நிகேதந: - திருப்பாற் கடலே வாஸஸ்த்தாநமாகவுடைய, ஏஷ: - இந்த ஸ்ரீமாந் நாராயண:- ஸ்ரீமானன நாராயணன், நாகபர்யங்கம் - ஆதிசேஷனுகிய படுக்கையை, உத்ஸ்ருஜ்ய-விட்டு, மதுராம்புரீம் - மதுராபுரிக்கு, ஆகத ஹி- வந்திருக்கிருர்.

2 கீதை - 2 - 7 யத் - எது. ச்ரேய - நன்மையாக, ஸ்யாத் - ஆகும், (என்று), நிச்சிதம் - நிச்சயிக்கப்பட்டதோ, தத் - அதை, மே - எனக்கு, ப்ரூஹி - சொல்லும்.

திகமாக தேஹாதி விலக்ஷணமாய்ப் பரமோஷ்நைகரஸமான நித்யாத்ம ஸ்வரூபததை அருளிச் செய்து, ஸ்வரூபம் தெளிந்த வனுக்குத் தர்மங்களில் ப்ரதாநமான நிவ்ருத்தி தர்மங்களையும் உபதேஸிகத்தொடங்கி, பரமபுருஷார்த்தத்துகுப்பரம்பரையாய் காரணங்களான கர்மயோக ஜ்ஞாந யோகங்களையும், ஸாக்ஷாதுபாயமான பக்தி யோகத்தையும் ஸபரிகரமாக உபதேஸித்து

1 'मन्मना भव' (மன்மநா பவ)

என்கிற ஸ்லோகத்தாலே நிகமித்து நின்ற அளவிலே, முன்பு

2 'दैवी संपत् विमोक्षाय निबन्धायासुरी मता'

(தைவீ ஸம்பத விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா)

என்றுதைவாஸுர விபாகம சொன்ன அளவிலே தானே அர்ஜுநனுடைய ஸோகத்தைக கண்டு

3 'मा शुचः संपदं दैवीमभिजातोसि पाण्डव'

(மா ஸுசः ஸமபதம் தைவீமபிஜாதோஸி பாண்டவ)

என்று தேற்றினாற்போல, இப்போதும பரம புருஷார்த்தத்தைக் கடுகப பெறுகையில் த்வரை உணடேயாகிலும, ஸபரிகரமாய் துஷ்கரமாய் அநேகாந்தராய ஸம்பாவனை யுடைத்தாய், ஸாவதா நர்க்கும் சிர கால ஸாத்யமான பக்தி யோகம் அல்ப ஜ்ஞாந ஸக்தியாய் அல்ப காலவாத்தியான தனக்குக கடுகத் தலைககட்டாது என்று அறிகையாலும், ஸுகரோபாயாந்தரத்தை அறியாமையாலும நிரதிஸய ஸோகாவிஷ்டனான அர்ஜுநனை வ்யாஜமாகக் கொண்டு கீதோபநிஷதாசார்யன் தன் பரம க்ருபையாலே ஸாங்கமாக ஸுகரமாய் ஸக்ருத்கர்த்தவ்யமாய் ஸர்வாதிகாரமாய் ஸகல பல ஸாதநமாய் ஆஸுகாரியாய் ப்ரதிபந்தாநர்ஹமாய்

---

1 கீதை 18 - 65, (என்னிடத்தில் பக்தியுடையவனுய்க் கொண்டு) மன்மநாः - என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதையுடையவனுய், பவ - இரு

2 கீதை 16 - 5 தைவீ - தேவதைகளினுடையதாகிய, ஸம்பத் - ஸம்பத்தானது - விமோக்ஷாய - மோக்ஷத்திற்குக்காரணமாகிறது, ஆஸுரீ - அஸுரர்களுடைய, (ஸம்பத்து) நிபந்தாய - ஸம்ஸாரபந்தத்திற்குக்காரணமாகிறது என்று, மதா எண்ணப்பட்டது.

3 கீதை - 16 - 5 பாண்டவ – பாண்டுவின் பிள்ளையாகிய அர்ஜுந! மா சுசः - துக்கப்பட்டாதே, தைவீம் – தேவதைகளினுடையதாகிய, ஸம்பதம் - ஸமபத்தை, அபிஜாதः - உத்தேசித்துப் பிறந்தவனுக, அஸி - ஆகிறுய்.

ப்ரஹ்மாஸ்த்ரதுல்யமான ரஹஸ்யோபாயத்தைச் சரம ஸ்லோகத்தாலே ஸகல லோக ரக்ஷார்த்தமாக அருளிச் செய்து இவனே வீதஸோகனுக்குகிறான்.

1 ' भक्त्या परमया वऽपि ' (பக்த்யா பரமயா வாऽபி

2 ' शरणं त्वां प्रपन्ना ये '(ஸரணம் த்வாம் ப்ரபந்நா யே)

இத்யாதிகளிலே ப்ரபத்தியும் பக்தி போலே ப்ராப்தி விரோதிகளைக் கழிக்கவற்று என்னுமிடம் ஸித்தம். இவ்விகல்பம் ஸகிஞ்சனன், அகிஞ்சனன் என்றுதல், விளம்பக்ஷமன், விளம்பாக்ஷமன் என்றுதல் அதிகாரி விஸேஷத்தைப்பற்றி இருக்கிறது. விஸ்வாஸாதி தாரதம்யத்தாலே அதிகாரிபேதம் சொல்லுவார்க்கு இது வ்யவஸ்த்தித விஷயமாம், ஆனபின்பு சிலர் துல்யவிகல்பம் என்றதற்கும் உபாயஸ்வரூபம் லகுவேயாகிலும் பலத்தில் குறையில்லை என்கையிலே தாத்பர்யம்.

3 ' नरस्य बुद्धि दौर्बल्यात् उपायान्तरमिष्यते '

(நரஸ்ய புத்திதௌர்பல்யாத் உபாயாந்தரம் இஷ்யதே)

என்கிற இடத்தில் துர்ப்பலபுத்தியானவனே பக்தி யோகத்திற்கு அதிகாரி என்கிறபடியன்று, அகிஞ்சனனையிருக்கச் செய்தே ஸ்வதந்த்ர ப்ரபத்தியில் விஸ்வாஸமாந்த்யத்தாலே பாலன் சந்திரனைப் பிடிக்கக் கை நீட்டுமா போலே தனக்கெட்டாத நிலத்திலே ஏற ஆசைப்படுமவனை உபாலம்பித்தபடி, இங்ஙனல்லாத போது அனேக ஸாஸ்த்ரங்களுக்கும், க்ருத்ஸ்நவித்துக்களாய் ஸ்வதந்த்ர ப்ரபத்திக்கும் உபதேஷ்டாக்களாய்ப பக்தியோக நிஷ்ட்டராய்ப் போருகிற பரமயோகிகளுடைய நிலைக்கும் விருத்தமாம். ஆகையால் மஹா விஸ்வாஸமுடையனனவன் ஆகிஞ்சன்யாதியுக்தனுய்க் கொண்டு ப்ரபத்திக்கு அதிகாரியாகிறான். இவனுக்குத் திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாஸித்த உபாயவிஸேஷம் இங்கே விதிக்கப்படுகிறது. இதில் 'மாம், ஏகம், ஸரணம், அஹம், மோக்ஷ

1 பரமயா - உயர்ந்ததான, பக்த்யா வாபி - பக்தியினுலாவது, (ப்ரபத்த்யா வா-ப்ரபத்தியினுலாவது நான் அடையப்படக் கூடியவன்.)

2 ப்ராஹ்ம புரா. யே - எவர்கள், த்வாம் - உம்மை, சரணம் - சரணமாக, ப்ரபந்நாः - அடைகிறார்களோ.

3 லக்ஷ்மீதந்த்ரம் - 28—17. நரஸ்ய - மனிதனுடைய, புத்தி

யிஷ்யாமி' என்கிற பதங்களிலே ப்ரதாநமான ஸித்தோபாயமும் ப்ரகாஶிதமாயிற்று.

(ஸர்வதர்மாந்) தர்மமாவது ஶாஸ்த்ர ஸித்தமான அபிமத ஸாதநம். அதிகாரிவிஶேஷத்திலே மோக்ஷத்திற்கு ஸாதநாந்தரத்தை விதிக்கிற இடத்தில் த்யாக விஷயமாகச் சொல்லுகிற தர்மம் கீழ்ச் சொன்ன 'பக்தியோகம். அதில் ஸத்வித்யாதி விபாகத்தாலே பஹுவசநம். ஸர்வ' ஶப்தம் அவை எல்லாவற்றையும் என்கிறது. பரிகரங்களையும்(கூட) காட்டுகிறதாகவுமாம்.

ஸர்வதர்ம சப்தார்த்தம்

(பரித்யஜ்ய) என்கிற இது அகிஞ்சநனை தன் நிலையைத் தெளிகையாலும், பலத்தில் தீவ்ரஸங்கத்தாலும் அதிஶயித ஶாகனை இவனுடைய அதிகாரம் தோன்ற த்யாகத்தை அநுவதிக்கிறது. இங்கு 'பரி' என்கிற உபஸர்க்கம் ஸர்வகாலத்திலும் ஸர்வப்ரகாரத்திலும் யோக்யதையில்லை என்று பிறந்த நைராஶ்யாதிஶயததைக காட்டுகிறது.

பரித்யஜ்ய சப்தார்த்தம்

1 'त्रीन् लोकान् संपरिक्रम्य' (த்ரீந் லோகாந் ஸம்பரிகரம்ய)

2 'अनित्यमसुखं लोकमिमं प्राप्य'

(அநித்யமஸுகம்லோகமிமம் ப்ராப்ய)

இத்யாதிகளிற்போலே 'பரித்யஜ்ய' என்கிறது அங்கவிதியாக வேண்டுவதில்லை. ஸர்வதர்மஸ்வரூப த்யாக விதி பக்ஷம ஶ்ருதி ஸ்ம்ருதி ஸதாசார விருத்தம். உத்தரக்ருத்யபரமதிகே உபாயத்தை விதிக்கிற இவ்வாக்யத்திலே தர்மங்களில் புத்தி விஶேஷ த்யாகத்தை விதிகிறது என்னுமபக்ஷத்தில் ஸாத்விக

தெளர்ப்பல்யாத் - விச்வாஸத்தின் குறைவினால், உபாயாந்தரம்-வேறு உபாயம், இஷ்யேதே - விரும்பப்படுகிறது.

1 ராமா-ஸுந். 38-33 த்ரீந் லோகாந் - மூன்று லோகங்களையும் ஸம்பரிக்ரம்ய - நன்றாகச் சுற்றி(வேறு ரக்ஷகர்கள் அகப்படாமையினால் ராமனைச் சரணம் அடைந்தது)

2 கீதை - 9-33 அநித்யம் - அழியக்கூடியதாயும், அஸுகம் - துக்காதிகள் கலந்ததாயும் இருக்கும், இமம் - இந்த, லோகம், லோகத்தை ப்ராப்ய - அடைந்திருக்கிற (நீ என்னைச்சரணம் அடை)

த்யாகவிஶிஷ்டங்களான ஸர்வதர்மங்களும் ப்ரபத்திக்கு அங்கங்கள் என்று பலிகும். ஆன பின்பு பரபதத்திக்கு அங்க மாக அடைத்த ஆநுகூல்யஸங்கல்பாதிகளொழிய வேறு ஒருதர் மத்தாலும் இதற்கு அபேக்ஷையில்லாமையிலும், ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயததாலே வேரொன்றைப் பேரூத சுகுணயுடைமையிலும் இத் த்யாகவிதிகுத தாதபர்யமாகலாம், தனகு அடைத்த தர்மங்களில் தனக்கு ஶகயமானவற்றையும் ப்ரபத்திகாக அநுஷ்ட்டிக்கையைத் தவிர்ந்து என்றதாயிற்று. ஸநத்குமார ஸம்ஹிதையில் கர்ம யோகாதிகளை (ப்ரபத்தி ஸா)பக்திக்கு அபே க்ஷகங்கள்என்று சொல்லி,

2' प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते ।
सा हि सर्वत्र सर्वेषां सर्वकाम फलप्रदा ॥
सकृदुच्चारिता येन तस्य संसारनाशिनी ।
राक्षसानामविस्रम्भादांजनेयस्य बन्धना ॥
यथा विगलिता सद्यस्त्वमोघास्त्रस्य बन्धना ।
तथा पुंसामविस्रम्भात् प्रपत्तिः प्रच्युता भवेत् ॥
तस्मात् विस्रम्भयुक्तानां मुक्तिं स्यति साऽचिरात् ।'

(ப்ரபத்தேः க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே ।
ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா ॥
ஸக்ருதுச்சாரிதா யேந தஸ்ய ஸம்ஸாரநாஶிநீ ;
ராக்ஷஸாநாமவிஸ்ரம்பாத் ஆஞ்ஜநேயஸ்ய பந்தநா ॥

---

2 ஸநத்குமார ஸம்ஹிதை - ஏவம் - இப்படி, ப்ரபத்தேः ப்ரபத்திக்கு, பராபேக்ஷா -மற்றொன்றை எதிர்பார்த்திருப்பது, க்வசித் அபி-ஓர் இடத்திலும், ந வித்யதே -இல்லை, ஸாஹி -அதுவோ, ஸர்வத்ர -எல்லா இடத்திலும்,ஸர்வேஷாம்-எல்லோருக்கும்,ஸர்வகாம பலப்ரதா-விரும்பும்எல்லாப்பலத்தையும்கொடுக்கக்கூடியது,யேந-எவனால், ஸக்ருத்ஒருதடவை,உச்சாரிதா சொல்லப்பட்டதோ, தஸ்ய - அவனுடைய, ஸம்ஸாரநாசிநீ - ஸம்ஸாரத்தை நாசம் செய்துவிடும், அஸ்த்ரபந்தநா - அஸ்த்ரத்தின்கட்டு,அமோகா அபி - வீண்போகாததாயினும், ஆஞ்ஜ நேயஸ்ய-ஹநுமாருடைய, பந்தநா - (ப்ரஹ்மாஸ்த்ரத்தினால் கட்டு,ராக்ஷஸாநாம் - ராக்ஷஸர்களுடைய, அவிஸ்ரம்பாத் - நம்பிக்கை இல்லா மையினால், யதா - எப்படி, ஸத்யः - அப்பொழுதே, விகளிதா - நழுவி

யதாவிகளிதா ஸத்ய: த்வமோகாஹ்யஸ்த்ரபந்தநா ।
ததா பும்ஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: பரச்யுதா பவேத் ।
தஸ்மாத் விஸ்ரம்பயுக்தாநாம முக்திம தாஸ்யதி ஸாசிராத் ।।)

என்று சொல்லப்பட்டது. விஷிஷ்டவிதி என்றவர்களுக்கும் இங்நைரபேக்ஷ்யவிஷிஷ்டவிதிபிலே தாத்பர்யம். இப்படியானுல் ஸ்வதந்த்ரஸாஸநத்தாலே தத்காலத்திலும் தனக்கு அடைத்த நிலை குலையவேண்டா. இந்த யோஜனையில் 'ஸர்வதர்மாந்' என்கிற ஸப்தம் தம் தம் ஜாத்யாதிகளில் அடைப்புண்ட தர்மங்கள் எல்லாவற்றையும் சொல்லுகிறது. இப்படி இங்கே நைரபேக்ஷ்யம் விவக்ஷிதமானுல் 'மாஸுச:' என்கிற இதின் ஸாமர்த்யத்தாலே அதிகாரிவிஸேஷம் ஸித்திக்கும். த்யாகாநு வாதபக்ஷத்தில்' ஏக ' ஸப்தத்திலே நைரபேக்ஷ்யம் விவக்ஷிதமாம். 'பல ஔஷதங்களையும் விட்டு ஸாவ வ்யாதிஸமநமான இந்தஸித் தௌஷதம்ஒன்றையுமே ஸேவி ' என்னும் கட்டளையிலேயோஜனை ,யானுல் அவ்வோ பல ஸாதநங்களினுடைய பஹுத்வத்தையும் அவற்றினுடைய கார்த்ஸ்ந்யத்தையும் ' ஸர்வதர்மாந் ' என்கிற ஸப்தம் காட்டுகிறது.இப்படியானுல் இங்கு மோக்ஷஸாதநவிஸேஷ உபதேசத்திலே தாத்பர்யம். அசக்தனுய் ஸோகியாநிற்கச்செய்தே துராஸையாலே துஷ்கரங்களைத் துவக்கி நிற்குமவனைக் குறித்து துராஸையை விடாய் ' என்றுதல், ' அஸக்யத்தில் ப்ரவருத்தி யை விடாய் ' என்றுதல் சொல்லுகிறதாகவுமாம். லஜ்ஜா புரஸ்ஸர த்யாகம் சொன்னவர்களுக்கும் இதுவே தாத்பர்யம்.

இப்படி அஸக்யங்களிலும் அநபேக்ஷிதங்களிலும் கைவாங்கி நின்றவனுக்குக் கைம்முதலாய் ஸாதாரண தர்மமான தன்னை ' மாம் ஏகம் ' என்கிறன். பரஸ்வீ

விட்டதோ, ததா - அப்படியே, பும்ஸாம் - மனிதர்களின், அவிஸ்ரம் பாத் - நம்பிக்கை இல்லாமையினுல், ப்ரபத்தி: - சரணாகதி ப்ரச்யுதா பவேத்- நழுவியதாய் ஆய்விடும், அதாவது

அங்கபூர்த்தியில்லாமையினுல் சரணாகதி அநுஷ்ட்டிக்கப்பட்டதாகா மல் போய்விடும். தஸ்மாத் - ஆகையினுல், விஸ்ரம்பயுக்தாநாம் - நம்பிக் கையுடன் கூடியவர்களுக்கு, ஸா - அந்த ப்ரபத்தி, அசிராத் - சீக்கிரத் திலேயே, முக்திம் - மோக்ஷத்தை, தாஸ்யதி - கொடுக்கப் போகிறது

மாம் ஏகம் சப்தார்த்தம்

கர்த்தாவைக் காட்டுகிற இப்பதங்களில் தர்மிஸ்வரூப மாத்ரத்தை விவக்ஷிகாகை உசிதமல்லாமையாலே ஸ்வரூபநிரூபக தர்மங்களோடே கூட

1 'அகலகில்லேன்'

இத்யாதிகளிற்படியே ஆஸ்ரயணீயதைக்கு உறுப்பான ஸஹதர்ம சாரிணீ ஸம்பந்தாதி விஸேஷணங்களும் இங்கே அநுஸந்தேயங்கள். ஸர்வகுணஸ்ரய விஷயங்களான 'மாம்,' 'அஹம்' என்கிற பதங்களுக்கு அடைவே ஸௌலப்யத்திலும், ஸ்வாதந்த்ர்யத்திலும் ப்ராதாந்யேந நோககு. இவை ஒன்றை ஒன்று விட்டால் அநுபஜீவ்யங்களாம்.

மாம் சப்தார்த்தம்

இதில் 'மாம்' என்கிற பதத்தாலே விஸேஷித்து ஸர்வலோகஹிதார்த்தமாக அவதீர்ணனாய் ஸர்வஸுலபனாய் 'என்றேநம்மை இவர்கள் அபேக்ஷிப்பது' என்று ரக்ஷணத்தில் அவஸர ப்ரதீக்ஷனாய்த் தன் வைபவம் கண்டு வெருவாதபடி தன்னைத் தாழவிட்டு உபாயதசையிலும் போக்யனும்படியான மாதுர்யத்தையுடையனாய், ஆஸ்ரிதவிஸ்லேஷாஸஹிஷ்ணுதையாலே ஸுப்ரவேஸனாய், அவதீரித ஸ்வபர தாரதம்யமான ஆர்ஜவத்தாலே

2 'நெறியெல்லாம் எடுத்துரைத்த'

என்னும்படி தத்த்வ ஹிதோபதேஸங்களிலே தத்பரனாய், தன்னை ஆஸ்ரயிக்கை பரிபூர்ணனை தனக்கு ஸர்வஸ்வதாநமாகக் கொண்டு அவர்களை உதாரராக்கி, ஸவிபூதிகனை தன்னை வழங்க ஒருப்பட்டு நிற்கிற வள்ளல் மணி வண்ணனை தன்னிலையைக் காட்டுகிறான். ஸரண்யகுணங்களில் ஸர்வஸ்வாமித்வ ஸர்வஜ்ஞத்வ ஸர்வஸக்தித்வாதிகள் நிக்ரஹ அநுக்ரஹ ஸாதாரணங்கள். காருண்யமும் ததநுபந்திகளான வாத்ஸல்யாதிகளும் அநுக்ரஹத்திற்கு ஏகாந்தங்கள். ஆகையால் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் காருண்யை காந்திகளாய்ப் போந்தார்கள்.

1, 2 திருவாய்- 6 - 10-10—4-8-6

'ஏக' ஶப்தம்

1 'मामेकमेव शरणं' (மாமேகமேவ ஶரணம்)

2 'उपायं वृणु लक्ष्मीशं तमुपेयं विचिन्तय'

(உபாயம் வ்ருணு லக்ஷ்மீஶம் தமுபேயம் விசிந்தய)

இத்யாதிகளிலும் த்வயத்திலும் சொல்லுகிறபடியே ப்ராப்ய ப்ராபகங்கள் ஒன்றேயாய் நிற்கிற நிலையைக் காட்டுகிறது.

ஏக சப்தார்த்தம்

ப்ரபத்தவ்யனெடொக்கக் கர்த்தாவான தனக்கும் க்ரியைக்கும் ஸங்நிதாநம் உண்டாகையால் ரக்ஷணீயனை தன்னையும் தன் க்ரியையையும் ரக்ஷகனைப்போலே ப்ரதாநஹேதுவாக நினையாமைக்காகத் தன்பக்கலில் நிரபேக்ஷகர்த்ருத்வாபிமாநத்தையும் தன் க்ரியையில் ப்ரதாநோபாயத்வபுத்தியையும் இங்கே கழிக்கிறது என்னவுமாம். 'உன்னால் வரும் நன்மையையும் விடு' என்றவர்களுக்கும் இதுவே தாத்பர்யம். இது விடுகை தன்னிலும் ஒக்கும். ஏகஶப்தம் உபாயத்வித்வத்தைக் கழிக்கிறதாகையாலே 'ப்ரபத்திக்கு உபாயத்வம் இல்லை' என்றவர்களுக்கும் 'இது பராதீநமுமாய் பரப்ரஸாதநமாத்ரமுமாயிருக்கும், அவ்யவஹிதமான ப்ரதாந காரணம் இவ்வ்யாஜ உபஶாந்தகாலுஷ்யனை ஸத்யஸங்கல்பன்' என்கையிலே தாத்பர்யம். ஸர்வதர்மங்களாலும் வரும் ஸர்வபாபநிவ்ருத்தியையும் இப்ப்ரபத்தி வஶீக்ருதனை நான் ஒருவனுமே பண்ணுவேன் என்கையில் தாத்பர்யமாகவுமாம். இது

3 'यत्नेन कामकामेन' (யத்நேந காமகாமேந)

இத்யாதிகளுக்கும் பொருந்தும்

4 'सुदुष्करेण' (ஸுதுஷ்கரேண)

---

1. பாகவதம் - 11-12-14 மாம் ஏகமேவ - என்னை ஒருவனையுமே. சரணம் - சரணமாக (அடை)

2. லக்ஷ்மீசம் - லக்ஷ்மிக்குப் பர்த்தாவான பகவானை, உபாயம் - உபாயமாக, வ்ருணு - வரி, தம் - அவனை, உபேயம் - உபேயமாகவும் விசிந்தய - எண்ணி இரு. 3 அஹிர் - ஸம் 37 - 25

4 'सुदुष्करेण शोचेद्यः येन येनेष्टहेतुना।
स स तस्याहमेवेति चरमश्लोकसंग्रहः॥'

என்று பூர்ண ச்லோகம். இது சரம ச்லோகத்தில் அர்த்த ஸங்க்ரஹமாக ஸ்வாமி தேசிகன் தம்மாலேயே அருளிச்செய்யப்பட்ட கரரிகை

என்கிற சுலோகத்தை இங்கே படிப்பது. ஏக ஶப்தம் ஸித்தோபாய த்வித்வத்தைக் கழிக்கிறது என்றபோதும் உபயுக்த விஶேஷணங்களைக்கழிக்க ஒண்ணுது. இவற்றால் உபேய த்வித்வம் வாராதாப்போலே உபாய த்வித்வமும் வாராது. தர்மி மாத்ரமே உபாயம் என்றால் ஸர்வவிரோதமும் வரும். பரந்யாஸம் பண்ணின விஷயத்தில் ஶரண்யனுடைய நைரபேக்ஷ்யத்தை 'ஏக' ஶப்தம் காட்டுகிறதாகவுமாம். அப்போதும் பூர்வக்ருதபரந்யாஸத்தாலும் விஶேஷணங்களைக்கழிக்க வொண்ணுத ப்ரமாணஸித்த ஸ்வகுணங்களாலும் நைரபேக்ஷ்யம் சொல்ல வொண்ணுது. மற்றும் உசிதமான அர்த்தங்களைக் கண்டுகொள்வது.

இப்படி ஸித்தோபாயமான தன்னைக் காட்டி 'ஶரணம் வ்ரஜ' என்றுதனக்கு வஶீகரணமான ஸாத்யோபாயத்தைவிதிக்கிறான்.

வ்ரஜ சப்தார்த்தம்

கத்யர்த்தமான 'வ்ரஜ' என்கிறது புத்த்யர்த்தமாய் அத்யவஸாயமுகத்தாலே ஸகருதகர்த்தவ்ய ஸாங்க பரந்யாஸத்தைக் காட்டுகிறது.

ஶரணஶப்தத்திற்கும் க்ரியாபதத்திற்கும் விவக்ஷிதங்களான்வயத்திலே சொனன பரகாரத்தில் இங்கும அநுஸந்திப்பது.

சரணம் சப்தார்த்தம்

அங்கு ஸ்வாநுஷ்டாநம் சொல்லுகிறதாகையாலே உத்தமனுயிற்று. இங்கு அபிமுகனைக் குறித்து விதிகிறதாகையாலே மதயமனுகிறது. இது விதி என்னுமிடம் ஸ்வாரஸ்யாதிகளாலும், இதை ப்ரபஞ்சிகிற ஶாஸத்ரங்களாலும ஸித்தம். இபபடி விதேயமான ப்ரபதநத்தைச் சிலர் 'அதிகாரி விஶேஷணம, ஸமபத்த ஜ்ஞாநமாதரம், ஸித்தோபாய ப்ரதிபத்தி மாத்ரம, அதிகாரணமாதரம், அநுமதி

யः - எவன், ஸகृதுச்சாரேண - தன்னால் செய்யப்படுகிறதாகிய, யேந யேந - எந்த எந்த, இஷ்ட ஹேதுநா - தனக்கு அபிமதமான பலத்திற்குக் காரணமான உபாயம் கிட்டவில்லையே என, சோகேத் - துக்கிப்பனே, ஸ ஸः தஸ்ய - அவனுக்கு அந்தந்த உபாயம அஹமேவேதி கரோமே என்று, சரம ச்லோக ஸங்க்ரஹ - சரம ச்லோகத்தின் ஸங்க்ரஹம் இது ஶ்ரீ கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை, ஶ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் முதலியவற்றில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

மாத்ரம், அசித் வ்யாவ்ருத்தி மாத்ரம், சைதந்ய க்ருத்யம், சித்தஸமாதாநம் எனருற்போலே சொல்லுமதுவும் இவ்விதிக்கும் இத்தை விஸ்தரிக்கிற ஸாஸ்த்ரங்களுக்கும், இவற்றுக்குச் சேர்ந்த உபபத்திகளுக்கும் பாஷ்ய கத்யாதிகளுக்கும் நிபுண ஸம்ப்ரதாயங்களுக்கும் அநுகுணமாகவேண்டுகையாலே,

1 'நானே நாஞ விதநரகம் புகும்பாவம் செய்தேன்'

என்றுநிற்கிற நம்மை ஈச்வரன் ரக்ஷிகிற இடத்தில்

2 'வந்து அடைந்தேன்'

என்று நாம்பண்ணுகிற அல்பமான வஸீகரணயத்நம்

3 'அதுவும் அவனது இன்னருளே'

4 'இசைவித்தென்னை' இத்யாதிகளிற் படியே அவன்தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜ மாத்ரமன்றே என்று ஸித்தோபாய ப்ராதாநயாநுஸந்தாநத்தில் அவர்களுக்குத் தாத்பர்யம், தன் ரக்ஷணத்திற்காகத் தான் ப்ர வாத்திக்கும்போதும் தான் நினைத்தபடி நடத்த ப்ராப்தி இல்லை, தானேவ்யாபரிக்கைக்கு ஸக்தியுமில்லை, பராபிமதோபாயத்திலே பரப்ரேரிதனுய்க்கொண்டு ப்ரவர்த்திக்கிறேன்என்று இவ்வளவே அநுஸந்தேயம். ஸ்வப்ரயோஜநார்த்தமாக ஸ்வபரந்தம் ஒன்றும் ஆகாது என்னில், ஸ்வவசநத்திற்கும், ஸ்வயத்ந நிவ்ருத்தி தனக்கும் ப்ரபத்த்யாதி விதிக்கும், தனக்கு ப்ரீதிப்ரயோஜநமாகக் கொண்டு தான் பண்ணும் கைங்கர்யத் திற்கும் தேஹரக்ஷணாதிவ்யாபாரத்திற்கும் விரோதம் வரும். ஆகையால் அசக்யமாய் பரந்யாஸம பண்ணின விஷயத் திலும் மோக்ஷ விருத்தங்களான காம்யங்களிலும், அநாபத் தசையிலே புத்திபூர்வநிஷித்தங்களிலும், வ்ருதாகாலக்ஷேபஹேது க்களிலும் ஸ்வயத்நம் தவிருகையேயுள்ளது, 'பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வ ப்ரவ்ருத்தியை விடுகையே ப்ரபத்தி' என்றவர் களுக்கும் இவ்வளவே விவக்ஷிதம். சக்ய விஷயத் திலும் பரந்யாஸம் லோகத்திலே கண்டோமாகிலும் இது

5 'न स.ध्यं स धन.न्तरैः' (ந ஸாத்யம் ஸாதநாந்தரை:)

6 'अनन्य स.ध्ये स्वाभीष्टे' (அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே)

1, 2 பெரிய திருமொழி - 1- 9 - 2

3, 4 திருவாய் - 8-8-3—5-8-9.

5 அஹிர் - ஸம் - 37 - 25 6 பரதமுனி லக்ஷண வாக்யம்

இத்யாதிகளில் சொன்ன ப்ரபத்திஶாஸ்த்ரார்த்தமன்று, ஸர்வத்திலும் அகிஞ்சநனுய் ஸர்வபரந்யாஸம் பண்ணுகை மநஸ் ஸொழிந்த ஸர்வகரணங்களும் விதேயமல்லாத காலம் பெறில் கூடும். விளம்பாக்ஷமனுய் ப்ரபத்தி பண்ணுகிறவனும் கடுக அபிமதம் பெறுகைக்குக் கைம் முதல் இல்லாதவனுகையாலே இங்கும் 'அநந்யஸாத்யே' என்கிற அர்த்தம் கிடைக்கிறது.

ஸ்வதந்த்ரஸ்வாமி நிர்ஹேதுக க்ருபையாலே ரக்ஷியாநிற்க 'வ்ரஜ' என்று ஒன்றை விதிக்க வேண்டுமோ? என்னில், நிர்ஹேதுக க்ருபைஒரு வ்யாஜத்தை முன்னிட்டு(டே) ரக்ஷிக்கும்

நிர்ஹேதுகக்ருபா ரக்ஷணப்ரகாரம் — என்னுமிடம் ஶாஸ்த்ர ஸித்தம். 'குண ஸம்பந்தங்களே ஈஶ்வரன் ரக்ஷிக்கைக்குக் காரணம்' என்றவர்களுக்கு ப்ரபத்திரூப வ்யாஜம் ஸ்வரூபோத்பத்தியிலும் பரஸாபேக்ஷமாய், லகுவாய், அப்ரதாநமாய்நிற்கிற நிலையிலும்,குண ஸம்பந்தங்களினுடைய ப்ராதாந்யத்திலும் தாத்பர்யம். இங்ஙனல்லாதபோது யத்ருச்சா ஸுக்ருதாதிகளும் த்வயஶ்ரவண ஸ்வரூப ஶிக்ஷாதிகளும் முமுக்ஷுக்களுக்கு அபேக்ஷிதங்கள் என்று நடத்துகிற உபதேஶாதிகளுக்கும் விருத்தமாம். ஆகையால் இப்பரம்பரை யெல்லாத்துக்கும் ஸ்வதந்த்ர ஶேஷியினுடைய ஸஹஜகாருண்யமே ஸாதாரணமான ப்ரதாந காரணம் என்று இவ்வளவே அநுஸந்தேயம். அல்லாத போது அதிப்ரஸங்கம் வரும். ஸ்வாதந்த்ர்யமே நியாமகம் என்னில், வைஷம்யாதி தோஷங்களும் ஸர்வ ஶாஸ்த்ர வ்யாகுலதையும் வந்து, அத்ருஷ்டேஶ்வராதிகளும் அழியும் படியாம்.

1 'ஓர் எண்தானும் இன்றியே வந்து இயலுமாறு' என்றதுவும் அப்போது ஒரு நிஜவன்றிக்கே இருக்க, வந்து என்கிறதாமத்தனே, முன்பு 'இதற்கு ஒரு விஶேஷ காரணம் இல்லே' என்றபடியன்று.

2 'வெறிதே அருள் செய்வர்'

என்றதுவும் 'செய்வார்கட்கு' என்று விஶேஷிக்கையாலே ரக்ஷணீயன் பக்கலிலே ஶாஸ்த்ர வேத்யமாயிருப்பதொரு வ்யாஜம் உண்டு, என்று தோற்றியிருக்கிறது. அஜ்ஞாத ஸுக்ருதாதிமாத்ரமே வ்யாஜம் என்றால், இதுவும் ஶாஸ்த்ரம் கொண்டு

1, 2. திருவா - 1-10 5— 8-7-8

அறியவேண்டுகையால், இப்படி மற்றும் ஶாஸ்த்ரம் சொன்ன வ்யாஜ பரம்பரையை இசையவேண்டும். அஜ்ஞாத ஸுக்ருதம் தானும் ஒருவனுக்கு ஒரு கால விஶேஷத்திலே வருகையாலே வைஷம்ய நைர்க்ருண்ய பரிஹாரம் சொல்லுகிற ஸூத்ராதி களிற்படியே அநாதி கர்ம ப்ரவாஹ வைஷம்யத்தாலே நியதமாக வேண்டும்.

1 'ஸ்வதந்த்ர: கர்த்தா' என்று சொல்லாநிற்க, அத்யந்த பர தந்த்ரனாக ஶோதிதனனவனைப் பற்ற ஒன்றை விதிக்கும்படிஎன்? என்னில், இவ்வளவு ஸ்வாதந்த்ர்யம் எடுத்துச் சுமக்கை பாரதந் த்ர்யகாஷ்ட்டை

2 'कर्ता शास्त्रार्थवत्त्वात्' (கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்)

3 'परात्तु तच्छ्रुतेः' (பராத்து தச்ச்ருதே:)

என்று வேதாந்தத்திலே நிர்ணீதமான இது முக்த தசையிலும் துல்யம். ஜீவனுக்குக் கர்த்ருத்வம் இல்லை என்னில்? ஸாங்க்யாதி பராதீனகர்த்ருத்வ மதமாம். இது ஸ்வாதீனம் ப்ரகாரம் என்னில்? நிரீஶ்வரவாதமாம். ஈஶ்வராதீனமான ஜ்ஞாத்ருத்வ மாத்ரமே உள்ளது என்னில்: புருஷார்த்த ருசி தவிரும். ஜ்ஞாந இச்சைகளையே கொள்ளில், ஸர்வோபாய ப்ரவ்ருத்திகளும் இல்லையாம். ஆகையால் ஜ்ஞா நமும் இதன் அவஸ்த்தாவிஶேஷங்களான சிகீர்ஷா ப்ரயத்நாதி களும் ஜீவனுக்கு உண்டு. 'இவனுடையகர்த்ருத்வம் கைங்கர்ய மாத்ரத்திலே, உபாயத்தில் இல்லை' என்னவொண்ணுது. கைங்கர்யம்தானும் பரப்ரீதி என்று ஒரு ப்ரயோஜநதிற்கு உபாயமாயிறே இருப்பது. ஆனபினபு கர்த்ருத்வத்தில் பந்த ஹேதுவான ஆகாரமே த்யாஜ்யம. அதாவது

---

1 அஷ்டாத்யாயீ - 1 - 4 - 54 ஒரு கார்யத்தில் தானே இயங்குகிறவன் ஸ்வதந்த்ரன், இவனையே கர்த்தா என்கிறது.

2 சாரீரக ஸூத்ரம் - 2 - 3 - 33. சாஸ்த்ரார்த்தவத்த்வாத் - சாஸ்த்ரம் ப்ரயோஜனத்தையுடையதாகையால் (இதைச் செய, இதைச் செய்யாதே என்று விதிக்கிற சாஸ்த்ரங்களுக்கு ப்ரயோஜன முண்டாவதற்காக) கர்த்தா - (ஜீவாத்மா) காத்தா (என்று அங்கீ கரிக்கவேண்டும்)

3 சாரீரக ஸூத்ரம் - 2 - 3 - 40. தத் - அந்தக் கர்த்ருத்வம், பராத்து - பரமாத்மாவினிடத்தில் இருந்து வந்தது, ச்ருதே: - ச்ருதி யில் அப்படிச் சொல்லியிருக்கிறபடியினால்.

1 'अधिष्ठानं तथा कर्ता '(அதிஷ்ட்டாநம் ததா கர்த்தா)
இத்யாதிகளுக்கு விபரீதமாக அநுஸந்திக்கையும், ப்ரயோஜநாந்தரத்தை இடுக்குகையும். ப்ரயோஜநாந்தரபரனுக்கு பக்த்யாதிகளும் பந்தகங்களிறே. குணத்ரயத்தோடு துஷகற்றுக்கேவல பகவதிச்சையாலே வருகையன்றிக்கே, ஸமஸாரதசையிலுள்ள கர்த்ருத்வம் பூர்வகர்மாநுரூபமான ஈச்வரேச்சா விசேஷத்தாலே ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்களே உபாதியாகக் கொண்டு வரும். இதில் ரஜஸ் தமஸ்ஸுக்களாலும் க்ஷுத்ர ஸுகஸங்க ஹேதுவான ஸத்த்வத்தாலும் வரும் கர்த்ருத்வம் பந்தகம், பகவத் ப்ராப்திஸங்கஹேதுவான ஸத்த்வமடியாக வரும் கர்த்ருத்வம் மோக்ஷகாரணம். கர்த்ருத்வம் பராதீநமேயாகிலும் க்ஷேத்ரஜ்ஞனுக்குக் கர்மபல லேபம் உண்டு என்னும் இடம் ஸர்வஸித்தாந்திகளுக்கும் இசைய வேண்டும். இவன் கர்த்தாவாம்போது கரண களேபர தேச கால கர்மாதிகள் காரணம் என்று ஸர்வருக்கும் அவிமதமிறே. இப்படியால் ஸபரிகர பரந்யாஸத்திலும் பராதீந கர்த்ருத்வாதிகளே அநுஸந்திப்பது.

துய்யமனத்தர் துறையணுகாத துணையிலியேன் *
ஐயமறுத்து உனது ஆணைகடத்தல் அகற்றினை நீ*
கையமர் சக்கரக் காவல ! காக்கும் திருவருளால் *
வையமளந்த அடிக்கீழ் அடைக்கலம் வைத்தருளே. 11

---

1 கீதை - 18-14. (மனிதன் எந்தக் கர்மத்தை சரீரம், வாக்கு முதலியவைகளினால் ஆரம்பிக்கிறானே அந்தக் கர்மத்திற்கு) அதிஷ்ட்டானம் - சரீரம், ததா-அப்படியே, கர்த்தா - ஜீவாத்மா (முதலிய ஐந்தும் காரணங்களாயிருக்கும்)

2 கை -திருக்கைகளில், அமர்-ஸ்த்திரமாக எழுந்தருளியிருக்கும், சக்கரக்காவல-சக்கராயுதத்தைத்தரித்துக்கொண்டு ஸர்வ ரக்ஷகனுயிருப்பவனே! துய்ய - பரிசுத்தமான, மனத்தர் - மனத்தையுடைய பக்தியோக நிஷ்டர்களின், துறை - மார்க்கத்தை, அணுகாத - கிட்டாதவனை, துணையிலியேன் - (வேறு ஒரு) ஸஹாயமும் இல்லாதவனை எனது, ஐயம் - ஸம்சயத்தை, அறுத்து - சேதித்து, உனது - உன்னுடைய, ஆணை - ஆஜ்ஞையை, கடத்தல்-மீறுதலை, நீ-நீயே, அகற்றினை-போக்கினாய், வையமளந்த-இவ்வுலகங்களை அளந்த, அடிக்கீழ்-உன் திருவடிகளின் கீழே, காக்கும் - (ஜகத்தையெல்லாம்) ரக்ஷிக்கும் திரு அருளால் - உத்க்ருஷ்டமான க்ருபையினால், அடைக்கலம்-(என்னை) ரக்ஷ்ய வஸ்துவாக, வைத்து அருளே - வைத்துக்ருபை செய்

இப்படி ஓர் அதிகாரி விமோஷத்திற்குக் க்ருத்யமாகத்தன் பரமகருபையாலே நியமித்துவைத்த உபாயவிமோஷத்தை உபதே

சரண்யக்ருத்யம்

சித்து, 'அஹம் த்வா ஸர்வ பாபேப்யோமோக்ஷயிஷ்யாமி' என்கிற வாக்யத்தாலே பர ஸ்வீகர்த்தாவானவன் தன் க்ருத்யத்தை அருளிச்செய்கிருன். திருநாராயணஸ்த்ரவ்ருத்தாந்தத்தை இங்கே அநுஸந்திப்பது.

இதில் அஹம் என்கிற பதத்தாலே

1 'எருத்துக் கொடியுடையானும்'

2 'கலவாய் துன்பம்'

3 'என்னுன் செய்கேன்'

இத்யாதிகளிற்படியே தாங்களே ஹிதாஹிதங்களை அறிகைக்கு க்ஷமரன்றிக்கே, பராதீநராய், ஸ்வரக்ஷணேபி அசக்தரான மற்று

அஹம் சப்தார்த்தம்

முள்ள ரக்ஷகாபாஸர்களில் காட்டில் வ்யாவ்ருத்தனுய், ஆச்ரிதருடைய ஹிதாஹிதங்களைத்தா னே காண்கைக்கீடான ஸர்வஜ்ஞத்வத்தையும் தான் பரஸ்வீகாரம் பண்ணினவர்களை நினைத்த போதே நித்ய ஸூரி பரிஷத்திலே வைக்கவல்ல ஸ்வாதந்த்ர்யத்தையும் உடைய வனுய், ஸர்வ ஸ்வாமியாய், 'என்று நாம் இவர்களை அழுக்குக்கழற்றின ஆபரணத்தைப்போலே அங்கீகரிப்பது' என்ற அபிப்ராயத்தை உடையவனுன தன்னைக் காட்டுகிருன். வேறு ஒருத்தன ஒரு வனை முக்தனுக்க நினைத்தாலும் தாங்கள் ஆசார்ய ஸ்த்தா நத்திலே நின்று ஸ்ரியஃபதியை முன்னிட்டன்றி மோக்ஷம் கொடுக்கமாட்டார்கள்.

4 'ततो ह्यस्य बन्ध विपर्ययौ' (ததோஹ்யஸ்ய பந்த விபர்யயௌ) என்று விலங்கிட்டு வைத்த ஸர்வசக்தியானவன் ஒருத்த

அதாவது அடியேன் உன் திருவடிகளில் சரணாகதி செய்யும்படி செய்துகொள் என்றபடி.

1 பெரியா - 5 - 3 - 6. 2, 3. திருவாய் 5-8-8—5-8-3

4 சாரீரக ஸூத்ரம் -2-3-4 (பகவானுடைய ஸங்கல்பத்தினுல் இந்த ஜீவாத்மாவின் ஸ்வாபாவிகமான ரூபம் மறைக்கப்பட்டது).

ஸூத: அந்தப் பரமாத்மாவின் ஸங்கல்பத்தினுலேயே, அஸ்ய - இந்த ஜீவனுக்கு, பந்தவிபர்யயௌ – ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டிருப்பதும், அதிலிருந்து விடுபடுவதும்.

னுக்கு ஒரு வ்யாஜத்தாலே விண்ணுலகம் தர விரைந்தால் ஸம் ஸாரங்யூநதாபீதரான ஸர்வதேவதைகளும் கூடிஞலும் விலக்க மாட்டார்கள். இப்படி அநிஷ்டநிவர்த்தநாதிகளுக்கு வேண்டும் அதிஸயிதாகாரம் எல்லாம் இங்கே அநுஸந்தேயம் என்று தோற்றுகைக்காக 'மோக்ஷயிஷ்யாமி' என்று உத்தமன் உண்டாயிருக்க மிகுதியான 'அஹம்' ஸப்தம் கிடக்கிறது.

'த்வா' என்கிறது உபாயாந்தரங்களினுடைய துஷ்கரத்வாதி களைக் கண்டு, அவற்றில் துவக்கற்று நிரதிஸயபோகாவிஷ்டனு

த்வா சப்தார்த்தம்

கையாலே, நிருபாதிக போஷியாய் நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனுய் ஸர்வ ரக்ஷண தீக்ஷிதனன என்பக்கல் ந்யஸ்தபரனுய், கோலி(ரி)ன பலத்தைப்பற்றக் கர்த்தவ்யாந்தரத் தில் ப்ராப்தியற்றுச்சாதகவ்ருத்தியானஉன்னை என்றபடி. ஸத்யம் என்றும், தபஸ் என்றும், தமம் என்றும், ஸமம் என்றும், தாநம் என்றும், தர்மம் என்றும், ப்ரஜநநம் என்றும், அக்நிகள் என்றும், அக்நிஹோத்ரம் என்றும், யஜ்ஞம் என்றும், மாநஸம் என்றும் (சி)பலதர்மங்களை உதாஹரித்து, 'இத் தபஸ்ஸுக்கள் எல்லாம் அவரங்கள், ந்யாஸஸப்தத்தாலே சொல்லப்பட்ட ஆத்ம நிக்ஷேபமே இவைஎல்லாவற்றிலும் அதிகம்' என்று பூர்வாநுவா கம் சொல்லுகையாலும், இந்த யாகத்தினுடைய நைரபேக்ஷ்யத் தைஉத்தராநுவாகம் ப்ரபஞ்சிகையாலும், 'மற்றுள்ள அதிகாரி கள் எல்லாம் இவ்வதிகாரியினுடைய கோடிதமையான கலைக்கும் பற்றார்கள்' என்றும், 'இவன் ஸ்வத்வரன் அநுஷ்டித க்ரதுஸ தன், க்ருதக்ருத்யன்' என்றும் பகவச் சாஸ்த்ரம் உபப்ரும்ஹித்தது.

மேல் இவனுக்குக் கழிக்கவேண்டும் அநந்த விரோதிவர்க் கத்தைக் காட்டுகிறது—'ஸர்வ பாபேப்யஃ' என்கிற ஸப்தம்.

ஸர்வபாபேப்யஃ சப்தார்த்தம்

பாபமாவது ஸாஸ்த்ரவேதயமான அநிஷ்ட ஸாதநம். பஹுவசநத் தாலே பாபம் அநாதி கால ஸஞ்சி தமாய், பஹுப்ரகார ப்ரவாஹமாய் நிற்கிற நிலை தோற்றுகிறது. இங்கு ஸர்வ ஸப்தம் பாபங்களுக்குக் காரணமுமாய்க் கார்யமு மாய்ப்போருகிற அவித்யையையும், விபரீத வாஸநா ருசிகளையும், ஸ்தூலஸூக்ஷ்ம ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும் பாப ராசியிலே சேர்க்கிறது. நரகாதி ஹேதுக்கள் போலே

1 · एते वै निरयास्तात ' (ஏதே வை நிரயாஸ்தாத)
என்னும்படி நிற்கிற ஸ்வர்க்காதிகளுக்கு ஸாதநமானவையும் பந்தகங்களாகையாலே முமுக்ஷுவுக்குப் பாபங்கள். அசேதந மாத்ராநுபவம், ஆத்மமாத்ராநுபவம், ஈச்வராநுபவம் என்று ஸுகம் மூன்று படியாயிருக்கும். இவை அநுகூலம், அநுகூலதரம், அநுகூலதமம் என்று சொல்லப்படும். இவற்றின் ஸாதநங்களும் ஹிதம், ஹிததரம், ஹிததமம்என்று நிற்கும். இப்படிநின்றுல்

2 ' तवामृतस्यिनि ' (தவாம்ருதஸயந்திநி)
என்கிறபடியே உத்தம புருஷார்த்தத்தை அபேக்ஷிக்குமவனுக்கு மத்யம புருஷார்த்தஸாதநங்கள்

3 · स एव धर्मः सोऽधर्मः तं तं प्रति नरं भवेत् '
(ஸ ஏவ தர்மः ஸோऽதர்மஸ் தம் தம் ப்ரதிநரம் பவேத்)
என்கிற ந்யாயத்தாலே பாபங்களாகக் குறையில்லை, பரிபூர்ண பகவதநுபவத்தை இழக்கும்படி பண்ணும கர்மவிமோஷத்தோடே கூடநிற்கிறஆத்ம மாத்ராநுபவரஸத்தை மோக்ஷம் என்றதுவும் அண்மையாலேயாமத்தனை.கத்யந்தராபாவத்தாலேயாதல், அநதிகாரியாய் வைத்து அதிகாரி ப்ராந்தியாலேயாதல் அநுஷ்டிக்குமவையும் ஸர்வபத்ததாலே ஸங்க்ருஹீதங்கள். ப்ரபந்நனுக்கு உத்தராகஅம்லேஷம் ப்ராமாதிகவிஷயமல்லாதபோது உபாஸகனுக்கு ச்ருதிவிரோதம் வந்தாற்போலே ப்ரபந்நனுக்கும்

4 ' मनीषी वैदिकाचारं मनसापि न लङ्घयेत् '
(மநிஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத்)

5 ' अपाय संप्लवे सद्यः प्रायश्चित्तं समाचरेत् '

---

1 பார - சாந்தி - 193-11. தாத - ஓ ! குழந்தாய், ஏதேவை - கீழ்ச்சொல்லியவைகளான உத்யாநுதிகள், பரமாத்மந: - பரமாத்மாவினுடைய. ஸ்தாநஸ்ய-இடமான மோக்ஷத்தைப்பற்ற, நிரயா:-நரகம் போன்றவை.

2 ஆள-ஸ்தோ-27 அம்ருதஸ்யந்திநி-அம்ருதத்தைப்பெருக்கா நிற்கும், தவ - உம்முடைய (திருவடித்தாமரைகளில் செலுத்தப்பட்ட

3 தம் தம் அந்தந்த, நரம் ப்ரதி மனிதனைக் குறித்து, ஸ ஏவ தர்ம: அதுவே தர்மம், ஸ: அதுவே, அதர்ம:-அதர்மமாகும்.

4 லக்ஷ்மீ தந்த்ரம் 17 94 மநீஷீ - விவேகமுடைய மனிதன், வைதிகாசாரம் – வேதத்தில் விதிக்கப்பட்ட தர்மாநுஷ்டாநத்தை, நஸாபி-மனத்தினுலுங்கூட, ந லங்கயேத்-தாண்டக் கூடாது. மனதையுடையவன் வேறு எதை இச்சிப்பான்.)

5 லக்ஷ்மீதந்த்ரம் - 17-91 அபாயஸம்ப்லவே-அபராதம் செய்யும்படி நேர்ந்துவிட்டால், ஸத்ய: - உடனே, ப்ராயச்சித்தம் - ப்ராயச்சித்தத்தை, ஸமாசரேத் - அநுஷ்டிக்கவேண்டும்.

(அபாய ஸம்ப்லவே ஸத்யः ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத்) இத்யாதிவசநவிரோதம் வரும். அப்ராப்தவிஷயராக த்வேஷநிஷித்த ப்ராவண்யாதிகளாலே தூஷிதனுமாகில் அநந்யனேயாகிலும் அமாத்தையான பதிவ்ரதையைப்போலேபதிஸேவைக்கும் குருபரிசர்யாதிகளுக்கும் அர்ஹனும். ஈஶ்வரன் ஸமாதிக தரித்ரனுமாய்ப் போலவும் குரு பக்தி இல்லாதவன் ஜ்ஞாந தரித்ரனுமாய்ப்போலவும் தோஷ தரித்ரனுமாய் நிபுண ப்ரபந்நனுக்குப் புத்திபூர்வாபராதம்வாராது. மற்றுள்ளார்க்கு வந்தால் அதிகாரானுரூபமாகப் புநஃப்ரபதநம் ப்ராயஶ்சித்தமாம். இது தப்பினபோது ஹிதைஷியான ஈஶ்வரன் மிக்ஷைகளாலே பூரிகரும். புத்திபூர்வோத்தராகத்தையும் கூட இங்கேவிவக்ஷித்தாலும் (கழித்தாலும்) இதற்கு உசிதப்ராயஶ்சித்தத்திலே மூட்டுகிறதும், லகு ப்ரத்யவாயங்களைக்காட்டுகிறதும் 'மோக்ஷயிஷ்யாமி' எனறு சொன்ன மோசநப்ரகாரமாம். அநந்தபலத்தையும் இழந்து அநந்த துக்கத்தை அநுபவித்துக் கொண்டிருக்கை துஸ்ஸஹமாகையாலே அதிமாயித மோகனுய் விளம்பக்ஷமனன்றிகே பரபந்நனுனவனுக்கு ப்ரபத்தி ப்ராரப்த கர்மத்துக்கும் ப்ராயஶ்சித்தமாம். இது 'மா ஶுசः' என்கிற வாகயத்தின் ஸாமர்த்யத்தாலும், ப்ராரப்தத்தையும் ஸங்க்ருஹிக்கவற்றுன 'ஸர்வ பாப' மபத ஸ்வாரஸ்யத்தாலும்

1 'सा ऽघभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी'

(ஸாத்ய பக்திஸ் து ஸா ஹந்த்ரீ பராரப்த ஸ்யாபி பூயஸீ)

என்று விமோஷித்துச் சொல்லுகையாலும் ஸித்தம். ஆகையால்

1 'சரணமாகும் தனதாள அடைந்தார்க்கெல்லாம்
மரணமானுல் வைகுந்தம் கொடுக்கும்பிரான்'

---

1. ஸா - அந்த, ஸாத்யபக்திः து - ஸாத்யபக்தி எனப்படும் ப்ரபத்தியோ எனில், ப்ராரப்தஸ்யாபி - (பலன்கொடுக்க ஆரம்பித்திருக்கும்) ப்ராரப்த கர்மத்திற்கும், பூயஸீ அதிகமான, (அதாவது அதிக சக்தியுடைய, ஹந்த்ரீ-நாசத்தை உண்டாகக்கூடியது. (பக்தியோகம் ப்ராரப்த கர்மத்தைத் தவிர மற்ற பாபங்களைப் போக்கும் சக்தியுடையது, ப்ரபத்தியோ அந்த ப்ராரப்த கர்மத்தையும்போக்கக்கூடிய சக்தி உடையது.

2 திருவாய் - 9 - 10-5

என்கிறபடியே புநர்ஜந்மமின்றிக்கே ஒழிகிறது. 'மரணமானுல்' என்கிற இடம் ஆர்த்தர், த்ருப்தர் இருவர்க்கும் ஒக்கும். போகத்தாலேயாதல் ப்ரபத்தி வைபவத்தாலேயாதல் ப்ராரப்தகர் மாவஸாநத்திலேயாதல் மோக்ஷமானமை எல்லாருக்கும்ஒக்கும், இப்படி

1 'போயபிழையும்'

இத்யாதிகளிற் சொன்ன விரோதிகளைக் காட்டி, இவற்றைத் தான்கழிக்கும்படியைஅருளிச்செய்கிறன். 'மோக்ஷயிஷ்யாமி' என்றது ஸாபராதரை ஸம்ஸரிப்

மோக்ஷயிஷ்யாமி சப்தார்த்தம்

பிக்கைக்குப் பண்ணி வைத்த அபிஸந்திகளை யெல்லாம் விடக் கடவேன் என்றபடி.

2 'एतत् व्रतं मम' (ஏதத் வ்ரதம் மம)

என்று சொல்லப்பட்ட அவர்ஜநீய ஸங்கல்பம் இங்கே விவக்ஷி தம். இப்போது உபதேஶகாலமாகையாலும், பலம் உபாயம் அநுஷ்டித்தால் வருமாகையாலும், ப்ரபத்த்யநந்தர க்ஷணம் முதலாக அதன் மேல் குறைவற உனக்குவேண்டும் காலத்திலே உன்னை விரோதிகளில் நின்றும் விடுவிக்கக் கடவேன் என்ற தாயிற்று.

விடுவிக்கும் க்ரமம்—உபாயாரம்ப தசையில் பூர்வாகத்தில் ப்ராரப்தமல்லாதவற்றையும், ப்ராரப்தத்தில் இருக்க இசைந்த காலத்திற்கு மேல் உள்ள அம்ஶத்

ஸர்வ பாப நிவ்ருத்தி ப்ரகாரம்

தையும், உத்தராகத்திலே ப்ரா மாதிகாம்ஶத்தையும் இவனுடு துவக்கறுக்கக் கடவன் என்று ஸங்கல்பித்து, புத்திபூர்வோத்தராகத்திற்கும் ப்ராயஶ்சித்தாதி களாலே செலவு செய்து, அஶ்லேஷ விநாச விஷயங்களான பாபங்களையெல்லாம் தேஹ வியோக காலத்திலே இவனுடு துவக்கறுத்து, இவையெல்லாம் அநுகூலர் ப்ரதிகூலர் பக்கலிலே ஸங்க்ரமிக்கிறன என்னும்படியாய் அவர்களுடைய ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களுக்குப் பலமாக இவனுக்குக் கழிக் கிறதோடு துல்யமான பல ப்ரதாநத்திலே ஸங்கல்பத்தைப்

---

1 திருப்பாவை - 5

2 ராமா யுத்த - 18 - 33. ஏதத் - இது, (அதாவது சரணு கதனைக் காப்பாற்றுவது என்பது) மம - எனக்கு, வ்ரதம்.

பண்ணி, உத்க்ராந்தி பாதத்திலும் அர்ச்சிராதி பாதத்திலும் சொன்ன கட்டளையிலே ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ரக்ருதி விஸ்ரஸே ஷத்தைப்பண்ணி, ஸர்வதிரோதாந நிவ்ருத்தியை உண்டாக்கும்.

இப்படி ப்ரதிபந்தக நிவ்ருத்தியைச் சொல்லவே

1 'मामेवैष्यसि' (மாமேவைஷ்யஸி)

என்று கீழ்ச் சொன்ன ஸ்வரூப ப்ராப்தாநுபவமும் இங்கே பலிக்கிறது. இவ்வீஸ்வர அபிப்ராயத்தை * ஸ்லோக த்வயத்திலும் கண்டுகொள்வது. இத்தை அறிந்தவன்

3 'வீடு பெற்ற'

இத்யாதிகளிற்படியே யதா மநோரதம் பல ஸித்தியில் நிஸ்ஸம் ஸயனுய் இருக்கும்.

இப்படி ப்ரபந்நனுக்கு ஸர்வபாபங்களும்கழிகையாலே 'பாபத்திற்கு அஞ்சித் தபிக்கவேண்டா' என்கிற ஸ்ருதியின்படியாலும், துஷ்கரோபாயங்களில் அலையவேண்டாமையாலும், விலக்ஷணே மா சுச: சப்தார்த்தம் பாய விஸேஷம் ஸித்திக்கையாலும், ந்யஸ்த பரனுக்கு இவ்விஷயத்தில் கர்த்தவ்யஸேஷமில்லாமையாலும், பின்பு விவேகிக்குப் புத்தி பூர்வாபராதம் வாராமையாலும், வந்தவற்றுக்கும் உசித ப்ராயஸ்சித்தாதிகளாலே கடுக உபஸாந்தி உண்டாகையாலும், உன்னை ரக்ஷியாதபோது ஸிஷ்டகர்ஹையும் அகீர்த்தியும் குண ஹாநியும் வ்ரதபங்கமும் எனக்கு வரும்படியாயிருக்கையாலும், ஸ்வீக்ருதபரனை நான் தநாதி ரக்ஷணந்யாயத்தாலே ஸ்வார்த்தமாக ரக்ஷிக்க நிற்கையாலும், இனி உனக்கு ஹர்ஷஸ்த்தாநமாயிருக்க ஸோகிக்க ப்ராப்தியில்லை என்கிறான். 'மா ஸுச:' பரந்யாஸம் பண்ணினதை நினைத்த விஷயத்தில் ஸோகிக்கை அநாதிகாலம்ஸோகியாதிருந்ததோடு ஒக்கும். முன்பு ஸோகித்தாயில்லையாகில் அதிகாரியாகாய், மேல் ஸோகித்தாயாகில் இவ்வு பாயத்தின் ப்ரபாவத்தையும் உன்னுடைய விஸ்வாஸாதிகளையும் என்னுடைய குணதிகளையும் அழித்தாயாமத்தனை. 'மா ஸுச:,

1 கீதை - 18-65. மாமேவ - என்னையே, ஏஷ்யஸி - அடையப் போகிறாய்.

* ச்லோக த்வயம்-ஸ்ரீரஹஸ்யசிகாமணி என்னும் ரஹஸ்யத்தில்வ்யாக்யானம் செய்யப்படுகிறவராஹசரம ச்லோகம். 3 திருவா-10-10-11

என்கிற வாக்யத்தின்கருத்தை விஸ்தரமாகக் கத்யத்தின் முடிவிலே கண்டுகொள்வது.

சரம ச்லோகத்தின் திரண்ட பொருள்

இச்ச்லோகத்தின் திரண்ட பொருள்—' மோக்ஷோபாயாந் தரங்களில் அந்வயமற்ற நீ சரணாகத வத்ஸலத்வாதி குணவி சிஷ்டனை என் பக்கலிலே பரந்யாஸத்தைப் பண்ணு, ஸர்வ சக்தித்வாதி குணவிசிஷ்டனை நான் ந்யஸ்தபரனை உன்னை ஸமஸ்த ப்ரதிபந்தக நிவ்ருத்தி பூர்வக மத் ப்ராப்தியாலே க்ருதார்த்தனாக்குகிறேன், இனி நீ சோகிக்கவேண்டா '—என்கை.

இதில் சொன்ன உபாயம் ஸர்வாநிஷ்டங்களையும்சிக்கவற்றுகையாலே உபாயவிரோதியைக் கழிக்கும்படியை ஸ்ரீமத் கீதா பாஷ்யத்திலும், ப்ராப்தி விரோதி ப்ரபத்தியின்ஸர்வபலஸாதநத்வம்யைக் கழிக்கும் படியை கத்யத்திலும் உதாஹரித்தருளினார், ஆகையால் இரண்டுக்கும் விரோதமில்லை.

1 ' शरणं च प्रपन्नानां ' (சரணம் ச ப்ரபந்நாநாம்)

இத்யாதி ஸாமாந்யவாக்யத்தாலும்.

2 ' गच्छत्वमेनं शरणं ' (கச்சத்வமேநம் சரணம்)

இத்யாதி விசேஷ வாக்யத்தாலும் ஸமர்த்த காருணிக புருஷ விசேஷவிஷய சரணாகதி பலாவிநாபூதை என்று அறுதியிட்ட அர்ஜுநன்

3 ' शिष्यः तेऽहं शाधि मां त्वां प्रपन्नं '

(சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்)

என்று ஜ்ஞாந லாபார்த்தமாகப் பற்றின உபாயம்தன்னையே

---

1 விஷ்ணு தர்மம் - 106-53 ப்ரபந்நாநாம் - ப்ரபத்தி செய்பவர்களுக்கு. சரணம் - சரணமாக இருப்பவன்.

2 பார-வன-19-55 27- ம் பக்கம் பார்க்க

3 கீதை-2-7 அஹம்-நான், தே-உமக்கு, சிஷ்ய:-சிஷ்யன், த்வாம்-உம்மை.ப்ரபந்நம்-சரணமாக அடைந்த, மாம்-என்னை, சாதி - உத்திரவு செய்யும்.

1 'मामेव ये प्रपद्यन्ते' (மாமேவ யே ப்ரபத்யந்தே)
இத்யாதிகளாலே ஸாதநாந்தரத்திற்கு அங்கம் என்றும், இங்கே மோக்ஷத்திற்கும் இதுதானே ஸ்வதந்த்ரஸாதநம் என்றும் உபதேஸித்து

2 'यत् श्रेयः स्यात् निश्चितं ब्रूहि तन्मे'
(யச் ச்ரேயः ஸ்யாத் நிஸ்சிதம் ப்ரூஹி தந்மே)
என்று ஸாமாந்யமாக ப்ரவ்ருத்தமான ப்ரஸ்ந வாக்யத்தை ஸரண்யன் தன் பரம க்ருபையாலே இப்படி விஸேஷித்து ஸர்வாதிகார ஸக்ருத் கர்த்தவ்ய பரம ஹிதோபதேஸபர்யந்த மாகஸித் தலைக்கட்டி அறுதியிட்டருளினன்.

ரஹஸ்ய த்ரயார்த்த ஜ்ஞாந ப்ரயோஜநம்.

இப்படி ரஹஸ்யார்த்த விஸேஷங்களெல்லாம் தெளிந்தவன் பின்பு கற்குமதெல்லாம் கைங்கர்யம். இது தெளியாதவன் கற்குமது தெளிகைக்கு உறுப்பாம். இவற்றோடு துவக்கற்ற வித்யை ஸில்ப நைபுணம்.

3 அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்
அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த *
குறை யாதுமில்லாத கோவிந்தா ! நின்
குரைகழற்கீழ் அடைக்கலமாம் குறிப்புத் தந்தாய் *
வெறியாரு மலர்மகளும் நீயும் விண்ணில்
விண்ணவர்கள் அடிசூட இருக்குமேன்மை *

---

1 கீதை - 7 - 14 மாமேவ - என்னையே, யே - எவர்கள், ப்ரபத்யந்தே - சரணம் அடைகிறார்களோ (அவர்கள் இந்த ப்ரக்ருதியைத் தாண்டுகிறார்கள்.)

கீதை - 2 - 7 - ம் பக்கம் பார்க்க

3 அறியாத - ஜ்ஞாநமில்லாத இடைச்சியரும் - இடைச்சிகளும் அறியும்வண்ணம் - தன்னை அறிந்து கொண்டு அநுபவிக்கும்படி, அம்புயத்தாளுடன் - தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கும் லக்ஷ்மியுடன், அந்நாள் - அந்தக் காலத்தில் அதாவது த்வாபரயுகத்தில், அவதரித்த ஸ்ரீ க்ருஷ்ணனாய் பிறந்தருளியவனையும், குறை யாதும் - ஒரு விதக்

குறையாத வினையகற்றி அடிமை கொள்ளக்
குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே 12

1 தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும்
தாரம் முதல் இரு நான்கும் * தன் கருத்தால்
முத்தி வழி நாம் முயலும் வகையே காண
முகுந்தன் இசைத்தருள் செய்த ஐந்நாலைந்தும் *
பத்திதனில் படிவில்லார் பரம் சுமத்தப்
பார்த்தன் தேர் முன்னே தாம் தாழ நின்ற *
உத்தமனூர் உத்தம நல் உரை நாலெட்டும்
உணர்ந்தவர் தாம் உகந்து எம்மை உணர்வித்தாரே 13

குறையும் இல்லாதவனுயும் இருக்கும், கோவிந்தா - பகவானே! நின் உன்னுடைய, குரை கழல் கீழ் - (வீரச் சிலம்புகள்) ஒலியா நிற்கும் திருவடிகளின் கீழே, அடைக்கலம் ஆம்-ரக்ஷ்யவஸ்துவாக இருக்கும் படியான, குறிப்புத்தந்தாய் - கருத்தைக் கொடுத்தருளினுய், வெறி - வாஸனை, ஆரும்-பூர்ணமாயிருக்கும், மலர்மகளும்-தாமரைப்புஷ்பத்தில் அவதரித்த லக்ஷ்மியும், நீயும், விண்ணவர்கள் அடிசூட - நித்யர்களும் முக்தர்களும் உம்முடைய திருவடிகளைத் தங்கள் சிரஸ்லிஞல் வஹித்து அடிமை செய்யும்படி, விண்ணில் – ஸ்ரீ வைகுண்டத்தில், இருக்கும் மேன்மை - எழுந்தருளியிருக்கும்படியான மேன்மையுடன், குறையாத - குறைந்து போகாத, அதாவது நாசமடையாத, வினை - எங்களுடைய பாபங்களை, அகற்றி - போக்கி, அடிமை கொள்ள - நாங்களும் அடிமை செய்வதை ஏற்பதற்கு, குறுக - சீக்கிரத்தில், ஒரு, நன்னாள் - நல்ல நாளை, நீ, குறித்திடாய் - ஸங்கல்பித்தருளாய்.

1 தத்துவமும் - தத்த்வத்தையும், சாதனமும் - உபாயத்தையும், பயனும் - பலத்தையும், காட்டும் - ப்ரகாசிப்பிக்கிற, தாரம் முதல் - ப்ரணவத்தை ஆரம்பமாகக் கொண்ட, இருநான்கும் - எட்டு எழுத்துக் களையுடைய திருமந்திரத்தையும், முத்தி வழி - மோக்ஷத்தை அடை வதற்கு உபாயத்தில், நாம், முயலும் – ப்ரவர்த்திக்கும், வகை - ப்ரகா ரத்தை, காண - தெரிந்து கொள்வதற்காக, முகுந்தன் - பகவான், தன் கருத்தால் - தன்னுடைய ஸங்கல்பத்தினுல் இசைத்து - (பிரித்து ஓதப்பட்ட இரண்டு வாக்யங்களையும்) ஒன்றுகச் சேர்த்து, அருள் செய் த - லோகஹிதார்த்தமாக உபதேசித்தருளிய, ஐந்நாலைந்தும் - இருபத் தைந்து அக்ஷரங்கள் அடங்கிய த்வயத்தையும், பத்திதனில் படிவில் லார்-பக்தியோகத்தை அநுஷ்டிக்கமுடியாதவர்கள், பரம் - தங்களு டையரக்ஷணபரத்தை, சுமத்த - (பகவானிடம்) வைக்க பார்த்தன்- அர்ஜுனனுடைய, தேர்முன்னே - தேரின் முன்பாகத்தில், தாழநின்ற- ஸாரதியாகத் தாழ்ந்து நின்ற, உத்தமனூர் – ஸர்வோத்தமனுகிய பகவா

1 பரக்கும் புகழ் வரும் பைம்பொருள் வாய்த்திடும் *பத்தர்களாய்
இரக்கின்றவர்க்கு இவை ஈந்தால் அறமுளதென்றியம்பார்*
கரக்கும் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மை எண்ணிச் *
சுரக்கும் சுரவிகள் போல் சொரிகின்றனர் சொல்லமுதே. 14

2 विमृशत निरपायं वेङ्कटेशप्रणीतं सहृदय बहुमान्यं सारसारं तदेतत् ।
बुधभजन विभाते बोधमासेदुषीणां परिमळमिव दिव्यं भावना.ब्धिनीनाम् ॥

விம்ருசத நிரபாயம் வேங்கடேசப்ரணீதம்
ஸஹ்ருதய பஹுமான்யம் ஸாரஸாரம் ததேதத் ।
புதபஜந விபாதே போதமாஸேதுஷீணாம்
பரிமளமிவ திவ்யம் பாவநாபத்மினீநாம் ॥

னுடைய, உத்தம - ஸர்வோத்க்ருஷ்டமான, நல் - நல்ல, உரை நாலெட்டும்-முப்பத்திரண்டு அக்ஷரங்கள்அடங்கிய சரம சுலோகத்தையும், உணர்ந்தவர் -(அர்த்தத்துடன்) தெரிந்த ஆசார்யர்கள், எம்மை உகந்து - நம்மிடம் ப்ரீதியினால், உணர்வித்தார் - உபதேசித்தார்கள்.

1 பத்தர்களாய் - பக்தியுடன் கூடித் தங்களை ஆச்ரயித்து, இரக்கின்றவர்க்கு-யாசிப்பவர்களுக்கு, இவை-இந்த ரஹஸ்யார்த்தங்களை, ஈந்தால் - உபதேசித்தால், பரக்கும் - லோகங்களில் பரவுகின்ற, புகழ் - கீர்த்தி, வரும் - உண்டாகும், பைம் - ஸ்ப்ருஹணீயமான, பொருள் - தனம், வாய்த்திடும் - கிடைக்கும், அறம் - தர்மம், உளது - உண்டு, என்று - இப்படி நினைத்து, இயம்பார் – சொல்லாதவர்களாய், கரக்கும் - ரஹஸ்யார்த்தங்களை மறைத்துவைக்கவேண்டும் என்னும் கருத்துடை - திருவுளத்தையுடைய, தேசிகர் - நம் ஆசார்யர்கள், (நம்மை), கன்றென - கன்று என்று, எண்ணி - நினைத்து, சுரக்கும் - (பால்) சுரக்கின்ற,சுரவிகள் போல் - பசுக்களைப்போல, சொல்லமுது - அமுதம் போன்ற சொற்களை, சொரிகின்றனர் - வர்ஷிக்கின்றனர், வாத்ஸல்யத்தினாலே நமக்கு உபதேசிக்கிறார்கள் என்றபடி.

2 நிரபாயம் - தவறு இல்லாததும் ஸஹ்ருதய - நல்லமனஸை உடையவர்களினால் பஹுமான்யம் - பஹுமானிக்கத் தக்கதும், வேங்கடேசப்ரணீதம்-வேங்கடேசன் என்னும் திருநாமமுள்ள ஆசார்யனால் இயற்றப்பட்டதுமான, தத் - அப்படிப்பட்ட, ஏதத் - இந்த, ஸாரஸாரம் - ஸ்ரீ ஸாரஸாரம் என்னும் ரஹஸ்யத்தை,புதபஜந -ஆசார்யர்களை வழிபடுவதாகிய, விபாதே - காலைப்பொழுதில், போதம் - ஜ்ஞானத்தின் மலர்ச்சியை,ஆஸேதுஷீணாம் – அடைந்தவைகளான, பாவநபத்மினீநாம் - சிந்தைகளாகிற தாமரைஓடைகளின்,திவ்யம்-சிறந்த,பரிமளம் இவ - வாஸனையைப்போலவே (கருதி), விம்ருசத - ஆராய்ந்து அனுபவியுங்கோள்,

1 विधिविहित सपर्यां वीतदोषानुषङ्गां उपचित धनधान्यां उत्सवैस्त्वत्यानहर्षाम् ।
स्वयमुपचिनु नित्यं रङ्गधामन् सुरक्षां शमित विमत पक्षां शाश्वतीं रङ्गलक्ष्मीम् ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
॥ श्री सारसारः संपूर्णः ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

விதிவிஹித ஸபர்யாம் வீத தோஷாநுஷங்காம்
உபசித தநதாந்யாம் உத்ஸவை: ஸ்த்யாஹர்ஷாம் ।
ஸ்வயமுபசிநு நித்யம் ரங்கதாமந் ஸுரக்ஷாம்
ஸமிதவிமத பக்ஷாம் ஸாச்வதீம் ரங்கலக்ஷ்மீம் ॥

சரமஸ்லோகாதிகாரம்என்னும்
மூன்றும் அதிகாரம் முற்றிற்று

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்
ஸ்ரீ ஸாரஸாரம் முற்றிற்று

---

1 ரங்கதாமந் - ஸ்ரீரங்கத்தை வாஸ ஸ்த்தாநமாகவுடைய ஸ்ரீ ரங்கநாதனே! விதிவிஹித – சாஸ்த்ர முறைப்படி செய்யப்பட்ட, ஸபர்யாம் - ஆராதநத்தையுடையதாய், வீத - போக்கப்பட்ட, தோஷ - தோஷத்தின், அநுஷங்காம் - ஸம்பந்தம் உடையதாய், உபசித - வ்ருத்தி அடைந்திருக்கிற, தந தாந்யாம் - செல்வம், தாந்யங்களோப் பெற்றதாய், உத்ஸவை:- (எம்பெருமானுடைய) உத்ஸவங்களிஞல், ஸ்த்யாஹர்ஷாம் - மகிழ்ச்சி பொங்கப் பெற்றதாய், ஸுரக்ஷாம் - நல்ல தற்காப்பையுடையதாய், சமிதவிமதபக்ஷாம் - (உம்முடைய அநுபவத்திற்கு) விருத்தமான பக்ஷங்கள் அழியப்பெற்றதாய், சாச்வதீம் - நிலைபெற்றதான, ரங்கலக்ஷ்மீம் - திருவரங்கச் செல்வத்தை, ஸ்வயம் - தானே, நித்யம் - எப்பொழுதும் உபசிநு - வ்ருத்தியடையும்படி செய்.

ஸ்ரீ அபய ப்ரதாநஸார ரஹஸ்ய விஷயமாய்ச் சில விசேஷக் குறிப்புக்கள்.

"அபயப்ரதாநஸாரம்" என்பதற்கு "நீ பயப்படாதே, நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்று அஞ்சல் கொடுக்கும் ப்ரகரணங்களில் ஸாரமானது (ப்ரதானமானது) இது என்று பொருள்.

இந்த ரஹஸ்யத்தில் மூன்றுவது அதிகாரத்தில்

'இப்படி ஆறு காண்டத்திலும் ஸரணாகதி தர்மமே அஞ்சுரு ஆணியாகக் கோக்கப்பட்டது' என்றும்,

'மற்றுமுள்ள க்ஷத்ரிய தர்மாதிகளிலும் காட்டில் ஸரணாகத ரக்ஷணதர்மமே பெருமாளுக்கு அநுபாலநீயம்' என்றும்,

'தாத்பர்ய லிங்கங்களையெல்லாம் பரிபூர்ணமாக உடைய தாய், ஸ்ரீ வால்மீகி பகவானுலே த்ருஷ்டமாயிருப்பதொரு ஸரணாகதி வேதம், இதில் இவ்வபய ப்ரதாந ப்ரகரணம் ஸர்வரஹஸ்ய ஸாரங்களையும் திரள வெளியிட்ட உபநிஷத் பாகம்'

என்றும் அருளிச் செய்திருப்பதைப் பராமர்சித்தால் சரணாகதியை ப்ரபஞ்சிக்கும் க்ரந்தங்களும் சரணாகதி ப்ரகரணங்களும் பலவாயிருந்த போதிலும் அவற்றிலெல்லாம் ப்ரதானமானது ஸ்ரீராமாயணம் என்றும், அதில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் சரணாகதி வ்ருத்தாத்தங்களில் ஸாரமானது (முக்கியமானது) ஸ்ரீவிபீஷண சரணாகதி ப்ரகரணம் என்றும் ஸ்வாமி தேசிகனுடைய திருவுள்ளம் என்று ஏற்படுகிறது.

இந்த ரஹஸ்யம் பத்து அதிகாரங்களையுடையது. அதில் முதல் அதிகாரத்தில்

'வேதோபப்ரும்ஹண ஸாபேக்ஷரான அல்ப ஸ்ருதர் பக்கல் இரக்கத்தாலும், அவர்களைப் பற்ற வேதங்களுக்கு உண்டான ப்ரதாரண பயத்தை ஸமிப்பிக்கைக்காகவும் .....உபப்ரும்ஹண ரூபமான இப்ப்ரபந்தத்தை ப்ரவர்த்திப்பித்தான்'

என்று ஸ்ரீ ராமாயணத்தின் நோக்கம் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாவது அதிகாரத்தில் இதில் செய்யப்படும் உபப்ரும்ஹணம் பல விஷயங்களைப் பற்றியதாயிருந்த போதிலும் அவற்றின் பிரிவு

'ஸர்வ ஸரண்ய பரதத்த்வ விஷயமாயும், ஸர்வாதிகாரமான ஸரணாகதி ரூப பரம ஹித விஷயமாயும் இரண்டு வகையாயிருக்கும், . . . பரம காரணமான பர தத்த்வத்தை ப்ரதிபாதிக்கிற வேத பாகங்களுக்கு உபப்ரும்ஹணம் பண்ணினான்'

என்று பரதத்த்வ விஷயமான உபப்ரும்ஹணம் செய்யப்பட்டிருக்கிறது

மூன்றுவது அதிகாரத்தில் சரணாகதி விஷயமான வ்ருத்தாந்தங்களை எடுத்துக்காட்டி அதுவே பரமஹிதம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு காண்டத்திலும் கூறப்பட்ட வ்ருத்தாந்தங்கள் எடுத்துக் காட்டப்பட்டு, இப்படி சரணாகதி தர்மத்தை விசேஷித்து ப்ரதிபாதிப்பதினால் ஸ்ரீராமாயணம் சரணாகதி வேதமாகும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நாலாவது அதிகாரம் முதல் பத்தாவது அதிகாரம் இறுதியாக ஸ்ரீராமாயணத்தில் விபீஷண சரணாகதி ப்ரகாரம் விசாரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராமாயண ச்லோகங்களுக்கு ஸ்வாமி தாமே தமக்கு அஸாதாரணமான மணிப்ரவாள நடையில் மிகவும் அபூர்வமாயும். அதிரஸமாயும் இருக்கும் அர்த்த விசேஷங்களை நிரூபித்தருளியிருக்கிறார். இந்த நிரூபணம் மிகவும் ஆச்சர்யமாயிருக்கும். ஸேவிப்பவர்களுக்கு ஆநந்த பாஷ்பமும், மயிர்க்கூச்சலும் ஏற்படும்படி உபபாதநம் அமைந்திருக்கிறது.

இந்த ஏழு அதிகாரங்களில் விபீஷணன் சரண்யனைக் குறித்து சரணாகதி செய்ய, அதற்கு வானர முதலிகள் பல ஆக்ஷேபங்களைச் சொல்ல, அவற்றிற்கெல்லாம் ஸமாதானம் அருளிச்செய்து, சரணாகத ஸம்ரக்ஷணமே தமக்கு வ்ரதம் என்று நிகமித்து ஸுக்ரீவனையே 'நீ போய் விபீஷணனை அழைத்து வா' என்று நியமித்தருளி, விபீஷணனுடன் பெருமாள் ஸம்பாஷிப்பது முக்தாத்மாவிற்கும் எம்பெருமானுக்கும் மோக்ஷத்தில் நடக்கும் ஸம்வாதம் போல் இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் சரணாகதி பலிக்கவில்லையே என்பது முதலிய ஆபாதப்ரதீதியில் உண்டாகும் ஸந்தேஹத்தைப் போக்குவதற்காக இதில் பரதனுடைய சரணாகதி, காகத்தைக் கண்ணழிவு செய்து காப்பாற்றியது, பரசுராமனுடைய நல்லகதியைத் தடுத்தது. ஸமுத்திரராஜனிடம் சரணாகதி செய்தது, வாலியை வதம் செய்தது முதலிய வ்ருத்தாந்தங்களின் தாத்பர்யார்த்தம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ரஹஸ்யத்ரயம் ப்ரதானமாய் நிற்குமா போலே, அவற்றில் ப்ரதிபாதிக்கப்படும் சரணாகதியாகிற உபாயம் வேதங்களில் உத்கோஷிக்கப்பட்டிருந்தபோதிலும், மூன்று அவதாரங்களில் இந்த உபாயத்தின் ப்ரபாவம் விசேஷித்து நிரூபிக்கப்பட்டு, அதின் ஸங்க்ரஹமாய் மூன்று ச்லோகங்கள் எம்பெருமானுலேயே கூறப்பட்டிருக்கின்றன இவற்றை ஸ்ரீவராஹ சரமச்லோகம் என்றும், ஸ்ரீராம சரமச்லோகம் என்றும், ஸ்ரீக்ருஷ்ண சரமச்லோகம் என்றும் வழங்குகிறார்கள்.

இவற்றில் ஸ்ரீவராஹ சரமச்லோகம் எனப்படும் இரண்டு ச்லோகங்களும் மேலே25-ம்ரஹஸ்யமான ஸ்ரீரஹஸ்ய சிகாமணியில் விஸ்தரமாக உபபாதிக்கப்படுகின்றன. ஸ்ரீ ராமாவதார சரமச்லோகமாகிய 'ஸக்ருதேவ ப்ரபந்நாய ' என்கிற ச்லோகார்த்தம்இந்த ரஹஸ்யத்தில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ க்ருஷ்ணாவதார சரமச்லோகம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் மிகவும் விஸ்தரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்ரீராமாவதார சரமச்லோகத்தின் உட்கருத்தை மூல ச்லோகத்தில் ஒரு பதத்தின் அர்த்தத்தைக்கூட விடாமல் அவற்றின் விசேஷார்த்தங்களோடு ஒரு பாட்டிலே ஸங்க்ரஹித்துக் காட்டியிருக்கிறார்.

ஸக்ருதேவ ப்ரபந்நாய—ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும்
தவாஸ்மீதி ச யாசதே—உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றார்க்கும்
ஸர்வபூதேப்ய:—அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்
அபயம்—அஞ்சேல்
ததாமி—என்று அருள் கொடுப்பன்
ஏதத்—இது தான்
வ்ரதம்—ஒதும் இருக்காலும் எழின் முனிவர் நினைவினுலும் இவை
அறிவார் செயலுடன் என் இசைவினுலும் நெருக்காத நீள் விரதம்
மம—எனக்கு ஒன்று என்று
நெறியுரைத்தார் நிலை உணர்ந்து நிலை பெற்றேமே.

மஹர்ஷி வேதோபப்ரும்ஹணம் செய்ய முற்பட்டுவந்தாலும் 'வ்ரதம்' என்று கூடமாய்ச் சொல்லி நிறுத்திவிட்டான். அந்த எம்பெருமானே இந்தக் குருவராய் அவதரித்தபடியினல் தம் திருவுள்ளக் கருத்தில் இருந்ததை எல்லோரும் எல்லாக் காலத்திலும் அறிந்து சரணாகதி செய்து உஜ்ஜீவிக்கட்டும் என்கிற இவ்வுலகினில் மிக்கதான அருளுடையவராய் இப்படி விசேஷித்து நிரூபித்தாராயிற்று. ஸ்ரீ வராஹ சரமச்லோகத்திற்கும் இப்படியே ஒரு தமிழ்ப்பாட்டு அருளிச் செய்திருக்கிறார்.

பகவானை அடைவதற்காக வேதாந்தங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் உபாயங்களில் ப்ரதானமானது சரணாகதியே என்பதை

" வேதத்திரளில் விதியுணர்ந்தோர்கள் விரித்துரைத்த
காதல் கதியையும் ஞானத்தையும் கருமங்களையும்
சாதிக்கவல்ல சரணாகதி தனி நின்ற நிலை
ஓதத் தொடங்கும் எழுத்தின் திறத்தில் உணர்மின்களே."

என்று இப்ரபந்தத்தின் இறுதியில் ஒரு பாட்டிலே நிரூபித்துள்ளார்.

இந்த ரஹஸ்யத்தில் சில ஸாம்ப்ரதாயிக நிர்ணயங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

சக்கரவர்த்தித் திருமகன், பெருமாள்—ராமன்
மஹாராஜர்—ஸுக்ரீவன்
முதலிகள்—வானரர்(முதன்மையானவர்கள் அக்ரகண்யர்கள்)
இளைய பெருமாள்—லக்ஷ்மணன்
திருவடி—ஹனுமான்
ஸ்ரீ சடகோபன், திருவடி நிலை—பாதுகை
பரதாழ்வான்—பரதன்
விபீஷணாழ்வான், பரம தார்மிகன்—விபீஷணன்
தன்னுடைச்சோதி—வைகுண்டம்
ஸர்வஜ்ஞ ஸம்ஹிதை—அஹிர்புத்ன்யஸம்ஹிதை

இதில் திருக்கண்ணமங்கையாண்டான் படி எது என்று 3ம் அதிகாரத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

1 ‘கடைத்தலை இருந்து வாழும் சோம்பரை உகத்தி’ என்னும் அர்த்தத்தை வெளியிட்டான்’

என்று அருளிச் செய்திருப்பதைப் பார்த்தால் வேதோபப்ரும்ஹணமாகிய இந்த ஸ்ரீராமாயணம் சந்தமிகு தமிழ் மறைகளுக்கும் உபப்ரும்ஹணமாயிருக்கும் என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம் போலும் என்று தோன்றுகிறது.

கடைசி ச்லோகத்தில் இந்த ரஹஸ்யத்தைத் தாம் அருளிச்செய்ததற்கு மூலகாரணம் ஆசார்ய ப்ரஸாதம் என்று கூறியிருக்கிறார்.

இந்த ரஹஸ்யத்தில் ஸ்வாமி தேசிகனால் உதாஹரிக்கப்பட்டு விவரிக்கப்படுகிற ச்லோகங்களின் பாடங்களுக்கும், தத் காலத்தில் ப்ரசாரத்தில் இருக்கிற ராமாயண பதிப்புக்களில் காணப்படுகிற ச்லோகங்களின் பாடங்களுக்கும் சிற்சில இடங்களில் பேதங்கள் காணப்படுகின்றன. சில ச்லோகங்கள் காணப்படவேயில்லை. ஸ்வாமியின் பாட்டுகளே இதில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

குறிப்பு—12வது ரஹஸ்யம் ஸ்ரீ பரமபத ஸோபானம் தனி ரஹஸ்யங்களில் ஒன்றாகையினால் அப்படிப்பட்ட மற்ற ரஹஸ்யங்களுடன் ஆறாவது ஸம்புடத்தில் ப்ரசுரிக்கப்படுகிறது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

இருபத்திமூன்றுவது ரஹஸ்யம்

ஸ்ரீ அபயப்ரதாநஸாரம்

[இது அம்ருதாஸ்வாதினீ ரஹஸ்யங்களில் இரண்டாவது. ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

ப்ரபந்தாவதாரம் என்னும் முதல் அதிகாரம்

[மங்களாசரணம்—ராம சரம ச்லோகார்த்த ஸங்க்ரஹம்—ராமாயண ப்ரவர்த்தந ப்ரகாரம்—ராமாயண ப்ரவர்த்தந நோக்கம்.]

மங்களாசரணம்

1 जयत्याश्रित संत्रास ध्वान्त विध्वंसनोदयः ।
प्रभावान् सीतया देव्या परमव्योमभास्करः ॥

ஜயத்யாஶ்ரித ஸந்த்ராஸ த்வாந்த வித்வம்ஸநோதயः ।
ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரமவ்யோமபாஸ்கரः ॥

---

1 ஆச்ரித - ஆச்ரிதர்களுடைய, ஸந்த்ராஸ - பயமாகிற, த்வாந்த - இருட்டை, வித்வம்ஸந - போக்கடிக்க, உதயः - உதயம்செய்தவரும் தேவ்யா - பத்நியான, ஸீதயா - ஸீதையால் ப்ரபாவாந் - ப்ரகாசத்துடனிருப்பவரும் பரமவ்யோம - ஸ்ரீவைகுண்டத்திற்கு, பாஸ்கரः - ஸூர்யன் போன்றவருமான ஸ்ரீராமன், ஜயதி - ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகிறார்

1 प्रायः प्रपदने पुंसां पौनःपुन्यं निवारयन्।
हस्तः श्रीरङ्गभर्तुः मामव्यादभयमुद्रितः ॥

(ப்ராய: ப்ரபதநே பும்ஸாம் பௌந: புந்யம் நிவாரயந்।
ஹஸ்த: ஸ்ரீரங்கபர்த்து: மாம் அவ்யாத் அபயமுத்ரித:)

2 नमस्तस्मै करमै ऽपभवतु निष्किंचन जन
स्वयं रक्षा दीक्षा समधिक समिन्धान यशसे।
सुराधीश स्वैरक्षण कुपित शापायुध वधू
दृषद्वा दुर्जातप्रशमन पदाम्भोजरजसे॥

நமஸ்தஸ்மை கஸ்மைசந பவது நிஷ்கிஞ்சந ஜந
ஸ்வயம் ரக்ஷா தீக்ஷா ஸமதிக ஸமிந்தாந யஶஸே।
ஸுராதீஶ ஸ்வைரக்ஷண குபித ஶாபாயுத வதூ
த்ருஷத்தா துர்ஜாத ப்ரஶமந பதாம்போஜ ரஜஸே ॥

3 சோகம்தவிர்க்கும் சுருதிப்பொருள் ஒன்று சொல்லுகின்றேன் *
நாகம்தனக்கும் இராக்கதர்க்கும் நமக்கும் சரணம் *

---

1 பும்ஸாம் - மனிதர்களுடைய, ப்ரபதநே - ப்ரபத்தி செய்வதில், பௌந:புந்யம் - அநேகம் தடவை செய்தலே, நிவாரயந் - தடுப்பதாக,, ப்ராய:- இருப்பது போன்ற, ஸ்ரீ ரங்கபர்த்து: - ஸ்ரீரங்கநாதனுடைய, அபயமுத்ரித:- அபய முத்ரையுடன் கூடிய, ஹஸ்த:- திருக்கையானது- மாம் - என்னை, அவ்யாத் - காப்பாற்றவேண்டும்.

2 நிஷ்கிஞ்சநஜந - வேறு கதியில்லாத ஜனங்களை, ஸ்வயம்- தாமே,ரக்ஷா-ரக்ஷிப்பதாகிய,தீக்ஷா-தீக்ஷையினால், அன்றிக்கே ரக்ஷிப்பதில் தீக்ஷித்துக்கொண்டிருப்பதினால், ஸமதிக - அதிகமாக ஸமிந்தாந ப்ரகாசம் அடைந்த, யசஸே - கீர்த்தியுடையவராயும், ஸுராதீச - தேவேந்திரனுடன், ஸ்வைரக்ஷண - இஷ்டப்படி இருந்த ஸமயத்தில், குபித - கோபித்துக் கொண்டிருக்கிற, சாபாயுத - சாபத்தை ஆயுதமாகக்கொண்ட,வதூத்ருஷத்தா-கௌதம மஹர்ஷியின்பார்யையாகிற அஹல்யையின் கல்லாயிருக்கையாகிய, துர்ஜாத-கெட்ட ஜந்மத்தை, ப்ரசமந - போக்கடிக்கக்கூடிய, பதாம்போஜரஜஸே - தாமரைப்புஷ்பம் போன்ற தன் திருவடிகளின் தூள்களையுடையவருமான, தஸ்மை கஸ்மைசந - அந்த ஸ்ரீராமன் பொருட்டு, நம: - நமஸ்காரம், பவது - இருக்கட்டும்.

3 சோகம் - நம்முடைய துக்கத்தை, தவிர்க்கும் - போக்கடிக்கக்கூடிய, சுருதிப்பொருள் - வேதத்தின் தாத்பர்யமான அர்த்

ஆகண்டலன் மகனுகிய ஆவலிப்பேறியதோர் *
காகம் பிழைத்திடக் கண்ணழிவே செய்த காகுத்தனே. 15

ராம சரம ச்லோகார்த்த ஸங்க்ரஹம்

1 ஒருக்காலே சரணுக அடைகின்றுற்கும்
உனக்கு அடிமை ஆகின்றேன் என்கின்றுற்கும் *
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்
அஞ்சேல் என்று அருள்கொடுப்பன் * இது தான் ஓதும்
இருக்காலும் எழில் முனிவர் நினைவினுலும்
இவை அறிவார் செயலுடன் என் இசைவினுலும் *
நெருக்காத நீள் விரதம் எனக்கு ஒன்று என்று
நெறி உரைத்தார் நிலே உணர்ந்து நிலே பெற்ருமே. 16

தம், ஒன்று சொல்லுகின்றேன், ஆகண்டலன் மகன் - இந்திரனுடைய மகனுகிய, ஆவலிப்பு - அஹங்காரம், ஏறியது - ஏறியதான, அதாவது அஹங்காரத்துடன் கூடினவனுன, ஓர் - ஒரு, காகம் - காக்கை, பிழைத்திட - உயிரோடு இருக்கும்படியாக, கண்ணழிவே - (ஒரு) கண் ணை அழித்தது மாத்ரம், செய்த - செய்தவனுகிய, காகுத்தன் - ககுத் ஸ்த வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமன், நாகம் தனக்கும் - தேவலோகத் திற்கும். அன்றிக்கே அந்த தேவலோகத்தில் வஸிப்பவர்களுக்கும், அன்றிக்கே கஜேந்திராழ்வானுக்கும், இராக்கதர்க்கும் - ராக்ஷஸர் களுக்கும். நமக்கும் - மனித ஜாதியில் பிறந்த நமக்கும், சரணும் - ரக்ஷகனுகும்.

1 ஒருக்காலே - ஒரே ஒருதடவை, சரணுக - சரணம் என்று, அடைகின்றுற்கும் - அடைபவனுக்கும். உனக்கு, அடிமை - தாஸபூதனுக, ஆகின்றேன் - ஆகிறேன், என்கின்றுற்கும் - என்று ப்ரார்த்திப்பவனுக்கும் அருக்காதே - ஸங்கோசியாமல், அனைவர்க் கும் - எல்லோருக்கும், அனைவராலும் - எல்லோராலும், அதாவது எல்லோரிடமிருந்தும், அஞ்சேல் - பயப்படாதே.என்று, அருள் கொ டுப்பன் - க்ருபை செய்வேன், இதுதான் - இப்படி அருள் கொடுப்பதே, ஓதும் - அத்யயனம் செய்யப்படுகிற, இருக்காலும் - வேதத்தினுலும், எழில் - ப்ரகாசமுடைய, முனிவர் - மஹர்ஷிகளின், நினைவினுலும் - ஸ்ம்ருதிகளினுலும், இவை அறிவார் - இவற்றை அறிந்தவர்களுடைய செயலுடன் - அநுஷ்டானத்துடன், என் - என்னுடைய, இசைவினு லும் - ஒப்புக்கொள்ளுவதினுலும், எனக்கு - ஸர்வேச்வரனை எனக்கு, நெருக்காத - நெருக்கமில்லாத, (ஸங்கோசமில்லாத) நீள் - நீளக் கூடிய, விரதம், ஒன்று என்று - ஒன்று இருக்கிறது என்று, நெறி -

1 ' परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ '

(பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥)

என்கிறபடியே ஸர்வேச்வரன் ஒரு த்ரேதா யுகத்திலே சக்கர வர்த்தித் திருமகனுய் அவதரித்த காலத்திலே ஸ்ரீ வால்மீகி பகவான் ப்ரஹ்மபுத்ரனான ஸ்ரீ நாரத பகவான் பக்கலிலே இவ்வவதார வ்ருத்தாந்தத்தை ஸங்க்ஷேபேண ச்ரவணம் பண்ணி,

ராமாயண ப்ரவர்த்தந ப்ரகாரம்

2 ' मच्छन्दादेव ते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती '

(மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ)

என்கிறபடியே ஸரஸ்வதீ வல்லபனான ப்ரஹ்மாவினுடைய ப்ரஸாதத்தாலே ப்ரவ்ருத்தமான திவ்ய ஸாரஸ்வதத்தையுடையனுமாய்

3 ' रहस्यं च प्रकाशं च यद्वृत्तं तस्य धीमतः ।
रामस्य सह सौमित्रेः राक्षसानां च सर्वशः ॥
वैदेह्याश्चापि यद्वृत्तं प्रकाशं यदि वा रहः ।
तच्चाप्यविदितं सर्वं विदितं ते भविष्यति ॥
न ते वागनृता काव्ये काचिदत्र भविष्यति ॥ '

மார்க்கத்தை, உரைத்தார் - அருளிச் செய்த ஸ்ரீராமனுடைய, நிலை - சரணாகதி தர்மத்தில் நிஷ்ட்டையை.உணர்ந்து, நிலைபெற்றோம் - த்ருடமாக இருக்கும் சக்தியைப் பெற்றோம.

1 கீதை - 4 - 8 ஸாதூநாம் - ஸாதுக்களை, பரித்ராணாய - காப்பாற்றுவதற்காகவும், துஷ்க்ருதாம் - பாபிகளை, விநாசாயச- நாசம் செய்வதற்கும், தர்மஸம்ஸ்த்தாபநார்த்தாய-தர்மத்தை ஸ்த்தாபிப்பதற்காகவும், யுகே யுகே - யுகங்கள்தோறும், ஸம்பவாமி - பிறக்கிறேன்.

2 ராமா - பால - 2 - 32. ப்ரஹ்மந் - ஓ! மஹர்ஷியே, தே - உம்முடைய, இயம் - இப்படிப்பட்ட, ஸரஸ்வதீ - வாக்கானது, மச்சந்தாதேவ - என்னுடைய நியமனத்தினாலேயே, ப்ரவ்ருத்தா - உண்டானது.

3 ராமா - பால -2-34, 35, 36 ஸஹ ஸௌமித்ரேः - லக்ஷ்மணனுடன் கூடிய, தஸ்ய - அந்த, தீமதः - தீமானுன, ராமஸ்ய - ராமனுடையவும், ராக்ஷஸாநாம் ச-ராக்ஷஸர்களுடையவும், ரஹஸ்யம்-ஏகாந்தத்தில் செய்யப்பட்டதும், ப்ரகாசம் க - வெளிப்படையாகச் செய்யப்

(ரஹஸ்யம் ச ப்ரகாஶம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத:।
ராமஸ்ய ஸஹ ஸௌமித்ரே: ராக்ஷஸாநாம் ச ஸர்வஶ:॥
வைதேஹ்யாஶ்சாபி யத் வ்ருத்தம் ப்ரகாசம் யதி வா ரஹ:।
தச்சாப்யவிதிதம் ஸர்வம் விதிதம் தே பவிஷ்யதி ॥
ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி।)
என்று ப்ரஹ்மாவாலே தத்தவரனுமாய்,

1 ' हसितं भाषितं चैव गतिर्या यच्च चेष्टितम्।
तत् सर्वं धर्मवीर्येण यथावत् संप्रपश्यति॥ '

(ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர் யா யச்ச சேஷ்டிதம்।
தத் ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஶ்யதி।)
என்கிறபடியே தர்ம வீர்யப்ரஸூதமான திவ்ய சக்ஷுஸ்ஸாலே இவ்வவதார வ்ருத்தாந்தத்தை

2 ' पाणावामलकं यथा ' (பாணௌ ஆமலகம் யதா)
என்னும்படி நிரவஶேஷமாக ஸாக்ஷாத்கரித்து,

3 ' दशेन्द्रियाणां घोरं यो मनोरजनीचरम्।
विवेकशरजालेन शमं नयति योगिनाम्॥ '

பட்டதும், யத் - எந்த, வ்ருத்தம - கார்யங்களோ, ஏவம் - அப்படியே, வைதேஹ்யாஸ்ச - விதேஹ ராஜன் புத்திரியாகிய ஸீதையினுடையவும், ப்ரகாசம் - வெளிப்படையானதும், யதிவா - அல்லது, ரஹ: - ஏகாந்தத்தில் செய்யப்பட்டதுமான, யத்வ்ருத்தம் - எந்த கார்யங்களோ, தத் - அவை, ஸர்வம் ச - எல்லாம், அவிதிதம் அபி (மற்றவர்களுக்கு - இது வரையில்) அறியப்படாதனவாய் இருந்தபோதிலும், தே - உமகு, ஸர்வத: - எல்ல ப்ரகாரத்திலும, விதிதம் - தெரிந்ததாக, பவிஷ்யதி - ஆகப்போகிறது, அத்ர - இந்த, காவ்யே - காவ்ய ரூபமான ராமாயணத்தில், தே - உம்முடைய, வாக் - வார்த்தையானது, காசித் - ஒன்றும், அந்ருதா - உண்மையில்லாததாக, ந பவிஷ்யதி - இருக்கப்போகிறதில்லை.

1 ராமா - பால - 3 - 4 (தசரதன், ராமன் முதலிய எல்லோராலும், எது அடையப்பட்டதோ அவ்விஷயத்தில்,) ஹஸிதம் - சிரிப்பும், பாஷிதம் சைவ - வார்த்தையும், யா - எது, கதி: - ஸஞ்சாரமோ, யத் - எது, சேஷ்டிதம் - செய்கைகளோ, தத் ஸர்வம் - அவை எல்லாவற்றையும், தர்மவீர்யேண - தர்மத்தின் பராக்ரமத்தினால், யதாவத் - நடந்தபடியே, தத்வத: - உண்மையாக, ஸம்ப்ரபஶ்யதி - பார்க்கின்றார்.

2 ராமா - பால - 3 - 6 பாணௌ ள - உள்ளங்கையில், ஆமலகம் யதா - நெல்லிக் கனியைப் போல

3 ஸாத் - ஸம். கோரம் - கோரமான, தசேந்த்ரியாணாம் - பத்து இந்த்ரியங்களாகிற பத்துத் தலைகளையுடைய, மந: ரஜநீசரம் - மனதா

(தமேந்த்ரியாநநம் கோரம் யோ மநோ ரஜநீசரம்|
விவேகமரஜாலேந மமம் நயதி யோகிநாம் ||)

என்கிறபடியே முமுக்ஷுவுக்குப் பரமோபகாரகமான இவ்வவதார ரஹஸ்யத்தை வெளியிட்டு லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கைக்காகத் தன் கருணையாலே ப்ரவ்ருத்தனுய்,

1 'इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ।
बिभेत्यल्पश्रुतात् वेदो मामयं प्रतरिष्यति ।।'

(இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் ।
பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி ||)

என்கிற சாஸ்த்ரார்த்தத்தை அநுஸந்தித்துக்கொண்டு வேதோபப்ரும்ஹண ஸாபேக்ஷரான அல்பச்ருதர் பக்கல் இரக்கத்தாலும், அவர்களைப் பற்ற வேதங்களுக்கு உண்டான ப்ரதாரண பயத்தை சமிப்பிக்கைக்காகவும்,

ராமாயண ப்ரவர்த்தந நோக்கம்

2 'पुण्यं वेदैश्च संमितम्' (புண்யம் வேதைச்ச ஸம்மிதம்) என்கிறபடியே நாலு வேதங்களும் ஒரு தட்டிலும் தான் ஒரு தட்டிலுமாக நிற்கிற ஸ்ரீ ராமாயணமாகிற ப்ரபந்தத்தை அருளிச் செய்து,

3 'चिन्तयामास कोऽन्वेतत् प्रयुंजीयादिति प्रभुः ।'

(சிந்தயாமாஸ கோந்வேதத் ப்ரயுஞ்ஜீயாத் இதி ப்ரபுः)

கிற ராக்ஷஸனை,யः - எவன், விவேகசரஜாலேந - விவேகம் என்கிற அம்புகளினால், போகிநாம் - யோகிகளுக்கு, சமம் - சமத்தை, நயதி - அடைவிக்கிறானே

1 பார - ஆதி - 1 - 239 இதிஹாஸ புராணாப்யாம் - இதிஹாஸம், புராணம் இவைகளினால், வேதம் - வேதத்தை, (வேதத்தின் அர்த்தத்தை) ஸமுபப்ரும்ஹயேத் - உபப்ரும்ஹணம் செய்யவேண்டும், மாம் - என்னை, அயம் - இவன், ப்ரதரிஷ்யதி - ஏ ம ா ற் ற ப் போகிறான் (தவறான அர்த்தங்களைச் செய்யப் போகிறான் என்று) அல்பச்ருதாத் - ஸ்வல்பம் படித்தவனிடமிருந்து, வேதः - வேதம், பிபேதி - அஞ்சுகிறது.

2 ராமா - பால - 1 - 97 புண்யம் - புண்யத்தைக் கொடுப்பதாயும், ச - மேலும், வேதைः - வேதங்களோடு, ஸம்மிதம் - ஸமமானது மாயுமிருக்கும் (ராம சரித்ரம்)

3 ராமா - பால - 4 - 3 கः ப்ரபுः நு - எந்தப்ரபுவானவன் (ஸமர்த்தனானவன்), ஏதத் - இதை, ப்ரயுஞ்ஜீயாத் - வாக்விதேயமாகச் சொல்

என்கிறபடியே 'யாரைக் கொண்டு இந்த ப்ரபந்தத்தை ப்ரவர்த்திப்பிக்கக்கடவோம்?' என்று சிந்தித்த ஸமயத்திலே, குரு லவர் வந்து பாதோபஸங்க்ரஹணம் பண்ண,

1 'तौ तु मेधाविनौ दृष्ट्वा वेदेषु परिनिष्ठितौ ।
वेदोपबृंहणार्थाय तौ जग्राहाद्यत प्रभुः ॥'

(தௌ து மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்ட்டிதௌ வேதோபப்ரும்ஹணார்த்தாய தௌ அக்ராஹயத ப்ரபுः ॥)
என்கிறபடியே உசிதாதிகாரி முகத்தாலே உபப்ரும்ஹண ரூபமான இப் ப்ரபந்தத்தை ப்ரவர்த்திப்பித்தான்.

ப்ரபந்தாவதாரம் என்னும் முதல் அதிகாரம் முற்றிற்று

பர தத்த்வ நிர்ணயம்
என்னும் இரண்டாம் அதிகாரம்

[பரதத்த்வ நிர்த்தாரணம்]

இப்படி இப் ப்ரபந்தத்தில் பண்ணுகிற பஹுவிதங்களான வேதோபப்ரும்ஹணங்களில் ப்ரதாநமான உபப்ரும்ஹணம் ச்வேதாச்வதராதிகளில் சொல்லுகிற ஸர்வசரண்ய பரதத்த்வ விஷயமாயும், ஸர்வாதிகாரமான சரணாகதிரூப பரமஹித விஷயமாயும் இரண்டு வகையாயிருக்கும்.

அதில் ஸர்வசரண்யமான பரதத்த்வத்தை நிஷ்கர்ஷிக்கும இடத்தில் ஸர்வேச்வரனைப்பற்ற(றி) 'ஸமர்' என்றும், ஏகர்'

லப்போகிறன், இதி - என்று, சிந்தயாமாஸ - யோசித்துக் கொண்டிருந்தார்.

6 ராமா - பால-4 - 6 ஸ:ப்ரபு:- அந்த ப்ரபுவாகிய வால்மீகி பகவான், வேதேஷு - வேதங்களில், பரிநிஷ்டிதௌ - நன்றாய்த் தேர்ந்தவர்களாயும், மேதாவிநௌ - மேதாவிகளாயும் இருக்கும், தௌ - அந்த (லவ குசர்களான) இருவரையும், த்ருஷ்ட்வா - பார்த்து, வேதோபப்ரும்ஹணார்த்தாய - வேதத்தை உபப்ரும்ஹணம் செய்வதற்காக, அக்ராஹயத - கற்பித்தார்.

என்றும், 'அதிகர்' என்றும் ஸங்கிதராயிருப்பார் இருவருண்டு. அவர்கள் யார் என்னில்? ஸர்வேஸ்வரனுடைய மகனும், பேரனும்.

அவர்களில் பேரனான ருத்ரனிற காட்டில் ஸர்வேஸ்வரன் அதிகன் என்னுமிடத்தை

1 ' जृम्भितं तद्धनुः दृष्ट्वा शैवं विष्णुपराक्रमैः ।
अधिकं मेनिरे विष्णुं देवाः सर्षिगणाः तदा ।। '

ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்ட்வா ஸைவம் விஷ்ணு பராக்ரமை:।
அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா: ஸர்ஷிகணஸ் ததா ।।)

என்று ஸ்ரீபரசுராம வாக்யத்தாலே வெளியிட்டான். ராவண வதாநந்தரம்தேவர்கள் பெருமாளைஸ்தோத்

பரதத்வ நிர்த்தாரணம்

ரம் பண்ணுகிறபோது ப்ரஹ்மாதி ஸர்வதேவர்களுடைய

2 ' कर्ता सर्वस्य लोकस्य श्रेष्ठो ज्ञानवतां विभुः ।
उपेक्षसे कथं सीतां पतन्तीं हव्यवाहने ।।
कथं देवगणश्रेष्ठ नात्मानमवबुध्यसे ।
उपेक्षसे वा वैदेहीं मानुषः प्राकृतो यथा ।। '

கர்த்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ஸ்ரேஷ்டோ ஜ்ஞாநவதாம் விபுः।
உபேக்ஷஸே கதம் ஸீதாம் பதந்தீம் ஹவ்யவாஹநே।।
கதம் தேவகண ஸ்ரேஷ்ட நாத்மாநம் அவபுத்யஸே।
உபேக்ஷஸே வா வைதேஹீம் மாநுஷः ப்ராக்ருதோ யதா ।।)

என்கிற வாக்யத்தாலே பெருமாளுடைய ஸர்வஸ்மாத் பரத்வத்

---

1 ராமா - பால - 75 - 21 ததா - அப்பொழுது, ஸர்ஷிகணை: மஹர்ஷிகளின் கூட்டங்களுடன் கூடிய, தேவா: - தேவர்கள், தத் - அந்த, ஸைவம் - சிவனுடைய, தநு: - தனுஸ்ஸை, விஷ்ணுபராக்ரமை: - விஷ்ணுவின் பராக்ரமங்களினால், ஜ்ரும்பிதம் - முறிக்கப்பட்டதாக த்ருஷ்ட்வா - நேரில்பார்த்து- விஷ்ணும் - விஷ்ணுவை, அதிகம் - (ருத்திரனைக் காட்டிலும்) உயர்ந்தவனாக,மேநிரே - நினைத்தார்கள்.

2 ராமா - யுத்த - 120 6, 7 ஸர்வஸ்ய எல்லா, லோகஸ்ய லோகத்திற்கும், கர்த்தா - ஸ்ருஷ்டிப்பவராயும். ஜ்ஞாநவதாம் - ஜ்ஞாநிகளுக்குள, விபு: - சிரேஷ்டனையும் இருக்கும் நீர், கதம் - ஏன், ஹவ்யவாஹநே - அக்னியில், பதந்தீம் - குதித்தவளாயிருக்கும், ஸீதாம் - ஸீதையை, உபேக்ஷஸே - உபேக்ஷை செய்கிறீர், தேவகண ச்ரேஷ்ட - தேவர்களின் கூட்டங்களில் சிறந்தவரான தேவரீர், கதம் - ஏன் ஆத்மாநம் - உம்முடைய ஸ்வரூபத்தை, ந அவபுத்யஸே - அறிந்திது கொள்ளவில்லை, ப்ராக்ருத: மாநுஷ: யதா - ஸாமாந்ய மனிதன் போல ஸீதாம் வைதேஹீம் உபேக்ஷஸே - ஸீதையை ஏன் உபேக்ஷை செய்கிறீர்

தை ஸ்தாபித்தான். அநந்தரம் தேவர்கள் தவிர ப்ரஹ்மா தனித்து ஸ்தோத்ரம் பண்ணுகிற இடத்திலும் எதிரி கையாலே விடுதீட்டான கணக்கிலே

1 'अक्षरं ब्रह्म सत्यं त्वं '(அக்ஷரம் ப்ரஹ்ம ஸத்யம்த்வம்) என்று ஸர்வ விலக்ஷணமான பரப்ரஹ்மம பெருமாள் என்னும் இடத்தையும்,

2 'त्वं त्रयाणां हि लोकानामादिकर्ता स्वयं प्रभुः।'

(த்வம்த்ரயாணும்ஹிலோகாநாம் ஆதிகர்த்தா ஸ்வயம்ப்ரபுः) என்று ப்ரஹ்ம லக்ஷணமான ஜகத் காரணத்வத்தையும்,

2 'जगत् सर्वं शरीरं ते ' (ஜகத் ஸர்வம் ஶரீரம் தே) என்று ஸர்வ ஶரீரி(ர)த்வத்தையும்,

3 'अहं ते हृदयं राम जिह्वा देवी सरस्वती'

(அஹம் தே ஹ்ருதயம ராம ஜிஹ்வா தேவீ ஸரஸ்வதீ) இத்யாதிகளாலே ஶ்ரௌதப்ரயோகத்தில் புத்ரபரமான ஹ்ருதய ஶப்தத்தாலே ப்ரஹ்மாவினுடைய கார்யத்வத்தையும், மற்று முள்ள தேவதைகளெல்லாம் விபூத்யேகதேஶமானபடியையும்,

4 'शरण्यं शरणं चत्वामाहुः दिव्याः महर्षयः'

(ஶரண்யம் ஶரணம் சத்வாமாஹுः திவ்யா மஹர்ஷயः) என்று ஸர்வ ஶரண்யத்வத்தையும் பேசினான். 'யாவன்ஒருவன் ப்ரஹ்மாவை முற்பட ஸ்ருஷ்டிக்கிறான்' என்று ஶ்வேதாஶ்வத ரோபநிஷத்திலே அதீதமான அர்த்ததை உத்தர ஸ்ரீராமாயணத்

---

1 ராமா யுத்த - 120 - 14 த்வம் - நீர், அக்ஷரம் - அழிவற்றவா, ஸத்யம் - எப்பொழுதும் ஒரே மாதிரி இருப்பவர், ப்ரஹ்மம் - ப்ரஹ்மம் என்று சொல்லப்படுமவர்.

2 ராமா - யுத்த - 120 - 19 த்வம் - நீர், த்ரயாணும் - மூன்று, லோகாநாம் - லோகங்களுக்கும், ஆதிகர்த்தா - முதல் முதல் ஸ்ருஷ்டிப்பவா, ஸ்வயம் ப்ரபுः - மற்றொருவரால் ஏவமுடியாத தானே யஜமாநனாய் இருப்பவர்.

3 ராமா - யுத்த - 120 - 25 ராம - ஓ! ராமபிரானே, அஹம் - நான், தே - உமக்கு, ஹ்ருதயம் - ஹ்ருதயம் போன்றவன் அதாவது புத்ரன், தேவீ - தேவியான ஸரஸ்வதீ, ஜிஹ்வா - நாக்கு

4 ராமா - 120 - 18 திவ்யாः - ச்ரேஷ்டர்களான, மஹர்ஷயः - மஹர்ஷிகள், த்வாம் - உம்மை, சரணம் - அடைக்கலம் புகக்கூடியவராயும், சரண்யம் - ரக்ஷகராயும், ஆஹுः - சொல்லுகிறார்கள்.

திலே ப்ரஹ்மா தன்னுடைய வாக்யத்தாலே பேசினான். எங்ஙனே என்னில் :—

1 ' समयस्ते महाबाहो स्वान् लोकान् परिरक्षितुम्।
संक्षिप्य च पुरा लोकान् मायया स्वयमेव हि ।
महार्णवे शयानोऽप्सु मां त्वं पूर्वमजीजनः ॥ '

(ஸமயஸ்தே மஹாபாஹோ ஸ்வாந் லோகாந் பரிரக்ஷிதும்।
ஸம்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி ॥
மஹார்ணவே ஶயானோऽப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜநः)

என்று தொடங்கி,

2 ' पद्मे दिव्येऽर्कसंकाशे नाभ्यामुत्पाद्य मामपि ।
प्राजापत्यं त्वया कर्म सर्वं मयि निवेशितम् ॥
सोऽहं सन्न्यस्तभारो हि त्वामुपासे जगत्पतिम् ।
रक्षां विधत्स्व भूतेषु मम तेजस्करो भवान् ॥
ततस्त्वमपि दुर्धर्षः तस्मात् भावात् सनातनात्।
रक्षार्थं सर्वभूतानां विष्णुत्वमुपजग्मिवान् ॥
अदित्यां वीर्यवान् पुत्रो भ्रातॄणां हर्षवर्धनः ।
समुत्पन्नेषु कृत्येषु लोकस्यार्थाय कल्पसे ॥
स त्वं विनाश्यमानासु प्रजासु जगतोऽधुना ।
रावणस्य वधाकांक्षी मानुषेषु मनोऽदधाः ॥'

(பத்மேதிவ்யேர்க்க ஸங்காஶே நாப்யாம் உத்பாத்ய மாமபி
ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேஶிதம் ॥

1, 2 ராமா - உத்தர - 104 - 3, 4 ,7 - 11 மஹாபாஹோ - மிகவும் பராக்ரமசாலியான பகவானே! ஸ்வாந் - உம்முடையதான, லோகாந் - லோகங்களை, பரிரக்ஷிதும் - காப்பாற்றுவதற்கு, தே - உமக்கு, ஸமய: - காலம். புரா - முன்பு, லோகாந் - லோகங்களை, மாயயா - ஸங்கல்பத்தினால், ஸ்வயமேவ - தானே, ஸம்க்ஷிப்ய - லயம் செய்து வைத்துக்கொண்டு, மஹார்ணவே - ப்ரளய ஸமுத்திரத்தில், அப்ஸு - ஜலத்தில், ஶயாந: - படுத்துக்கொண்டு, மாம் - என்னை, த்வம் - நீர், பூர்வம் - முன்பு, அஜீஜந: - உண்டாக்கினீர்.

மாமபி - என்னையும், நாப்யாம் - திருநாபியில், திவ்யே - திவ்யமான அர்க்கஸங்காஶே - ஸூர்யனைப்போல் விளங்குகிற, பத்மே - தாமரைப் புஷ்பத்தில், உத்பாத்ய - ஸ்ருஷ்டித்தருளி த்வயா - உம்மால், ப்ராஜாபத்யம் கர்ம - ஸ்ருஷ்டிப்பதாகிய தொழில், ஸர்வம் - எல்லாம், மயி - என்னிடத்தில், நிவேஶிதம் - பொறுப்பாக வைக்கப்பட்டது. ஸந்ந்யஸ்தபார: ஹி - இப்படிப் பொறுப்புக் கட்டப்பட்ட, ஸ: அஹம் - அந்த நான் ஜகத்பதிம் - லோகத்திற்கு எல்லாம் பதியான, த்வாம் - உம்மை, உபா

ஸோஹம் ஸங்யஸ்தபாரோ ஹி த்வாமுபாஸே ஜகத்பதிம்।
ரக்ஷாம் விதத்ஸ்வ பூதேஷு மம தேஜஸ்கரோ பவாந்॥
ததஸ்த்வமபி துர்த்தர்ஷஸ் தஸ்மாத் பாவாத் ஸநாதநாத்।
ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வம் உபஜக்மிவாந்॥
அதித்யாம் வீர்யவாந் புத்ரோ ப்ராத்ருணும் ஹர்ஷவர்த்தந:।
ஸமுத்பந்நேஷு க்ருத்யேஷு லோகஸ்யார்த்தாய கல்பஸே
ஸத்வம் வித்ராஸ்யமாநாஸு ப்ரஜாஸு ஜகதோ(அ)துநா।
ராவணஸ்ய வதாகாங்க்ஷீ மாநுஷேஷு மநோ(அ)ததா:॥)

என்று ஸர்வேஸ்வரன் பரம காரணமானபடியையும், தான் அவனுக்குக் கார்யபூதனுமாய்ப் பரதந்த்ரனுமாய்த் தததீந பதலாபனுமாய் இருந்தபடியையும், தங்கள் நடுவும், ராஜவம்ஸத்தில் நடுவும், ஸர்வேஸ்வரன் மத்ஸ்யாதிகளுடைய மத்யத்திலே போலே ஸ்வேச்சையாலே அவதரிக்கிறான் என்னும் இடத்தையும் ப்ரஹ்மா விண்ணப்பம் செய்தான். தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுகிறபோதும்

1 'आगच्छ विष्णो भद्रं ते दिष्ट्या प्राप्तोसि मानद।
भ्रातृभिः सह देवाभैः प्रविशस्व स्वकां तनुम्॥

ஸே - உபாலிக்கிறேன், மம - எனக்கு, தேஜஸ்கர: - தேஜஸ்ஸைக் கொடுப்பவரான, பவாந் - தேவரீர், பூதேஷு - ப்ராணிகளிடத்தில், ரக்ஷாம் - காப்பாற்றுதலே, விதத்ஸ்வ - அனுக்ரஹம் செய்யும், தத: - பிறகு, த்வம் - தேவரீர், துர்த்தர்ஷ: - எட்ட முடியாததான தஸ்மாத் - அந்த, ஸநாதநாத் - அநாதியான, பாவாத் - ஸ்வரூபத்தில் இருந்து, ஸர்வபூதாநாம் - எல்லா ப்ராணிகளின், ரக்ஷார்த்தம் - காப்பாற்றுதலுக்காக, விஷ்ணுத்வம் - விஷ்ணுவாயிருக்கையை, உபஜக்மிவாந் - அடைந்தீர். அதித்யாம் - அதிதியினிடத்தில், வீர்யவாந் - வீர்யத்தையுடைய, புத்ர: - புத்திரனும் அவதரித்து, ப்ராத்ருணும் - ஸஹோதரர்களுக்கு, ஸமுத்பந்நேஷு - உண்டாகிற, க்ருத்யேஷு - க்ருத்யங்களில் லோகஸ்ய அர்த்தாய - லோகத்திற்குதவுவதற்காக ஹர்ஷவர்த்தந: - ஸந்தோஷத்தை வ்ருத்தி செய்பவராய், கல்பஸே - செய்து கொள்கிறீர், ஸ: த்வம் - அப்படிப்பட்ட நீர், அதுநா - இப்பொழுது, ஜகத: - ஜகத்திற்கு ப்ரஜாஸு - ஜனங்கள், வித்ராஸ்யமாநாஸு - பயப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, ராவணஸ்ய வதாகாங்க்ஷீ - ராவணனுடைய வதத்தை நினைத்து, மாநுஷேஷு - மனிதர்களிடம், மந: - திருவுள்ளத்தை, அததா: - வைத்தருளினீர்.

1 ராமா - உத்த—110 - 7 - 10. விஷ்ணோ - ஓ! பகவானே, தே - உமக்கு, பத்ரம் - மங்களம் உண்டாகட்டும், திஷ்ட்யா - (எங்களு

वैष्णवीं तां महातेजः तच्चाकाशं सनातनम् ।
त्वं हि लोकपतिः देव नत्वां केचन जानते ॥
ऋते मायां विशालाक्षीं तव पूर्वं परिग्रहाम् ।
यामिच्छसि महातेजः तां तनुं प्रविश स्वयम् ॥'

(ஆகச்ச விஷ்ணோ பத்ரம தே திஷ்ட்யா ப்ராப்தோஸிமாநத
ப்ராத்ருபிः ஸஹ தேவாபைः ப்ரவிஶஸ்வ ஸ்வகாம் தநும் ॥
வைஷ்ணவீம் தாம் மஹாதேஜः தச்சாகாஶம் ஸநாதநம ।
த்வம் ஹி லோகபதிர் தேவ நத்வாம் கேசந ஜாநதே ।
ருதே மாயாம் விஶாலாக்ஷீம் தவ பூர்வ பரிக்ரஹாம் ॥
யாமிச்சஸி மஹாதேஜஸ் தாம் தநும் ப்ரவிஶஸ்வயம் ।)

என்று விண்ணப்பம் செய்தான்,

இப்படிகளால் ப்ரஹ்மாதிகளுக்கும்கூட ஶரண்யமாய்ப பரம காரணமான பரதத்த்வத்தை ப்ரதிபாதிகிற வேத பாகங்களுக்கு உபப்ரும்ஹணம் பண்ணினான்.

பரதத்த்வ நிர்ணயம்
என்னும் இரண்டாம் அதிகாரம் முற்றிற்று

———

டைய)அத்ருஷ்ட வாத்தினால், ப்ராப்தः ஆஸி - தேவரீர் இங்கு எழுந்த ருளினீர், ஆகச்ச - திரும்பி உமது லோகம் வந்து சேரும், தேவாபைः - தேவதைகள் போல் ப்ரபாவத்தையுடைய, ப்ராத்ருபிः ஸஹ ஸஹோதரர்களுடன் கூட, வைஷ்ணவீம் - விஷ்ணுவினுடையதாயுள்ள தாம் - அந்த, ஸ்வகாம் - உம்முடையதான, தநும் - திருமேனியை, ப்ர விச - சேர்ந்துகொள்ளும், தாம் - அந்த, மஹாதேஜः - மிகுந்த தேஜஸ் ஸுடன் கூடியதாயும் தத் - அப்படிப்பட்ட, ஸநாதநம் - அழிவில்லாத, ஆகாசம் - ஆகாசம் என்னப்படும் ஸ்ரீ வைகுண்டத்திற்கு (எழுந்தரு ளும்) தவ - உம்முடைய, பூர்வ பரிக்ரஹாம் - முன்பே ஸ்வீகரிக்கப்பட் டவளாயும், மாயாம் - ஆச்சர்யமான சக்தியையுடையவளாயும், விசாலா க்ஷீம் - மிகவும் விசாலமான திருக்கண்களையுடையவளுமான லக்ஷ்மி யை, ருதே - தவிர வேறு, கேசந - ஒருவரும், த்வாம் - உம்மை, ந ஜா நதே - அறியவில்லை, தேவ - பகவானே, த்வம் - நீரோ, லோக பதிः - லோகங்களுக்கெல்லாம்யஜமானன், மஹாதேஜः - மிகுந்ததேஜஸ்ஸை யுடைய பகவானே, யாம்-எந்த, தநும் - திருமேனியை, இச்சஸி - விரும்புகிறீரோ தாம் - அதை, ஸ்வயம் - தாமே,ப்ரவிச - அடையும்

ஸரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்சம்
என்னும் மூன்றும் அதிகாரம்

[தேவதைகள் சரணாகதி—இளையபெருமாள் சரணாகதி—பரதாழ்வான் சரணாகதி—மஹர்ஷிகள் சரணாகதி—காகாஸுர சரணாகதி—காகாஸுராதி ரக்ஷணத்தில் தண்டமும் ஆச்ரித ஹிதார்த்தம்—ஸுக்ரீவ லக்ஷ்மண ஸம்வாத தாத்பர்யம்—பெருமாள் சரணாகதியின் நிஷ்பலத்வ காரணம்—ஸாக்ஷாத்சத்ருவையும் காக்கும் ஸாவகத்தித்வாதிகள்—லோகஹிதத்தில் திவ்யதம்பதிகளின் ஸமாந அபிப்ராயத்வம்—பிராட்டியின் ராவணாநுசாஸநத்தின் ஸபலத்வம்—த்ரிஜடா சரணாகதி — நாராயண தர்மம்—வாலி வத ஸமர்த்தனம்—விஷய வாஸமும் ரக்ஷண காரணமாகும் படி—ராமாயணத்தின் சரணாகதி வேதத்வ ப்ரகாரம்]

இப்படி ஸர்வ ஸரண்யமான பரதத்த்வத்தினுடைய வஸீகரண ஸமர்த்தமாய், ஸர்வாதிகாரமாய், பரமஹிதமாயிருக்கிற ஸரணாகதி தர்மத்திற்கு விதாயகங்களான வேத பாகங்களே இப் ப்ரபந்தத்தில் உபக்ரமாதிகளாலே உபப்ரும்ஹித்தான். எங்ஙனே என்னில் :—

அவதாராரம்பத்திலே முற்பட சக்ரவர்த்தியினுடைய யஜ்ஞத்திலே ஹவிர்ப்பாக க்ரஹணார்த்தமாகத் திரண்ட தேவர்கள் ரக்ஷகாகாங்க்ஷிகளாய்

1 ‘ ஆவார் ஆர் துணை ’

என்று நிற்கிற அளவிலே

2 ‘ एतस्मिन्नन्तरे विष्णुः उपयातो महाद्युतिः ।
शङ्ख चक्र गदापाणिः पीतवासा जगत्पतिः ॥ ’

(ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணுः உபயாதோ மஹாத்யுதிः
ஸங்க சக்ர கதாபாணிः பீதவாஸா ஜகத்பதிः ॥)

---

1 திருவாய்—5 - - 1 - 9.

2 ராமா - பால - 15 - 16. ஏதஸ்மிந் - இந்த, அந்தரே - ஸமயத்தில், ஜகத்பதிः - ஜகத்திற்கு அதிபதியான, விஷ்ணுः - விஷ்ணு, மஹாத்யுதிः - மிகுந்த காந்தியையுடையவராய், சங்கசக்ரகதாபாணிः - சங்கம், சக்ரம், கதை இவற்றைத் திருக்கைகளில் உடையவராய், பீதவாஸாः - பீதாம்பரத்தை தரித்துத்கொண்டவராய், உபயாதः - வந்து சேர்ந்தார்.

என்கிறபடியே ஸர்வ போஷியான ஸர்வேச்வரன் அவகாசம் பார்த்து, ரக்ஷண ஸந்நாஹத்தால் உண்டானபுகர் தோன்றும்படி ரக்ஷணோபகரணங்களோடே கூடக் கட்டி உடுத்துவந்து தோன்ற,

தேவதைகள் சரணாகதி

1 ' सिद्धगन्धर्वयक्षाश्च ततः त्वां शरणंगताः '

(ஸித்த கந்தர்வயக்ஷாச்ச தத: த்வாம் சரணம் கதா:।)

என்று தேவஜாதியில் உள்ளார் எல்லோரும் இருந்ததே குடியாக சரணாகதரானபடி சொன்னன். த்ரிபங்கு சதுர்பேதாதி வ்ருத்தாத்தங்களிலும் விச்வாமித்ராதி வ்யாபாரவிசேஷங்களைச் சொல்லி சரணாகத ரக்ஷணம் பரம தர்மம் என்றும், ஸமர்த்த காருணிக விஷய சரணாகதி பலாவிநாபூதை என்றும் காட்டினன்.

இளைய பெருமாள்

2 ' स भ्रातुश्चरणौ गाढं निपीड्य रघुनन्दनः।
सीतामुवाचातियशाः राघवं च महाव्रतम्॥ '

(ஸப்ராதுச்ச சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந:।
ஸீதாமுவாசாதியசா: ராகவம் ச மஹாவ்ரதம்॥)

என்று உபாயபரிக்ரஹத்தைப் பண்ணி, இதற்குப் பலமாக

3 ' कुरुष्व मामनुचरं वैधर्म्यं नेह विद्यते।
कृतार्थोहं भविष्यामि तव चार्थः प्रकल्पते॥ '

---

1 ராமா - பால - 15 - 24. ஸித்த கந்தர்வயக்ஷா: ச - ஸித்தர்கள், கந்தர்வர்களும், யக்ஷர்களும், த்வாம் - உம்மை, சரணம் - சரணமாக, கதா: - அடைந்தார்கள்.

2 ராமா - அயோ - 31 - 2. அதியசா: - மிகுந்த புகழையுடையவரும், ரகுநந்தந: - ரகுவம்சத்திற்கு ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியவருமான, ஸ: - அந்த லக்ஷ்மணன், ப்ராது: - ஸஹோதரருடைய, சரணௌ - இரண்டு திருவடிகளையும், காடம் - கெட்டியாக, நிபீட்ய - பிடித்துக்கொண்டு, ஸீதாம் - ஸீதையினிடத்திலும், மஹா வ்ரதம் - (சரணாகதர்களைக் காப்பாற்றுவதையே தனக்கு) பெரிய வ்ரதமாகவுடைய, ராகவம் ச - ஸ்ரீ ராமனிடத்திலும், உவாச - சொன்னார்.

3 ராமா - அயோ - 31 - 24 - 26. மாம் - என்னை, அநுசரம் - (தேவரீரைப் பின்பற்றிச் சென்று) ஸகல கைங்கர்யங்களையும் செய்

भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते ।
अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते ॥'

(குருஷ்வ மாம் அநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே।
க்ருதார்த்தோ ஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே॥
பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே॥)

இளையபெருமாள் சரணாகதி

என்று பெருமாளும் பிராட்டியும் சோந்த சேர்த்தியிலே தாம் அடிமை செய்ய அபேக்ஷித்தார் என்று சொல்லுகையாலே உபாயோபேயபர வாக்ய த்வய ரூபமான ஸரணாகதி மந்த்ர விஸ்லேஷத்தை உபப்ரும்ஹித்தான்.

முற்பாடரான தேவர்கள் பண்ணின ப்ரபத்திக்காக ராவண வதத்திற்கு எழுந்தருளுகையும், பிற்பாடரான ஸ்ரீ பரதாழ்வான் பண்ணின ப்ரபத்திக்காக மீண்டு(ம்)திருவபிஷேகம் பண்ணிராஜ்யம் பண்ணுகையும் விருத்தமான படியாலே ஸ்ரீ பரதாழ்வானுக்கு ப்ரபத்தி பண்ணினபோதே பரமபலம் சடக்கெனத் தலைக்கட்டிற்றில்லையேயாகிலும், அவருக்குக் கைகேயீ வரத்தாலே ப்ரஸக்தமான அவத்யம் தீரும்படி

பரதாழ்வான் சரணாகதி

1 'மரவடியைத் தம்பிக்கு வான் பணையம் வைத்துப் போய்ப் வாழ்ந்தார்வாழ' என்கிறபடியே அப்போது, ஸாக்ஷாத் பலமான திருவடிகளுக்கு ப்ரதிநித்யானந்ருடகோபபலேஸபலத்வம் சொல்லி,பின்பு பூர்வபரதிஜ்ஞாதமான தேவகார்யத்தலைக்கட்டின

பவனுக, குருஷ்வ - செய்துகொள்ளும், இஹ - இவ்விஷயத்தில், வைதர்ம்யம் - தர்மவிருத்தமான அம்சம், ந வித்யதே - இல்லை, அஹம் - நான், க்ருதார்த்த: - க்ருதார்த்தனாக, பவிஷ்யாமி - ஆவேன், தவ - உம்முடைய, அர்த்த: ச - கார்யமும், ப்ரகல்பதே - நன்றாக்கைகூடும், து - ஆகையினால், பவாந் - தேவரீர், வைதேஹ்யாஸஹ - ஸீதையுடன் கூட, கிரிஸாநுஷு - மலைத்தாழ்வரைகளில், ரம்ஸ்யதே - விளையாடப் போகிறீர். ஜாக்ரத: - விழித்துக்கொண்டும், ஸ்வபத: ச - தூங்கிக் கொண்டும் இருக்கும், தே - உமக்கு, ஸர்வம் - எல்லாவிதக் கைங்கர்யங்களையும், கரிஷ்யாமி - செய்யக்கடவேன், செய்யும்படியாக அனுக்ரஹிக்கவேண்டும் என்று பல ப்ரார்த்தனை செய்தபடி.

1 பெரியா - திரு - 4 - 9 - 3.

வாறே ஸ்ரீ புஷ்பக விமானத்தாலே ஸாக்ஷாத் பலமான திருவடிகள் ஸவயம் ஆகதங்களாய் அயத்நலப்தங்களானபடி சொன்னன்.

அப்படியே

1 ' புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால அயோத்தியில் வாழ் சராசரம் முற்றவும்
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனூர் பெற்ற நாட்டுளே '
என்றும்,

2 ' त्वामाहुन्ति कवयः करुणामृतार्द्रे ज्ञानक्रिय.भजनलभ्यमलभ्यमन्यैः ।
एतेषु केन वरदोत्तरकोसलस्थाः पूर्वं सदूर्वमभजन्त हि जन्तवः त्वाम् ॥ '

(த்வாம் ஆமநந்தி கவயः கருணாம்ருதாப்தே
ஜ்ஞாந க்ரியா பஜநலப்யம் அலப்யமந்யைः ।
ஏதேஷு கேந வரத உத்தரகோஸலஸ்த்தாः
பூர்வம் ஸநூர்வமபஜந்த ஹி ஜந்தவஸ்த்வாம் ॥)

என்றும் பேசுகிறபடியே ஜங்கம ஸ்த்தாவர விபாகமற உபாயாதிகார ப்ரஸங்கரஹிதமான ஜந்துக்களையும் (எல்லாம்) (ஸ்ரீ பரதாழ்வான்பண்ணின ப்ரபத்தியினுலே அவருடைய)விஷய வாஸமாத்ரமே பற்றுசாகப்பின்பு ரக்ஷிகும் ப்ரகாரத்துக்குப் புறம்செயலான

3 ' ते वयं भवता रक्ष्या भवद्विषयवासिनः '
नगरस्थो वनस्थो वा त्वं नो राजा जनेश्वर ॥ '

(தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷய வாஸிநः ।
நகரஸ்த்தோ வநஸ்த்தோ வா த்வம் நோ ராஜா ஜநேச்வர ॥)

என்கிற ரிஷிகள் வாக்யத்தினபடி

மஹர்ஷிகள் சரணகதி

யே அவர்களுக்கு விரோதிகளான ராக்ஷஸரை நிராகரித்து ரிஷிகளை

---

1 திருவாய்- 7 - 5 - 1

தராஜல்ப்வம்—69.கருணம்ருதாப்தே- கருணையெனும் அம்ருதஸமுத்ரமான பகவானே!, கவயः-ஜ்ஞாநிகள்,த்வாம்-உம்மை,ஜ்ஞாநக்ரியாஜநலப்யம் - ஜ்ஞாநயோகம், கர்மயோகம், பக்தியோகம் இவற்றால் அடையப்படக் கூடியவன் என்றும், அந்யैः - மற்ற உபாயங்களால், அலப்யம் - அடையப்படக் கூடியவனல்லன்என்றும், ஆமநந்தி - சொல்லுகிறார்கள். வரத ஓ வரதனே!, பூர்வம் - முன்பு உத்தரகோஸலஸ்த்தாः — அயோத்தியில் வஸித்த, ஸநூர்வம் - புல் முதலிகளுடங்க,ஜந்தவः -ஜந்துக்கள் ஏதேஷு- இவற்றில், கேந -எந்த ஹேதுவத்தால்,த்வாம் -உம்மை, அபஜந்த - அடைந்தார்கள்.

3 ராமா - ஆர - 1 - 20. பவத்விஷயவாஸிநः - உம்முடைய தேசத்தில் வஸிக்கிற, தே - அந்த, வயம் - நாங்கள் , பவதா-தேவரீர

ரக்ஷித்தபடி சொல்லுகையாலே, 'ரக்ஷாபேக்ஷை பண்ணும்போது வேறு ஓர் உபாய(கார)ம் பண்ணவேண்டா, அபிமாநகோசரமான விஷயத்தில் துவக்காலே அந்ய ஶரணதையை வெளியிட்டுக் கிடக்க அமையும்' என்கிற திருக்கண்ணமங்கையாண்டான்படியே

1 'கடைத்தலை இருந்து வாழும் சோம்பரை உகத்தி' என்னும் அர்த்தத்தை வெளியிட்டான்.

காகாஸுர சரணாகதி

ஆர்த்ராபராதனாய் உதிரக்கையனை காகம் ப்ரஹ்மாஸ்த்ர அபிமந்த்ரிதமான துரும்பாலே துரப்புண்டு, ப்ரஹ்மா முதலான ஒன்றுஏறி ஒன்று உபர்த்தார் வாசல்கள் எல்லாம் நுழைந்து, 'என்னைக் காத்துக் கொள்ள வல்லாருண்டோ?' என்று கதறின இடத்தில் இக் காக்கைக்கு ஒருவரும் இல்லையாயிற்று. அவ்வளவில்

2 'स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः'

(ஸ பித்ரா ச பரித்யக்தः ஸுரைஶ் ச ஸமஹர்ஷிபிः)

என்கிறபடியே ப்ரியஹிதகாரிகளான தாயும், தகப்பனும், அவர்கள் நாட்டிலே குடியிருக்கிற தேவ ஜாதிகளும், ஶரணாகத ரக்ஷண தர்மத்திற்கு உபதேஷ்டாக்களான மஹர்ஷிகளும் தாங்கள் ஏறிட்டுக் கொண்டால்

3 'ब्रह्मा स्वयम्भूः चतुराननो वा रुद्रस्त्रिनेत्रस्त्रिपुरान्तको वा।
इन्द्रो महेन्द्रः सुरनायको वा त्रातुं न शक्ताः युधि राघवस्य ॥'

ராள், ரக்ஷ்யாः - ரக்ஷிக்கப்படவேண்டியவர்கள், நகரஸ்த்தः - அயோத்யா பட்டணத்தில் இருந்தாலும், வநஸ்த்தோ வா - காட்டில் இருந்தாலும், ஜநேச்வர - பகவானே, த்வம் - நீர், நः - எங்களுக்கு, ராஜா - அரசன்.

1 திருமாலை — 38.

2 ராமா - ஸுந் - 38 - 39. ஸः - அந்தக்காகம், (மூன்று லோகங்களையும் நன்றாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்து) ஸமஹர்ஷிபிः - ரிஷிகளோடு கூடின, ஸுரைः ச - தேவர்களிஞலும், பித்ரா ச - தந்தையாலும், பரித்யக்தः - கைவிடப்பட்டதாய் (ராமனையே சரணம் அடைந்தது)

3 ராமா - ஸுந்தர - 51 - 44. சதுராநநः - நான்கு முகங்களையுடையவராயும், ஸ்வயம்பூः - தானே தோன்றியவருமான, ப்ரஹ்மாவா ப்ரஹ்மாவும், த்ரிபுராந்தகः - மூன்று புரங்களை எரித்தவரும், த்ரிநேத்ரः - மூன்று கண்களையுடையவருமான, ருத்ரः வா - ருத்ரனும், ஸுரநாயகः - தேவர்கள் நாயகனானவனும், மஹேந்த்ரः - (வ்ருத்ராஸுரனைக்கொன்ற) மஹேந்திரனுமான, இந்த்ரோ வா - இந்திரனும், யுதி-

(ப்ரஹ்மா ஸ்வயம்பூ: சதுராநநோ வா
ருத்ரஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா।
இந்த்ரோ மஹேந்த்ர: ஸுராநாயகோ வா
த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம்॥)

என்கிறபடியே இக்காகத்திற்கு ரக்ஷை பிறவாது என்று இதனுடைய ஹிதத்தை நிரூபித்து, பெருமாள் கைக் கொள்ளுகைக்கீடாக இக்காகம்

1 'எங்கும் போய்க் கரை காணுது எறிகடல் வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை'

என்கிறபடியே அநந்யகதியாய் விழவேண்டும் என்று பார்த்து, எல்லோரும் துரத்திக் கதவை அடைத்தார்கள். அப்போது வேறு ஒரு திக்கை நோக்கினால் ப்ரஹ்மாஸ்த்ரம் தொடருகிறபடியையும், பெருமாள் எழுந்தருளியிருக்கிற திக்கை நோக்கினபோது கொல்ல நினைவன்றிக்கே செருக்கடக்க நினைத்திருக்கிற ஸர்வலோக ஶரண்யன் திருவுள்ளத்தை அறிந்த ப்ரஹ்மாஸ்த்ரம் கால் தாழ்கிறபடியையும் கண்ட காகம் தப்பிப்போக நினைவு உண்டாயிருக்கச் செய்தேயும்,

2 'त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः'

(த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:)

என்கிறபடியே போக்கற்று வந்து விழுந்தது. இப்படி விழுந்த இடத்திலே

3 'स तं निपतितं भूमौ शरण्यः शरणागतम्।
वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत्॥'

யுத்தத்தில், ராமவத்யம் - ராமன் எவனை வதம் செய்யவேண்டும் என்று ஸங்கல்பித்திருக்கிறாரோ அவனை, த்ராதும்- காப்பாற்றுவதற்கு, ந சக்தா: - சக்தியுடையவர்கள் அல்லர்.

1 பெருமாள் திரு—5 - 5.

2 ராமா ஸுந்தர - 33 - 34. த்ரீந் லோகாந் - மூன்று லோகங்களையும், பரிக்ரம்ய - சுற்றி சுற்றிப் பார்த்துவிட்டு, தமேவ - அந்த ராமனையே, சரணம் - சரணமாக, கத: - அடைந்தது

3 சரண்ய: ஸ: காகுத்ஸ்த:-ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தசரண்யனாகிய அந்த ராமன், பூமௌபதிதம் சரணாகதம்-பூமியில் விழுந்ததால் சரணாகதனான அந்தக் காகாசத்தை, வதார்ஹமபி - கொல்லத் தகுந்த வனாயிருந்தபோதிலும், க்ருபயா:-க்ருபையினால், பர்யபாலயத்-நன்றாகக் காப்பாற்றினார்.

(ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்ய: ஶரணாகதம்।
வதார்ஹமபி காகுத்ஸ்த்த: க்ருபயா பர்யபாலயத் ॥)

என்கிறபடியே வதார்ஹன் போக்கற்றுத் தாம் இருந்த இடத்திலே வந்து விழுந்த மாத்திரமே ஶரணாகதியாகக் கொண்டு, பெருமாள் ப்ராணரக்ஷகத்தியானஇவனுக்கு ப்ராணப்ரதாநம்பண்ணி ரக்ஷித்தார் என்கையாலே எத்தனையேனும் தீரக் கழிய அபராதம் பண்ணினாரையும் போக்கற்று விழுந்தால் ஸ்ரீமச் சப்தத்திலும், நாராயண ஶப்தத்திலும் சொல்லுகிறபடியே நித்யாநபாயிநியான பிராட்டிஸம்ஸ்ருதி உண்டாகையாலும் பரம காருணிகத்வாதிகளாலும் பெருமாள் ஏறிட்டுக் கொண்டு ரக்ஷிப்பார் என்னும் பரமரஹஸ்யத்தை வெளியிட்டான். ப்ராணரக்ஷகத்தியான இக் காகத்திற்கு ப்ராண ப்ரதாநம் பண்ணுகையாலே ப்ரபத்தி பலம் ஸித்தம். துஷ்ப்ரக்ருதியான இக் காகத்திற்கு ஶிக்ஷையாக ஒரு கண்ணழிவாலே அஸ்த்ரத்தை விலக்கினார்.

காகாஸுராதி ரக்ஷணத்தில் தண்டமும் ஆச்ரித ஹிதார்த்தம்

ஸ்ரீ பரசுராமன் அளவில் தொடுத்த அம்பை அவன் தெளிந்து த்வந்த்வ யுத்தாபேக்ஷை தவிர்ந்தவளவில் அவனுக்கு மநீஷித விருத்தங்களான ஸுக்ருதங்களிலே ஏவினார். ஸமுத்ரத்தைக்குறித்துத்தொடுத்த அம்பை ஸமுத்ராபிமாநி புருஷன் ஸாநுதாபனாய் ஶரணாகதனாகையாலே, த்விஷத்துக்கள் பக்கலிலே ஆஶ்ரிதருடைய பாபக்ருத்யத்தை ஏறிடும் கணக்கிலே ஸமுத்ர விரோதிகளான பாபிஷ்டர் பக்கலிலே ஏவினார். காகத்தைப் பற்ற அஸ்த்ரத்தை ப்ரயோகித்த அளவில் போக்கறுதி ஒழிய உள்ளொரு பசையில்லாத காகம் ஶரணாகதம்ஆனபோது இக் காகத்திற்கு அபராதம் பண்ணுகையில் அபிஸந்திவிராமம் இல்லாதபடியாலே,

1 'மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா' என்கிறபடியே இனி ஓர் அபராதத்தோடே மற்றைக் கண்ணும் போம் என்று அஞ்சி துரபிஸந்தியை விட்டுத் திரிகைக்காக ஒரு கண்ணை அஸ்த்ரத்திற்கு இலக்காக்கினார். ஆகையினால் இம்மூன்று வ்ருத்தாந்தங்களிலும் அஸ்த்ரத்திற்கு லக்ஷ்யம் கொடுத்தபடி எல்லாம் ஆஶ்ரிதஹிதமாக என்று நிர்ணீதம்.

காரியத்தில் அபிஸந்தி உண்டாயிருக்க, போகப்ரஸங்கத்

---

1 பெரியா திரு—2 - 6 - 7.

தாலே அந்யபரராய்க் கடுகப் பெருமாள் எழுந்தருளி இருந்த இடத்திலே வாராத அளவிலே ஸமயாதிலங்கநம் பண்ணினராகப் பழி சுமந்த மஹாராஜர் விஷயத்திலே இளைய பெருமாளுடைய சீற்றத்தைக் கண்ட ஸந்மந்த்ரியான திருவடி

ஸுக்ரீவலக்ஷ்மண ஸம்வாத தாத்பர்யம்

1 ' कृतापराधस्य हि ते नान्यत् पश्याम्यहं क्षमम्।
अन्तरेणाञ्जलिं बध्वा लक्ष्मणस्य प्रसादनात्॥ '

(க்ருதாபராதஸ்யஹி தே நான்யத் பஶ்யாம்யஹம் க்ஷமம்।
அந்தரேணாஞ்ஜலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்॥)

என்று அவ் வவஸரத்திலே அபராதமே பற்றாசாக ஶரணாகதராய் ப்ரஸாதிப்பிக்க ப்ராப்தம் எனறு மஹாராஜருக்குத் தர்மோபதேசம் சொல்லும் க்ரமத்திலே ஹிதம் சொல்ல, மஹாராஜரும் தெளிந்து

2 ' यदि किंचिदतिक्रान्तं विश्वासात् प्रणयेन वा।
प्रेष्यस्य क्षमितव्यं मे न कश्चित् नापराध्यति॥ '

(யதி கிஞ்சிததிக்ராந்தம் விஶ்வாஸாத் ப்ரணயேந வா।
ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கஶ்சிந் நாபராத்யதி॥)

என்று க்ஷமை கொண்ட ப்ரகாரத்தைச் சொல்லுகையாலே 'பகவத்விஷயத்திலே ஸாபராதரானாலும் பாகவதரை க்ஷமை கொள்ள, அம்முகத்தாலே பெருமாள் க்ஷமித்தருளுகையாலே இவனும் நிரபராதனாய்க் கைங்கர்ய யோக்யனாம்' என்னுமிடத்தை வெளியிட்டருளினன். அவ்வளவில்

यच्च शोकाभिभूतस्य श्रुत्वा रामस्य भाषितम्।
मया त्वं परुषाण्युक्तः तच्च त्वं क्षन्तुमर्हसि॥ '

---

1 ராமா - கிஷ்—32 - 17. க்ருதாபராதஸ்ய - அபராதத்தைச் செய்தவனுகிய, தே - உனக்கு, அஞ்ஜலிம் பத்வா - கையைக் கூப்பிக் கொண்டு, லக்ஷ்மணஸ்ய - இளைய பெருமாளுடைய, ப்ரஸாதநாத் அந்தரேண - பொறுத்துக் கொள்ளும்படி ப்ரார்த்திப்பதைத் தவிர அந்யத் - வேறு, க்ஷமம் - உசிதமான காரியத்தை, அஹம் – நான், ந பச்யாமி - பார்க்கவில்லை.

2 ராமா - கிஷ்—36 - 11. விச்வாஸாத் - நம்பிக்கையினலாவது, ப்ரணயேந வா - ப்ரீதியினலாவது, அதிக்ராந்தம் - மீறி நடந்தது, கிஞ்சித் - ஏதாவது கொஞ்சம், யதி - இருந்ததேயாகில், ப்ரேஷ்யஸ்ய

1 (யச்ச ஸோகாபிபூதஸ்ய ஸ்ருத்வா ராம ஸ்ய பாஷிதம் |
மயா த்வம் பருஷாண்யுக்த: தச்ச தவம் க்ஷந்துமர்ஹஸி ||)
என்று இளைய பெருமாள் தம்முடைய பாருஷ்ய வாக்யங்களுக்கு அடி ஸோக பரவஸரான பெருமாளுடைய சீற்றத்தளவில் பிறந்த பாசுரங்கள் என்று தம்முடைய அபராதத்தை ஸோபாதிகமாக்கி

1 'न च संकुचित: पन्था: येन वाली हतो गत: '
(ந ச ஸங்குசித: பந்தா: யேந வாலீ ஹதோ கத:)

என்றுற் போலே மேல் எழுச்சியான பெருமாளுடைய பாசுரங் களுக்குக் காரணம்'காமன் செய்தான், மன்யு செய்தான்' என்கிற கணக்கிலே ஸோகமேயாயிற்று.

2 'समये तिष्ठ सुग्रीव ' (ஸமயே திஷ்ட்ட ஸுக்ரீவ)

என்கையில்(யா)லே பெருமாள் அருளிச்செய்த பாசுரங்களுக்குத் (ம் இப்படித்) தாத்பர்யம் என்று காட்டி அப்படியே ஸோபாதிக மானதங்கள்அபராதங்களுக்கு மஹாராஜரை க்ஷமைகொண்டார் என்கையாலே ஸாபராதரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் புரிந்து அநு தாபத்தாலே க்ருத ப்ராயஸ்சித்தரானால் இவர்கள் விஷயத்தில் அபராத தசையில் பண்ணின அநாதராதிகளுக்குத் தாங்கள் எதிரே க்ஷமைகொள்ளவேண்டும் என்னும்ஸாஸ்த்ரார்த்தத்தைக் காட்டினான்,

இப்படி விபீஷண வ்ருத்தாந்தத்திற்கு முன்பு ஸரணாகதி தர் மத்தில் இப் ப்ரபந்தம் நின்ற நிலை சொன்னோம். இவ் விபீஷண வ்ருத்தாந்தத்திற்குப் பின்பு

தாஸபூதனாகிய, மே - என்னுடைய (அந்த அபராதம்), க்ஷமிதவ்யம் - பொறுத்துக்கொள்ளத்தக்கது, கச்சித்-ஒருவனும், நாபராத்யதிஇதிந-அபராதம் செய்வதில்லை என்பது இல்லை.

1 ராமா - கிஷ்—36 - 27. ஸோகாபிபூதஸ்ய - துக்கத்தினால் தன்னை மறந்த, ராமஸ்ய - ஸ்ரீ ராமனுடைய, பாஷிதம் - வார்த்தையை, ச்ருத்வா - கேட்டு, மயா - என்னால், த்வம் - நீர், பருஷாணி - க்ரூர மான வார்த்தைகளை, உக்த: - சொல்லப்பட்டீர் (என்கிற), யத் - எது வோ, தச்ச - அதையும், த்வம் - நீர்,க்ஷந்தும் - பொறுத்துக்கொள்ளுவ தற்கு, அர்ஹஸி - யோக்யராகிறீர்.

2 ராமா - கிஷ்—34 - 19. ஹத: - (என்னால்) கொல்லப்பட்ட வாலீ - வாலியானவன், யேந - எந்த வழியினால், கத: போனரோ பந்தா: - அந்தவழி, ந ச ஸங்குசித: - சுருக்கத்தை அடையவில்லை, (அதாவது வாலியை பாணத்தினால் கொன்றுற்போலே உன்னாலும், செய்ய முடியாது என்பது இல்லை). ஸுக்ரீவ - ஸுக்ரீவனே, ஸமயே - நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தில், திஷ்ட்ட- நில்.

1 ' समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति '

(ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி)

என்று தனக்கு ஶரணாகதி பலிக்கக் கண்ட பரம தார்மிகனுடைய வாக்யத்தாலே ' அஶக்தனுக்கு அபிமதஸித்திக்கு ஶக்தனே ஆஶ்ரயிக்க ப்ராப்தம் ' என்னும் இடம் சொன்னன். அவ்விடத்தில்,

பெருமாள் சரணாகதியின் நிஷ்பலத்வ காரணம்

2 ' चापमानय सौमित्रे शरांश्चाशीविषोपमान् ।
सागरं शोषयिष्यामि पद्भ्यां यान्तु प्लवङ्गमाः ॥ '

(சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீ விஷோபமாந்।
ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமாः ॥

என்று அருளிச் செய்யக்கடவ பெருமாள் கையம்பு மாண்டவர் அல்லாமையாலும், ஶரணமாக வரிக்கப்பட்ட ஜலாஶயம் அல்ப மதியுமாய் அல்பஶக்தியுமாகையாலும் ஶரணாகதி பலியாதொழிந்ததத்தனே.

பின்பு ராவணன் தன்னைக் குறித்து நிபூணமபிவத்ஸலரான பெருமாள்

3 ' अराक्षसमिमं लोकं कर्तास्मि निशितैः शरैः ।
न चेत् शरणमभ्येषि मामुपादाय मैथिलीम् ॥ '

(அராக்ஷஸமிமம் லோகம் கர்த்தாஸ்மி நிஶிதைः ஶரைः।
நசேச் சரணமப்யேஷி மாமுபாதாய மைதிலீம் ॥

என்று அருளிச்செய்த அசுரத்தனாகையாலே சரணாகதனையும் காக்கும் லேபெருமாளுடைய ஶரண்யதைக்கு உறுப்பான ஸர்வஶக்தித்வத்தையும் பரம காருணிகத்வத்தையும் ஹிதப்ரவர்த்தகத்வத்தையும் ப்ரகாஶிப்பித்தான்.

ஸாகஷாத் சதுரவையும் காக்கும் லேபெருமாளுடைய ஶரண்ய ஸர்வஶக்தித்வாதிகள்

---

1 ராமா - யுத்த—19 - 31. ராகவோ ராஜா - அரசனுகிய ராமன், ஸமுத்ரம் - ஸமுத்திர ராஜனே, சரணம் கந்தும் - சரணமாக அடைவதற்கு, அர்ஹதி - யோக்யதையுடையவராகிறார்.

2 ராமா - யுத்த—21 - 22. ஸௌமித்ரே - ஓ! லக்ஷ்மணனே, சாபம் - வில்லை, ஆசீவிஷோபமாந் - ஸர்ப்பங்களே நிகர்த்த, சராந்ச - பாணங்களை, ஆநய - எடுத்துக்கொண்டுவா, ஸாகரம் - ஸமுத்திரத்தை, ஶோ - ஷ்யாமி - வற்ற அடிக்கப்போகிறேன், ப்லவங்கமாः - வானரங்கள், பத்ப்யாம் - காலால் நடந்து, யாந்து - செல்லட்டும்.

3 ராமா - யுத்த—41- 66. மாம் - என்னிடம், மைதிலீம் - ஸீதையை, உபாதாய - திருப்பிக் கொடுத்துவிட்டு, சரணம் அப்யேஷி நசேத்-

1 ' इयं सीता मम सुता सहधर्मचरी तव '
(இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ)
என்கிறபடியே ஶரணுகத ரக்ஷண தர்மத்திலும் ஸஹதர்மசாரிணியான பிராட்டியும்

2 ' मित्रभावेन सम्प्राप्तं दुष्टं तस्याऽस्मि राक्षसम् ।
वधं चानिच्छता घोरं त्वयाऽसौ पुरुषर्षभः ॥
विदितः स हि धर्मज्ञः शरणागतवत्सलः ।
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि ॥
प्रसादयस्व त्वं चैनं शरणागतवत्सलम् ॥
मां चास्मै प्रयतो भूत्वा निर्यातयितुमर्हसि । '
(மித்ர மெளபயிகம் கர்த்தும் ராமः ஸ்த்தாநம் பரீப்ஸதா ।
வதம் சாநிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷபः ॥
விதிதः ஸஹி தர்மஜ்ஞः ஶரணுகத வத்ஸலः ।

சரணம் அடையாத பக்ஷத்தில், இமம் - இந்த, லோகம் - லோகத்தை, நிசிதைः சரைः - கூர்மையான பாணங்களினால், அராக்ஷஸம் - ராக்ஷஸர்களில்லாததாய், கர்த்தாஸ்மி - செய்யப்போகிறேன்.

1 ராமா - பால—73 - 26. மம ஸுதா - என்னுடைய பெண்ணுகிய, இயம் ஸீதா - இந்த ஸீதை, தவ - உனக்கு, ஸஹதர்மசரீ - கூட இருந்து எல்லாத் தர்மங்களையும் செய்யக்கூடியவள்.

2 ராமா - ஸுந்—21 - 20 - 22. அஸௌ ராமः - இந்த ஸ்ரீ ராமன், புருஷர்ஷபः - புருஷர்களில் ச்ரேஷ்டரானவர், தர்மஜ்ஞः - தர்மத்தை அறிந்தவர், ஸஹி - அவரன்றோ, சரணுகதவத்ஸலः - சரணம் அடைந்தவர்கள் விஷயத்தில் வாத்ஸல்யத்தையுடையவர் என்று, விதிதःஹி - நன்ருக அறியப்பட்டவர் அல்லரோ.

ஜீவிதும் - உயிரோடு இருப்பதற்கு, இச்சஸியதி - நீ விரும்பினையாஞல், தேந - அவரோடு, மைத்ரீ - ஸ்நேஹிதனுயிருப்பது, தே - உனக்கு, பவது - உண்டாகட்டும், த்வம் - நீ, சரணுகத வத்ஸலம் - சரணுகத வத்ஸலனை, ஏநம்-இந்த ஸ்ரீ ராமனை, ப்ரஸாதயஸ்வ - அனுக்ரஹம் செய்யும்படி செய்துகொள், ஸ்த்தாநம் - குறைவற்ற வாழ்வை, பரீப்ஸதா - வேண்டுகிறவனும், கோரம் - கோரமான, வதம் - கொலையை, அநிச்சதா ச - ஆசைப்படாதவனுமான, த்வயா - உன்னால், ராமः - ராமனை, மித்ரம் - ஸ்நேஹிதனுக, கர்த்தும் - செய்துகொள்ள, ஔபயிகம் - தகுந்தவன், ப்ரயதः - இந்த்ரியங்களை அடக்கினவனுய், பூத்வா - ஆகி, மாம் - என்னை, அஸ்மை - இவரிடம், நிர்யாதயிதும் ச - திருப்பிக் கொடுத்துவிடவும், அர்ஹஸி - யோக்யனுகிருய்.

தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ।
ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் ஶரண்யகதவத்ஸலம் ।
மாம் சாஸ்மை ப்ரயதோ பூத்வா நிர்யாதயிதுமர்ஹஸி॥)

என்று ராவணன் ப்ரதிகூலனாயிருக்கச் செய்தேயும் மாத்ருத்வ ப்ரயுக்தமான வாத்ஸல்யாதிசயத்தாலே 'அஸ்து தே' என்னும் ப்ரகாரத்திலே அருளிச்செய்த வாக்யத்தாலே இத் தம்பதிகள் லோகஹிதத்திலே ஸமாநாபிப்ராயர் என்னுமிடத்தைக் காட்டினன்.

லோகஹிதத்தில் திவ்யதம்பதிகளின் ஸமாநஅபிப்ராயத்வம்

இப்படி 'தேந மைத்ரீ பவதுதே' (தேந மைத்ரீ பவது தே) என்றதுவும் ராவணனுக்கு ஶிரோமணியான ஶத்ருபாலனான ஜ்யேஷ்டரத்திலே அந்திமக்ஷணத்திலேயாகிலும் கார்யகரமாயிற்று.

பிராட்டியின் ராவணநுசாஸநத்தின் ஸபலத்வம்

ஶரண்யஸஹதர்மசாரிணியான பிராட்டி விஷயத்திலே தர்ஜந பர்த்ஸநாதி ப்ரவ்ருத்தைகளான ராக்ஷஸிகளைக் குறித்து

1 'तदलं क्रूरवाक्यैः वः सान्त्वमेवाभिधीयताम् ।
अभियाचाम वैदेहीं एतद्धि मम रोचते ॥
भर्त्सितामपि याचध्वं राक्षस्यः किं विवक्षया ।
राघवाद्धि भयं घोरं राक्षसानामुपस्थितम् ॥
प्रणिपातप्रसन्ना हि मैथिली जनकात्मजा ।
अलमेषा परित्रातुं राक्षस्यो महतो भयात् ॥ '

---

1 சரணாகதி கத்யம். தே - உனக்கு, அஸ்து உண்டாகட்டும்.

2 ராமா - ஸுந்தர—27 - 41 - 44. தத் ஆகையினால், வः - உங்களுடைய, க்ரூரவாக்யைः-கடும் சொற்களினால், அலம் - போதும், ஸாந்த்வமேவ - நல்ல வார்த்தையே, அபிதீயதாம் - சொல்லப்படட்டும், வைதேஹீம் - ஸீதையை, அபியாசாம - ப்ரார்த்திப்போம், ஏதத்ஹி - இதுவே, மம - எனக்கு, ரோசதே - நல்லதென்று தோன்றுகிறது, பர்த்ஸிதாமபி- (நம்மால்) மிரட்டப்பட்டவளாகிலும், யாசத்வம்- ப்ரார்த்தியுங்கள், ராக்ஷஸ்யः - ஓ! ராக்ஷஸிகளே, விவக்ஷயா - யோசிப்பதினால், கிம் - என்ன ப்ரயோஜநம்?, ராகவாத் - ராமனிடமிருந்து, ராக்ஷஸாநாம் - ராக்ஷஸர்களுக்கு, கோரம் - கொடியதான, பயம் - ஆபத்து, உபஸ்த்திதம்ஹி - சேருங்கிவிட்டதே!, ராக்ஷஸ்யः -ஓ! ராக்ஷஸிகளே, ஜநகாத்மஜா - ஜநகராஜன் திருமகளான, மைதிலீ - ஸீதை, ப்ரணிபாத ப்ரஸந்நா ஹி - பணிந்தது மாத்திரத்தினால் அநுக்ரஹம்

(ததலம் க்ரூரவாக்யை: வ: ஸாந்த்வமேவாபிதீயதாம் ।
அபியாசாம வைதேஹீம் ஏதத்தி மமரோசதே॥
பர்த்ஸிதாமபி யாசத்வம் ராக்ஷஸ்ய: கிம் விவக்ஷயா ।
ராகவாத்தி பயம் கோரம் ராக்ஷஸாநாமுபஸ்த்திதம் ।
ப்ரணிபாதப்ரஸங்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா।
அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத் ॥)

என்றுத்ரிஜடையும் ஸ்வமதம் சொன்னபடியைப் பேசி ஞன். பிராட்டியும் அவர்கள் இசைவின்றிக்கே யிருக்க, ஸத்த்வப்ரக்ருதியான த்ரிஜடையோடு அவர்களுக்கு உண்டான துவக்காலே வாத்ஸல்ய பரவஸையாய் அருளிச்செய்த வார்த்தையை ஸ்ரீவாநரவீரர்களுக்கு அநுபாஷித்துக் காட்டுகிற திருவடி

த்ரிஜடையின் சரணாகதி

1 ' अलमेषा परित्रातुं राघवात् राक्षसीगणम् ॥ '

(அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்)

என்று த்ரிஜடாவாக்யத்தை முடித்து,

2 ' ततस्सा ह्रीमती बाला भर्तुर्विजयहर्षिता ।
अवोचद्यदि तत्तथ्यं भवेयं शरणं हि वः ॥ '

(ததஸ்ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்துர் விஜயஹர்ஷிதா।
அவோசத்யதி தத்தத்யம் பவேயம் ஶரணம் ஹி வ: ॥)

என்று பிராட்டி அருளிச் செய்த ரக்ஷாபரஸ்வீகாரவாக்யத்தை அநுவதித்துக் காட்டினன். பின்பு ஸாபராதைகளான ராக்ஷஸிகளைப் பற்ற ராமதூதன் சீறினவிடத்து

செய்பவள் அல்லளோ, மஹத: - பெரியதான, பயாத்-ஆபத்திலிருந்து, பரித்ராதும்- காப்பாற்றுவதற்கு, ஏஷா - இவள், அலம்-சக்தியுள்ளவள்

1 ராமா - ஸுந்தர—58 - 87. ஏஷா - இந்த ஸீதை, ராக்ஷஸீ கணம் - ராக்ஷஸிகளின் கூட்டத்தை, ராகவாத் - ராமனிடத்திலிருந்து, பரித்ராதும் - காப்பாற்றுவதற்கு, அலம் - சக்தியுள்ளவள.

2 ராமா - ஸுந்தர—58 - 89. தத: - அப்பொழுது, ஸா -அந்த, ஹ்ரீமதீ - நாணத்தையுடைய பாலா - நங்கையான ஸீதை, பர்த்து:- பர்த்தாவான ராமனுடைய, விஜயஹர்ஷிதா - ஜயத்தைக்கேட்டு ஸந்தோஷம் அடைந்தவளாய், தத் தத்யம் யதி - அது உண்மையாகில்,வ:- உங்களுக்கும், சரணம் ஹி - சரணமாகவே, பவேயம் -ஆகக்கடவேன் (என்று) அவோசத் - சொன்னள்.

3 ' पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम।
कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति ॥ '

(பாபாநாம் வாஶுபாநாம் வா வதார்ஹாணும் ப்லவங்கம।
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி ॥)

இத்யாதிகளாலே அவன் சீற்றத்தை ஆற்றி, பிராட்டி ராக்ஷஸி களைத் தான் ஏறிட்டுக்கொண்டு ரக்ஷித்தபடி சொன்னன். இவ் வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்த பட்டர், ராம கோஷ்டிக்கும் ஆ காத நமக்குப் பிராட்டியுடைய க்ஷமையொழியத் தஞ்சமில்லை என்னுமிடத்தை

1 ' मातः मैथिलि राक्षसीः त्वयि तथैवार्द्रापराधःस्वया
रक्षन्त्या पवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठीकृता ।
काकं तं च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सा नः सान्द्रमहागसः सुखयतु क्षान्तिः तव कस्मिकी ॥ '

(மாதர்மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீக்ருதா
காகம் தம் ச விபீஷணம் ஶரணமித்யுக்தி க்ஷமௌ ரக்ஷதः
ஸாநः ஸாந்த்ர மஹாகஸः ஸுகயது க்ஷாந்திஸ்தவாகஸ்மிகீ ॥)

என்று அருளிச்செய்தார்.

---

3 ராமா - யுத்த—116 - 45. ப்லவங்கம - ஓ! ஹநுமானே. பாபா நாம் வா, பாபிகளானலும், சுபாநாம் வா - நல்லவர்களானலும், வதார் ஹாணும் - கொல்லத் தகுந்தவர்களானலும், ஆர்யேண - பெரியவரான உம்மால், கருணம் - தயையே, கார்யம் - செய்யத்தக்கது, கச்சித் - ஒரு வனும், ந அபராத்யதி - அபராதம் செய்வதில்லை என்பது, ந - இல்லை.

1 ஸ்ரீ குணரத்ன கோசம்—50. மாதः மைதிலி - தாயாகிய ஓ! சீதையே, த்வயி - உம்மிடத்தில், ததைவ - அப்படியே, ஆர்த்ராபரா தாः - அபராதத்தைச் செய்துகொண்டிருக்கிற, ராக்ஷஸீः - ராக்ஷஸிகளை, பவநாத்மஜாத் - ஹநுமானிடமிருந்து, ரக்ஷந்த்யா - ரக்ஷித்த, த்வயா, உன்னால், சரணம் இதி உக்தி க்ஷமௌ - சரணம் என்று சொல்லிய, காகம் - காகாஸுரனையும், தம் ச விபீஷணம் - அந்த விபீஷணனையும், ரக்ஷதः - ரக்ஷித்த, ராமஸ்ய - ராமனுடைய, கோஷ்டீ - ஸபையானது, லகுதரா - மிகவும் அல்பமாக, க்ருதா - செய்யப்பட்டது, தவ - உம்மு டைய, ஆகஸ்மிகீ - யத்ருச்சையினால் உண்டாகிற, ஸா - அந்த, க்ஷாந்திः - கருணையானது, ஸாந்த்ரமஹாகஸः - பெரிய பாபங்கள் நிறைந்த, நः - எங்களை, ஸுகயது - காப்பாற்றட்டும்.

இப்படி ஆறு காண்டத்திலும் ஶரணாகதி தர்மமே அஞ்சுரு வாணியாகக் கோக்கப்பட்டது.

நாராயண தர்மம்

உத்தர ஸ்ரீ ராமாயணத்திலும் ராவணன் பாட்டன்மார் காலத்திலே விஷ்ணுவவதாரஸ்தனான ஸர்வேஶ்வரன் ஶரணாகதரான தேவர்களைரக்ஷிப்பதற்காகத் திருவுள்ளம் பற்றி, ராக்ஷஸரோடு பொருத அளவிலே, பூசலிலே கெட்டு, பராங்முகராய் லங்கையைக் குறித்துப் பலாயநம் பண்ணுகிற ராக்ஷஸரைப் பின்தொடர்ந்து சார்ங்கம் உதைத்த சர மழைகளாலே கொன்று சூறையாடக்கண்ட மால்யவான் புரிந்து,

1 ' नारायण न जानीषे क्षात्त्रं धर्मंसनातनम् ।
अयुद्धमनसो भग्नान् अस्मान् हंसि यथेतरः ॥ '

(நாராயண ந ஜாநீஷே க்ஷாத்த்ரம் தர்மம் ஸநாதநம் ।
அயுத்தமநஸோ பக்நாந் அஸ்மாந் ஹம்ஸி யதேதரः ॥)

என்று 'ஓடிப்போகிற எங்களைக் கொல்லுகை க்ஷத்த்ரதர்ம விருத்தமன்றே ? தர்மம் அறியாதார் செய்யுமதை தர்மஜ்ஞனை நீ செய்யாநிற்கிறது என்? ' என் று ஆற்ருமையாலே முறையிட, ஸர்வேஶ்வரன் 'நாம் க்ஷத்த்ரியராகிலன்றே க்ஷத்த்ரிய தர்மம் அநுஷ்டிப்பது, நம்மை நாராயணன் என்று நீ சொன்னபடியே நாம் நியந்த்ருத்வாதிகளாலே ஸர்வ விலக்ஷணராகையால் நாராயண தர்மமான ஶரணாகத ரக்ஷணம் அநுஷ்டிக்கிறோம் ' என்று அபிப்ராயம் கொண்டு

2 ' युष्मत्तो भयभीतानां देवानां वै मयाऽभयम् ।
राक्षसोत्सादनं दत्तं तदेतदनुपश्यते ॥

---

1 ராமா - உத்தர - 8 - 3. நாராயண - ஓ! நாராயணனே, புராதநம் - அநாதியான, க்ஷாத்த்ரம் தர்மம் - (ஓடினவர்களை அடிக்கக் கூடாது என்கிற) க்ஷத்த்ரிய தர்மத்தை, ந ஜாநீஷே - நீ அறியவில்லை, அயுத்தமநஸ: -போர் புரிய இஷ்டமில்லாத மனத்தையுடையவர்களும், பக்நாந்-தோல்வி அடைந்துள்ளவர்களுமான, அஸ்மாந் - எங்களை, இதர: - மற்ற ஸாமாந்ய மனிதன், யதா - எப்படியோ, (அப்படி) ஹம்ஸி - அடித்துக் கொல்லுகிறாய்.

2 ராமா - உத்தர - 8 - 7, 8. யுஷ்மத்த: - உங்களிடமிருந்து, பயபீதாநாம் - அஞ்சி நடுங்கிய, தேவர்களுக்கு, மயா - என்னால்,

प्राणैरपि प्रियं कार्यं देवानां हि सदा मया ।
सोहं वो निहनिष्यामि रसातलगतानपि ॥ '

(யுஷ்மத்தோ பயபீதாநாம் தேவாநாம் ஹி வை மயாபயம் ।
ராக்ஷஸோத்ஸாதநம் தத்தம் ததேதத்தநுபால்யதே ॥
ப்ராணைரபி ப்ரியம் கார்யம் தேவாநாம் ஹி ஸதா மயா ।
ஸோஹம் வோ நிஹநிஷ்யாமி ரஸாதலகதாநபி ॥)

என்று 'நாம் தேவர்களுக்குப் பண்ணின அபயப்ரதாநத்தாலே பசுக்களுக்காகப் புலிகளைத் தொடர்ந்து கொல்லும் கணக்கிலே உங்களைக் கொல்லுகிறேம்' என்று அருளிச் செய்த பாசுரத்தாலே மற்றுமுள்ள க்ஷத்ரிய தர்மாதிகளிலும் காட்டில் ஶரணாகத ரக்ஷணை தர்மமே பெருமாளுக்கு அநுபாலநீயம் என்னுமிடத்தை ஸ்தாபித்தான்.

வாலியுடைய சோத்யத்திற்கும் இவ்வுத்தரத்தையே திருவுள்ளம் பற்றி

1 ' सूक्ष्मः परमदुर्ज्ञेयः सतां धर्मः प्लवङ्गम '

(ஸூக்ஷ்மः பரமதுர்ஜ்ஞேயः ஸதாம் தர்மः ப்லவங்கம)

என்று கம்பீரமாகப் பெருமாள் அருளிச் செய்தார். 'முன்பு ஸாபராதரான மஹாராஜர் அநுதப்தராய் ஶரணாகதராக அவரை நீ நலிந்தாயாகையால் நீ தண்ட்

வாலிவத ஸமர்த்தநம்

யனாகையாலும், ஶரணாகதரான மஹாராஜரை ரக்ஷிக்கை நமக்குப் பரமாகையாலும் உன்னை நிராகரித்தோம்' என்று தாத்பர்யம்.

ராக்ஷஸ உத்ஸாதநம் - ராக்ஷஸர்களை நிர்மூலமாக்குவதாகிற, அபயம்-அபயமானது, தத்தம் - கொடுக்கப்பட்டது. ததேதத் - அந்த இது, அநுபால்யதே - பரிபாலிக்கப்படுகிறது.

ப்ராணைரபி-ப்ராணனைக் காட்டிலும்,ப்ரியம் -ப்ரியமானது,மயாஎன்னால். ஸதா - எப்பொழுதும் தேவாநாம் - தேவர்களுக்கு, கார்யம் - செய்யத்தக்கதே, ஸः-அந்த நான், ரஸாதலகதாநபி-பாதாள லோகத்தை அடைந்திருந்தாலும், வः - உங்களை:ஹநிஷ்யாமி - கொல்லுவேன்.

1 ராமா - கிஷ் 18 - 15. ப்லவங்கம - குரங்காகிய ஓ! வாலியே, ஸதாம் - ஸத்துக்களின், தர்மः - தர்மம், ஸூக்ஷ்மः- ஸூக்ஷ்மமானது, பரமதுர்ஜ்ஞேயः - மிகவும் கஷ்டப்பட்டு அறியக்கூடியது.

இப் பிரபந்தம் தலைக்கட்டுகிற இடத்திலும் உபாயாநதி காரிகளான ஸ்த்தாவரங்களையும் கூட

3 ' विषये ते महाराज रामव्यसन कर्शिताः ।
अपि वृक्षाः परिम्लानाः स पुष्पांकुरकोरकाः ॥'

(விஷயே தே மஹாராஜ ராமவ்யஸநகர்ஶிதாः ।
அபி வ்ருக்ஷாः பரிம்லாநாः ஸபுஷ்பாங்குர கோரகாः ॥)

விஷய வாஸமும் ரக்ஷண காரணமாகும்படி

என்னும்படி உண்டான விஷயவாஸத்தையும், அவஸ்த்தா விஶேஷத்தையும் பற்ருசாக ரக்ஷித்தபடி பரக்கப் பேசப்பட்டது.

இப்படி இப் ப்ரபந்தம்

1 ' उपक्रमोपसंहारावभ्यासोऽपूर्वता फलम् ।
अर्थवादोपपत्ती च लिङ्गं तात्पर्य निर्णये ॥ '

(உபக்ரமோபஸம்ஹாராவப்யாஸோऽபூர்வதா பலம் ।
அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே ॥)

என்கிற தாத்பர்ய லிங்கங்களையெல்லாம் பரிபூர்ணமாக உடைய தாய் ஸ்ரீ வால்மீகி பகவானுலே த்ருஷ்டமாயிருப்பதொரு ஶரணாகதி வேதம். இதில் இவ்வபய ப்ரதாந ப்ரகரணம் ஸர்வரஹஸ்ய ஸாரங்களையும் திரள வெளியிட்ட் உபநிஷத்பாகம்.

ராமாயணத்தின் சரணாகதி வேதத்வம்

ஶரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்சம்
என்னும் மூன்ருவது அதிகாரம் முற்றிற்று

---

3 ராமா - அயோத் 59 - 8. மஹாராஜ - மஹாராஜாவாகிய ஓ! தசரதனே, தே - உம்முடைய, விஷயே - ராஜ்யத்தில், வ்ருக்ஷாः அபி - மரங்களும், ராமவ்யஸநகர்ஶிதாः - ராமனைப் பிரிந்ததினுல் உண்டான வருத்தத்தினுல் பீடிக்கப்பட்டவைகளாய், ஸபுஷ்பாங்குர கோரகாः - புஷ்பம், முகை, மொட்டுக்கள் உள்பட, பரிம்லாநாः - வாடிப்போயின.

1 உபக்ரம - ஆரம்பம், உபஸம்ஹார - முடிவு, அப்யாஸ - அடிக்கடி சொல்லுவது, அபூர்வதா - அப்ராப்தத்வம்(விஷயத்தின் புதுமை), பலம் - பலத்தைச் சொல்லுவது, அர்த்தவாதோபபத்தீ ச - ஸ்தோத்திரம் செய்வது, யுக்தி காட்டுவது, முதலியவை, தாத்பர்ய நிர்ணயே - (ஒரு க்ரந்தத்தின்) தாத்பர்யத்தை நிர்ணயிப்பதில், லிங்கம்-காரணமாகும்.

ப்ரகரண தாத்பர்ய நிர்ணயம்

என்னும் நாலாவது அதிகாரம்

[சரணாகதவிக்நநிராகரணம்—விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில் ஆநுகூல்ய ஸங்கல்பாதி அங்க பஞ்சக பூர்த்தி—விபீஷண பலகாங்க்ஷித்வ விசாரம்.]

இப்படி ஸரணாகதி வேதோபநிஷத்தான இவ்வபயப்ரதாந ப்ரகரணத்திலே

1 ' परमापदगतस्यापि धर्मे मम मतिः भवेत् '

(பரமாபத் கதஸ்யாபி தர்மே மம மதிர் பவேத்)

என்று ப்ரஹ்மாவின் பக்கலிலே வரம் வேண்டிக்கொண்டு

2 ' धर्मिष्ठस्त्वं यथा वत्स तथाचैतत् भविष्यति '

(தர்மிஷ்ட்டஸ்த்வம் யதாவத்ஸ ததா சைதத் பவிஷ்யதி)

என்று வரம்பெற்ற ஸ்ரீ விபீஷணழ்வான் ஸரணாகதி தர்மத்தைப் பரிக்ரஹித்து அநுஷ்ட்டிக்கையாலும், பின்பு பெருமாளையும் கூட அநுஷ்ட்டிப்பிக்கையாலும் ஸரணாகதி பரம தர்மம் என்னுமிடம் ஸிஷ்டாசாரத்தாலே ஸ்த்தாபிதம். இப்ப்ரகரணத்தில் முன்பே பல ஸர்க்கங்களாலே ரஜஸ்தமஃ ப்ரக்ருதிகளாயிருப்பார்க்கு ஸத்த்வப்ரக்ருதிகளாயிருப்பார் ஹிதம் சொன்னாலும் பகவத் விஷயத்தில் ஆபி முக்யம் கூடாது என்னுமிடம் சொல்லிற்று. ஸத்த்வோத்தரனை ஸ்ரீ விபீஷணழ்வான் ஸரணாகதனாய் வருகிற போது, அவன் விஷயத்திலே தேவதாவதாரரான ஸ்ரீ வாநர வீரர்களாலே விக்நம் ப்ரஸகதமானபடி சொல்லுகையாலே

சரணாகத விக்ந நிராகரணம்

' श्रूयते किल गोविन्दे भक्तिमुद्वहतां नृणाम् ।
संसारन्यूनता भीताः त्रिदशाः परिपन्थिनः ॥ '

---

1 ராமா - உத்தர 10 - 31, 34. மம - எனக்கு, பரமாபத்கதஸ்யாபி - பெரிய ஆபத்து உண்டாயிருந்தாலும், தர்மே - தர்மத்திலே, மதிஃ - புத்தி, பவேத் - இருக்கவேண்டும்.

வத்ஸ - குழந்தாய், த்வம் - நீ, தர்மிஷ்ட்டஃ - தர்மிஷ்டனாகவே, யதா - எப்படி (விரும்புகிறாயோ), ததா - அப்படியே, ஏதத் - இது, பவிஷ்யதி - உண்டாகப்போகிறது.

1 (ஶ்ரூயதே கில கோவிந்தே பக்திமுத்வஹதாம் நரணும்।
ஸம்ஸார ந்யூநதா பீதா: த்ரிதஶா: பரிபந்திந: ॥)

என்கிறபடியே பகவத் விஷயத்திலே அபிமுகராவாரைத் தங்கள் குடிமக்கள் தப்பிப்போகிறார்கள் என்று நினைத்துத் தேவர்கள் விலக்குவர்கள் என்னுமிடமும், இப்படி விகநங்கள வந்தாலும் சுத்த பாவராய் அநந்யராய் வந்து அடைந்தவர்களை

2 ' संकल्पादेव भगवान् तत्त्वतो भावितात्मनाम्।
व्रतान्तमखिल कालं सेचयत्यमृतेन तु ॥' என்றும்,

प्रपत्तिकालादारभ्य त्वात्मलाभावसानिकम्।
यत्रावकाशो विघ्नानां विद्यते न कदाचन ॥'

(ஸங்கல்பாதேவ பகவாந் தத்த்வதோ பாவிதாத்மநாம் ।
வ்ரதாந்தமகிலம் காலம் ஸேசயத்யம்ருதேந து ॥) என்றும்,
(ப்ரவ்ருத்திகாலாதாரப்ய த்வாத்மலாபாவஸாநிகம்।
யத்ராவகாஶோ விக்நாநாம் வித்யதே ந கதாசந ॥)

என்றும் ஸாத்வத பௌஷ்கராதிகளிலே சொல்லுகிறபடியே பெருமாள் தாமே எல்லா விகநங்களையும ஶமிப்பித்து அடிமை கொள்ளுவார் என்னுமிடமும் வெளியிடப்பட்டது.

ஸர்வஜ்ஞ ஸம்ஹிதாதிகளில் சொன்ன ஆநுகூல்ய ஸங்கல் பாதிகளும் அடங்க இப் ப்ரகரணத்திலே காணலாம். எங்ஙனே என்னில் :-

---

1 விஷ்ணுதர்மம் -2-25. கோவிந்தே-பகவானிடத்தில், பக்திம்-பக்தியை, உத்வஹதாம் - செய்துகொண்டிருக்கிற, நரணும் - மனிதர் களுக்கு, ஸம்ஸாரந்யூநதாபீதா: - தங்களுடைய ஸம்ஸாரம் குறைந்து விடுகிறதென்று பயப்படுகிற, த்ரிதஶா: - தேவதைகள், பரிபந்திந: - சத்ருக்கள் என்று, ஶ்ரூயதேஹி - சொல்லப்படுகிறதன்றே ?

2 ஸாத் - ஸம். தத்த்வத: - உண்மையாகவே, பாவிதாத்ம நாம் - தன்னிடத்தில் மனத்தைச் செலுத்தினவர்களுக்கு, பகவாந் - பக வாந், ஸங்கல்பாதேவ - தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே, வ்ரதாந் தம் - வ்ரதத்தை முடிவாகவுடைய, அகிலம் - எல்லாம், காலம் - காலத் தையும், அம்ருதேந - ஸுகத்தினால், ஸேசயதி - நிறைக்கிறார்.

ப்ரபத்தி காலாதாரப்ய - ப்ரபத்தி செய்த காலம் தொடக்கமாக, ஆத்மலாபாவஸாநிகம் - மோக்ஷம் அடைவதை இறுதியாகக் கொண்ட காலத்தில், விக்நாநாம் - தடங்கல்களுக்கு, யத்ர - எந்த விஷயத்தில், அவகாஶ: - இடம், கதாசந - ஒருபொழுதும், ந வித்யதே - இல்லை.

விபீஷணசரணாகதி ப்ரகரணே ஆநுகூல்யாதி அங்கபஞ்சகபூர்ணத்வம்

அடியிலே ராவணாதிகளுக்கும்கூட ஹிதோபதேசம் பண்ணுகையாலும், தூதனாய்ச் சென்ற திருவடியை துஷ்ப்ரக்ருதியான ராவணன் அசக்யம் என்று அறியாதே நலிய நினைக்க அத்தை விலக்குகையாலும், பிறவி உறவையும் பெரிய ஐச்வர்யத்தையும் புத்ர தாராதிகளையும் அநாதரித்து ப்ராதிகூல்ய வர்ஜநம் பண்ணுகையாலும், 'ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜநமும்' ஸூசிதமாயிற்று. பெருமாள் ஸர்வலோக சரண்யன் என்கிற வ்யவஸாயத்தாலும்,

1 'आजगाम मुहूर्तेन यत्र रामः सलक्ष्मणः'

(ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராமः ஸலக்ஷ்மணः)

என்கிறபடியே அஞ்சவேண்டும் ப்ரதேசத்திலே அசங்கிதமாகத் தன் நிலமாக நினைத்து வருகையாலும், 'ரக்ஷிஷ்யதீதி விச்வாஸம்' காட்டப்பட்டது.

2 'राघवं शरणं गतः' (ராகவம் சரணம் கதः)

என்கிற உபாய வரணவாக்ய ஸாமர்த்யத்தாலே 'கோப்த்ருத்வவரணம்' சொல்லிற்று. உபாயாந்தர ஸ்த்தாந நிவேசபரமான சரணசப்தத்தாலே வ்யஞ்ஜிதமாய், ரக்ஷாபர ஸமர்ப்பண ப்ரதாநமான ஆத்மநிக்ஷேபமும்

3 'सर्वलोकशरण्याय राघवाय महात्मने
निवेदयत मां क्षिप्रं विभीषणमुपस्थितम् ॥'

(ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே।
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்த்திதம் ॥)

என்று அந்தரங்கராயிருப்பாரை முன்னிலையாகக் கொண்டு விசதமாகச் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் பெருமாளும், இளைய பெருமாளும் முதலிகளும் கேட்கும்படி கிட்டவந்து

---

1 ராமா - யுத்த - 17 - 1. ஸ லக்ஷ்மணः - லக்ஷ்மணனுடன் கூடிய, ராமः - அந்த ராமன், யத்ர - எந்த இடத்தில் (இருந்தாரோ அங்கு) முஹூர்த்தேந - ஒரு முஹூர்த்தத்திற்குள், ஆஜகாம - வந்து சேர்ந்தான்.

2 ராமா - யுத்த 17 - 14. ராகவம் - ஸ்ரீ ராமனை, சரணம் - சரணமாக, கதः - அடைந்தான்.

3 ராமா - யுத்த 18 - 4. மஹாத்மநே - மஹாத்மாவாயும், ஸர்வலோக சரண்யாய - எல்லா லோகத்திற்கும் சரண்யராயும் இருக்கும், ராகவாய - ராமன் பொருட்டு, மாம் விபீஷணம் உபஸ்த்திதம் - வந்தடைந்திருக்கிற விபீஷணனை, க்ஷிப்ரம் - சீக்ரமே, நிவேதயத - ஸமர்ப்பியுங்கள்

1 'प्रणतश्च महानेषः' (ப்ரணதஶ்ச மஹாநேஷ:) என்கிறபடியே கூப்பிடுகிறவனுகையாலே 'பெருமாளுக்கு அறி வியுங்கள்' என்கை விவக்ஷிதமன்று.

2 'सख्यमात्मनिवेदनम्' (ஸக்யமாத்ம நிவேதநம்)

3 'किंकरोस्मीति चात्मानं देवायैवं निवेदयेत्'

(கிங்கரோஸ்மீதி சாத்மாநம் தேவாயைவம் நிவேதயேத்) இத்யாதிகளிற்படியே 'நிவேதயத மாம்'-என்று என்னேஸமர்ப் பியுங்கள் என்றபடி.

4 'रावणो नाम दुर्वृत्तः' (ராவணோ நாம துர்வ்ருத்த:) என்று தொடங்கி

5 'सोऽहं परुषितस्तेन दासवच्चावमानितः'

(ஸோஹம் பருஷிதஸ் தேந தாஸவச்சாவமாநித:) என்றது அறுதியாக துஷ்ப்ரக்ருதியான ராவணனுக்குத் தான் ஹிதோபதேஶம் பண்ணிப் பாழுக்கு நீர் இறைத்துப் பரிபூதனை படி சொல்லுகையாலும்,

6 'स्वरेण महता महान्' (ஸ்வரேண மஹதா மஹாந்) என்கிற ஆர்த்த ஸ்வரத்தாலும்,

7 'निवेदयत मां क्षिप्रं' (நிவேதயத மாம் க்ஷிப்ரம்) என்கிற த்வராதிஶயத்தாலும்,

---

1 ராமா - 18 - 14 ஏஷ:ப்ரணத: - இந்த உதவ வேண்டும்என் கிற கூப்பாடு, மஹாந் - மிகவும் பெரியது.

2 பாக - 7 - 5 - 23. ஸக்யம் - ஸ்நேஹம் என்பது, ஆத்ம நிவே தநம் - ஆத்மாவை ஸமர்ப்பிப்பது.

3 ஜிதந்தா - 1 - 14. தேவாய - பகவான் பொருட்டு, ஆத்மா நம் - ஆத்மாவை, ஏவம் - இப்படி, கிங்கர: அஸ்மி இதி - உனக்கு தாஸபூதனுகிறேன் என்று, நிவேதயேத் - ஸமர்ப்பிக்கவேண்டும்.

4 ராமா - 17 - 10. ராவண: நாம - ராவணன் என்று பெயரு டைய, துர்வ்ருத்த: - கெட்ட நடவடிக்கையுடையவனுன(ராக்ஷஸன் இருக்கிறான்).

5 தேந - அவனுல், பருஷித: - கடிந்து பேசப்பட்டவனும், தாஸவத்- (தம்பியாயிருந்தபோதிலும்) அடிமையைப் போலே, அவமாநித: - அவ மானம் செய்யப்பட்டேன்.

6 ராமா - யுத்த -17 - 9. மஹாந் - மஹாநுகிய (விபீஷணன்), மஹதா ஸ்வரேண - பெருங்குரலால் (சொன்னுர்).

7 ராமா - யுத்த - 17 -15 மாம்-என்னை, க்ஷிப்ரம்-சீக்ரமாக, நிவேதயத-ஸமர்ப்பியுங்கள்.

1 ' प्रणादश्च महानेपः ततोस्य भयमागतम् '

(ப்ரணதஶ் ச மஹாநேஷ: ததோஸ்ய பயமாகதம்)

என்கிற ஸர்வஜ்ஞனான ஶரண்யனுடைய வாக்யத்தாலும் கார்ப்பண்யம் சொல்லப்பட்டது. ஆக இப்படி ஆநுகூல்ய ஸங்கல்பாதியுக்தையாய், பரிபூர்ணையாய், த்வயத்தில் பூர்வ கண்டத்திலே சொல்லப்படுகிற ஸ்வரக்ஷாபரஸமர்ப்பணத்மிகையான ப்ரபத்தியை ஸர்வாவஸ்த்தையிலும் தர்ம ஸாரத்திலே நிலைகுலையாத ஸ்ரீ விபீஷணழ்வான் அநுஷ்டித்தான்.

அதற்கு அவன் பலமாகக் கோலிற்று என் என்னில்:- ஆபாத ரஸிகராயிருப்பார் லங்கைஶ்வர்யம் என்றிருப்பார்கள்.

விபீஷணபலகாங்க்ஷித்வவிசாரம்

ஸ்ரீவிபீஷணழ்வான் கருத்தை அடியொற்றினால் ஶரண்யனான பெருமாள் திருவடிகளிலே கைங்கர்யமே பலமாயிருக்கும். அது எங்ஙனே என்னில்:—ஶரணாகதி காலம் தன்னிலே

2 ' त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः '

(த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:)

என்று இதர விஷயங்களிலே நைராஶ்யத்தைத் தானே கண்டோக்தி பண்ணுகையாலும், பின்பு பெருமாளுக்கு விண்ணப்பம் செய்கிறபோதும்

3 ' परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च ।
भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि च ॥ '

---

1 ராமா - யுத்த - 18 - 14. ஏஷ: - இந்த, ப்ரணத: -கூப்பிடும் குரல், மஹாந் - மிகவும் பெரியது, தத: - ஆகையினால், அஸ்ய - இந்த விபீஷணனுக்கு, பயம் - ஆபத்து, ஆகதம் - கிட்டியிருக்கிறது,

2 ராமா - யுத்த - 17 - 14. புத்ராந்ச- புத்திரர்களையும், தாராந்ச - பத்னியையும், த்யக்த்வா - விட்டுவிட்டு, ராகவம் - ராமனை, சரணம் - சரணமாக, கத: - அடைந்தான்.

3 ராமா - யுத்த - 19 - 05. மயா - என்னால், லங்கா - லங்கா பட்டணமும், மித்ராணிச - பந்துக்களும், தநாநிச - தனமும், பரித்யக்தா - விட்டுவிடப்பட்டன, மே - எனக்கு, ராஜ்யம் - ராஜ்யமும் ஜீவிதம் - உயிரோடு இருப்பதும், ஸுகாநிச - ஸுகங்களும், பவத்கதம்- உம்மிடத்தில் இருக்கிறது.

(பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச।
பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச॥)

என்று 'லங்கைஸ்வர்யாதிகளை அடையவிட்டு, எல்லாப் புருஷார்த்தமுமாகத் தேவரீர் திருவடிகளைப் பற்றினேன்' என்று விண்ணப்பம் செய்கையாலும், இவன் அநந்ய ப்ரயோஜநனை அதிகாரி என்னுமிடம் ஸுவ்யக்தம். ஆனபின்பு

1 'राज्यं प्रार्थयमानस्तु बुद्धिपूर्वमिहागतः'

(ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து புத்திபூர்வமிஹாகதः)

என்கிற திருவடி வாக்யமும்,

2 'न वयं तत् कुलीनाश्च राज्यकांक्षी च राक्षसः'

(ந வயம் தத்குலீநாஶ்ச ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸः)

என்று பெருமாள் அருளிச்செய்த வார்த்தையும், ராம பக்தியாலே கலங்கின மஹாராஜருடைய கிளர்த்தியை அடக்குகைக்கு ஈடாக நீதி ஶாஸ்த்ரங்களிலே சொல்லும் ராஜ வ்ருத்தாந்தக் கட்டளையைக் காட்டினபடியாமத்தனை. திருவடியும் பெருமாளும் அருளிச்செய்த பாசுரமும், விபீஷணாழ்வான்தன்பாசுரமும் விரோதித்தால் அந்தரங்க ந்யாயத்தாலே தன் பாசுரமே ப்ரபலமாகக் கடவது. அங்ஙனேயாகில்

3 'अहं हत्वा दशग्रीवं सप्रहस्तं सबान्धवम्।
राजानं त्वां करिष्यामि सत्यमेतत् ब्रवीमि ते॥'

(அஹம் ஹத்வா தஶக்ரீவம் ஸப்ரஹஸ்தம் ஸபாந்தவம்।
ராஜாநம் த்வாம் கரிஷ்யாமி ஸத்யமேதத் ப்ரவீமி தே॥)

என்று 'ராவணனைக் கொன்று உம்மைராஜ்யத்திலே முடிசூட்டக்

---

1 ராமா - யுத்த - 17 - 65. ராஜ்யம்ப்ரார்த்தயமாநஸ்து - ராஜ்யத்தை ப்ரார்த்திப்பவனுக, புத்திபூர்வம் - புத்தி பூர்வகமாக, (அதாவது வேண்டுமென்றே) இஹ - இங்கு, ஆகதः - வந்திருக்கிறான்.

2 ராமா - யுத்த - 18 - 13. வயம் - நாம், ததத்குலீநாः ச - அவனுடைய ராக்ஷஸ வம்சத்தைச் சேர்ந்தவர்களல்லர், ராக்ஷஸः - ராக்ஷஸனுகிய விபீஷணன், ராஜ்ய காங்க்ஷீ - ராஜ்யத்தை ஆசைப்படுகிறவன்.

3 ராமா - யுத்த - 19 - 19. அஹம் - நான், தஶக்ரீவம் - ராவணனை, ஸப்ரஹஸ்தம் - ப்ரஹஸ்தனுடனும், ஸபாந்தவம் - பந்துக்களுடனும், ஹத்வா - கொன்று, த்வாம் - உன்னை, ராஜாநம் - அரசனுக, கரிஷ்யாமி - செய்யப்போகிறேன், தே - உனக்கு, ஏதத் - இந்த, ஸத்யம் - உண்மையை, ப்ரவீமி - சொல்லுகிறேன்.

கடவோம்' என்று பெருமாள் அருளிச்செய்வானேன் என்னில், அதுவும்

1 'शरीरारोग्यमर्थांश्च भोगांश्चैवानुषङ्गिकान्।
ददाति ध्यायिनां नित्यमपवर्गप्रदो हरिः॥'

(ஶரீராரோக்யமர்த்தாம்ஶ்ச போகாம்ஶ்சைவாநுஷங்கிகாந்।
ததாதி த்யாயிநாம் நித்யம் அபவர்க்கப்ரதோ ஹரிः॥)

என்கிற ந்யாயத்தாலே அடங்காத ஸரண்யப்ரீதிக்குப் போக்கு வீடான ஆநுஷங்கிக போகப்ரதாநம் என்றுகொள்ள ப்ராப்தம். ஆகையாலேயன்றே 'முடிசூட்டக்கடவோம்' என்றுஅருளிச்செய்த பெருமாளுக்கு அதற்கு ஒரு மறுமாற்றம் விண்ணப்பம்செய்யாதே

2 'राक्षसानां वधे साह्यं लङ्कायाश्च प्रधर्षणे।
करिष्यामि यथाप्राणं प्रवेक्ष्यामि च वाहिनीम्॥'

(ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் லங்காயாஶ்ச ப்ரதர்ஷணே।
கரிஷ்யாமி யதா ப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம்॥)

என்று ஸர்வநிரபேக்ஷரான திருவடியைப்போலே அவஸரோசித மானஅடிமை செய்யக்கடவேன் என்று ஸ்ரீவிபீஷணழ்வான் விண்ணப்பம் செய்தது, இவன்தார்மிகத்வத்தை வரமாக வேண்டிக் கொள்ள ப்ரீதனான ப்ரஹ்மா அமரத்வத்தையும் கூடக்கொடுத்தாற்போலே அடிமை செய்ய வேண்டிக்கொண்ட ஸ்ரீவிபீஷணழ்வானுக்குப் பெருமாளே அடிமைக்குஉறுப்பாக ஐஶ்வர்யத்தையும் கொடுத்தார், ஆகையாலே திருவடி நிலையை முன்னிட்டு ஸ்ரீபராழ்வான் நாட்டிலுள்ளாரை நியமித்திருந்தாற்போலே தர்மஸம்ஸ்தாபநார்த்தமாக அவதீர்ணரான பெருமாளுடைய நியோகத்தாலே மட்டுப்படாத ராக்ஷஸரைவழிப்படுத்தி நடத்துகைக்காக ஸ்ரீவிபீஷணழ்வான் ராஜ்யத்தை இசைகையால் இதுவும் ஆஜ்ஞாநுபாலநமாகையாலே கைங்கர்யகோடியிலே அந்வயித்தது. இவர் தமக்கு இசைவின்றிக்கே இருக்கப்பெருமாளுடைய அநதிலங்கநீயமான ஸபதபூர்வகஸாலநத்தாலே ராஜ்யம் பண்ணினார்

1 விஷ்ணுதர்மம் - 74 - 43. சரீராரோக்யம்-சரீரத்தின் ஆரோக்யத்தையும் அர்த்தாந்ச - ஐச்வர்யங்களையும், ஆநுஷங்கிகாந் - இவன் ஆசைப்படாமல் இருக்கச் செய்தே வருகிற, போகாந்ச - போகங்களையும், அபவர்க்கப்ரதः - மோக்ஷத்தைக் கொடுக்கிற, ஹரிः - பகவான், த்யாயிநாம் - தன்னைக்குறித்து த்யானம் செய்பவர்களுக்கு, நித்யம் - எப்பொழுதும், ததாதி - கொடுக்கிறார்.

என்னுமிடம் பெருமாள் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளுகிற போது விடைகொடுத்த பாசுரத்தாலே வெளியிடப்பட்டது.

1 ' यावत् प्रजा धरिष्यन्ति तावत् त्वं वै विभीषण ।
राक्षसेन्द्र महावीर्य लङ्कास्थः त्वं धरिष्यसि ॥
शापितस्त्वं सखित्वेन कार्यं ते मम शासनम् ।
प्रजास्संरक्ष धर्मेण नोत्तरं वक्तुमर्हसि ॥'

யாவத் ப்ரஜா தரிஷ்யந்தி தாவத் த்வம் வை விபீஷண।
ராக்ஷஸேந்த்ர மஹாவீர்ய லங்காஸ்த்தः த்வம் தரிஷ்யஸி ॥
ஶாபிதஸ் த்வம் ஸகித்வேந கார்யம தே மம ஶாஸநம்।
ப்ரஜாஸ்ஸம்ரக்ஷ தர்மேண நோத்தரம்வக்துமர்ஹஸி ॥)

என்றுமிறுக்கோடேயிறே பெருமாள்இவரை ராஜ்யத்திலே இருக்க இசைவித்தது. இப்படி இவன் அநந்ய ப்ரயோஜநனுகையாலே யிறே இவனுக்குத்தம்மிலும் சீரிய கோயிலாழ்வாரை எழுந்தருளுவித்துக் கொடுத்தது. இப்படியன்றிக்கே ஆபாதப்ரதீதிபக்ஷததாலே இவன் ஐஸ்வர்யார்த்தியானலும்

2 ' मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन ।
3 ' अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतं मम '

(மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதம்சந।)

---

1 ராமா - உத்தர - 108 - 27 - 29. மஹாவீர்ய - மஹா சூரனும், ராக்ஷஸேந்த்ர - ராக்ஷஸேந்திரனுமான, விபீஷண - ஓ! விபீஷணனே, ப்ரஜாः - ப்ரஜைகள், யாவத் - எதுவரைக்கும், தரிஷ்யந்தி-வாழ்கின்றனரோ, தாவத் – அதுவரைக்கும், த்வம் லங்காஸ்த்தः - நீ லங்கையிலேயே வஸித்துக் கொண்டு, த்வம் தரிஷ்யஸி - நீ வாழ்வாய், ஸகித்வேந - தோழனுகையினால், த்வம்- நீ, சாபிதः - ஆணையிடப் பட்டாய், மம சாஸநம் - என்னுடைய ஆஜ்ஞை, தே - உனக்கு கார்யம்- அவச்யம் செய்ய வேண்டியது, தர்மேண - நீதிநெறி தவறாமல், ப்ரஜாः - ப்ரஜைகளை, ஸம்ரக்ஷ - பரிபாலித்துவா,உத்தரம் - வேறு பதிலை, வக்தும் - சொல்லுவதற்கு, ந அர்ஹஸி - தகுதி உடையவனுகமாட்டாய்.

2 ராமா-யுத்த-18-3 மித்ர பாவேந- மித்ரன் என்கிற எண்ணத்துடன், ஸம்ப்ராப்தம்-வந்தடைந்தவனை, கதஞ்சந-ஒரு பொழுதும், ந த்யஜேயம்-விடமாட்டேன்

3 ராமா-18-33 ஸர்வபூதேப்யः-எல்லாப்ராணிகளுக்கும்எல்லாப்ராணிகளிடமிருந்தும், அபயம்-அபயத்தை, ததாமி - கொடுக்கிறேன் ஏதத் இது மம வ்ரதம் - என்னுடைய வ்ரதம்.

(அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥)
என்கிற பொதுவான பாசுரங்களாலே ஸரண்யாபிப்ராயத்தைப் பார்த்தால் ப்ரபத்தியானது ஸாமாந்யேந மோக்ஷபர்யந்தஸகல புருஷார்த்தஸாதநம் என்னும் இடம் தெளியலாம்.

ப்ரகரண தாத்பர்ய நிர்ணயம்
என்னும் நாலாம் அதிகாரம் முற்றிற்று

ஸரண்ய ஸீல ப்ரகாஸம்
என்னும் ஐந்தாம் அதிகாரம்

[பரத்வ ஸௌலப்ய யுக்தத்வம்—ஸர்வ லோக சரண்யாய ச்லோகார்த்தம்—த்வம் ஹி ச்லோகார்த்தம்— அத ராமः ச்லோகார்த்தம்—மித்ரபாவேந ச்லோகார்த்தம்]

இப்படித் தன் அபிமதஸித்திக்காக ஸரணாகதனை விபீஷணழ்வான்

1 'सर्वलोकशरण्याय'(ஸர்வலோகஸரண்யாய)

என்கிற அர்த்தத்தை

1 'राघवाय'(ராகவாய மஹாத்மநே)

என்று ஸௌலப்யத்தாலும் பரத்வத்தாலும் ஸாதிக்கிறான். த்ருணம் ஸுலபமேயாகிலும் ஒன்றுக்கு உறுப்பல்லாமையாலே அநாதரணீயம். ஸுமேரு ஆதரணீயமேயாகிலும் துர்லபமாகையாலே அநுபயுக்தம். ஆகையால் பரத்வமும் ஸௌலப்யமும் அபேக்ஷிதம்.

பரத்வஸௌலப்ய யுக்தத்வம்

ஸர்வலோகஸரண்யாய—உங்களுக்குப்போலே எனக்கும் பெருமாள்பக்கலிலே கூறு உண்டு என்கிறான். அங்ஙனன்றிக்கே யாவனொருவனுடனே ஒரு குடல் துவக்காலே நானும்கூட உங்களுக்குக் கல்லும் தடியும் எடுக்க வேண்டும்படியாயிருக்கிறேன். அப்படி மஹாபராதனான ராவணன்தனக்கும் கூடப் பெருமாள் ஸரண்யராய்க் கிடிகோள் இருப்பது. இப்படிப் பொதுவான ஸரண்யன் விஷயத்தில் ருசியில்லாமையாலே துராத்மாவான ராவணன் தன் கூறு இழக்கிறானித்தனை.

---

1 ராமா - யுத்த—18 - 4 122 ம் பக்கம்

'ராகவாய மஹாத்மநே' என்று பதத்வய ஸமபிவ்யாஹாரத்தாலே

1 'நிலவரம்பில பல பிறப்பாய் ஒளிவரும் முழு நலம்' என்கிறபடியே அவதார தசையிலே பரதசையிலும்காட்டில் அதிசயிதமான மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறான்.

ராகவாய—பெருமாளுககு சரணுகத ரக்ஷணம் ரகு முதலாகப் போருகிற குலதர்மமன்றே ?

மஹாத்மநே — கடலைக் கையிட்டு இறைத்து முடிய வொண்ணுதாப்போலே விசேஷித்துச் சொல்லி முடிய வொண்ணுது இம்மாஹாத்ம்யம். பெருமாள் ஆச்ரிதரக்ஷணத்தில் ஒருப்பட்டால் ஆதித்யன் புறப்பட்டால் இருட்டுப்பின்காணவொண்ணுதாப்போலே வரத்தாலே பூண்கட்டிவைக்கிற பஹுமுக ராக்ஷஸரையும் முன்காணவொண்ணுதபடியிருக்கும் இம்மாஹாத்ம்யம்.

இவ்வவதார தசையில் உண்டான நிரதிசய மாஹாத்ம்யத்தைப் பரதாரதார்ஸ பராங்முகரான பெருமாள் திருமுன்பேநின்று

1 'கथंचिदहमागतः' (கதஞ்சிதஹமாகதः)

என்கிறபடியே 'பெண்ணுடை உடுத்து உருமாறி நான் ஒருவனும் தப்பிப்போந்தேன்' என்று ராவணனுக்கு ஜநஸ்தாந வ்ருத்தாந்தத்தைச் சொன்ன அகம்பநன் வாக்யத்தாலே மஹர்ஷி வெளியிட்டான்.

3 'असाध्यः कुपितो रामः विक्रमेण महायशाः ।
आपगायाः सुपूर्णायाः वेगं परिहरेच्छरैः ॥
सतारग्रहनक्षत्रं नभश्चाप्यवसादयेत् ।
असौ रामस्तु सीदन्तीं श्रीमानभ्युद्धरेत् महीम् ॥

---

1 திருவாய்மொழி 1-3-2

2 ராமா - ஆர - 31 - 2. அஹம் - நான், கதம்சித் - ஏதோ ஒரு ப்ரகாரமாக (பெண்ணுடை தரித்து). ஆகத: - வந்து சேர்ந்தேன்.

3 ராமா - ஆர - 31 - 23 - 27. குபித: - கோபத்துடன் கூடிய, ராம: - ராமன், விக்ரமேண - வீர்யத்தினால், அஸாத்ய: - வெல்ல முடியாதவன், மஹாயசா: - புகழ் பெற்றவன், ஸுபூர்ணாயா:- முழு வெள்ளத்துடன் ஓடுகிற, ஆபகாயா: - நதியினுடைய, வேகம் - ப்ரவாஹத்தின் ஓட்டத்தை, சரை: - பாணங்களினால், பரிஹரேத் -

भित्वा वेलां समुद्रस्य लोकानाप्लावयेदिमान्।
वेगं वापि समुद्रस्य वायुं वा विधमेच्छरैः ॥
संहृत्य वा पुनः लोकान् विक्रमेण महायशाः।
शक्तः स पुरुषव्याघ्रः सृष्टुं पुनरिमाः प्रजाः ॥
न हि रामो दशग्रीव शक्यो जेतुं त्वया युधि।
रक्षसां वापि लोकेन स्वर्गः पापजनैरिव ॥ '

(அஸாத்யः குபிதோ ராமோ விக்ரமேண மஹாயஶாः।
ஆபகாயாः ஸுபூர்ணாயாःவேகம் பரிஹரேச்சரைः ॥
ஸதாராக்ரஹ நக்ஷத்ரம் நபஶ்சாப்யவஸாதயேத்।
அஸௌ ராமஸ்து ஸீதந்தீம் ஸ்ரீமாநப்யுத்தரேத் மஹீம்।
பித்வா வேலாம் ஸமுத்ரஸ்ய லோகாநாப்லாவயேதிமாந்।
வேகம் வாபி ஸமுத்ரஸ்ய வாயும்வா விதமேச்சரை ::
ஸம்ஹ்ருத்ய வா புநர் லோகாந் விக்ரமேண மஹாயஶாः।
ஶக்தஸ் ஸ புருஷவ்யாக்ரः ஸ்ரஷ்டும் புநரிமாः ப்ரஜாः।

தடை செய்வான், ஸ்ரீமான்-ஸ்ரீமானுகிய, அஸௌ ராமः-இந்த ராமன், ஸதாராக்ரஹ நக்ஷத்ரம்-(தங்கள் இடத்தில் ஸ்த்திரமாய் இருக்கும்) நக்ஷத்திரங்கள் நவக்ரஹங்கள் முதலியவைகளையுடைய, நபः அபி-ஆகாசத்தைக்கூட, அவஸாதயேத்-அழித்துவிடுவான், ஸீதந்தீம்-நீரில் முழுகுகிற, மஹீம்ச-பூமியையும், அப்யுத்தரேத்-தூக்கி நிலை நிறுத்துவான், ஸமுத்ரஸ்ய வேலாம்-ஸமுத்திரத்தின் கரையை, பித்வா-பிளந்து, இமாந் லோகாந்-இந்த லோகங்களை, ஆப்லாவயேத்-மூழ்கும்படி செய்வான், ஸமுத்ரஸ்ய-ஸமுத்திரத்தினுடைய, வேகம் வாபி-வேகத்தையும், வாயும்வா-வாயுவையும், சரைः-பாணங்களினால் விதமேத்-அடக்குவான், மஹாயசாः புருஷ வ்யாக்ரः ஸः-மிகுந்த கீர்த்தியையுடையவனும், புருஷர்களில் சிரேஷ்டனுமான அந்த ராமன், விக்ரமேண-பராக்ரமத்தால், லோகாந்-லோகங்களை, ஸம்ஹ்ருத்ய-ஸம்ஹாரம் செய்து, புநः-மறுபடி, ஸ்ரஷ்டும்-ஸ்ருஷ்டிக்க, சக்தः-வல்லவன், இமாः-இந்த, ப்ரஜாः-ஜந்துக்களை, ஸம்ஹ்ருத்ய புநः-மீண்டும், ஸ்ரஷ்டும், சக்தः, தசக்ரீவ-பத்துத் தலையையுடைய ராவணனே!, பாபஜநैः-பாபிகளினால், ஸ்வர்க்கः இவ-ஸ்வர்க்கம்போல, யுதி-போர்க்களத்தில், த்வயா-உன்னாலும், ரக்ஷஸாந்-ராக்ஷஸர்களுடைய, லோகேந அபிவா-கூட்டங்களினாலும், ஜேதும்-ஜயிக்க, ராமः-ராமன், நசக்யः-முடியாதவன். (எப்படி கோடானுகோடி பூஜ்யங்களைக் கூட்டினாலும் ஒன்று என்கிற இலக்கம் வராதோ அதைப்போலப் பாபிகள் பலர் சேர்ந்தாலும் ஸ்வர்க்கத்தை அடையமுடியாது என்றபடி.)

ந ஹி ராமோ தஶக்ரீவ ஶக்யோ ஜேதும் த்வயாயுதி ॥)
ரக்ஷஸாம் வாபி லோகேந ஸ்வர்க்கः பாபஜநைரிவ ।

என்கிறபடியே ராவண கோஷ்டியிலே அவனுக்கு ஆப்தரான வர்கள் ப்ரஸித்தமாக்கின மாஹாத்ம்யம் இது. பெருமாளுடனே பொருது, இளைத்துக் கலங்கின ராவணன் தெளிந்து தன் தேரை மீட்டுக் கொண்டு போன ஸாரதியை வெறுத்துச் சொல்லும் போதும்

1 ' शत्रोः प्रख्यात वीर्यस्य रंजनीयस्य विक्रमैः '

(ஶத்ரோः ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைः)

என்று மேலே இவ்வவதார மாஹாத்ம்யததைச் சொல்லக் கடவ னிறே.

இப்படி ஸ்ரீவிபீஷணழ்வான் 'மஹாத்மநே' என்றும், 'ராக வாய' என்றும் சுருங்கச் சொன்ன பரத்வமும் ஸௌலப்யமும் மேலே முதலிகள் பாசுரத்தாலும் வெளியிடப்பட்டது. எங்ஙனே என்னில்:—

2 'अज्ञातं नास्ति ते किंचित् त्रिषु लोकेषु राघव '
आत्मानं पूजयन् राम पृच्छस्यस्मान् सुहृत्तया ॥ '

(அஜ்ஞாதம் நாஸ்திதே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ।
ஆத்மாநம் பூஜயந் ராம ப்ருச்சஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா ॥)

என்றார்கள். இவ்வர்த்தம்தன்னையே

3 ' त्वं हि सत्यव्रतः शूरो धार्मिको दृढविक्रमः ।
परीक्ष्यकारी स्मृतिमान् निसृष्टात्मा सुहृत्सु च ॥ '

---

1 ராமா - யுத்த - 106 - 6 ப்ரக்யாத வீர்யஸ்ய - உலகில் நன்கு வெளியிடப்பட்ட வீர்யமுடையவனும், விக்ரமைः - பராக்ரமச் செயல் களிஞல், ரஞ்ஜநீயஸ்ய - மகிழச் செய்யத்தகுந்தவனுமான, சத்ரோः - சத்ருவாகிய(ராமன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதுயுத்த களத்தி லிருந்து நீ என்னை ஓட்டிக்கொண்டு வந்தமையினல் நான் எல்லோரா லும் பரிஹஸிக்கத் தக்கவனானேன்)

2 ராமா - யுத்த—17 - 33, 34. ராகவ - ஓ! ராமனே, த்ரிஷு லோகேஷு - மூன்று லோகங்களிலும், தே - உமக்கு, அஜ்ஞாதம் - அறியப்படாதது, நாஸ்தி கிஞ்சித் - ஒன்றுமில்லை,
ஸுஹ்ருத்தயா - ஸ்நேஹபாவத்திஞல், ஆத்மாநம் - உம்முடைய குணத்தை, பூஜயந் – பகுமானித்துக் கொண்டு, அஸ்மாந் - எங்களை, ப்ருச்சஸி - கேட்கிறீர்,

1 (த்வம்ஹி ஸத்யவ்ரதः ஶூரோ தார்மிகோ த்ருடவிக்ரமः। பரீக்ஷ்யகாரீ ஸ்ம்ருதிமாந் நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச ॥) என்று விவரித்தார்கள்.

த்வம் ஹி ச்லோகார்த்தம்

'த்வம்ஹி' என்கிற இத்தாலே மேலே சொல்லப்படுகிற குணங்களுக்கெல்லாம் அதிஶயாவஹமான ஸ்வரூப வைலக்ஷண்யம் சொல்லுகிறது. பொற்ருமரைப் பூவின் பரிமளத்திற்கு, அல்லாத தாமரைப் பூவின் பரிமளத்தைக் காட்டில் ஆஶ்ரய வைலக்ஷண்யத்தாலும் அதிஶயம் உண்டாயிருக்குமிறே. இவ்வர்த்தத்தை

2 'गुणायत्तं लोके गुणिषु हि मतं मङ्गळपदं
विपर्यस्तं हस्तिक्षितिधरपते तत् त्वयि पुनः।
गुणाः सत्यज्ञान प्रभृतयः उत त्वद्गततया
शुभीभूयं याताः इति हि निरणैष्म श्रुतिवशात् ॥'

குணயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்களபதம்
விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதரபதே தத் த்வயி புநः।
குணாः ஸத்யஜ்ஞாநப்ரப்ருதயः உத த்வத்கததயா
ஶுபீபூயம் யாதாः இதி ஹி நிரணைஷ்ம ஶ்ருதிவஶாத் ॥

என்கிற ஶ்லோகத்திலே உபபாதித்தார்கள்.

---

1 ராமா-த்வம் ஹி - நீரே, ஸத்யவ்ரதः - ஸத்யத்தை வ்ரதமாகக் கொண்டவர், சூரः - வீரர், தார்மிகः - தர்மத்திலேயே நிலை நிற்குமவர், த்ருடவிக்ரமः - ஒருவராலும் ஜயிக்கமுடியாத பராக்ரமத்தையுடையவர், பரீக்ஷ்யகாரீ - எல்லாக் கார்யங்களையும் தீர விசாரித்துச் செய்பவர், ஸ்ம்ருதிமாந் - எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்ளுமவர், ஸுஹ்ருத்ஸு - தன்னை அடைந்தவர்களிடத்தில், நிஸ்ருஷ்டாத்மா - வைக்கப்பட்ட ஆத்மாவையுடையவர்.

2 வரதராஜ ஸ்தவம்—11. ஹஸ்திக்ஷிதிதரபதே - ஓ! ஹஸ்திகிரிக்கு நாதனான பகவானே, லோகே - லோகத்தில், குணிஷு-குணவான்களாயிருக்கும் மனிதர்களிடத்தில், மங்களபதம் - மங்களம் என்னும் சொல், குணயத்தம் - அவர்களிடம் உள்ள குணத்தினால் ஏற்பட்டது என்று, மதம் - எண்ணப்பட்டது (ஆனால்), தத்-அது, த்வயிபுநः- உம்முடைய விஷயத்திலோ, விபர்யஸ்தம் - மாறி இருக்கிறது, (ஏனெனில்) ஸத்யஜ்ஞாநப்ரப்ருதயः குணः-ஸத்யம், ஜ்ஞாநம் முதலிய குணங்கள், த்வத்கததயா - தேவரீரை அடைந்திருப்பதனால், சுபீபூயம் யாதாः - மங்களத் தன்மையை அடைந்தன, இதி - என்று, ச்ருதிவசாத் - ச்ருதியின்படி, நிரணைஷ்ம - நிர்ணயம் செய்தோம்.

ஸத்யவ்ரதः — ஸர்வலோகஶரண்யரான தேவரீருடைய ஶரணாகதரக்ஷண வ்ரதத்தை ராவண பர்யந்தமாக எவ்விஷயத்திலே விலகக்கலாம்?

ஶ்ரீர :— இவ்வ்ரதத்திற்கு விரோதிகளே யதார்ஹமாகத் தேவரீர் அமோகங்களான அம்புகளாலேயாதல் உத்தரங்களாலேயாதல் வெல்லும் சேஷகம் வேறெருவருக்கு உண்டோ ?

தார்மிக :—ஶரணாகத ரக்ஷணத்திலே நிலையுடையீர் தேவரீரேயன்றே ?

த்ருடவிக்ரமः—ஆஶ்ரிதார்த்தமான தேவரீருடைய பராக்ரமத்தை விரோதிகளாலேயாதல் ஆஶ்ரிதர்பகல் குற்றம் காட்டும் பரிவராலேயாதல் விலக்கப் போமோ?

பரீக்ஷ்யகாரீ—ஸர்வஜ்ஞராய் அஷ்டாங்கையான புத்தியாலே ஆராய்ந்து செய்தருளும் கார்யங்களுக்கு அடியோங்களைக் கேட்க வேண்டுவது உண்டோ ?

ஸ்ம்ருதிமாந்—தேவரீர் வஸிஷ்டாதிகளான ஜ்ஞாநவ்ருத்தர்களுக்கு 'ராம குருக்கள்' என்று ஒரு தரம் கொடுகைக்காக அவர்கள் பக்கலிலே கேட்டருளின அர்த்தங்களில் அவஸரங்களில் உதவாதது உண்டோ? (அன்றிகே)

ஸ்ம்ருதிமாந்—

1 'न स्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया।
कथंचिदुपकारेण कृतेनैकेन तुष्यति ॥'

(ந ஸ்மரத்யபகாராணாம் ஶதமப்யாத்மவத்தயா।
கதஞ்சிதுபகாரேண கருதேநைகேந துஷ்யதி ॥)

என்னும்படியனறே தேவரீருடைய கருதஜ்ஞதை இருகும்படி.

நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச—

2 'वरद सकलमेतत् संश्रितार्थं चकर्थ'

---

1 ராமா - அயோ—1 - 11. ஆத்மவத்தயா (ஸ்ரீ ராமன்) கம்பீரமான மனத்தையுடையவராகையால், அபகாராணாம் - அபகாரங்களுடைய, சதமபி - அநேகத்தையும், நஸ்மரதி – நினைக்கிறதில்லை, கதஞ்சித் - ஏதாவது ஒருவிதமாக, க்ருதேந - செய்யப்பட்ட, எகேந - ஒரு, உபகாரேண - உபகாரத்தினால், துஷ்யதி - ஸந்தோஷப்படுகிறார்.

2 வரதராஜஸ்தவம்—63. வரத - ஓ! வரதனே, ஏதத் ஸகலம் - இவை எல்லாவற்றையும், ஸம்ச்ரிதார்த்தம் - ஆச்ரிதர்களின் ப்ரயோஜனத்திற்காக, சகர்த்த - செய்தீர் (ஆக்கினீர்).

(வரத ஸகலமேதத் ஸம்ஶ்ரிதார்த்தம் சகார்த்த)

என்னும்படி தேவரீருடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் ஆஶ்ரித ரான அடியோங்கள் இட்டவழக்காக்கியன்றே தேவரீர் வைப் பது? ஆகையால் தாக்ஷிண்ய பரதந்த்ரரான தேவரீர் திருவுள்ளத் தாலே கோ (லி) ரின கார்யத்தைக் காபேயரான எங்களையும் 'இசைவித்துக்கொணடு செய்தருளுவ (தற்காக) தாகவன்றே எங்களைக் கேட்டருளுகிறது'

என்று இப்படிப் பெருமாளைக் கொண்டாடி, பரிவாலே கலங்கின அங்கத ஶரப ஜாம்பவத் ப்ரப்ருதிகளான முதலிகள் சில ஹேத் வாபாஸங்களை ஹேதுக்களாகக் கொண்டு விபீஷண ப்ரிக்ரஹத் தைக் கடுக இசையாதொழிய, தத்த்வவித்தாய் ஸம்மந்த்ரியான திருவடி அவர்கள் சொன்ன ஹேத்வாபாஸங்களையெல்லாம் ப்ரதி க்ஷேபித்து ஸுபரீக்ஷிதங்களான நிர்த்தோஷ குணங்களாலே ஸ்ரீ விபீஷணழ்வான் பரிக்ராஹ்யன் என்று விண்ணப்பம் செய்தான். அவ்வளவில் பெருமாள் 'ஶரணாகதனை நலியச் சொல்லுகிற திரளிலே இவன் பரிக்ராஹ்யன் என்று சொல்லுவாரையும் பெற் றோமே' என்று திருவுள்ளம் உகந்து

1 'अथ रामः प्रसन्नात्मा श्रुत्वा वायुसुतस्य ह ।
प्रत्यभाषत दुर्धर्षः श्रुतवानात्मनि स्थितम् ॥'

(அத ராமः ப்ரஸந்நாத்மா ஶ்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ।
ப்ரத்யபாஷத துர்த்தர்ஷः ஶ்ருதவாந் ஆத்மநி ஸ்த்திதம் ॥)

என்கிறபடியே அகம்பநீயமான ஸ்வமதத்தை அருளிச் செய்யத் தொடங்கினார். 'விபீஷணன் ஸதோஷன், ஆகையால் ஶங்க நீயன்' என்ற அங்கதாதி மதங்களுக்கும், 'இவன் நிர்த்தோஷன் ஆகையாலேபரிக்ராஹ்யன்' என்கிறதிருவடிமதத்திற்கும் (அ)விரு த்தமாக 'ஸதோஷனேயாகிலும் ஶரணாகதன் என்று பேரிட்டு வந்தவன் பரிக்ராஹ்யன்' என்று தாம் அருளிச் செய்யப் புகுகிற

---

1 ராமா - யுத்த - 18 - 1. அத - பிறகு, ப்ரஸந்நாத்மா-ப்ரஸன் னமான மனத்தையுடையவரும், ச்ருதவாந் - நன்றாக சாஸ்த்ரார்த்தங் களைக் கேட்டறிந்தவரும், துர்த்தர்ஷः - ஒருவராலும் ஜயிக்க முடியாத வருமான, ராமः - ஸ்ரீராமன், வாயுஸுதஸ்ய - வாயு புத்திரனாகிய ஹநுமானுடைய வார்த்தையை, ச்ருத்வா - கேட்டு, ஆத்மநி ஸ்த்திதம்- தம்முடைய திருவுள்ளத்தில் இருந்ததை, ப்ரத்யபாஷத - பதிலாகக் கூறினார்.

மதம் அவ்வோலக்கத்தில் ஸர்வ விருத்தமாகையாலே இத்தை எல்லாரும்கூட அநாதரிப்பார்கள் என்று பார்த்தருளி

2 ' ममापि तु विवक्षास्ति काचित् प्रति विभीषणम् ।
श्रोतुमिच्छामि तत् सर्वं भवद्भिः श्रेयसि स्थितैः ॥'

(மமாபி து விவக்ஷாஸ்தி காசித் ப்ரதி விபீஷணம்।
ஸ்ரோதுமிச்சாமி தத்ஸர்வம் பவத்பிः ஸ்ரேயஸி ஸ்த்திதைः ॥)

என்று 'நம்முடைய மதத்தை நாமும் (நாம் முன்)சொல்ல நினையா நின்றோம், அதனுடைய அநுஷ்டாநம் பின்பு பார்த்துக் கொள்ளுகிறோம்: நமக்குப் பரிவரான நீங்கள் நாம் சொல்லுகிறவாக்யத்தை விபீஷணனுடைய ஶரணாகதிவாக்யம் பட்டது படுத்தி அநாதரியாதே கேட்டுத் தரவேணும்' என்று இரந்தருளினார். இப்படி முதலிகள் செவி தாழ்க்கும்படி இரந்து, தம்முடைய ஸ்வபாவம் சொல்லுவாரைப்போலே ஸ்வஸித்தாந்தத்தை ஸமீசீநமான ஹேதுவோடே சுருங்க அருளிச் செய்கிறார்.

2 ' मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन ।
दोषो यद्यपि तस्य स्यात् सतामेतदगर्हितम् ॥ '

(மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் ॥)

பெருமாள் தம்முடைய சீர்மையாலே ஆஶ்ரிதனைத் தம்மோடு ஒக்கப் பார்த்தருளி ஶரணாகதன் என்று புல்லிதாகச் சொல்லமாட்டாமல் 'மித்ரபாவேந' என்று அருளிச் செய்கிறார். பெருமாளோடு துல்ய ஶீலையான பிராட்டியும்

3 ' विदितः सहि धर्मज्ञः शरणागतवत्सलः ।
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि ॥ '

---

1 ராமா—18 - 2. விபீஷணம்ப்ரதி - விபீஷணனைக் குறித்து மமாபி-எனக்கும், விவக்ஷாகாசித் அஸ்தி - ஒரு அபிப்ராயம் இருக்கிறது, தத் ஸர்வம் - அதைப்பூர்ணமாக, ச்ரேயஸி ஸ்த்திதைः - (என்னுடைய க்ஷேமத்தில்) ஈடுபட்டிருக்கும். பவத்பிः-உங்களால், ச்ரோதும்-கேட்கும்படி. இச்சாமி - விரும்புகிறேன்.

2 ராமா—18 - 3. மித்ரபாவேந - ஸ்நேஹிதன் என்கிற பாவத்துடன், ஸம்ப்ராப்தம் - அடைந்தவனை, கதஞ்சந - எவ்விதத்திலும், நத்யஜேயம் - கைவிடமாட்டேன், தஸ்ய - அவனுக்கு, தோஷः - தோஷமானது, யத்யபி - இருந்தாலும் இருக்கட்டும் (அவனை விடமாட்டேன்), ஏதத் - இது, ஸதாம் - பெரியோர்களுக்கு, அகர்ஹிதம் - நிந்திக்கத்தக்கதன்று (போற்றத்தக்கதாகும்).

1 (விதித: ஸஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥)

என்று ஶரணாகதி ஶப்த விஷயத்திலே 'மைத்ரீ' என்று அருளிச் செய்தாளிறே.

மித்ரபாவேந—மித்ரத்வேந - இத்தால் இங்கு ஆநுகூல்ய ஸங்கல்பாதி பூர்வகமாகப் பண்ணின ஆநுகூல்ய ரக்ஷா பர ஸமர்ப்பணம் ஸூசிதமாகிறது. அங்ஙனன்றிக்கே மித்ர பாவனையால் என்னவுமாம். 'உள்ளில்லையேயாகிலும் ஶரணாகதன் என்று பேரிட்டு வந்தாரை நாம் விட மாட்டோம்' என்கிறார். இப்படி வ்யாஜமாத்ரஸாபேக்ஷமான பெருமாள் திருவுள்ளத்தை அடியொற்றி

2 'पापीयसोपि शरणागतिशब्दभाजः नोपेक्षणं मम तवोचितमीश्वरस्य।
त्वत् ज्ञान शक्ति करुणासु सतीषु नैव पापं पराक्रमितुमर्हति मामकीनम् ॥
(பாபீயஸோபி ஶரணாகதி ஶப்தபாஜோ
நோபேக்ஷணம் மம தவோசித மீஶ்வரஸ்ய।
த்வத்ஜ்ஞாந ஶக்தி கருணாஸு ஸதீஷு நைவ
பாபம் பராக்ரமிதுமர்ஹதி மாமகீநம்।)

என்று பூர்வர்கள் விண்ணப்பம் செய்தார்களிறே.

ஸம்ப்ராப்தம்—இவன் ராவணக்ராஹக்ருஹீதனுய்க் கடலுக்கு அக்கரைக்கே நின்று

(ராகவம் ஶரணம் கத:)

என்றானகில், நாம் அதித்வரையோடே வைநதேயாதிபாலே அக்கரைக்கே செல்ல வேண்டியிருக்க, நாம் இருந்த இடத்திலே பங்கோருபரி கங்காநிபதந ந்யாயத்தாலே வந்த இவ்வை நாம் விடும்படி என் ?

---

1 ராமா - ஸுந்தர - 21 - 20 113-ம் பக்கம் பார்க்க

2 ராமா. அதிமாநுஷஸ்தவம் - 61. பாபீயஸோபி-அதிகப் பாபம் செய்தவனுயிருந்தபோதிலும், சரணாகதி சப்தபாஜ: - சரணாகதி என்கிறசப்தத்தை ப்ரயோகித்தவனுகிய, மம உபேக்ஷணம் - என்னை உபேக்ஷிப்பது, ஈச்வரஸ்ய - ஈச்வரனுகிய, தவ - உமக்கு, ந உசிதம் - தகுந்ததல்ல, த்வத்-உம்முடைய, ஜ்ஞாந சக்தி கருணாஸு ஸதீஷு - ஜ்ஞாநம், சக்தி, கருணை இவைகள் இருக்கும்பொழுது,மாமகீநம்-என்னுடையதாகிய, பாபம் - பாபமானது, பராக்ரமிதும் - (அவற்றை ஜயிப்பதற்கு, நைவ அர்ஹதி-சக்தியற்றது.

ஸம்ப்ராப்தம்—ஸம்யக் ப்ராப்தம். இங்கு ஸம்யக்த்வமாவது

1 'त्यक्त्वा पुत्रांश्च दारांश्च' (த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச)

2 'परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च।
भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि च॥'

(பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச।
பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச॥) என்கிற படியே ஹேயோபாதேய விபாகம் பண்ணிக் கழிக்க வேண்டுவன கழித்துக், கைக்கொள்ளவேண்டுவது கைக்கொண்டு, ஶரணாகதன் என்கிற உக்தி மாத்திரமே பற்றுசாகப்பற்றி, அதிஶங்கை தீர்ந்து அந்தரங்கரைப் புருஷகாரமாக முன்னிட்டுக்கொண்டுவருகை.

நத்யஜேயம்—இவன் பரித்யாஜ்யனே? பரிக்ராஹ்யனே? என்கிற மீமாம்ஸை எதுக்கு உறுப்பாகிறது? ஶரணாகதன் என்கிற ஶப்தத்தை நம் செவிப்படுத்தின(அ)வனை நாம் விடவல்லோமோ?

கதாசந—ஶரணாகதனுக்குக் குணங்களில்லையே யாகிலும் தோஷங்கள் ப்ரசுரங்களேயாகிலும், இவனைக் கைக்கொள்ளுகை பரிவராளுக்கு அபிமதமன்றேயாகிலும், இவனைக் கைக்கொண்டால் மேல் த்ருஷ்டாத்ருஷ்ட ப்ரத்யவாய ஸஹஸ்ரமுண்டேயாகிலும், ஒருபடிக்கும் நாம் இவனைக் கை விடமாட்டோம். இம்மஹாவாக்யத்தில் பூர்வார்த்தத்தாலே 'ஸ்வ:' இத்யாதியான ஶ்ருதிவாக்யம் உபப்ரும்ஹிதமாய்த்து. 'உன்னுடையவன்.' 'நான் உனக்கே பரம்' என்று ஒரு கால் உறவு பண்ணுவதடியாக ஒரு காலத்திலும் இவனை ஸர்வேஶ்வரன் விடான என்றிறே இவ்ஶ்ருதியின் பொருள்.

இப்படி ஒருபடியாலும் ஶரணாகதனைத் தாம் விடமாட்டாத ஸ்வபாவத்தை அருளிச்செய்து, முதலிகள் விண்ணப்பம் செய்த பரித்யாஜ்யதா ஹேதுக்களான தோஷங்களுக்கு ஸாத்யத்தோடு

1 ராமா - யுத்த - 17 - —14 124-ம் பக்கம் பார்க்க

2 ராமா - யுத்த - 19 - 5— 124-ம் பக்கம் பார்க்க

வ்யாப்தி இல்லாமையாலே அவை உண்டேயாகிலும் அகிஞ்சித்கரம் என்கிற திருவுள்ளத்தாலே அவர்கள் ஸங்கித்த தோஷங்களுடைய ஸ்வரூப ஸத்பாவத்தை இசைகிறார்.

தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்—இவ்விடத்தில் அப்யநுஜ்ஞை தோற்றுகைக்காகவாதல், ஸம்பாவனையைப் பற்றவாதல், துஷ்டனையும் ஶரணுகத ஸத்தமாத்ரத்தாலே பரிக்ரஹித்தார் என்கிற மஹா குணஸித்த்யர்த்தமாக தோஷ ப்ரார்த்தனையைப் பற்றவாதல் 'ஸ்யாத்' என்கிறார்.

'தோஷ:' என்கிற ஸாமாந்ய நிர்த்தேஶத்திற்கு நீங்கள் சொன்ன தோஷங்களாகவுமாம், நீங்கள் சொல்லாத ஸாக்ஷாத் ராவணுதிகதமான தோஷாந்தரங்களாகவுமாம் என்று கருத்து. இத்தோஷங்களெல்லாம் பரித்யாஜ்யதா ஹேதுக்களாவது ஶரணுகத வ்யதிரிக்த விஷயததிலே என்று 'தஸ்ய ஸ்யாத்' என்கிற ஸர்வ லோக ஶரண்யரான பெருமாளுக்குத் திருவுள்ளம். ஆகையாலேயிறே

1 'यदि वा रावणस्स्वयम्' (யதிவா ராவண:ஸ்வயம்)

என்றும் ராவணன் தன்னைக் குறித்தும்

2 'न चेच्छरणमभ्येषि' (நசேச் சரணமப்யேஷி)

என்றும் அருளிச் செய்கிறது.

'தேவரீர் ஆர்த்ர ஸ்வபாவராகையாலே துஷ்ட பரிக்ரஹம் பண்ணினால், நாட்டிலே ஶிஷ்டகர்ஹை பிறவாதோ' என்று முதலிகளுக்குக் கருத்தாக அதற்கும் உத்தரம் அருளிச் செய்கிறார்—'ஸதாமேதத் அகர்ஹிதம்'.

அகர்ஹிதம்—கர்ஹிதாதந்யத் - பூஜிதம் என்றபடி. நாம் ஶரணுகதனைத் தோஷம் பாராதே பரிகரஹித்தால் 'வத்யனேயாகிலும் ஶரணுகதனை அழியக் கொடுக்கலாகாது' என்கிற ஸ்ருத்யர்த்தத்தை அறிந்து அநுஷ்டித்துப் போருகிற வஸிஷ்ட்ட பகவான், விஶ்வாமித்ர பகவான் உள்ளிட்ட ஸத்துக்கள் 'நாம்

---

1 ராமா - யுத்த—18-35

1 ராமா- யுத்த—41-66

பண்ணின தர்மோபதேஶம் பலித்தது' என்று கொண்டாடும்படியாம். நீங்கள் சொல்லுகிறபடியே கேட்டு நாம் கைவிட்டால் அவர்கள் நம்மைக் கர்ஹிக்கும் படியாம். ஆகையால் நமக்குக் கார்யம் தப்பாமைக்கு நீதி சொல்லப் பரிவும் நிரப்பழுமுடைய நீங்கள் வஸிஷ்டட விஶ்வாமித்ர ப்ருஹஸ்பதி ரகு ஶிபி ப்ரப்ருதி களான ஸத்துக்களும் நெஞ்சாறல்படாமே நம் ஸ்வபாவத்தையும் குலையாதே நம்மைப் பெறப்பாருங்கோள் என்று திருவுள்ளம்,

ஶரண்யஶீல ப்ரகாஶநம்
என்னும் ஐந்தாவது அதிகாரம் முற்றிற்று

ஶரண்ய வைபவ ப்ரகாஶம்
என்னும் ஆறுவது அதிகாரம்

[விபீஷண விஷயே ஸுக்ரீவ அதிசங்கா நிவாரணம்—சரண்யத் வோபயுக்த குண பூர்ணத்வம்]

இப்படிப் பெருமாள் அருளிச்செய்த வார்த்தையைக்கேட்டு, மஹாராஜர் கூடஓருதயனான ராக்ஷஸனுடைய அநுப்ரவேஶத் தாலே என் விஷயப்புகுகிறதோ? என்று பெருமாள் பக்கல் பரி வாலே கலங்கி, பின்பு

1 'को नाम स भवेत् तस्य यमेष न परित्यजेत्।
ईदृशं व्यसनं प्राप्तं भ्रातरं यः परित्यजेत्॥'

(கோ நாம ஸபவேத் தஸ்ய யமேஷ ந பரித்யஜேத்।
ஈத்ருஶம் வ்யஸநம் ப்ராப்தம் ப்ராதரம் யः பரித்யஜேத்॥)

என்று விபீஷண தெளர்ஜந்யாதிகளைக் காட்டிப் பெருமாளை விலகப் பார்க்க, பெருமாள் ராஜநீதி மர்யாதையாலே உத்தரம் அருளிச் செய்தார். பின்னையும் மஹாராஜர் 'பெருமாளுடைய ப்ரபந்ந பாரதந்த்ர்ய காஷ்ட்டையாலேயிறே நாம் விண்ணப்பம்

---

1 ராமா - யுத்த—18 - 5. யः - எவன், ஈத்ருசம் வ்யஸநம்ப்ராப் தம் - இப்படிப்பட்ட துக்கத்தை அடைந்திருக்கும், ப்ராதரம் - தமை யனை, பரித்யஜேத் - கைவிடுவானை,தஸ்ய-அவனுக்கு, யம் - எவனை, ஏஷः - இவன்,ந பரித்யஜேத் - விடமாட்டானை, ஸः -அத்தகையன், கோ நாம பவேத் - எவன் இருப்பான்?

செய்த வார்த்தை திருவுள்ளத்தில் படாதே இருக்கிறது' என்று புத்தி பண்ணி, 'ஒரு ப்ரபத்திக்கு இரண்டு ப்ரபத்தி பண்ணுவோம்' என்று இளைய பெருமாளையும் கூட்டிக்கொண்டு திருவடிகளிலே விழுந்து பெருமாள் திருவுள்ளத்திலே தரிக்கவேணும் என்று பார்த்து, 'உம்மளவில் அன்றிக்கே உமக்குத் தோழனான என் விஷயத்திலும், பஹிஶ்சர ப்ராணபூதரான இளையபெருமாள் விஷயத்திலும் இவன் ப்ரச்சந்நனாய் நின்று நலியும் கிடீர், ஆகையால் இவன் வத்யன்' என்று விண்ணப்பம் செய்ய, இத்தைக கேட்டபின் பெருமாள்

1 'सुग्रीवस्य तु तद्वाक्यं रामः श्रुत्वा विमृश्य च ।
ततः शुभतरं वाक्यमुवाच हरिपुङ्गवम् ॥'

(ஸுக்ரீவஸ்ய து தத் வாக்யம் ராம: ஶ்ருத்வா விம்ருஶ்யச|
தத: ஶுபதரம் வாக்யம் உவாச ஹரிபுங்கவம் ॥)

என்கிறபடியே 'கலக்கமடியாக மஹாராஜர் இளைய பெருமாளையும் கூட்டிக்கொண்டு பண்ணின ஶரணாகதியிற் காட்டிலும் தெளிவடியாக வந்த விபீஷணன் ஶரணாகதி ஒன்றுமே ப்ரபலம்' என்று அறுதியிட்டு, மஹாராஜருடைய அச்சம் தீரவேண்டும் என்று பார்த்தருளி, 'தோழனாரே! விபீஷணன் துஷ்டன் என்றும், அதுஷ்டன் என்றும் பண்ணுகிற விசாரம் ஏதுக்காகப் பண்ணுகிறீர்? தம்மளவில் ராக்ஷஸன் என்கிற இது என்? எனபது நம்மளவிலாதல், உம்மளவிலாதல், தம்பியளவிலாதல் இவன் ஒரு பாதகம் செய்கைக்கு ப்ரஸங்கம் என்? நம்முடைய பூந்தோட்டத்தில் ஜாதிமாத்ர வானரங்களுக்கும் இவன் ஒரு குற்றம் செய்ய வல்லனே? நாம் நினைத்தபோது பிஶாசங்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், ப்ருதிவியிலுள்ள ராக்ஷஸர்கள் எல்லாரும் திரண்டு வந்தாலும் ஒரு அங்குளி அக்ரத்திற்கு பற்றுமோ? அஞ்ஜலியாகிற அஸ்த்ரம் எடாதார்க்கு நம்மை வெல்ல விரகுண்டோ?,என்று தம்முடைய ஸர்வ ஶக்தித்வத்தை வெளியிட்டு மஹாராஜருடைய அச்சத்தைக் கழிக்கிறார்.

---

1 ராமா – யுத்த—18 - 21. ஸுக்ரீவஸ்ய - ஸுக்ரீவனுடைய, தத்வாக்யம் ச்ருத்வா - அந்த வார்த்தையைக் கேட்டு, ராம: - ஸ்ரீ ராமன், விம்ருச்ய - ஆராய்ந்து, ஹரிபுங்கவம் - வானரோத்தமனைப் பார்த்து, சுபதரம்- சுபதரமான, வாக்யம் - வாக்யத்தை, உவாச-சொன்னார்

1 ' सुदुष्टो वाप्यदुष्टो वा किमेष रजनीचरः ।
सूक्ष्ममप्यहितं कर्तुं ममाशक्तः कथंचन ॥ '
पिशाचान् दानवान् यक्षान् पृथिव्यां ये च राक्षसान् ।
अंगुल्यग्रेण तान् हन्यामिच्छन् हरिगणेश्वर ॥ '

(ஸுதுஷ்டோ வாப்ய துஷ்டோவா கிமேஷ ரஜநீசர: ।
ஸூக்ஷ்மமப்யஹிதம் கர்த்தும் மமா ஶக்த: கதமசந ॥
பிஶாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் யே ச ராக்ஷஸாந்।
அங்குள்யக்ரேண தாந் ஹந்யாம இச்சந் ஹரிகணேஶ்வர ॥)

பண்டு நாம் உமக்குக் காட்டின ப்ரபாவத்தை வாநர ராஜ்யத்திலே புக்கவாறே மறந்தீரோ? ' மஹாத்மநே ' என்று விபீஷணன் நிணைப்பித்ததும் நெஞ்சில் பட்டதில்லையோ? எதிரிகள் விரல் கவ்வும்படிகாணும் நம்முடைய ஒரு அங்குள்யக்ரவ்யாபாரம்.நகநகளிறே பெருமாளுக்கு நரஸிம்ஹ தசையில் ஸ்ரீபஞ்சாயுதங்கள்.

ஶரண்யத்வோபயுக்தமாகப் பகவச் சாஸ்த்ரங்களிலும், அபியுக்தர் வாக்யங்களிலும்,

2 ' सर्वज्ञोपि हि विश्वेशः सदा कारुणिकोपि सन् '

(ஸர்வஜ்ஞோபி ஹி விஶ்வேஶ: ஸதா காருணிகோபிஸந்)

என்றும்,

3 ' त्वत् ज्ञान शक्ति करुणासु सतीषु '

---

1 ராமா - யுத்த—18 - 22, 23. ஸுதுஷ்ட: - மிகவும் துஷ்டனுலும், அதுஷ்டோவாபி-துஷ்டனுயில்லாவிட்டாலும், ஏஷ: - இந்த ரஜநீசர: - ராக்ஷஸன், மம - எனக்கு, கிம்- எம்மட்டும், அஹிதம் - தீங்கை, ஸூக்ஷ்மம் அபி - கொஞ்சம் கூட, கர்த்தும்-செய்வதற்கு, அசக்த. - சக்தி இல்லாதவன், ஹரிகணேச்வர - வாநரர் கூட்டங்களுக்கு யஜமானனே!, பிசாசாந் - பிசாசுகளையும், தாநவாந் - அஸுரர்களையும், யக்ஷாந்ச - யக்ஷர்களையும் ப்ருதிவ்யாம் - லோகத்தில், யே ராக்ஷஸா: - எந்தராக்ஷஸர்கள் உண்டோ தாந்- அவர்களையும், இச்சந் - இஷ்டப்பட்டேனேயாகில் அங்குள்யக்ரேண - விரல் நுனியினுல், ஹந்யாம் -கொன்றுவிடுவேன்.

2 லக்ஷ்மீ தந்த்ரம் — 17 - 8. விச்வேச: - பகவான், ஸர்வஜ்ஞோபி - எல்லாம் அறிந்தவனுயிருந்தபோதிலும், ஸதா - எப்பொழுதும், காருணிகோபி ஸந் - கருணையுடன் கூடியவனுயிருந்த போதிலும் ரக்ஷிக்க வேண்டும் என்கிற ப்ரார்த்தனையை எதிர்பார்க்கிறன்.

3 அதிமாநுஷஸ்தவம்—61 136 ம் பக்கம் பார்க்க

(த்வத் ஜ்ஞாநபக்தி கருணைஸு ஸதீஷு) என்றும், ஸகலக்ருஹீதமான ஸரண்ய குண த்ரயமும் இப் ப்ரகரணத்திலே விவக்ஷிதம். எங்ஙனே என்னில்:— அடியிலே

1 'अज्ञातं नास्ति ते किंचित्'

(அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித்)

என்று ஸர்வஜ்ஞத்வம் சொல்லிற்று. மத்யே

2 'मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन'

(மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந)

என்று பரம காருணிகத்வம் சொல்லிற்று. இவ்விடத்தில்

3 'अंगुल्यग्रेण तान् हन्यां इच्छन्'

(அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம் இச்சந்)

என்று ஸர்வ ஸக்தித்வம் சொல்லிற்று. இப்படி மாநுஷ பாவத்திலே நின்று ராமஸப்தம் ஈஸ்வரசுபடாதபடி பண்ணின மஹா வீரன் என்னும் செருக்காலே மதியாமே பேசுகிறுப்போலே தம்முடைய ஈஸ்வரத்வ ரக்ஷகத்வ ஜ்ஞாபக ஸர்வ ஸக்தித்வத்தாலே ஸரண்யத்வோபயுக்த ஸர்வ குணஸம்பூர்ணதையை அருளிச் செய்து மஹாராஜ ப்ரப்ருதிகளுடைய அச்சம் தீரும்படி பண்ணி அருளினார்.

ஸரண்ய வைபவ ப்ரகாஸம்

என்னும் ஆறுவது அதிகாரம் முற்றிற்று

பரம தர்ம நிர்ணயம்
என்னும் ஏழாவது அதிகாரம்

[சரணாகதியின் பரம தர்மத்வம்—ச்ரூயதே ஹி ச்லோகார்த்தம்—வ்யாக்ர வாநர ஸம்வாதம்—கண்டுகாதா விவரணம்—சரணாகத பரித்யாகேத்ருஷ்டப்ரத்யவாய நிரூபணம்—அத்ருஷ்ட ப்ரத்யவாயநிரூபணம்—ஸ்வமத ப்ரகாசநம்]

இப்படித் தம்முடைய ஸ்வபாவத்தையும் ப்ரபாவத்தையும் வெளியிட்டு, மேல் 'இவன் துஷ்டனேயாகிலும், நாம் அஸக்த

---

1 ராமா - யுத்த—17 - 33 131 ம் பக்கம்பார்க்க
2 ராமா - யுத்த—18 - 3 135ம் பக்கம்பார்க்க
3 ராமா - யுத்த - 18 -23 141- ம் பக்கம் பார்க்க

ரேயாகிலும், ப்ராணபர்யந்தமாக ஶரணாகத ஸம்ரக்ஷணம்பண்ண வேண்டும், இதுவே பரம தர்மம் என்னுமிடத்தைக் கபோதோபாக்யானஸஹக்ருத கண்டுகாதாவிதி முகத்தாலே அருளிச்செய்கிறார்.

சரணாகதியின் பரம தர்மத்வம்

श्रूयते हि कपोतेन शत्रुः शरणमागतः ।
अर्चितश्च यथान्यायं स्वैश्च मांसैः निमन्त्रितः ॥

(ஶ்ரூயதே ஹி கபோதேந ஶத்ருः ஶரணமாகதः ।
அர்ச்சிதஶ்ச யதா ந்யாயம் ஸ்வைஶ்ச மாம்ஸைः நிமந்த்ரிதः॥)

'ஶ்ரூயதே ஹி' என்கிற இத்தாலே

1 'शृणु राजन् कथामेतां सर्वपापप्रणाशिनीम् ।
नृपतेः मुचुकुन्दस्य कथिता भार्गवेण या ॥' என்றும்,

2 'य इदं शृणुयान्नित्यं पठेदाख्यानमुत्तमम् ।
विमुक्तः सर्वपापेभ्यः स्वर्लोकं स गच्छति ॥'

(ஶ்ருணு ராஜந் கதாம் ஏதாம் ஸர்வபாப ப்ரணாஶிநீம் ।
ந்ருபதேः முசுகுந்தஸ்ய கதிதா பார்க்கவேண யா ॥) என்றும்
(ய இதம் ஶ்ருணுயாந் நித்யம் படேதாக்யாநமுத்தமம் ।
விமுக்தः ஸர்வபாபேப்யः ஸ்வர்க்கலோகம் ஸ கச்சதி ॥) என்றும்
சொல்லுகிறபடியே பாவநதமத்வத்தாலே ஸர்வரும் ஆதரித்துக் கேட்கும்படி ஸமுசிதமாகிறது.

ஶ்ரூயதே — விப்ரகீர்ணங்களாய் அநந்தங்களான ஶ்ருதிகளை ஸாக்ஷாத்கரிக்க வல்லார்க்கு இதுவும் ஒரு மூலையிலே காணலாய்க் காணுமிருப்பது.

---

1 இதிஹாஸ ஸமுச்சயம்-8-5. ராஜந் - அரசனே, ந்ருபதேः -அரசனுகிய, முசுகுந்தஸ்ய - முசுகுந்தனுக்கு, பார்க்கவேண - பார்க்கவரிஷி, யா - எந்த, (கதா), கதிதா - சொல்லப்பட்டதோ, ஸர்வ பாப ப்ரணாசிநீம் - எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கக்கூடிய, ஏதாம் - இந்த, கதாம் - கதையை, ச்ருணு - கேள்.

2 இதிஹாஸ ஸமுச்சயம்—8 - 5- 128. யः எவன், இதம் - ஆக்யாநம், உத்தமம் - உயர்ந்ததான சரித்ரத்தை, நித்யம் - பரதி தினமும், ச்ருணுயாத் - கேட்பனே, படேத் - படிப்பனே, ஸः - அவன், ஸர்வபாபேப்யः - எல்லாப் பாபங்களிலிருந்தும், விமுக்தः - விடுபட்டவனுகி ஸ்வர்க்கலோகம் - ஸ்வர்க்க லோகத்தை, கச்சதி - அடைகிறான்

ஸ்ரூயதே—பார்க்கவாதிகள் சொல்ல,முசுகுந்தாதிகள்கேட்கலாமத்தனே போக்கி, எத்தனேயேனும் காருணிகராயிருப்பாராலும் இப்படி அநுஷ்டிக்கை அரக்யம் காணும்.

ஹி—அதிப்ரஸித்தமாகையாலும் அந்ய வ்ருத்தாந்தமாகையாலும் இவ்வருத்தாந்தம் எங்களுக்கு முன்னே நீங்களும் கேட்டுப் போருமதன்றே ? நம பக்கலிலே பரிவாலே வந்த கலகத்தை விட்டு நீரே ப்ரதிஸந்தாநம் பண்ணிப் பாரீர்.

கபோதேந—ஒரு த்ரைவர்ணிகனுமன்று, வர்ண மாத்ரத்தில் பிறந்தான் ஒருவனுமன்று, ஸாமாந்யதர்ம யோக்ய மநுஷ்ய ஜாதீயனுமன்று, ஒரு திர்யக் செய்தபடி இது ! இப்படி இத்தர்மம் திர்யக்குக்களுக்கும் கூட ரக்ஷணீயமாயிருக்கத் தர்ம ப்ரவர்த்தகரான நாம் இருந்து ஶரணாகதனே வத்யன் என்பதும், த்யாஜ்யன் என்பதுமாகாநின்றோம். [2]

கபோதேந—ஒற்றைக் கபோதமாகையாலே விலக்குகைக்கீடான பரிவர் இல்லாமையாலும், ' அர்த்தம் ' என்றுஸ்ருதியில் ஓதுகிறபடியே ஸஹாதிகாரத்தாலே தர்மியிலே சொருகி,

1 ' शृणु चावहितः कान्त यत्ते वक्ष्याम्यहं हितम्।
प्राणैरपि त्वया नित्यं संरक्ष्यः शरणागतः ॥ '

(சருணு சாவஹித: காந்த யத்தே வக்ஷ்யாம்யஹம் ஹிதம்।
ப்ராணைரபி த்வயா நித்யம் ஸம்ரக்ஷ்ய: ஶரணாகத: ॥)

என்று தர்மத்திலே ப்ரேரிப்பிக்கிற ஸஹதர்மசாரிணீ ஸந்நிதியாலும்,அக்கபோதம் சடக்கென ஶரணாகத ரக்ஷணதர்மம் அநுஷ்டிக்கப்பெற்றதிறே.

ஶத்ரு:—கபோதத்திற்கு வேடன் தானே பார்யாபஹாரம் பண்ணின ஶத்ருவாயிருக்கும் நமக்கு விபீஷணன் அப்படிப்பட்ட ஶத்ருவிருந்த ஊரினின்றும் வந்தானத்தனேயன்றே ?

ஶரணாகத:—கபோதமிருந்த மரத்தடியிலே வேடன் யாத்ருச்சிகமாக வந்தானத்தனே.

---

2 இதிஹாஸ - ஸமுச்ச—8 - 40. காந்த - பர்த்தாவே,யத்-எந்த, ஹிதம் - ஹிதத்தை, அஹம் - நான், தே - உனக்கு,வக்ஷ்யாமி - சொல்லப்போகிறேனே (அதை), அவஹித: - கவனமாக, ச்ருணு - கேள், சரணாகத: - சரணம் என்று அடைந்தவன், த்வயா - உன்னால், நித்யம் - எப்பொழுதும், ப்ராணைரபி - ப்ராணனே விட்டாவது, ஸம்ரக்ஷ்ய: - காப்பாற்றத் தக்கவன்.

1 ' सोऽञ्जलिं शिरसा कृत्वा वाक्यमाह वनस्पतिम्।
शरणं हि गतोऽस्म्यद्य देवतां त्विह वासिनीम् ॥ '

(ஸோऽஞ்ஜலிம் ஶிரஸா க்ருத்வா வாக்யமாஹ வநஸ்பதிம்।
ஶரணம் ஹி கதோஸ்ம்யத்ய தேவதாம் த்விஹ வாஸிநீம் ॥)

என்று வநஸ்பதி தேவதையைக் குறித்து ஶரண ஶப்தம் ப்ரயோகித்தாலுகிலும் இக்கபோதத்தைக் குறித்து ஶரண ஶப்தம் ப்ரயோகித்திலன். விபீஷணன் புத்ர தாராதிகள் எல்லாவற்றையும் விட்டு,

2 ' राघवं शरणं गतः '(ராகவம் ஶரணம் கதः)

என்று நமக்குக் கூடஸ்த்தனை ரகு, ரகுராக்ஷஸ ஸம்வாதத்திலே ஶரணாகத ஸம்ரக்ஷணம் பண்ணின படியை நிணைப்பித்துக் கொண்டு நம்மை யதாக்ரமம் ஶரணாகதனாக்குன்.

அர்ச்சிதः ச—வேடனுகையாலே பக்ஷிஜாதிக்கு ப்ரக்ருத்யா ஶத்ருவுமாய், விஶேஷித்துத் தன் பார்யாபஹர்த்தாவுமான இவன், பட்டது படுகிறுன் என்று இருப்புதல், அவஸரத்திலே ந லி ய விரகு தேடுதல் செய்ய ப்ராப்தமாயிருக்க, அதிதியைத் தேவனுக விதிக்கிற ஶ்ருதியின்படியே தேவர்களை ஆராதிக்கும் திறத்திலே அக்நி முகமாகவன்ரோ கபோதம் அர்ச்சித்தபடி. நாமும் ஶரணாகதனை

3 ' वध्यतामेष तीव्रेण दण्डेन सचिवैस्सह '

(வத்யதாம் ஏஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ் ஸஹ) என்று அநுபந்திபர்யந்தமாக நன்ருக அர்ச்சியாநின்ரோம்.

---

1 இதிஹாஸ - ஸமுச்சயம்—8 24. ஸः - அந்த வேடன், அஞ்ஜலிம் - அஞ்ஜலியை, சிரஸா க்ருத்வா - தலையினால் செய்து, வநஸ்பதிம்-காட்டுத் தேவதையைக் குறித்து,வாக்யம் - வாக்யத்தை, ஆஹ - சொன்னன், இஹ - இங்கு, வாஸிநீம் - வஸிக்கிற, தேவதாம் - தேவதையை, அத்ய - இப்பொழுது, சரணம் - சரணமாக, கதோஸ்மி - அடைந்திருக்கிறேன்.

2 ராமா - யுத்த—17 - 14

3 ராமா - யுத்த—17 - 27. ஸசிவைः ஸஹ -மந்திரிகளுடன் கூட. ஏஷः - இவன், தீவ்ரேண தண்டேந -கொடிய தண்டனையினால், வத்யதாம் -ஹிம்ஸிக்கப்படட்டும்.

யதாந்யாயம்—ஸீதத்தாலும் கூஜத்தாலும் ஆர்த்தனை வேடனுக்கு அபேக்ஷிதங்களான அக்நி ஆநயநாதிகளைப் பண்ணி, நல் விருந்து வந்தால் ஆதரிக்கும்படி தப்பாதே, அந்தர்விஷாத கந்தமில்லாதே அக்கபோதம் ஆதரித்தபடி.

யதாந்யாயம்—இன் சொல் முதலாக ப்ராணபர்யந்தமாக ஸரணாகத விஷயத்தில் ஸக்தி வஞ்சநம் பண்ணுதே செய்த பரிவெல்லாம் அளவாயிருக்குமத்தனை போக்கி, மிகுதியுண்டோ ?

ஸ்வைஸ்ச மாம்ஸை: நிமந்த்ரித:—புறம்பே சில ஆஹாரங்களை எடுத்துக் கொண்டு வந்து இட்டதன்று. தன்னுடையதான த்ரவ்யாந்தரங்களிலே சிலவற்றை இட்டு உபசரித்தது மன்று. விவேகமில்லாதார் தாஜக அபிமாநித்திருக்கக் கடவதாய், விவேகிகளும் ஆத்யமான தர்மஸாதநமென்று பேணக்கடவதான ஸரீரத்தின் மாம்ஸங்களாலேயன்றே அவனை உபசார பூர்வகமாக நல் விருந்தூட்ட ப்ரவர்த்தித்தது,

மாம்ஸை: — ஏகதேஸங்களைப் பிரித்து இட்டதன்று, கடுகப்பசி தீரவேண்டும் என்று வேடனுக்குத் தனக்குள்ள அவயவங்களில் ஒன்றும் ஸேஷியாதபடி ஸரபங்காதி தாபஸரைப் போலே இது ஒரு மஹா தபஸ்ஸாக நினைத்து நெருப்பிலே காணும் விழுந்தது.

இப்படி இவ் ஸ்லோகத்தில் சொன்ன அர்த்தம்தன்னைத் தம்முடைய அநுஷ்டாநத்திற்கு ஹேதுவாக அநுவதித்துக் காண்டு, 'இப்படியானால் நமக்கு ஸரணாகத ரக்ஷணம் கைமுகங்யாய ஸித்தமன்றே' என்று அருளிச்செயகிறார்.

1 'सहि तं प्रतिजग्राह भार्याहर्तारमागतम्।
कपोतो वानरश्रेष्ठ किं पुनः मद्विधो जनः॥'

(ஸஹி தம் ப்ரதிஜக்ராஹ பார்யா ஹர்த்தாரமாகதம்।
கபோதோ வாநர ஸ்ரேஷ்ட்ட கிம் புநர் மத்விதோ ஜந:॥)

ஸ ஹி—அக்கபோதம நமைப் போலே தர்மாநுஷ்டாநம் பண்ணக்கடவ ஜாதிகளில் ஒன்றிலேயாதல், ஸரண்ய வம்ஸத்திலேயாதல் பிறந்தவனன்று என்னுமிடம பரஸித்தமாயன்றே இருப்பது.

1 ராமா – யுத்த—18 - 25.

தம்—(தன்)ஜாதியாலும், விஶேஷித்துத்தன் கொடுமையாலும்

1 ' कश्चित् क्षुद्रसमाचारः पक्षिणां कालसंमितः '

(கஶ்சித் க்ஷுத்ர ஸமாசாரः பக்ஷிணும் காலஸம்மிதः)

என்று பக்ஷி ஜாதிக்காக விருத்தனுய், கபோதம் இருந்த இடத்திலே யாத்ருச்சிகமாக வந்து விழுந்ததற்கு மேலே கபோதத்தைக் குறித்து ஒரு உபாயப்ரயோக ரஹிதனுய், விபரீதாநுஷ்டாநத்திலும் நிஶ்சயமில்லாதவனுய், அநுதாபலேசமாதல் அநுகூலவாத ப்ரஸங்கமாதலின்றிக்கே கிடீர் அவ்வேடன் இருப்பது.

ஸ ஹி தம் ப்ரதிஜக்ராஹ — தன்னை அழியமாறியன்றே அவ்வேடனைக் கைக்கொண்டு ரக்ஷித்தது.

பார்யாஹர்த்தாரம் — முன்பு சத்ரு என்று பொதுவிலே அருளிச் செய்ததை அவன் வ்ருத்தியைக் காட்டி விஶேஷிக்கிறார். இப்படியே ராவணன் வந்தாலும் நமக்குக் கைக்கொள்ள வேண்டியன்றே இருப்பது என்று திருவுள்ளம்.

ஆகதம்—இவன்தன்னைக் கைக்கொள்ளுகைக்குச் செய்த உபாயாநுஷ்டாநம் கபோதம் இருந்தமரத்தடியிலேவந்தஅளவே கிடீர், அல்லது வநஸ்பதி தேவதையைக் குறித்து ஶரணம் என்று சொன்ன ஶப்தமும் கபோதம் கேட்டதில்லை.

கபோதः—முன்பே கபோதः என்று சொல்லியிருக்க இரு காலுமிட்டு கபோதः என்றது ஶிபியினுடைய ஶரணாகத ரக்ஷணதர்மம் சொல்லுகிற ஸ்யேந கபோத வ்ருத்தாந்தத்தில் போலே கபோதவேஷம் கொண்டானொரு தேவனே, ரிஷியோ என்று ஶங்கியாமைக்காக. இது பூர்வ கர்ம விஶேஷத்தாலே கஜேந்த்ராதிகளைப்போலே திர்யகாயிருக்க இப்படித் தர்மாநுஷ்டாந யோகயமாப்ப் பிறந்தது.

வாநர ஶ்ரேஷ்ட்ட—வேறேயும் ஒருதிர்யக் சத்ருவான வேடனை ரக்ஷித்தபடி கேளீர். வாநர ஜாதிகளுக்கு முடிசூடின நீர்

வ்யாக்ர வாநர ஸம்வாதம் வ்யாக்ர வாநர ஸம்வாதம் கேட்டறியீரோ ? ஒரு புலி வந்து தொடரத் தான் இருந்த மரத்தடியிலே வந்து ஏறின வேடனை, அந்த

---

1 இதிஹாஸ ஸமுச்சயம்—8 - 6. பக்ஷிணும் - பக்ஷிகளுக்கு, காலஸம்மிதः - யமனைப்போன்றவனும், க்ஷுத்ர ஸமாசாரः - க்ஷுத்ரமான ஆசாரத்தையுடையவனுமான, கஶ்சித் - ஒருவன்.

வ்யாக்ரம் விடச்சொல்ல, இவனே ஶரணுகதன் என்று வாநரம் ரக்ஷித்தது. அப்போது மரத்தடியை விடாதே கிடக்கிற புலி இவ் வாநரம் தூங்கின அளவிலே, வேடனைப் பார்த்து 'உன்னை விடு கிறேன், வாநரத்தைத் தள்ள வல்லையோ' என்ன, பாப புத்தியான வேடன் தன்னை ரக்ஷித்த வாநரத்தைத் தள்ளின அளவிலே, வா நரத்தைப் பிடித்து 'உன்னை விடுகிறேன், தனக்கு உபகாரகனை உன்னைத் தள்ளின வேடனைத் தள்ளித்தர வல்லையோ' என்று மநுஷ்ய மாம்ஸ லுப்தமான புலி சொல்ல, தர்மவித்தான வாநரம் ப்ராணாந்த்ய தசையாகையாலே அஹ்ருதயமாக இசைந்து, புலி விட்டவாறே மரத்தில் ஏறி, சத்ருவான வேடனைப் பின்பும் போக் கற்றுத் தான் இருந்த மரத்தில் இருந்தபடியாக சரணுகதன் என்று ரக்ஷித்தது. நீர் வாநரங்களுக்கு முடிசூடியிருந்தாலும், உங்களுக்கு ஜாதி தர்மம் என்று பார்த்தாகிலும் கைக்கொள்ள வேண்டாவோ?

வாநர ஶ்ரேஷ்ட்ட—முதலிகள் கலங்கினால் தெளிவிக்க இருக்கிற நீர் கலங்கலாமோ?

வாநரஶ்ரேஷ்ட்ட—வாலிபதத்தில் இருந்தவாறே உமக்கு ஶரணுகத பீடை ருசித்ததோ?

வாநர ஶ்ரேஷ்ட்ட—வாநர மாத்ரம் அல்லீரே, ஆதித்ய னுடைய புத்ரனுமாய் தர்மா தர்மங்களை அறிந்தும் இருக்கிற நீர் அல்லாதவாநரங்களைப்போலே காபேயம் பண்ணப்பெறுவதிரோ?

கிம்புநஃமத்விதோ ஜநஃ—கபோதம் செய்தபடி கண்டால் நம்போலிகளுக்குக் கேட்கவேணுமோ? நாம் ஶரணுகத ரக்ஷணத் திற்குக் கொடி எடுத்த ரகு வம்ஶத்திலே

1 'षष्टिर्वर्ष सहस्राणि लोकस्य चरता हितम्।
पाण्डरस्यातपत्रस्य छायायां जरितं मया॥'

(ஷஷ்டிர்வர்ஷ ஸஹஸ்ராணி லோகஸ்ய சரதா ஹிதம்।
பாண்டரஸ்யாதபத்ரஸ்ய ச்சாயாயாம் ஜரிதம் மயா॥)

---

1 ராமா - அயோ - 2-7. லோகஸ்ய - லோகத்திற்கு, ஹிதம் சர தா - ஹிதத்தைச் செய்துகொண்டு, மயா - என்னால், ஷஷ்டிர்வர்ஷ ஸஹஸ்ராணி - அறுபதினாயிரம் வருஷங்கள், பாண்டரஸ்ய - வெண் மையான, ஆதபத்ரஸ்ய - குடையின், சாயாயாம் - நிழலின் கீழே, ஜரி தம் - செலவழிக்கப்பட்டன.

என்று அறுபதினாயிரம் ஆண்டு வெண் கொற்றைக் குடை தன் நிழலொழிய வேறொரு நிழலில் ஒதுங்காதே லோக ரக்ஷணார்த்த மாகப் பத்துத் திக்கிலும் தேர் நடத்தி ப்ரஸித்தனை தசரதன் மகனாய், வஸிஷ்ட்ட விச்வாமித்ர ஸிஷ்யனாய், மஹா யோகியாக ப்ரக்க்யாதனை ஜநகனேடே ஸம்பந்தம் பண்ணின நாம்,

1 ' रामो विग्रहवान् धर्मः ' (ராமோ விக்ரஹவாந் தர்ம:)

என்று உடம்பில் ஸிஷ்டதயா ப்ரஸித்தியை ஏறிட்டுக்கொண்டு

2 ' मर्यादानां च लोकस्य कर्ता कारयिता च सः '

(மர்யாதாநாம் ச லோகஸ்ய கர்த்தா காரயிதா ச ஸ:)

என்கிறபடியே இத்தனை காலமும் நம்முடைய கை பார்த்து நாட்டார் அநுஷ்ட்டிக்கும்படி நடந்து போந்து, இன்று ஸரணாகத காதம் பண்ணினால் நாடு என்படக்கடவது?

மத்வித:—நம்முடைய வ்ரதம் பின்பு சொல்லக் கடவோம்.

3 ' सामान्योयं धर्मसेतुः नराणां '

(ஸாமாந்யோயம் தர்மஸேது: நராணாம்)

என்கிறபடியே நம் போலிகள் எல்லார்க்கும் இதுவே பொது வாய்க் காணும் இருப்பது.

மத்வித:—நம் போலிகள் ஸரணாகதனை விடுவார்களோ? ஹிம்ஸாபிருசிகளாகையாலே அவத்யரை வதிக்கவல்ல ராவணாதிகளுக்கன்றோ இப்படிக் கொத்த கார்யங்கள ருசிப்பது.

ஜந:—ஸரணாகதனை பரித்யஜித்தவன் என்ன பிறப்புப் பிறந்தானாகக் கடவன்? நம் போலிகளுக்கு ஜந்ம ப்ரயோஜநம் ஸரணாகத ரக்ஷணமன்றோ?

ஸிஷ்டாநுஷ்ட்டாநம் ப்ரமாணமேயாகிலும், ஒரு கபோதம் அநுஷ்ட்டித்தது என்று ஒரு ப்ரமாணம் உண்டோ? இதற்கு விதாயகமாய் இருப்பதொரு வாக்யம் வேண்டாவோ? என்கிற ஸங்கையாலே கண்டு என்பானொரு மஹர்ஷி கண்டதொரு காதையைக் கேளீர் என்கிறார்.

---

1 ராமா - ஆர - 37 - 13. ராமன் தாம மூர்த்தி.

2 ராமா - ஸுந்தர - 35 - 11. ஸ: - அந்த ராமன், லோகஸ்ய-லோகத்திற்கு, மர்யாதாநாம் - தர்ம மார்க்கங்களை, கர்த்தா - செய்பவனும், காரயிதா ச - செய்விக்கிறவனும்

3 நராணாம் - மனுஷ்யர்களுக்கு, அயம் - இது, ஸாமாந்ய: தர்ம ஸேது: - பொதுவான தர்ம மார்க்கம்.

1 ' ऋषेः कण्वस्य पुत्रेण कण्डुना परमर्षिणा ।
श्रूयतां पुरा गीतां धर्मिष्ठां सत्यवादिना ।। '

(ரிஷேः கண்வஸ்ய புத்ரேண கண்டுநா பரமர்ஷிணா।
ஶ்ரூயதாம் புரா கீதாம் தர்மிஷ்ட்டாம் ஸதயவாதிநா।।)

கண்டு என்கிற மஹர்ஷியினுடைய ஜன்ம ப்ரகர்ஷத்தை முற் படக கேளீர.

ரிஷேः கண்வஸ்ய புத்ரேண—தான்தோன்றியன்றிக்கே

2 ' यस्य स्यात् श्रोत्रियः पिता '

(யஸ்ய ஸ்யாத் ஶ்ரோத்ரியः பிதா)

என்கிறபடியே அவனுடைய பிதாவும் சதுர்வேதாத்யாயியாய் அதீந்த்ரிய த்ரஷ்டாவாய்க காணும் இருப்பது. ஆனல் பறப்ப தின குட்டி தவழாதிறே!.

கண்வஸ்ய புத்ரேண—மஹாதபாவான கண்வ மஹர் ஷிக்கு ஸம்ஸார நிஸ்தாரகனுய்க் காணும் இவன் பிறந்தது.

கண்வஸ்ய புத்ரேண கண்டுநா — பிதாவின் பெயரா லும், தன் பெயராலும் ப்ரஸித்தனுய்க் காணும் இருப்பது.

கண்டுநா—அவன் தன் பெருமையைப் பார்த்தால்

3 ' स चापि भगवान् कण्डुः (ஸ சாபி பகவாந் கண்டுः)

என்று மஹர்ஷிகள் கொண்டாடும்படியான பெயருடையான் ஒருவன் காணும்.

ரிஷேः புத்ரேண பரமர்ஷிணா—விளக்கில் கொளுத்தின பந்தம் என்னுமபடி காணும் ப்ரகாஶ பஹுளனை பிதாவிலும் காட்டில் இவனுடைய ஜ்ஞாந விகாஸம் இருக்கும்படி.

ஶ்ரூயதாம்—இத்தனை நாளும் இகழாதை உம்முடைய செவி யில் படாமையாலிறே நீர் இப்படிக கலங்குகிறது? இ த் தை அவஹிதராய்க் கேளீர்.

காதாம்—இது பெரிய பொருள்களையெல்லாம் பொதிந்து கொண்டு எளிதாகக் கேட்கலாமபடி சுருங்கின பாசுரமாய்க் காணும் இருப்பது.

---

1 ராமா - யுத்த - 18 - 26.

2 மனுஸ்ம்ருதி - 3 - 137. யஸ்ய - எவனுக்கு, ச்ரோத்ரியः - வேதாத்யயனம் பண்ணியவர், பிதா - பிதாயிருப்ப.

3 விஷ்ணு புராணம் - 1 - 5 - 52. ஸசாபி பகவாந் கண்டுः-புக வாலுகிய அந்தக் கண்டுவும்.

புரா கீதாம்—இன்று முதலாகக் கட்டினதொன்று அன்று காணும்இது. வேதம் போலே பழையதாய் இருப்பதொன்று.

கீதாம்— கண்டுவான மஹர்ஷியும் இத்தை ஸ்ருஷ்டித்தான் என்று இராதே கிடீர். ரிக்கை ஸாமமாகப் பாடுமாபோலே பண்டே உள்ளதொன்றை அவன் பாடினனத்தனை.

கீதாம்—அவன் செய்தானுகிலும் அந்த ஸாமத்வனி போலே ஸமஸ்தபாபங்களையும் போக்கவற்றுய்க் காணும் இருப்பது.

தர்மிஷ்ட்டாம்—போலியான தர்மங்களைப் போலன்றிக்கே ப்ரத்யக்ஷ ஸ்ருதிஸித்தமான பரம தர்மத்தை விஷயமாக உடைத்தாய்க் காணும் இக்காதை இருப்பது.

ஸத்யவாதிநா— ஸத்யவாத சீலனென கண்டு என்கிற மஹர்ஷி வாய்வெருவிச் சொன்னலும் பழுதாயிருப்பதொரு சவ்வும், துவ்வும் கூட்டுகையுமன்றிக்கே காணும் இருப்பது.

இதில் 'பரமர்ஷிணு' என்று யதார்த்த தர்மித்வம் சொல்லிற்று. 'ஸத்யவாதிநா' என்று யதாத்ருஷ்டார்த்த வாதித்வம் சொல்லிற்று. 'தர்மிஷ்ட்டாம்'என்று உபதேசத்தினுடையபரம ப்ரயோஜநத்வம் சொல்லிற்று. இத்தால் 'ப்ரம விப்ரமங்களற்று ஸர்வலோக ஹிதம் சொல்லுவான் ஒருவன்' என்று ஆப்த்யதி சயம் சொல்லிற்றுய்த்து.

மேல் கண்டு காதை என்று எடுக்கிற நாலரை ச்லோகத்தில் ப்ரதம ச்லோகத்தாலே பூர்ண சரணாகதி இல்லையேயாகிலும், போக்கற்ற தசையில் ஆத்ம நிக்ஷேப அபிப்ராய வ்யஞ்ஜகங்களாய்க் கொண்டு சரணாகதியுடைய சகல துல்யங்களான அஞ்ஜலி பந்தாதி மாத்ரங்களே சேர்ந்தவனையும் அழியக் கொடுக்கலாகாது என்கிறார்.

கண்டுகாதா விவரணம்

1 ' वद्धाञ्जलिपुटं दीनं याचन्तं शरणागतम्।
न हन्यादानृशंस्यार्थं अपि शत्रुं परन्तप ॥'

(பத்தாஞ்ஜலிபுடம் தீநம் யாசந்தம் சரணாகதம்।
ந ஹந்யாத் ஆநுருசம்ய அர்த்தம் அபி சத்ரும் பரந்தப ॥)

பத்தாஞ்ஜலிபுடம்—ப்ரதிகூல புத்தியும் ப்ரதிகூல வ்யாவ்ருத்தியும் இல்லையேயாகிலும், பாயில் அஞ்ஜலி மாத்ரமே அமையும்.

---

1 ராமா – யுத்த -18 – 27.

1 'अंजलिः परमा मुद्रा क्षिप्रं देवप्रसादिनी'

(அஞ்ஜலிः பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ)

என்கிறபடியே அத்யந்த ஸ்வதந்த்ரனையும் கடுக இரங்கப் பண்ணும் முத்ரையன்றே இது?

தீநம்—அஞ்ஜலியும் வாங்(பாத)மாத்ரமும் நேராதே கார்ப்பண்யம்தோற்ற நிற்கும் நிலையே அமையும்.

யாசந்தம்—கை கூப்பிற்றிலனேயாகிலும் கார்ப்பண்யம் தோற்றிற்றிலையேயாகிலும் அஹ்ருதயமாக இரக்கவும் அமையும்.

ஸரணாகதம்—அஞ்ஜலிபந்தாதிகள் மூன்றும் இல்லையேயாகிலும் ரக்ஷகன் கிடைக்குமோ என்று இருந்த இடத்திலே வந்து புகுர அமையும். முதல் ஸ்வரக்ஷாபர நிக்ஷேப ரூபையான ஸரணாகதியின் ஸகலஸ்தாநீயங்களைச் சொல்லிற்றாய், இங்கே 'ஸரணாகதம்' என்று பூர்ண ஸரணாகதியைச் சொல்லுகிறதாகவுமாம்.

ந ஹந்யாத்—தான் அழியச் செய்தல், ரக்ஷிக்க ஸக்தனை தன் உபேக்ஷாதிகளாலே அழியக் கொடுப்புதல் செய்யப்பெறான். இந்த ஸாஸ்த்ரம் ஐஹிகாப்யுதயார்த்தமோ? பரலோகார்த்தமோ? ப்ரத்யவாயபரிஹாரார்த்தமோ என்ன? அவைநிற்கமுற்பட ப்ரயோஜநாந்தரம் சொல்லுகிறது. ஆந்ருஸம்ஸ்யார்த்தம் - ஆந்ருஸம்ஸ்யமாகிற மஹா குணத்தை ரக்ஷிக்கைக்காகவுமாம். ந்ருஸம்ஸன் என்று நாட்டார் சீ சீ என்னுமைக்காகவுமாம்.

அபி ஸத்ரும்—நேரே ஸத்ருதான் வந்து ஸரணாகதனையும் அழியவிடவொண்ணுதபடியாலும், இதற்கு முன்பு ஒரு குற்றம் காணுதிருக்க, ஸத்ரு இருந்த ஊரில் நின்றும் வந்தான என்கிற இவ்வளவைக் கொண்டு ஸரணாகதனைவோ அழியக் கொடுக்கலாமோ என்று தாத்பர்யம்.

பரந்தப—ஸரணாகதனேடேயோ நாம் சேவகம் காட்டுவது? நேரே பொருமவனேடேயன்றே?

'ந ஹந்யாத்' என்று தான் கொல்லாதொழியுமளவன்றே என்ன? அங்ஙனன்று, ஸரணாகதனை வேரறுத்தல் நலியும்போது ஆர்த்தன் த்ருப்தன் எனகிற ஸரணாகத அவஸ்தாவிஸேஷங்களைப்பாராதே. தன் ப்ராணன்களை அழியமாறியும் அவனை ரக்ஷிக்க வேண்டும் என்கிறார்.

---

ஸ்ரீ அபயப்ரதாநஸாரம் முற்றிற்று

கொடுக்கக்கூடிய, சரணாகதி - ப்ரபத்தி என்னும் உபாயம், தனி நின்ற நிலை - ஒப்பற்றதாய் நிற்கும் ஸ்திதியை (தனிவாவது எல்லாப் பலத்தையும் தானே கொடுக்கக்கூடியதாய் நிற்பதை), ஓதித் தொடங்கும் எழுத்தின் திறத்தில் - வேதாரம்பத்திற்கு முதலில் அத்யயனம் செய்யப்படுகிற ப்ரணவத்தில், உணர்மின்கள் - தெரிந்து கொள்ளுங்கள்.

மூவுலகும் - மூன்று லோகங்களிலுமுள்ள, தன் - தனது, பிழையை - தன்னுடைய குற்றத்தை, தானே, சாற்ற - சொல்ல, முனிவர்களும் - ரிஷிகளும், தேவர்களும், முனிந்த - கோபித்துக்கொண்ட, அந்நாள் - அந்த நாளிலே, எங்கும் - எல்லா இடங்களிலும், போய் - சென்றும், தளர்ந்து - தளர்ந்தும், தாவு - புகலிடம், அரிதாய் - துர்லபமாய், தனிக்காகம் - ஒப்பற்ற காகம், தான் - காகமானது, இரந்த - யாசித்த, உயிர் - ப்ராணனை, வழங்கி - கொடுத்து, இனி - இது சரணாகதி செய்த பின்பு, காவல் - ரக்ஷிப்பது, எங்கும் - எல்லா இடத்தும், ஏமக்குக்கடன் - தன்னுடைய பொறுப்பு,

என்று, எண்ணி - நினைத்து, அன்று - அப்போது, காண நிஜ இலச்சினை -ஒற்றைக்கண் இல்லாமல் போகும் ஸ்த்திரமான அடையாளத்தை, இட்ட - செய்த, வள்ளல்-மஹோதார குணமுடையவனும், ஏவல் - நியமித்தல், பயன் இரக்கும் - பலத்தை யாசித்தல், இவற்றிற்கு, ஆர் - யார் விஷயமென்று, என்று, ஒலும் - ஓதிய, உத்கோஷித்த - அதாவது 'ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே' என்று உபதேசித்தவனுமான, எழில் உடையார்- பகவானுடைய, ஏவல் பயன் இத்யாதி - கைங்கர்யமேநமக்குப்(புருஷார்த்தம்என்று) உபதேசித்த ஆசார்யர்களுடைய, என்றும்பொருள் கூறலாம், இணையடிக்கீழ் - இரண்டு திருவடிகளின் கீழே, நாம், இருப்போம்.

ஓர் விசேஷக் குறிப்பு

கீழ் 187 - ம் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் 'ராகாந்தே' என்ருரம்பிக்கும் ச்லோகம் இந்த அபய ப்ரதான ஸார நிருபணத்திற்குச் சேராது என்று தோன்றுகிறது. இந்த ப்ரபந்தத்தின் ஆரம்பத்தில் பூர்வ வ்ருத்தாந்தம் ஸங்க்ரஹிக்கப்படவில்லை. இப்ப்ரகரணத்திற்கு உசிதமான அம்சமே ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினல் இந்த ச்லோகம் பிற்பட்டவர்களான யாரோ ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது, அல்லது ராவணனைக்கொன்றபிறகு விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார் என்கிற அர்த்தத்தைக் கூறும் ஒரு ச்லோகம் இருந்து அது லுப்தமாயிருக்க வேண்டும்

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்





சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச்சொன்ன பழமொழியுள்

இருபத்தி நாலாவது ரஹஸ்யம்

ஸ்ரீ தத்த்வ சிகாமணி

[இது அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் மூன்றுவது
ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

இது லுப்தம்

ஸ்ரீ:

ஸ்ரீ ரஹஸ்யசிகாமணி விஷயமாய்ச்

சில விசேஷக் குறிப்புக்கள்

ஸ்ரீ அபயப்ரதாந ஸார விஷயமான சில விசேஷக் குறிப்புக்களையும் இது விஷயமாகச் சேர்த்துப் படித்துக்கொள்ளவேண்டும்.

பகவானுடைய ஸர்வலோக சரண்யத்வத்தை ப்ரதிபாதநம் செய்யும் புராணங்களில் வராஹபுராணமே முதலாவதாகும்.

இந்த ரஹஸ்யத்தின் ஆரம்பத்தில் உபோத்காத பாகத்தில் இந்த வராஹ சரம ச்லோகங்களைக் கூறும் ஸ்ரீ வராஹ புராணத்தின் மேன்மையும், இந்த அவதாரத்திற்கு மற்றுமுள்ள அவதாரங்களைக் காட்டிலுள்ள மேன்மையும் நிரூபிக்கப்பட்டு, மேல் வராஹ சரமச்லோகம் என்னப்படும் இரண்டு ச்லோகங்களுக்கும் விஸ்தரமான வ்யாக்யாநம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

இதில், வேதாந்தங்களில் மோக்ஷமடைபவனுக்கு அவச்யமுண்டாக வேண்டியதாகச் சொல்லப்பட்ட அந்திம ஸ்ம்ருதி விஷயமான விசாரம் செய்யப்பட்டு, ப்ரபந்நனுக்கு அந்திம ஸ்ம்ருதி ஸ்வயத்ந ஸாத்யமன்று, பகவானுடைய அநுக்ரஹத்தினாலேயே அது உண்டாகும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராம சரம ச்லோகத்திற்குப் போலே இந்த வராஹ சரம ச்லோகார்த்த விஷயமாயும் ஒரு தமிழ்ப் பாட்டு அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீக்ருஷ்ணாவதார சரம ச்லோகத்தின் தாத்பர்யார்த்தத்தை ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு ச்லோகத்தில் ஸங்க்ரஹித்தருளினாற்போல் இந்த சரம ச்லோகங்களின் அர்த்தத்தையும் ஸங்க்ரஹித்து இந்த ரஹஸ்யத்தின் இறுதியில் 'ஸ்வஸ்த்தம் சித்தம்' என்கிற ச்லோகத்தில் வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீவராஹ நயினார் என்று எம்பெருமானுக்கு ஒரு திருநாமம் சூட்டியுள்ளார்.

இதில் ஸ்ரீமந் நாதமுனிகளுடைய ஸ்ரீந்யாய தத்த்வ க்ரந்தத்தின் மங்கள ச்லோகம் ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் வராஹ புராணத்தில் இந்தச்சரமச்லோகங்கள் காணப்படவில்லை. மற்றும் சில சுலோகங்களும் அப்படியே காணப்படவில்லை. இதை அச்சிட்டவர்களுக்கு ப்ரபத்தி சாஸ்த்ரார்த்தம் புரியாமையால் இந்தச்சுலோகங்களை எடுத்துவிட்டார்கள் என்று தோன்றுகிறது. அப்படியே ஸ்ரீ பாரதப் பதிப்பிலும் நாம் ப்ரஸித்தமாய் உதாஹரித்துப் போருகிற 'ப்ரஹ்மாணம் சிதி கண்டம்ச' இத்யாதி பல ச்லோகங்கள் காணப்படவில்லை. இவற்றைச் சீர்திருத்தி ஒரு நல்ல பதிப்பு வெளியிடவேண்டியது மிகவும் அவச்யமான கைங்கர்யமாகும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

இருபத்தைந்தாவது ரஹஸ்யம்

ஸ்ரீ ரஹஸ்ய சிகாமணி

[அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் நான்காவது.
இது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

மங்களாசரணம்-அவதாரிகை-ஸாத்விக புராணோபாதேயதமத்வம்-வராஹ புராணத்தின் ஏற்றம்-வக்த்ருவைலக்ஷண்யம்வராஹாவதாரத்தின் உத்கர்ஷம்—ச்ரோத்ரு வைலக்ஷண்யம்—சரணாகதி ப்ரகரணத்தின் உத்கர்ஷம்—வராஹ சரம ச்லோகத்தின் பெருமை — சுலோகத்வயத்தின் ஸமுச்சிதார்த்தம்—ஸ்த்திதேமஸி விவரணம்—ஸுஸ்வஸ்த்தேசரீரே விவரணம் —தாது ஸாம்யே ஸ்த்திதே விவரணம்—ஸதீ சப்தார்த்தம்—யः சப்தார்த்தம்—நரः சப்தார்த்தம்— ஸ்மாத்தர சப்தார்த்தம்—விச்வரூப சப்தார்த்தம்—மாம் சப்தார்த்தம்—அஜம் சப்தார்த்தம் —உத்தர சுலோகஸ்ய சரண்ய க்ருத்ய பரத்வம்—தநः சப்தார்த்தம்—தம் சப்தார்த்தம்—மத் பக்த சப்தார்த்தம்—ம்ரியமாண சப்தார்த்தம் — து சப்தார்த்தம்—காஷ்ட்ட பாஷாணவ ஸங்ஹிப சப்தார்த்தம் - அஹம் ஸ்மராமி விவரணம்—நயாமி சப்தார்த்தம்—பரமாம்கதிம் விவரணம் —வராஹ சரம சுலோகார்த்த ஸங்க்ரஹப்பாட்டு—வராஹ சரமசுலோகார்த்த ஸங்க்ரஹ சுலோகம்.]

மங்களாசரணம்

स्थिरचर जगन्मातुः क्षोण्याः कथिच्चतुरंघ्री
विपदि सपदि क्रोडक्रीडां विधाय ततः प्रभोः।
श्रुतिपरिषण श्लोकव्याजात्तना परिचिक्रमो
रमयतु मनः सत्त्वस्थानां रहस्यशिखामणिः ॥

1 ஸ்த்திரசர ஜகந்மாது: க்ஷோண்யா: க்வசிச் சதுரர்ணவீ
விபதி ஸபதி க்ரோட க்ரீடாம் விபாவயத: ப்ரபோ: ।
ச்ருதி பரிபண ஸ்லோகத்வந்த்வாத்மநா பரிபகத்ரிமோ
ரமயது மந: ஸத்த்வஸ்த்தாநாம் ரஹஸ்ய ஸிகாமணி: ॥

2 க்வாபி கல்பாந்தவேலாந்தே க்ஷுரதக்ந்யே ஸமுத்ரிதாம்।
வஹதே மேதிநீம் முஸ்தாம் மஹதே போத்ரிணே நம: ॥

(க்வாபி கல்பாந்தவேலாந்தே குரதக்நே ஸமுத்த்ருதாம்।
வஹதே மேதிநீம் முஸ்தாம் மஹதே போத்ரிணே நம: ॥)

அவதாரிகை

3 திருத்தம் பெரியவர் சேரும் துறையில் செறிவிலர்க்கு*
வருத்தம் கழிந்த வழிஅருள் என்ற நம் மண்மகளார்
கருத்தொன்ற * ஆதிவராக முரைத்த கதி அறிவார் *
பொருத்தம் தெளிந்துரைக்கப் பொய்யிலா மதி பெற்றனமே. 20

---

1 ஸ்த்திரசர ஜகந்மாது:-ஸ்த்தாவர ஜங்கம ரூபமான லோகத்திற்குத் தாயாராகிய க்ஷோண்யா: - பூமிப்பிராட்டிக்கு, க்வசித் - ஒரு காலத்தில், சதுரர்ணவீ விபதி-நாலு ஸமுத்திரத்திலும் மூழ்கிய ஆபத்துஉண்டானபோது, ஸபதி - உடனே, க்ரோடக்ரீடாம் - ஸ்ரீ வராஹாவதாரமாகிய லீலையை, விபாவயத: - அநுபவிக்கிற, ப்ரபோ: - பகவானுடைய ச்ருதி பரிபண - வேதங்களே மூலதனமாக உடைய, ச்லோக த்வந்த்வாத்மநா - இரண்டு ச்லோகங்களாக, பரிபக்ரிம: - பரிணமித்த, ரஹஸ்ய சிகாமணி: - உத்தமமான இந்த ரஹஸ்யம், ஸத்த்வஸ்த்தாநாம் - ஸத்த்வ குணமோங்கி நிற்கும் பாகவதர்களுடைய, மந: - மனத்தை, ரமயது - ஸந்தோஷப்படுத்தட்டும்.

2 க்வாபி - ஒரு, குரதக்நே - காற் குளம்பு அளவேயுள்ள, கல்பாந்த வேசந்தே-ப்ரளய காலக் கடலாகியகுட்டையில், ஸமுத்த்ருதாம் - எடுக்கப்பட்ட, மேதிநீம் பூமியாகிய, முஸ்தாம் - கோரைக் கிழங்கை, வஹதே -தரித்துக் கொண்டிருக்கிற, மஹதே போத்ரிணே - மிகவும் பெரிய வராஹ ரூபியாகிய, பகவான் பொருட்டு, நம: - நமஸ்காரம்

3 திருத்தம் - ஜ்ஞாநம் அநுஷ்ட்டாநம் இவைகளினால் திருந்திய, பெரியவர் - உயர்ந்தவர்கள், சேரும் - அநுஷ்ட்டிக்கிற, துறையில் - (பக்தியோகமாகிற) உபாயத்தில், செறிவு - சக்தி முதலிய அதிகாரம், இலர்க்கு - இல்லாத அகிஞ்சநர்களுக்கு, வருத்தம் கழிந்த - கஷ்டம் இல்லாத (ஸுலபமாய் அநுஷ்ட்டிக்கக்கூடிய), வழி - மார்க்கத்தை (உபாயத்தை), அருள் - க்ருபை செய்யவேண்டும், என்ற -

1 'इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्।
बिभेत्यल्पश्रुतात् वेदो मामयं प्रतरिष्यति ॥'
(இதிஹாஸ புராணப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்।
பிபேத்யல்பஸ்ருதாத்வேத: மாமயம் ப்ரதரிஷ்யதி ॥)

என்கிறபடியே வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான புராணங்களில் ஸங்கீர்ண ராஜஸ தாமஸ புராணங்களுக்குக் காரண தோஷமும், பாதக ப்ரத்

ஸாத்விகபுராணேபாதேயதமத்வம்ய ய மும் உண்டானபடியாலே இவற்றை ஆதரிக்குமவர்கள்

2 'இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும் மலிந்துவாது செய்வீர்களுமி'

என்று வேதபாஹ்ய கோடியிலே கோப்புண்டார்கள். ஸாத்விக புராணங்களுக்குக் காரண தோஷமும் பாதகப்ரத்யயமும் இல்லாத படியாலும், வைதிக பரிக்ரஹ ப்ராசுர்யத்தாலும் இவையே உபப்ரும்ஹணங்களிலே உபாதேயதமங்கள்.

வராஹ புராணத்தின் ஏற்றம்

இவை தம்மில் ஸ்ரீவராஹ புராணம்

3 'பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப்*பண்டொருநாள்
மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப் பன்றியாம் *
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் *
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.'

என்று பகவானைக் கேட்டருளிய, நம் - நம்முடைய, மண்மகளார்- பூமிப் பிராட்டியினுடைய, கருத்து - எண்ணம், ஒன்ற - ஒன்றும்படி . அதாவது அவளுடைய திருவுள்ளத்திற்கு அநுகுணமாக, ஆதி வராஹ முரைத்த- ஸ்ரீவராஹாவதாரம் எடுத்த பகவான் உபதேகித்த, கதி - ப்ரபத்தியாகிய உபாயத்தை, அறிவார் - தெரிந்துகொண்ட நம் ஆசார்யர்கள், பொருத்தம் தெளிந்து உரைக்க - நம்முடைய ஆகிஞ்சன்யாதிகளால் நாம் அந்த உபாயத்தை அநுஷ்டிக்கத் தகுந்தவர்கள் என்று கண்டு நமக்கு அதை உபதேசிக்க, பொய்யிலா மதி பெற்றனம்- உண்மையான ஜ்ஞாநத்தைப் பெற்றனம்

1 பார - ஆதி - 1 - 293. இதிஹாஸபுராணப்யாம் - இதிஹாஸம் புராணம் இவைகளைக்கொண்டு, வேதம் - வேதத்தை, உபப்ரும்ஹயேத் - நன்கு உபப்ரும்ஹணம் செய்யவேண்டும். அயம் - இவன் மாம் - என்னை, ப்ரதரிஷ்யதி - ஏமாற்றப் போகிறான் என்று, அல்பச்ருதாத் - கொஞ்சம் படித்தவனிடமிருந்து, வேத: - வேதம், பிபேதி - நடுங்குகிறது.

2 திருவாய்—4 - 10 - 5. 3 நாச்சியார்திருமொழி - 11 - 8,

என்கிறபடியே ஒன்றிலும் சலிப்பிக்கவொண்ணாதபடி தத்வ ஹித புருஷார்த்தங்களில் ஸுப்ரதிஷ்டிதமாயிருக்கும்.

இதற்கு வக்த்ரு வைலக்ஷண்யத்தாலும் ஸ்ரோத்ரு வைலக்ஷண்யத்தாலும் அதிசயம் உண்டு. வக்த்ரு வைலக்ஷண்யம் ஏது என்னில்:- இதற்கு வக்தாவான ஜ்ஞாநப்பிரான் ப்ரம விப்ரலம்ப ப்ரமாத அசக்தி ஸம்பாவனையையுடைய க்ஷேத்ரஜ்ஞரைப் போலன்றிக்கே ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனாகையாலே இவனுக்கு ப்ரமமும் ப்ரமாதமும் கூடாது. ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷ பரம காருணிகனாகையாலே ஆஸ்ரிதர் திறத்தில் இவனுக்கு விப்ரலம்பகத்வம் கடியாது.

வக்த்ரு வைலக்ஷண்யம்

1 'सर्वज्ञः सर्वदृक् सर्वशक्ति ज्ञानबलद्धिमान्'

(ஸர்வஜ்ஞ: ஸர்வத்ருக் ஸர்வ ஸக்தி ஜ்ஞாநபலர்த்திமாந்' இத்யாதிகளிற்படியே ஸர்வ ஸக்தியாகையாலே இவனுக்கு அசக்தி ப்ரஸங்கமும் இல்லை.

இவ்வவதாரத்திற்கு இவன்தன்னுடைய அவஸ்த்தாந்தரங்களிற் காட்டில் ஏற்றமுண்டு. எங்ஙனே என்னில்:—

இவ்வவதாரம் ஒருவழியாலே கரை ஏறினவர்களைக் கூட்டிக் கொண்டு இருக்கிற அளவேயான பரரூபம் போலன்றிக்கே, அழுந்தினவர்களைக் கரையாதபடி எடுத்துக் கரைஏற விடும்படியாயிருக்கும். வ்யூஹங்களைப்போலே பகதானவர்கள் ஆஸ்ரயிக்க மேலான நிலத்தில் இருக்கையன்றிக்கே

வராஹாவதாரத்தின் உத்கர்ஷம்

2 'ஊர்வண்ண மடமங்கை பத்தர்'

எனகிறபடியே ஆஸ்ரிதர் பகலல் தன் பகதி தோன்ற

3 'கேழலாய்க் கீழ்ப்புக்கு இடந்திடும்'

என்கிறபடியே அவர்கள் இருந்த கீழ் நிலத்திலும் சென்று,

3 'தடம்பெரும் தோளாரத் தழுவும்'

---

1 விஷ்ணு புராணம் - 5 - 1 - 47. ஸர்வஜ்ஞ: - எல்லாவற்றையும் அறிந்தவன், ஸர்வத்ருக் எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகப்பார்ப்பவன், ஸாவசக்திஜ்ஞாநபலர்த்திமாந் - எல்லா விதங்களானசக்தி ஜ்ஞாநம், பலம் இவற்றின் நிறைவுடையவன்,

2 திருநெடும்—18. 3 திருவாய்—2 - 8 - 7.

என்னும்படியாயிருக்கும். மத்ஸ்யாவதாரம்போலே தான் பெற்ற ப்ரஜைகள் உலாவித்திரியுமளவிலே ஈக்ஷணமாத்ரத்தாலே ரக்ஷிக்குமளவன்றிக்கே, இங்கே ப்ரஜைகள் நினைக்கவும் மாட்டாதே காஷ்ட்டபாஷாண ஸங்நிபரா(ஞ)ய்விழுந்துகிடக்கிற அளவிலே, அவர்களுக்கு அடைத்த நினைவைத் தான் அநுஷ்டித்து ரக்ஷிக்கிறன் என்னும்படிகளுக்குத் தன் பாசுரமேயுண்டு. கூர்மாவதாரம் போலே ஒரு பூதரம் ப்ரமிகளைக்கு அதிஷ்ட்டானமாய் நிற்கையன்றிக்கே, இதுதான பூதரமுமாய், பூமியும் பூதரங்களும் கலங்காதே

1 'ஊன்றி இடந்து எயிற்றில் கொண்ட நாள்
நான்றில ஏழ் மண் ணும்.....தானத்தவே'

என்னும்படி நிலைநிற்கப்பண்ணுமதாயிருந்தது. ஸ்ரீ நருஸிம்ஹாவதாரம் போலே தட்டுப்பட்டதொன்றையும பிளக்குமதன்றிக்கே, இது பூமியெல்லாம் தட்டுப்படாதபடி 'அத்ரும்ஹத்' என்கிறபடியே இறுகப்பண்ணுமதாயிருந்தது. ஸ்ரீ வாமநாவதாரம் போலே பொல்லாக் குறள் உருவாய் பொற்கையில் நீர் ஏற்றுத் தன்னுடைய பூமியைப் பிறர்களுக கொடுக்கக் கொள்ளுகையன்றிக்கே, இது *மஹாபலியான அஸுரனைநிராகரித்துத் தன் பூமியைத் தானே கைக்கொண்ட அவதாரமாயிருக்கும். விரோதி நிராகரணத்திற்கு மழு ஏந்தவேண்டும் பரசுராமாவதாரத்தில் போலன்றிக்கே, இவ்வவதாரத்தில் விரோதி நிராகரணத்திற்கு பூமி தானே ஸாக்ஷியாம்படி இருந்தது. சக்கரவர்த்தித்திருமகளைப் அவதாரம்போலே பூமியிலுள்ள சராசரங்களோத் தன் பதத்திலே ஏற்றுமளவன்றிக்கே, இது பூமி தன்னைத் தோளிலே ஏற்றும் அவதாரமாயிருந்தது. பலபத்ராவதாரம் போலே பூமிகு க்ஷதியைப் பண்ணுவதோ வந்தேறியான உபகரணத்தைக் கையிலே கொண்டிருகையன்றிக்கே, இது பூமிகு க்ஷதி வாராதபடி எடுக்கும்ஸஹஜமான முக்கியோபகரணத்தை உடைத்தாயிருக்கும்.

2 'शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्'

(ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்)

---

1 திருவாய் - 7 - 4 - 3

2 கீதை - 2 - 7. தே - உனக்கு, அஹம் - நான், சிஷ்யः - சிஷ்யன், த்வாம் ப்ரபந்நம் - உன்னைச் சரணமடைந்த, மாம் - என்னை, சாதி - நியமிக்கவும். * மஹா பலியான - மிகுந்த பராக்ரமசாலியான

ன்றவனுக்கு உபதேசிக்கத் தொடங்கி, கர்ம யோகாதிகளிலே அதிகரித்துக் கடையாயிருப்பதொரு ஸ்லோகத்திலே பரமஹிதத்தைக் காட்டின க்ருஷ்ணவதாரம் போலன்றிகே, இது

1 ' अहं शिष्या च दासी च भक्ता च त्वयि माधव '

(அஹம் ஶிஷ்யா ச தாஸீ ச பக்தா ச த்வயி மாதவ)

என்ருர்க்கு ஆரம்பத்திலே முழுகி ம(ண்)ணம் கொண்டு உபதேஶிக்கும்படியாயிருந்தது.

2 ' கற்கியாம் இன்னம் '

என்னும்படி பாவ்யுபகாரமான கல்க்யவதாரம் போலன்றிக்கே, இது பூதோபகாரமுண்டான அவதாரமாயிருந்தது. ஆகையால் இப்புராண ப்ரவர்த்தகமான இவ்வவதாரத்திற்கு மானம இல்லாதாற்போலே உபமாநமுமில்லை. இவ்வவதாரத்தை மன்வாதி பரமாப்த பரிகணநையிலே தர்ம ஶாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள் தாங்களே சேர்த்தார்கள். இப்படி வக்த்ரு வைலக்ஷண்யத்தாலே இப்புராணம் உத்க்ருஷ்டம்,

ஸ்ரோத்ரு வைலக்ஷண்யத்தாலும் இது ஸர்வோத்க்ருஷ்டம். எங்ஙனே என்னில்:—ஸ்ரீ பூமிப்பிராட்டியை ஜகத்துக்கு ' ஈஶா நா ' என்று ஸ்ருதி சொல்லுகை ச்ரோத்ரு வைலக்ஷண்யம் யாலே சேதநாசேதந ரூபமான ஜகத்தில் காட்டில் இவளுடைய உத்கர்ஷம் பரஸித்தம்.

3 ' कृतागसः क्षाम्यति केशवः श्रितानकिंचनान् तान् कमला कटाक्षयेत्।
न च प्रसह्य प्रतिषेधसीति यत् क्षमा त्वमेवोर्वि सहस्व मामपि ॥ '

(க்ருதாகஸ: க்ஷாம்யதி கேஶவ: ஶ்ரிதாந்
அகிஞ்சநாந் தாந் கமலா கடாக்ஷயேத் ।

---

1 வராஹ புராணம் - மாதவ - ஓ! பகவானே, அஹம்- நான், ஶிஷ்யா ச - சிஷ்யையும், தாஸீ ச - தாஸியும், த்வயி - உம்மிடத்தில், பக்தா ச - பக்தி செய்பவளும்.

2 திருவாய்—5 -1-10.

3 க்ருதாகஸ: - பாபம் செய்தவர்களாயிருக்கும், ஶ்ரிதாந் - தன்னை ஆச்ரயித்தவர்களை, கேஶவ: - பகவான், க்ஷாம்யதி – மன்னிக்கிறான், அகிஞ்சநாந் - அகிஞ்சநர்களான, தாந் - அவர்களை, கமலா - பெரிய பிராட்டியார், கடாக்ஷயேத் - கடாக்ஷிக்கிறாள், ந ச ப்ரஸஹ்ய ப்ரதிஷேதஸீதி யத் அப்படிப் பாபத்தை அங்கீகரித்து அதை க்ஷமிப்பது என்பது உன்னிடத்தில் இல்லாமையினால், உர்வீ - பூமிப்பிராட்டியே, த்வமேவ - நீரே, க்ஷமா - பொறுமை, மாமபி - என்னையும், ஸஹஸ்வ-பொறுத்துக் கொள். அதாவது பூமிப்பிராட்டிப் பாபம் இருக்கிறது என்று ஒரு பொழுதும் நினைப்பதில்லை என்றபடி,

ந ச ப்ரஸஜ்ய ப்ரதிஷேதஸீதி யத்
க்ஷமா த்வமேவோர்வி ஸஹஸ்வ மாமபி ||'

என்கிறபடி ஸர்வம் ஸஹையான இவளுக்கு ஸர்வேஸ்வரனைக் காட்டிலும் பெரிய பிராட்டியாரைக் காட்டிலும் க்ஷமாதிகுண பூயஸ்தை உண்டாயிருந்தது. இப்படியானால் இவளுக்குத் தங்களைக் காட்டில் ஏற்றத்தை ஸூரிகள் தாங்களே அறிவார்கள் ஆகையால் கர்மவஸ்யரானவர்கள் ஸ்வகார்யார்த்தமாகக்கேட்க உறவில்லாத க்ஷேத்ரஜ்ஞர் உபதேஸிக்க, ப்ரவ்ருத்தங்களானபுராணந்தரங்கள் போலன்றிகே ஸர்வலோகஜநநியான இவள்ஜகத்ஹிதார்த்தமாகக் கேட்க,

1 'पिताऽसि लोकस्य चराचरस्य' (பிதாऽஸி லோகஸ்ய சராசரஸ்ய) என்கிறபடியே ஸர்வலோக பிதாவானவன் அருளிச்செய்ய ப்ரவ்ருத்தமான புராணமாகையாலே இது எல்லாவற்றிலும் அதிகம்,

2 'सर्वेषामेव धर्माणामुत्तमो वैष्णवो विधिः'
(ஸர்வேஷாமேவ தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி:)

என்று மஹா பாரதத்தில் சொன்ன விஸேஷ தர்ம ப்ராசுர்யத்தாலும் இது ஸர்வோத்க்ருஷ்டம்.

இதில் முமுக்ஷுக்களுக்கு ஸாக்ஷாத் வா பரம்பரயா வா மோக்ஷோபாயமாக விஹிதங்களான ஸம்மார்ஜந, உபலேபந, சூர்ண,

சரணாகதிப்ரகரணத்தின் உட்கர்ஷம்

சித்ர, மாலாகரண, தீபாரோபண, ஹவிர் நிவேதந, நந்தநவந. கரண, விமாந நிர்மாண, ப்ரதக்ஷிண, ப்ரணம, கதா ஸ்ரவண, ஸ்துதி, ஸங்கீர்த்தந, குணகதந, கீத நிருத்த, தாரண, த்யாநாதி விஸேஷதர்மங்கள் தம்மில் ஸர்வாதிகாரமுமாய் ஸுகரமுமாய், ஸ்வாதுதமமுமான உபாய விஸேஷத்தை ப்ரதிபாதிக்கிற இப்ப்ரகரணம் உபஜீவ்யதமம். இவ்வுபாய விஸேஷம்

3 'साहि सर्वत्र सर्वेषां सर्वकामफलप्रदा'

---

1 கீதை - 11 - 43. லோகஸ்ய சர அசரஸ்ய - ஸ்த்தாவர ஜங்கம ரூபமானலோகத்திற்கு, பிதா அஸி - தகப்பனுராகிறீர்.

2 பார - ஆநு - 31 - 24, வைஷ்ணவோ விதி: - பகவானைப் பற்றிய தர்மம், ஸர்வேஷாம் தர்மாணும் - எல்லாத் தர்மங்களைக் குள்ளும், உத்தம: - உயர்ந்தது.

3 ஸநத்குமார ஸம்ஹிதை. ஸா ஹி - அந்த ப்ரபத்தியானது, ஸர்வத்ர - எல்லா இடத்திலும், ஸர்வேஷாம் - எல்லோருக்கும், ஸர்வகாம பலப்ரதா - விரும்பிய எல்லாப் பலன்களையும் கொடுக்கிறது.

(ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா)

1 ' तावदार्तिस्तथा वांछा ' (தாவதார்த்திஸ்ததாவாஞ்ச்சா) இத்யாதிகளிற்படியே யதாதிகாரம் மோக்ஷ ததுபாயாதிகளை ஸாதிக்கவற்றுயிருக்கும்.

இத்தைஸ்ரீபூமிப் பிராட்டி ஸ்வாபாவிக ஸார்வஜ்ஞ்யத்தாலே அறிந்திருக்கச் செய்தேயும், 'ப்ரஜாஹிதார்த்தமாக மாதா கேட்க, ஸர்வபூத ஸுஹ்ருத்தான பிதா அருளிச்செய்த வார்த்தை' என்று ப்ரஸித்தமாகவேண்டும் என்று திருவுள்ளம் பற்றி,

வராக சரமச்லோகத்தின் பெருமை

'அஜ்ஞருமாய் அயக்தருமான அதிகாரிகளுக்குக் குருபாயத்தை விதித்தால், அது குருவியின் கழுத்திலே கட்டின பனங்காய் போலேயாம், இவர்களுக்கு விஹிதமான அந்திம ப்ரத்யயமும், மரணவஸ்த்தையில் மநஸ்ஸு ப்ராப்த விஷயத்தில் ப்ரதிஷ்ட்டிதமாக மாட்டாதபடியாலே ஸ்வயத்நத்தால் ஸாதிக்கப்போகாது; ஆன பின்பு ஸ்வரூப பரிகராதிகளால் சுமையற்றதொரு லகூபாயத்தை அருளிச்செய்யவேண்டும்'என்று விண்ணப்பம் செய்ய, ஸித்தோபாயபூதராய் ஸர்வஜ்ஞருமான ஸ்ரீ வராஹ நயிஞர் தம்முடைய வசீகரணார்த்தமாக ஸாத்யமான ஜ்ஞாநயஜ்ஞ ஸாரத்தையும்,இவ்வளவாலே ப்ரஸந்நராய், சன்ம சன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய்த் தன்மை பெறுத்தித் தன்தாளிணைக்கீழ் கொள்ளும்படியையும்,' ஸ்த்திதே மநஸி 'என்று தொடங்கி இரண்டு ச்லோகத்தாலே அருளிச்செய்கிறார். இவ்வடைவே த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களையும், சரம ச்லோகத்தில் பூர்வோத்தரார்த்தங்களையும்,

2 ' स प्रातुश्चरणौ गच्छं ' (ஸப்ராதுஶ் சரணௌ காடம்)

3 ' भवांस्तु सह वैदेह्या ' (பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா) என்கிற இரண்டு ச்லோகங்களையும், ' அகலகில்லேன் ' முதலான இரண்டு பாட்டுக்களையும் அந்யோந்யோபகாரங்களாக அநுஸந்திப்பது.

இவை இரண்டில் பூர்வ ச்லோகம்

' मत्कृते सर्वभूतानां लघूपायं वद प्रभो '

1 விஷ்ணுபுராணம் - 1 - 9 - 73. ம் பக்கம் பார்க்க.

2 ராமா - அயோ—31 - 2. 3 ராமா அயோ—31 - 25.

1 (மத் க்ருதே ஸர்வபூதாநாம் லகூபாயம் வத ப்ரபோ) என்று கேட்ட உபாய விமோஷத்தை கால அதிகார ப்ரகார விஷய விமோஷங்களோடே கூடக் காட்டுகிறது. உத்தர ச்லோகத்வய ஸமுச்சிதார்த்தம்

ச்லோகம் உபாஸநத்திற்குப்போலே அந்திம ப்ரத்யயமும் உபாயகோடியிலே சொருகி ஸ்வயத்ந ஸாத்யமாக வேண்டாதபடி ஸர்வ பரஸ்வீகாரம் பண்ணின ஶரண்யனுடைய வ்யாபார விமோஷத்தாலே தேஶகாலாதி பரிச்சேதரஹித கைங்கர்ய பர்யந்த பரம புருஷார்த்த லாபத்தைக் காட்டுகிறது.

स्थिते मनसि सुस्थे शरीरे सति यो नरः।
धातु साम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम्॥

(ஸ்த்திதே மநஸி ஸுஸ்வஸ்த்தே ஶரீரே ஸதி யோ நரः।
தாதுஸாம்யே ஸ்த்திதே ஸ்மர்த்தா விஶ்வரூபம் ச மாமஜம்॥)

இங்கே 'ஸ்த்திதே மநஸி' என்னவேண்டுமோ? ஸர்வ ஸ்ம்ருதிகளுக்கும் மநஸ்ஸினுடைய ஸ்த்திதி வேண்டியன்றே இருப்பது என்னில்?

2 'चचलं हि मनः कृष्ण'

(சஞ்சலம் ஹி மநः க்ருஷ்ண) என்றும்,

3 'असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम्'

(அஸம்ஶயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்)

என்றும் சொல்லுகிறபடியே வாநரம் போலே கட்டிவைத்தாலும் காபேயம் விடாத மநஸ்ஸு ஒரு

ஸ்த்திதேமநஸி சப்தார்த்தம் ஸுக்ருத விமோஷமடியாக உண்டான ஸத்த்வோந்மேஷ வஶத்தாலே ஸதாசார்யோபதிஷ்டமான பரதத்த்வ பரமஹித பரம புருஷார்த்தங்களில் தெளிவும் துணிவும் த்வரையும் பிறக்கும்படி ப்ரதிஷ்டிதமான அளவொ

1 வராஹ புராணம் - மத்க்ருதே ஸர்வபூதாநாம் - எனக்காக எல்லா ப்ராணிகளுக்கும், லகு உபாயம் - ஸுலபமான மார்க்கத்தை, ப்ரபோ - ஓ! ப்ரபுவாகிய பகவானே, வத - சொல்லும்.

2 கீதை - 6 - 34. க்ருஷ்ண - ஓ! க்ருஷ்ணரூபிய பகவானே, மநः - மனஸ்ஸு, சஞ்சலம் ஹி - எப்பொழுதும் சலித்துக் கொண்டிருக்கும் ஸ்வபாவத்தையுடையதன்றே.

3 கீதை - 6 - 35. மஹாபாஹோ - மஹாபாஹுவான அர்ஜுந! மநः - மனது, துர் நிக்ரஹம் - கட்டுப்படுத்த முடியாதது, சலம் - சலிக்கும் ஸ்வபாவமுடையது, அஸம்சயம் - இதில் ஸந்தேஹமில்லை.

ழிய இங்கு சொல்லுகிற ஸ்மரணவிமோஷத்திற்குக் கர்மாந்தரங்களிற்போலேஒரு தேஹ கால விமோஷ நியமமில்லை. புண்யாபுண்ய தேஹ கால விமோஷங்களால் வருவதொரு பலோத்கர்ஷாபகர்ஷமும் இல்லை என்கைக்காகஇங்கு 'மநஸ்ஸுஸ்த்திதமாயுள்ள இடத்தில்' என்கிறது.

ஆனால்ஶரீரஸ்வாஸ்த்ய்யம் இல்லாதபோது மநஸ்ஸினுடைய ஸ்த்திதி கூடுமோ? அப்போது இவன் ப்ரமாத நித்ராதிகளாலே அபேக்ஷித ஸ்மரணத்தைப் பண்ணமாட்டாதொழியானே? ஆகையால் 'ஸுஸ்வஸ்த்தே ஶரீரே' என்னவேண்டுமோ என்னில்? சில கர்மங்களுக்கு ஶரீராவஸ்த்தா ரூபமான வயோ விமோஷமும், ஶுத்த்யாதிகளும், ப்ராங்முகத்வ ஆஸீநத்வாதிகளும் அபேக்ஷிதங்களாயிருக்கும்; இதற்கு அப்படியன்று; ஶாஸ்த்ரார்த்த ப்ரதிஸந்தாநத்திற்கு அநுகுணமாக ஶரீரத்தினுடைய ஸுஸ்வஸ்த்த தஶையே வேண்டுவது. மற்றும் யோகோபயுக்த மநோ நியமத்திற்குச் சொன்ன அப்யாஸாதிகளும் வேண்டாம் என்கைக்காக 'ஶரீரம் ஸுஸ்வஸ்த்தமான அளவிலே' என்கிறது. இங்கு 'ஸ்வஸ்த்த' மாகையாவது அபேக்ஷிதவிஸ்மரணேந்மாத நித்ராதி ஹேதுவானதஶைகழிகை. 'ஸுஸ்வஸ்த்த 'மாகையாவதுஸத்த்வோந்மேஷ விமோஷத்தாலே பரமபுருஷார்த்த ருசிபிறக்கைக்கு அநுகுணமாகை.

ஸுஸ்வஸ்த்தே, சரீரே சப்தார்த்தம்

இந்த ஶரீர ஸ்வாஸ்த்ய்யம்தான் ஆயுர்வேதோக்தமான தாது ஸாம்யத்தையொழிய வருமோ? ஆனால் 'தாது ஸாம்யேஸ்த்திதே' என்றது என் என்னில்? இவ்விடத்தில் ஸர்வருக்கும் ஸம்பாவிதமான தாது ஸாம்யத்தாலே வரும் ஶரீரஸ்வஸ்த்ததையொழிய ஸமாதி பரர்களுக்குப்போலே ஆஸந ப்ராணயாமாதிகளாலே ஓர் அபூர்வ ஶரீரஸ்வாஸ்த்ய்யம் தேடவேண்டாம் என்றபடி. இங்கு ப்ரபத்திக்கு வேண்டுமளவு மநஸ்த்திய்யாதிகளைச் சொல்லுகிறதாகையாலே ஆதிவ்யாதிமான்களுக்கு ப்ரபத்தி சொல்லுவது விருத்தமன்று. இப்படிகளாலே

தாது ஸாம்யே ஸ்த்திதே சப்தார்த்தம்

1 'प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते ।'

---

1 ஸநத்குமார ஸம்ஹிதை - ஏவம் - இப்படி, ப்ரபத்தேः - ப்ரபத்திக்கு, பராபேக்ஷா - மற்றொன்றை எதிர்பார்ப்பது, க்வசிதபி - ஓரிடத்திலும். ந வித்யதே - இல்லை.

(ப்ரபத்தேः க்வசிதபயேவம் பராபேக்ஷா ந வித்யதே)
என்று சொன்ன, நைரபேக்ஷ்யம் ப்ரகாசிதமாயிற்று.

1 'நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன்'

2 'महता पुण्यपण्येन क्रीतेयं कायनौस्त्वया।
प्राप्तुं दुःखोदधेः पारं त्वर यावन्न भिद्यते॥'

(மஹதாபுண்ய பண்யேந க்ரீதேயம் காயநௌஸ் த்வயா।
ப்ராப்தும் துःக்கோததேः பாரம் த்வர யாவந் ந பித்யதே॥)

3 'கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்'

என்னும் அர்த்தம் தோற்ற 'ஸதி' என்கிறது. இது மூன்றிலும் ஸதி சப்தார்த்தம் அன்வயிக்கிறது.

4 'सा हि सर्वत्र सर्वेषां।'

(ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம்)

என்கிறபடியே ப்ரபத்தியினுடைய ஸர்வாதிகாரத்வம் தோற்ற யோ நரः' என்கிறது. இதற்கு வர்ணப்ரமாத்யதிகார நியமம் இல்லை. ஸத்ய வசநாதிகளைப் போலே ஸாமாந்ய தர்மமாகையாலே ஶரண்ய ஶரணாகதி தத் பல ஜ்ஞாநமுடையார் எல்லார்க்கும் ருசி பிறந்தபோது

யः நரः சப்தார்த்தம்

5 'सर्वयोग्यमनायासं' (ஸர்வ யோகய மநாயாஸம்)

6 'सर्वलोकशरण्याय' (ஸர்வலோக ஶரண்யாய)

என்கிற விஷயத்தைப் பற்றக் குறையில்லை என்று தாத்பர்யம். ஆனாலும் 'யः' என்கிற அளவே அமையாதோ? 'நரः' என்றது மிகுதியன்றே? இது தான்

'सिद्धगन्धर्वयक्षाश्च ततः त्वां शरणं गताः'

---

1 பெரிய திருமொழி—1-1-4.

2 வராஹ புராணம் - த்வயா - உன்னுல், அயம் - இந்த, காய நௌः-சரீரமாகியபடகு, மஹதா-அதிகமான, புண்யபண்யேந - புண்யமெனும் விலை கொடுத்து, க்ரீதா - வாங்கப்பட்டது, துः கோததேः பாரம்-ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தின் அக்கரையை, ப்ராப்தும் - அடைவதற்கு, யாவத் ந பித்யதே - எதுவரையில் படகு உடையவில்லையோ (அதற்குள்), த்வர-விரைவாயாக

3 திருவா—2-10. 4 200-ம் பக்கம் பார்க்க

5 ஸாவயோக்யம் - எல்லோராலும் அநுஷ்ட்டிக்கக் கூடியது, அநாயாஸம் - கஷ்டமில்லாமல் இருப்பது. 6 ராமா-17-15

1 (ஸித்த கந்தர்வ யக்ஷாஶ்ச தத: த்வாம் ஶரணம் கதா:)

2 ' तदुपर्यपि बादरायण: संभवात् '

(தது பர்யபி பாதராயண: ஸம்பவாத்)

என்று தேவாதிகளுக்கும் பரம புருஷ ஸமாஶ்ரயணாதிகாரம் சொன்ன இடங்களோடே விரோதியாதோ என்னில்?

3 ' दुर्लभो मानुषो देह: ' (துர்லபோ மாநுஷோ தேஹ:)

4 ' मानुष्यं प्राप्य लोकेऽस्मिन् '

(மாநுஷ்யம் ப்ராப்ய லோகேऽஸ்மிந்)

இத்யாதிகளிற்படியே ஸ்த்தாவராதி தசை கழிந்த மஹா லாபத்தையும்,

5 ' विचित्रा देहसंपत्ति: ईश्वराय निवेदितुं '

(விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈஶ்வராய நிவேதிதும்)

இத்யாதிகளில் சொன்ன வழி தப்பினால் உள்ள அநர்த்தத்தையும் நினைப்பிக்கையாலே 'நர' ஶப்தம் ஸப்ரயோஜநம். இது தேவாதிகளுக்கு வ்யவச்சேதகமன்று; கர்ம பூமிகதரான உசிதாதிகாரிகளை முன்னிட்டுத் தேவாதிகளையும் உபலக்ஷிக்கிறது. இங்கு நரஶப்தம் யோகத்தாலே ஆத்மவாசியாய் விதிஸ்வபாவத்தாலே ஶாஸ்த்ரவஶ்யரெல்லாரையும் காட்டுகிறதாகவுமாம்.

நர: சப்தார்த்தம்

---

1 ராமா - பால - 15 - 24. தத: - ஆகையினால், த்வாம் - உம்மை, ஸித்த கந்தர்வயக்ஷா:ச - ஸித்தர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும் சரணம் கதா: - சரணம் அடைந்தார்கள்.

2 சாரீர - ஸமந்வ - 1 - 3 - 25. தத் - அந்தப் பகவானுடைய உபாஸநம், உபர்யபி - நமக்கு மேலான தேவதைகளிடத்திலும் உண்டு, ஸம்பவாத் - அவர்களுக்கும் மோக்ஷத்தில் ஆசையும் சக்தியும் உண்டாகலாமாகையினால் (என்று), பாதராயண: - வ்யாஸர் எண்ணுகிறார்.

3 பாகவதம் - 11 - 2 - 28. மாநுஷோதேஹ: - மனிதனாய்ப் பிறப்பது, துர்லப: - கஷ்டமானதன்றோ.

4 அஸ்மிந் - இந்த, லோகே - லோகத்தில், மாநுஷ்யம் ப்ராப்ய மனிதப் பிறவியை அடைந்து.

5 விஷ்ணுதத்த்வம் — விசித்ரா - விசித்திரமாயிருக்கும், தேஹ ஸம்பத்தி: - தேஹத்துடன் கூடியிருப்பது, ஈச்வராய - பகவான் பொருட்டு, நிவேதிதும் - ஸமர்ப்பிப்பதற்காக, (கால், கை முதலியவைகளுடன் முன்னால் ப்ரஹ்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது).

'யாவனொரு நரன்' என்கிறதுதால் 'எல்லார்க்கும் நிஷே வு கூடாது. இவ்வதிகாரி துர்லபன்' என்கிற அர்த்தமும் தோற் றுகிறது. இப்படிக் காலத்தையும்

ஸ்மர்த்தா சப்தார்த்தம்

அதிகாரத்தையும் மோதித்து அ கிஞ்சநதமனனஇவ்வதிகாரியினுடைய க்ருத்யவிமோஷத்தை அருளிச்செய்கிறுன்—'ஸ்மர்த்தா' உபாஸ நம் போலே ப்ரபதநமும்ஶாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்தளவன்றிக்கே

1 'मामेकं शरणं व्रज' (மாமேகம் ஶரணம் வ்ரஜ)

என்கிறபடியே விதேயமாயிருப்பதொரு ஸ்ம்ருதி விமோஷமாகை யாலே இங்கே அவிதேய ஜ்ஞாநவாதிகளுக்கு அவகாசமில்லை. இந்த ஸ்ம்ருதியில் ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகம் இல்லாமையாலும், ப்ரகரணாந்தரங்களிலே 'ஸக்ருத்' ஶப்தாதிகளால் அநாவ்ருத்தி காண்கையாலும், இங்கே ஸர்வகாலத்திலும்ஸர்வருக்குமாம் என் கையாலும், ப்ராரப்த ஶரீராவஸாநத்தில் மோக்ஷம் என்று தோற் றுகிற ஸ்வாரஸ்யத்திற்குப் பாதகமில்லாமையாலும், ஸ்வயத்ந ஸாத்ய அந்திம ப்ரத்யய நிரபேக்ஷதை சொல்லுகையாலும், 'தத:' என்கிற ஶப்தம் ஆவ்ருத்திக்கு விலக்காகத் தோற்றுகை யாலும், இது உபாஸநாதி ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிற ஸ்ம்ருதி யன்று. இங்கும் 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்கிற அர்த்தம் தோற்றுகிறது. இது ப்ரார்த்தநா பூர்வகபரந்யாஸம் என்னுமிட மும், இதற்கு மஹாவிஶ்வாஸாதிகள் அங்கங்கள் என்னுமிடமும், வர்ணாஶ்ரமாதி தர்மங்கள் இதற்கு அங்கங்களன்றிக்கே ஸ்வ தந்த்ராஜ்ஞையாலே வருகின்றன என்னுமிடமும் ப்ரகரணாந்தரங் களிலே கண்டுகொள்வது.

இது பூர்வ ப்ரகரணத்தாலும் உத்தர ஶ்லோகத்தாலும் மோ க்ஷார்த்த ப்ரபத்தியாகையாலே தன்னை ஒழிந்தார் முமுக்ஷுக்க ளுக்கு ஆஶ்ரயணீயர் அல்லர் என்கைக்காகவும், தன்னை ஆஶ்ர யித்தே மோக்ஷம் பெறவேண்டும் என்கைக்காகவும் இப் ப்ரபத் திக்கு இலக்கான தன்படிகளை பரத்வ ஸௌலப்ய ப்ரதிஷ்டாபக மாகப் பதத்ரயத்தாலே அருளிச் செய்கிறுன்.

---

1 கீதை—18 - 66. மாம்ஏகம் - என்னை ஒருவனையே, சரணம் வ்ரஜ - சரணமாக அடை.

இதில் 'விஶ்வரூபம்' என்கிற பதம் 'நாரங்களே அயநமாக உடையவன்' என்கிறுப்போலே 'விஶ்வத்தையும் தனக்கு ஶரீரமாக உடையவன்' என்கிறது. இத்தால் ஸர்வத்திற்கும் ஆதாரமுமாய், நியந்தாவுமாய், ஶேஷியுமாய், இவை தம்மாலே இவற்றினுடைய ஸத்தாஸ்த்திதி ப்ரவ்ருத்திகள் தானிட்ட வழக்காய், கைங்கர்யோத்தேஶ்யனுமாய், ஸ்வார்த்தமாக ஸாது பரித்ராணதிகளிலும் ப்ரவர்த்திகிறுன் என்றும், ஆஶ்ரயணீயன் ஸர்வ வ்யாப்தனுகையாலே ஆஶ்ரயிப்பார்க்கு நித்ய ஸந்நிஹிதன் என்றும் தோற்றுகிறது.

விச்வரூபசப்தார்த்தம்

ஸ்வரூப ஸந்நிதி ஸூரிகளுக்கும், முக்தருக்கும், யோகிகளுக்கும் காணலாமத்தனேயன்ரே? விகரஹ விஶிஷ்டனுனலும் பரவ்யூஹங்கள் இங்குள்ளார்க்கு இலக்காகவற்ரே என்னில்? இந்த விபூதியிலே எல்லார்க்கும் ஆஶ்ரயிக்கலாம்படி விபவ ரூபத்தால் வந்து நிற்கிற நிலையும், இதற்கு மூலமாய் ஆஶ்ரயணீயதைக்கு உறுப்பான க்ருபாதிகளும் தோற்ற 'மாம்' என்கிறுன்.

மாம் சப்தார்த்தம்

1 'समुत्थितो नील इवाचलो महान्' (ஸமுத்திதோநீலஇவாசலோமஹாந்

2 நீலவரையிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப[எந்தாய்!
கோலவராகமொன்ரூய் நிலம் கோட்டிடைக் கொண்ட

என்கிறபடியே போக்கற்று விழுந்தாரை எடுக்கைக்கு அநுகுணமான ஶ்ரீபாஶ்ரய விக்ரஹ விஶேஷத்தோடே தோற்றின என்னே நினைக்குமவனுக்கு

2 'आयासः स्मरणे कोऽस्य' (ஆயாஸ: ஸ்மரணே கோ5ஸ்ய)

என்கிறபடியே அருமை இல்லை என்று தாத்பர்யம். 'விஶ்வரூபம், மாம்' என்கிற பதங்களாலே ஜகத்ஹிதாவதாரத்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வோபயுக்த ஸர்வ கல்யாண குணகரத்வமும்

---

1 விஷ்ணுபுராணம் - 1 - 4 - 26. மஹாந் - பெரிய, நீல அசல இவ - கறுத்த மலையைப்போல, ஸமுத்தித: - உதயமானன்.

3 விஷ்ணுபுராணம் - 1 - 17 - 78. அஸ்ய - இந்தப் பகவானை, ஸ்மரணே - த்யாநம் செய்வதில், ஆயாஸ: - ச்ரமம், க: - என்ன இருக்கிறது? 2 திருவாய் - 10 - 10 - 7

ஸித்திக்கிறது. இது அநுக்த ஸமுச்சயார்த்தகமான 'ச' காரத் தாலேயாகவுமாம்.

ஆனாலும் 'விஶ்வரூபம்' என்கிற பதத்தில் சொன்ன ஸர்வ ஶரீரத்வத்தாலும், இது தன்னுலே பலிதங்களான ஸர்வோபாதா நத்வ நிமித்தத்வங்களாலும் சேதநாசேதந தோஷங்களெல்லாம் ஶங்கிக்கலாம்படியன்ரே இருப்பது? பிறக்கின்றவன்தன க்கும் மற்றும் பிறப்பாருடைய ப்ரகாரங்கள் உண்டாகாவோ? அவதாரங் களிலே ஶோகமோஹாதிகள் சொல்லவும்காண்கிலோமோ? இப் படியானுல்

1 'स्वरक्षणेऽप्यशक्तस्य को हेतुः पररक्षणे'

(ஸ்வரக்ஷணேப்யஶக்தஸ்ய கோ ஹேதுः பர ரக்ஷணே)

என்கிற சோத்யம் வாராதோ என்ன? 'அஜம்' என்று புருஷாந் தர ஸஜாதீய ஜந்மநிஷேதத்தாலே தன்னுடைய ஹேய ப்ரதிபடத் வத்தைக் காட்டுகிருன். இங்கு ஜநநத்தை நிஷேதித்தது மற்று முள்ள பாவ விகாரங்கள், ஷடூர்மி

அஜம் சப்தார்த்தம்

கள் என்ருற்போலே சொன்ன சேதநாசேதந தோஷங்கள் எல்லாத்தையும் நிஷேதிக்குமதுக்கு உபலக்ஷணமாகையாலே அசக்திரூபமான தோஷம்கழிந்து ஹேய ப்ரதிபடத்வமும் ஸித்திக்கிறது. அவதாரங்களில் சோகாதிகள் சொன்ன இடத்திற்கு அபிநயத்திலே தாத்பர்யம். இவ்வர்த்தத் தை வெளியிடுகிற

2 'मनुष्यदेहिनां चेष्टां' (மநுஷ்ய தேஹிநாம் சேஷ்டாம்)

3 'ईशन्नपि महा योगी' (ஈஶந்நபி மஹாயோகீ)

4 'तेन वञ्चयते लोकान्' (தேந வஞ்சயதே லோகாந்)

5 'நிகிலவரம்பில பல பிறப்பாய் ஒளிவரு முழுநலம்'

இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

---

1 பாரதம் – சாந்தி - 294 - 19. ஸ்வரக்ஷணேபி - தன்னைக் காப் பாற்றிக்கொள்ளுவதில் கூட, அசக்தஸ்ய - சக்தி இல்லாதவனுக்கு, பரரக்ஷணே - அயலாரை ரக்ஷிப்பதில், ஹேதுः -காரணம், கः - ஏது.

2 விஷ்ணுபுராணம் - 5 - 22 - 18. மநுஷ்யதேஹிநாம் - மனி தர்களுடைய, சேஷ்டாம் - வ்யாபாரத்தையும் .5 திருவாய் -10 - 10

3 பாரதம் - உத்யோ - 67 - 1. ஈசந்நபி மஹாயோகீ - பகவான் எல்லாவற்றையும் நியமிக்கக் கூடியவனுயிருந்தபோதிலும்.

4 பாரதம் - உத்யோக - 67 - 15. தேந-அந்தக் கார்யத்திஞல், லோகாந் - லோகங்களை, வஞ்சயதே - வஞ்சனை செய்கிருன்.

5 திருவாய் 1 - 3 - 2

இப்படி இஸ் ஸ்லோகத்தால் ஸித்தோபாய பூதனை ஸரண்யனையும் இவனுடைய வஸீகரணூர்த்தமாகஸாத்ய்மான அதிகாரிக்ருத்ய விஸேஷத்தையும் ஸ்ருதி ஸ்ம்ருதிகளில் ப்ரஸித்தி தோற்ற அநுவாத ரூபமான வாக்யத்தாலே காட்டி, பரஸ்வீகாரம் பண்ணின தன்னுடைய க்ருத்யமாக

1 'சன்ம சன்மாந்தரம் காத்து'

இத்யாதிகளில் சொல்லுகிற ஸர்வாநிஷ்ட நிவர்த்தநத்தையும் பரம புருஷார்த்த ப்ராபணத்தையும் ப்ரபந்நன் திறத்தில் வாசி தோற்ற உத்தர ஸ்லோகத்தாலே அருளிச்செய்கிறான்—

ततस्तं म्रियमाणं तु काष्ठपाषाणसंनिभम् ।
अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम् ॥

(தத: தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாண ஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ॥)

'தத:' என்கிற பதத்தில் 'ஸ்மரணம் ஹேதுவாக' என்று பொருளானால் இதற்கு ஒரு ப்ரயோஜநமில்லை. 'தம்' என்கிற அளவாலும் இது தோற்றும். இப்படியே 'ஸ்மரணத்திற்குப் பின்பு' என்று தாத்பர்யம் கொண்டாலும் மிகுதியாம். ஆகில் என் என்னில்? ஆர்த்தி விஸேஷாதிகளாலே ப்ரபத்திக்கு அநந்தரக்ஷணத்திலே ஸரீரபாதம் ப்ரஸ்துதமானாலும், இந்த ஸ்மரணத்தளவே வ்யாஜமாக ஸரீராந்தரத்தில் ப்ரவேசியாதபடி அப்போதே ரக்ஷிப்பன், இவனுக்குப் பரந்யாஸம் பண்ணின விஷயத்தில் கர்த்தவ்யஸேஷமில்லை என்று தோற்றுகைக்காக 'தத:' என்கிறது.

தத: சப்தார்த்தம்

'தம்' என்றது க்ருதக்ருத்யனுய் சாதகவ்ருத்தியானதனக்கு வரும்மரணத்தை ப்ரியாதிதியைப் போலேபார்த்திருக்குமவனே என்றபடி.

தம் சப்தார்த்தம்

'மத்பக்தம்' என்றது நம்மையே நிரதிஸய போக்யமாக உகந்து பற்றினவனே என்கிறது. 'தம், மத்பக்தம்' என்கிற இரண்டு பதத்தாலுமாக அநந்யோபாயனுமாய் அநந்ய ப்ரயோஜநனுமானவனே என்கிறான். இத்தாலே ஐஸ்வர்ய கைவல்யார்த்த

மத்பக்த சப்தார்த்தம்

1 திருவாய் — 3 - 7 - 7.

ப்ரபந்நரையும், மோக்ஷார்த்த உபாஸகரையும் வ்யவச்சேதிக் கிறது. காருணிகனான ஈச்வரன் எல்லாருக்கும் மோக்ஷம் கொடுக்க ப்ராப்தனேயாகிலும் அநாதி கர்ம ப்ரவாஹ விஷமித ரான அதிகாரிகளுக்கு நிர்வ்யாஜமாக மோக்ஷம் கொடுத்தால், கர்மாநு ரூப பலப்ரதாயித்வ நியமம் குலையும்; அது குலையாமைக் காக இப் பதத்வயத்தில் சொன்ன ஆகாரமுடையார்க்கு மோக்ஷம் என்கிறது. காருண்யம் ஒன்றையும் ப்ரதானமாக்கி, ஶாஸ்த்ர ஸித்த ஸ்வதந்த்ர வ்யவஸ்த்தையைக் குலைக்கப் பார்த்தால் ஸத்ய ஸங்கல்பதை இல்லாமையாலே இஸ் ஸ்வாதந்த்ர்யமும் அழிந்து, நிரீச்வரவாதமும் ப்ரஸங்கிக்கும். இப்படியே ஸர்வரும் ஈச்வர க்ருபையாலே நித்ய முக்தராகத் தட்டென்ன ? என்கிற சோத்ய மும் பரிஹ்ருதம். ஜகத் காரணத்வ மோக்ஷ ப்ரதத்வாதிகள் இல்லாதபோது ஒருவனே விசேஷித்து ஈச்வரன் என்கைக்கு ப்ர மாணம் இல்லையிறே. இங்கு 'மத்பக்தம்' என்கிற பதம் பக்தி யோக நிஷ்ட்டனைச் சொல்லுகை லகூபாய உபதேச ப்ரகரணத் திற்கும், ததநுகுணங்களான பூர்வ ச்லோகத்தில் பதங்களுக்கும், இச் ச்லோகத்தில் அந்திமதசையில் 'காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம்' என்கிறதற்கும் அநுகுணமாகாது. பச்சாத் பாவி யாய்க் கத்யந்தரமுண்டான ஒரு பதத்தைக் கொண்டு பூர்வ பாவி யான ப்ரகரணத்தையும் ஸ்வவாக்யத்தில் அநேகபத ஸ்வாரஸ் யத்தையும் பாதிக்கை ந்யாய விருத்தம்.

இவனுக்கு இனி ஜந்மாந்தராதிகளில்லை.

1 'மரணமானால்'

என்கிறபடியே ப்ராரப்தசரீரம் விடுமளவே ப்ராப்திக்கு வேண் டுவது என்று தோற்றுகைக்காக 'ம்ரியமாணம்' என்கிறான்.

ம்ரியமாணம் து சப்தார்த்தம்

'மரித்தவனே' என்னுதே 'ம்ரியமா ணனே நயிப்பிப்பேன்' என்கிற இத்தாலே தான் விண்ணுலகம் தர விரைகின்றபடியைத் தோற்றுவிக்கிறான். 'து' என்கிறது அல்லாதார் மரணம் போலே இங்குள்ளார்க்கும் லோகாந்தரத்தி லுள்ளார்க்கும் இவன் மோச்யனும்படியன்றிக்கே ஸ்ரீவைகுண்ட நாதனும், ஸூரிகளும், முக்தரும் நல் விருந்து வருகிறதென்று வீடு திருத்தும்படியாய், இங்கும் க்ருதக்ருத்யரானஸ்ரீவைஷ்ண

1 திருவாய்—9 - 10 5.

வரெல்லாரும் நாமும்இது பெற்றிலோ(மே)ம் என்று நாக்கு நீளும் படியான நல்லதோர் அவப்ருதம் இது என்று இம்மரணத்தினு டைய மஹோத்ஸவத்வத்தையும், இதற்கு ப்ரஸ்த தேஹ கால நிமித்தங்கள் நிரூபிக்க வேண்டா, ஆயுரவஸாநத்தளவிலே இவ னுக்குப் பல ஸித்தி என்னுமிடத்தையும் தோற்றுவிக்கிறது.

' காஷ்ட்டபாஷாணஸந்நிபம் ' என்கிறது முன்புற்ற கார்ப் பண்யம்போலே உபாயத்திற்கு உறுப்பாகிறதன்று. பின்புற்றஅர்ச் சிராதி கதி போலே பலகோடி கடிதமாய் வருகிறதுமன்று. இவ னுக்கு த்வயாநுஸந்தாநாதிகளைப் போலே இங்குற்ற புருஷார்த்த விஸேஷமாயிருப்பதும் ஒன்றன்று.

காஷ்ட்டபாஷாணஸந்நிப சப்தார்த்தம்

இப்படியிருக்க இவனுடைய அசித்கல்பதையைச் சொல்லுகிற இது பூர்வோத்தரங்களுக்கு அநுபயுக்தமாய், இவ்வளவன்றிக்கே ப்ரபந்நனுக்கு நிந்தையுமாகாதோ என்னில்? இது

1 ' அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் ' என்கிறபடியே உபாயத்தினுடைய ஸ்வயத்ந ஸாத்ய அந்திமப்ரத் யய நைரபேக்ஷ்யத்தையும், 2' ஸந்தாம் ' இத்யாதிகளிற்படியே ஜுகுப்ஸாவிஷய தஸையிலே ஸரண்யனுடைய வாத்ஸல்யவிசே ஷத்தையும், ஒரு ப்ரகாஸ(மு)மற்றுக் கிடக்கிற இவனை

3 ' ஸ்ரீபவ்தவ்தவேஶ: ' (ப்ரதீபவத் ஆவேஸ:)

என்கிறபடியே ஒரு காலே ஸர்வஜ்ஞனுக்குகிற ஆஸ்சர்யசக்தி யோகத்தையும், ப்ரபந்நன் இப்படித் தீர்க்க நித்ரை பண்ணும் போது ஸர்வ வித பந்துவான அந்தர்யாமியையொழிய மற்றெ ருவரும் தட்டி எழுப்பமாட்டார்கள் என்னும் அர்த்தத்தையும் விஸ்தரித்து,

4 ' காலும் கையும் விதிர் விதிர்த்தேறிக்கண் உறக்க மதாவதன் முன்னம் .....வேலை வண்ணனை '

மேவ வேண்டும் என்று முமுக்ஷுக்களுக்கு ஸரண்ய வஸீகரணத் தில் விரைதல் பிறப்பிக்கைக்காகவும் இப்பதம் ப்ரயுக்தமாகிறதா கையாலே இது உபயுக்தமாய் உபாயாதிகளுடைய ஸ்துதியுமாகி றது.

---

1 4 பெரியா திருமொழி - 4-10 - 1,4-5-4. 2 தைத்-ஆர-3 43

3 சாரீரகஸூத் -4-4-15. தீபம்ஓரிடத்தில் இருந்தாலும்தன்ஒளி யால்மற்றஇடத்திலும்பரவுவதைப்போல், ஜீவனும் ஓர் இடத்தில்இருந் தாலும்தன் தாமபூத ஜ்ஞாநத்தால் வேறுசரீரங்களிலும்பரவுவதுண்டு

ஆனாலும் ஒரு த்ருஷ்டாந்தமே அமையாதோ என்னில்? ஸாதர்ம்யத்தில் அதிஸயம் தோற்றுகைகாகப் பல த்ருஷ்டாந்தம சொல்லக்கடவது என்று ஆலங்காரிகர் சொன்னார்கள். இவன சைதந்யாஸ்ரயமான அஹமர்த்தமாயிருந்தானேயாகிலும் அப போதையில் அஜ்ஞாநத்தை நிரூபித்துப் பார்த்தால் காஷ்ட்ட பாஷாணங்களினுடைய அந்யோந்ய வைஷம்யத்தளவும் போருமித தனே அவற்றுக்கும் இவனுக்கும் உள்ள வைஷம்யம் என்று கருத்தாகவுமாம். இப்படியானால்

1 ' तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते '

(ததா ப்ரலீநஸ்தமஸி மூடயோநிஷு ஜாயதே) என்றும்,

2 ' यं यं वापि स्मरन् भावम् '

(யம் யம் வாபி ஸ்மரந் பாவம்) என்றும் சொல்லுகிற ப்ரமாணங்கள் சேரும்படி என் என்னில் ? அவை ஸாமாந்ய விஷயம, இது விஸேஷ விஷயம்.

3 ' नष्टस्मृतिरपि परित्यजन् देहम् '

(நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜந் தேஹம்)

4 ' எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கேயும்
நான் உன்னை நினைக்கமாட்டேன் '

இத்யாதிகளுக்கும் இதுவே நிர்வாஹம்.

5 ' शरीरपात समये तु केवलं मदीययैव दयया अतिप्रबुद्धः '

(ஸரீரபாத ஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்தः) என்றது ப்ரபந்நர் தங்களிலே சிலரைப் பற்ற எனறு சிலர் நிர்வ

ஹிப்பர்கள். அங்ஙனன்றிக்கே

---

1 கீதை - 14 - 15. ததா - அப்படியே, தமஸி - தமோ குணம் வ்ருத்தியடைந்திருக்கும்பொழுது, ப்ரலீந -மரணமடைந்தவன், மூடயோநிஷு-ஜ்ஞாநமில்லாத நாய்முதலிய ஜாதிகளில், ஜாயதே-பிறக்கிறான்.

2 கீதை - 8 - 6. (மரண காலத்தில்) யம்யம்வாபி - எந்தெந்த, பாவம் - ஸ்வபாவத்தை, ஸ்மரந்-நினைத்துகொண்டு, (மரணம் அடைகிறானே அந்த ஸ்வபாவத்தையுடைய சரீரத்தை அடைகிறான்)

3 வராஹ—நஷ்டஸ்ம்ருதிரபி -நினைவுச் சக்தியை இழந்தானும், தேஹம் - தேஹத்தை, பரித்யஜந் - விட்டு.

4 பெரியா திருமொழி—4 - 10 - 1.

5 சரணாகதி கத்யம்—மதீயயைவ தயயா - என்னுடைய க்ருபையினாலேயே, அதிப்ரபுத்தः - விசதமான ஜ்ஞாநமுடையவனாய்,

1 ' काष्ठपाषाणसंनिभम् '(காஷ்ட்ட பாஷாணஸந்நிபம்)
2 ' नष्टस्मृतिरपि परित्यजन् देहम् '(நஷ்டஸ்ம்ருதிரபிபரித்யஜந்தேஹம்) இத்யாதிகளுக்கு ஸ்வயத்ந ஸாத்ய அந்திம ப்ரத்யய நிவ்ருத்தியி லே தாத்பர்யம்,
3 ' मदीयय्यैव दयया अतिप्रबुद्धः ' (மதீயயைவ தயயா அதிப்ரபுத்தः) இத்யாதி வாகயம, ஸ்வயத்நமன்றிக்கேயிருக்க பகவத் க்ருபா மாத்ரத்தாலே அந்திம ப்ரத்யய விமோஷம் ப்ரபந்நர் எல் லார்க்கும் வருகிறபடியைக் காட்டுகிறது என்று சிலர் நிர்வஹிப் பார்கள்.

4 ' यो वेत्ति युगपत् सर्वं प्रत्यक्षेण सदा स्वतः '
(யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வதः)
என்னும்படியாயிருகிற ஈச்வரன் க்ஷேத்ரஜ்ஞரைப்போலே மறப் பது ஒரு காலமும நினைப்பது ஒரு காலமுமின்றிக்கே இருக்க இப் போது' அஹம் ஸ்மராமி' என்பானேன் என்னில் ?ப்ரபந்நனுக்கு அப்போது ஸ்வயத்நத்தால் ஸ்மர ணம் இல்லையேயானாலும் இ ந் த ஸ்மரணம் முதலாயாதல் இதற்கு மேலேயாதலுள்ள பலமெல்லாம் பரஸ்வீகாரம் பண்ணி, ஸ்வீக் ருத நிர்வஹணக்ஷமனுமான தன்னுலே ஸித்திக்கும் என்று தோற் றுகைக்காகத் தன்னுடைய ஸானுக்ரஹ புத்திவிமோஷத்தை ஸ்ம ரண மப்தத்தாலே உபசரிக்கிறுன். இங்குற்ற வார்த்தமாந வ்ய பதேசத்தாலே இவ்வநுக்ரஹத்திற்குப் பின்பு ஒரு நிகரஹம் வா ராது எனனுமிடம தோற்றுகிறது. இதில் உத்தமனே அமைந் திருக்க, சரம ச்லோகத்தில் போலே மிகுதியான 'அஹம்' என் கிற பததாலே ஸ்வாதந்த்ர்யமடியாக ஸர்வ க்ஷேத்ரஜ்ஞர் திறத் திலும் விபரீத கர்மாநுரூபமான நிக்ரஹததில் பரவருத்தஞய் லீலா ரஸத்தை அநுபவிததுப் போந்த தான் காருண்யமடியாக

அஹம் ஸ்மராமி சப்தார்த்தம்

1, 2, 212 - ம் பக்கம் பாக்க

3 சரணாகதி கத்யம் மதீயயைவ - என்னுடையதேயான, தயயா- க்ருபையினால், அதிப்ரபுத்தः - நல்ல ஜ்ஞாநமுடையவனுய்

4ஸ்ரீ ந்யாய தத்வம் — யः - எந்தப் பகவான், ஸ்வதः - தாமே, ஸர்வம் - எல்லா வஸ்துக்களையும், யுகபத் - ஒரே காலதததில், ஸதா - எப்பொழுதும், ப்ரத்யக்ஷேண - ப்ரத்யக்ஷமாக, வேத்தி - அறிந்து கொள்ளுகிறாரோ.

வ்யாஜ விமோஷாநுகுணநுக்ரஹ ப்ரவ்ருத்தனுய்ஆஸ்ரித ரக்ஷண ரஸததை அநுபவிகக நினைததபோதே மோக்ஷம கொடுகக வல்லபடியையும, அப்போது விலக்கவல்லார் இல்லாதபடியையும, தான் கட்டின காலாதிகளையொழியத் தனககு வேறொரு ஸஹகாரி வேண்டாதபடியையும் தோறறுவிககிறன.

'காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம்', 'அஹம் ஸ்மராமி' என்கிற இரண்டாலும்

1 'मां ध्याति पुरुषव्याघ्रः ततो मे तद्गतं मनः'

(மாம் த்யாதி புருஷவ்யாக்ர: ததோ மே தத்கதம் மந:'

என்கிற ப்ரகாரததைக் கழிகிறன.

'மத் பக்தம்', 'அஹம் ஸ்மராமி' என்கிற இத்தால் நித்யாநுபவம் பெறுகைககு ஒரு நினைவு பண்ணினவனைப் பற்ற நாமும் நிதயாநுபவம் கொடுககைக்கு ஒரு நினைவைப் பண்ணுவு(வோ)தோம் என்றதாயிற்று.

இப்படி

2 'தாய் நினைந்த கன்றேயொக்க என்னையும் தன்னையே நினைக்கச்செய்து தான் எனக்காய் நினைந்து அருள செய்யும் அப்பன்'

என்னும்படியான தன் நினைவு பரம புருஷார்த்தபர்யந்தமாகிறபடியைப் பற்ற 'நயாமி பரமாம் கதிம்' என்கிறன. 'நயாமி' என்கிறதற்குச்சேற்றிலே விழுந்த சிறு பசல்களை எடுகக விழுந்த பிதாவைப் போலே இவனுடைய தேஹத்துக்குள்ளே ஹார்ததனுய் நிற்கிற நான் தானே அபராக்ருத பாயங்காரோஹண பர்யந்தமாக நடத்துவன், நடுவு வரும் அர்ச்சிராதிகளும் இவனை எதிர் கொண்டு ஸத்கரித்துத தரம பெறுகைககு நாம அடைத்த நிலைப் பேறு என்று தாதபர்யம். கீழ்சசொன்னபரபததி ஸகலபல ஸாதநமாகவற்ருயிருந்ததேயாகிலும் அநந்யப்ரயோஜநனை இவனுககு ப்ரயோஜநாநதரங்க

பரமாம் கதிம் விவரணம்

1 பார - சாந்தி - 46 - 11 புருஷ வ்யாக்ர: - புருஷ ச்ரேஷ்டரான பீஷ்மர், மாம் - என்னை, த்யாதி - நினைக்கிறார், தத: - ஆகையினால், மே என்னுடைய, மந: - மனது, தத்கதம்-அவரிடம் சென்றிருக் கிறது.

2 பெரிய திருமொழி - 7 - 3 - 2

கொடுத்தல் மதுவித்யாதிகளில்போலே ஐஸ்வர்யாத்மாநுபவ ரூப க்ஷுத்ர பல வ்யவஹிதமாக மோக்ஷம் கொடுப்பு(த்)தல்செய் யேன், அவ்யவஹிதமாகப் பரமபுருஷார்த்தத்தை அடைவிப்பேன் என்கிற விமோக்ஷம் தோற்ற ' பரமாம் கதிம் ' என்கிறான். இங்கு ' கதிம் ' என்கிறது ப்ராப்யத்தை என்லபடி. 'பரமாம் கதிம் ' என்கிறது

1 ' मुक्तानां परमा गतिः ' (முக்தாநாம் பரமா கதி:)

என்கிறபடியே பரமப்ராப்யனான தன்னையாதல், தன் விஷயத்தில் பரிபூர்ணநுபவத்தையாதல், அவ்வநுபவ பரீவாஹமான கைங் கர்ய விமோக்ஷத்தையாதல் சொல்லுகிறது. இவற்றில் ஒன்றைச் சொன்னலும் மற்றுள்ளவையும் சொல்லிற்றாய்விடும். இ தி ல் ' நயாமி ' என்கிற இத்தாலே தன்னுடைய ப்ராபகத்வமும், 'பர மாம் கதிம் ' எனகிறவித்தாலே தன்னுடைய ப்ராப்யத்வமும் சொல்லிற்றாகை உசிததமம். 'பரமையான கதி' என்று அர்ச் சிராதிகதியையாதல் பரமபதத்தையாதல் சொல்லுவார்க்கு முடி வில் அவனுடைய ப்ராப்தியிலே தாத்பர்யம்.

இப்படி இரண்டு श्लोகத்தாலும் இச்சேதநன் முமுக்ஷு வாயும் முக்தனையும் இரண்டு விபூதியிலும் பெறும் பேறு சொல் லிற்றாயிற்று 'நயாமி ' என்கிறவி श्लोकத்வய समुच्चितार्त्थம் தில் பரஸ்மைபதத்தாலே ஸ்வதः ஸர்வசேஷியான தன்னுடைய ஆஸ்ரித ப்ரயோஜநப்ராதாந்யாபி ஸந்தியைத் தோற்றுவிக்கிறான். அசித்தினுடையவும் அசித்ப்ராய ருடையவும் வ்யாபாரம் ஸ்வப்ரயோஜந பரப்ரயோஜநங்களிரண் டையும் உத்தேசியாதே பரப்ரயோஜநார்த்தமாயிருக்கும். ஜ்ஞா தாவான அவஸ்த்தையில் ப்ரயோஜநாந்தரபரன்பரப்ரயோஜநார்த் தமாக ப்ரவர்த்திக்கும் போது ஸ்வப்ரயோஜநத்தை உத்தேச்ய மாகக் கொண்டு நடக்கும். அநந்ய ப்ரயோஜநனான ஜ்ஞாதா ஸ்வப்ரயோஜநத்திலும் பரப்ரயோஜந உத்தேசேந ப்ரவர்த்திக்கும். நிருபாதிக ஸர்வ சேஷியான ஸர்வேச்வரன்

2 ' स्वमुद्दिश्य '(ஸ்வமுத்திச்ய)

என்கிறபடியே பரப்ரயோஜநத்திலும் ஸ்வப்ரயோஜநார்த்தமாக

1 ஸஹஸ்ரநாமம் 2 ஸ்ரீரங்கராஜ-2-87. (பகவான் சேதநாசேதந ஸகல வஸ்துக்களையும்) ஸ்வமுத்திச்ய - தன்னுடைய ப்ரயோஜனத்திற்காக

ப்ரவ்ருத்தித்தாலும் இவனுடைய ஆச்ரித பாரதந்த்ர்ய ப்ரகாரத்தைச் சொல்லப் பார்த்தால்

1 ' वरद सकलमेतत् संश्रिताय चकर्थ '

(வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த)

என்கிறபடியே ஸ்வப்ரயோஜநத்திலும் பரப்ரயோஜநார்த்தமாகப் ப்ரவர்த்திக்கும் என்னலாம், இவ்வர்த்தங்களை ' காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம் ', ' ஸ்மர்த்தா ', ' மத் பக்தம் ', அஹம் ஸ்மராமி ', ' நயாமி ' இத்யாதிகளிலே அநுஸந்திப்பது.

வராஹ சரமச்லோகார்த்த ஸங்க்ரஹப் பாட்டு

2 இடம் பெற்றார் எல்லாம் என் உடலாய் நிற்க
இடர்ப்பிறப்பொன்றிவையில்லா என்னை அன்பால் *
அ(தி)டம் பற்றுமி(ம)வனென்று நினைந்தான் யாவன்
அவனுவி சரியும்போது அறிவு மாறி *
உடம்பில் தா(ரு)ன் உபலம்போல் கிடக்க, நானே
உய்யும் வகை நினைந்து * உயர்ந்த கதியால் என்றன்
இடம் பெற்று என்னுடன் வாழவடுப்பன் என்ற
எம்பெருமான் அருள் பெற்று மருள் செற்றேமே. 21

1 ஸ்ரீ வரதராஜஸ்தவம்—63- வரத - வரத்தைக் கொடுக்கும் ஓ! வரதனே, ஏதத் ஸகலம் - இவை எல்லாவற்றையும், ஸம்ச்ரிதார்த்தம் - ஆச்ரிதர்களுக்காக, சகர்த்த - செய்தீர்.

2 இடம் பெற்றார் எல்லாம்—இந்த லோகத்தில் இடம்பெற்றவர்கள் எல்லாம், அதாவது எல்லாச் சேதநாசேதநங்களும், என்னுடலாய்நிற்க - எனக்குச் சரீரமாய் இருக்க, இடர் - ஆபத்தும், பிறப்பு - ஜன்மமும், இவை ஒன்றும், இல்லா - இல்லாத என்னை, அன்பால் - பக்தியோடே, இவன் - இந்தப் பகவான், அடம் - தீமைக்கு, பற்றும் - அவலம்பகமாவான், என்று - என்று எண்ணி, யாவன் - எவனொருவன், நினைந்தான் - நினைத்தானே, அவன் ஆவி - அவனுடைய ப்ராணன், சரியும்போது - தேஹத்தைவிட்டுப் போகும்போது, அறிவுமாறி - ஜ்ஞாநம் மாறுபட்டு, உடம்பில் - தேஹத்தில், தான் - தான், [தாரு-கட்டை] உபலம் போல் கிடக்க - கல்லைப்போல் இருக்க, நானே - ஸர்வ ரக்ஷகனான நானே, உய்யும் வகை - அவன் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தை, நினைந்து-எண்ணி, உயர்ந்த - உத்க்ருஷ்டமாகிய, கதியால் - அர்ச்சிராதி மார்க்கத்தாலே, என்தன் - என்னுடைய, இடம் - ஸ்தாநமாகிய ஸ்ரீ வைகுண்டத்தை பெற்று - அடைந்து, என்னுடன் கூட, வாழ - வாழும்படி, எடுப்பன் - (உயர) எடுப்பேன், என்ற - என்று உரைத்த, எம்பெருமான் - பகவா

1 இரண்டுரையாத நம் ஏனம் உரைத்தஉரையிரண்டின் *
திரணட பொருள்கள் தெளிந்து அடி சூடினம் * திண்ணிருளால்
சுருண்ட நஞ்ஞானச் சுடரொளி சுற்றும் பரப்பதன் முன் *
புரண்டது நம் வினை, போமிடம் பார்த்து இனிப்போமளவே. 22

2 மலையும் குலையும் என்றெண்ணியும் வன்பெரும் புண்திரங்கித்*
தலையும் வெளுத்த பின் தானே அழிய இசைகின்றிலீர் *
அலையும் கடல் கொண்ட வையம் அளித்தவன் மெய்யருளே *
நிலையென்று நாடி நிலைநின்ற பொய்ம்மதி நீக்குமினே. 23

னுடைய, அருள் பெற்று - கடாக்ஷத்தைப் பெற்று, மருள் - அஜ்ஞாநத்தை, செற்றேம் - நீக்கினேம். 21

1 இரண்டு - இரண்டுவார்த்தை, உரையாத - சொல்லாத நம், ஏனம் உரைத்த - ஸ்ரீ வராஹப் பெருமான் கூறிய, உரை இரண்டின் - இரண்டு ச்லோகத்தின், திரண்ட - ஸாரமான, பொருள்கள் - அர்த்தங்களை, தெளிந்து - நன்றாய் அறிந்துகொண்டு, அடி சூடினம் - பகவானுடைய திருவடிகளை சிரஸா தரிக்கும்படியான பாக்யம்பெற்றோம், திண் - த்ருடமான, இருளால் - அஜ்ஞாநத்தால், சுருண்ட - சுருங்கிய, நம் - நம்முடைய, ஞானச்சுடர் - ஜ்ஞாநமாகிற தேஜஸ்ஸின், ஒளி - ப்ரகாசம், சுற்றும் - எல்லா இடத்திலும், பரப்பதன் முன் - பரவுவதற்கு முன்பு, நம் - நம்முடைய, வினை - புண்ய பாபரூபங்களான கர்மங்கள், புரண்டது - இடம் விட்டு மாறிவிட்டன, இனி - இதற்குப்பிறகு, போமிடம் - போகவேண்டிய இடத்தை, பார்த்து, போமளவே - போகிற அளவே, உள்ளது - இருக்கிறது. 22

2 மலையும் - மஹாபர்வதங்களும், குலையும் - உருமாறிவிடும், என்று, எண்ணியும் - அறிந்திருந்தும், வன் - த்ருடமாகிய, பெரும் - பெரிய, புண் - வ்ரணங்கள், அதாவது அவை நிறைந்த சரீரமானது, திரங்கி - மடிப்பு விழுந்து, தலை - தலை மயிர்கள், வெளுத்தபின் - நரைத்துப் போன பிறகும், தானே அழிய - சரீரமே நாசமடைய, இசைகின்றிலீர் - அங்கீகரிக்காதவர்களே! அலையும் - அலை வீசா நின்ற, கடல் - ஸமுத்திரம், கொண்ட - இழுத்துக்கொண்ட, வையம் - பூமியை, அளித்தவன் - காப்பாற்றின ஸ்ரீ வராஹ நாயனுடைய, மெய் - ஸத்யமான, அருளே - க்ருபையே, அதாவது க்ருபையால் உபதேசிக்கப்பட்ட ப்ரபத்தியே, நிலை என்று - ஸ்திரமான உபாயம் என்று, நாடி - அறிந்து, நிலை நின்ற - நிலைபெற்றுள்ள, பொய்ம்மதி - கெட்ட ஜ்ஞாநத்தை, அதாவது வேறுவிதமான அறிவை, நீக்குமின் - போக்கிக் கொள்ளுங்கள். 23

स्वस्थं चित्तं सुखमपि वपुः धातुसाम्यं च कृत्वा
स्वात्मानं च स्मृतिपदमजं विश्वरूपं वितन्वन् ।
काले प्राप्ते करणविलयात् काष्ठपाषाणकल्पान्
नाथः पोत्री नयतु कृपया नाथितः स्वं पदं नः ॥

इति कवितार्किक सिंहस्य सर्वतन्त्र स्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री र ह स्य शि खा म णिः सं पू र्णः
॥ श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

ஸ்வஸ்த்தம் சித்தம் ஸுகமபி வபுः தாதுஸாம்யம் ச க்ருத்வா
ஸ்வாத்மாநம் ச ஸ்ம்ருதிபதமஜம் விஸ்வரூபம் விதந்வந் ।
காலே ப்ராப்தே கரண விலயாத் காஷ்ட்டபாஷாணகல்பாந்
நாதः போத்ரீ நயது க்ருபயா நாதிதः ஸ்வம் பதம் நः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரருமான
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்
ஸ்ரீரஹஸ்ய சிகாமணிமுற்றிற்று

போத்ரீ நாதः - பூவராஹப் பெருமாள், நாதிதः - யாசிக்கப்பட்டவனுய், அதாவது சரணுகதிக்கு இலக்கானவனுய், சித்தம் -மனத்தை, ஸ்வஸ்த்தம் - நல்ல நிலையிலுள்ளதாகவும், வபுரபி - சரீரத்தை, ஸுகம்- ஸௌக்கியமுள்ளதாயும், தாதுஸாம்யம் ச - தாதுக்கள் ஒத்து (ஸமமாய்) இருப்பவையாகவும், க்ருத்வா - செய்து, அஜம் - பிறப்பில்லாதவனுய், விச்வரூபம் - எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டவனுன, ஸ்வாத்மாநம் ச - தன்னையும் ஸ்ம்ருதிபதம் - நினைவிற்கு இலக்காக விதந்வந் - செய்பவனுய், காலே ப்ராப்தே - மரண காலம் வந்தபோது, கரணவிலயாத் - இந்திரியங்கள் நிலைகுலைந்ததால், காஷ்ட்ட பாஷாண கல்பாந் - கட்டையையும் கல்லையும் போல் கிடப்பவர்களான, நः - நம்மை, க்ருபயா - க்ருபையினுல், ஸ்வம்பதம் - தன்னுடைய இடமான ஸ்ரீவைகுண்டத்தை, நயது - அடைவிக்கட்டும்.

ஸ்ரீ அஞ்ஜலிவைபவ விஷயமாய்ச்

சில விசேஷக் குறிப்புக்கள்

இந்த ரஹஸ்யத்தில் ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்திருக்கும் ஸ்தோத்ரத்தில் 28-ம் சுலோகத்திற்கு விஸ்தரமான வ்யாக்யான மும், அஞ்ஜலியின் ப்ரபாவமும், அது பரம்பரயா மோக்ஷத்திற்குக் கார ணமாயிருப்பதும், அந்த முத்ரை ஆகிஞ்சந்யத்தைத் தெரிவிப்பதி னல் ப்ரபத்தி இங்கு விவக்ஷிக்கப்பட்டு ஸாக்ஷாத்தாகவே மோக்ஷத் திற்குக் காரணமாயிருப்பதும் நிரூபிக்கப்படுகின்றன.

இதில் அவதாரிகா ரூபமாய் இதற்கு முந்தியதான 'தவாம்ருதஸ் யந்தினி' என்கிற சுலோகத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டு மேலே இந்தச்சுலோகத்தின் பதங்களுக்கு விரிவான அர்த்தம்அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

பெரிய முதலியார் என்று இதில் ஸ்ரீ ஆளவந்தாரை வ்யவஹரித் திருக்கிறார்.

ஸ்ரீ ரஹஸ்ய ரக்ஷையில் (அதாவது ஸ்ரீ ஸ்தோத்திரத்திற்கு ஸம்ஸ் க்ருதத்தில் வ்யாக்யானமான ஸ்ரீ ஸூக்தியில்) 6 ம் சுலோக வ்யாக் யானத்தின் அவதாரிகா ப்ரகரணத்தில் இந்த ஸ்தோத்ரம் முழுவதும் ஆழ்வார்கள் ப்ரத்யக்ஷீகரித்து வெளியிட்டருளிய சந்தமிகு தமிழ் மறை களின் அனுஸந்தாந பரீவாஹமாய்ப் பெரிய முதலியாரால் அருளிச் செய்யப்பட்டதாயிருக்கும் என்று அருளிச் செய்திருக்கிறார்.

இந்த ச்லோகத்திற்கு மூலப் பாட்டு—திருவாய் - 1 - 3 - 8

நாளு நின்றடும் நம பழமையம்கொடு வினை உடனே
மாளும் * ஓர் குறைவில்லை, மனனக மலமறக் கழுவி *
நாளும் நம் திருவுடை அடிகள்தம் நலம் கழல்வணங்கி*
மாளும் ஓர் இடத்திலும் வணக்கொடு மாள்வதுவலமே.

"ச்ரிய:பதியான எம்பெருமான் திருவடிகளே அடைவதற்கு அந்த ச்ரிய:பதியான எம்பெருமானே உபாயம்" என்கிற ஓர் அர்த்த விசே ஷத்தையே ப்ரதிபாதிப்பதாக ஸ்வாமி தேசிகன் தாமே நிஷ்கர்ஷித் துள்ள திருவாய்மொழியில், பகவானுடைய ஸேவா யோக்யத்வத்தை ஸ்தாபிக்கும் முதல் பத்தில், அவனுடைய ஸுலபத்வத்தை நிரூபிக் கும் மூன்றும் திருவாய்மொழியில், பகவானுடைய ஸர்வகாலாச்ரயத் வம் என்கிற குணத்தை வெளியிடுகிறது இப்பாட்டு.

இதின் திருவாருயிரப்படியில் (அதாவது ஸ்ரீஆளவந்தார் சரமதிரு மேனி முன்பே எம்பெருமானார் செய்தருளிய மூன்று ப்ரதிஜ்ஞைகளில் ஒன்றாகிய திருவாய்மொழிக்கு வ்யாக்யானமிடவேண்டிய கைங்கர் யத்தைத் தாம் நேரே செய்தருளாமல் அந்த ஆழ்வாரால் யோக தசை

யில் உபதேசிக்கும்படியான பாக்யம் பெற்ற ஸ்ரீ நாதமுனிகள் திருவம் சத்தில் அவதரித்தவரும், தம்முடைய ஜ்ஞாந புத்திரருமானதிருக்குரு கைப்பிரான் பிள்ளானைச் செய்யும்படி நியமிக்க, அவரும் எம்பெருமானு ருடைய காலக்ஷேபத்தில் தாம் கேட்டருளிய அர்த்தவிசேஷங்களைஸங் க்ரஹமாய் மணிப்ரவாள நடையில் வெளியிடும் க்ரந்தத்தில்)

' இப்படி அநந்ய ப்ரயோஜநராய்க் கொண்டு நம் திருவுடை அடிகள்தம் நலம் கழல் வணங்கவே ... ஒரு குறைவில்லை, நாம் அபேக்ஷித்தபடி எம்பெருமானை அநுபவிக்கப் பெறலாம், இப்படி சிர காலம் கூட பலவத் ஸாத்யமான பக்தியோகத்தை ஸாதிக கைக்குக்காலமும் பலமுமின்றியே அந்திமதஶாபந்நராஞர்இழந்து போமத்தனையோ என்னில் ? அந்த அந்திம தஶையிலேயாகிலும் ஓர் அஞ்ஜலி மாத்ரமாதல், ஓர் உக்தி மாத்ரமாதல் ஒரு ஸ்ம்ருதி மாத்ரமாதல் அவன் திறத்திலே செய்ய,அந்தப் பகதி யோகத்திலும் நன்று என்கிறார் '
என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எப்படி ஸ்வாமி தேசிகனுக்கு அஸாதாரணமாய் உப ய வேதாந்தாசார்யர் என்கிற பிருது எம்பெருமானால் வழங்கப்பட்டதோ அதைப்போல உபய வேதாந்த ப்ரவர்த்தக ஸிம்ஹாஸநாதிபத்யத்தில் எம்பெருமானாரால் மூர்த்தாபிஷிக்தரானவர் திருக்குருகைப்பிரான் பிள் ளான். எம்பெருமானுருடைய மற்றசிஷ்யர்கள்ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸநத் தில் மட்டும் நியமிக்கப்பட்டவர்கள், ஆச்சான் ஸ்ரீ பாஷ்ய ஸிம்ஹாஸ நாதிபத்யத்திலும் ரஹஸ்ய ஸிம்ஹாஸநாதிபத்யத்திலும் நியமிக்கப் பட்டவர்.

இந்தத் திருவாருயிரப்படியில் ' பக்தியோகத்திலும் நன்று என்கி ஞர் ' என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதினால் அப்படிப்பட்ட உபாயம் ப்ரபத்தியாகவே இருக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றி இந்தச் சுலோகத்தின் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்திலும், இந்த ரஹஸ்யத்தில் மணிப்ரவாள வ்யாக்யாநத்திலும் இது எப்படி ப்ரபத்தியைக் குறிக்கும் என்கிற அம்சம் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ஸ்லோகம் திருவாய்மொழிப்பாட்டை நிரூபிக்கும் படி

த்வதங்க்ரிமுத்திஸ்ய	நம் திருவுடை அடிகள் நலம் கழல்
கதாபி கேநசித் யதா	மனனக மலமறக் கழுவி
ததா வாபி ஸக்ருத்	மாளும் இடத்திலும் ஓர் வணக்
க்ருதோஞ்ஜலி:	கொடு மாள்வது

ததைவ முஷ்ணுதி	உடனே மாளும்
அஸுபாநி அஸேஷந:	நாம் நின்றுஅடும் நம் பழமைஅம் கொடு விளை
ஸுபாநி புஷ்ணாதி	வலம்
ந ஜாது ஹீயதே	ஓர் குறைவில்லை

சுலோகத்தின் பதங்களுக்கு அர்த்தம் நிருபித்தருளியதுடன் நின்று விடாமல் மேலே

' இவ்வஞ்ஜலி
'நோற்ற நோன்பிலேன்', புகலொன்றில்லா அடியேன் ' இத்யாதிகளிற்படியே ஆகிஞ்சந்ய அநந்யகதித்வாதி யோகத்தாலே ப்ரபத்த்யதிகாரியாய்ப் பரந்யாஸம் பண்ணுகிறவனுடைய ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபாரத்தில் கை முடங்குகிறபடியைக் காட்டுகிற முத்ரையாய் நின்றபோது

' तावदार्तितथा वांछा तावन्मोहस्तथाऽसुखम् ।
यावन्न याति शरणं त्वामशेषाघनाशनम् ॥ '

(தாவதார்த்தி ஸ் ததா வாஞ்ச்சா தாவந்மோஹஸ்ததாஸுகம் ।
யாவந் ந யாதி ஸரணம் த்வாமஸேஷாக நாஸநம் ॥)

இத்யாதிகளிற்படியே இவ்வஞ்ஜலிக்கு உள்ளீடாய்க் கொண்டு ஸகல பல ஸாதநமாய் நிற்கிற ப்ரபத்தியின் ப்ரபாவத்தைச் சொல்லுகையிலே தாத்பர்யமாகையாலே இங்கு ஒரு ப்ரமாணவிரோதமும் வாராது ' என்றும்,

' அல்லாத பாகவத் கர்மங்கள் போலே இவ்வஞ்ஜலியும் ஒரு ஸத்கர்மவிஸேஷமாய் நின்றால் ... ... இட்டபடை கல்படையாய், பாபக்ஷயம், ஸத்த்வோந்மேஷம், ஸம்யக்ஜ்ஞாநம் பக்தி ப்ரபத்திகள் என்று இப்பரம்பரையாலே மோக்ஷ ஸாதநத்வமுண்டாகையாலே கீழ்ச் சொனன ஸர்வாநிஷ்ட நிவ்ருத்திக்கும் ஸர்வாபீஷ்ட ஸித்திக்கும் விரோதமில்லை '
என்றும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

இத்தைக் கடாக்ஷித்தே திருவாரூயிரப்படிக்கு வ்யாக்யாநமிட்டருளிய ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி இந்தப் பாட்டின் வ்யாக்யாநத்தில் மனது, வாக்கு, காயம் என்கிற மூன்று கரணங்களினால் செய்யப்

படும் வ்யாபாரங்களைக் கூறியிருப்பதினால் 'மாளும் இடத்தில் ஓர் வணக்கொடு மாள்வது வலமே' என்றன்வயித்து வணங்குதலைப் பக்தி யோகத்திலும் நன்று என்கிறபடியினால் இங்கு சொல்லப்பட்ட வணக்கம் ப்ரபத்தி ரூபமானது என்று தோன்றுகிறது' என்றும், கேவலம் அஞ்ஜலி மாத்ரமாகில் ப்ரசம்ஸாபரமாகக் கடவது என்றும் நிரூபித்திருக்கிறார்.

இந்த ரஹஸ்யத்தில் ஸ்வஸூக்தியான ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்தி லிருந்து ஒரு ச்லோகம் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் இவ் வஞ்ஜலி நிஷ்டனுடைய நாலுவித ஆகாரங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டு அவற்றையுடையவர்கள் ஸ்ரீமந்நாத முனிகள் முதலிய நம் பூர்வாசார் யர்கள் என்று உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ஆளவந்தாருக்கு ஸ்ரீ யாமுநாசார்யர் என்கிற திருநாமம் ப்ர ஸித்தமாகையினால் இந்த ரஹஸ்ய ஸங்க்ரஹமான பாட்டில் 'யமுனைத் துறைவர்' என்று அநுஸந்தித்திருக்கிறார்.

ஸ்ரீ ரஹஸ்ய ரக்ஷையில் இந்த ரஹஸ்யத்தில் விவரிக்கப்படும் சுலோகத்திற்கு ஒரு வ்யாக்யானம் அருளிச்செய்யப்பட்டிருக்க, மறுப டியும் அதே ச்லோகத்திற்கு இந்த ரஹஸ்யத்தில் வ்யாக்யானம் ஏன்? ஸம்ஸ்க்ருத பரிசயமில்லாதவர்களும் இந்த அஞ்ஜலியின் ப்ரபாவத் தை நன்கு உணர்ந்து அதை அநுஷ்டித்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்கிற திருவுள்ளம் என்று தோன்றுகிறது. அந்த ஸம்ஸ்க்ருத வ்யாக் யானத்தில் திவ்ய ப்ரபந்தங்களை மேற்கோளாகக் காட்ட முடியாமல் போய்விட்டதே என்கிற குறையைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு அங்கு நிரூபிக்கப்பட்ட அர்த்த விசேஷங்களை நிரூபித்து திவ்யப்ரபந்த பாசு ரங்களைப் பல இடங்களில் இந்த ரஹஸ்யத்தில் மேற்கோளாகக் காட் டியிருப்பது மற்றொரு காரணமாகும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச்சொன்ன பழமொழியுள்

இருபத்தாருவது ரஹஸ்யம்

ஸ்ரீ அஞ்ஜலிவைபவம்

[இது அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் மூன்றுவது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

தனியன்

हिताय सर्वजगतां व्यक्तं योऽञ्जलिवैभवम् ।
प्राचीकशत् तं वन्देऽहं वेदान्तियुगदेशिकम् ॥

(ஹிதாய ஸர்வ ஜகதாம் வ்யக்தம் யோऽஞ்ஜலிவைபவம் ।
ப்ராசீகஶத் தம் வந்தேऽஹம் வேதாந்தியுகதேஶிகம் ॥)

[அவதாரிகை—த்வதங்க்ரிமூத்தில்ய சப்தார்த்தம் — கதாபி சப்தார்த்தம்—கோகித் சப்தார்த்தம்—யதா தத வாபி சப்தார்த்தம்—ஸக்ருத்க்ருத: சப்தார்த்தம்—அஞ்ஜலி சப்தார்த்தம்—தஸ்ய சப்தார்த்தம்—முஞ்ஜரி அகபாணி சப்தார்த்தம்—அதிஷ்டத: சப்தார்த்தம்—கபாணி புட்ஜரி சப்தார்த்தம்—ஜ்ஞாத்ரு ரீயதே சப்தார்த்தம்—அஞ்ஜலி ப்ரபத்தைனின் ஆசிர்யம்பவத்தைக் காட்டும் முத்ரை—சரண்யனுடைய அபய முத்ரையின் ப்ரயோஜனம்—பரந்யாஸ ஸ்வரூப முத்ராருபத்வ ஸமர்த்தனம்—ஸஞ்ஜ ருபாவிஷ்ட பக்ஷா னை மோக்ஷப்ரதன்—அஞ்ஜலியின் பரமபராய மோக்ஷ ஸாதனத்வம்—அஞ்ஜலி விஷயத்தில் அதிகாரி நிகளம் அவெலித்வ நிரூபணம்—ச்லோகார்த்த ஸங்க்ரஹம்—பகவதாஸ்ரயார்ஹத்வ ஆத்யவஸாயத்தைக் காணும் ப்ரகாரம்—உபஸம்ஹாரம்].

பெரிய முதலியார்

1 · तवामृतस्यन्दिनि पादपङ्कजे '

(தவாம்ருதஸ்யந்திநி பாத பங்கஜே)

என்கிற ஸ்லோகத்திலே பகவச் சரணார விந்தத்தில் போக்யதா

அவதாரிகை திரௌபதை அத்யவஸித்தவனுக்கு அதினுடைய துஸ்த்யஜதையாலே

2 'கண்டு கேட்டுற்று மோந்து உண்டு உழலும் ஐங் கருவி கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற் றின்பம்'

என்னுமதில் சொல்லுகிற ஐஸ்வர்ய கைவல்ய ரூபங்களான ப்ராப்யாந்தரங்களிலே இழிப்பாறுகை கூடாது என்று அருளிச் செய்தார். அநந்தரம் (த்வதங்க்ரிமுத்திஸ்ய)

என்கிற ஸ்லோகத்தாலே அப்படிப்பட்ட அதிகாரிகளுக்குத் திரு வடிகளே உத்தேசித்து உண்டான அல்பாநுகூலங்களான வ்யா பாரத்தாலே ஸர்வாபேக்ஷித ஸித்தி உண்டாம்படியான ஆச்ரய ணை ஸௌகர்யத்தாலும் திருவடிகளுடைய துஸ்த்யஜதையை அருளிச் செய்கிறார்—'த்வதங்க்ரி முத்திஸ்ய' இத்யாதி·

त्वदंघ्रिमुद्दिश्य कदापि केनचित् यथा तथापि सकृत्कृतोऽञ्जलिः ।
तदैव मुष्णात्यशुभान्यशेषतः शुभानि पुष्णाति न जातु हीयते ॥

த்வதங்க்ரி முத்திஸ்ய கதாபி கேநசித்
யதா ததா வாऽபி ஸக்ருத் க்ருதோऽஞ்ஜலிः।
ததைவமுஷ்ணாதி அஸுபாந்ய ஸேஷத:
ஸுபாநி புஷ்ணாதி நஜாது ஹீயதே ॥

இங்கு 'த்வதங்க்ரி முத்திஸ்ய' என்(கி)றது ஸர்வலோக ஸரண்யமாய் ஸர்வ போக்யாதிஸாயிகளான தேவரீருடைய சரணார விந்தங்களே உபாயமாகவும் ப்ராப்யமாகவும் அபிஸந்தி [த்வதங்க்ரிமுத்திஸ்ய சப்தார்த்தம்] பண்ணினென்(கி)றபடி. இத்தால்

---

1 ஸ்ரீ ஆள - ஸ்தோ - 27 தவ-உம்முடைய, அம்ருதஸ்யந்திநி அம்ருதத்தைப் பெருக்கா நின்றுள்ள, பாத பங்கஜே - திருவடித் தா மரை யில் (வைக்கப்பட்ட மனத்தையுடையவன்)

2 திருவாய் -4 -9 - 10

1 'ब्रह्माणं शितिकण्ठं च याश्चान्या देवताः स्मृताः ।
प्रतिबुद्धाः न सेवन्ते यस्मात् परिमितं फलम् ॥'

(ப்ரஹ்மாணம்ஸிதிகண்டம் ச யாஸ்சாந்யா தேவதாஸ்ஸ்ம்ருதாஸ்।
ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்॥)

2 'एतौ द्वौ विबुधश्रेष्ठौ प्रसाद क्रोधजौ स्मृतौ ।
तदादर्शितपन्थानौ सृष्टि संहारकारकौ ॥'

(ஏதௌ த்வௌ விபுதஸ்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸ்ம்ருதௌ
ததாதர்ஸித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ ॥)

இத்யாதிகளில் பரதந்த்ரசேதநராகச் சொல்லுகையாலே ஸ ஈக்ஷாந் மோக்ஷ ப்ரதாநத்திற்கு ஸமர்த்தரல்லாத

3 'எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் முதலான 4 திருவில்லாத் தேவரைக் கைவிட்டபடியும், அல்ப அஸ்த்திரத்வாதி தோஷ தூஷிதங்களான ப்ரயோஜநாந்தரங்களில் பற்றற்றபடியும் சொல்லிற்றுயிற்று.

5 'बहुद्वारस्य धर्मस्य' (பஹுத்வாரஸ்ய தர்மஸ்ய)

1, 2. பார - சாந்தி - 357 - 36, 19. ப்ரஹ்மாணம் - ப்ரஹ்மாவையும், சிதிகண்டம் ச - ருத்திரனையும், யாஸ்ச அந்யா: தேவதா: ஸ்ம்ருதா: - வேறுளவர் தேவதைகள் சொல்லப்படுகிறார்களோ (அவர்களையும்), ப்ரதிபுத்தா: - மோக்ஷத்தை விரும்புமவர்கள், ந ஸேவந்தே - வணங்குவதில்லை, யஸ்மாத் - எந்தக் காரணத்தினால், பரிமிதம் பலம் - (அவர்களால் கொடுக்கப்படும்) பலம் அல்பமோ.

ப்ரஸாத க்ரோதஜௌ - ஸந்தோஷத்திலும், கோபத்திலுமுண்டானவர்களாக ஸ்ம்ருதௌ - சொல்லப்படுகிற, விபுதச்ரேஷ்டௌ-தேவதைகளுக்குள் சிறந்தவர்களான, ஏதௌ-இந்த, த்வௌ - ப்ரஹ்மருத்திரர்களென்ற இருவர்களும், தத் ஆதர்சித பந்தாநௌ அந்தப் பகவானால் காண்பிக்கப்பட்ட வழியை உடையவர்களாய் ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகௌ - ஸ்ருஷ்டியையும், ஸம்ஹாரத்தையும் செய்கிறார்கள்.

3 பெரியாழ் - 5 - 3 - 6. 4. நான் திரு - 53.

5 பஹுத்வாரஸ்ய - அநேக விதமான, தர்மஸ்ய - தர்மத்திற்கு.

என்கிறபடியே நாநாவிதங்களான தர்மங்களெல்லாம் கால விசேஷங்களைப்பற்றியிருக்கும். எங்ஙனே என்னில்:

1 'अन्ये कृतयुगे धर्माः' (அன்யே க்ருதயுகே தர்மாஃ)

இத்யாதிகளிற்படியே யுகபேதம், அயநபேதம், மாஸ பேதம், பக்ஷ பேதம், திதிவார நக்ஷத்ர பேதம், ராத்ரி திவஸாதி பேதம், யாம பேதம், ராசிபேதம், முஹூர்த்த பேதம் என்று இப்படிப்பட்ட கால பேதங்களிலே வயவஸ்த்திதங்களாயிறே கர்ம விசேஷங்கள் இருப்பது. இவ்வஞ்ஜலி (பந்த) ரூபமான ஸுகர்மத்திற்கு ருசி பிறந்தபோதே காலம், மற்றொரு கால விசேஷம் பார்த்திருக்கவேண்டாம் என்னுமிடத்தை 'கதாபி' என்று அருளிச் செய்கிறார்.

கதாபி சப்தார்த்தம்

வர்ண தர்மம், ஆஸ்ரம தர்மம், குண தர்மம், நிமித்த தர்மம் என்றுற்போலே சொல்லும் தர்மங்கள் எல்லாம் சில அதிகாரி விசேஷங்களைப் பற்றியிருக்கும். இவ்வஞ்ஜலிபந்தம் ஸத்யவசநாதிகளைப்போலே ஸாமாந்ய தர்மமாகையாலே ப்ராஹ்மணன் முதலாக ஸ்வபாகனளவாக ஸர்வருக்கும் சாஸ்த்ரீயமுமாய், ஸுகரமுமாயிருக்கும் என்னுமிடத்தை 'கேநசித்' என்று அருளிச் செய்கிறார்.

கேநசித் சப்தார்த்தம்

அல்லாத தர்மங்களுக்கெல்லாம் நாநாவிதங்களான ப்ரகார விசேஷ நியமங்கள் உண்டாயிருகும். இவவஞ்ஜலிகுப பராவர தத்த்வஹித புருஷார்த்தங்களில் தெளிவு உண்டாகவுமாம், இல்லையாகவுமாம். மஸ்திஷ்க ஸம்புடாதிகளில் வேண்டினபடியாகவுமாம்; வசம் செய்யும் கை இல்லாதபோது வாக்காலும் மநஸ்ஸாலுமாகவுமாம்; எல்லாப் படிக்கும் இது ஸபலமாம் என்னுமிடத்தை 'யதாததாவாபி' என்று அருளிச் செய்கிறார்.

யதா ததா வாபி சப்தார்த்தம்

2 'सकृत्कृतः शास्त्रार्थः' (ஸக்ருத் க்ருதஃ சாஸ்தரார்த்தஃ)

---

1 மனு - 1 - 85. க்ருதயுகே தர்மாஃ - க்ருத யுக தர்மங்கள், அன்யே - வேறுபட்டவை

2 ஸக்ருத் க்ருதஃ - ஒரு தரம் செய்யப்பட்டது, சாஸ்த்ரார்த்தஃ - விதிக்கிற சாஸ்திரத்திற்கு அர்த்தம்.

என்கிற ஸாமாந்யத்திற்கு அபவாதமில்லாமையாலே ஆவ்ருத்த யபேக்ஷை இல்லை என்னும் இடத்தை 'ஸக்ருத் க்ருத:' என்று அருளிச் செய்கிறார்.

ஸக்ருத் க்ருத: சப்தார்த்தம்

1 ' सर्वेषामेव धर्माणामुत्तमो वैष्णवो विधिः ।
रक्षते भगवान् विष्णुः भक्तानात्मशरीरवत् ॥ '

(ஸர்வேஷாமேவ தர்மாணும் உத்தமோ வைஷ்ணவோ விதி: ।
ரக்ஷதே பகவாந் விஷ்ணு: பக்தாந் ஆத்ம ஶரீரவத் ॥)

இத்யாதிகளாலே தர்மாந்தரங்களிற் காட்டில் அதிக ப்ரயாஸங்களாக ப்ரஸித்தங்களான ஸம்மார்ஜந, உபலேபந, மாலாகரண, தீபாரோபண, ப்ரதக்ஷிண, ப்ரணாம, ஸ்துதி, ஸங்கீர்த்தந, ஜபாதிகளிற்காட்டிலும் அதிகதமமாக

அஞ்ஜலி சப்தார்த்தம்

2 ' अंजलिः परमा मुद्रा ' (அஞ்ஜலி: பரமா முத்ரா)

என்று சொல்லப்பட்ட இதின் ஸ்வரூபம் கை கூப்புமளவே என்று தோற்றுகைக்காக 'அஞ்ஜலி:' என்கிறார்.

காலாந்தரத்திலே பலிக்கும் கர்மங்களைப் போலன்றிக்கே இங்கு

2 ' क्षिप्रं देवप्रसादिनी ' (க்ஷிப்ரம் தேவ ப்ரஸாதிநீ)

ததைவசப்தார்த்தம்

என்ற ப்ரபாவத்தை 'ததைவ' என்று அருளிச் செய்கிறார்.

'அஶுபங்களை நசிப்பிக்கும்' என்கிற அர்த்தத்தை 'முஷ்ணாதி அஶுபாநி' என்று அருளிச் செய்யவேண்டிற்று என் என்னில்? ஆஶ்ரிதஜனவன் அநாதி வாஸநைகள்மேலிட்டுஸாம்ஸாரிகபுண்ய பாப ரூபங்களான விலங்குகளை

முஷ்ணாதி அசுபாநிசப்தார்த்தம்

---

1 பார - ஆநு - 36 - 24. ஸர்வேஷாம் ஏவ தர்மாணும் - எல்லாத் தர்மங்களுக்குள்ளும், வைஷ்ணவோ விதி: - விஷ்ணுவைப்பற்றிய தர்மம், உத்தம: - உயர்ந்தது, பகவாந் விஷ்ணு: - பகவானுகிய விஷ்ணு, பக்தாந் - தன்னுடைய பக்தர்களை, ஆத்ம சரீரவத் - தன் சரீரத்தைப் போலே, ரக்ஷதே - காப்பாற்றுகிறான்.

2 பாரத்வாஜ ஸம்ஹிதை - அஞ்ஜலி: - அஞ்ஜலியானது, பரமா - உயர்ந்ததான, முத்ரை - சின்னம், க்ஷிப்ரம் - சீக்கிரத்தில், தேவப்ரஸாதிநீ - பகவானை க்ருபை உடையவனாகச் செய்யக்கூடியது.

விடுவிக்க இசையாதொழியிலும்,

1 ' தமர்கள் கூட்ட வல் வினையை நாசம் செய்யும்
சதிர் மூர்த்தி '

என்கிறபடியே பாலனே உபச்சந்தநம்பண்ணி அபத்யத்தைப் பரிஹரிக்குமா போலே ஒரு விரகாலே இவனுக்கு அநுகூலங்களாய்த்தோற்றும் பந்தகங்களைக் கழிக்கும் என்றபடி. இங்கு சொல்லுகிற அசுபங்களாவன:— ப்ராப்தி விரோதிகளான கர்மங்களாதல் உபாயாதிகளை விரோதிக்கும் கர்மங்களாதல் என்று யதாதிகாரம் கண்டுகொள்ளுவது.

க்ருச்ச்ரசாந்த்ராயணாதி கர்மங்கள் சில அசுபங்களைக் கழிக்கவற்றாயிருக்கும், இது அப்படியன்று, ஸர்வாநிஷ்டங்களைக் கழிக்கவற்று என்னும் இடத்தை **அசேஷத: சப்தார்த்தம்** அசேஷத: ' என்று அருளிச்செய்கிறார்.

அநிஷ்டங்களைக் கழிக்குமளவேயன்று, அது முதலாகத் தோன்றி

2 ' தொன் மா வல்வினைத்தொடர்களை முதலரிந்து '
நின்மாதாள் சேர்ந்து '

இத்யாதிகளிற்படியே இஷ்ட **சுபாநி புஷ்ணாதி சப்தார்த்தம்** ப்ராப்தி பர்யந்தமாகும் என்னும் இடத்தை ' சுபாநி புஷ்ணாதி ' என்று அருளிச்செய்கிறார். இங்கு சுபங்களாவன — பரிபூர்ண பகவதநுபவமும், அதின் உபாயமும், அதின் பரிகரமும், (அதின் ப்ரகாரமும்,) அதின் அதிகாரமும், க்ருதோபாயனுடைய ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்யமும். இவற்றை ' புஷ்ட ' மாக்குகையாவது விலக்கறுத்துத் தலைக்கட்டுகை.

இவ்வஞ்ஜலி தான் தன்னுடைய கர்த்தா ஒருவனுக்குமே பலம் கொடுத்து அவ்வளவிலே பர்யவஸிக்கிறதன்று,

3 ' தொழுது எழு என் மனனே '

என்று தொடங்கி, நம்மாழ்வார்

4 ' எமரேழ் எழு பிறப்பும் மா சதிர் இது பெற்று

---

1 திருவாய் 8 - 10 - 9.
2 திருவாய் - 3 - 2 - 2. 3 திருவாய் - 1 - 1 - 1.
4 திருவாய் - 2 - 7 - 1.

நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா '

என்று அருளிச்செய்தபடியே அஞ்

ந ஜாது ஹீயதே சப்தார்த்தம் ஜலி பண்ணினவனுடைய அநு

பந்திகளுக்கும் அப்படியே உபகா

ரகமாம் என்னுமிடத்தை ' ந ஜாது ஹீயதே ' என்று அருளிச் செய்தார். ஸ்வர்க்காதி பலங்களைப் போலே இதின் பலமான மீளா அடிமைப் பணி ஒரு காலும் அழியாது என்று கருத்தாக வுமாம். அங்ஙனன்றிக்கே ஒரு கால் தொடங்கின அஞ்ஜலி

1 ' बद्धांजलिपुटा हृष्टाः नम इत्येव वादिनः '

(பத்தாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டாः நம இத்யேவ வாதிநः) என்கிறபடியே பரம பதத்திலும் பல ரூபமான அஞ்ஜலியாய்ப் பரிணமித்து ஒரு காலும் அழியாதென்னவுமாம்.

இவ்வஞ்ஜலி

2 'நோற்றநோன்பிலேன் '.3 'புகலொன்றில்லா அடியேன்' இத்யாதிகளிற்படியே ஆகிஞ்சன்ய அநந்யகதித்வாதி யோகத்தா

அஞ்ஜலி ப்ரபந்நனின் ஆகிஞ்சன்யத்தைக் காட்டும் முத்ரை

லே ப்ரபத்த்யதிகாரியாய், பரந்யா ஸம் பண்ணுகிறவனுடைய ஸ்வ ரக்ஷணார்த்த ஸ்வவ்யாபாரத்தில்

கை முடங்குகிறபடியைக் காட்டுகிற முத்ரையாய் நின்றபோது

1 ' तावदार्तिस्तथा वांछा तावन्मोहस्तथासुखम् ।
यावन्न याति शरणं त्वामशेषघनाशनम् ॥ '

இத்யாதிகளிற்படியே இவ்வஞ்ஜலிக்கு உள்ளீடாய்க் கொண்டு ஸகல பல ஸாதநமாய்நிற்கிற ப்ரபத்தியின் ப்ரபாவத்தைச்சொல் லுகையிலே தாத்பர்யமாகையாலே இங்கு ஒரு ப்ரமாண விரோத மும் வாராது.

இப்படி ப்ரபந்நன் வாங்கின கைக்குப் பெருமாள் வைத்த கை உத்தரமாம். எங்ஙனே என்னில்:-ப்ரார்த்தநாபூர்வக பரந்யா

சரண்யனுடைய முத்ரையின் ப்ரயோஜநம்

ஸம் பண்ணின அகிஞ்சநனுடைய ஸ்வ ரக்ஷணார்த்த ஸ்வ வ்யாபார நிவ்ருத்தி ரூப பல விசேஷவ்யஞ்

1 பார - சாந்தி - 344 - 45. பத்தாஞ்ஜலி புடா: - கூப்பின கைகளை உடையவர்களாயும், ஹ்ருஷ்டா: - ஸந்தோஷமுடையவர் களாயும், நம இத்யேவ - நம: என்றே, வாதிந: - சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். 2திருவாய் - 5 - 7 - 1. 3 திருவாய் - 6 - 10 - 10
4 வி - பு - 1 - 9 - 73– ம் பக்கம் பார்க்க.

ஜக முத்ரை அஞ்ஜலி. பர ஸ்வீகாரம் பண்ணின ஸ்வதந்த்ரகா ருணிகனுடையநிரபேக்ஷ ரக்ஷணபிபராய வ்யஞ்ஜக முத்ரை அபய ஹஸ்தம், இவ்விடத்தில்

1 ' अंजलिः परमा मुद्रा क्षिप्रं देव प्रसादिनी '

அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவ ப்ரஸாதிநீ)என்றும்

' अन्तरेणांजलिं बद्ध्वा लक्ष्मणस्य प्रसादनात् '

(அந்தரேண அஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்) பரந்யாஸவ்யஞ்ஜகமுத் என்றும்சொல்லுகிறபடியே ப்ரஸாதநமான ரா ரூபத்வமார்த்தம் அஞ்ஜலிக்குப்ரபத்திகர்ப்பத்வம் சொன்னால்

2 ' प्रसादयस्व तं चेनं शरणागतवत्सलम् '

(ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் சரணாகதவத்ஸலம்)

3 ' प्रसादये त्वामहमीशमीड्यम् '

ப்ரஸாதயே த்வாம் அஹமீசமீட்யம்)

1 ' शरणमुपगम्य तत्प्रसादोपबृंहित मनोवृत्तिः '

(சரணமுபகம்ய தத் ப்ரஸாதோபப்ரும்ஹித மநோவ்ருத்தி:) இத்யாதிகளிற்படியே ப்ரபத்திக்கும் ப்ரஸாதநத்வமுண்டாகையா லும், ப்ரபத்தியால் நிக்ரஹ நிவ்ருத்தி ரூபமான ப்ரஸாதம் பிறவா தாகில் இது நிஷ்ப்பலமாக ப்ரஸங்கிக்கையாலும், ப்ரஸாதநமா கச் சொன்ன அஞ்ஜலிக்கு பரந்யாஸ வ்யஞ்ஜக முத்ரா ரூபத்வம் சொன்னது விருத்தமன்று. ஸஹஜ க்ருபா விசிஷ்டனை பக வான் யதாதிகாரம் பக்தியாலேயாதல் ப்ரபத்தியாலேயாதல் ப்ர ஸாதநீயனாய். அவற்றாலே ப்ரஸந்நனான பகவான் நிக்ரஹபலபூத

---

1 பாரத்வாஜ - ம் பக்கம் பார்க்க.

2 ராமா - கிஷ்கி - 32 - 17. அஞ்ஜலிம் பத்வா – அஞ்ஜலியைச் செய்துகொண்டு, லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் அந்தரேண - லக்ஷ்மண னைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று ப்ரார்த்திப்பதைத் தவிர (வேறு வழியை நான் பார்க்கவில்லை).

1 ராமா – ஸுந்த - 21 - 22. த்வம் - நீ, சரணாகத வத்ஸலம் - சரணமடைந்தவர்களிடத்தில் அனுக்ரஹம் செய்யும், ஏநம் - இந்த ஸ்ரீ ராமனை, ப்ரஸாதயஸ்வ - ப்ரஸாதம் செய்யும்படி ப்ரார்த்தி.

4 கீதை - 11 - 44. ஈசம் - ஈச்வரனுகவும், ஈட்யம் - ஸ்தோத் திரம் செய்யத் தக்கவனுகவும் இருக்கிற, த்வாம் - உன்னை, ப்ரஸாதயே - அநுக்ரஹம் செய்யும்படி ப்ரார்த்திக்கிறேன்.

5 நித்யம். சரணமுபகம்ய - (பகவானை) சரணமடைந்து, தத் ப்ரஸாத உபப்ரும்ஹித: - அவனுடைய ப்ரஸாதத்தினால் வ்ருத்தி செய் யப்பட்ட, மநோ வ்ருத்தி: - மனத்தின் வ்யாபாரத்தையுடையவனாய்,

ப்ரக்ருதி ஸம்பந்தாதி விரோதிநிவர்த்தநஸங்கல்பவிஸிஷ்டனுக்கு கொண்டு பக்தி நிஷ்ட்டனுக்கும் ப்ரபத்தி நிஷ்ட்டனுக்கும் மோ

ஸஹஜ க்ருபா விசிஷ்ட பகவானே மோக்ஷ ப்ரதன்

க்ஷப்ரதனும். இப் ப்ரபத்தியால் ப்ரஸந்நனுமளவில் அல்ப வ்யா பாரத்தாலே அவிளம்பிதமாக ஆரப்தகார்யங்களும் அநாரப்த கார்யங்களுமான ஸாம்ஸாரிக புண்ய பாபங்கள் இரண்டும் கழி யும்படி இதில் உசிதாதிஸயித ப்ரஸாதம் பிறக்கும். இ த ற் கு மூல காரணம் வ்வார்த்த நிரபேக்ஷ பரதுக்க நிராகரணேச்சா ரூபையான ஸஹஜ க்ருபையாகையாலே

1 ' நின்னருளேபுரிந்திருந்தேன் '

இத்யாதிகளிற்படியேயிக் க்ருபையிலேயே ஊன்றினது தோன்றியி ருக்கைக்காக ப்ரபந்நனுக்கு க்ருபாவிஸிஷ்டன் மோக்ஷப்ரதன் என்றும், பக்திநிஷ்ட்டனுக்கு ப்ரஸாத விஸிஷடன்மோக்ஷப்ரதன் என்றும் இது ஒரு பிரிவு போலே பேசுகிறார்களத்தனை, அல்லது இவர் பக்கல் க்ருபா ப்ரஸாதங்கள் ப்ரதிநியதங்களல்ல. ப்ரபந்

அஞ்ஜலியின் பரம்பரயா மோக்ஷஸாதநத்வம்

நனளவில் ப்ரஸாதாதிஸயமே உள்ளது. அங்ஙனன்றிக்கே மா லாகரணதிகளான அல்லாத பகவத் கர்மங்கள் போலே இவ்வஞ் ஜலியும் ஒரு ஸத்கர்ம விஸேஷமாய் நின்றால்

2 ' नेहाभिक्रम नाशोऽस्ति '(நேஹாபிக்ரம நாஸோஸ்தி)

3 ' सकृदुच्चरितं येन हरिरित्यक्षरद्वयम् ।
बद्धः परिकरस्तेन मोक्षाय गमनं प्रति ॥ '

(ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷர த்வயம் ।
பத்த; பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி ॥)

இத்யாதிகளிற்படியே இட்டபடை கற்படையாய் பாபக்ஷயம்,ஸத் வோந்மேஷம், ஸம்பக்ஜ்ஞாநம், பக்தி ப்ரபத்திகள் என்று இப்பரம் பரையாலே மோக்ஷஸாதநத்வம் உண்டாகையாலே கீழ்ச் சொன்

அஜலி விஷயத்தில்அதிவாதோ க்தி அநௌசித்ய நிரூபணம்

ன ஸர்வாநிஷ்ட நிவ்ருத்திக்கும் ஸர்வாபீஷ்ட ஸித்திக்கும் விரோ தமில்லை, இப்படி வழியுண்டாயிருக்க, இது அதிவாதமென்கை

1 பெரியாழ் - 5 - 4 - 1.

2 விஷ்ணு தர்மம் - 70 - 84 - ம் பக்கம் பார்க்க.

3 கீதை - 2 - 40 இஹ - இந்தக் கர்மயோகத்தில், அபிக்ரம - ஆரம்பிக்கப்பட்ட அம்சத்திற்கு. நாச:- அழிவதுஎன்பது. நாஸ்தி - இல்லை

உசிதமன்று. ஓர் அதிகாரி விஷயத்திலே இவ்வஞ்ஜலி ரூப க்ரியா மாத்ரம்தானே ஸாக்ஷாந் மோக்ஷஸாதநம் என்றுல் ப்ரத க்ஷிண ப்ரணமாதி கரியாமாத்ரங்களும் இப்படியே அவ்யவஹித மோக்ஷ ஸாதநங்களாக பரஸங்கிக்கும. அப்போது

'भक्त्या परमया वाऽपि' (பகத்யா பரமயா வாऽபி)

இத்யாதி ப்ரமாணங்களோடு விரோதமுண்டாம். ப்ரயோஜ நாந்தரபரனுக்கு இவ்வஞ்ஜலி அவ்வோ பரயோஜநாந்தரங்களாக கொடுகுகும. அநந்ய பரயோஜநனுய் மற்றொரு தெய்வம் தொ ழாதவனுக்கு உகத பரகாரததாலே அவாவறறு வீடு பெறும்அவ ஸ்த்தையோடே தலைக்கட்டும். இப்படி இவ்வஞ்ஜலியின் ப்ரபா வத்தை நினைத்து

2 'हस्तीश दुःख विषदिग्ध फलानुबन्धिन्यात्रह्मकीटमपराहतसंप्रयोगे।
दुष्कर्मसंचयवशात् दुरतिक्रमे नः प्रत्यस्त्रमञ्जलिरसौ तव निग्रहास्त्रे॥

என்று சொன்னேம்,

இப்படி 'த்வதங்க்ரிமுத்திஸ்ய' என்கிற श्लोकத்திலே முமுக்ஷுவான அதிகாரியினுடைய அநந்ய தேவதாகத்வமும், அநந்ய ப்ரயோஜநத்வமும், இவன் ஸர்வஸ்வாமி திருவடிகளிலுத்

श्लोकार्त्त संग्रहம் தேஸித்துப் பண்ணுகிற அஞ்ஜ லிக்குக் கால நியமமும், இத்தால் உபலக்ஷிதமான தேஸநியமமும், வர்ணாச்ரமாத்யதிகாரநியமமும், ப்ரகாரநியமமும், ஆவ்ருத்தி நியமமும் எனறிவை இல்லாதபடியை யும், இதினுடைய ஆசுகாரித்வமும், அஸேஷ தோஷ நிவர்த்தகத்வ மும்: அஸேஷ கல்யாணகாரணத்வமும், அநுபந்தி ரக்ஷகத்வமும்,

---

2 வரதராஜ பஞ்சாசத் - 30

ஹஸ்தீச - ஹஸ்திகிரிமலைக்கு ஈசனே, துக்க விஷதிக்த - துக்க மாகிற விஷத்தினுல் பூசப்பட்ட, பலாநுபந்தினி - ஸம்ஸார பலத்தில் ஸம்பந்தித்திருக்கிற, ஆப்ரஹ்மகீடம் - ப்ரஹ்மா முதல் புழு வரையில், அபராஹத - தடுக்கப்படாத, ஸம்ப்ரயோகே - தன் கார்யத்தைச் செய் வதில் ஸாமர்த்யமுடையதும், துஷ்கர்ம ஸஞ்சயவசாத் - கெட்ட கர்ம கூட்டங்களின் வசத்தாலே, துரதிக்ரமே - தாண்ட முடியாதது மான, தவ - உம்முடைய, நிக்ரஹாஸ்த்ரே - நிக்ரஹ ஸங்கல்பமாகிற அம்புக்கு நः - எங்களுடைய, அஸௌ - இந்த, அஞ்ஜலிः - அஞ்ஜலி யானது, ப்ரத்யஸ்த்ரம் - எதிர் அம்பாக இருக்கிறது.

1 அஹிர் - ஸம். பரமயா - உயர்ந்த, பக்த்யாவாபி - பக்தியினு லாவது (ப்ரபத்தியினுலாவது பகவான் அடையப்படுமவன்).

அக்ஷய பல ப்ரதாநத்வமும், பலரூப ஸஜாதீயபரிணாமித்வமும் என்கிற ப்ரபாவங்களையும், இது அநந்ய ப்ரயோஜநனை பரபத்தி நிஷ்டனுக்கும் ப்ரயோஜநாந்தரபரனுக்கும் சிற்சில வ்யவஹாரங்களையும் அநுஸந்தித்தால் கைகளைக் கூட்டின அஞ்ஜலி ஒருவருக்கும் கை விடவொண்ணுதபடி நிற்கும்.

இங்குச்சொன்ன அதிகாரியினுடைய பகவதநந்யார்ஹ சேஷத்வாத்யவஸாயம், பாகவதரல்லாத மாநா பிற்ரு ப்ரப்ருதிகளையிட்டுத் தன்னை ஒருத்தன் வ்யபதேசிக்குமளவில்

1 ' एकान्ती व्यपदेष्टव्यो नैव ग्राम कुलादिभिः ।
विष्णुना व्यपदेष्टव्यः तस्य सर्वं स एव हि ॥ '

(ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராம குலாதிபிः।
விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யः தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி ॥)

என்று தெளிந்து,

2 ' கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன் ஒருவற்குரியேனே ' என்று சொல்லும் மறுமாற்றத்தாலே அறியலாம்.

பகவதேகாந்தியான இவனுடைய அநந்ய தேவதாகத்வம் அருகு இருந்தார் அபிப்ராயம் சொல்ல வேண்டும்படி தான் அத்யந்தாவஸந்நனை தசையிலும் தனக்காகத் தன் உற்ருரும் மற்றெருதெய்வம் தொழ இசையாத ப்ரகாரத்தாலே காணலாம்.

அநந்ய ப்ரயோஜநனை இவன் அளவாகும் சிற்றின்பம் ஒழிந்தமை வைஷயிக ஸுகார்த்த வ்யாபார அத்யந்த நிவ்ருத்தியாலே அறியலாம். 3

3 ' शरीरं केवलं कर्म कुर्वन् नाप्नोति किल्बिषम् '

(ஸாரீரம் கேவலம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம்)

---

1 விஷ்வக்-ஸம் ஏகாந்தீ - பரமைகாந்தியானவன், க்ராமகுலாதிபிः - ஊர், குலம் முதலியவைகளிஞல், நவ்யபதேஷ்டவ்யः - சொல்லத்தக்கவனல்லன், விஷ்ணுநா - விஷ்ணுவினுலேயே,வ்யபதேஷ்டவ்யः - சொல்லத்தக்கவன், ஹி - எந்தக் காரணத்தினுல், தஸ்ய - அவனுக்கு, ஸர்வம் - எல்லாமும், ஸ ஏவ - அந்தப் பகவானேயோ

2 பெரிய திரு- 8 - 9 - 3.

3 கீதை-4-21. சாரீரம்-சரீரத்தைத் தரிப்பதற்காகச்செய்யப்படுகிற, கர்மகேவலம்-கர்மத்தை மாத்ரம், குர்வந் - செய்துகொண்டிருப்பவன், கில்பிஷம் - ஸம்ஸாரத்தை, நாப்நோதி - அடைகிறதில்லை.

என்கிறபடியே துக்கநிவ்ருத்திமாத்ரார்த்தமாய் ஸாஸ்த்ராநுமத மான அஸுநாதி த்ருஷ்ட வ்யாபாரம் இவனுக்கு தோஷமாகாது.

அநந்யோபாயனான இவனுடைய நிர்ப்பரத்வ அத்யவஸாயம் பரந்யாஸம் பண்ணினவிஷயத்தில் ஸ்வவ்யாபார ஆத்யந்திக நிவ்ருத்தியாலே அறியலாம். 4

இந்நாலு ஆகாரம் உடையவர்க்கு நிதர்ஸநம் நாதமுனிகள் முதலான ஆசார்யர்கள்.

1 கண்ணன்கழல் தொழக் கூப்பிய கையின் பெருமை தன்னை*
எண்ணம்கடக்க யமுனைத்துறைவர் இயம்புதலால்*
திண்ணம் இதுவென்று தேறித் தெளிந்தபின் * சின்மதியோர்
பண்ணும் பணிதிகள் பாற்றிப் பழந் தொழில் பற்றினமே. 24

2 श्रीमत्वेङ्कटनाथः श्रीधरपदपद्मसक्तचित्तानाम्।
अंजलिवैभवमकथयदनुस्मृतं यामुनाचार्यैः ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री अं ज लि वै भ वं सं पू र्ण म् ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

---

1 கண்ணன் - ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, கழல் தொழ - திருவடிகளை வணங்குவதற்காக, கூப்பிய-கூப்பப்பட்ட, கையின்- கைகளின், அதாவது அஞ்ஜலியின், பெருமைதன்னை-ப்ரபாவத்தை, யமுனைத்துறைவர் - யாமுநாசார்யர் என்கிற திருநாமமுடைய ஸ்ரீ ஆளவந்தார், எண்ணம் - கடக்க - நம்முடைய நினைவின் எல்லையை மீறி, இயம்புதலால் - சொல்லியிருக்கிறபடியால், இது திண்ணம் என்று - இதுவே நிச்சயமான அர்த்தம் என்று, தேறித் தெளிந்தபின் - நாம் தெளிந்த பிறகு, சின்மதியோர் - அல்ப புத்தியையுடையவர், பண்ணும் - செய்கிற, பணிதிகள் - வார்த்தைகளை, பாற்றி - ஒழித்து, பழம் தொழில் - பழமையான வ்ருத்தியை, அதாவது உபாயமான ப்ரபத்தியை, பற்றினம் - உபாயமாக அங்கீகரித்தோம். 24

2 ஸ்ரீமத்வேங்கட நாத: - ஸ்ரீமத் வேங்கடநாதன் எனும் வேதாந்த தேசிகன், யாமுநாசார்ய: - யாமுநாசார்யர் என்கிற திருநாமமுடைய ஸ்ரீ ஆளவந்தாரால், அநுஸம்ருதம் - அநுஸந்திக்கப்பட்ட, அஞ்ஜலி வைபவம் - கை கூப்புதலின் மஹிமையை, ஸ்ரீதர பத பத்ம - பகவானு

(ஸ்ரீமத்வேங்கடநாதः ஸ்ரீதரபதபத்மஸக்த சித்தாநாம் ।
அஞ்ஜலி வைபவமகதயத் அநுஸ்ம்ருதாம் யாமுநாசார்யைः ॥)

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்

அஞ்ஜலிவைபவம் முற்றிற்று

டைய திருவடித் தாமரையில், ஸக்த சித்தாநாம் - ஈடுபட்ட மனமுடை யார்க்கு, அகதயத் - உரைத்தார்,

ஸ்ரீ ப்ரதாநசதக விஷயமாய்ச் சில விசேஷக் குறிப்புக்கள்

இது முமுக்ஷுக்களான நாமெல்லோரும் அவச்யமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய 100 அர்த்தவிசேஷங்களை நிரூபிக்கிறபடியினால் ப்ரதாந சதகம் என்னப்படுகிறது.

இதில் திவ்யப்ரபந்தங்கள் உபப்ரும்ஹணங்களில் ஸ்ரீ பாஞ்சராத்திரத்திற்கடுத்தபடியாகவும் ஸ்ரீராமாயணாதிகளுக்கு முற்பட்டனவாகவுமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறன. ஸ்ரீ குருபரம்பரா ஸாராதிகளில் இவை ஸ்வதஃ ப்ரமாணங்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறன. ஆகையினாலே பெரியபிராட்டியாருக்கு பகவானைப்போலே உபாயத்வ உபேயத்வங்கள் இருக்கச் செய்தே புருஷகாரத்வமாகிற மற்றோர் ஆகாரமுமிருக்கிறாப்போலேயும், ப்ரபத்தி ஸ்வதந்த்ரமாய் மோக்ஷ ஸாதநமாயிருக்கச்செய்தே பக்தி யோகத்திற்கு அங்கமாகவும் ஓர் ஆகாரமுமிருக்கிறாப்போலவும் திவ்ய ப்ரபந்தங்களுக்கு இரண்டு ஆகாரங்கள் உண்டு, எப்படி எம்பெருமானார் ஸ்ரீ கீதாபாஷ்யத்தில் ப்ரபத்தியின் ஓர் ஆகாரத்தையும், ஸ்ரீ சரணாகதி கத்யத்தில் மற்றோர் ஆகாரத்தையும் நிரூபித்திருக்கிறாரோ அது போலே திவ்யப்ரபந்தங்களுக்குள்ள இரண்டு ஆகாரங்களையும் ஸ்ரீ தேசிகரும் இரண்டு இடத்தில் பிரித்துக் காட்டியிருக்கிறாரென்று அறியத்தக்கது.

இவ்வர்த்தங்களையெல்லாம் நாம் பரம தனமாகக் கொள்ள வேண்டுமென அருளிச்செய்திருக்கிறார்.

எல்லாக் கைங்கர்யங்களிலும் ஆசார்ய கைங்கர்யமே ப்ரதாநதமமாயிருக்குமென்று இதில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்





சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

இருபத்தேழாவது ரஹஸ்யம்

ஸ்ரீ ப்ரதாநசதகம்

[அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் ஆறுவது.

இது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

தனியன்

यः प्रधानः प्रपन्नानां प्रधान शतकं व्यधात्।

तं नौमि वेङ्कटाचार्यं धुर्यं मार्गे यतीशितुः ॥

[அவதாரிகை—பகவானிக்காட்டும் ப்ரமாணங்களில் ப்ரதாநமானவை(1-3)—மந்திரங்களில் ப்ரதாநமானவை(4, 5)—ஜன்மங்களில் ப்ரதாநமானது(6)—ப்ரணவத்தின் அர்த்தங்களில் ப்ரதாநமானவை(7 - 21)—ஸாத்த்யோபயமான ப்ரபத்தியில் நம: சப்தத்தால் காணும் ப்ரதாநாம்சங்கள்(22 - 30)—நாராயண சப்தத்தில் தத் புருஷ ஸமாஸத்தின் ப்ராதாந்யம்(31)—திருமந்த்ர வாக்ய யோஜநைகளில் ப்ரதாநமானவை(32)—த்வயத்தின் அர்த்தங்களில் ப்ரதாநமானவை(33 - 36)—உபப்ரும்ஹணங்களில் ப்ரதாநமானவை (37-44)—சரமச்லோகார்த்தங்களில் ப்ரதாநமானவை(45 - 47)—ஆர்த்த த்ருப்த ப்ரபந்நர்களின் க்ரமம்(48 - 51)—ஆஜ்ஞாநுஜ்ஞா கைங்கர்யங்களில்ப்ரதாநமானவை(52-54)—வர்ஜநீயங்களிலும் உபாதேயங்களிலும் ப்ரதாநமானவை(55 - 63)—கைங்கர்யங்களில் ப்ரதாநமானவை(64-68)—கைங்கர்ய பலனில் ப்ரதாநமானது(69)—அவதாரங்களில் ப்ரதாநமானவை(07, 71)—யுகங்களில் ப்ரதாநமானவை(72-73)—கைங்கர்யம், உபகரணம், தேசம், தீர்த்தம்,தசை இவற்றில் ப்ரதாநமானவை (74 - 84)—அபராத பரிஹாரங்களில் ப்ரதாநமானவை(85 - 88)—ஆசார்ய ப்ராசார்ய தத் கைங்கர்ய விஷயத்தில் ப்ரதாநமானவை(89-93)—ஏகாந்திகளிலும் அவர்கள் கைங்கர்யத்திலும் ப்ரதாநமானவை (94 - 98)—ஸுகாதிகளில்ப்ரதாநமானவை(99 - 101)

1 परविदुपदर्शितं नः प्रधानशतकं प्रमाणसिद्धमिदम् ।
भजति शतकोटिभावं परपक्षे च प्रयोजने च सताम् ॥

பரவிதுபதர்ஶிதம் நः ப்ரதாநஶதகம் ப்ரமாணஸித்தமிதம்
பஜதி ஶதகோடிபாவம் பரபக்ஷே ச ப்ரயோஜநே ச ஸதாம் ॥)

2 பொங்கு புனலாறுகளில் புவனமெல்லாம்
பொன் கழலால் அளந்தவன்தன் தாளால் வந்த
கங்கையெனும் நதிபோலக் * கடல்களேழில்
கமலைபிறந்து அவனுகந்த கடலே போலச் *
சங்குகளில் அவன் ஏந்தும் சங்கே போலத்
தாரில் அவன் தண் துளவத் தாரே போல *
எங்கள் குலபதிகள் இவை மேலாம் என்றே
எண்ணிய நல்வார்த்தைகள் நாம் இசைகின்ற்ரேமே.

---

1 பரவிது: - பரப்ரஹ்மத்தை அறிந்த பெரியோர்களினால், உபதர்சிதம் - காட்டப்பட்டதும், ப்ரமாணஸித்தம் - ப்ரமாணங்களினால் ஏறபட்டதுமான, (ப்ரமாணங்களைத் தழுவியதான), நः - நமமுடைய, இதம் - இந்த, ப்ரதாநசதகம் - ப்ரதாநசதகம் என்னும் ரஹஸ்யம், பரபக்ஷே ச - பிறர் மதத்தைக் கண்டிப்பதிலும், ஸதாம் - ஸாதுக்களுக்கு, ப்ரயோஜநே ச - பயன் அளிப்பதிலும், சதகோடி பாவம் - சதகோடியாயிருத்தலை, பஜதி - அடைகிறது, அதாவது ஸாதுக்கள் விஷயத்தில் நூறு மடங்கு அதிகமாய் இருக்கும், ப்ரதிவாதி நிரஸநத்தில் நூறு கோடிகளாக அதாவது யுக்திகளாக இருக்கும் என்றபடி.

2 பொங்கு - பொங்குகின்ற, புனல் - ப்ரவாஹத்தையுடைய, ஆறுகளில் - நதிகளில், புவனம் எல்லாம் - லோகங்களை எல்லாம், பொன் - ஸ்வர்ணத்தைப்போல் ஸ்ப்ருஹணீயமான, கழலால்-திருவடிகளினால், அளந்தவன் தன் - அளந்தருளின த்ரிவிக்ரமனுகிய பகவானுடைய, தாளால் வந்த - திருவடிகளில் இருந்து உண்டான, கங்கை எனும் நதி போல் - கங்கை என்கிற நதியைப் போலவும், கடல்கள் ஏழில் - ஏழு ஸமுத்திரங்களுக்குள்ளே, கமலை - பெரிய பிராட்டியார், பிறந்து - அவதரித்து, அவன் - (அத்தால்) அந்தப் பகவான், உகந்த - ப்ரீதி செய்யா நிற்கும், கடலேபோல - க்ஷீர ஸமுத்திரத்தைப் போலவும், சங்குகளில் - சங்கங்களில், அவன் ஏந்தும் - அந்தப் பகவான் தரித்துக் கொண்டிருக்கும், சங்கே போல - ஸ்ரீ பாஞ்ச ஜந்யம் என்னும் சங்கைப் போலவும், தாரில் - மாலைகளில் அவன் - அந்தப் பகவான் தரிக்கும், தண் - சீதளமான, துளவத்தாரே போல - துளவ மாலையைப் போலவும், இவை - இவ்வர்த்தங்கள், மேலாம் - உத்க்ருஷ்டங்களானவை என்று, எங்கள் குலபதிகள் - நம்முடைய ஆசார்யர்கள், எண்ணிய - நிணைத்த, நல்வார்த்தைகள் - நல்ல வார்த்தைகளை, நாம் - அவர்களை ஆச்ரயித்திருக்கும் நாம், இசைகின்ரோம் - அங்கீகரித்தோம், அதாவது எத்தனையோ வார்த்தைகள் (க்ரந்தங்கள்) லோகத்தில் இருந்தாலும் அவைகள் எல்லாம் நம்மாழ்வார் முதலாகத் திருவவதரித்த நம் ஆசார்யர்களுடைய க்ரந்தங்களுக்கு ஸத்ருசமாகா என்று அப்யுபகமம் செய்தோம் என்றபடி.

1 'வார்த்தையறிபவர் மாய்வற்காளன்றி ஆவரோ' என்று ஆழ்வார் ஓர் அவதாரத்தில் ப்ரத்யக்ஷாதி வார்த்தையை உதாஹரித்த இது மற்றும் ஆசார்யர்கள் முமுக்ஷுக்களுக்கு அருளிச் செய்யும் ப்ரதாந நிஷ்கர்ஷ வாக்யங்களுக்கும் உபலக்ஷணம். அவை எல்லாம் கூட இங்கே விவக்ஷிதங்களாகவுமாம். அவை எவை என்னில்?

அவதாரிகை

(பகவானைக் காட்டும் ப்ரமாணங்களில் ப்ரதாநமானவை—1 - 3)

ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களிற் காட்டிலும்

2 'वेदात् शास्त्रं परं नास्ति' (வேதாச்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி) இத்யாதிகளிற்படியே மற்றுள்ள சாஸ்த்ரங்களிற் காட்டிலும் பாரலௌகிக புருஷார்த்த தத்துபாயங்களை யதாவஸ்த்திதமாகக் காட்டுகிற வேதம் ப்ரதாநம். 1

அதில் பராவர தத்த்வ ஹித புருஷார்த்தங்களில் அந்யதா ஸித்தப்ரமாணாந்தரங்களால் வரும் கலக்கங்களையெல்லாம் தீர்க்க வல்ல வேதாந்தம் ப்ரதாநம். 2

அது தன்னில்

3 'इदं पुरुषसूक्तं हि सर्वं वेदेषु पठ्यते'

(இதம் புருஷஸூக்தம் ஹி ஸர்வ வேதேஷு பட்ட்யதே)

என்கிறபடியே ஸர்வவேத படிதமாய்க் கொண்டு ஸ்ரிய:பதியான மஹாபுருஷனை மூல காரணமாகவும், மோக்ஷோபாயமாகவும் காட்டுகிற புருஷஸூக்தம் ப்ரதாநம். 3

(மந்த்ரங்களில் ப்ரதாநமானவை—4 - 5)

இம் மஹாபுருஷனை ஆராதிப்பார்க்கு மந்த்ரங்களாகச் சொன்னவற்றில் வ்யாபக வாக்கம் ப்ரதாநம். 4

அதிலும் ஸர்வாசார்யபரிக்ரஹாதிசயத்தாலும் ஸோஷஸோஷி ஸர்வ தத்த்வ கண்டோக்தியாலும்,

'न मन्त्रोऽष्टाक्षरात् परः' (நமந்த்ரோ ஷ்டாக்ஷராத் பர:)

என்னும்படியான ஸ்ரீமதஷ்டாக்ஷரம் ப்ரதாநம். 5

---

1 திருவாய் - 7 - 5 - 10.

2 ஈச்வரஸி-புரா - 18 - 33. வேதத்தைக் காட்டிலும் மேலான சாஸ்த்ரமில்லை.

3 இதம் - இந்த, புருஷஸூக்தம்ஹி - புருஷஸூக்தமானது, ஸர்வ வேதேஷு - எல்லா வேதங்களிலும், பட்ட்யதே - படிக்கப்படுகிறது.

(ஐம்மங்களில் ப்ரதாநமானது—6)

இம்மந்த்ரோக்தி மாதாவாக ஆசார்யன் பிதாவாகப் பிறக்கிற வித்யாஜந்மம் ஜந்மங்கள் எல்லாத்திலும் ப்ரதாநம். 6

(ப்ரணவத்தின் அர்த்தங்களில் ப்ரதாநமானவை—7 - 21)

இம்மந்த்ரத்தில் பதங்கள் மூன்றில்

1 'शिरसैकमक्षरम्' (கிராமஸ்ம்யேகமக்ஷரம்)

2 'प्रणवोऽक्षरं परं' (ப்ரணவோ ऽக்ஷ்யக்ஷரம் பரம்)

என்கிற மூலமாகிய ஒற்றைஎழுத்து ப்ரதாநம். 7

த்ர்யக்ஷர ப்ரஹ்மமான இதில் ஸ்ருதிகள் பிரித்துக் காட்டின அக்ஷரங்கள் மூன்றில்

3 'अहमणकारोऽस्मि' (அக்ஷராணு மகாரோ ऽஸ்மி)

என்கிற ஸர்வவாசகஜாத ப்ரக்ருதியான ப்ரதமாக்ஷரம் ப்ரதாநம். 8

இதில் லுப்தவிபக்த்யம்ஸத்திற் காட்டில் ஸர்வவாச்ய ஜாத ப்ரக்ருதியான ஸர்வரக்ஷகனைச் சொல்லுகிற ப்ரக்ருத்யம்ஸம் ப்ரதாநம். 9

இதில் தாத்வர்த்தங்கள் பல உண்டானாலும் உபயுக்தமாகையாலே ரக்ஷணம் ப்ரதாநம். 10

ரக்ஷகமாக இங்கு ப்ரதமோபாத்த விஸேஷ்யத்தினுடைய ரக்ஷகத்வோபயுக்த விஸேஷணங்களில் மூல மந்த்ர விவரணமாத்வயத்தில் முற்பட்ட விஸேஷணம் ப்ரதாநம். 11

இப்படி ஸ்ரீமானுய் அகாரவாச்யனான விஸ்வபதியை ஸர்வ பரவித்யாவேதயன் என்று நிர்ணயிக்கிற நாராயணநுவாகம் தத்த்வ நிர்ணயக வாக்யங்களில் ப்ரதாநம். 12

1 'अस्य मम च शेषं हि विभूतिरुभयात्मिका'

---

1 கீதை - 10 - 25. கிராம் - வார்த்தைகளுக்குள். ஏகம் - ஒரு, அக்ஷரம் - எழுத்தாகிய ப்ரணவமாக, அஸ்மி - ஆகிறேன்.

2 ப்ரணவ:ஹி - ப்ரணவம் அன்றே, பரம் - உயர்ந்த, அக்ஷரம் - எழுத்து.

3 கீதை - 10-33. அக்ஷராணும் - எழுத்துக்களுக்குள், அகார: - அகாரமாக, அஸ்மி - ஆகிறேன்.

1 (அஸ்யா மம ச ஸோஷம் ஹி விபூதிருபயாத்மிகா)
இத்யாதிகளிற்படியே விபூதியைப் பற்ற விஷ்ணுபத்நியும் ஸ்ரீயும் பதியும் ப்ரதாநர்கள். 13

ஏ க மா ன இச்சேஷித்வம் உபயாதிஷ்ட்டாநமாணும் தம்பதிகளில் பதி ப்ராதாந்யம் லௌகிக வைதிக மர்யாதையின் படியே நித்ய நியதமாகையாலே 'பதிகளுக்கும் பரமனான பதி' என்னும்படி நின்ற நாராயணனே ஸர்வ ப்ரதாநனும். 14

இவனே, ப்ருஹத்த்வ ப்ரும்ஹணத்வங்களுடையவை எ ல் லாத்திலும் ப்ரக்ருஷ்டனாகையாலே பரப்ரஹ்மம் என்றும், ஸ்வ நிஷ்ட்ட தத்த்வமாகையாலே பரதத்த்வம் என்றும், ப்ரகாசங்கள் தமக்கும் ப்ரகாசகனாகையாலே பரம் ஜ்யோதிஸ் என் று ம், ஸர்வாத்மாக்களுக்கும் அந்தராத்மாவாகையாலே பரமாத்மா என்றும், தேவதைகள் தங்களுக்கும் ஆராத்யனாகையாலே பர தேவதை என்றும், முக்தருக்கும் ப்ரதாந ப்ராப்யனாகையாலே பராகதி என்றும், முமுக்ஷுக்களுக்கு வஸீகரணீய வர்க்கத்தின் ஸீமாவாகையாலே பராகாஷ்ட்டை என்றும், ஸர்வோபாய ப்ர ஸாதநீய ஸித்தோபாயனாகையாலே பராயணம் என்றும், ஸித்தி ஹேதுக்களில் ஸர்வஸித்தி ஹேதுவாகையாலே பரம தபஸ்ஸு என்றும், பாவநங்கள் தமக்கும பாவநத்வஶக்திப்ரதனாகையாலே பவித்ராணும் பவித்ரம் என்றும்,

2 'गुणैश्च' (குணையத்தம்)
இத்யாதிகளிற்படியே தன் குணங்கள் முதலான மங்களங்களுக் கெல்லாம் மங்களத்வாவஹனாகையாலே மங்களாநாம்சமங்களம் என்றும் இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் வரும் ப்ராதாந்யங்கள் எல்லாத்தையும் நினைத்து லோக ப்ரதாநன் என் று சொல்லு கிறது. 15

---

1 விஷ் - ஸம். உபயாத்மிகா - இரண்டு வகைப்பட்ட, விபூதி: - விபூதியானது, அதாவது நித்ய விபூதியும் லீலா விபூதியும், அஸ்யா:- இந்த லக்ஷ்மிக்கும், மம ச - எனக்கும். சேஷம்ஹி - வசப்பட்டவையல்லவா.

2 ஸ்ரீ வரத - ஸ்தவ - 11. குணையத்தம் - (லோகத்தில் ஒருவரு டைய பெருமைக்கு அவருக்குள்ள) குணங்களே காரணம்.

மற்றும் லோகத்திற்கு ப்ரதாநராய்த் தோற்றுமவர்கள் த்வார மோஷிகளாகையாலே அவர்களைப் பற்றி நித்யமாகவாதல் காதாசித்கமாகவாதல் மோஷமாமவற்றுக்கும் ஸர்வேச்வரனே நிருபாதிக ப்ரதாந மோஷியாய் நிற்கும். 16

இப்படி விச்வமோஷியான நாராயணனையும் மோஷபூதனான நரனையும் அர்ஜுநரதம் போலே முன்னும்பின்னுமாகக் காட்டுகிற ப்ரணவத்தில் மோஷமாகச்சொல்லப்பட்ட ஜீவன் மப்தவ்ருத்தியாலே ப்ரதாநனைய்த்தோற்றும். 17

இஜ்ஜீவன் இங்கு நிரூபகனைய் நின்றாலும் ராஜபுருஷ ராமாநுஜாதி மப்தங்களில்போலே அர்த்த ஸ்வபாவத்தாலே ஸர்வமோஷியே ப்ரதாநனும். 18

இச்மோஷ மோஷிகளை ஸமாநாதிகரண மப்தங்களாலே சொல்லுமிடத்திலும்அப்ருதக்ஸித்த விமோஷணவாசி மப்தங்கள் நிஷ்கர்ஷ பர்யவஸாயியல்லாத பேரது விமோக்ஷ்ய பர்யந்தங்களாகிற ந்யாயத்தாலே ஜீவனுடைய அத்யந்த பாரதந்த்ர்யாதிகளை அநுஸந்திக்கை ப்ரதாநம். 19

இங்கு வ்யதிகரணமாகச் சொல்லுகிற இது ரக்ஷ்யத்வ ரக்ஷகத்வ அணுத்வ விபுத்வாதி வைதர்ம்யாநுஸந்தாநத்தில் ப்ரதாநம். 20

இப்ப்ரணவத்தில்பிறந்த தத்த்வ ஜ்ஞாநம் மோக்ஷோபாயாதிகாராநுப்ரவிஷ்ட ஜ்ஞாநங்களில் ப்ரதாநம். 21

[ஸாத்யோபாயமான ப்ரபத்தியில் நமஃசப்தத்தால்
காணும் ப்ரதாநாம்சங்கள்—22 - 30]

இப்படி ஸித்தஸ்வரூபனைஅதிகாரியினுடையஉபாயாநுஷ்டாநங்களில் மத்யம பத ஸங்க்ருஹீதமான ஸாங்கப்ரபதநம் ப்ரதாநம். 22

இதில்

1 'न्यासः पञ्चाङ्गसंयुतः' (ந்யாஸः பஞ்சாங்கஸம்யுதः)

என்கையாலே ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளைப்பற்ற ஸமர்ப்பணம் ப்ரதாநம். 23

---

1 லக்ஷ்மீ தந்த்ரம் - 17 - 74. ந்யாஸः -- ப்ரபத்தி, பஞ்சாங்க ஸம்யுதः - ஐந்து அங்கங்களுடன் கூடியது.

ஸமர்ப்பணம் தன்னில்

1 ' वपुरादिषु ', 2 ' मम नाथ ', 3 ' फले स्वाम्ययुक्ता '

(வபுராதிஷு, மம நாத, பலே ஸ்வாம்யயுக்தா)

இத்யாதிகளிற்படியே தத்த்வ ஜ்ஞாந ரூபமாக்கொண்டு அந்வயிக்கிற ஸ்வரூப ஸமர்ப்பணாதி பாகத்தில் காட்டில்

4 ' आत्मात्मीय भरन्यासो ह्यात्मनिक्षेप उच्यते '

(ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே)

என்கிற பரந்யாஸம் ப்ரதாநம். 24

இது விதி வாக்யத்தில் ஸாத்த்யமாகச் சோதிதமான ரூபத்தாலே ப்ரதாநம். 25

இத்தாலே வஶீகரணீயமான ஸித்தோபாயம் ஸர்வ காரணத்வ ஸ்வதந்த்ரத்வ அவ்யவஹித உபாயத்வாதிகளாலே ப்ரபத்தி தன்னையும் பற்ற ப்ரதாநம். 26

இந்த நமஸ்ஸில் ஸ்தூல யோஜனையில் ஸாத்த்யோபாயம் ப்ரதாநம். 27

ஸூக்ஷ்மயோஜனையில் நிரபேக்ஷ ஸ்வாதந்த்ர்யாதி நிஷேதம் ப்ரதாநம். 28

பர யோஜனையில்

' नमन नामवान् ' (நமந நாமவாந்)

என்கிற இதின் ஸ்வாரஸ்யத்தைப் பார்த்தால் முன்பு சொன்ன ஸாத்தயோபாயம் ப்ரதாநம். 29

1 ' तत्प्राप्तये प्रधानोऽयं पन्था नमन नामवान् '

---

1 ஆள - ஸ்தோ - 52. வபுராதிஷு - சரீரம், இந்த்ரியம் முதலியவைகளில்.

2 ஆள - ஸ்தோ - 53. மம நாத - என்னுடைய ஸ்வாமியே.

3 லக்ஷ்மீ தந்த்ரம் - 17 - 73. பலே - பலத்தில், ஸ்வாம்யவியுக்ததா - தன்னுடைய என்கிற எண்ணம் இல்லாமை.

4 லக்ஷ்மீ தந்த்ரம் - 17 - 79. ஆத்மாத்மீய பரந்யாஸ: -தான் தன்னைச் சேர்ந்த வஸ்துக்கள் இவைகளின் ரக்ஷணபரத்தைப் பகவானிடத்தில் ஸமர்ப்பிப்பது, ஆத்ம நிக்ஷேப உச்யதே - ஆத்ம நிக்ஷேபம் என்று சொல்லப்படுகிறது.

1 (தத் ப்ராப்தயே ப்ரதாநோபாயம் பந்தா நமந நாமவாந்) என்று ஈச்வரன் தன்னையே விவக்ஷித்தால் ஸித்தோபாயமான அவன்தானே ப்ரதாநம். 30

[நாராயண சப்தத்தில் தத்புருஷஸமாஸத்தின் ப்ராதாந்யம்—31]

இஸ்ஸித்தோபாயத்தை ஸுப்ரஸித்த விசேஷ நாமமாய்க் கொண்டு விசதீகரிக்கிற த்ருதீய பதத்தில் ஸமாஸ த்வயத்தில் உத்தர பதார்த்த ப்ரதாநமாய் உபாயபாவத்தையும் கண்ட்டோக்தி பண்ணுகிற தத்புருஷ ஸமாஸம் ப்ரதாநம். 31

[திருமந்த்ர வாக்ய யோஜநைகளில் ப்ரதாநமானவை—32]

திருமந்த்ரத்திலே யோஜநா பேதங்களாலே ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களில் ஓரொன்றும் இவ்விரண்டும் மூன்றும் சேரவும் ப்ரதாநம். 32

(த்வயத்தின் அர்த்தங்களில் ப்ரதாநமானவை—33 - 36)

இதில் சொன்ன ஸித்த ஸாத்யோபாயங்கள் இரண்டையும் இதின் பல விசேஷத்தையும் விசிஷ்டமாக விசதீகரிக்கிற த்வயம் சரணாகதி மந்த்ரங்களில் ப்ரதாநம். 33

இங்கு திருவடிகளை உபாயமாகச் சொன்ன இது ப்ரபத்திக்கு இலக்கான ச்ரியஃபதியினுடைய ஸ்வரூபத்தில் காட்டில் பராபரய விக்ரஹத்துக்கு ப்ரதிபத்தி ஸௌகர்யத்தாலே

2 'सालम्बनो महा योगः' (ஸாலம்பநோ மஹாயோக;)

என்னும்படியான ப்ராதாந்யத்தையும், அது தன்னில்

3 'अनतिक्रमणीयं हि चरणग्रहणम्'

(அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்)

இத்யாதிகளிற்படியே திருவடிகளைப் பற்றுமதுக்கு க்ருபோத்தம பகத்வாதிசயத்தால் உண்டான ப்ராதாந்யத்தையும் ப்ரகாசிப்பித்தபடி. 34

இப்படிச் சொல்லுமிது இத்தாலே விசிஷ்டனுபவனே பல ப்ரதாந ஸங்கல்பாச்ரயமான ப்ரதாநோபாயம். 35

---

1 அஹிர்-ஸம்- 52-33 தத்ப்ராப்தயே - அவனை அடைவதற்கு, ப்ரதாந: - முக்கியமான, பந்தா: - உபாயம், அயம் - இந்தப் பரமாத்மா, நமந நாமவாந் - நம: என்கிற சப்தத்தைப் பெயராகவுடையது.

2 ஸாலம்பநோ மஹாயோக:-த்யாநத்திற்கு ஆலம்பநமாகவொன்றைப் பெற்றிருக்குமிது ஸ்வரூபவிஷயமானத்யாநத்தைக்காட்டிலும்சிறந்தது

3 சரணக்ரஹணம்-திருவடிகளைப் பிடித்துக் கொள்ளுவது, அநதிக்ரமணீயம் - தாண்டமுடியாததன்றே.

குணதிகளால் வரும் வைஸிஷ்ட்யம் ஸித்தோபாயைக்யத்திற்கும், ஸித்த ப்ராப்யைக்யத்திற்கும் விருத்தமல்லாமையாலே உபநிஷத்துக்களின்படியே இங்கும் ஸித்த உபாய பல பாகத்தில் உபாய ப்ராப்யைக்யம் ப்ரதாநம் (மாகலாம்). 36

(உபப்ரும்ஹணங்களில் ப்ரதாநமானவை—37 - 44)

திருமந்த்ரத்திலும்' த்வயத்திலும் ப்ரகாஸித்த ப்ரபத்தி ஸாஸ்த்ரார்த்தத்தை உபப்ரும்ஹிக்குமவற்றில் பகவச் சாஸ்த்ரம் ப்ரதாநம். 37

இவ்வர்த்தத்தைச் சித்த ரஞ்ஜநத்தோடே ஸர்வரையும் எளிதாகத் தெளிவிக்குமவற்றில் தொண்டரடிக்கு அடிபொடியாழ்வார் அருளிச் செயல் ப்ரதாநம். 38

இதற்கு இதிஹாஸங்களில் ஸாரஸ்ய தம்பதிவாக்ய விஸேஷ பூஷிதமான ஸ்ரீமத் ராமாயணம் ப்ரதாநம். 39

ந்யாஸோபாஸநாத்ருப ஸர்வ ஸாஸ்த்ரார்த்த உபப்ரும்ஹணங்களில்

1 ' चत्वार एकतो वेदाः भारतं चैकमेकतः '

(சத்வார ஏகதோ வேதாः பாரதம் சைகமேகதः)

ஏனனும்படி நிற்கிற மஹாபாரதம் ப்ரதாநம். 40

2 ' धर्मे चार्थे च कामे च मोक्षे च भरतर्षभ '

(தர்மே சார்த்தே ச காமே ச மோக்ஷே ச பரதர்ஷப)

இத்யாதிகளிற்படியே த்ரிவித புருஷார்த்த ஸ்தாபகமான இதில் அத்யாத்ம பாகம் ப்ரதாநம். 41

அதிலும்

---

1 பார - ஆதி - 1 - 293. சத்வாரः வேதாः - நான்கு வேதங்கள், ஏகதः - ஒரு பக்கம், ஏகம் பாரதம் ச - பாரதம் ஒன்றே, ஏகதः - ஒரு பக்கம்.

2 பார - ஆதி - 3 - 26. பரதர்ஷப - பரத ச்ரேஷ்டனே, தர்மே ச - தர்மத்திலும், அர்த்தே ச - அர்த்த விஷயத்திலும் (ஐச்வர்யத்திலும்), காமே ச - காமங்களிலும், மோக்ஷே ச - மோக்ஷத்திலும், (இந்த க்ரந்தம் விசேஷித்து ப்ரதிபாதிக்கிறது).

1 'अत्रोपनिषदं पुण्यां कृष्णद्वैपायनोऽब्रवीत्

(அத்ரோபநிஷதம் புண்யாம் க்ருஷ்ணத்வைபாயநோப்ரவீத்) என்னும்படி ஸர்வோபநிஷத் ஸாரமான கீதா ஶாஸ்த்ரம் ப்ரதாநம். 42

அது தன்னில்

2 'सर्वगुह्यतमं' (ஸர்வகுஹ்யதமம்)

என்று ப்ரஶம்ஸித்து, அநந்தரம் ஶாஸ்த்ர ஸாரார்த்த ஸங்க்ரஹம் பண்ணுகிற இரண்டு ச்லோகம் ப்ரதாநம். 43

அவை இரண்டிலும் த்வயார்த்தமான ப்ரபதநத்தினுடைய அதிகாரி நைரபேக்ஷ்ய விஷய ஸ்வரூப பல விஶேஷங்களைச் சுருங்கத் தெளிவிக்கையாலே சரம ச்லோகம் ப்ரதாநம். 44

(சரம ச்லோகார்த்தங்களில் ப்ரதாநமானவை—45 - 47)

இதில் வாக்யாம்சங்கள் மூன்றில் உத்தர வாக்யங்கள் விதிஶேஷங்களாய் அந்வயிக்கிறனவாகையாலே பூர்வ வாக்யம் ப்ரதாநம். 45

ப(ஹ)ல வாக்யத்திற் சொன்ன ப்ரதிபந்தக நிவ்ருத்தியைப் பற்ற அர்த்த ஸ்வபாவத்தாலே

3 'मामेवैष्यसि' (மாமேவைஷ்யஸி)

இத்யாதிகளிற்சொன்ன ஸ்வத:ப்ராப்த ஸ்வாமி லாபம் ப்ரதாநம்.

அர்ஜுநனுடைய ஶோக நிவர்த்தக வாக்யங்களில் த்விதீய அத்யாயோகதமான அஸ்தாந ஸ்நேஹாதி நிபந்தந ஶோக நிவர்த்தநத்திலும், ஷாட ஶாத்யாயத்தில் சொன்ன அநதிகாரித்வ ஶங்கா நிபந்தந ஶோக நிவர்த்தநத்திலும் காட்டில் இங்கு சொல்லுகிற ஶீக்ரகாரி ஸுகரோபாய உபதேஶத்தாலே விளம்பித பல க்ருச்ச்ர ஸாத்யோபாய உபதேஶ ஜநித ஶோக நிவர்த்தநம் ப்ரதாநம். 47

---

1 பார - ஆதி - 1 - 274. அத்ர-இந்த மஹாபாரதத்தில், புண்யாம்- பரிசுத்தமான, உபநிஷதம்- உபநிஷத்தை (கீதையை), க்ருஷ்ணத்வைபாயந: - க்ருஷ்ணத்வைபாயநர் என்கிற பெயருடைய வ்யாஸர், அப்ரவீத் - சொன்னார்.

2 கீதை - 18 - 64. ஸர்வ குஹ்யதமம் - எல்லாவற்றையும் விட மிகவும் ரஹஸ்யமானது.

3 கீதை - 18 - 65. மாமேவ-என்னையே, ஏஷ்யஸி-அடையப்போகிறாய்

(ஆர்த்த த்ருப்த ப்ரபந்நர்களின் க்ரமம்—48 - 51)

இப்படி ரஹஸ்யத்ரயார்த்தம் தெளிந்து பரந்யாஸம் பண்ணுகிற அதிகாரிகளில் த்ருப்தரில் காட்டில் ஆர்த்தர் ப்ரதாநர். 48

ஆர்த்தர் தங்களில் க்ஷணந்தராதி காலக்ஷேப க்ஷமதையில் தாரதம்யத்தாலே ப்ரதாந தாரதம்யமுண்டாம். 49

த்ருப்தனுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமான கதி சிந்தநாதிகளில் 1 'மாக வைகுந்தம் காண்பதற்கு என்மனம் ஏகமெண்ணும்,' 2 'வாங்கு எகீன நீ மணிவண்ணு' என்று இருக்குமது ப்ரதாநம். 50

இவனுக்கு அந்திம ப்ரத்யயம்

3 'मदीयैव दयया अतिप्रवृद्धः' (மதீயயைவ தயயா அதிப்ரவுத்தः) என்கிறபடியே ஸ்வயத்ந நிரபேக்ஷமாக ஸித்திக்கும்படி அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்குமது ப்ரதாநம். 51

(ஆஜ்ஞாநுஜ்ஞா கைங்கர்யங்களில் ப்ரதாநமானவை—52 - 54)

இவனுக்கு இங்கு இருந்த காலம் ப்ராப்தமான ஆஜ்ஞா அநுஜ்ஞா ஸித்தங்களான கைங்கர்யங்களில் ஆஜ்ஞா ஸித்தமானவை அகரணத்தில் அதிகாரோசித ப்ராயஶ்சித்தம் பண்ண வேண்டும்படி நிற்கையாலே ப்ரதாநங்களாம். 52

அவை தம்மில்

4 'श्रूयतां धर्मसर्वस्वं' (ஶ்ரூயதாம் தர்மஸர்வஸ்வம்)

5 'परदारेषु जात्यन्धाः' (பரதாரேஷு ஜாத்யந்தாः)

இத்யாதிகளிற்படியே விஹித கரணங்களிற் காட்டில் நிஷித்த வர்ஜநம் ப்ராசுர்யேண ப்ரதாநம். 53

அநுஜ்ஞாஸித்த கைங்கர்யங்களில் க்ரியாம்ஶத்தில் ஜ்ஞாநாம்ஶம் ப்ரதாநமானபடியாலே ஜ்ஞாநோபயுக்த பரபந்த பரி

---

1 திருவாய் - 9 - 3 - 7. 2 திருவாய் - 4 - 9 - 5.

3 சரணாகதி கத்யம் - ம் பக்கம் பார்க்க.

4 தர்ம ஸர்வஸ்வம் - தாம ஸமக்ஷமாத்தம், ஶ்ரூயதாம் - கேட்கப்படட்டும்.

4 விஷ்ணுதர்மம் - 76 - 22. பரதாரேஷு - மற்றவர்களுடைய குற்றங்களில், ஜாத்யந்தாः - பிறவிக் குருடர்களாய் (யார் இருக்கிறார்களோ அவர்கள் எனக்கு மிகவும் ப்ரியமானவர்கள்).

ஶீலநமும்ஜ்ஞாதார்த்த ப்ரதிஸந்தாந ரஸஹேதுவானத்வயவசநாதிகளும ப்ரதாநங்கள் 54

(வர்ஜநீயங்களிலும் உபாதேயங்களிலும் ப்ரதாநமானவை—55 -63)

பரோபதேஶ ரூபத்தாலே இவற்றைப் பரிஶீலிக்கும்போது கேட்கிற ஶிஷ்யர்களில்

1 'नास्तिको भिन्नमर्यादः' (நாஸ்திகோ பிந்நமர்யாதः)

2 'विद्याचोरो गुरुद्रोही' (வித்யாசோரோகுருத்ரோஹீ)

3 'न स्यास्यन्युपदेशे च' (நஸ்த்தாஸ்யந்த்யுபதேஶே ச)

4 'उपदिष्टेष्वविश्वस्ताः' (உபதிஷ்டேப்யவிஶ்வஸ்தாः)

இத்யாதிகளிற் சொன்ன தோஷமுடையவர்களிற் காட்டிலும் அந்தர்யாமிபர்யந்த நித்யகர்ம பஹிர்ப்பூத தேவதாந்தர ஸ்பர்ஶம் விடாதவன் வர்ஜநீயரில் ப்ரதாநம். 55

யதோபதேஶம் ப்ரதிஷ்டித புத்தியாய் யதா ஶாஸ்த்ரம் ஆசரித்து, அடைந்தவர்களோயும ஆசரிப்பிக்கைக்கு ருசியும் ஶக்தியுமுடையவனுய்

5 'ब्रह्मविद्ब्यः परं भूत न किंचिदिह विद्यते'

(ப்ரஹ்மவித்ப்யः பரம பூதம நகிஞ்சிதிஹ வித்யதே)

என்று கொண்டாடும்படியானவன் உபாதேயரில் ப்ரதாநன். 56

சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரங்கள் எல்லாம் உடையவனேயாகிலும்

6 'दया सर्वेषु भूतेषु' (தயா ஸர்வேஷு பூதேஷு)

7 'अमानित्वमदम्भित्वम्' (அமாநித்வம் அதம்பித்வம)

---

1 நாஸ்திகः - தெய்வம் இல்லை என்பவன், பிந்நமர்யாதः - உலக மர்யாதையைமீறுபவன்

2 வித்யாசோரः - (வழியல்லாவழியால் வித்யையை க்ரஹித்த வனுகிற) வித்யையைத் திருடினவன், குருத்ரோஹீ - குருவிற்கு த்ரோஹம் செய்பவன்

3 உபதேஶே ச - உபதேசம் செய்யப்பட்டதில் நஸ்த்தாஸ்யந்தி- நிற்காதவர்கள்

4 உபதிஷ்டேபி உபதேசம் செய்யப்பட்திலும், அவிச்வஸ்தாः - நம்பிக்கையில்லாதவர்கள்

5 ப்ரஹ்மவித்ப்யः - ப்ரஹ்மத்தை அறிந்தவர்களை விட, பரம்பூதம்- மேலானது, இஹ - இங்கு நவித்யதே - இல்லை.

6 கௌதம தர்மசாஸ்த்ரம் - 1 - 8 ஸர்வேஷு பூதேஷு- எல்லா ப்ராணிகளிடத்திலும். தயா - தயை

7 கீதை 13 - 7 அமாநித்வம் - பெரியோர்களிடத்தில் அவமானம் செய்யாமல் இருக்கை, அதம்பித்வம் - டம்பமில்லாமலிருக்கை

இத்யாதிகளிற் சொன்ன ஆத்மகுண பூர்த்தியில்லாதவனிற் காட்டில் ஸம்ஸ்காரங்களில் ஏகதேசமுடையவனேயாகிலும் அதிகாராநுகுண கைங்கர்ய பர்யந்த ஆத்மகுண பூர்த்தியுடையவன் ப்ரதாநன். 57

இக் கைங்கர்யம் ஸ்வநிதாந பூத ஸேஷத்வம் போலே பாகவத பர்யந்தமாய் நின்றுல்,

1 'स्वाराधनं विहायापि' (ஸ்வாராதநம் விஹாயாபி)

இத்யாதிகளிற்படியே பாகவத கைங்கர்யம் ப்ரதாநம். 58

பாகவதரில் ஸம்யக் ஜ்ஞாநாதிகர் ஸத்காரயோக்யரில் ப்ரதாநர். 59

நிர்வேதாதிகர் ஸல்லாபயோக்யரில் ப்ரதாநர். 60

வைராக்யாதிகர் ஸஹவாஸ யோக்யரில் ப்ரதாநர். 61

அபராத பீருக்களாய் அவதாரங்களில் போலே ஸ்வமாஹாத்ம்யத்தை மறைத்து வர்த்திக்குமவர்கள் பீதி யோக்யரில் ப்ரதாநர். 62

2 'आह्लाद शीत' (ஆஹ்லாத ஶீத)

இத்யாதிகளிற்படியே பக்தி பரவஶர் ப்ரீதி யோக்யரில் ப்ரதாநர். 63

(கைங்கர்யங்களில் ப்ரதாநமானவை—64 - 68)

இப் பாகவதருடைய கைங்கர்யங்களில்

3 'गुरोः गुरुतरं नास्ति' (குரோர் குருதரம் நாஸ்தி)

இத்யாதிகளிற் சொன்ன ஆசார்ய கைங்கர்யம் ப்ரதாநம். 64

உத்தமமான இது மத்யமத்தோடே கூடினுல் ப்ரதாநதரம். 65

ப்ரதம மத்யமங்கள் இரண்டோடும் கூடினுல் ப்ரதாநதமம். 66

---

1 விஷ்ணு தத்த்வம் - ஸ்வாராதநம் - விஹாயாபி (பகவாஜ்ஞகிய) என்னுடைய ஆராதனத்தை விட்டாவது

2 ஆஹ்லாத சீத - ஸந்தோஷத்தினுல் குளிர்ந்த பாஷ்பத்தைப் பெருக்குகிற

3 குரோ: - குருவைக் காட்டிலும், குருதரம் - உயர்ந்த வஸ்து, ந அஸ்தி - இல்லை

இவர்களுடைய கைங்கர்யங்களில் தனக்குப் பலவும் அமைக் யமானுல் ஸாஸ்த்ரானுகுணமாக ஸக்யமானவற்றில் ப்ரதிஸம் பந்தி உகந்தது ப்ரதாநம். 67

இப்படி உகப்பிக்குமவற்றில் பாவ விஸேஷம் ப்ரதாநம் என் னும் இடத்தை

1 'செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை'

முதலான ப்ரமாணங்களிலே கண்டு கொள்வது. 68

(கைங்கர்ய பலனில் ப்ரதாநமானது—69)

சேதந வ்யாபாரங்கள் எல்லாம் ஸ்வப்ரயோஜநார்த்தங்கள் என்கிற ந்யாயத்தாலே கைங்கர்யத்தில் தன் உகப்பும் ப்ரயோ ஜநமானுலும், இது தானும் பரமேஷம் என்று தெளிகையாலே

2 'प्रहर्षिष्यामि' (ப்ரஹர்ஷயிஷ்யாமி)

என்கிற பரன் உகப்பே ப்ரதாநம். 69

(அவதாரங்களில் ப்ரதாநமானவை—70 71)

கைங்கர்ய லக்ஷ்யங்களான பகவத் விக்ரஹங்களில் பர வ்யூ ஹாதி க்ரமத்தாலே ப்ராதாந்ய க்ரமம். 70

அவை எல்லாவற்றிலும் பரத்வ ப்ரதிபத்தி தார்ட்யமுடை யவனுக்குத் தனக்கு ருசித்த பகவதவதாரம் எல்லாம் ப்ரதாநம். 71

(யுகங்களில் ப்ரதாநமானவை—72 . 73)

அச்சித்ரமாக இவனுக்கு ஸர்வ காலங்களும் யதா ஸாஸ்த் ரம் ஏதேனுமொரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூப கைங்கர்ய யோக் யங்களானுலும் ஸத்த்வாதிகளால் உண்டான ஔசித்யாதி ஸயத்தாலே க்ருத யுகாதிகளுக்கு ப்ராதாந்யம். 72

3 'ध्यायन् कृते यजन् यज्ञैः त्रेतायां'

(த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஃ த்ரேதாயாம்)

இத்யாதிகளிற்படியே லகுவான ஆநுகூல்ய வ்யாபாரம் குரு

---

1 நாச்சி திரு - 11 - - 10

2 ஆள ஸ்தோ-46 ப்ரஹர்ஷயிஷ்யாமி-ஸந்தோஷிப்பிக்கப்போகி றேன்

3 விஷ்ணு புராணம் - 6 - 2 - 17 க்ருதே-க்ருதயுகத்தில், ந்யாயந் - பகவாராதநம் செய்தும், த்ரேதாயாம் - த்ரேதாயுகத்தில், யஜ்ஞைஃ - யஜ்ஞங்களினுல், யஜந் - யாகம் செய்தும்

வான பகவத் ப்ரீதியைப் பிறப்பிக்கையாலே கலி ப்ராதாந்யம் சொல்லப்பட்டது. 73

(கைங்கர்யம், உபகரணம், தேசம், தீர்த்தம், தசை
இவற்றில் ப்ரதாநமானவை—74 - 84)

கைங்கர்யோபகரணங்களில் 1 'विचित्रा देहसंपत्तिः'
(விசித்ரா தேஹஸம்பத்திः) இத்யாதிகளில் சொன்ன உள்ளம், உரை, செயல் உள்ள இம்மூன்றும் ப்ரதாநம். 74

இவை அநுகுணங்களாகில் துளஸீ தோயாதி பாஹ்யோபகரணங்களில் ஸாஸ்த்ர அவிருத்தமாகப் பெற்றது ப்ரதாநம். 75

கைங்கர்ய தேஸங்களில் அநாபத்தில் பாகவதோத்தரமான பகவத் க்ஷேத்ரம் ப்ரதாநம். 76

அதில் ஸ்வயம் வ்யக்த ஸைத்த ஆர்ஷ வைஷ்ணவங்களில் பூர்வ பூர்வம் ப்ரதாநம். 77

இவை கிட்டாத காலத்தில்
2' கருந்தட முகில் வண்ணனைக் கடைக்கொண்டு கை தொழும் பத்தர்கள் ' இருந்த ஊர் தானே 3 'வைகுந்த மாகும் தம் ஊர் எல்லாம் '
என்னும்படி ப்ரதாநம். 78

கைங்கர்ய யோக்யதாபாதக தீர்த்தங்களில் யதாதிகாரம் அவகாஹநாதிகள் பண்ணுமவனுக்கு மாநஸ தீர்த்தமும், அத் தீர்த்தத்திலே அவகாஹித்தவர்களும் ப்ரதாநர் 79

கைங்கர்ய தஸைகளில் ஸாண்டில்யாதிகள் சொன்ன கரணத்ரய ஸுத்தியுள்ள தஸா விஸேஷம் ப்ரதாநம். 80

4 'रागाद्यपेतं हृदयम्' (ராகாத்யபேதம் ஹ்ருதயம்)
இத்யாதிகளாலே கரணத்ரய தோஷங்களில் ப்ரதாநங்களும் காட்டப்பட்டன. ஆந்தர சத்ருக்களாய் ஜேதவ்யங்களான இத் தோஷங்கள் எல்லாவற்றிலும்

---

1 விஷ்ணுதத்வம் ம் பக்கம் பார்க்க
2 பெரியா- 4 - 4- 7 3 திருவாய் 5 - 3 - 11
4 ராகாத்யபேதம் - ராகம் முதலியவைகளினால் கெடுக்கப்டாத, ஹ்ருதயம் - மனது

1 'कृतः पापं न कुर्यात्कः'

(க்ருத்தः பாபம் ந குர்யாத் கः)

இத்யாதிகளிற்படியே க்ரோதமாய்ப் பரிணமிக்கும்படி அதி ப்ரவ்ருத்தமான காமம் ப்ரதாநம். 81

தோஷங்கள் புகாதபடி பண்ணுமவற்றில் அநுஷ்டாஸநத்தாலும், அநுக்ரஹத்தாலும் ஸிக்ஷகரான ஸாத்த்விகரோடு உண்டான ஸஹவாஸம் ப்ரதாநம். 82

தோஷமூலங்களாய்

2 'न क्षमामि' (ந க்ஷமாமி)

என்னப் பண்ணும் அபசாரங்களில் அஸஹ்யாபசாரம் ப்ரதாநம். 83

அது தன்னில் க்ருதக்நதையடியாக வரும் ஆசார்ய த்ரோஹம் ப்ரதாநம். 84

(அபராத பரிஹாரங்களில் ப்ரதாநமானவை—85 - 88)

2 'न क्षमामि' (ந க்ஷமாமி)

என்கிறவனைக் கடுக ப்ரஸாதிப்பிக்குமவற்றில்

3 'अन्तरेणांजलिं बद्ध्वा' (அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா)

'4 'अंजलेः परमा मुद्रा' (அஞ்ஜலி: பரமா முத்ரா)

இத்யாதிகளிற்படியே அநுதாப க்ருதஜ்ஞத்வாதி யுக்தமான அஞ்ஜலி பந்தம் ப்ரதாநம். 85

பாகவதாபசார பரிஹாரங்களில் பாகவதரை முன்னிட்டே க்ஷமிப்பிக்குமது ப்ரதாநம். 86

அநுதாபாதிகள் இல்லாதபோது முடிவில் அத:பாதியாகாதபடி பண்ணுமவற்றில் ஆசார்யனுடைய ஆ ந் ரு ஶ ம் ஸ் ய ம் ப்ரதாநம். 87

இது தனக்கு மூலமாய்

---

1 ராமா-ஸுந்த. 55 - 5 க்ருத்தः - கோபத்தையுடைவனுனக:-எவன், பாபம் - பாபத்தை, ந குர்யாத்-செய்யமாட்டான்

2 வராஹபுராணம் - ந க்ஷமாமி - பொறுக்கமாட்டேன்

3 ராமா - கிஷ் - 32 17230-ம் பக்கம் பார்க்க

4 பரத்வாஜ ஸம்- 227 - ம் பக்கம் பார்க்க

தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணி கொள்ள வல்ல ஸர்வ பரமாசார்யனுடைய வாநர ராக்ஷஸ வர்க்க ஸாக்ஷி கமான வ்ரத விமோஷம் அநுதப்தரைத் தேற்றுமவற்றில் ப்ரதா நம். 88

(ஆசார்ய ப்ராசார்ய தத் கைங்கர்ய விஷயத்தில் ப்ரதாநமான வை—89 - 93)

1 'आचार्यः श्रेष्ठो गुरूणां'

(ஆசார்யः ஸ்ரேஷ்டோ குருணும்)

என்கையாலே குருவர்க்கத்தில் ஆசார்யன் ப்ரதாநன். 89

அத்யாத்மோபதேஷ்டாக்கள் பலர் உண்டானபோது மூல மந்த்ராதி முகத்தாலே அவ்யவஹித மோக்ஷோபாயத்தை உபதே ஸித்தவன் ப்ரதாநன். 90

ஆசார்ய ப்ராசார்ய ஸமவாயத்தில் ப்ராசார்யாநுவர்த்தநம் ப்ரதாநம். 91

2 'तमिमं सर्वसंपन्नं' (தமிமம் ஸர்வ ஸம்பந்நம்)

இத்யாதிகளிற்படியே ஸர்வ பரமாசார்யனை ஸர்வேஸ் வரன் ஸந்நிதியில் ஆசார்யாநுஸிஷ்டமான பகவதநுவர்த் நம் ப்ரதாநம். 92

பகவத் ஸந்நிதியில்

3 'राजा वा राजपुत्रो वा' (ராஜாவா ராஜபுத்ரோ வா)

4 'एकान्तिनो महाभागाः' (ஏகாந்திநோ மஹாபாகாः)

இத்யாதிகளிறபடியே ஏகாந்தி வ்யதிரிக்த உபசாரம் அப சாரங்களில் ப்ரதாநம் 93

(ஏகாந்திகளிலும் அவர்கள் கைங்கர்யத்திலும் ப்ரதாநமான வை-94-98)

ஏகாந்திகளில் மோக்ஷ மாத்ர ப்ரயோஜநன் ப்ரதாநன். 94

---

1 கௌதம - தர்ம - 1 -2 குருணும் - குருக்களுக்குள், ஆசார்யः - ஆசார்யன், ச்ரேஷ்டः - உயர்ந்தவன்

2 பார - ஸபா - 41 - 21 ஸர்வஸம்பந்நம் - எல்லா ஸம்பத்துக் களையுமுடைய, தம் - அந்த, இமம்-இவரை

3 ராஜாவா-ராஜனாலும், ராஜபுத்ரோ வா - ராஜபுத்ரனாலும்

4 ஏகாந்திநः - பரமைகாந்திகள், மஹாபாகாः - மிகவும் சிறந்த வர்கள்

க்ருதக்ருத்யனான அதிப்பிரயோஜனனுடைய கைங்கர்யம் முக்த கைங்கர்ய ஸமமாகையாலே முமுக்ஷு கைங்கர்யங்களில் ப்ரதானம். 95

பகவத் பாகவத ஸம்ருத்தியையும், பக்தி தத்த்வஜ்ஞானங்களையும், நதபிதாரதிபாப நிவ்ருத்திபரயும் பற்றக்காரண கர்மம் ப்ராப்தமானாலும், பகவானே தன்னையே யாதல், அவனுக்கு அஸாதாரணனையே யாதல் அபேக்ஷிக்குமது ப்ரதானம். 96

ஸம்யக் ஜ்ஞானாதி வர்த்தங்களில் ஸர்வகாலத்திலும்

1 'मानं दक्त्वा यो नरः वृद्धसेवी'

(மாநம்த்யக்த்வா யோ நரோவ்ருத்தஸேவீ)

இத்யாதிகளிற் சொன்ன ஜ்ஞானவ்ருத்தோபாஸநம் ப்ரதானம். 97

இஸ் ஸம்யக் ஜ்ஞானாபிவ்ருத்தியாலே வரும் ஸத்த்வோத்ரேகம் பகவதநுபவரஸ விரோதி மாநஸ வ்யாதி பரிஹாரங்களில் ப்ரதானம். 98

குணதோஷங்களில் மமதமாதி ஸஹிதமான ஸாத்த்விக ஸுகம் ப்ரதானம். 99

(ஸுகாதிகளில் ப்ரதானமானவை—99 - 101)

இப்படி இவன் பெறும் ப்ரயோஜந பரம்பரையில் முமுக்ஷுக்களுடைய பரோக்ஷ அபரோக்ஷவிச்சிந்நாநுபவத்தில் ஸம்பாவிதமான ஸ்வாதந்த்ர்யோந்மஜ்ஜநப்ரஸங்கமில்லாத அவிச்சிந்ந ஸாக்ஷாத்காரபரிவாஹமாய், நாராயண ரஸத்தில் சதுர்த்தியிலே விவக்ஷிதமாய், நமஸ்ஸாலே ஸோதிதமாய் நித்ய நிர்த்தோஷ நிருபாதிக கைங்கர்யத்தாலே வரும் நிரதிசயாநந்தரூபமான முகதஸுகம் ஸர்வஸுகங்களிலும் ப்ரதானம். 100

இஸ்ஸுகம் ஈச்வரஸுகங்களிலும் காட்டில் ந்யூநம் இல்லாத படியை

தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள் செய்வர்'

---

1 மாநம் த்யக்த்வா-வெட்கத்தை விட்டு விட்டு, யோ நரः-எந்த மனிதன், வ்ருத்தஸேவீ - வ்ருத்தர்களை வழிபடுகிறானே

என்கிற தாகையாலே முக்தனுக்கு வரும் ஸ்வாதந்த்ர்யமும் இக்கைங்கர்யத்தளவிலேயாய்ப் பராதீநமாய் நிற்கையாலே மோக்ஷ ப்ரதனுன ஸர்வஶரீரிக்குப் பூர்வோக்த நித்ய ஸித்த நிருபாதிக ப்ராதாந்யம் ஸுப்ரதிஷ்டிதம். 101

1 சீர்க்கடலின் திரையென்னத் தகவால் மிக்க
தேசிகராய்த் திணி இருளாம் கடலை நீக்கிப் *
பாற்கடலோன் திருவணையாய் நின்று, பாரம்
காணுத பவக்கடலைக் கடத்துகின்ருன் *
நீ(ஈ)ர்க்கு மரக்கலமென்ன விரை(இறை)வர் இன்பம்
எழுந்தழியும் குமிழியென இகந்தொழிந்தோம் *
ஆர்க்கினி நாம் என் கடவோம், நமக்கும் ஆர் என்
கடவார் என்று, அடைந்தவர்கட்கு அறிவித்தோமே 26
காசினியின் வரையனைத்தும் காயாவண்ணன்
கடைந்தெடுத்த கௌத்துவத்தின் சீர்மைக்கொவ்வா *

---

1 பாற்கடலோன் - திருப்பாற் கடலில் சயனித்துக் கொண்டிருக்கும் பகவான். சீர்க்கடலின் -மேன்மையுடைய ஸமுத்திரத்தின், திரை என்ன - அலை என்னும்படி (ஒன்றின் மேல் ஒன்றாய் மோதிக் கொண்டு வருகிற என்றபடி) தகவால்- க்ருபையினால், மிக்க - உயர்ந்த வர்களான, தேசிகராய் - ஆசார்யர்களாய் திருவுதரித்து, திண் திருடமான, இருளாம் - இருட்டாகிய, கடலை - ஸமுத்திரத்தை, (அஜ்ஞாநமாகிய ஸாகரத்தை) நீக்கி, திரு அணையாய்-மேன்மையான அணையாய், நின்று, பாரம்-கரை, காணுத - பார்க்க முடியாத, பவக்கடலை - ஸம்ஸாரமாகிற ஸாகரத்திலிருந்து, நீர்க்கு - ஜலத்திற்கு, மரக்கலம் என்ன - ஓடம் போல, கடத்துகின்ருன் -கரையேற்றுகிருன், ஈர்க்கும் என்கிற பாடத்தில்(மனிதர்களை)இழுத்துச் செல்லுகிறவென்றபடி,விரைவர் இன்பம் -விஷய ப்ரவணர்களின் - வைஷயிக ஸுகம் (இறைவர் - ப்ரஹ்மா முதலிய தேவதைகளினுடைய இன்பம்), ஸுகமும் எழுந்து - கிளம்பி, அழியும் - அழிந்து போகிற, குமிழினை - நீர்க்குமிழி போல நிலையில்லாதது என்று நினைத்து இகந்து ஒழிந்தோம் - அதில் ஆசையை விட்டோம் ஆர்க்கு, இனி, நாம், என் கடவோம் - கடமை என்ன இருக்கிறது, நமக்கும், ஆர், என், கடவார் - கடமைப்பட்டுள்ளோர் என்று, அடைந்தவர்கட்கு - ஆச்ரயித்தவர்களுக்கு, அறிவித்தோம் - உபதேசித்தோம் 265

2 காசினியில் - பூலோகத்திலுள்ள, வரை அனைத்தும் - எல்லா பர்வதங்களிலுள்ள ரத்நங்கள், காயாவண்ணன்-காயாம் பூப் போன்ற

காசிமுதலாகிய நன்னகரியெல்லாம்
கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா*
மாசில்மனம்தெளி முனிவர் வகுத்ததெல்லாம்
மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக்கொவ்வா*
வாசியறிந்திவை உரைத்தோம், வையத்துள்ளீர்
வைப்பாக இவை கொண்டு மகிழ்மின்நீரே 27

1 श्रीमद्वेङ्कटनाथः सहृदयहृदय प्रसादनं श्रेष्ठम्।
व्यक्तं प्रधानशतकं व्यतनुत कविकथककरिघटासिंहः ॥

ஸ்ரீமத்வேங்கடநாதः ஸஹ்ருதயஹ்ருதய ப்ரஸாதநம்ஶ்ரேஷ்ட்டம்।
வ்யக்தம் ப்ரதாந ஶதகமவ்யதநுத கவிகதக கரிகடாஸிம்ஹः ॥

யுடைய பகவான், கடைந்து - ஸமுத்திரத்தை மதனம் செய்து, எடுத்ததனக்கென்று ஸ்வீகரித்த, கௌஸ்துபத்தின் - ஸ்ரீகௌஸ்துபமணியின், சீர்மைக்கு ஒவ்வா - பெருமைக்கு ஸத்ருசமாகாது, காசி முதலாகிய நல்நகரியெல்லாம் - (பரம்பரயாமோக்ஷத்தைக் கொடுக்கும் என்கிற ப்ரஸித்தியை பெற்ற) காசி முதலிய நல்ல நகரங்கள் எல்லாம், கார் மேனி - மேகம் போன்ற திருமேனியையுடைய, அருளாளர் - கருணையினால் ஆளப்பட்டிருக்குமவரான, பேரருளாளன் என்னப்படும் பகவான் எழுந்தருளியிருக்கும் கச்சிக்கு - காஞ்சிநகருக்கு, ஒவ்வா - ஸத்ருசமாகாது, மாசு - தோஷம் இல்லாமல், மனம்தெளி - தெளிந்த மனதையுடைய, முனிவர் மஹர்ஷிகள், வகுத்தது எல்லாம் - (லோகோபகாரமாக வெளியிட்ட) ஸ்ம்ருதி - இதிஹாஸபுராணாதிகள் எல்லாமும், மால் உகந்த - பகவானுடைய ப்ரீதிக்குப் பாத்திரர்களான, ஆசிரியர் நம்முடைய (ஆசார்யர்களுடைய) வார்த்தைக்கு - ஸாமான்யமான உக்திகளுக்குக் கூட, ஒவ்வா - ஸத்ருசமாகாது, வாசி அறிந்து — இந்தத் தாரதம்யத்தை அறிந்து, இவை உரைத்தோம் - இந்த [நூறு] அர்த்தங்களை உரைத்தோம், வையத்துள்ளீர் - லோகத்திலுள்ளவர்களே ! நீர் - நீங்கள், இவை - இவற்றை, வைப்பாக - பரம நிதியாகக் கொண்டு மகிழ்மின் - ஸந்தோஷத்தை அடையுங்கள். 27

1 கவி கதக - கவிகளும் தார்க்கிகர்களுமாகிய, கரிகடா யானைக் கூட்டத்துக்கு, ஸிம்ஹः - சிங்கம் போன்ற, ஸ்ரீமத்வேங்கடநாதः - ஸ்ரீமத் வேங்கட நாதரான ஸ்ரீ தேசிகன், ஸஹ்ருதய - பாகவதர்களுடைய, ஹ்ருதய - மனத்திற்கு, ப்ரஸாதநம் - ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய, ச்ரேஷ்ட்டம் - உத்தமமான, ப்ரதாந ஶதகம் - ப்ரதானஶதகம் என்னும் க்ரந்தத்தை, வ்யக்தம் - தெளிவாக, வ்யதநுத, — விரித்துரைத்தார்.

1 प्रधाने सर्वशास्त्राणां प्रधानशतके स्थिते।
अप्रधानेषु शास्त्रेषु किं मनोऽन्येषु धावसि ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री प्र धा न श त कं सं पू र्ण म् ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

ப்ரதாநே ஸர்வ ஶாஸ்த்ராணும் ப்ரதாநஶதகே ஸ்த்திதே।
அப்ரதாநேஷு ஶாஸ்த்ரேஷு கிம் மநோऽந்யேஷு தாவஸி ॥

இப்படி கவிதார்ககிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்

ஸ்ரீ ப்ரதாந சதகம் முற்றிற்று

---

1 ஸர்வசாஸ்த்ராணும்-எல்லாசாஸ்த்ரங்களுக்குள்ளும், ப்ரதாநே-முக்யமான, ப்ரதாநசதகே - ப்ரதாநசதகம், ஸ்த்திதே - இருக்கும் பொழுது. அப்ரதாநேஷு-ப்ரதாநங்களல்லாத, அந்யேஷு-மற்ற, சாஸ்த்ரேஷு -சாஸ்த்ரங்களில், மநः - மனமே, கிம்-ஏன், தாவஸி-ஓடுகிறாய் ?

ஸ்ரீ உபகாரஸங்க்ரஹ விஷயமாகச் சில விசேஷக் குறிப்புக்கள்

இதில் முதல் அதிகாரத்தில் எம்பெருமான் அநாதி காலமாய்ச் செய்து வரும் உபகாரங்களும், அவற்றை முன்னிட்டுக் கொண்டு மேலே செய்யவேண்டிய உபகாரங்களும்; இரண்டாவது அதிகாரத்தில் உபாயாநுஷ்ட்டாநம் செய்த பிறகு பகவான் செய்தருளும் உபகாரங்களும், மூன்றுவது அதிகாரத்தில் அர்ச்சிராதி மார்க்கமாக நம்மைத் தான் ப்ரதாநஞ்செய்கின்று நடத்திப்போகும் ப்ரகாரமும்; இந்த க்ரமம் ஆழ்வாருடைய முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தில் முதல் பாட்டிலே விவக்ஷிதம் எனத் திருவுள்ளம் பற்றி அப்பாட்டிற்கு வ்யாக்யானமும், இந்த க்ரமத்தின் உபபாதநமும் செய்யப்பட்டிருக்கின்றன

இறுதியில் இப்படித் தன்னே வ்யாஜமாகக் கொண்டு இந்த க்ரந்தத்தை வெளியிட்டருளினதும் ஒரு மஹோபகாரம் என்று க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்திருக்கிறார். திருவிருத்தம் என்னும் திருநாமம்ஏற்பட்டதற்குக் காரணமும் இதில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச்சொன்ன பழமொழியுள்

இருபத்தேட்டாவது ரஹஸ்யம்

ஸ்ரீ உபகார ஸங்க்ரஹம்

[இது அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் ஏழாவது. ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

பூர்வோபகார பரம்பரை என்னும் முதல் அதிகாரம்

[ஆழ்வாரின் அநுக்ரஹத்தின் பலம்—உபோத்காதம்—பரமஹித நிரூபணம் — ஸர்வோபகாரங்களுக்கும் அதிஷ்டாநங்களான ஸ்வரூப ஸத்தா ரக்ஷணாதி நான்கு ப்ரதாந உபகாரங்கள்—அஜ்ஞாத ஸ்ருதோத்பாதகத்வம்—சிக்ஷா விசேஷ ரூப உபகாரம்—உசித சேஷவ்ருத்தி அபேக்ஷை—க்ருபையின் 27 அவாந்தரோபகாரங்கள்—இவற்றின் அவாந்தர பேதங்களின் அநந்தத்வம்]

[ஆழ்வாரின் அநுக்ரஹத்தின் பலன்]

1 அந்தமிலாப் பேர் இன்பம் அருந்த ஏற்கும்
அடியோமை அறிவுடனே என்றும் காத்து *
முந்தைவினை நிரை வழியில் ஒழுகாதெம்மை
முன்னிலையாம் தேசிகர்தம் முன்னே சேர்த்து *
மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி
வழிப்படுத்தி வான் ஏற்றி அடிமை கொள்ளத்*
தந்தையென நின்ற தனித்திருமால் தாளில்
தலைவைத்தோம் சடகோபன் அருளினாலே. 28

---

1 அந்தம் இலா - அளவு இல்லாத (கணக்கிட முடியாத), பேர் இன்பம் - மோக்ஷத்தை. அருந்த - அநுபவிப்பதற்கு, ஏற்கும் -தகுதியுள்ள,

ஸர்வாத்மாக்களுக்கும் ஸர்வவித பந்துவான ஸர்வேஶ்வரனுடைய ஶாஸந ரூபமாய்க் கொண்டு ப்ரவ்ருத்தமாய்,

1 'शास्त्रं हि वत्सलतरं मातापितृसहस्रतः'

(ஶாஸ்த்ரம் ஹி வத்ஸலதரம் மாதா பித்ரு ஸஹஸ்ரதः)

என்னும்படி ஸர்வருக்கும் ஸர்வதேசத்திலும் ஸர்வ காலத்திலும் ஸர்வாவஸ்தையிலும் ஸர்வ ஹித நிவ்ருத்தியையும் ஸர்வஹிதப்ரவ்ருத்தியையும் உண்டாக்குகைக்குத் திருமுகமாய் நின்ற ஶாஸ்த்ரத்தில் ப்ரதாநமான உபநிஷத் பாகத்திலே ஸம்யக் ந்யாயாநுக்ருஹீத ஸதாசார்யோபதேசத்தாலே

உபோத்காதம்

2 'இனி அறிந்தேன்',

3 'கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனே'

இத்யாதிகளிற்படியே ஸம்ஶயாதிரஹிதமான ஸதஸத் விவேகம் பிறந்து, அதடியாக

அடியோமை - தாஸபூதர்களான நம்மை, என்றும் - எல்லாக் காலத்திலும், அறிவுடனே - தர்மபூத ஜ்ஞாநத்துடன், காத்து - ரக்ஷித்து, எம்மை - எம்மை, முந்தை - அநாதியான, வினை - கர்மங்களின், நிரை வழியில் ஒழுகாது - தொடர்ந்து வரும்ப்ரவாஹத்தின் வழியே செல்லாமல், முன் நிலையாம் - (நமக்குக்ருபைசெய்ய) முன்னே நிற்கின்ற, தேசிகர் தம் முன்னே - ஆசார்யர்களிடம், சேர்த்து, மந்திரமும் - திருமந்திரம் முதலிய மந்திரங்களையும், மந்திரத்தின் வழியும் காட்டி - அவற்றில் சொல்லப்படும் உபாயத்தையும் உபதேசித்து, வழிப்படுத்தி—அவ்வுபாயத்தை அநுஷ்டிக்கும்படி செய்து, வான் ஏற்றி - பரமபதத்தில் ஏற்றி, அடிமை கொள்ள - நம்முடைய கைங்கர்யத்தை அங்கீகரிப்பதற்காக, தந்தை என நின்ற - தகப்பனாரைப்போலே நிற்கிற, தனி - ஒப்பற்ற, திருமால் தாளில் - லக்ஷ்மியிடத்தில் வ்யாமோஹமுள்ள பகவானுடைய திருவடிகளில், சடகோபன் அருளினாலே - ஆழ்வாருடைய அநுக்ரஹத்தினாலே, தலை வைத்தோம் - தலையை வைக்கும்படியான பாக்யம் பெற்றோம், அதாவது பகவானுடைய திருவடிகளை வணங்கப் பெற்றோம் என்றபடி. 28

1 தாயிற்சிறந்த ஸாஹஸ்ரதः - ஆயிரம் தாயார் தகப்பனார்களைக் காட்டிலும், சாஸ்த்ரம் - சாஸ்த்ரம், வத்ஸலதரம் ஹி - அதிகவாத்ஸல்யத்தையுடையதன்றே

2 நான் - திருவ - 96 3 பெரி - திரு - 8 - 9 - 3

1 'அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்' இத்யாதிகளிற் சொனன தீவ்ரமான ஸம்ஸார நிர்வேதமும்,

2 'ஐங்கருவிகண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்.....ஒழிந்தேன்'

என்னும்படி ஸர்வஸுகாந்தர விரக்தியும், துரந்தமாய் துர் நிவாரமான துஷ்க்ருத பல ப்ரவாஹத்தைப் பற்ற

3 'மாற்றமுள'

இத்யாதிகளிற்படியே மற்றொரு ப்ரவ்ருத்தி பண்ண ஒட்டாத மஹாபீதியும் பிறந்த அதிகாரிக்கு மேல் செய்ய அடுப்பது என் என்னில்?

போன நீருக்கு அணைகோலாதே, வேண்டாத நீரைத் தேக்கவும் பாராதே, விளைநிலத்திற்கு அபேக்ஷிதமான நீரை விரகாலே தேககிக் கொள்ளுமவர்களைப்போலே தனக்கு ஸ்வரூபானுரூபமான பரம புருஷார்த்தத்திற்குத் தன் அதிகாரானுரூபமான ஸாரண்ய வஸீகரண விமோஷத்தை நிஷ்கர்ஷித்து, ஸாரண்யனுடைய ஆபிமுக்ய விமோஷ ஹேதுவாக அவன் தானே முன்பு செய்த உபகார பரம்பரையை முகப்பச்சையாக்கி, மேல் செய்ய வேண்டும் உபகார பரம்பரையை ஆகிஞ்சன்ய அநந்யகதித்வங்களை முன்னிட்டுக் கொண்டு அபேக்ஷிக்குமது பரமஹிதம்.

பரமஹித நிரூபணம்

(ஸர்வோபகாரங்களுக்கும் அதிஷ்டானங்களான ஸ்வரூபஸத்தாரக்ஷணாதி நான்கு ப்ரதான உபகாரங்கள்)

ஸர்வேச்வரன் நமக்கு முன்பு செய்த உபகார பரம்பரை எது? மேல் அபேக்ஷிக்கப்படும உபகார பரம்பரை எது? என்னில்:

4 'इच्छात एव तव विश्वपदार्थसत्ता'

(இச்சாத ஏவ தவ விச்வ பதார்த்தஸத்தா)

என்கிறபடியே ஸர்வவஸ்துக்களுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ ப்ரவ்ருத்தி பலங்கள் தான இட்ட வழக்காம்படி நிற்கிற ஸர்வேச்வரன் தன் ஔதார்யாதிசயத்தாலே மேல் நமக்குத் தரு

1 திருவாய் - 3 - 2 - 1 2 திருவாய் - 4- 9 - 10

3 பெரி - திரு - 11 - 8 - 1

4 ஸ்ரீ வைகு - ஸ்த - 36, தவ - உம்முடைய, இச்சாத ஏவ - ஸங்கல்பத்தினாலேயே, விச்வபதார்த்த ஸத்தா - எல்லா வஸ்துக்களினுடையவும் ஸ்வரூபம் (நிற்கிறது)

கைக்குத் தானே ஸங்கல்பித்து வைத்த நித்ய நிர்த்தோஷ நிரதி ஸய மஹாநந்தாநுபவத்திற்கு ஆஸ்ரயமான அஹமர்த்தத்தை அந்யதாகரிக்க வல்லனுயிருக்க, நித்யேச்சையாலே அந்யதாகரி யாதே, 'இது நித்யமாகக் கடவது' என்று நிலை நிறுத்தி வைத்தது ஸ்வரூப ஸத்தா ரக்ஷணரூபமான நித்யஸித்தோப காரம்(1),

இந்த ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்திற்குப் பரம புருஷார்த்தா நுபவரூபமாயும், தத் விரோதிநிவர்த்தக வ்யாஜ ரூபமாயும்பரிண மிக்கக் கடவ தர்மபூத ஜ்ஞாநத்தை மாற்றுதே, நித்யேச்சை யாலே இத்தை அஹமர்த்தத்நிற்கு நித்யதர்மமாக்கி வைத்தது ஸ்வபாவ ரக்ஷண ரூபமான நித்யோபகாரம்(2),

இப்படி நின்றுல் அநாதியான அவித்யா கர்மாதி சக்ர பரி வ்ருத்தியாலே பரிப்ரமித்து அநுசிதபோகங்களிலே ஆழங்கால் பட்டு ஆஜ்ஞாதிலங்கநருசியாய் அஸமஞ்ஜன்படியே அநர்த்த ஹேதுக்களை அநுஷ்டித்து

1 ' அருநரகத்து அழுந்தும் பயன்படைத்தேன் ' என்கிறபடியே அதிகோரங்களான நரகங்களிலே விழுந்து அழுஞ்சிறையிலே கிடக்குமவனுக்கு நாய்களோடொக்க நடுவே சில தீனி இடுமா போலே, நரகதுல்யங்களாய் வருகிற ஸ்வர்க் காதி விஷமதுக்களைப் புஜித்தும், நித்ய நைமித்திக ப்ராக்ருத ப்ரளயங்களிற்படியே மூர்ச்சித்த சிறையின் படியாய் அநேக காலம் மூச்சடங்கிக் கிடந்தும், இவற்றில் அநுதாபாதிகளும் அற்றுப் போந்த நம்மைப் பற்ற அவ்யாஜ க்ருபையாலே அவஸர ப்ரதீக்ஷனாய் நின்றதுவும்(3),

இப்படி நின்றுல் அபராத ப்ரவாஹத்தில் விலக்கற்று விலக்குவாரையும் விலக்கிப் போருகிற நம்மை ஸர்வ ஸமனுய்க கர்மாநுரூப பலப்ரதனுய்க்கொண்டு ஸ்வச்சந்த லீலா ப்ரவ்ருத் தனை தானே விலக்கி விளையாடுகைக்கு அஜ்ஞாத ஸுகரு தாதிகள் என்று சில அல்பவ்யாஜங்களை அந்யபல ஹேதுக் களல்லாதபடி அமோகங்களாக ஸங்கல்பித்ததுவும்(4),

---

1 பெரி - திரு - 6 - 3 - 4,

ஸ்வேச்சா மாத்ராநுபந்திகளுமாய் அநாதிகளுமான உப காரங்கள். இவை நாலும் மேலுள்ள உபகார நிலங்களுக்கெல் லாம் அதிஷ்ட்டாநங்களாய் நிற்கின்றன.

(அஜ்ஞாத ஸுக்ருதோத்பாதகத்வம்)

இங்ஙனேவுண்டானலும் தவிர்ந்தாலும் தனக்கு ஒரு ச்சேத மற்றிருக்க, ஓர் அவஸரத்திலே நமக்கு அஜ்ஞாத ஸுக்ருதாதி களே உண்டாக்கின இது மோக்ஷோபயுக்தங்களான உபகாரங் களில் ப்ரதமோபகாரம்,

(சிக்ஷா ரூப விசேஷ உபகாரம்)

அவஸராநுகுண ஸர்வகார்ய கர்த்தாவான ஈச்வரன் பண்ணுகிற காதாசித்கோபகார ஆரம்பத்திலே

1 ‘இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான், அன்றென்னைப் புறம் போகப் புணர்த்தது என் செய்வான்’

என்கிற விசாரத்தை வைத்து, ஸர்வதந்த்ரஸித்தமான அநாதி ஸாமக்ரீ ப்ரவாஹ விச்ரமஷவைசித்ர்யத்துக்கு அநுகுணமாக அல் லாத போக வ்யவஸ்த்தாதிகளிற் போலே இங்கும் கார்ய தர் மாந்தரத்தாலே ஒரு வ்யவ ஸ்தாபகம் உண்டு என்று பொதுவிலே புத்தி பண்ணி

2 ‘நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதனை’

என் கிறபடியே இக்காலவிச்ரமத்தில் அவனுடைய உப காரகத்வமே அநுஸந்தேயம். ஈச்வரன் கீழும் மேலும் பண்ணும் தண்டவிச்ரமங்களெல்லாம் சிக்ஷா விச்ரம ரூபங்களான உபகாரங்களாம்.

(உசித சேஷ வ்ருத்தி அபேக்ஷை)

இவற்றில் ஒருவனுக்கு அப்போது புரிதலின்றிக்கே ஒழிந்தாலும் புருஷாந்தரத்திற்கும் அவன் தனக்கும் தெளிவு வருவதொரு காலத்திலும், இவை சிக்ஷையாய்த்தலைக்கட்டும். முற்பட முக்தரானவர்களைப்பார்த்து மோக்ஷ ப்ரதனைப்பற்ற இன்னதாகாதே,

‘अधो अधो दर्शने कस्य महिमा नोपजायते’

---

1 திருவாய் - 10 - 8 - 9, 2 திருவாய் - 1 - 7 - 5

1(அதோ5தோ தர்ஶநே கஸ்ய மஹிமா நோபஜாயதே) என்கிற ந்யாயத்தாலே பிற்பட்டிருக்கிறவர்களைப் பார்த்து, அவர்களுக்கு முன்னே நம்மை அங்கீகரிகும்படிககு உகந்து,

2 'என் முடிவுகாணுதே என்னுள் கலந்தானே' என்று அறிந்து, உசித மோஷவருத்தியை அபேக்ஷிக்குமது நிபுணக்ருத்யம். இப் ப்ரகாரம்

3 ' இன்றென்னைப் பொருளாக்கி'

4 ' உற்றேன் உகந்து பணி செய்து'

இத்யாதிகளிலும் அபிபரேதம.

(க்ருபையின் 27 அவாந்தர உபகாரங்கள்)

இவ்வஜ்ஞாதஸுக்ருதாதிகளுக்கு ப்ரஸந்நனுய்

5 ' जन्मान्तर सहस्रेषु या बुद्धिः भाविता पुरा '

(ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்தி: பாவிதா புரா)

இத்யாதிகளிற்படியே விபரீதவாஸநா தார்ட்யத்தாலே உபதேஶ நைரர்த்த்கயம் பிறவாதபடி

6 ' यं तु कर्मणि यस्मिन् सः न्ययुङ्क्त प्रथमं प्रभुः '

(யம்து கர்மணி யஸ்மிந் ஸ: ந்யயுங்க்த ப்ரதமம் ப்ரபு:)

இத்யாதிகளிற்படியே விஶேஷித்து நம்மை ஸுக்ருத வாஸநா ப்ரவாஹ ஹேதுவான ஸாத்த்விக ஸ்ருஷ்டியிலே கூட்டினதுவும் (1), அடியிலே வேதங்களை ப்ரவர்த்திப்பித்ததுவும் (2), இவற்றுக்குப் பரிகரங்களான ஶாஸ்த்ரங்களை ஸ்வமுகத்தாலும், ரிஷி முகங்களாலும் உண்டாக்கினதுவும் (3), ப்ரவர்த்தக பரம்பரையை ஸ்ருஷ்டித்ததுவும் (4), ஸாத்த்விக விருத்த வ்யாமோஹநார்த்தமாக

7 ' நின் மாட்டாய மலர் புரையும் திருவுருவம் மனம் வைக்க மாட்டாத பல சமய மதி கொடுத்தாய் '

---

1 அதோ அதோ தர்சநே - கீழிட்டுக் கீழிட்டுப் பார்த்தால், அதாவது தன்னை விடத் தாழ்ந்தவர்கள் இருப்பதைப் பார்த்தால். கஸ்ய- எவனுக்கு, மஹிமா - மேன்மை, நோபஜாயதே - உண்டாவதில்லை

2 திருவாய் - 2 -5- 8, 3 திருவாய் 10 - 8 -9

4 திருவாய் - 10 - 8 - 10

5 ஆயிரம் ஜன்மங்களில் எந்தப் புத்தியானது முன்பு எண்ணப்பட்டதோ,

6 மனு - 1 - 25 யம் து-எவனை, யஸ்மிந் கர்மணி - எந்தக் கர்மத்தில், ஸ: ப்ரபு: - அந்த ப்ரபுவாகிய பகவான், ப்ரதமம் - முதலில் ந்யயுங்க்த - நியமித்தானோ

7 திருவாய் — 3-1 - 4

என்கிறபடியே அந்யஶாஸ்த்ரங்களை ஸ்ருஷ்டிக்கச் செய்தே,

1 'त्रिदण्डधारिणा पूर्वं विष्णुना रक्षिता त्रयी'

(த்ரிதண்ட தாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதா த்ரயீ)

என்கிறபடியே வேதரக்ஷை பண்ணினதுவும் (5), ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் கொண்டு வேத தத்வார்த்த ப்ரகாஶநம் பண்ணினதுவும் (6), இப்படி ப்ரவ்ருத்தமான ஶாஸ்த்ரத்தில் ப்ரதிபாதிதமான தர்மத்தினுடைய ஸம்யக்ஸ்தாபநார்த்தமாக

2 'संभवामि युगे युगे' (ஸம்பவாமி யுகே யுகே)

என்கிறபடியே அவதரித்ததுவும் (7), வடிவழகாலும் ஶீலத்தாலும் வஶீகரிக்குமதுவும் (8), உபதேஶாநுஷ்டாநங்களாலே தர்ம ப்ரவர்த்தநம் பண்ணுமதுவும் (9), இப்படி ப்ரவர்த்திப்பிக்கிற அளவில் அநந்தபாப ஸந்ததரான நம்மை ஶாஸ்த்ரவஶ்யதையில்லாத ஸ்தாவர திர்யக் ஜாதிகளிலும் மநுஷ்யரில் ம்லேச்சாதி வர்க்கத்திலும் பிறப்பியாதே, காலக்ரமத்தாலே புண்யஶீலர் குலங்களிலே

3 'என்னுடை நன்னெஞ்சம்', 4 'இழை நல்ல ஆக்கை' என்னும்படி ஆத்மநிவேதந விபா(ரு)காநுகுணமான ஸாத்விக கரண களேபர ஸங்காதத்தோடே ஸங்கடிப்பித்ததுவும் (10), சார்வாக பௌத்த ஆர்ஹத வைஶேஷிக ஸாங்க்ய பாஶுபதாதி பஹுவித பாஹ்ய குத்ருஷ்டி மதங்களால் கலங்காதபடி பண்ணினதுவும் (11), அத்வேஷ ஆபிமுக்யங்களோத்தந்ததுவும் (12),

5 'अविश्रान्तमनालम्बम्' (அவிஶ்ராந்தம் அநாலம்பம்)

6 'अतस्करकरग्राह्यम्' (அதஸ்கர கரக்ராஹ்யம்)

---

1 த்ரிதண்டதாரிணா -மூன்று தண்டங்களைத் தரித்துக் கொண்டிருக்கிற, விஷ்ணுநா-பகவானால், பூர்வம் - முன்பு, த்ரயீ - வேதங்கள் ரக்ஷிதா-ரக்ஷிக்கப்பட்டன.

2 கீதை - 4-8 யுகே யுகே - யு க ம் தோறும். ஸம்பவாமி - அவதரிக்கிறேன்

3 திருவாய் - 1 - 7 - 8 4 திருவாய் - 9 - 5 - 10

5 பார - சாந்தி - 337 - 34, அவிச்ராந்தம் - இளைப்பாற இடம் இல்லாததாயும், அநாலம்பம் - பிடித்துக் கொள்ள ஒரு ஆதாரம் இல்லாததாயும்,

6 அதஸ்கரகரக்ராஹ்யம்-திருடர்களினால் அபஹரிக்க முடியாதது

1 'तदेशिरलमत्यर्थं' (ததேபிரலமத்யர்த்தம்)

2 'महता पुण्यपण्येन' (மஹதா புண்யபண்யேந)

3 'आचार्यः प्लावितातस्य' (ஆசார்ய: ப்லாவிதாதஸ்ய)

இத்யாதிகளான ஸாத்த்விக ஸம்பாஷணத்தை உண்டாக்கினதுவும் (13),

4 'तद्दृष्टिगोचराः सर्वे मुच्यन्ते सर्वकिल्बिषैः'

(தத் த்ருஷ்டி கோசராஸ் ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை:) என்னும்படியான ஸதாசார்ய கடாக்ஷத்திற்கு லக்ஷ்யமாக்கினதுவும் (14)

5 'பிரம குருவாகி வந்து'

என்னும்படி ஆசாரிய மூர்த்தியான தான் நம்முடைய தோஷங்களாக கண்டு நம்மை உபேக்ஷியாதே நாம் துக்கஸாகர துரித பரம்பரைகளிலே நோவுபடுகிறபடியைக் கண்டு

6 'कृपया निस्स्पृहो वदेत्' (க்ருபயா நிஸ்ஸ்ப்ருஹோ வதேத்) என்கிறபடியே அறிவிலலாத நமககு அருளி, அர்ஜுனன் விஷயத்தில் ஸாரதியாய் நின்ற தன்னைப் போலே (நமககும்)

'நெறி எல்லாம் எடுத்துரைக்க' நினைக்கும்படி பண்ணினதுவும் (15),

7 'शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्'

(ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்)

---

1 விஷ்ணுபுரா — 1 - 19 - 39 இவைகளிலுல் போதும்

2 வராஹபுராணம்

3 ஸாத்த்வ ஸம் -

4 ஸாத்வதம் - (எவனுக்கு தத்த்வத்தில் புத்தியானது அநுபவம் வரையிலாக இருக்கிறதோ) தத் த்ருஷ்டி கோசரா: — அப்படிப்பட்டவனுடைய கடாக்ஷத்திற்கு விஷயங்களான, ஸர்வே- எல்லா ப்ராணிகளும், ஸர்வ கில்பிஷை: - எல்லாப் பாபங்களிலிருந்தும், முச்யந்தே - விடுபடுகிறார்கள்.

5 பெரியா - திரு - 5 - 2 - 8.

6 சாண்டி - ஸ்ம் - 1 - 116, (ஆசார்யன்) பணம் முதலியவைகளில் ஆசையில்லாமல் க்ருபையினுல் உபதேசிக்க வேண்டும்,

7 கீதை — 2 - 7, அஹம் - நான். தே - உமக்கு, சிஷ்ய: - சிஷ்யன், த்வாம் - உம்மை, ப்ரபந்நம் - சரணம் அடைந்திருக்கும், மாம் - என்னை, சாதி - நியமியும்

என்னும்படி பண்ணினதுவும் (16),

1 ' ईश्वरोऽहम् ' (ஈச்வரோ ऽஹம்)

2 ' न नमेयं हि कस्यचित् ' (ந நமேயம் ஹி கஸ்யசித்)

என்னும் துர்வாஸனையை தூரீகரித்து

3 ' तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया '

(தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா)

என்கிற உசிதோ(பசாரத்திலே) பாயங்களிலே ஒருப்படுத்தின துவும் (17), உபதேச காலத்தில் நாம் அநவஹிதராகாதபடி ஹ்ருஷீகேசனை தான் சிக்கென மநஸ்ஸை நிறுத்திச் செவிதாழ்ப் பித்ததுவும் (18), திருமந்த்ரம் முதலான சிரிய ஸப்தங்களைச் செவிப்படுத்திச் சிந்தாமல் கொள்ளும்படி பண்ணினதுவும் (19), இவற்றிலே பொதிந்த பரதத்த்வ பரமதிரு பரம புருஷார்த்தங் களாகிற மஹாநிதிகளைத் திறந்து காட்டினதுவும் (20), இப்படி ஸாநுக்ரஹனை ஸதாசார்யனிலே உபதிஷ்டங்களான ஸதர்த் தங்களில்

4 ' उपदिष्टेऽप्यविश्वस्तः ' (உபதிஷ்டே ऽப்யவிச்வஸ்தः)

என்னும் அவஸ்தை வாராதபடி பண்ணினதுவும் (21),

5 ' देवता तीर्थं तपसां भारतात् यस्य निर्णयः ।
न जन्यते नास्तिकता तस्य मीमांसकैरपि ॥

(தேவதா தீர்த்ததபஸாம் பாரதாத் யஸ்ய நிர்ணயः।
நஜந்யதே நாஸ்திகதா தஸ்ய மீமாம்ஸகைரபி ॥)

---

1 கீதை - 16 - 14, அஹம் - நானே. ஈச்வரன் - எனக்கு யஜமானன்

2 ராமா - யுத்த - 36 - 11 கஸ்யசித் - ஒருவரையும், ந நமேயம்ஹி வணங்கமாட்டேன்.

3 கீதை - 4 - 34, தத் - கீழ் உபதேசிக்கப்பட்ட ஆத்ம வஸ்து வை. ப்ரணிபாதேந - நன்றாக நமஸ்கரிப்பதினாலும், பரிப்ரச்நேந - செவ்வையாய்க் கேட்பதினாலும், ஸேவயா - சுச்ரூஷை செய்வதினாலும், வித்தி - அறிந்து கொள்

4 உபதிஷ்டேஅபி - உபதேசிக்கப்பட்ட விஷயத்திலும், அவிச்வஸ்தः - நம்பிக்கை இல்லாதவன்,

5 தேவதா தீர்த்த தபஸாம் - தேவதைகள். தீர்த்தங்கள், தபஸ்ஸு இவற்றைப் பற்றி, பாரதாத் - பாரதந்திரியிருந்து, யஸ்ய - எவனுக்கு, நிர்ணயः நிச்சயமான ஜ்ஞாநம் உண்டாயிற்றோ, தஸ்ய - அவனுக்கு, மீமாம்ஸகைரபி - மீமாம்ஸகர்களினாலும், நாஸ்திகதா நாஸ்திக்யபுத்தி, ந ஜந்யதே - உண்டாக்கப்படுவதில்லை.

என்கிறபடியே ஒருவராலும் நாஸ்திக்யம் புகுர(க) விட வொண்ணுதபடி

1 ' आस्तिको धर्मशीलश्च ' (ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச)

இத்யாதிகளிற் சொன்ன ஶிஷ்ய லக்ஷண பூர்த்தியை உண்டாக்கினதுவும் (22),

2 ' அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்

3 ' இன்றுக நாளையேயாக இனிச்சிறிதும் நின்றுக நின் அருள் என்பாலதே'

என்கிறபடியே விவேக வ்யவஸாய விஶேஷங்களைப் பிறப்பித்ததுவும்(23)

4 ' पत्युःप्रजानामैश्वर्यं ' (பத்யுः ப்ரஜாநாம் ஐஶ்வர்யம்)

5 'ஊனேறு செல்வத்து'

இத்யாதிகளிற்படியே பரம புருஷார்த்தத்திலே ப்ரயோஜநாந்தர நிரபேக்ஷமாக ப்ரதிஷ்டிதமான ஸங்கத்தை ஜநிப்பித்ததுவும் (24

6 'துணியேன் இனி நின்னருளல்லது எனக்கு'

7 'நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன்'

8 'உன்னலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்'

இத்யாதிகளிற்படியே பரமஹிதத்தில் ஸம்ஶய விபர்யய ஶரண்யாந்தர ப்ரஸங்கமற்ற துணிவை நிலைநிறுத்தினதுவும்(25),

9 'வல்லபரிசு வருவிப்பரேல்'

என்கிறபடியே அயத்நமாக ஆசார்ய முகத்தாலேயாதல்

10 ' पारमार्थिकी भगवच्चरणारविन्द शरणागतिः यथावस्थिताऽविरता अस्तु मे '

---

1 ஆஸ்திகः - சாஸ்த்ரத்தில் விச்வாஸமுடையவன், தர்ம சீலः தர்மத்தை ஆசரிப்பவன்.

2 திருச்சந்த - 64 3 நான் திரு - 7

4 ப்ரஜாநாம் பத்யுः-ப்ரஹ்மாவினுடையவாவது,(ருத்ரனுடையவாவது) ஐச்வர்யம் - ஐச்வர்யத்தை, ந காமயே-ஆசைப்படவில்லை.

5 பெருமாள் திரு - 4 - 1

6 பெரி - திரு - 11 - 8 - 8 7 திருச்ச - 90

8 திருவாய் - 5 - 8 - 3 9 நாச்சி - திரு - 10 - 10

10 சரணாகதிகத்யம்-பாரமார்த்திகீ-உண்மையான,பகவச் சரணா

(பாரமார்த்திகீ பகவச்சரணரவிந்த ஸரணகதி: யதாவஸ்த்திதா, அவிரதா அஸ்து மே)
என்கிற ஸ்வவ்யாபாரத்தாலேயாதல் வஸீகரண விஸேஷத்திலே நம்மை உத்யுக்தராக்கினதுவும்(26), எல்லோயாக அபவர்க்கோபாயத்திலே பர்யவஸிப்பிக்கிற ஸுக்ருத விஸேஷத்தை விளைத்ததுவும் (27) அநுகம்பையிறுடைய அவாந்தரோபகாரங்கள்.

(இவற்றின் அவாந்தர பேதங்களின் அநந்தத்வம்)

இந்தப் பூர்வோபகாரங்களோ ஸர்வேஸ்வரன் செய்த காலங்களிலே நாம் அறியமாட்டாமையாலும், ப்ரதிபுத்த காலத்தில் அவற்றின் அவாந்தரவிஸேஷங்கள் எண்ணி முடியவொண்ணுமையாலும்.

1 ‘அத்தா நீ செய்தன அடியேன் அறியேன்’
என்றிருக்கப்ராப்தம். அஜ்ஞாத ஸுக்ருதம் முதலாகக் காலதத்த்வம் உள்ளதளவும் இச்சேதநன் செய்யும் அநுகூல வ்யாபாரங்கள் எல்லாம்

2 ‘यत्किंचिदृतते लोके’ (யத்கிஞ்சித் வர்த்ததே லோகே)

3 ‘நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்’

4 ‘என்னுல் அடைப்பு நீக்கொண்ணாது இறையவனே என்னுல் செயற்பாலதென்’

5 ‘என் நான் செய்கேன் யாரேகளோகண்’
இத்யாதிகளிற்படியே ஈஸ்வராதீநங்களாய் அநந்தங்களாய் நடக்கின்றனவாகையாலே இவற்றுக்கு ஈஸ்வர புத்தியாலும் எண்ணில்லையாயிறே இருப்பது,

பூர்வோபகார பரம்பரை என்னும்
முதல் அதிகாரம் முற்றிற்று

ரவிந்த - பகவானுடைய திருவடித்தாமரைகளில், சரணகதி: - சரணாகதியானது, மே- எனக்கு, யதாவஸ்த்திதா - உண்மையாகவும், அவிரதா -ஓய்வில்லாததாகவும், அஸ்து - உண்டாகட்டும்-

1 திருவாய் - 2 - 3 - 2 5 திருவாய் 5 - 8 - 3
2 பார - சாந்தி - 35 - 9 - 56, லோகத்தில் எது இருக்கிறதோ,
3 திருவாய் - 1 - 1 - 6, 4 பெரிய திருவந் - 3

ஸாதநாதிகாரம் என்னும்
இரண்டாம் அதிகாரம்

[ஐந்து ஸாத்யோபாய உபகாரங்கள்—இங்கிருந்தாள் செய்யும்ஐந்து உபகாரங்கள்—உத்க்ரமண காலத்தில் செய்யும்ஐந்து உபகாரங்கள்.]

(ஐந்து ஸாத்யோபாய உபகாரங்கள்)

இப்படிச் சேதநனே உபாய விஸ்ஷாநுஷ்ட்டாநத்திலே ஒருப்படுத்தி நோயெலாம் பெய்ததோர் ஆக்கையைச் சுமந்து கொண்டு இருக்கிற இவனுக்கு.

1 ‘ स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः।
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम् ॥ ’

(ஸ்த்திதே மநஸி ஸுஸ்வஸ்த்தே ஸரீரே ஸதி யோநரः।
தாதுஸாம்யே ஸ்த்திதே ஸ்மர்த்தா விஸ்வரூபம் ச மாமஜம்)

இத்யாதிகளிற்படியே ஸாரீர மாநஸ ஆகந்துக ஸஹஜங்களான சதுர்வித வ்யாதிகளாலும் கலக்கம் வாராதபடி

2 ‘ अस्तु ते’ (அஸ்துதே)

என்னும் அநுக்ரஹவிஸ்ஷத்தாலே தாதுஸாம்ய ஸரீர ஸ்வாஸ்த்த்யங்களையும் மநஸ்ஸ்த்தைர்யத்தையும் பிறப்பிக்குமதுவும் (1), மநஸ்ஸு ஏகாக்ரமானவளவிலே இவனுக்கு அங்க பஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணத்தை உண்டாகுமதுவும் (2), இதற்கு ஆகிஞ்சந்யாதியான கைம்முதல் இல்லாதாரை ஆப்ரயாணாநுவர்த்தநீயமாய் அந்திம ப்ரத்யயாந்தமான உபாயாந்தரத்தில் மூட்டுமதுவும் (3), இதற்கு வரும் அந்தராயங்களை விலக்குமதுவும் (4),

3 ‘ ददामि बुद्धि योगं तं येन मामुपयान्ति ते .

---

1 வராஹபுராணம்

2 சரணாகதிகத்யம் - அஸ்துதே - உனக்கு உண்டாகட்டும்.

3 கீதை - 10 - 10 (எப்பொழுதும் என்னுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்கிற ஆசையையுடையவர்களாய் பக்தி செய்து கொண்டிருக்கும், அவர்களுக்கு) தே - அவர்கள், யோக- எந்தப் புத்தியோகத்தினால், மாம் - என்னை, உபயாந்தி - அடைகிறார்களோ, தம் -அந்த, புத்தியோகம் - புத்தியோகத்தை, (ப்ரீதியுடன்) ததாமி - கொடுக்கிறேன்.

(ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே)

என்கிறபடியே ப்ராப்திக்கு வ்யவதாநமில்லாத பரம பக்தி தசை உண்டாக்குமதுவும் (5), ஸித்தோபாய பூதனை ஸரண்யனுடைய ஸ்வப்ரஸாத ஸம்பாதநரூபமான ஸாத்யோபாய உபகாரம். இது பூர்வோபகார பரம்பரையில் ப்ரதிபுத்தனை முமுக்ஷுவிற்கு ப்ரதமாபேக்ஷணீயம். இவ்வபேக்ஷை உபாய ப்ரார்த்தனையாம். இவ்வுபாயத்திற்கு முமுக்ஷுத்வம் அதிகார மாகையாலே

1 'पारमार्थिकी' (பாரமார்த்திகீ)

என்கிற சூர்ணிகையில் சொன்ன பலபர்வங்களும் சரீரக சாஸ்த்ரத்தில் உத்தராகபூர்வாக அச்லேஷ விநாசாதிகள் முதலாக

2 'अनावृत्तिः शब्दात्' (அநாவ்ருத்திः சப்தாத்)

என்கிறதிறுதியாகச் சொன்ன அர்த்தங்களெல்லாம் உபாய ஸாத்ய பலமாகத் தெளிந்தவனுக்கு இப்பலத்தை அபேக்ஷித்துக் கொண்டு உபாயாநுஷ்ட்டாநமாகையாலே இவ்வபேக்ஷை பல காமநாமாத்ரரூபையாய்க் கொண்டு அதிகார தசையிலும், பல ப்ரார்த்தநாரூபையாய்க் கொண்டு உபாயாநுஷ்ட்டாந தசையிலும். அநுஷ்டிதோபாயனுக்கு

3 'समीपं राजसिंहस्य' (ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய)

இத்யாதிகளிற்படியே த்வராந்வித விச்வாஸ ரூபையாய்க் கொண்டு உத்தரக்ருத்ய தசையிலும் அநுவர்த்திக்கக் கடவது.

(இங்கிருந்த நான் செய்யும் ஐந்து உபகாரங்கள்)

இப்படி நின்றவனுக்கு ஸர்வேச்வரன் செய்யும் உபகாரங்களாவன:—

உபாயாதிகம காலத்திலே ப்ராரப்தகர்மவ்யதிரிக்தங்களான பூர்வகர்மங்களில் உபாய வி(ரோ)பகாதிகளுக்கு அநு

1 சரணாகத -256 ம் பக்கம் பார்க்க

2 சாரீரக - ஸூத்த - 4 - 4 - 22 (மோக்ஷத்தை அடைந்தவனுக்கு) அநாவ்ருத்திः - திரும்பிவராமல் இருப்பது, சப்தாத் - சுருதியில் சொல்லப்பட்டிருப்பதினால் (ஏற்படுகின்றது)

3 ராமா - ஸுந் - 19 - 7 ராஜஸிம்ஹஸ்ய – ராஜ சிரேஷ்டனான ராமஸ்ய - ராமனுடைய, ஸமீபம்-அருகில்

குணமல்லாத ஸுக்ருதங்கள் இவனுக்குப் பலம் கொடுக்கக் கடவனவல்ல என்று ஸங்கல்பிகையும்(1),

இப்படியே உத்தரங்களான ஸுக்ருதங்களில் வித்யாநு பகாரகங்களையும் பராமாதி கபாபங்களையும் பலோத்பாதகங்கள் அல்லாதபடி பண்ணுகையும் (2),

ப்ராமாதிகமல்லாதவற்றிற்கு ப்ராயஶ்சித்த ஶிக்ஷாவிஶேஷ உபக்லேஶங்களாலே யதாதிகாரம் பரிஹாரம் பண்ணுமதுவும்

ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுககு அபேக்ஷாநுகுணமாக ப்ராரப்தத்தையும் அப்போதே நிஶ்ஶேஷமாகவாதல், ஶரீராந்தராதி ஹேதுகளான அம்சங்களை யாதல், உத்தரக்ருத்ய ரூப ஶாஸ்த்ரீய கைங்கர்ய விஶேஷத்திற்கு விரோதிகளை யாதல் கழிததுக கொடுகுமதுவும் (4)

1 'येऽहर्निशं जगद्धातुः वासुदेवस्य कीर्तनम् ।
कुर्वन्ति तान् नरश्रेष्ठ न कलिः बाधते नरान् ॥ '
(யேऽஹாநிஶம் ஜகத்தாதுர் வாஸுதேவஸ்ய கீர்த்தநம்
குர்வந்தி தாந் நரஶ்ரேஷ்ட்ட ந கலிர்பாததே நராந்)

2 ' न कलौ कलिचेष्टोसौ मूढेषु च न मुह्यति ।
भगवत्यच्युते नित्यं येन भावः समाहितः ॥ '

(ந கலௌ கலிசேஷ்டோஸௌ மூடேஷுச நமுஹ்யதி।
பகவதயச்யுதே நிதயம் யேநபாவ: ஸமாஹித:॥)

3 ' कलौ कृतयुगं तस्य कलिस्तस्य कृते युगे ।
यस्य चेतसि गोविन्दो हृदये यस्य नाच्युतः ॥ '

(கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதே யுகே ।
யஸ்ய சேதஸி கோவிந்தோஹ்ருதயே யஸ்ய நாச்யுத: ॥)

---

1 யே - எவர்கள், அஹர்நிசம் - பகலிலும்இரவிலும்,ஜகத்தாது: - உலகத்தைப் படைத்த, வாஸுதேவஸ்ய-பகவானுடைய,கீர்த்தநம்-திரு நாம ஸங்கீர்த்தநத்தை, குர்வந்தி - செய்கிறார்களோ, நரச்ரேஷ்ட்ட - ஓ !நர ச்ரேஷ்ட்டனே, தாந் நராந் - அந்த மனிதர்களை, கலி: - கலியானது,ந பாததே- பீடிக்கிறதில்லை.

2 யேந -எவனால், பாவ - மனது, பகவதி அச்யுதே -அச்யுதனான பகவானிடத்தில்ஸமாஹித :-வைக்கப்பட்டிருக்கிறதோ,அஸௌ-இவன் கலௌ-கலியுகத்திலும்,கலி சேஷ்ட்ட: - கலியின் சேஷ்ட்டையில் அகப் பட்டவனாக, ந-ஆவதில்லை மூடேஷு-முட்டாள்களின் (கொள்கைகளில் நமுஹ்யதி - மயக்கம்அடைவதில்லை,

3 விஷ்ணு தர்மம் - 109 - 57, யஸ்ய - எவனுடைய. சேதஸி - மனத்தில், கோவிந்த: - பகவான் (வஸிக்கிறாரோ), தஸ்ய - அவனுக்கு

1 ' கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கு அருள் செய்யும் '

இத்யாதிகளிற் படியே கைங்கர்ய பரனுக்குக் காலதோஷாதி பயஸ்த்தாநங்களால் கலக்கம் வாராதபடி பண்ணுமதுவும் (5), உபாயமாகவாதல் பலமாகவாதல் அநுஷ்ட்டிக்கிற கைங்கர்யங்களை இட்டபடை கல்படையாக்கி

2 ' संकल्पादेव भगवान् (ஸங்கல்பாதேவ பகவாந்)

இத்யாதிகளிற்படியே மநோரத பூர்த்தியையுண்டாக்குமதுவும் (6) இங்கிருந்த நாள் பண்ணும் உபகாரங்கள்.

(உத்க்ரமண காலத்தில் செய்யும் ஐந்து உபகாரங்கள்)

இப்படி இருந்த முமுக்ஷுவுக்கு அந்திம ஸரீரவிஸ்லேஷ காலத்தில் ப்ரஸ்தாப்ரஸ்த தேச கால நிமித்த நியமமில்லாத படி ஸங்கல்பித்ததுவும் (1),

3 ' यं योगिनः प्राणवियोग काले यत्नेन चित्ते विनिवेशयन्ति '

(யம் யோகிந: ப்ராண வியோக காலே
யத்நேந சித்தேவிநிவேஸயந்தி)

என்கிறபடியே பக்தியோக நிஷ்ட்டனுக்கு ஸ்வயத்ந ஸாத்ய அந்திம ப்ரத்யய விஸேஷத்தைத் தலைக் கட்டிக் கொடுக்குமதுவும் (2),

நிஸ்ஸேஷ பரந்யாஸம் பண்ணி சாதக வ்ருத்தியானவனுக்கு அபேக்ஷாநுகுணமாக

4 ' शरीरपातसमये तु केवलं मदीययैव दयया अतिप्रवृद्धः '

(ஸரீரபாத ஸமயே து கேவலம் மதீயயைவதயயா அதிப்ரவுத்த:)

கலௌ - கலி காலத்திலேயே, க்ருதயுகம் - க்ருதயுகமாயிருக்கிறது, யஸ்ய - எவனுடைய, ஹ்ருதயே - மனத்தில், அச்யுத: - பகவான், ந - வஸிக்கவில்லையோ, தஸ்ய - அவனுக்கு, க்ருதயுகே - க்ருதயுகத்திலும், கலி: - கலியுகம் இருக்கிறது, 1 திருவாய் - 5 - 2 - 11

2 ஸாத்வதம் - பகவாந் - பகவானுடையவன், ஸங்கல்பாதேவ - தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே.

3 பார - சாந்தி - 47 - 189, யம் - எந்தப் பகவானை, யோகிந:- யோகிகள், ப்ராணவியோக காலே - ப்ராணன் விடும்காலத்தில், யத்நேந - ச்ரமப்பட்டு, சித்தேதங்கள் மனத்தில், விநிவேசயந்தி - இருக்கும்படி செய்கிறார்களோ.

4 சரணா-கத் - 212 ம் பக்கம் பார்க்க

இத்யாதிகளிற்படியே தன் க்ருபாமாத்ரத்தாலே ஸ்வவிஷய அந்திம ப்ரத்யயத்தைப் பிறப்பிக்குமதுவும் (3).

1 'ततस्तं म्रियमाणं तु काञ्चपाषाणसन्निभम्'

(ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட்ட பாஷாணஸங்நிபம்)

என்னும்படி இவன் கிடக்குமளவிலும்

1 'अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम्'

(அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்) என்றும்

2 'தான் எனக்காய் நினைந்து அருள் செய்யும் அப்பன்' என்றும் சொல்லுகிறபடியே இவனைக் கடாக்ஷித்தருளி, ஜுகுப்ஸை பண்ணுதே இவன் பக்கல் ப்ரீதி சொன்ன ரதியுடையனு மதுவும் (4),

ஸ்வர்க்க நரகாதிகளுக்குப் போகும் நாடி விஸ்ரோஷங்களிலே ப்ரவேசிப்பியாதே

3 'ஒருவன் அடியேனுள்ளான்'

என்னும்படி ஹார்த்த ரூபத்தாலே இடம் பார்த்து எடுக்க நினைக்கிற தனக்கும், பரரூபத்தாலே மீளா அடிமைப்பணி கொள்ள இருக்கிற தனக்கும் செவ்விதான சேமவழிக்கு முகமான ப்ரஹ்ம நாடி முகத்திலே ப்ரவேசிப்பிக்குமதுவும் (5),

சேற்றிலே விழுந்த சிறு மக்களைப் பிதா அழுக்கு டனே எடுத்துக் கொண்டு கரையேறுமா போலே ஸூக்ஷ்மசரீரத் தோடே ஸ்தூல சரீரத்தில் நின்றும் கொண்டு புறப்படுமதுவும் (6), இவை முமுக்ஷுவுக்கு உத்க்ரமண காலத்தில் செய்யும் உபகாரங்கள்.

ஸாதநாதிகாரம் என்னும்
இரண்டாம் அதிகாரம் முற்றிற்று

நிர்யாணாதிகாரம் என்னும் மூன்றும் அதிகாரம்.

[வீரஜைக்கு இப்பாலுள்ள மூன்று உபகாரங்கள்—அப்பாலுள்ள எட்டு உபகாரங்கள் — திருவிருத்தத்தின் முதல் பாட்டில் இக்க்ரமம்—பாட்டின் பதங்களின் அர்த்தம்—பாட்டின் ஸமுச்சிதார்த்தம்—பாட்டில் ஷடர்த்த நிரூபணம்—பாட்டிற்குப் பரமதாத்பர்யம்]

---

1 வராஹபுராணம் 209-பக்கம் பார்க்க

2 பெரி - திரு - 7 - 3 - 2 3 திருவாய் - 8 - 8 - 1

(விரஜைக்கு இப்பாலுள்ள மூன்று உபகாரங்கள்)

இப்படி நல்வழி நடத்துகைக்கு ஒருப்பட்ட தான், பால கரீடா விஸ்ரஷ்டாநாலே வழி தப்பிப் போன குமாரனை அரண்ய ப்ரதேசத்தில் நின்றும் மீட்டு ஆஸ்தாந விஸ்ரஷ்டளவும் ஸம்ப்ரீதனுப்க் கொண்டு நடத்துகிற ஸார்வ பௌமன் தன் ஸாமந்தரானவர்கள் எல்லாரும் இக்குமாரனை ஸத்கரிக்கும்படி பண்ணுமா போலே, தனக்கு அந்தரங்கர்களான அர்ச்சிராதி புருஷர்களையிட்டுத் தம் தம் எல்லைகள் தோறும் இவனை எதிர் கொண்டு உபசரிக்கும்படி பண்ணுமதுவும் (1), அப்படி

1 ' அமரரோடு உயர்வில் சென்று அறுவர் தம் பிறவி அஞ்சிறையே'

என்கிறபடியே ஆதிவாஹிகரைக் கொண்டு, சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும்பாழைக் கடத்துமதுவும் (2), விரஜை என்கிற அம்ருத நதியைக்கிட்டுவித்து, ஆகாரத்தில் நின்றும் எடுத்த ரத்நத்தின் அழுக்குக் கழற்றுமா போலே ஆத்மாவை அநுபந்தித்துக் கொண்டு கிடக்கிற ஸூக்ஷ்மாசித்தைக் கழித்து

2 'ஒளிக் கொண்ட சோதி'

என்னும்படி பண்ணுமதுவும் (3).

விரஜைக்கு இப்பாலுள்ள உபகாரங்கள்.

(விரஜைக்கு அப்பாலுள்ள எட்டு உபகாரங்கள்)

அக்கரையில் திவ்யலோக, திவ்யஜநபத, திவ்ய நகர, திவ்ய விமாந, திவ்யஸ்த்தாந. திவ்ய பர்யங்க ப்ராப்தி பர்யந்தமாகப் பர்யங்கவித்யாதிகளிலும்ஸாகடாயந ஜயாக்ஷயஸம்ஹிதாதிகளிலும்

3 ' சூழ் விசும்பணிமுகி '

லிலும் சொல்லுகிற ஸத்காரபரம்பரைகளை உண்டாக்குமதுவும் (1), 4 தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ் கொள்ளுமதுவும் (2), 5 இருள் கற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றி வைத்து ஏணி வாங்கி, அருள் கொடுத்திட்டு அடிய வரை ஆட்கொள்ளுமதுவும்(3), ஆத்மாபஹாரிகளுக்குள்ளே இருந்து

5 ' அடியார்கள் குழாங்களையுடன் கூடுவது என்று கொலோ '

---

1 திருவாய் - 1 - 3 - 11 2 திருவாய் - 2 - 3 - 10
3 திருவாய் - 10 - 9 - 1. 4 திருவாய்-3 -7-7
5 பெரியா - திரு-4- 9 - 3

என்று மநோரதித்த இவனை

1 'सवयस इव ये नित्य निर्दोषगन्धाः'

(ஸவயஸ இவ யே நித்ய நிர்த்தோஷ கந்தா;)

என்னும்படி நிற்கிற மேலாத் தேவரானவர்கள்

2 'नित्याभिवांछित परस्पर नीचभावैः'

(நித்யாபிவாஞ்ச்சித பரஸ்பரநீசபாவை:)

என்கிற ந்யாயத்தாலே தங்களுக்கு மேலாக ஆதரிக்கும்படி பண்ணுமதுவும்(4),

3 'உள்ள உலகளவும் யானும் உளனுவன்'

என்று பாவித்தவனை அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத்தினைத்தனையும விடாதபடி, ஆதி உண்டாகிலும் அந்தம் இல்லாதபடி பரிபூர்ணநுபவத்தைக் கொடுக்குமதுவும் (5), இவ்வநுபவ பரீவாஹமாக அபிமதாநுரூபங்களான அமோஷமோஷ வ்ருத்திவிமோஷங்களையும் கொள்ளுமதுவும் (6), இவனுக்கு வந்த அதிமயமும் தன் பேறுக நினைத்திருக்கும்படி ஸர்வமோஷியான தனக்கு இவை எல்லாவற்றாலும் வந்த ஸந்தோஷாதிமயத்தைக் கண்டு, இவன் க்ருதார்த்தனும்படி பண்ணுமதுவும் (7).

4 'கோலத்திருமாமகளோடு உன்னைக் கூடாதே சாலப்
பல நான் அடியேன் இன்னும் தளர்வேனே'

என்று இருந்த இவனைப் பிரிய கொடுக்கிலும் போக வொட்டாதே இந்த நிரதிமயாநந்தாநுபவ பரீவாஹம் நித்யமாம்படி நடத்துமதுவும் (8).

எல்லா முனிவும் தீர்ந்து, சிறைக் கூடத்தில் நின்றும் புறப்படவிட்ட ராஜகுமாரனுக்கு ஸ்த்திரமான ஸாம்ராஜ்யம் கொடுக்குமாப்போலே இருக்கிற ப்ரதாநோபகாரவர்க்கம்.

---

1 ஸ்ரீ குண - கோசம் - 27 ஸவயஸ இவ - ஸமமான வயதையுடையவர்களைப் போல, நித்ய நிர்த்தோஷ கந்தா: - ஒரு பொழுதும்தோஷத்தின் ஸம்பந்தமில்லாதவாகள்.

2 ஸ்ரீ வைகு - ஸ்த - 77 நித்யம் - எப்பொழுதும், அபிவாஞ்ச்சித - ஆசைப்படப்பட்ட, பரஸ்பர - ஒருவர்க்கொருவருடைய, நீசபாவை: -சேஷத்வத்தையுடையவர்களான,

3 பெரி யதிரு-7-3 4 திருவாய்- 6 - 9 - 3

(திருவிருத்தத்தின் முதல் பாட்டில் இக்ரமம்)

இப்படி நம்முடைய அபேக்ஷா நிரபேக்ஷமாகத் தன்னுடைய ஸ்வபுத்தியதீநமான ஸஹகாரி விசேஷ ஸஹித ஸம்பந்த குண விசேஷங்களாலே முன்பு ஸர்வேச்வரன் பண்ணின உபகார பரம்பரைகளை முன்னிட்டுக் கொண்டு, மேல் நேசகாலாதி பரிச்சேதமில்லாத திவ்ய கைங்கர்ய பர்யந்தமாக அபேக்ஷிதை முழுக்ஷுவுக்கு ப்ராப்தமாகையால், அபர்வறும் அமரர்கள் அதிபதியான திருமாலாலே மயர்வறமதி நலம் பெறும்படி அருளப்பட்ட நம்மாழ்வார், தம்முடைய அநுபவபரீவாஹங்களான ப்ரபந்தங்கள் நாலில்(லும்) முதற் ப்ரபந்தமாய், இவர்தம் வ்ருத்தாந்தங்களை முன்னிடுகையாலே 'திருவிருத்தம்' என்று பேர் பெற்ற ப்ரபந்தத்தின் முதற்பாட்டால் பூர்வோபகார ஸ்மருதியை முன்னிட்டுக் கொண்டு உத்தரோபகாராபேக்ஷையிலே உபக்ரமிக்கிறார்—

பொய்ந்நின்ற ஞானமும்
பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் *
இந்நின்ற நீர்மை இனி யாமுறுமை *
உயிரளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்
இமையோர் தலைவா !
மெய்ந்நின்றுகேட்டருளாய்
அடியேன் செய்யும் விண்ணப்பமே,

(பாட்டின் பதங்களின் அர்த்தம்)

'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பு' மாவது ஸம்ஸார மூலமான ப்ராந்தி ஜ்ஞானமும், அதடியாக வந்த ப்ரதிகூலாநுஷ்டாநமும், அதடியாக வந்த ரஜஸ்தமஃ ப்ரசுரமான ப்ராக்ருத தேஹமும். இவை மற்றுமுள்ள ஹேயங்களுக்கெல்லாம் உபலக்ஷணம், இங்கே அநுக்த ஸமுச்சயம் கொள்ளவுமாம்.

பொய் நின்ற ஞானம்' என்றது நஸ்வரமாகையாலே பொய் என்னலாம்படி நிற்கிற அபேக்ஷிதமான விஷயத்தில் கரணத்தமாய்ப் பிறக்கிற பேக்ஷதா புத்தியாகவுமாம்.

அநாதிகாலம் பரம புருஷார்த்தத்தை இழந்து ஸம்ஸாரத்திலே அகப்பட்டுக் கிடந்த இதில் அநுதாபம் தோற்றும்படி இங்

நின்ற நீர்மை-இப்படி நின்ற ப்ரகாரத்தை இனியாம்உருமை-ஸர்வலோக ஶரண்யனுய் ஶரணாகத வத்ஸலனுன உன் திறத்தில் ப்ரதிபுத்தரான நாங்கள் இதற்கு மேல் இப்ப்ரதிகூல பரம்பரை களை அடையாதபடி.'யாம்' என்கிற இது

1 ' परित्राणाय साधूनां ' (பரித்ராணுய ஸாதூநாம்)

என்கிற ஸாது பஹுத்வத்தைக் காட்டுகிறது.

2 ' पशुः मनुष्यः पक्षी वा' (பஶுர் மநுஷ்ய: பக்ஷீ வா)

இத்யாதிகளிற்படி ஸம்பந்திகளையும்கூடக் காட்டுகிறதாகவுமாம்.

உயிரளிப்பான்— உனக்கு அநந்யார் ஹஶேஷமாய் வைத்து, அஸத்கல்பமாய்க் கிடந்த ஆத்மஸ்வரூபத்தை 'தாஸ பூதோ ஽ஹம்' என்கிறபடியை நித்யமாக அநுபவிக்கப பண்ணு வான்.

எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்—தேவ, திர்யக், மநுஷ்ய, ஸ்த்தாவரங்கள் என்கிற எல்லா ப்ரகாரத்தாலும் ப்ர மாண ஸித்தங்களாய் நின்ற பூதஜாதங்கள் நாலிலும், அவற் ரோடு ஸஜாதீயன் என்னலாம்படி ஸ்ரீ ஜந்மரஹஸ்யத்திற்படியே ஸத்யமாய், ஜ்ஞாநஸங்கோசாதிதோஷ ப்ரஸங்க ரஹிதமுமாய். நித்ய நிர்த்தோஷ ஶுத்த ஸத்த்வமய திவ்ய மங்கள விக்ரஹ பரிணுமாத்மகமுமாய், ஸ்வேச்சா மாத்ர ஹேதுகமாய், கர்ம க்ருதகால நியம ரஹிதமாய், ஸாதுபரித்ராணுதி மாத்ரப்ரயோஜந மாய், வ்யூஹவ்யூஹாந்தர விபவ விபவாந்தர ரூபமாயுள்ள அவதார வர்ககத்தாலே

3 'நிலைவரம்பில பல பிறப்பாய் ஒளிவரு முழுநலம்' என்னும்படி பிறந்தாய்.

இமையோர்தலைவா — ஸம்பந்தம் ஒத்திருக்கச் செய்தே, கர்மவசத்தாலே நாங்கள் இழந்து கிடக்க நித்யஸூரிகள் நித்யாநுபவம்பண்ணுபடிஸர்வ ஸமனை ஸர்வஸ்வாமியானவனே!

மெய்— இப்படி ரக்ஷாயோக்யனை என்னுடைய படி களும், ரக்ஷணேங்முகனை உன்னுடைய படிகளும் ப்ரமாண ஸித்தங்களல்லவோ? அவற்றில் ஒன்று அப்ரமாணமாகிலன்ரே

1 கீதை - 4 - 8, ஸாதூ நாம் -ஸாதுக்களை, பரித்ராணுய - காப் பாற்றுவதற்காக

2 சாண்டி - ஸம் - 1 - 15

3 திருவாய் - 1 - 3 - 2

உனக்குக் கண்ணழிவு சொல்லலாவது என்று தாத்பர்யம்.

நின்று கேட்டருளாய்—

1 'அவாவறச் சூழ்ந்தாய்' என்னும்படி நான் அவாவற்று வீடு பெறுமளவும் அந்யபரனுகாதே அபிமுகனுய்க் கொண்டு கேட்டருளாய்.

'மெய் நின்று' என்னவுமாம், அப்போது நீ அவதரித்த தெல்லாம் ஸப்ரயோஜநமாம்படி உன் அவதார விக்ரஹத்தோடே

2 'ஒருநாள் காணவாராய்'

என்று இருகிற எனக்கு ப்ரகாசித்து நின்று என்கிறது. அங்ஙனன்றிக்கே

3 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்'

என்னும்படி என் அழுக்கு உடம்புக்குள்ளே ஜுகுப்ஸை பண்ணுதே அணியனுய் நின்று என்னவுமாம்.

கேட்டு அருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே— நீ மயர்வற மதி நலம் அருளுகையாலே நிருபாதிக தாஸ்யத்திலே நித்யப்ரதிஷ்ட்டித புத்தியான நான் என்னுலே உன்னே இன்கவிபாட ஒருப்பட்ட நிரபேக்ஷஸ்வதந்த்ரனை உன்னுலே ப்ரேரிதனுய்க் கொண்டு பண்ணுகிற விஜ்ஞாபந கைங்கர்யங்களாகிற நாலு ப்ரபந்தங்களையும் திருச்செவி சாற்றி, ஸ்ருதி விஷயங்களான இத்தைத் தொண்டர்க்கமுதுண்ணலாம் படி பண்ணி அருள வேண்டும் என்று திருவுள்ள(மா)ம்.

இப்பாட்டில் ஸுத்தாஸுத்தஸ்வரூபங்களான அசித்துக்களுடைய பேதமும், சிதசித் பேதமும், பத்தமுக்த நித்ய விபாகத்தையுடைய ரான ஜீவர்களுடைய அந்யோந்ய பேதமும், ஜீவேஸ்வர பேதமும் ஈஸ்வரைக்யமும், ஜ்ஞாந ஜ்ஞாத்ரு பேதமும், ஸதஸத்ஜ்ஞாந பேதமும், ஸதஸதநுஷ்ட்டாந பேதமும், ஸித்த ஸாத்யோபாய பேதமும், பராவர புருஷார்த்த பேதமும் கிடக்கிறபடி யதாஸ்தநாம் ஸாப்தமாகவும ஆர்த்தமாகவும அநுஸந்திப்பது.

பாட்டின் ஸமுச்சிதார்த்தம்

1 திருவாய் - 10 - 10 - 10

2 திருவாய் - 8 - 5 - 1. 3 திருவாய் - 8 - 8 - 2.

இங்கு 'இமையோர் தலைவா' என்கிற இதிலே மோக்ஷியாய் ப்ராப்யமான ப்ரஹ்ம ஸ்வரூபமும், 'யாம்' என்கிற இதிலே மோக்ஷபூதனாய் ப்ராப்தாவான ப்ரத்யகாத்மஸ்வரூபமும், 'உயிர் அளிப்பான்' என்கிற இதிலே நிருபாதிக மோக்ஷவிருத்தி விரோதி விமோக்ஷமான பல ஸ்வரூபமும், 'பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும், என்கிற இடத்திலே மோக்ஷவிருத்தி விரோதி ஸ்வரூபமும், கேட்டருளாய் அடியேன்செய்யும் விண்ணப்பமே' என்கிற இதிலே விரோதி நிவர்த்தக வ்யாஜமாய் ஸோபாதிகமான ஸாஸ்த்ரீயமோக்ஷவிருத்தி விமோக்ஷமும், 'இமையோர் தலைவா' 'அடியேன்' என்கிற இதிலே ப்ராப்யமான ப்ரஹ்மஸ்வரூபம் முதலான அர்த்த பஞ்சகத்தினுடைய அநுஸந்தாநத்திற்கு அங்கமுருவாணியான ஸம்பந்த விமோக்ஷமும் சேருங்க அநுஸந்தேயம். ஆகையால் மேல் அருளிச் செய்யுமதெல்லாம் இதின் விஸ்தரமாகிறது.

பாட்டில் ஸுடர்த்த நிரூபணம்

புருஷோத்தம வித்யையில் சொன்ன ஸர்வாதிக்யத்தையுடையனான ஸ்ரீய:பதி

1 ' जगदुपकृतिमत्यं ' (ஜகதுபக்ருதிமர்த்யம்)

2 ' जगतामुपकाराय ' (ஜகதாமுபகாராய)

இத்யாதிகளிற் சொன்ன தன்னுடைய திவ்யாவதாரப்ரகாரத்தை

3 ' बहूनि मे व्यतीतानि' (பஹூநி மே வ்யதீதாநி)

என்று தொடங்கித் தான் அறிவித்தபடியே அறிந்தார்க்கெல்லாம் அதிகாராநு குண உபாயபூர்த்தியைப் பண்ணிக் கொடுத்து, இத்தேஹம் விட்டால் இனி ஒரு பிறவி வேண்டாதபடி ஸ்வப்ராப்தியைக் கொடுக்கும் என்கிற இவ்வுபகாரம் இப்பாட்டுக்கு ப்ரதாந தாத்பர்ய விஷயமாகிறது.

பாட்டின் பரம தாத்பர்யம்

---

1 விஷ்ணு புரா - 5 30 - 80 லோகத்திற்கு உபகாரம் செய்வதற்காக மநுஷ்யனாய் அவதரித்த (பகவானை யார் ஜயிக்கமுடியும்)

2 விஷ்ணு புரா - 6 - 7 - 71 ஜகதாம் - லோகங்களுக்கு, உபகாராய - உபகாரம்செய்வதற்காக

3 கீதை - 4 - 5 (உனக்கும்) மே - எனக்கும், பஹூநி - அனேகம், (ஜன்மங்கள்)வ்யதீதாநி - சென்று விட்டன,

1 अयमप्यपरो महोपकारः कलिदोषाविलचेतसां नराणाम् ।
करुणाजलधिः यदेष देवः प्रथयामास मया निजोपकारान् ॥
அயமப்யபரோ மஹோபகாரः
கலிதோஷாவில சேதஸாம் நராணும் ।
கருணு ஜலதி: யதேஷ தேவ:
ப்ரதயாமாஸ மயா நிஜோபகாராந் ॥

2 தான் தனக்குத் தன்னுலே தோன்றித்,தன்னேர்
ஒளியணைக்கும் குணத்தாலும் தன்னைக் கண்டு *
தான் தனக்கென்று அறியாத தன் குணத்தைத்
தன் குணத்தால் தானிறையில் தானே கூட்டி *
ஊன் மருத்துப் புலன் மனம் மான் ஆங்காரங்கள்
ஒருமூலப்பிரகிருதியன்றி நின்ற *
நானதனக்குத் தான் தனக்கென்று இசைவுதந்த
நாரணனே நான்மறையால் நான் கண்டேனே. 29

---

1 கருணுஜலதி: - கருணு ஸமுத்திரமான,ஏஷ: தேவ:-இந்தத் தேவனுகிய பகவான், மயா - என்னுல், (என்னைக் கொண்டு), நிஜோபகாராந் - தான் செய்தருளும் உபகார பரம்பரைகளை,கலிதோஷாவில சேதஸாம் - கலி தோஷத்தினுல் கெடுக்கப்பட்ட மனத்தையுடைய, நராணும் - மனிதர்களுக்காக, ப்ரதயாமாஸ யத் - வெளியிட்டார் என்பது எதுவோ, அயமபி - இதுவும், அபர: - மற்றொன்றுகிய, மஹோபகார: - பெரிய உபகாரம்.

2 தான் - ஜீவாத்மாவாகிய தான், தனக்குத் தன்னுலே தோன்றி- தனக்காகத் தானே ('நான்' என்று) தோன்றி, தன் ஓர் ஒளி அணைக்கும் குணத்தாலும் - தன்னுடைய ஒரு ப்ரகாசம் போன்ற தர்ம பூத ஜ்ஞானத்தாலும், தன்னைக் கண்டு - ஜீவாத்மாவாகிய தன்னை அறிந்து, தான் தனக்கு என்று அறியாத - (அசேதநமாதலால்) தான் என்றும் தனக்கு என்றும் அறிவில்லாத, தன் குணத்தை - தர்மபூத ஜ்ஞானத்தை, தன் குணத்தால் - தனக்குக் கிடைத்துள்ள தத்துவ ஜ்ஞானத்தால், தான் இறையில் தானே கூட்டி - தானே ஸர்வஸ்வாமியான எம்பெருமான் விஷயத்திலே செலுத்தி, ஊன் - மாம்ஸமயமான சரீரம், மருத்து - ப்ராணவாயுக்கள், புலன் - இந்த்ரியங்கள், மனம் - மனது, மான் - மஹான் என்னும் தத்துவம், ஆங்காரங்கள் - அஹங்கார மென்னும் தத்துவம், ஒரு மூலப்பிரகிருதி - தனியான மூலப்ரக்ருதி, அன்றி நின்ற - ஆகிய அசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டு நிற்கின்ற, நான் - ஜீவாத்மாவாகிய நான், தனக்கு - ஸ்வேச்வரனுகிய

1 கழியாத கருவினையில் படிந்த நம்மைக்
காலம் இது என்று ஒரு கால் காவல் செய்து*
பழியாத நல்வினையில் படிந்தார் தாளில்
பணிவித்துப் பாசங்கள் அடைய நீக்கிச் *
சுழியாத செவ்வழியில் துணைவரோடே
தொலையாத பேர் இன்பம் தர மேல் ஏற்றி *
அழியாத அருளாழிப் பெருமான் செய்யும்
அந்தமிலா உதவியெல்லாம் அளப்பார் ஆரே. 30

நிர்யாணாதிகாரம் என்னும்
மூன்றும் அதிகாரம் முற்றிற்று.

इति कवितार्किकसिंहस्य सवतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु

श्री उ प का र सं ग्र ह : सं पू र्ण : ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கட நாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்

ஸ்ரீஉபகார ஸங்க்ரஹம் முற்றிற்று

தனக்கு (அடியன்), தான் தனக்கு என்று - பகவானுகிய தானே தனக்கு (ஸ்வாமி) என்று, இசைவு தந்த - (நான்) அங்கீகரிக்கும்படி செய்த, நாரணனே - நாராயணனே, நான்மறையால் - நான்கு வேதத்தால், நான் கண்டேன் - (ஒருவாறு) நான் அறிந்தேன், 29

1 கழியாத கரு வினையில் - நீங்காத கர்ப்பவாஸத்தைத் தரும் கர்மங்களில், படிந்த நம்மை - அழுந்திக்கிடக்கின்ற நம்மை, இது காலம் என்று - இதுவே தக்க ஸமயமென்று (நினைத்து), ஒருகால் காவல்செய்து - (நம்முடைய பாக்யம் பக்வமான) ஒரு ஸமயத்தில் ரக்ஷிக்க முற்பட்டு. பழியாத நல் வினையில் - பழிக்கப்படாத (குற்ற மற்ற) நல்ல கார்யமாகிய ப்ரபத்திமார்க்கத்தில், படிந்தார் தாளில் பணிவித்து - ஈடுபட்டுள்ள ஆசார்யர்களின் திருவடிகளில் (நம்மை) வணங்கச் செய்து, பாசங்கள் அடைய நீக்கி - கர்மபாசங்கள் முழு வதையும் போக்கி, தொலையாத பேரின்பம் தர - அழிவில்லாத பெரிய மோக்ஷ ஸுகத்தைக் கொடுப்பதற்காக, சுழியாத செவ்வழியில் - திரும்புதல் இல்லாத சிறந்த அர்ச்சிராதிமார்க்கத்தால், துணைவரோடே

மேல் ஏற்றி - (ஆதிவாஹிகர்களான) துணைவரோடு ஸ்ரீ வைகுண்டத்திற்கு ஏற்றி, அழியாத அருள் ஆழிப் பெருமான் செய்யும் - அழியாதவனும் கருணைக் கடலுமாகிய எம்பெருமான் (சேதநனுக்குச்) செய்கின்ற, அந்தம் இல உதவி எல்லாம் - எல்லையில்லாத உபகாரங்களே எல்லாம், அளப்பார் ஆர் - அளவிட்டறிபவர் யார்! (ஒருவருமில்லை யென்றபடி.) 30

ஸ்ரீ:

ஸ்ரீ ஸார ஸங்க்ரஹ விஷயமாகச் சில விசேஷக் குறிப்புக்கள்

இதில் ஸ்வாமி தாமே 'இது ப்ரமாணப்ரமேய ஸங்க்ரஹம்' என்றும், 'இது ஸர்வ ஸங்க்ரஹம்' என்றும் அநுஸந்தித்திருப்பதினால் இந்த ரஹஸ்யத்திற்கு ஸ்ரீ ஸார ஸங்க்ரஹம் என்கிற திருநாமம்.

இதுவே அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் கடைசி என்று கூறலாம். ஏனெனில் இதற்கு மேல் ரஹஸ்யமாகிய ஸ்ரீ விரோத பரிஹாரம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாராதிகளில் சிலருக்குத் தோன்றும் விரோதங்களுக்குப் பரிஹாரத்தையே நிரூபிப்பதால்.

ஸ்ரீ ஸாரஸாரம் என்று ஆரம்பித்து ஸ்ரீ ஸார ஸங்க்ரஹம் என்று முடிப்பதும் பொருத்தமாயிருக்கும்.

'ஸ்ரீமாநுன நாராயணன் தன்னையே பற்றினர் தன்னைப் பெறுகைக்குத் தானே உபாயம்'

என்றருளிச் செய்யப்பட்டிருப்பதைப் பராமர்சித்தால் நம் ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான த்ரமிடோப நிஷத்தை ஸங்க்ரஹித்தருளும் போது

'देवः श्रीमान् स्वसिद्धेः करणमिति वदन्नेकमर्थं सहस्रे'

(தேவः ஸ்ரீமாந் ஸ்வஸித்தேः கரணமிதி வதந்நேகமர்த்தம் ஸஹஸ்ரே')

என்று அநுஸந்தித்திருப்பது நினைவூட்டப்பட்டு, அதின் ஸங்க்ரஹமாக இது அருளிச் செய்யப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

கீழ் உதாஹரித்த வாக்யத்தின் மேல் பாகத்தில்

'என்று எல்லா வாக்ய ரத்நங்களும் கோப்புண்ட ஏக வாக்யத்திலே'

என்று அருளிச்செய்திருப்பது ஸ்ரீ அதிகரண ஸாராவளியில்

'स्वप्राप्तेः साधनं च स्वयमिति हि परं ब्रह्म तत्रापि चिन्त्यम्'

(ஸ்வப்ராப்தேः ஸாதநம் ச ஸ்வயமிதி ஹி பரம் ப்ரஹ்ம தத்ராபி சிந்த்யம்)

என்று அநுஸந்தித்திருப்பது விவக்ஷிக்கப்பட்டதாகிறது.

'सारः सारस्वतानां शठरिपुफणितिः'

(ஸாரः ஸாரஸ்வதாநாம் ஶடாரிபுபணிதிः'

என்று அங்கு வ்யவஹரிக்கப்பட்டிருப்பதையே இங்கு 'ஸார ஸங்க்ரஹம்' என்று அநுஸந்தித்திருக்கிறார் என்று கூறலாம்.

இதன் இறுதி ச்லோகத்தில்,

'सहृदय हृदय ग्राह्यः'

(ஸஹ்ருதய ஹ்ருதய க்ராஹ்யஃ)

என்று உபஸம்ஹாரம் செய்திருப்பதினால்

'अखिलभयोत्तारिणी धारणीया'

(அகிலபயோத்தாரிணீ தாரணீயா '

என்பதுநினைவிற்கு வருகிறபடியினால் கீழ் போலவே த்ருடீகரணம் செய்யப்படுகிறது.

இதின் இறுதிப் பாட்டு அகிஞ்சநர்களானநம் போலியரால் ப்ரதி தினமும் அநுஸந்திக்க வேண்டியதாயிருக்கும்,

இதின் ஆரம்பத்தில் முதல் சுலோகத்தில் குருபரம்பராநுஸந்தான மும், மேல் ஒரு சுலோகத்தில் ஆழ்வார்களின் நமஸ்காரமும் செய்யப் பட்டிருக்கிறது. இந்த க்ரமம் ஸ்ரீ குருபரம்பரா ஸாரத்தில்

'குருப்யஃ தத்குருப்யஶ்ச', 'பொய்கை முனி'

என்பதைப் போல இருக்கும். இவ்விரண்டு இடங்களிலும் ஆண்டா ளின் விஷயமாயும் மதுரகவி விஷயமாயும் அநுஸந்தாநம் இல்லாததற் குக் காரணம் ஆண்டாள் தமது திருத்தகப்பனாரையும், மதுரகவி நம்மாழ்வாரையும் ஆசார்யனாகப் பற்றிய படியினால் அவர்களுக்குள் அந்தர்பூதர்கள் என்பது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

இருபத்தோன்பதாவது ரஹஸ்யம்

ஸ்ரீ ஸார ஸங்க்ரஹம்

[அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் எட்டாவது.

இது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[முமுக்ஷுக்களில் மூன்று பிரிவு—த்யாஜ்ய உபாதேய விபாகம் — பூர்ணத்வ ப்ரகாரம்—பத்து விதமான விவேக நிரூபணம்—இவற்றின் தனித் தனி விவரணம் — விவேக பலம் — நித்யாநுஸந்தேய ஸர்வ ஸங்க்ரஹம் — ரஹஸ்யத்ரயாநுஸந்தாந பலம் — ப்ரமாண ப்ரமேய ஸங்க்ரஹம்—ஆசார்யாதி க்ருத்யம்— அநந்யார்ஹ சேஷத்வ அத்ய வஸாயத்தின் பலம் —ஜ்ஞாந சக்திகளின் பரம ப்ரயோஜநம்— ஜ்ஞாநாதி நிஷ்கர்ஷம்.]

अस्मद्गुरु परमगुरून् यतिवरपूर्णौ सयामुनं रामम् ।
पद्माक्ष नाथ शठजित् सेनेश रमा रमापतीन् वन्दे ॥

அஸ்மத் குருபரம குரூந் யதிவர பூர்ணௌ ஸயாமுநம் ராமம் ।
பத்மாக்ஷ நாத ஶடஜித் ஸேநேஶ ரமா ரமாபதீந் வந்தே ॥

அஸ்மத் குரு, நம்முடைய ஆசார்யனையும், பரம குரூந் - பரம குருக்களையும், யதிவர பூர்ணௌ - எம்பெருமானாரையும், பெரிய நம்பியையும், ஸயாமுநம் - யாமுநாசார்யருடன் கூடிய, ராமம் - மணக்கால் நம்பி, பத்மாக்ஷ - உய்யக்கொண்டார், நாத - ஸ்ரீமந் நாதமுனி, சடஜித்-ஆழ்வார், ஸேநேச - விஷ்வக்ஸேநர், ரமா - பெரிய பிராட்டி, ரமாபதீந் – அவளுடைய பர்த்தாவாகிய பகவான் இவர்களையும், வந்தே ஸேவிக்கிறேன்.

1 भूत सरो वेताळान् कुलशेखर विष्णुचित्त भक्तिधनान्।
भक्तांघ्रिरेणु शठजित् कलिरिपु मुनिवाहनानपि भजामि ॥

பூத ஸரோ வேதாளாந் குலசேகர விஷ்ணுசித்தபக்திதநாந்।
பக்தாங்க்ரிரேணு ஶடஜித் கலிரிபு முநிவாஹநாநபி பஜாமி।

2 प्राचीसन्ध्या काचिदन्तर्निशायाः प्रज्ञादृष्टेरंजनश्रीरपूर्वा।
वक्त्री वेदान् भातु मे वाजिवक्त्रा वागीशाख्या वासुदेवस्य मूर्तिः ॥

ப்ராசீ ஸந்த்யா காசிதந்தர் நிஶாயாः
ப்ரஜ்ஞா த்ருஷ்டே ரஞ்ஜநஶ்ரீரபூர்வா
வக்த்ரீ வேதாந் பாது மே வாஜிவக்த்ரா
வாகீஶாக்க்யா வாஸுதேவஸ்ய மூர்த்திः ॥

3 ' धर्मशास्त्ररथारूढाः वेदखड्ग धरा द्विजाः।
क्रीडार्थमपि यद्युः स धर्मः परमो मतः ॥ '

(இந்த சுலோகத்தின் கருத்தையே ஸ்ரீகுருபரம்பராஸாரத்தில், 'என்னுயிர் தந்தளித்தவரை' என்றுரம்பிக்கும் பாட்டில் விவரித்திருக்கிறார்.)

1 பூத ஸரோ வேதாளாந் - பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார், குலசேகர - குலசேகரன், விஷ்ணுசித்த – விட்டுசித்தன், பக்திதநாந் - மழிசைவந்தசோதி, பக்தாங்க்ரிரேணு - தொண்டரடிப் பொடி, சடஜித் - குருகேசர், கலிரிபு – மங்கையர்கோன், முநிவாஹநாநபி-நம்பாணாதன் இவர்களையும், பஜாமி - ஸேவிக்கிறேன்.

2 வாஸுதேவஸ்ய - பரவாஸுதேவனுடைய, வாஜிவக்த்ரா - குதிரை முகம் போன்ற முகத்தையுடையதும், வாகீசாக்யா - வாகீசை என்கிற பெயருடையதும், வேதாந் - வேதங்களை வக்த்ரீ - சொல்லா நின்றதும், அந்தர் நிசாயாः - அஜ்ஞாநமாகிறராத்ரிக்கு, காசித் - விலக்ஷணமான, ப்ராசீ ஸந்த்யா - காலை வேளை போன்றதும், ப்ரஜ்ஞாத்ருஷ்டேः - ஜ்ஞாநமாகிற கண்ணுக்கு, அபூர்வா - விலக்ஷணமான, அஞ்ஜநச்ரீः - மையாகிற ஸம்பத்தாயும் இருக்கிற மூர்த்திः - திவ்ய மங்கள விக்ரஹமானது, அதாவது, ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியானது, மே - எனக்கு, பாது - தோன்றட்டும்,

3 போதா - க்ருஹ்ய - 14 - 17. தர்ம சாஸ்த்ர ரதா ரூடாः - தர்ம சாஸ்த்ரங்களாகிற தேரில் ஏறிக்கொண்டிருப்பவர்களும், வேத கட்கதராः த்விஜாः - வேதங்களாகிற கத்தியைத் தரித்துக் கொண்டி

(தர்ம ஶாஸ்த்ர ரதாரூடா: வேதகட்கதரா: த்விஜா: |
க்ரீடார்த்தமபி யத்ப்ரூயு: ஸதர்ம: பரமோ மத: ||)

இத்யாதிகளிற்படியே சொல்லுமவிடு சுருதியாம்படி திருந்தின ஸதாசார்யோபதேஶத்தாலே அ ஜ் ஞ த் வ பாஷண்டித்வாத்ய வஸ்த்தை கழிந்து ஸர்வேஶ்வர முமுக்ஷுக்களில் மூன்று பிரிவு ஸே ப் ப ற் றி ஞ லு ம், அநாதி வாஸனையினால் உ ண் ட ான க்ஷுத்ர ப்ரயோஜநஸங்கத்தாலே

1 ' न चान्य देवताभक्तिं आपद्यपि समाचरेत '

(ந சாந்யதேவதா பக்திம் ஆபத்யபி ஸமாசரேத்)

என்கிற நியமத்தைக் கடந்து,

2 ' देवान् ऋषीन् पितॄन् भगवदात्मकान् ज्ञात्वा '

(தேவாந் ரிஷீந் பித்ரூந் பகவதாத்மகாந் த்யாத்வா)

என்கிற அவர்ஜநீயங்களில் அதிகமான தேவதாந்தர பஜநத்தாலே ஸங்கீர்ணனுமாகில்

3 ' மற்றுமோர் தெய்வமுளது என்றிருப்பாரோடு உற்றிலேன்'

என்று இருக்கும் பரமைகாந்திகளுக்குப் பரித்யாஜ்யனும். ப்ரயோஜநாந்தரஸங்கம் உண்டானாலும், அம்பரீஷாதிகளைப்போலே

4 ' ' உன்னல் அல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்'

என்று தேவதாந்தரங்களை உபேக்ஷித்து,

5 ' चतुर्विधा भजन्ते माँ' (சதுர்விதா பஜந்தே மாம்)

ருப்பவர்களுமான ப்ராஹ்மணர்கள், க்ரீடார்த்தமபி - வேடிக்கையாக வாவது, யத்ப்ரூயு: - எதைச் சொல்லுகிறார்களோ, ஸ: - அது, பரம: தர்ம: - உயர்ந்த தர்மமாக, மத: - எண்ணப்பட்டது.

1 ஆபத்யபி - ஆபத்து வந்த காலத்திலும், அந்ய தேவதா பக்திம் – எம்பெருமானைத் தவிர வேறு தேவர்கள் விஷயத்தில் பக்தியை, ந ஸமாசரேத் - செய்யக்கூடாது.

2 நித்யம் - [ப்ரதி தினமும் செய்யப்படுகிற தர்ப்பணாதிகளில் அனுஸந்திக்கப்படும்] தேவாந் - தேவதைகளையும், ரிஷீந் - ரிஷிகளையும், பித்ரூந் - பித்ருக்களையும், பகவதாத்மகாந் - பகவானை அந்தர்யாமியாக உடையவர்கள் என்று, த்யாத்வா - எண்ணி.

3 பெரிய - திருமொழி - 8 - 10-3 -4 திருவாய் - 5 - 8 - 3.

1 என்கிறபடியே ஸர்வேச்வரனையே பற்றுமாகில்

2 'उदाराः सर्व एवैते' (உதாராः ஸர்வ ஏவைதே)

என்று கொண்டாடலாம்படியாம். ப்ரயோஜநாந்தரங்கள் தம்மில்

3 'இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவியான் வேண்டேன்'

என்கிறபடியே ஜந்மாந்தர போக்ய ஸ்வர்க்காதிகளை உபேக்ஷித்து ப்ராரப்த தேஹத்திற்குள்ளே உண்டாகும் போகங்களைப்பற்ற பகவத் தர்மங்களில் ப்ரவர்த்திக்குமவன் பரம பலத்திற்கு விக்நம் பண்ணிக் கொண்டிலனாகிலும் இங்குற்ற பகவதநுபவ ரஸத்திற்கு விச்சேதம் பண்ணிக் கொண்டானும்.

இக்கரணத்ரயத்திலும், இவற்றுல் வரும் வ்யாபாரத்ரயத்திலும், கரணியான தன் பக்கலிலும் பண்ண வேண்டும் ப்ரதிபத்தி விசேஷம் மூன்று உண்டு. அவையாவன—இவற்றினுடைய ஸ்வரூபாதிகள் பரசேஷங்கள் என்றும், பராதீநங்கள் என்றும், இவற்றுல் வரும் ப்ரயோஜநங்கள் பரார்த்தங்கள் என்றும். இப்பரதிபத்திகளோடே சேர்ந்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையுடையவனுக்குப் பூர்வ உத்தர மத்யம அவஸ்தைகளில் புத்தி பூர்வகமாக அக்ருத்யகரணாதிகள் புகுகைக்கு அவகாசமில்லை உபாய விசேஷத்தாலே பூர்வாக விநாசமும், உத்தராக அச்லேஷமும், யதா மநோரதம் ப்ராரப்தவிசேஷமும் கழிய, நிவ்ருத்த ப்ரதிபந்தகனாகையாலே ஸ்வதः ப்ராப்தமான ஸ்ரீபரிபோகத்திற்குப் போக்தாவாம். இது த்யாஜ்ய உபாதேய விபாகம்.

த்யாஜ்ய உபாதேய விபாகம்

பரந்யாஸம் பண்ணின முமுக்ஷுவுக்கு மோக்ஷார்த்தமாகக் கர்த்தவ்ய சேஷமில்லாமையாலே குறையில்லை; இவனுக்குப் போக பூர்த்தி வாராமையாலே குறை உண்டு, பரஸ்வீகாரம் பண்ணின சரண்யனுக்கு ஸர்வ காலத்திலும் போக ஸங்கோசம்

பூர்ணத்வப்ரகாரம்

---

1 கீதை - 7 - 16. மாம் - என்னை, சதுர்விதாः - நான்கு வகைப் பட்ட பக்தர்கள், பஜந்தே - பக்தி செய்கிறார்கள்.

2 கீதை - 7 - 18. ஏதேஸர்வே ஏவ - இவர்கள் எல்லோரும், உதாராः - கொடையாளர்கள். 3 திருவாய் - 10 - 6 - 1.

இல்லாமையாலே குறை இல்லை; இவனுக்கு ஆஸ்ரித ரக்ஷணத்தில் தன்மை பெறுத்துமளவும் க்ருத்யமோஷமுண்டாகையாலே குறையுண்டு. இஜ்ஜீவனுக்குப பூர்வாவஸ்த்தையிலே அஜ்ஞானம் அதிகாரமாய், அபவர்கக விருததம உபாயமாய், அதறகுத் துணையான வ்யாபாரங்கள் வ்ருததியாய்,ப்ரக்ருதி குணநுபவம் போகமாய்ப் போந்தது, இப்போது ஸதாசார்ய கடாக்ஷத்தாலே தத்வ ஜ்ஞானம் அதிகாரமாய், ஸம்ஸார விருத்தம் உபாயமாய், ஆஜ்ஞானுஜ்ஞைகளால் உண்டான பகவத் கைங்கர்யம் வ்ருத்தியாய், பகவத்குணநுபவம் போகமாய்ப் பேர(ரு)கிறதாகையாலே நமக்கு என்ன குறையுண்டு என்னவுமாம். 'அடைய அருளாய்' என்ன வேண்டும் அவஸ்த்தையாகையாலே குறையுண்டு என்னவுமாம்.கீழ் உக்தமான இரண்டு ஆகாரங்களாலுமிறே முக்தனுமளவும் இவனுக்கு ப்ரீதிவிஷாதங்கள் நடக்கிறன. ஆகையாலே ஸரண்யனுடைய கர்த்தவ்ய மோஷத்தில் குறைதீரும்போது ஸரணாகதனுடைய போகத்தில் குறையும் தீருகையாலே இப்படிக் குறை ஒன்றுமில்லாத கோவிந்தனுலே அநாதியான குறை தீர்ந்தவனுககு மேல் அநந்தமான நிறைவேயாயிருக்கும். இது பூர்ணத்வ ப்ரகாரம்.

ஸத்த்வோந்மேஷஹேதுவான ஸர்வேஸ்வரனுடைய கடாக்ஷவிமோஷத்தாலே உபஸாந்த கல்மஷனுய் இருப்பானேர் அதிகாரிக்கு ப்ரமாணத்ரய விவேபத்துவிதமான் விவேகநிரூபணம் கத்திற்கும், ப்ரமாணஸாரமான ரஹஸ்யத்ரய விவேகததிற்கும்.

இவற்றில் தோற்றின பராவர தத்த்வ விவேகத்திற்கும், இததத்த்வங்களில் ப்ரக்ருதி குண விவேகத்திற்கும், ஆத்மகுணவிவேகத்திற்கும், ஸரண்ய குணவிவேகத்திற்கும், ஸரண்ய ஸம்பந்தவிவேகததிற்கும், விரோதி விவேகத்திற்குமு, உபாய விவேகத்திற்கும், புருஷார்த்த விவேகத்திற்கும் தனித் தனியாயுண்டான அவாந்தர பல விமோஷம் சொல்லுகிறோம்—

இவற்றின் தனித்தனி விவரணம்

இதில் முற்பட

1 'प्रत्यक्षमनुमानं च' (ப்ரத்யக்ஷம் அநுமாநம் ச)

இத்யாதிகளிற்சொன்ன ப்ரமாணத்ரய விவேகத்திற்குப் பலம்—

1 மனு – 12 - 105. ப்ரத்யக்ஷம் அநுமாநம் ச - ப்ரத்யக்ஷமும், அநுமாநமும் (சாஸ்த்ரமும் அறியவேண்டும்)

ஸாத்விக ஸம்பாஷணைதிகள் அடியாக முன்புள்ள ஸாமாந்ய ஜ்ஞாநத்தையும் அபஹரிக்கும் பாஹ்ய குத்ருஷ்டிகளுடன் சேராதே, உபாயாந்தரத்திலும் அதன் கர்த்தவ்ய மோஷத்திலும் ப்ரயோஜநாந்தரத்திலும் துவக்கற்று(ற) அதிகார உபாய பல பூர்த்தியுண்டாம்படி ஜ்ஞாநாம்ருதவர்ஷியான ஸதாசார்யன் பக்கலில் சாதகவ்ருத்தியாகை.

அவனடியாக உண்டான ரஹஸ்யத்ரய விவேகத்திற்குப் பலம் —அணுவாய் அஸ்வதந்த்ரமான ஸ்வ ஸ்வரூபம் விபுவாய், ஸ்வதந்த்ரமான பரஸ்வரூபத்திற்கு மோஷமாய், அல்பஜ்ஞனுய், அல்ப ஶக்தியான தன்னுடைய உபாயஸ்வீகாரம் ஸர்வஜ்ஞனுய் ஸர்வ ஶக்தியான ஶரண்யனுடைய பரஸ்வீகாரத்திற்கு மோஷமாய், இவையடியாக க்ருத க்ருத்யனை தனக்கு இங்குமங்கும் பராதீந கர்த்ருத்வ போக்த்ருத்வங்களால்வரும் கைங்கர்ய ப்ரீதி ஸ்வாதீந கர்த்ருத்வ போக்த்ருத்வங்களையுடையனை ஸ்வதந்த்ர ஸ்வாமியினுடைய ப்ரீதிக்கு மோஷமாய் நிற்கும் நிலையறிகை.

இவற்றில் தோற்றின தத்த்வத்ரய விவேகத்திற்குப் பலம்— ஸ்வஶரீரத்தில் ஸ்வாத்மபுத்தி கழிந்து, ஸ்வாத்மாவில் பரமாத்ம ஶரீரத்வ புத்தியுடையனுகை.

ப்ரக்ருதி குணவிவேகத்திற்குப் பலம் — பந்தகமான மிஶ்ர ஸத்த்வத்தையும், அதன் பலங்களான க்ஷுத்ர ஸுகங்களையும் பற்றுதே, மோக்ஷ ஹேதுவான ப்ரக்ருஷ்டஸத்த்வத்தையும், அதின் பலங்களான பகவதநுபவாதிகளையும் பற்றுகை.

ஆத்ம குணவிவேகத்திற்குப் பலம் — பகவத் கைங்கர்யத்தை அநாதரிக்கும் பூர்வ தஶையைக் கழித்துக் கைங்கர்யார்த்தமாக ப்ரவர்த்திக்கும் உத்தரதஶையை உபாதாநம் பண்ணுகை.

ஶரண்ய குண விவேகத்திற்குப் பலம்—அஶரண்ய ஶரண்யனவனுடைய க்ருபா விஶேஷமடியாக வந்த ஆத்மாத்மீய ஸமர்ப்பண பூர்வக பரந்யாஸத்தாலே க்ருதக்ருத்யனவனுக்குத் தானும் தன்னுடைய ஆத்மாத்மீய ஸமர்ப்பண பூர்வக கைங்கர்ய ப்ரதாநத்தினுலே க்ருத க்ருத்யனுய். கைங்கர்ய லாபத்தாலே க்ருதார்த்தனை இவனுடைய லாபத்தைக் கண்டு தானும் க்ரு

தார்த்தனுகக் கடவனுன ஸ்ரீயஃபதியினுடைய பரிமிதமான ச்சந் தாநுவர்த்தநத்தாலே அபரிமிதமான ச்சந்தாநுவர்த்தநம் பெற லாம் என்று அறிகை.

ஸரண்ய ஸம்பந்த விவேகத்திற்குப் பலம்— தாஸ பூதனு கையாலே ஸ்வாமிக்கு அநபிமதத்தில் ப்ரவர்த்தியாதே, ஒள பாதிகமாய் நிலை நில்லாத அல்ப ஸம்பந்தமுடையவர்களை விட்டு. ஸ்வாபாவிகமாய் நிலை நின்ற ஸர்வவித ஸம்பந்தமுடையவனைப் பற்றுகை.

விரோதி விவேகத்திற்குப் பலம் — தாஸபூதனுகையாலே ஸ்வாமிக்கு அநபிமதத்தில் ப்ரவர்த்திக்கைக்கு ப்ராப்தனன் றிக்கே, பரதந்த்ரனுகையாலே ஸ்வாமியினுடைய அபிமதத்தி லும் பரநிரபேக்ஷ ப்ரவ்ருத்தி ஸக்தனுமன்றிக்கே இருக்கிற இவன் அநுகூலங்களாய்த் தோற்றின ப்ரதி கூலங்களை விடுமளவில், விடுகை தன்னிலும் நிரபேக்ஷ கர்த்ருத்வ புத்தியை விடுகை.

உபாய விவேகத்திற்குப் பலம் —ஆவ்ருத்தியில்லாத புரு ஷார்த்தத்திற்கு அதிகாராநு குணமாக ஆவ்ருத்தியில்லாத உபாயத்தைப் பற்றுகை.

புருஷார்த்த விவேகத்திற்குப் பலம் — அல்ப விஷயமான ராகத்தை விட்டு அநந்த விஷயமான ராகத்தையுடையனுகை.

இவ்விவேகபலமுடையவனுக்கு மேல் வரும் பலமும் அநந்த மாய், இங்கிருந்த நாள் ஸ்வபாவ அர்த்த ஸாஸ்த்ர ப்ராப்தமாய்க் கொண்டு கரணத்ரயத்தாலும் வரும் வ்யாபாரம் எல்லாம் யதார்

விவேக பலம்

ஹம் ஸர்வேஸ்வரனுடைய அப் ரீதி வாராமைக்கும், வந்த அப்ரீ தியை ஸமிப்பிக்கைக்கும், கேவல ப்ரீதியை உண்டாக்குகைக்கும் உறுப்பாய்க் கொண்டு இப்ப்ர காரங்களாலே மூன்று வகையாயிருக்கும். இது விவேக பலம்.

நித்யாநுஸந்தேய ஸர்வஸங்க்ரஹம்

'ஸ்ரீமாநுன நாராயணன் தன்னையே பற்றினர், தன்னைப் பெறுகைக்கு தானே உபாயம்'என்று எல்லா வாக்ய ரத்நங்களும் கோப்புண்ட ஏக வாக்யத்திலே ஸித்த ஸாத்ய உபாயங்களும், ஸித்த ஸாத்ய ப்ராப்யங்களும் ஒன்றை ஒன்று விடாதே ஒன்றே ப்ரதாநமாய் நிற்கும் நிலை ஓர் அதிகாரிக்கு நித்யாநுஸந்தேயம், இது ஸர்வ ஸங்க்ரஹம்.

1 ' இன்றென்னைப் பொருளாக்கி '
என்கிறபடியே நடுவே வந்து உய்யக் கொள்கின்ற நாதன் பிரம குருவாகி வந்து அநாதி ஜந்ம பரம்பரைக்கு முடிவான ஸ்ரேஷ்ட்ட ஜந்மத்தில் பிதாவாய்நின்று அறியாதன அறிவிக்க,

ரஹஸ்யத்ரயானுஸந்தான பலம்

ரூபமும், நாமமும், வ்ருத்தமும், போகமும், ஸ்த்திதியும், கதியும் வேறுபடும்படி அன்று பிறக்கும் அதிகாரி, மூன்று எழுத்தாய் ஒன்றின மூலமாகிய ஒற்றை எழுத்திலே தனக்குப்ராமாணிகமாக அநந்யார்ஹ ஸேஷத்வ ஸம்பந்தத்தை இசைந்து, ' நமம ' என்கிற மூன்று எழுத்தின் பொருளைக் காட்டுகிற இரண்டு எழுத்திலே அப்ராமாணிகமான ஸேஷித்வ ஸம்பந்தத்தை இகழ்ந்து, வ்யுத்பத்திவிஸேஷங்களாலே ஐந்துபடியாக விஸேஷப்ரதிபத்தியை உண்டாக்குகிற ஐந்து எழுத்திலே அபரிச்சிந்நமான பரம புருஷார்த்த ஸம்பந்தத்தை உகந்து, ஐயைந்து தத்த்வங்களிற்காட்டில் அதிகமான தத்த்வத்தை உபாயோபேயமாகக் காட்டுகிற ஐயைந்து எழுத்திலே தன் அதிகாரானுரூபமான வஸீகரண ஸம்பந்தத்தைப் பார்த்து இத்தாலேமூவெட்டில் நின்றும் முக்தனும்படியைத்தெளிவிக்கிற நாலெட்டு எழுத்திலே ஸாத்த்யோபாயாந்தரஸம்பந்தமும் விரோதி ஸம்பந்தமும் கழியும்படியைக் கண்டு, ஸோகஸம்பந்தம் தீர்ந்து, மேல் தனக்கு ஸேஷவ்ருத்தி பரனை ஸர்வஸேஷியைப் பற்றத் தானும் ஸேஷவ்ருத்தி பரனும்.

இவன் இன்னமுதெனத் தோன்றித் தன்னை இல்லை என்னப் பண்ணும் விஷயங்களையும், அந்தமில்பேரின்பத்தின் அணுவுக்கும் பற்றுதஆத்மாநுபவரஸத்தையும் அநாதரித்து, அபரிமிதமான அம்ருதஸாகரத்தை அல்லித் தண்டாலே பரிமிதமாக அநுபவிக்குமா போலே, உபாயஸ்வீகார தசையில் உபஜீவித்த நாராயண ரஸாயநத்தாலே ஜராமரணாதி வ்யாதிகள் தீர்ந்து, அநந்தமான ஆராவமுதக் கடலிலே அநுபவியாத அம்ஸம் இல்லாதபடி அகஸ்த்ய பாஷையாலே அநுபவித்து, அந்யோந்யம் போக்தவ்யரான இருவரும் நிற்கிற நிலையைக் கண்டு ஸரிகளோடொக்கக்கைங்கர்யை கரதியாம். இது ப்ரமாண ப்ரமேய ஸங்க்ரஹம்.

ப்ரமாண ப்ரமேய ஸங்க்ரஹம்

---

1 திருவாய் - 10 - 8 - 9.

ஸச்சிஷ்யனுக்கு மோக்ஷோபயுக்தங்களானவைகளை ஸம்யக்காக விவரிக்கை ஸதாசார்ய க்ருத்யம். இச்சிஷ்யனை அடிதப்பாமல் நடத்தி மோக்ஷம் கொடுக்கை ஈச்வரக்ருத்யம்.

ஆசார்யாதி க்ருத்யம்

ஆசார்யன் அறிவித்தபடியே அறிந்து ஈச்வரன் நடத்தின படியே நல்வழி நடக்கை சிஷ்ய க்ருத்யம். இது ஆசார்யாதி க்ருத்யம்.

பரமைகாந்தியான பரமபாகவதனுடைய பகவதநந்யார்ஹ சேஷத்வாத்யவஸாய பலம் பாகவதரல்லாத மாதா பித்ரு ப்ரப்ருதிகளை விட்டுத் தனக்குக் கண்ணும் காலும் உண்டாய், நல்வழி நடகக ருசிஉண்டானால் ஜ்ஞாதாவான (ஜ்ஞாநவானை) தேசிகன் வழிகாட்ட, ஜ்ஞாநசக்திமானை தேசிகன் வழி நடத்த நடக்குமவன் வழியல்லா வழியில் போகாதே வழி பறிப்பார் கையில் அகப்படாதே ஸுகதியாம் (கை). இவனுடையஜ்ஞாநசக்திக்கும் ப்ரவ்ருத்திசக்திக்கும் பரமப்ரயோஜநம் ஸங்கோசமில்லாத ஜ்ஞாநத்தாலே ஸர்வேச்வரனை அநுபவித்து இச்சா விகாதமில்லாத கைங்கர்யம் பெறுகை.

அநந்யார்ஹ சேஷத்வ அத்யவஸாயத்தின் பலம்

ஜ்ஞாநசக்திகளின் ப்ரயோஜநம்

இப்படி ஜ்ஞாநாஜ்ஞாந விவேகம் பண்ணி, ஜ்ஞாநாஜ்ஞாந காரியங்களையும் அறிந்து, தத்த்வஜ்ஞாந பூர்வகமான ஜ்ஞாந விசேஷத்தாலே ஜ்ஞாந ஸங்கோசம் தீர்ந்து, அநாதியாக ஜ்ஞாந ஸங்கோசமில்லாத அயர்வறும் அமரர்களுடைய ஆநந்த ஸாகரத்திலே அழுந்துகை ஆத்மாவிற்கு ஸ்வதஃ ப்ராப்தம். இது ஜ்ஞாநாதி நிஷ்கர்ஷம்.

ஜ்ஞாநாதி நிஷ்கர்ஷம்

1 நின் அருளாம் கதியன்றி மற்றொன்றில்லேன்
நெடும் காலம் பிழை செய்த நிலை கழிந்தேன்*
உன்னருளுக்கினிதான நிலை உகந்தேன்
உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்*

---

1 என் திருமால்! - எனக்கு நாதனான எம்பெருமானே!, நின் அருளாம் கதி அன்றி - உன்னுடைய க்ருபையாகிய கதியைத்தவிர,

மன்னிருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சி பெற வரித்தேன் உன்னை*
இன் அருளால் இனி எனக்கோர் பரமேற்றுமல்
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே. 31

कवितार्किक केसरिणा वेङ्कटनाथेन विरचितः कविना ।
सहृदय हृदय ग्राह्यः सरसोऽयं सारसंग्रहो जयति ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री सार संग्रहः संपूर्णः ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

கவிதார்க்கிக கேஸரிணா வேங்கடநாதேந விரசிதः கவிநா ।
ஸஹ்ருதயஹ்ருதயகராஹ்யः ஸரஸோயம் ஸாரஸங்க்ரஹோ ஜயதி

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கட நாதரால்
அருளிச்செயயபபட்ட ஸ்ரீஸூக்திகளுள்
ஸ்ரீ ஸார ஸங்கரஹம முற்றிற்று

மற்று ஒன்று இல்லேன்- வேறு ஒரு கதியும் இல்லாதவனாயிருக்கிறேன், நெடுங்காலம பிழை செய்த நிலை கழிந்தேன் - அநாதி காலமாக அபராதம் செய்து வந்த நிலைமை (இப்பொழுது) கழியபபெற்றேன், உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன் - உன கருபையைப பெறுவதற்கு (த் தக்க) நலல ப்ரபத்தி மார்க்கத்தை விரும்பினேன், உன சரணே சரண் எள்னும் துணிவு பூண்டேன் - உன திருவடியே உபாயம் என்னும் உறுதிபபப் பெற்றேன். மன் இருளாய் நின்ற நிலை - திடமான அஜ்ஞானமபமாய் இருந்த நிலைமையை, எனக்குத் தீர்த்து - எனக்குப போக்கி வைத்து, வானவர்தம் வாழ்ச்சி தர - நித்ய ஸூரிகளின் வாழ்வை (எனக்கு)த் தரும்படி, உன்னை வரித்தேன் - உன்னை ப்ரார்த்திததுக் கொண்டேன். இன் அருளால் - (உன்) இனிய கருபையால், இனி எனக்கு ஓர பரம் ஏற்றுமல் - இனிமேல் எனக்கு ஒரு பொறுப்பையும் வைக்காமல், நீ என்னை அடைக்கலம் கொள் - நீ என்னைக் காக்க வேண்டிய வஸ்துவாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1 கவிதார்க்கிக கேஸரிணா - கவி தார்க்கிக ஸிம்ஹம் என்கிற விருதைப் பெற்றவரான, கவிநா - கவியாகிய, வேங்கடநாதேந - வேங்

கடநரதன் என்னும் திருநாமமுடையவரால், விரசிதः - செய்யப்பட்ட, ஸஹ்ருதய ஹ்ருதயக்ராஹ்யः - ஸஹ்ருதயர்களால் ஹ்ருதயத்தில் வைக்கத் தகுந்த, அயம் - இந்த, ஸரஸ-சுவைமிக்கதான, ஸார ஸங்க்ரஹः - ஸ்ரீ ஸார ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தம், ஜயதி - ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குகிறது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம





சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

முப்பத்தோன்ருவது ரஹஸ்யம்

ஸ்ரீ மதுரகவி ஹ்ருதயம்

[இது அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் ஒன்பதாவது. ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

* * *

உலகம் படைத்தான் கவியான மாறனுக்கு அன்பனுய்
அவர் பணி உரைத்தே மதுரகவியான ஆழ்வார்

* * *

[இந்த ஒரு வாக்யமே இப்பொழுது காணப்படுகிறது.]

[மிகுதி பாகம் லுப்தம்.]

[இந்த ரஹஸ்யத்தில் கண்ணிநுண் சிறுத்தாம்புக்கு வ்யாக்யானம் அருளிச்செய்யப்பட்டிருக்கலாமென்று பெரியோர்கள் கூறுவர்கள்.]

இந்த வாக்யம் ஸ்ரீ வாத்ஸ்யாஹோபிலாசார்யரால் தம்முடைய நாலாயிரத் தனியன் வ்யாக்யானத்தில் கண்ணிநுண் சிறுத்தாம்புதனியன் வ்யாக்யாநத்தில் ' என்று ஸ்ரீ மதுர கவி ஹ்ருதயத்தில் நம் தேசிகரும் அருளிச்செய்தார் ' என்று உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:

ஸ்ரீ விரோத பரிஹார விஷயமாய்ச் சில விசேஷக் குறிப்புக்கள்

இது ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யங்களில் கடைசி யானது. கீலக வருஷம், தனுர் மாதம், சுக்லபக்ஷம், பஞ்சமி திதி, திரு வோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் சில்பி ராஜகே ஜயித்தல் என் கிற வ்யாஜத்தை முன்னிட்டு, ஸர்வோபஜீவ்யமாய் இருக்க வேண்டும் என்கிற திருவரங்கத்து எம்பெருமான் நியமனத்தினால் தம்முடைய திவ்யார்ச்சா விக்ரஹத்தை ஸ்வாமி தேசிகன் ஏறியருளப் பண்ணினார் என்றும், அதற்குப் பிறகு, தாம் தம்முடைய அவதாரத்திற்குப் பரம ப்ரயோஜநமாயிருக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி அருளிச் செய்த ஸ்ரீ ஸூக்தி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்றும் வைபவப்ரகாசிகாதிகள் கூறி நிற்கும்.

இந்த க்ரந்தத்தில் ஸ்வாமி தாமே 64-வது விரோத பரிஹாரத்தி லும், 105-வது விரோத பரிஹாரத்திலும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தை ப்ரஸ்தாவித்திருக்கிறார். இந்த ரஹஸ்யத்திற்கு ஸம்ஸ்க்ருதீகரணம் செய்த நைனராசார்யரும் முதலில் அவதாரிகையில் 'நம் திருத்தகப் பனார் தாம் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தில் நிரூபிக்கப் பட்ட அர்த்த விசேஷங்களில் உண்டாகிய விரோத சங்கைகளுக்கு இதில் ஸமாதாநம் அருளிச் செய்கிறார்' என்று ஸாதித்திருக்கிறார்.

இது நான்கு அதிகாரங்களையுடையது. முதல்மூன்று அதிகாரங்களின் ஆரம்பத்திலும் அடியவர்க்கு மெய்யனாகிய திருவஹீந்த்ரபுரத்து எம்பெருமான் தெய்வ நாயகன் விஷயமான மங்கள சுலோகம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரத்தின் இறுதியில் ஒரு ச்லோகத்தில் இது இந்தவிஷயமான விரோதங்களுக்குப் பரிஹாரம் என்று ஸாதித்துள்ளார். 1-80 வாக்யங்கள் திருமந்த்ர விஷயமான விரோத சங்கைகளுக்கும், 81-90 வாக்யங்கள் த்வய விஷயமான விரோத சங்கைகளுக்கும், 91-100 வாக்யங்கள் சரம சுலோக விஷயமான சங்கைகளுக்கும், மேல் உள்ள 101-107 வாக்யங்கள் திருமந்த்ரம், த்வயம், சரம சுலோகம் இவை மூன்றும் அவச்யமா என் றிவை முதலிய சங்கைகளுக்குப் பரிஹாரம் கூறுகின்றன. ஒவ்வொரு வாக்யத்தின் முதலில் (பூர்வ பாகத்தில்) சங்கையை அநுவதித்து, மேல் பாகத்தில் அதற்குப் பரிஹாரம் கூறப்பட்டிருக்கிறது. 108-ம் வாக்யத்தில் பிற்காலத்தில் உண்டாகும் சங்கைகளும் இதே ரீதியில் நிராகரிக்கப்பட்டனவாகும் என்றும் உபபாதித்து, 109-ம் வாக்யத்தில் இப்படி ப்ரதாநாம்சத்தில் தெளிவு உண்டாகில் பல ஸித்தியுண்டாம் என்று உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிறது.

சரீரத்துடன் கூடியிருப்பதும், சரீரம் இல்லாமல் இருப்பதுமாகிய இரண்டு அவஸ்த்தைகள் முக்தனுக்கு ஸம்பவிப்பது எப்படி என்கிற விரோதத்தை நிரூபிக்கும் 78-ம் வாக்யத்தில், பிள்ளான் வாக்யமாக ஒரு சுலோகத்தின் பாதி உதாஹரிக்கப்பட்டிருக்கிறது இது அப்புள்ளார் ஸூக்தி என்று ஸ்ரீ நைஞராசார்யர் தம்முடைய ஸம்ஸ்க்ருதீகரணத்தில் 79-ம் வாக்யத்தில் விவரித்திருக்கிறார்.

55-ம் வாக்யத்தில் விபவாவதாரம் என்கிற வ்யவஹாரத்திற்குக் காரணம் கூறப்பட்டிருக்கிறது.

பகவானுக்கு ப்ராப்யத்வம் ப்ராபகத்வம் என்கிற இரண்டு ஆகாரம் எப்படி இருக்க முடியும் என்கிற சங்கைக்குப் பரிஹாரம் கூறும் 62-ம் வாக்யத்தில் தாம் ஸமாதானம் அருளிச் செய்து விட்டு, இதற்கு அநுவாதமாக 'சுருதி பரிசயமுடைய மஹாகவி வாக்யத்தாலேயும் ப்ரஸித்தம்' என்று அநர்க்கராகவம்-3 - 20-ம் சுலோகம் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் 38-ம் வாக்யத்தில் நமக்குப் பரமோத்தேச்யனான ஆசார்யனும் 'தேவதாந்தரத்தைக்குறித்துத்தண்டுல ப்ரதாநம் பண்ணினாலும் சக்யமாயிருக்கப் பகவத் விஷயத்தில் தண்டுல ப்ரதாநாதிகளையும் கூடத்தவறிலும் ஆசார்யன் அத்யந்த பரித்யாஜ்யன்' என்றுஅநுவதிக்கப்பட்டு, அந்த நிஷ்ட நிவ்ருத்தியாவதற்காகச் சிஷ்யன் செய்ய வேண்டிய கார்யமும் உபபாதிக்கப்பட்டிருக்கிறது, இந்த விஷயம் எல்லோரும் நன்கு அறியவேண்டியது ஒன்றாகையினால் இது கொஞ்சம் விவரிக்கப்படுகிறது,

இந்த நிஷ்கர்ஷத்திற்கு மூலம்

'ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின ஆழ்வார்' என்றும்,

'இம்மந்திரத்திற்கு த்ரஷ்டாவுமாய்த் தேவதையுமானவன் பக்கலிலே ஸார்த்தமாக இதைப் பெற்ற திருமங்கை ஆழ்வார்' என்றும்,

'இம்மந்திரத்தைத் திருமங்கை ஆழ்வாருக்கு ஸர்வேச்வரன்தானே உபதேசித்தான்' என்றும்,

திருமந்திரத்தில் ப்ரதாநமான நமஸ்ஸின் அர்த்தத்தை விவரிக்கிறபடியினால்

'அறிவு தரும் பெரிய திருமொழி'

என்றும் ஸ்வாமி தேசிகன் தம்மாலேயே சொன்னாடப்பட்ட கலியன் பெரிய திருமொழியில் எட்டாம் பத்தில், பத்தாம் திருமொழியில்,

'மற்றுமோர் தெய்வமுளது என்றிருப்பாரோடு
உற்றிலேன்*உற்றதும் உன்னடியார்க்கடிமை *
மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட்டெழுத்தும் *
கற்றுநான், கண்ணபுரத்துறையம்மானே '

என்கிற மூன்றும் பாட்டேயாகும், இதில் ததீயபர்யந்தமாக தேவதாந் தர த்யாகமும், ததீய பர்யந்தமாக பகவத் ஸம்பந்தமும் தான் திரு வெட்டெழுத்தின் கருத்து எனக் கலியன் உரைத்தருளினர்.

இந்த உரை குடிகொண்ட மனத்தினராய், இதன் கருத்தை இந்த வாக்யத்திலும்,இன்னம் பல இடங்களிலும் ஸ்வாமிதேசிகன் அருளிச் செய்திருப்பதினால்தான் ரங்கராசார்யர் ஸ்வாமியின் வாழித்திருநாமத்தில்

'கலியனுரை குடி கொண்ட கருத்துடையோன் வாழியே '

என்று அநுஸந்தித்திருக்கிறார். 'கலியனுரை - மற்றெரு திவ்ய தேசத்து எம்பெருமான் விஷயத்திலும் அநுஸந்திக்காமல் வையமே முழுண்டு ஆலிலை வைகிய மாயவனனை தெய்வ நாயகன் விஷயத்தில் மட்டும் அநுஸந்திக்கப்பட்ட 'அடியவர்க்குமெய்யன்' என்னும்உரைகுடி கொண்ட மனத்தினராகையினால், அந்தத் திருநாமத்தையே தாஸஸத் யன், அடியவர்க்கு மெய்யன், அடியவர் பால் மெய்யை வைத்து என்றிப் புடைகளில் திருவயிந்தையில் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான்விஷயத் தில் ஸார்த்தமாகும்படியை நிரூபித்தபடியினால்' என்றும் இப் பாட்டிற்கு இன்னம் பலவித யோஜனைகள் கூறலாமாயினும் அவற்றிற்கெல்லாம் கீழ்க் கூறிய யோஜனையே ப்ரதானமாயிருக்கும்,*

இந்த க்ரந்தத்தின் இறுதியில் எம்பெருமானர் விஷயமாக ஒரு பாட்டு அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

இறுதியில் ஒரு ச்லோகத்தில் இந்த விரோத பரிஹாரம் அருளிச் செய்தது பாகவதர்களின் நியமனத்தினால் என்றும், மற்றெரு ச்லோகத்தில் இதை மற்றவர்கள் ஸ்தோத்திரம் செய்தாலும் நிந்தித் தாலும் ஒரு பாதகமுமில்லை என்றும் அநுஸந்தித்திருப்பதைப் பார் தால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் இறுதியில் அநுஸந்திக்கப்பட்டி ருக்கும்

'நிர்விஷ்டம்'

என்கிற சுலோகமும்,

'கொள்ளத் துணியினும் கோதென்றி கழினும் கூர்மதியீர்,
எள்ளத்தனை உகவாது, இகழாது எம் எழில் மதியே'

என்கிற பாட்டும் நினைவூட்டப்பட்டனவாகும்.

* இது ஸ்ரீ உப வே. சேட்டலூர் ஸ்வாமியின் நிர்வாஹம்.

‘முந்தைமறை மொய்யவழி மொழிநீ என்று
முகுந்தனருள் தந்த பயன் பெற்றேன் நானே’

என்று ஸ்வாமி தாமே அநுஸந்தித்திருக்கிறபடியே அடியவர்க்கு மெய்யனுடைய நியமனத்தினால் ஸ்தோத்திராதிகள் அருளிச் செய்ய ஆரம்பித்ததும் அயிந்தையிலே. அப்படிப்பட்ட ஸூக்திகளில் இறுதியான இந்த க்ரந்தத்தை அருளிச்செய்ததும் அயிந்தையிலேயாகும் என்று ஏற்படுகிறது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்



சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச்சொன்ன பழமொழியுள்

முப்பத்து நாலாவது ரஹஸ்யம்

ஸ்ரீவிரோதபரிஹாரம்

[அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் பத்தாவது.
இது திருவஹீந்திரபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

மூல மந்த்ராதிகாரம் என்னும் முதலாவது அதிகாரம்

[மங்களாசரணம்—ப்ரமேய விஷய நிர்ணயத்தின்அவச்யம்—திருமந்திரத்தில் அகாரம், லுப்த சதுர்த்தி,உகார மகாரங்களில் கருத்தான ரக்ஷகத்வ, சரியஃபதித்வ, சேஷசேஷித்வ, சரீரித்வ, அணுத்வ, விபுத்வ, அவதார, ஜ்ஞாநஸ்வரூபத்வ, கர்மவச்யத்வ, அந்ய யஜநதோஷ, ஜீவோத்பத்தி, ஆநந்தமயத்வ, கைவல்ய நித்யத்வ, பகவத் பாகவத தாஸ்ய, அநந்யார்ஹ சேஷத்வ, பரமைகாந்தித்வ, கைங்கர்ய விச்சேத, ஆசார்யகிங்கரத்வாதி விஷயங்களான சோத்யங்களுக்குப் பரிஹாரம் (1 - 38)—நமஸ்ஸின் அர்த்தமான இஷ்டப்ராப்தி, அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தநா விஷயமான சோத்யங்களுக்குப் பரிஹாரம் (39 - 46)—நாராயண சப்தார்த்தமானஜீவனுடைய ஸுகதுக்காநுபவ, அசித்தின் நச்வரத்வ, சேதந நித்யத்வ, பகவானுடைய அந்தர்பஹிர்வ்யாப்தி, அகிலஹேயப்ரத்யநீகத்வ, லீலா ரூப ஜகத் வ்யாபார, ஜகத்காரணத்வ, நிருபாதிக ஸௌஹார்த்த, ப்ரஸாதந ப்ரதாநத்வ, ஸர்வஜ்ஞத்வ, அவிஜ்ஞாத்ருத்வ, உபாயபலபூதத்வ, ப்ரபந்ந விஷயே உபாயாந்தரஸ்தாந நிவேசந, ப்ரபத்தியின் அநுபாயத்வ அபுநராவ்ருத்தி, விஷயமான சோத்யங்களின் பரிஹாரம் (47 - 65)—சதுர்த்தியின் கருத்தான கைங்கர்யத்தில் ஸாலோக்யாதிகள், ஸ்வைர ஸஞ்சாரம்,போகஸாம்யம்,ஜகத்வ்யாபாரம், அவித்யா நிவ்ருத்தி, ஜ்ஞாநஸிகாஸம், சரீரிஅசரீரத்வாவஸ்த்தை, இவை விஷயமான சோத்யங்களுக்குப் பரிஹாரம் (66 - 80).

(மங்களாசரணம்)

1 श्रीमन्नारायणः स्वामी शरण्यः सर्वदेहिनाम्।
भूयात् निजपदप्राप्ति विरोधि विनिवारकः॥
(ஸ்ரீமந் நாராயணः ஸ்வாமீ ஶரண்யः ஸர்வதேஹிநாம்।
பூயாத் நிஜபத ப்ராப்தி விரோதி விநிவாரகः॥)

2 उदितं भवतः पायाद्दौषधाद्रि समीपतः।
औषधं चेतसा सेव्यमपुनःस्तन्यपायिनाम्॥
(உதிதம் பவதः பாயாத் ஔஷதாத்ரி ஸமீபதः।
ஔஷதம் சேதஸா ஸேவ்யம் அபுநஸ்ஸ்தந்யபாயிநாம்॥)

प्रपदनमये विद्याभेदे प्रतिष्ठित चेतसः प्रतिपदमिह प्रज्ञादायं दिशन्तु दयाधनाः।
शठरिपुशुकव्यास प्राचेतसादिनिबन्धन श्रमपरिणतश्रद्धा शुद्धाशया मम देशिकाः॥

3 (प्रपदन मये वित्यापेदे प्रतिष्टिट्ठित सेतसः
प्रतिपदमिह प्रज्ञ्ञादायं दिशन्तु दयादनाः।
शटरिपु शुकव्यास प्राचेतसादि निपन्दन
श्रम परिणत श्रद्दत्ताशुत्तादशया : मम देशिकाः॥)

---

1 ஸர்வ தேஹிநாம் - எல்லா ப்ராணிகளுக்கும், சரண்யः - சரண்யனுனை, ஸ்ரீமந் நாராயணः ஸ்வாமீ - ஸ்ரீமந் நாராயணனுகிய பகவான், நிஜபத ப்ராப்தி - தன்னுடைய ஸ்தாநமான மோக்ஷத்தை அடைவதற்கு, விரோதி விநிவாரகः - விரோதிகளைப் போக்கடிப்பவனுக பூயாத் - இருக்க வேண்டும்

2 ஔஷதாத்ரி ஸமீபதः - ஔஷதாத்ரியின் அருகில், உதிதம் - உண்டானதான, ஔஷதம் - மருந்தாயும், அபுநः ஸ்தந்யபாயிநாம், தாய்ப்பாலைக்குடியாதவர்களாய் இருக்கவேண்டுமென்கிற ஆசையுடையவர்களினால், சேதஸா - மனத்தினால் ஸேவ்யம் - நினைக்கத் தக்கதுமானஔஷதம் மருந்தாகியபகவான், பவதः - ஸம்ஸாரத்திலிருந்து பாயாத்-(உங்களை)காப்பாற்றட்டும் 3 ப்ரபதநமயே - ப்ரபத்தினன்னும்,வித்யாபேதே - (மோக்ஷமடைவதற்கு உபயமாகக்கூறப்பட்ட) வித்யைகளின் பிரிவில், ப்ரதிஷ்ட்டித சேதஸः - நன்கு ஊன்றிய மனத்தையுடையவர்களும், தயாதநாः - கருணையையே தநமாக உடையவர்களும், சடாரிபு - நம்மாழ்வார், சுக - சுக மஹர்ஷி வ்யாஸ - வ்யாஸர். ப்ராசேதஸாதி - வால்மீகி முதலியவர்களினால் இயற்றப்பட்ட, நிபந்தந - க்ரந்தங்களில், சரமபரிணத - பரிச்ரமத்தின் விளைவான, ச்ரத்தா - ச்ரத்தையால்,சுத்த ஆசயாः - பரிசுத்தமான மனதையுடையவர்களுமான, மம - அடியேனுடைய, தேசிகாः - ஆசார்யர்கள். இஹ - இந்த க்ரந்தத்தில், ப்ரதிபதம் - ஒவ்வொரு பததத்திலும், ப்ரஜ்ஞாதாயம் - நல்ல ஜ்ஞாநமாகிற ஸம்பத்தை, திசந்து - கொடுக்கட்டும்.

1 பரவும் மறைகள் எலாம் பதம் சேர்ந்து ஒன்ற நின்ற பிரான் *
இரவன்றிரவியின் காலத்தழைத்த எழில் படையோன் *
அரவும் கருடனும் அன்புடன் ஏந்தும் அடியிரண்டும்*
தர எந்தமக்கு அருளால் தளராமனம் தந்தனனே. 32

முமுக்ஷுவுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான ப்ரமேயங்களில் தோற்றிய விரோதங்களை ஸமிப்பியாதொழியில்

1 'ज्ञानेन हीनः पशुभिस्समानः' (ஜ்ஞாநேந ஹீநः பசுபிஸ்ஸமாநः) என்கிற தசையாம். விருத்தங்கள் போல்தோற்றின அர்த்தங்களை துர்நிரூபங்கள் என்று விடுதல், ஒன்றையிட்டுஒன்றைபாதிப்புதல் செய்யில் மாயாவாதிகள் படியாம். விருத்தமாய்த் தோற்றின கட்டளையிலேஇசைந்தால் பேதாபேதவாதிகள்படியாம். ஆனபின்பு ரஹஸ்யத்ரயத்தில் அவச்ய வேத்யங்களான ப்ரமேயங்களில் தோற்றின விரோதங்களை வாகயாநுக்ராஹக ந்யாயங்களாலே ஸமிப்பித்து, ஸாரதமங்களான தத்த்வ ஹித புருஷார்த்த விசேஷங்களைத் தெளிந்து, வல்லதொரு மோக்ஷோபாயத்தை அவலம்பித்து, ஸ்வநிஷ்ட்டாநுரூப நிரபாய வ்ருத்தியோடே நடப்பார்கள் ஸாத்த்விகர்கள்.

ப்ரமேய விஷய நிர்ணயத்தின் அவச்யம்

---

1 பரவும் - பரவுகின்ற மறைகள் எல்லாம் - எல்லா வேதங்களும், பதம் - தன் திருவடிகளை, சேர்ந்து - அடைந்து, ஒன்ற-பொருந்தியிருக்கும்படி, நின்ற - எழுந்தருளியிருந்த பிரான் - உபகாரம் செய்தவனும், அன்று - பாரதயுத்தத்தில், இரவியின் காலத்து - ஸூர்யன் ப்ரகாசிக்கும் காலமாகிய பகலில், இரவு - இராத்திரியை அழைத்த - வரவழைத்த, எழில் - ப்ரகாசமுடைய, படையோன் - சக்கரமாகிற திவ்ய ஆயுதத்தையுடையவனுமான பகவான், அரவும் - பாம்பும் (ஆதிசேஷனும்) கருடனும், அன்புடன் - ப்ரீதியுடன் (பக்தியுடன்) ஏந்தும் - தரிக்கிற, அடியிரண்டும் - திருவடிகள் இரண்டையும், எந்தமக்கு-நமக்கு, [வந்து-திருவஹீந்திரபுரம் என்னும்க்ஷேத்ரத்தில் அர்ச்சாரூபியாய்த் தோன்றி, எமக்கு). - தர - கொடுக்க, தளராத - சோர்வை அடையாத, மனம் - மனத்தை, அருளால் - க்ருபையினால், தந்தனன் -கொடுத்தான். 32

2 நா - புரா - 10 - 13. ஜ்ஞாநேந ஹீநः- ஜ்ஞாநம் இல்லாதவன், பசுபிः - ஸமாநः - ம்ருகங்களுக்கு ஸமமானவன்

(திருமந்திர விஷயமான சங்கைகளுக்குப் பரிஹாரங்கள்—1-80)

அவ்விடத்திலே முற்பட

1 'सर्वमष्टाक्षरान्तस्थं' (ஸர்வம் அஷ்டாக்ஷராந்தஃஸ்த்தம்) என்னும்படி ஸர்வார்த்த ஸங்க்ரஹமான மூலமந்த்ரத்தில் அர்த்தானுஸந்தான பரருக்குத் தண்ணீர்த் துரும்பு போலே வரும் சங்கைகளைப் பரிஹரிக்கிறோம்.

ஸர்வரக்ஷகத்வம்

அநாதிகாலம் க்ஷேத்ரஜ்ஞர்கள் க்லேசப்படப் பார்த்திருக்கிற ஸர்வஜ்ஞனான ஈஶ்வரன் ஸர்வரக்ஷகன் என்கிற இவ்வர்த்தம் கூடுமோ? என்னில், ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வம் இரண்டு படியாயிருக்கும். எங்ஙனே என்னில், ஸர்வருக்கும் ஸத்தாதிகள்குலையாதபடி பண்ணுகிற ரக்ஷகத்வம் நிரபேக்ஷம், ஸம்ஸாரிகள் திறத்தில் அநிஷ்ட நிவாரணாதி ரூபமான ரக்ஷகத்வம் இவர்கள் பக்கலிலே ஶாஸ்த்ரோக்தமாய் இருப்பதேதேனும் ஒரு வ்யாஜத்தை அபேக்ஷித்து இருக்கும், ஆகையாலே, ஸர்வ க்ஷேத்ரஜ்ஞர் விஷயத்திலும் அநிஷ்ட நிவாரணாதி ரூபமான ரக்ஷணத்திற்கு யோக்யனாகையாலும் மேல் பெறப்புகுகிற பரமபுருஷார்த்தத்திற்கு உறுப்பான ஸத்தாதிகள் குலையாதே நித்யமாக ரக்ஷிக்கையாலும் ஸர்வரக்ஷகன்என்கிறது. 1

ஸ்வதஸ்ஸித்தாதிசயத்வம்

இப்படி ஸர்வரக்ஷகனான ஈஶ்வரன் ஸர்வஶேஷியாம்போது, தன்னை ஒழிந்த நிதயா நித்ய ஸர்வ பதார்த்தங்களாலும் தனக்கு உபகாரம் உண்டாக வேண்டும், இப்படியானால் ஸ்வதஸ்ஸித்தாதிஶயன் என்கை கூடுமோ? என்னில், இது கூடும். அபிரூபன் ஆபரணம் பூண்டாற்போலே ஸ்வதஸ்ஸித்தமான ஜ்ஞாநத்வ ஆநந்தத்வ அமலத்வாதிகளையுடையவன் தன் குண விபூதிகளாலும் அலங்க்ருதனாய் அதிஶயவானாகை விருத்தமன்றிறே.

'स्वया दीप्त्या रत्नं भवदपि महार्घं न विरुजं
न कुण्ठस्वातन्त्र्यं भवति च नचान्याहितगुणम्'

---

1 நார - கல் - 1 - 9, ஸர்வம் - எல்லா அர்த்தங்களும், அஷ்டாக்ஷராந்தஃஸ்த்தம் திருமந்திரத்திற்குள் அடங்கி இருக்கின்றன.

1 (ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் ந விகுணம ந குண்ட்ட ஸ்வாதந்த்ர்யம் பவதி ச ந சாந்யாஹித குணம்) என்கிற ந்யாயமும் இங்கே கண்டு கொள்வது. 2

'ஏகன் ஸ்வ வ்யதிரிக்த ஸமஸ்தஶேஷீ' என்று ஶாஸ்த்ரம் சொல்லா நிற்க,

2' उभयाधिष्ठानं चैकं शेषित्वम् '

(உபயாதிஷ்ட்டாநம் சைகம் ஶேஷித்வம்)

என்று சொல்லுகிற அர்த்தம் கூடுமோ? என்னில், லோகத்தில் பதிக்கும் பத்நிக்கும் க்ருஹ க்ஷேத்ராதிகள் எல்லாம் ஶேஷமாயிருக்குமா போலே இங்கும் இருவரையும் ஒழிந்தவை எல்லாம்

ஸர்வசேஷித்வம்

3 ' अस्या मम च शेषं हि विभूतिरुभयात्मिका '

(அஸ்யா மம ச ஶேஷம் ஹி விபூதிருபயாத்மிகா)

என்கிறபடியே இருவருக்கும் பொதுவான ஶேஷமாயிருக்க, பதித்வ பத்நீத்வ வ்யவஸ்த்தையாலே ஒருவன் ஸர்வ ஶேஷியாக நிற்கை விருத்தமன்று. 3

இப்படி ஸர்வேஶ்வரன் ஸர்வஶேஷியாய்நிற்க,

4 ' परिजन परिवर्हा भूषणान्यायुधानि '

(பரிஜந பரிபர்ஹா பூஷணங்யாயுதாநி)

இத்யாதிகளில் தானும் ஆஶ்ரிதருக்கு ஶேஷமாய் நிற்கிறான்

---

1 ஸ்ரீகுண - கோச - 31 ரத்நம் - மணியானது, ஸ்வயா தனக்கு விசேஷணமான, தீப்த்யா - காந்தியினால், மஹார்க்கம் - உயர்ந்த விலையுள்ளதாக பவதபி - ஆனபோதிலும். விகுணம் - குணமில்லாததாக, நபவதி - ஆகிறதில்லை, குண்ட ஸ்வாதந்த்ர்யம் - தடுக்கப்பட்ட ஸ்வாதந்த்ர்யத்தை உடையதாகவும், ந - ஆகிறதில்லை, அந்யாஹிதகுணம் - வேறொன்றினால் உண்டாக்கப்பட்ட குணத்தையுடையதாயும் ந - ஆகிறதில்லை.

2 ஷடர்த்த ஸங்க்ஷேபம் 59ம்பக்கம்பார்க்க

3 விஷ்வ - ஸம் 59ம்பக்கம் பார்க்க

4 ஸ்ரீ வரத - ஸ்த -63 (ஓ! வரதனே) தேவீருடைய பரிஜனங்கள், சத்ர சாமராதிகள், ஆயுதங்கள், ஆபரணங்கள் இவற்றை (ஆச்ரிதர்களுக்காக ஆக்கினீர்)

என்கை கடிக்குமோ? என்னில், ஆகார பேதத்தாலே இரண்டும் கடிக்கும்.

1 ' उपादत्ते सत्ता स्थिति नियमनाद्यैः चिदचितौ स्वमुद्दिश्य श्रीमान् '

(உபாதத்தே ஸத்தா ஸ்த்திதி நியமநாத்யைः சிதசிதௌ ஸ்வமுத்திச்ய ஸ்ரீமாந்)

ஆச்ரித சேஷத்வம்

என்கிறபடியே எல்லாவற்றையும் தனக்காக உபாதாநம் பண்ணி வைக்கையாலே தான் ஸர்வ சேஷியானுன், ஆச்ரிதர் திறத்தில் தனக்கு ஓர் உபகாரத்தைக் காக்ஷியாதே உபகரிக்கையாலே அவர்களுக்கு சேஷமாகிறுன். இப்படி சேஷமாயிருக்கிற இது

2 ' दास्यमैश्वर्ययोगेन ज्ञातीनां च करोम्यहम् '

(தாஸ்யமைச்வர்யயோகேந ஜ்ஞாதீநாம் ச கரோம்யஹம்)

3 ' इमौस्म मुनिशार्दूल किंकरौ समुपस्थितौ '

(இமௌஸ்ம முநிசார்த்தூல! கிங்கரௌ ஸமுபஸ்த்திதௌ)

4 ' अयमस्मि महाबाहो ब्रूहि यत्ते विवक्षितम् '

(அயமஸ்மி மஹாபாஹோ ப்ரூஹி யத்தே விவக்ஷிதம்)

என்கிற இடங்களில் போலே குணக்ருதமாய் ப்ரீத்யதிசய ஹேதுவாகையாலே தோஷமன்று. 4

---

1 ஸ்ரீரங்க-ஸ்த-2-87. ஸ்ரீமாந் - ச்ரியः பதியான பகவான், சிதசிதௌ - சேதநா சேதநங்களான வஸ்துக்களை, ஸத்தாஸ்த்திதி நியமநாத்யைः - ஸ்வரூபம் இருத்தல், ரக்ஷித்தல் நியமித்தல் இவைகளிஞல், ஸ்வம் உத்திச்ய-தன் ப்ரயோஜநத்திற்காக, உபாதத்தே - அங்கீகரிக்கிறுன்.

2 ஐச்வர்ய யோகேந - ஈச்வர சக்தியிஞல், ஜ்ஞாதீநாம் - ஜ்ஞாதிகளுக்கு, தாஸ்யம் - தாஸவ்ருத்தியை, கரோமி - செய்கிறேன்.

3 ராமா - பால 31.4 முநிசார்த்தூல-முநிச்ரேஷ்டரான விச்வாமித்ரமஹர்ஷியே, இமௌ-இந்தநாங்கள், கிங்கரௌ-இட்ட வேலையைச் செய்ய, ஸமுபஸ்த்திதௌ ஸ்ம - அருகில் வந்திருக்கிறோம்.

4 பார - உத் - 1 - 10 அயம் அஸ்மி-இந்தநான் (உனக்குஏவல் செய்வதற்காக) இருக்கிறேன், மஹாபாஹோ - உத்தமமான கைகளை யுடையவனே, யத் -எது, தே - உனக்கு, விவக்ஷிதம்-சொல்ல வேண்டியதோ (அதை), ப்ரூஹி - சொல்

ஜீவனுக்கு ஸேஷத்வம் ஸ்வபாவஸித்தமாகையாலே நித்ய மாயிருக்கிறது என்னில், முக்ததசையில் சொன்ன பரமஸாம்யம் கூடுமோ? ஆகையால் மோக்ஷம் பெறுமளவும் இவன் ஸேஷமாமத்தனையன்றே?

முக்ததசையிலும் சேஷத்வம்

என்னில், துலாத்ருதங்களான ஸ்வர்ண பாஷாணுதிகளுக்கு ஓர் ஆகாரத்தாலே பரமஸாம்யம் சொல்லுமா போலே முக்தனுக்குச் சொன்ன பரம ஸாம்யத்தை

1 ' भोगमात्र साम्यलिङ्गाच्च '

(போகமாத்ர ஸாம்யலிங்காச் ச)

என்று ஜ்ஞாநாநந்தங்களிலே வ்யவஸ்த்திதமாக்குகையாலும்,

2 ' जगद्व्यापारवर्जम् '

(ஜகத் வ்யாபாரவர்ஜம்)

என்றதும் மற்றுமுள்ள லக்ஷணங்களுக்கு நிதர்ஸநமாகையாலும். முக்ததசையிலும் ஸேஷத்வம் இவனுக்கு அநுவர்த்திக்கக் குறையில்லை. 5

இப்படி முக்தனுக்கு ஸேஷத்வம் நின்ற போதே, அத்தோடு துல்ய ந்யாயத்தாலே பாரதந்த்ர்யமும் கழியாமையாலே முக்தனே ஸ்வதந்த்ரன் என்று விஸேஷிததுச் சொல்லுகிற ஸ்ருதி ஸ்ம்ருதிகளோடே விரோதம் வாராதோ?

முக்தஸ்ய ஸ்வதந்த்ரத்வம்

என்னில், பரமாத்ம ஸரீரமாக ஸ்ருதிஸித்தனை ஜீவனுக்கு முக்ததசையிலும் பரமாத்மாவைப் பற்றப பாரதந்த்ர்யம கழிய விரகில்லை. ஆனபின்பு

' स्वातन्त्र्यमतुलं प्राप्य तेनैव सह मोदते '

---

1 சாரீ-ஸூத் - 4 - 4 - 21 போகமாத்ரஸாம்யலிங்காச்ச அநுபவம் மாத்திரம் ஸமமாயிருக்கும் என்பதில் ஸ்ம்ருதி முதலியவைகள் இருக்கிறபடியினாலும், (ஜகத்வ்யாபாரமில்லையேயாகிலும் ஆநந்தம் துல்யமாயிருக்கும்)

2 சாரீ - ஸூத் - 4 - 4 - 1 ஜகத் வ்யாபாரவர்ஜம் - (முக்தனுக்கு ஐச்வர்யம்ஜகத்ஸருஷ்டி முதலிய வ்யாபாரங்களைத் தவிர (அநுபவங்களில்பகவானுடன் ஸாம்யம் உண்டாகிறது)

1 (ஸ்வாதந்த்ர்யமதுலம் ப்ராப்ய தேஸைவ ஸஹ மோததே) இத்யாதிகள் கர்மபாரதந்த்ர்யம் கழிந்த முக்ததசையில் அபிமத கைங்கர்யங்களில் இச்சாவிகாதமில்லாதபடியைச் சொல்லுகிறன. 6

இப்படி மோஷத்வ பாரதந்த்ர்யங்கள் நித்யமானாலும்

2 'दासभूताः स्वतस्सर्वे ह्यात्मानः परमात्मनः'

(தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாநः பரமாத்மநः) என்கிற இடம் ப்ரணமாதி ஸேவைக்கு ஔசித்யம் காட்டுகைக்காக உபசரித்ததாமத்தனையன்றே? லோகத்தில் பாரதந்த்ர்ய மோஷத்வங்களையுடையரான பஶ்வாதி சேதநரை தாஸர்கள் என்று சொல்லக் காண்கிறிலோம்? இங்கு திர்யக் ஸ்த்தாவரங்கள் முதலான ஸர்வாத்மாக்களையும் தாஸ பூதர் என்றன்றே சொல்லுகிறது? என்னில், ஒரு சேதநனைக் குறித்துத் தன் மோஷத்வததை அநுஸந்திக்கைக்கு யோக்யனான சேதநனை லோகத்திலும் தாஸன் என்கிறதாகையாலே இங்கு ஸ(ஷ)ப்தகல்பரான ஸ்த்தாவராத்யாத்மாக்களுக்கும் ஶரீராந்தரத்திலே இந்த யோக்யதை வெளிப்படுமாகையாலே எல்லாரையும் தாஸபூதர்என்கைக்குக் குறையில்லை. லோகத்தில் பஶ்வாதிகளுக்கு அந்தப் பஶ்வாதி ஶரீரத்தோடு அநுஸந்தாநம் கூடாமையாலும், ஶரீராந்தரத்தில் அந்தச் சேதநனைக் குறித்து மோஷமாகையில் நியமமில்லாமையாலும் தாஸபாவம் ப்ரவ்ருத்தமாகாதொழிகிறது. 7

பரமாத்மாநம் ப்ரதி ஸர்வேஷாம் தாஸத்வம்

சேதநா சேதநங்கள் பத்தருக்குக் கர்ம விமோஷங்களாலும், முக்தருக்கும் நித்யருக்கும் பகவதபிமத விமோஷங்களாலும், சில காதாசித்கமாகவும் சில நித்யமாகவும் மோஷமாய் நிற்கிறநிலை பொய் என்னவொண்ணுதிருக்க, இவற்றிற்குப் பரமாத்மாவைப் பற்ற அநந்யார்ஹ மோஷத்

அநந்யார்ஹசேஷத்வம்

---

1 பரமஸம்ஹிதை அதுலம் - உத்தமமான, ஸ்வாதந்த்ர்யம் - ஸ்வதந்திரனையிருப்பதை ப்ராப்ய - அடைந்து, தேஸைவ ஸஹ - அந்தப் பகவானுடனே, மோததே - ஸந்தோஷப்படுகிறான்,

2 மந்த்ர ராஜ பதஸ்தோத்ரம் - ஸர்வேஹி ஆத்மாநः - எல்லா ஆத்மாக்களும், பரமாத்மநः - பரமாத்மாவாகிய பகவானுக்கு, ஸ்வதः - ஸ்வபாவத்திலேயே, தாஸபூதாः - தாஸர்கள் (என்று அறிந்து நான் ஸேவிக்கிறேன்)

வம் ப்ரமாணிகமாமோ ? என்னில், கர்மாதிகள் உபாதியாக வரும் அந்ய மோக்ஷத்வமும், நிருபாதிக ரூபத்தாலே வரும் அநந்யார்ஹ மோக்ஷத்வமும் விருத்தமன்று, ஸ்ரீயஃபதியை ஒழிந்தார்க்கு ஒன் றும் நிருபாதிக மோக்ஷமன்று என்கையிலே அவதாரணத்திற்குத் தாத்பர்யம். 8

சரீராத்மபாவம்

இம்மோக்ஷத்வாவதாரணத்தாலே ஸரீராத்மபாவம் ப லி க் கும் என்னும் இடம் கூடுமோ? அல்லாத த்ரவ்யங்களோப் போலன் றிக்கே ஸரீரத்தை வேறு ஒருத்த னுக்கு ஸரீரமாக்கவொண்ணுது என்கிற விமோக்ஷம் இல்லையோ? என்னில், பத்நியையும் வேறொருத்தனுக்குப் பத்நியாக்க வொண் ணுது என்கிற விமோக்ஷமுண்டு. இவளோ ஓரோர் ஆகாரங்களாலே பரமோக்ஷமாக்க ஸக்யமென்ருல், தன் ஸரீரத்தையும் த்யூத விக்ர யாதிகளாலே பரமோக்ஷமாக்க ஸக்யமாயிரா நின்றது. ஸரீரத்தை வேறு ஒருத்தருக்கு ஸரீரமாக்கவொண்ணுது என்கிற அர்த்தமும் வேதாந்தவிருத்தம். ஈஸ்வரன் தன் ஸரீரமான அசித் த்ரவ்யத்தை ஜீவர்களுக்கு ஸரீரமாக்கக் காணு நின்ருேமிறே. ஆகையால் மோக்ஷத்வாவதாரணம் கொண்டு ஸரீரத்வம் சொல்லவொண் ணுது? என்னில், அவதாரணம் அயோக வ்யவச்சேதம் என்றும், அந்யயோகவ்யவச்சேதம் என் று ம் இரண்டுபடியாயிருக்கும். அதில் சதுர்த்தியில் தோற்றின மோக்ஷத்வத்திற்கு உபாதியில்லா மையாலே அயோக வ்யவச்சேதம் ஸித்திக்கையால் அவ்வழி யாலே ஸரீரத்வம் பலிக்கிறது. ஸரீரமாவது ஒரு சேதநனுக்கு ஸ்வமோக்ஷமல்லாதபடிபண்ணவொண்ணுத த்ரவ்யம். இவ்வர்த்தம் இங்கு அயோக வ்யவச்சேதத்தாலே ஸித்திக்கையால் ஸரீரத்வம் ஸித்தம். அந்யயோக வ்யவச்சேதமாகிற இது தனக்கு உபாதி யாலே பிறந்த அந்யமோக்ஷத்வத்தைப்பற்ற நிர்விண்ணனுய், அவ்வுபாதியைக் கழிக்கும் விரகிலே முயலுகைக்கு உறுப்பாம். இப்படி மத்யமாக்ஷரத்தில் பலிக்கிற உபாயார்த்தியான தசை யைப் பற்ற மத்யமபதத்திலே உபாயம் உதிக்கிறது. 9

ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் ஒக்க அணுத்வமும் வ்யாபித்வ மும் ஸாஸ்த்ர ஸித்தமாயிருக்கச் செய்தே. ஜீவனுக்கு அணுத்

வத்தை நிலை நிறுத்தி, வ்யாபித்வ வசநத்திற்கு அந்யதாஸித்தி சொல்லக் கடவதாலும், ஈச்வரனுக்கும் ஸ்வரூபம் அணுவாய், வ்யாபிதவம் வேறொருமுகத்தாலே யாலுலோ ? என்னில், இது அணுத்வ வி பு த் வ ங் களையிட்டு ஜீவ பர விபாகம் சொல்லுகிற ச்ருதிவாக்யங்களாலும்,

அணுத்வ விபுத்வ ப்ரகாரம்

1 ' मया ततमिदं सर्वं ' (மயா ததம் இதம் ஸர்வம்)

2 ' यो लोकत्रयमाविश्य ' (யோலோகத்ரய மாவிச்ய)

3 ' यथा सर्वगतो विष्णुः ' (யதா ஸர்வகதோ விஷ்ணுः)

இத்யாதிவசநங்களாலும பரிஹ்ருதம், இப்பிரிவு

4 ' नाणुरतच्छ्रुतेः इति चेत्—न, इतराधिकारात् '

(நாணுரதச்ச்ருதேः இதி சேத்—ந இதராதிகாராத்)

இத்யாதி ஸூத்ரங்களாலே ஸமர்த்திக்கப்பட்டது. ஈச்வரனுக்கு அணுத்வ வ்யபதேசம் உபாஸநார்த்தாவச்சேதாதி நிபந்தநம் என்னுமிடம் ப்ரகரணாதி ஸித்தம். 10

தன் சரீரத்தில் பாணி பாதாதிகளில் எங்கும் தனக்கு ஸுக துக்கோபலப்தியுண்டாயிருக்கத் தன்னை அ ணு ப ரி மா ண ன் என்னில், இது ஸர்வருக்கும் உபலம்ப விருத்தமாகையாலே இவனை அணு என்ற இடம் அந்ய பரமாக வே ண் டா வே ா

ஸுகதுக்கோபலம்பம்

என்னில், இவனை விபுவாகவாதல் தேஹ ப ரி மா ண னு கவாதல் கொண்டாலும் அவ்வோப்ரதேசம்

---

1 கீதை - 9 - 4 இதம் - இந்த, ஸர்வம் - எல்லா லோகமும், (ப்ரகாசமில்லாத ஸ்வரூபத்தையுடைய) மயா - என்னால், ததம் - வ்யாபரிக்கப்பட்டது.

2 கீதை - 15 - 17, (எல்லாவற்றையும் நியமிப்பவனாயிருக்கிறவன்) யः - எவன், லோக த்ரயம் - மூன்று விதங்களான வஸ்துக்களையும், ஆவிச்ய - உள்ளே நுழைந்து (தரிக்கிறானே)

3 விஷ்ணு புரா - 1 - 8 - 17. யதா - எப்படி, விஷ்ணுः - பகவான், ஸர்வ கதः - எல்லா இடத்திலும் வ்யாபித்திருக்கிறானே.

4 சாரீரகஸூத் - 2 - 3 - 22 அதச்ச்ருதே - ச்ருதியில் பெரியவன் என்று சொல்லியிருக்கிற படியினால், ந அணுः - (ஜீவாத்மா) அணுவல்ல இதி சேத் - என்னில், ந - இது நேரன்று, இதராதிகாராத் - (விபு என்று அங்கு பரமாத்மாவே விபுவாகக் கூறப்படுகிறபடியினால்.

களில் தர்ம பூதஜ்ஞாநவிஷயீகாரமில்லாதபோது, அங்குற்ற ஸுக துக்கோபலம்பம் கூடாமையாலே ச்ருதி சொன்ன அணுத்வத்தை இசைந்தாலும், தர்ம பூதஜ்ஞாந வ்யாப்தி விமோஷத்தாலே அவ்வோ சரீராவயவங்களில் ஸுகதுக்கோபலம்பத்திற்கு அநுபபத்தியில்லை. 11

ஆனாலும் ஸௌபரி ப்ரப்ருதிகளான யோகிகளும் முக்தரும் நித்யரும் ஒரு காலே பல சரீரத்தை அதிஷ்டிக்குமிடத்தில், அந்தந்த சரீரங்கள் எல்லாவற்றிலும் ஸ்வரூப ஸந்நிதியில்லாத போது பாஹ்ய விஷயங்களில் ஜ்ஞாந வ்யாப்தி பிறந்த அளவாய் அவ்வோ ப்ரதேசங்களில் அஹம்புத்தி கூடா தொழியாதோ? என்னில், ஒரு சரீரத்திலே பல அவயவங்களை அதிஷ்டிக்கிற போது எங்குற்றைக்குமாக ஒரு அஹம்புத்தியாயிருக்கிறுப் போலே, ஒருக்காலே பல சரீரங்களை அதிஷ்டித்தாலும் தன் ஸ்வரூப ஸந்நிதியுள்ள இடத்தில் அஹம்புத்தி ஒன்றுமே உள்ளது. அது தன்னுலே தனக்கு அதிஷ்டேயமான பல சரீரத்தில் நான் என்கிற வ்யவஹாரத்திற்கு விரோதமில்லை. 12

இப்படியானாலும் அணுவான ஜீவன்தானே முக்த தசையில் விபுவாம் என்கிற வசநங்களின் ஸ்வாரஸ்யத்தாலே இவனுடைய அணுத்வம் ஆமோக்ஷ ஸ்த்தாயியாமத்தனை போக்கி நித்யமாக வற்றே? என்னில், அணுத்வத்தை ஜீவஸ்யஅணுத்வமும்நித்யத்வமும் ஸ்வரூப நிரூபகமாகச் சொல்லுகிற வாக்யம் ப்ரபலமாகையாலும் நிர்விகார ச்ருதி பலத்தாலும் பல தசையில் சொல்லுகிற விபுத்வமும் அநேகசரீர பரிக்ரஹமும்

1 'प्रदीपवदावेशः' (ப்ரதீபவதாவேசः)

என்கிற கட்டளையிலே ஜீவனுக்கு ப்ரபா துல்யமான ஜ்ஞாநத்தினுடைய வ்யாப்தி பாலே என்று கொள்ளுகை உசிதம். 13

ஒருவனுக்கு ஒரு காலே அநேக சரீர பரிக்ரஹம் கூடினால் ஆத்மைக்யம் தோற்(றின)றுகிற வசநங்களில் ஸ்வாரஸ்யத்தைக்

---

1 சாரீ ஸூ - 4 - 4 - 15 ம் பக்கம் பார்க்க

ஏகஜீவவாதநிரஸநம்

குலே யா தே ஸர்வஶரீரங்களும் ஒருவனுக்கேஶரீரமாக ப்ராப்தமாகையால் ஏகஜீவவாதம் ப்ரஸக்தமாகாதோ? என்னில், இது ஸர்வத்ர ஸுகதுக்க ப்ரதிஸந்தாநாதிகள் இல்லாமையாலே நிரஸ்தம். அநேக ஶரீரம் ஒரு காலே எடுப்பார்க்கு அப்போது அவ்வோ ஶரீரங்கள் எல்லாவற்றிலும் உள்ள ஸுகதுக்காதிகளுக்கு ப்ரதிஸந்தாநமுண்டாயிறேயிருப்பது. அந்தःகரணாதி பேதத்தாலே ப்ரதிஸந்தாநம் பிறவாதொழிகிறது என்று காட்டுவதொரு வசநம இல்லே. (இப்படி) நிர்மூலமாகக் கல்பிக்கப் பார்த்தால் இது தேஹாதி பேத ப்ரதிபந்தியாலே நிரஸ்தம். 14

இப்படி ஏகத்திற்கு உபாதிபேதத்தாலே ப்ரதிஸந்தாநாபாவம் கூடாதாகில், அவதாரங்களில்

1 ‘ भवान् नारायणो देवः ’(பவாந்நாராயணோ தேவः) என்றும்,

2 ‘ आत्मानं मानुषं मन्ये ’

(ஆத்மாநம் மாநுஷம் மந்யே)

என்றும் இக்கட்டளையில் வசநங்களாலே ப்ரதிஸந்தாநம் இல்லே என்று தோற்றுகையாலே அவதாரம்தோறும ஆத்ம பேதம் கொள்ள வேண்டி, ராமக்ருஷ்ணாதிரூபங்களெல்லாம ஒரு(ரே)ஈஶ்வரனுடைய அவதாரம் என்கிற அர்த்தம் விருத்தமாகாதோ? என்னில், இது ஸ்வதந்த்ரனை ஈஶ்வரன் அஜ்ஞாநதுக்க கர்மவஶ்யத்வாதிகளோத் தன் லீலாதிகளாலே அபிநயிகிறான் என்று சொல்லுகிற

3 ‘ तेन वंचयते लोकान् ’ (தேந வஞ்சயதே லோகாந்)

4 ‘ मोहयित्वा जगत्सर्वं ’ (மோஹயித்வா ஜகத் ஸர்வம்)

---

1 ராமா - யுத்த - 12 - 13. பவாந் - தேவரீர், நாராயணः தேவ. - பகவானுகிய நாராயணன்.

2 ராமா - யுத்த - 120 - 11 ஆத்மாநம் - என்னை (தசரதனுடைய குமாரனுகிய) மாநுஷம் - மனிதனுக, மந்யே - நினேகிறேன

3 பார - உத் - 17 - 25 தேந - அந்தக் கார்யத்தினுல், லோகாந் - லோகங்களை, வஞ்சயதே - வஞ்சனை செய்கிறான்.

4 பார - மௌஸல - 8 - 26. ஜகத் ஸர்வம் - எல்லா லோகத்தையும், மோஹயித்வா - மோஹம் அடையும்படி செய்துவிட்டு (தன்னுடைய ஸ்தாநமாகிய ஸ்ரீவைகுண்டம் போய்ச் சேர்ந்தான்.)

இத்யாதிவசநங்களாலே பரிஹ்ருதம். 'ஸ்வதந்த்ரஜ்ஞக்காருணி கஜ்ய் இருக்கிற ஈச்வரன் தன் ஜ்ணத்தாலே அவதாரங்களிலே அஜ்ஞாந துக்காதிகளை உண்டாகக்கி கொள்ளுகிறன்' என்கிற பக்ஷம் பேதாபேதாதி மதங்கள் போலே பரித்யாஜ்யம். ஸர்வகர்த் தாவாய் ஸர்வஜ்ஞரப் ஸர்வ ஶக்தியான ஈச்வரன் தானே பர துக்கத்தை உத்பாதித்து அது கண்டு தானே ஶோகிக்கிறன என்னில்? இது ஜரத்கவாதி வாகய துல்யமாம். 15

இப்படி ஈச்வரன் கர்மவச்யத்வாபிநயம் பண்ணுகிறனு கில், ஆவேஶாவதாரங்கள் என்று சில கொள்ள வேண்டுமோ? எல்லாம் ஸாக்ஷாதவதாரமாய், அங்குள்ள கர்மவச்யத்வாதி ப்ரதிபாஸமும் ஈச்வரன அநுஷ்டிததுக காட்டினதாக அமை யாதோ? இப்படியானலன்றே

ஆவேசாவதாரம்

ஆவேஶாவதாரங்களுக்கும ப்ரதிஷ்டாச்சநாதிகளைச் சொல்லுகிற ஶாஸ்த்ரம் கூடுவது? எனனில், இதுவும்

1 'सृष्टे ततः करिष्यामि त्वामाविश्य प्रजापते'

(ஸ்ருஷ்டிம் ததः கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய ப்ரஜாபதே) என்றும்,

2 'अनुप्रविश्य कुरुते यत् समीहितमच्युतः'

(அநுப்ரவிஶ்ய குருதே யத் ஸமீஹிதம் அச்யுதः) என்றும்.

3 'आविष्टमात्रास्ते सर्वे'

(ஆவிஷ்டமாத்ராஸ் தே ஸர்வே)

என்றும் இப்புடைகளில் வசநங்களாலே நிரஸ்தம். ப்ரதிஷ்டா அர்ச்சநாதிகள் பகவதாவேஶமிலலாதார்கஜ்ம அகபட உண்டா

---

1 விஷ்ணு-தர்மம் - 68 - 54 ப்ரஜாபதே-ஓ ! ப்ரஹ்மாவே, ததः - அண்ட ஸ்ருஷ்டிக்குப் பிறகு-த்வாம்உன்னை, ஆவிஶ்ய-அநுப்ரவேசித்து, ஸ்ருஷ்டிம் - ஸ்ருஷ்டியை, கரிஷ்யாமி-செய்யப் போகிறேன்

2 விஷ்ணு தர்மம் - 108 - 50 அச்யுதः - பகவான், (முன் பிறந் திருக்கும் ஜீவாகளிடத்தில்) அநுப்ரவிஶ்ய - உள நுழைந்து, யத் - எது, ஸமீஹிதம் - தனக்கு இஷ்டமோ (அதை) குருதே - செய்கிறர்.

3 தே ஸர்வே - அவர்கள் எல்லோரும், ஆவிஷ்டமாத்ராः - (பகவானால்) அநுப்ரவேசம் செய்யப்பட்டவர்கள்.

யிற இருப்பது, ஆவேஶாவதாரங்களில் ப்ரதிஷ்ட்டார்ச்சநாதிகளா எல்லாம் ப்ரதர்த்தநவிதயாதிகளின் ந்யாயத்தாலே அவ்வோ ஜீவ விஶிஷ்ட பரமாத்ம விஷயங்களாதல் அவ்வோ ஜீவர்களே ஆவேசிக்குமதற்குத் துல்யகாலமான ஸாக்ஷாத் அவதாரவிஷயங்களாதலாம். இப்படி ஆவேஶாவதாரம்கொள்ளா தொழியில். விபூத்யத்யாயத்திலே சொன்னவை யுமெல்லாம் ஸாக்ஷாதவதாரங்களாகக கொள்ள ப்ரஸங்கிக்கும். 16

ஈஶ்வராவதாரங்களில் தோற்றின அஜ்ஞாநாதிகளெல்லாம் அபிநயஸித்தமானற் போலன்றிகே, வாஸ்தவமாக அஜ்ஞராய், துக்கிகளாய், கர்ம பரவஶராயிருக்கிற ஸம்ஸாரிகளுக்கு ஜ்ஞாந ஆநந்த அமலத்வாதிகள் நித்ய ஸித்தங்களாகக் கூடுமோ?

ஜீவனுடைய ஜ்ஞாநாநந்தத் வாதிகளின் நித்யத்வம்

என்னில், ஸ்வரூபம் ப்ரகாஶிக்கையும், வேறே சில ப்ரகாஶியாதொழிகையும், ஸ்வரூபம் அநுகூலமாயிருக்கையும், வேறே சில ப்ரதிகூலமாயிருக்கையும், ஸ்வரூபத்தில் விகாராதி மலங்கள் அற்றிருக்கையும், அபராதத்தாலே பகவந் நிக்ரஹ விஷயமாய் அதின் பலங்களே அநுபவிக்கையும் விருத்தமன்று. 17

நித்ய ஸூரிகளோடு ஸஜாதீயஞ்ஞ் நிரதிஶயாநந்தாதிகளுக்கு யோக்யனுய்

1 ‘निर्वाणमय एवायमात्मा ज्ञानमयोऽमलः ।
दुःखाज्ञानमला धर्माः प्रकृतेस्ते न चात्मनः ॥’

(நிர்வாணமய ஏவாயமாத்மாஜ்ஞாநமயோऽமலः।
துக்காஜ்ஞாநமலாதர்மாः ப்ரக்ருதேஸ்தே ந சாத்மநः॥)

என்று ஶோதித ஸ்வரூபனுயிருக்கிற இச்சேதநனுக்கு துக்கா ஜ்ஞாந மலங்கள் அந்தःகரணாதிகதங்களாமத்தனே போக்கி, ஸ்வரூபத்தில் பரமார்த்தமாகக் கூடுமோ? என்னில், மல்லிகைப்

1 விஷ்ணு புராணம் - 6 - 7 - 22 அயம் ஆத்மா - இந்த ஜீவாத்மா, நிர்வாணமய ஏவ - ஆநந்த ஸ்வரூபன், ஜ்ஞாநமயः - ஜ்ஞாந ஸ்வரூபன். அமலः - தோஷம் இல்லாதவன், துக்க - துக்கம், அஜ்ஞாந - ஜ்ஞாநமில்லாமல் இருப்பது, மல - அழுக்கடைந்திருப்பதாகிய. தர்மாः-தர்மங்கள், தே- அவைகள், ப்ரக்ருதேः - ப்ரக்ருதியினுடையவை, ந ,ஆத்மநः - ஆத்மாவினுடையவை அல்ல

பூவிற்குச் சிவப்பும் வெளுப்பும் வரா நின்றுல், ஒன்று நிம்மூகாதி உபாதி ப்ராப்தமாய், ஒன்று ஸ்வ பாவ ப்ராப்தமாய் இருக்கிறப் போலே, இங்கு தர்ம பூதஜ்ஞாந விகாஸ விஷயங்களான (விகார விமோஷங்களான) துக்காதிகள் உபாதி ப்ராப்தங்களாய், உபாதிகழிந்தால் ஸஜாதீயங்களோடொக்க ஸ்வபாவப்ராப்தமான ஆகாரம் உண்டாகக் குறையில்லை. துக்காதிகளே ப்ரக்ருதி தர்மங்கள் என்கிற இடம் ப்ரக்ருதி ஸம்ஸர்க்க ப்ரயுக்தங்கள் என்றபடி. 18

துக்காதிகளின் பரமார்த்தத்வம்

ஸ்வரூபஜ்ஞாநமில்லாமையாலே அநாதியாக க்ஷேத்ரஜ்ஞர்களுக்குத் தேஹாத்ம ப்ரமாதிகள் நடவா நிற்க, ஆத்ம ஸ்வரூபம் ஸ்வயம் ப்ரகாசிக்கிறது என்கை கூடுமோ? என்னில், அதிஷ்டாநமான ஸ்வரூபம்ப்ரகாசிக்கையும், அதில்கிடக்கிற விருத்தாகாரங்க(ளாகிறஆகாரங்)ள் தோற்றுமையாலே வேறொன்றை அதிலேஆரோபிக்கையும் ஸர்வ ப்ரமங்களுக்கும் பொதுவாகையாலே இங்கும் ஆத்ம ஸ்வரூபம் ப்ரகாசிக்கைக்கும். தேஹாதிகளிற் காட்டில் பேதமான தர்மங்கள் தோற்றுமையாலே தேஹாத்ம ப்ரமாதிகள் நடக்கைக்கும் விரோதமில்லை. 19

ஆத்மா ஜ்ஞாந ஸ்வரூபனுய் ஸ்வயம்ப்ரகாசனுய் இருக்கிறுன் என்று கொள்ளில், ஸுஷுப்த்யாதிகளிலும் தோற்ற வேண்டாவோ? ஸுஷுப்தியில் தன்னையும் தான் அறியாதிருக்கிறுன் என்றன்றே ஶாஸ்த்ரம் சொல்லுகிறது? ஆகையாலே ஜ்ஞாநஸ்வரூபனுய் ஸ்வயம் ப்ரகாசனுய் இருக்கிறுன் என்கிற இடம் தர்ம பூதஜ்ஞாநத்தாலே தனகுத்தான தோற்றுகையாலே உபசரித்ததாமத்தனையன்றே? என்னில், இது ஜ்ஞாந ஸ்வரூபனுமாய் ஜ்ஞாந குணகனுமாய் இருக்கிறுன என்று பிரியச் சொல்லுகிற ஶ்ருத்யாதி வாக்யங்களாலே பரிஹ்ருதம். ஸுஷுப்த்யாதிகளிலும் ஸ்வரூபம் ப்ரகாசியா நிற்க, ஆகாராந்தரவிசிஷ்ட

ஆத்ம ஸ்வரூபஸ்ய ஸ்வயம் ப்ரகாசத்வம்

ஜ்ஞாநஸ்வரூபத்வமும் ஜ்ஞாநகுணகத்வமும்

மாய்த் தோற்றுமையாலே வைஷம்யம் இல்லாத வளவேயுள்ளது. அவ்வளவாலே அப்போது தன்னையும் அறிகிறிலன் (கிலேன்) என்கிற வாக்யங்களுக்கும் விரோதமில்லை. 20

தர்ம தர்மிஜ்ஞாந ஸ்வரூபம்

இப்படி ஜ்ஞாநஸ்வரூபனுகில் ஜ்ஞாநாஶ்ரயத்வம் சொன்ன இடம் 'ஜ்ஞாநம் அறியா நின்றது', 'கண் காணுகினறது' என்கிற இடங்களிற் போலே உபசாரமா காதோ? ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநாஶ்ரயத்வம் இல்லை என்னுமிடம் தர்ம பூதஜ்ஞாநத்திலே கண்டிலோமோ? என்னில், இது உபலக்ஷண தார்ட்யத்தாலும் அந்யதாஸித்தி சொல்லவொண்ணுத ஶ்ருத்யாதி வாக்யங்களாலும் தத்தோத்தரம். ஏக ஜாதீயங்களுக்கு தர்ம தர்மிபாவம் கூடுமோ என்கிறதுவும் மந்த சோத்யம். எங்கும் தர்ம தர்மிகளுக்கு ஓர் ஆகாரத்தாலே ஏகஜாதீயத்வமும் ஓர் ஆகாரத்தாலே வைஷம்யமும் உண்டாயிறே இருப்பது, தர்ம பூதஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் இல்லை என்னுமிடம் கண்டபடி கொண்டோம். 21

1 'पुमान् न देवो न नरः' (புமாந் ந தேவோ ந நர;)
2 'नायं देवो न मर्त्यो वा' (நாயம் தேவோ ந மர்த்யோ வா)

இத்யாதிகளிற்படியே ஜ்ஞாத்ருத்வாதிகளாலே தேஹாதி விலக்ஷணனுகத் தன்னைத் தெளிந்தவனுக்குப் பின்னை ஒரு கர்த்தவ்யமுண்டோ? சில ஜாத்யாதிகளை முன்னிட்டுக் கொண்டன்றே கர்த்தவ்யங்களை ஶாஸ்த்ரங்கள் விதிக்கின்றன? ஆனால் தன் ஸ்வரூபத்தில் வர்ணாஶ்ரமாதிகள் ஒன்றும் இல்லை என்று தெளிந்தால், அவ்வோகர்மங்களில் அதிகாரியாம்படி எங்ஙனே? என்னில், தன் ஸ்வரூபத்தைத் தேஹாதி விலக்ஷணம் என்று தெளியாதவனுக்கே சார்வாகாதிகளுக்குப் போலே ஶாஸ்த்ராதிகாரம் இல்லையாவது, தெளிந்தவனுக்குத்தன்னில் காட்டில் பிரியத் தோற்றின க்ருஹக்ஷேத்ராதிகளோடே உண்டான ஸம்பந்தத்தாலே ராஜாஜ்ஞாதிகளால் வரும் தேவைகள் போலே இங்கு தன்னில் பிரியத் தோற்றினஶரீராதிகளோடேதனக்குஉண்டான ஸம்பந்தவிசேஷத்தாலே

வர்ணாச்ரம தர்மங்களின் கர்த்தவ்யத்வம்

1 விஷ்ணு புரா-2-13-98 2 பார-ஆச்வ -4-3-13

1 ' राजाधि राजः सर्वेषां विष्णुः ब्रह्ममयो महान् '
ईश्वरं तं विजानीमः स पिता स प्रजापतिः ।।)
(ராஜாதி ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுः ப்ரஹ்மமயோ மஹாந் ।
ஈஸ்வரம் தம் விஜாநீமः ஸ பிதா ஸ ப்ரஜாபதிः।।)
என்கிறபடியே ஸர்வருக்கும் ராஜாதி ராஜனை ஸர்வேஸ்வரனுடைய ஸாஸநவிமோஷங்கள் அடியாகக் கர்த்தவ்ய விமோஷங்கள் உண்டாகக் குறையில்லை. 22

ஆனாலும்

2 ' यस्त्वात्मरतिरेव स्यात् आत्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च सन्तुष्टः तस्य कार्यं न विद्यते ।। '
(யஸ்த்வாத்ம ரதிரேவ ஸ்யாத் ஆத்மத்ருப்தஸ்ச மாநவः।
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டः தஸ்ய கார்யம் ந விதயதே।।)

இத்யாதிகளிற்படியே ஆத்மாநுபவ த்ருப்தனுக்குக் கர்த்தவ்யமுண்டோ? என்னில், இபபடி ஸாஸ்த்ரீய ஸர்வ கர்த்தவ்ய நிஷேதம் பண்ணுகிற வசநங்கள்

சாஸ்த்ரீயகர்மவச்யத்வம்

யோக தசையிலும் முக்ததசையிலுமாகக் கடவன என்று ஸாஸ்த்ரங்கள் தாமே நியமித்தன. இங்ஙனல்லாத போது ஜ்ஞாநிகளுக்குப் போஜநாதி கர்த்தவ்யங்களும் தவிர ப்ரஸங்கிகளாகும். அவற்றைத் தவிர்ந்தால் க்லேஸங்கள் வரக்காணா நின்றோம் என்னில்? தனக்கடைத்த ஸாஸ்த்ரங்களே ஸமாதி வ்யதிரிக்த தசையில் தவிர்ந்தாலும், தன் அதிகாராநுகுணமாக க்லேசங்கள் வரும என்னும் இடம் ஸாஸ்த்ரங்களாலே காண நின்றோம். 23

---

1 பார - ஆச்வ - 43 - 13 ப்ரஹ்மமயः - பரப்ரஹ்மமாகிய, மஹாந் - மிகவும் சிறந்தவனாகிய, விஷ்ணுः - விஷ்ணு. ஸர்வேஷாம் - எல்லோருக்கும் ராஜாதி ராஜ - ராஜாக்களுக்கும் மேற்பட்ட ராஜன், தம் - அவனை, ஈச்வரம் - ஈச்வரனாக, விஜாநீமः - அறிகிறோம், ஸः - அவரே, பிதா - தகப்பன், ஸः - அவரே, ப்ரஜாபதி - ப்ரஜாபதி

2 கீதை - 3 - 17 யஸ்து - எந்த, மாநவः - மனிதன, ஆத்ம ரதிரேவ - ஆத்மாவிடத்திலேயே ஆசையுடையவனும். ஆத்மத்ருப்தः ச - ஆத்மாவிடத்திலேயே த்ருப்தியுடையவனும், ஆத்மந்யேவ - ஆத்மாவிடத்திலேயே, ஸந்துஷ்டः - ஸந்தோஷத்தையுடையவனுமாய், ஸ்யாத் - ஆகக் கடவனோ, தஸ்ய - அவனுக்கு, கார்யம் - செய்ய வேண்டிய காமம், ந வித்யதே - இல்லை

இப்படி ஸ்வரூபஜ்ஞானமுடையவனுக்கும் ஸமாதி ஒழிந்த தசையிலும்(ல்) கர்த்தவ்யாந்தரம் உண்டானாலும் பகவதாராதனங்களான

அந்யயஜ்ஞ தோஷ ப்ரகாரம்

